# தமிழரசு

மலர். 22 இதழ் 13 – 18

1992

ஜூலை – மார்ச்

J –
211 m N46
N72 . 22 . 13 – 18
15 : 89


VER
134
தமிழரசு
1-1-1992



## மாண்புமிகு முதல்வர் அவர்களின் புத்தாண்டுச் செய்தி



அனைத்துத் துறைகளிலும், சிறப்புமிகு திட்டங்கள் தீட்டப் பட்டு, தமிழகம் முன்னேற்றப் பாதையில் எழுச்சியோடு நடை போட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் 1992-ஆம் ஆண்டு மலர்கிறது. இனி வரும் நாளில் மேலும் பெரிய சாதனைகளையும், பெருமைக்குரிய செயல்களையும், ஏற்றுத் திறம்பட நடத்துகிற புதிய வலிவினை இப்புத்தாண்டு நமக்கு வழங்கும் என்பதில் ஐயமில்லை.

சரித்திரப் புகழ்மிக்க செயல்பாடுகளைத் தோற்றுவிப்பதோடு, அவைகளைக் காலத்தோடு நிறைவேற்றக்கூடிய வேகத்தையும், அதன்மூலம் நிலையான வெற்றி இலக்குகளை ஈட்டித் தரக்கூடிய விவேகத்தினையும் நமக்கு இப்புத்தாண்டு வழங்கிடும் என்பது எனது நம்பிக்கையாகும்.



இந்த இனிய புத்தாண்டுத் தினத்தில் தமிழக மக்கள் அனைவரும், அனைத்து நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட எனது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்த இதழில்...


சமுதாயத்தின் நன்மைக்குக் கல்வியே தவிர, கல்விக்காகச் சமுதாயமல்ல! — மாண்புமிகு முதல்வர் உரை ... 2

கர்நாடகக் கொடுமைகளுக்கு ஜனநாயக வழியில் நிரந்தர முடிவு காண்போம்! — மாண்புமிகு முதல்வர் உரை ... 9

புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 14

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்-மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை ... 35



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மார்கழித் திங்கள் - 17

மலர்:22 1-1-1992 இதழ்:13

V21-N46 N92.92.13-14
159892

# சமுதாயத்தின் நன்மைக்குக் கல்வியே தவிர கல்விக்காகச் சமுதாயமல்ல!

## சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்- மாண்புமிகு முதல்வர் உரை

உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமை நடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம், இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய, ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத் தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயற்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும் தமிழினத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச் சிந்தனைகளை எடுத்துக்கூறும் தெளிவினுக்காகவும்,

மாண்புமிகு
தமிழக முதல்வர்
புரட்சித் தலைவி
செல்வி ஜெ. ஜெயலலிதா
அவர்களுக்குச்
சென்னைப் பல்கலைக்கழகம்
டாக்டர் பட்டம்
அளித்துச் சிறப்பிக்கின்றது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 134-வது பட்டமளிப்பு விழாவில் சிறப்புரை ஆற்ற என்னை அழைத்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். எனக்கு நீங்கள் அளித்துள்ள இந்தக் கவுரவத்தை நான் என்றென்றும் நினைவில் நிறுத்தியிருப்பேன்.

இந்த நாட்டின் பழமையான கல்வி நிலையமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் திகழ்வதாலும், இந்தியாவின் கல்வி நிலையங்களுள் பெருமைமிகு இடத்தை இப்பல்கலைக் கழகம் பெற்றிருப்பதாலும், எனது நன்றி பன்மடங்காகிறது. உயர் கல்வித்துறையில் ஒரு நூற்றாண்டுக்கும்மேலாகக் . குறிப்பிடத்தக்க சாதனைகளைச் சென்னைப் பல்கலைக் கழகம் புரிந்துள்ளது. தேசிய, உலக அளவில் பல்வேறு துறைகளில் பிரகாசித்த பிரபலமான பலரின் கல்விக் கூடமாகவும் இது திகழ்ந்துள்ளது. அரசியல், பொருளாதார, விஞ்ஞான, சமூகத் துறைகளில் சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் தொண்டாற்றிய இப்பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது இயலாத காரியமாகும்.

சென்னைப் பல்கலைக் கழகம் பல பல்கலைக் கழகங்களின் தாயாக விளங்கியுள்ளது. மாபெரும் தாய் நிறுவனமான இந்தப்பல்கலைக் கழகத்தில் பயின்ற புகழ்மிக்க ஆடவரும், பெண்டிரும் மனித அறிவு வளர்ச்சியை மென்மேலும் பெருக்கி வந்துள்ளனர். அறிவை விருத்தி செய்து, உலகமெங்கும் இதுபோன்ற பல கல்விச் சாலைகளை வளர்த்த பல்வேறு அறிஞர்களின் பெயர்கள் இப்பல்கலைக் கழகத்தின் சரித்திரத்தில் நிரம்பக் காணப்படுகின்றன.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில், அயராத உழைப்பினால் சாதனைகள் புரிவதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு உழைத்து, தங்களது அறிவாற்றலால் கற்பனைத் திறனால், தொலைநோக்குப் பார்வையால் இப்பல்கலைக் கழகத்திற்குப் புகழ் சேர்த்த பேரறிஞர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். இந்த நினைவே, இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும், இத்தகைய பல்கலைக் கழகம் தாங்கள் பயின்ற, வளர்ந்த, பயிற்சி பெற்ற நிறுவனமாகத் திகழ்ந்துள்ளது என்ற பெருமையை வழங்கும்.

இந்தச் சபையில் நான் பேசுவதில்எனக்குள்ள எல்லைகளை நான் உணர்ந்திருக்கிறேன். என்றாலும், இந்த அழைப்பினை நான் ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், இப்பல்கலைக் கழகம் சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள தொண்டினைப் பாராட்டிடவும், தங்களது வாழ்க்கையில் மாபெரும் சாதனைகளைச் சாதித்துக் காட்டிய இப்பல்கலைக் கழகத்தின் பேரறிஞர்களைப் பாராட்டவும் இது ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும் என்பதால்தான். எனவே, உங்களிடையே இன்று நான் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் தன் மகளுக்குக் கிடைத்துள்ள மரியாதைகளைக் கண்டு பூரிக்க என் தாய் இல்லையே எனும் என் தனிப்பட்ட துயரத்தினையும் நான் வெளிப்படுத்தியாக வேண்டும்.





நீங்கள் பெற்றுள்ள பெருமைகளுக்கு என் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் வாழ்வில் இன்றைய தினம் ஒரு திருநாளாகும். உங்கள் பயிற்சி முடிந்து, பங்கேற்பு தொடங்கும் நன்னாளாகும். ஏனெனில் பட்டம், படிப்பின் முடிவல்ல. சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் தீவிரமாக ஈடுபடவேண்டியதன் ஆரம்பமாகும். பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற சில பாக்கியசாலிகளில் நீங்களும் ஒருவர் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். நம் நாட்டில் 17 முதல் 21 வயது நிரம்பியவர்களில் 10 சதவிகிதத்தினர் கூட இச்சந்தர்ப்பத்தினைப் பெற்றதாகப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. எனவே, நம் நாட்டு வளர்ச்சியில் உங்கள் பொறுப்பு அதிகமாகிறது. நாட்டின் அநேக சவால்களைச் சந்திக்க நீங்கள் இங்கு பெற்ற அறிவினையும், திறமையையும் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். உங்கள் முயற்சிகளில் நீங்கள் வெற்றியடைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகம் அறிவின் கிடங்கு அல்ல. திறமைகளை வளர்த்துக் கொள்ளும் கூடம் மட்டுமல்ல. கல்வி என்றாலே சுதந்திரம். உயர் கல்வி என்பது மென்மேலும் சுதந்திரமே உங்களது மனதிற்கும் இதயத்திற்கும் சுதந்திரம் வழங்கி, ஒரு இலட்சியத்தை உருவாக்கி, தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தி, பின் தங்கியோருக்கு உதவுவதே உயர் கல்வியின் நோக்கமாகும். சுருங்கச் சொன்னால், மக்கள் நலங்களில் உள்ள உங்கள் ஈடுபாடுகளை வளர்ப்பதே உயர் கல்வியின் நோக்கமாகும். தெய்வப்புலவர் வள்ளுவர் கூறினார்

அறிவினான் ஆகுவ துண்டோ
பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை'

'மற்றவர்களின் துயரைத் தன் துயராகப் பாவிக்காதவனின் அறிவு எதற்குப் பயன்?'

காலங்காலமாக நம் நாடு, கல்வியின் பலத்தை உணர்ந்து, சமுதாய, கலாச்சார அம்சங்களில் கல்விக்கு முக்கிய இடத்தைத் தந்துள்ளது. சுய வளர்ச்சிதான் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. சுய ஞான வளர்ச்சியைப் பெறுவதே, அறிவைப் பெறுவதின் நோக்கமாக கொண்டுள்ளது. கல்வி பயிலுவதென்பது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்கிறது. தீவிர ஆன்மீக உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து மக்களிடையே அமைதி, நல்லிணக்கம், நல்லுறவு ஆகியவற்றை வளர்க்கும் வகையில் சமுதாய முன்னேற்றத்திற்கு அயராது பாடுபடும் தனி மனிதத் தகுதிகளை வளர்க்கக் கல்வி ஒரு வழிமுறையாகும். உண்மையில், பண்டைய இந்தியச் சமுதாயத்தில், கல்வி, தனிமனிதனையும் சமுதாயத்தையும் நெருங்கிணைப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. மனிதர்களுக்கிடையே உள்ள உறவுகள் சரியான ஒழுக்க நெறிகள், முறையான சமூகப் பண்புகள் ஆகியவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள உதவுவதே கல்வியின் நோக்கமாகும். அறிஞர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், குருக்கள், மாணவர்கள், ஆகியோர் மக்களிடையே அமைதி, நல்லுறவு, நல்லிணக்கம் ஆகிய பண்புகளை வளர்ப்பதற்கு ஏதுவாக சமுதாயப் பண்புகளை நிலைநிறுத்துவதிலும் பாதுகாப்பதிலும் தத்தம் பங்கினை ஆற்றி வந்துள்ளனர். உண்மையிலேயே ஆன்மீகமே, பண்டைக் காலக் கல்வியின் குறிக்கோளாக விளங்கியது.

கல்வியின் இந்தக் குறிக்கோள் தற்காலத்திற்கும் பொருத்தமானதே என்று மாபெரும் வரலாற்று ஆசிரி

மக்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவே, பள்ளியை விட்டோ கல்லூரியை விட்டோ செல்லும் போது பெறும் சான்றிதழ்களும் பட்டங்களும், வாழ்நாள் முழுமைக்குமான சான்றிதழ் அல்ல. இது பாடத்திட்டத்திற்கான மதிப்பீடே ஆகும்.

எனவே, ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டியது, அத்தியாவசியமாகிறது. விஞ்ஞான முன்னேற்றம் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், நம் அறிவு விருத்தியடைந்து கொண்டேயிருப்பதாலும் தொடர்க்கல்வி மேலும் தேவையாகிறது. மனித சக்திகள் பல வகைப்பட்டவை. அவை சமூகத்தில் மதிப்பு வாய்ந்தவை. ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட திறமைகளைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும். ஒன்றையொன்று சரி செய்கின்ற ஊக்குவிக்கின்ற விதிகளையும், நடைமுறைகளையும் கலந்து அளிக்கக்கூடிய கல்வியையும் நடைமுறைச் சோதனைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளையும் 'மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் இதை நாம் செய்யலாம்.

சிறந்தவைகளையே நாடிச்செல்லும் திட்டங்களைப் போடும் அதே நேரத்தில் அனைவரும் அடிப்படை வசதிகளைத் தருவதில் ஓரளவு திருப்தியை நாம் அடைந்தாக வேண்டும். ஜான்பால் சாத்ரு கேட்ட கேள்வி தற்பொழுது பிரபலமாகிவிட்டது' 'பசித்திருப்பவனுக்கு இலக்கியம் என்ன செய்ய இயலும்.' அதே போல் நாம் வேறொரு கேள்வியையும் எழுப்பலாம். 'பசித்தவனுக்கு கல்வி என்ன செய்ய இயலும்?' நெத்தியடி போல் இப்படி கேட்கப்படும்பொழுது அதற்கு விடை கிடைப்பதில்லை. ஒருவனது மூளையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் அவனது பசியைப் போக்க வேண்டும். ஆனால், இரண்டு பணிகளும் முக்கியமானவை. நாம் இதுவரை நிறைவேற்றிய கல்வித் திட்டங்கள் சுற்றிச் சுற்றி வரும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளதாக நான் உணர்கிறேன்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நம் கல்வி பெற்றுள்ளதென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்களின் சமூகப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி, முதியோர் கல்வி, சிறப்புப் பிரிவுகளில் உயர்நிலைக் கல்வி என்று பல திட்டங்களை வகுத்துள்ளோம். இவைகளுக்கு அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சோதனைக் கூடங்கள். பயிற்சி நிலையங்கள் போன்றவற்றை நம்மால் இயன்ற அளவிற்கு வாங்கியுள்ளோம். உதாரணமாக, கல்வியில் நம் மாநிலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. படிப்பறிவு வளர்ப்பதில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். 1991 புள்ளி விவரக் கணக்குப்படி தமிழ்நாட்டில் 7 வயதுக்கு மேற்பட்டவர்களில் 63.72 சதவிகிதத்தினர் படித்தவர்கள். படிப்பறிவில் நாட்டிலேயே கேரளாவிற்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு உள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் பயனாக நமது ஆரம்பக் கல்வித் திட்டம் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகக் கல்வியிலும் பெரும் வெற்றியை நாம் சாதித்துள்ளோம். விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் பல்வேறு பிரிவுகளில் நமது இளைஞர்கள் மிகச் சிறப்பான சாதனையைப் புரிந்துள்ளனர். ' இதில் உங்கள் பல்கலைக்கழகத்தின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இச்சாதனைகளினால் நாம் பெருமையடைகிறோம். அதேநேரத்தில், நமது கல்வி முறை, சமுதாயத்திலிருந்து மனிதனைப் பிரிக்கிறது என்பதை நினைக்கப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அளவிற்கதிகமான பிரத்தியேகமான தகுதி பெறுவதாலும் குறுகிய தற்காலிக நோக்கங்களினாலும் நம் கல்வி முறை மாணவர்களைச் சமுதாயத்தின் முக்கிய அம்சங்களை மறக்கடிக்கச் செய்கிறது. நம்மைப் போன்ற ஒரு ஏழைச் சமுதாயம், கல்வியைப் போதிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு செலவழிப்பதால், அதற்குப் பதிலாக, சமுதாயத்தின் நன்மைக்கு மாணவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது தார்மீக உரிமையாகும்.

அர்நால்டு டாயன்பி சரியாகச் சொன்னார் 'தொழில் புரிய முனையும் ஒவ்வொருவரும், தன் சிறப்பு அறிவினையும், திறமையையும் சகோதர மனிதர்களின் நலனுக்காக உபயோகத்திற்காகப் பயன்படுத்துவே அவர்களைச் சுரண்டுவதற்காக அல்ல என உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். தனக்கும் தன் குடும்பத்திற்கும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அமைத்துக் கொள்வதைக் காட்டிலும் தொண்டு செய்வதற்கே முன்னுரிமை அளித்திடல் வேண்டும். அதிகபட்ச சேவை, அதிகபட்ச இலாபமல்ல என்ற குறிக்கோளுக்கே ஒருவன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். கல்வித் துறையிலுள்ள அளவுக்கு மீறிய சிறப்புத் தகுதிகளினால் உண்டாகும், தனி மனிதனின் நசுக்கும் சக்தியினை, ஒதுக்கிவிட வேண்டியதன் அவசியத்தை அர்நால்டு டாயன்பி சரியாக வலியுறுத்தியுள்ளார். அனைத்து வழிகளிலும் இலட்சக்கணக்கான மக்களின் நலன்களைக் கவனிக்க வேண்டிய நம்மைப் போன்ற சமுதாயத்தில் எடுத்துக்

## கர்நாடகத்திலிருந்து வெளியேறும் தமிழர்களுக்கு உதவ மையங்கள்

**கர்நாடகத்திலிருந்து தப்பி வரும் தமிழர்களுக்கு உதவ கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள ஐந்து தமிழக மாவட்டங்களில் உதவி மையங்கள் உடனடியாக ஏற்படுத்தப்படும்.**

**இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்: 25-12-91**

**கர்நாடகத்திலிருந்து 17,000 தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு இதுவரை வந்து சேர்ந்துள்ளனர். கடந்த இரண்டு தினங்களில் மேலும், இரண்டாயிரம் பேர் பெரியார் மாவட்டத்திற்கு வந்துள்ளனர். அதிக அளவில் தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து வந்ததையடுத்து எழுந்துள்ள நிலைமை பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. பின்னர் மேற்படி உதவி மையங்களை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக ஏற்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

**உதவி மையங்களை மாவட்டத்தின் எல்லையோர இடத்தில் அமைக்க வேண்டும். அங்கு உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி ஆகியவை வழங்கப்படும். கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்குத் திரும்பும் வரையிலோ அல்லது கர்நாடகத்திலோ உள்ள தங்களது இடங்களுக்குத் திரும்பும் வரையிலோ இந்த உதவி தொடர வேண்டும்.**

**கோயம்புத்தூர், பெரியார், தர்மபுரி, சேலம், வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் இந்த உதவி மையங்கள் வருவாய்த் துறை ஊழியர்கள் மேற்பார்வையில் செயல்படும்.**

**கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக நடந்த கலவரம் பற்றி, பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து பொருள் இழப்பு, ஏற்பட்டுள்ள காயங்கள் உள்பட முழு விவரங்களைச் சேகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

## மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் விழா

**1991** டிசம்பர்த், திங்கள் 19-ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு பொன்னாள்!

ஆம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிய நன்னாள்!

புகழ்பூத்த பெருமை பெறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் வாழ்த்தும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்-

புரட்சித்தலைவி அவர்கள் இயல், இசை, நாடகத் துறைகளில் தேர்ச்சி பெற்ற முத்தமிழ்ச் செல்வி; பரத நாட்டியக் கலையில் கரை கண்ட 'காவிரி தந்த கலைச்செல்வி;' புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாகப் புரட்சிகரமான சூழலில், தமிழக ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றி, நீதி, நேர்மை தவறாத செங்கோல் செலுத்திப் புரட்சிகரமான சாதனைகளைப் படைத்துவரும் வெற்றிச் செல்வி ஆவார். தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய பல மொழிகளில் எழுத்தாற்றல், பேச்சாற்றல் பெற்ற பன்மொழிச் செல்விதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

'அஞ்சாமை, அடக்கமுடைமை, துணிவுடைமை, கல்வி, அறிவு, ஈகை, ஊக்கம், செங்கோலாச்சுதல், குடியோம்பல் போன்ற வள்ளுவர் வகுத்த பண்புகளின் உறைவிடமாகவும் பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணாகவும் திகழும் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, டாக்டர் பட்டம் வழங்கும் முதல் பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகமாகும். அதன் மூலம் சென்னைப் பல்கலைக்கழகம் தனிப்பெருமையையும், புகழையும் பெறுகிறது'.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் (டி.லிட்) வழங்க வேண்டும் என்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'செனட்' 'சிண்டிகேட்' ஆகிய இரு அமைப்புகளும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி இருந்தன.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூற்றாண்டு விழா அரங்கில் 19.12.91 அன்று நடைபெற்ற 134-வது பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் (D.Litt.) வழங்கப்பட்டது.

இந்த விழாவினையொட்டி சென்னை நகரமே அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. விழா நடைபெற்ற பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். அன்று மதியம் 3.40 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழா மண்டபத்தில் மேடைக்குப் பின்புறம் வந்து காரில் இறங்கினார். பல்கலைக்கழக இணை வேந்தரும், மாண்புமிகு கல்வி அமைச்சருமான திரு. இராமவீரப்பன், துணைவேந்தர் திரு. சாதிக், பதிவாளர் திரு. பி. கோவிந்தராஜுலு ஆகியோர் அவரை வரவேற்றனர். பிறகு, 3.47 மணிக்கு மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மண்டபத்தின் முன்புறம் வந்து இறங்கி, தேசிய மாணவர் படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ஆளுநர், இணைவேந்தர், துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழகப் பல்வேறு துறைத் தலைவர்கள், செனட் உறுப்பினர்கள் ஊர்வலமாக அரங்குக்குள் வந்தனர். கண்ணைக் கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்ட விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டமளிப்பு விழா உடையுடன் வந்தார்.

துணைவேந்தர் எஸ். சாதிக் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கான குறிப்புகளைத் துணைவேந்தர் படித்தார்.

பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்தர், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கவுரவ டாக்டர் (D.Litt.) பட்டத்தை வழங்கினார். மண்டபத்தில் குழுமியிருந்தவர்களின் பலத்த கைத்தட்டலுக்கிடையே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் 481 பட்டதாரிகள் நேரடியாகப் பட்டம் பெற்றனர். அவர்களில் 267 பேர் பெண்கள். பல துறைகளில் முதலிடம் பெற்ற மாணவ மாணவியருக்கு மேதகு ஆளுநர் பட்டங்களை வழங்கினார் இவர்களைத் தவிர மேலும் 25,942 நபர்கள் இவ்வாண்டு பட்டம் பெற்றனர்.

பிரபு என்ற பார்வையற்ற மாணவர் ஆங்கில இலக்கியத்தில் முதலிடம் பெற்று, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து பட்டம் பெற்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருக்குக் கைலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில் அனைத்து அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**என். இளங்கோ.**



மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்நினைவு நாளான 24.12.'91 அன்று அவரது நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அமைச்சர்களுடன் அஞ்சலி செலுத்தினார்.

யரான ஆர்னால்ட் டாயன்பி வலி யுறுத்துகிறார். அவருடைய வார்த் தைகளை நினைவு கூர்வது இங்கே பொருத்தமாகும்.

'கல்வியின் நோக்கம் வணிகச் சார்புடையதாக இல்லாமல் சமயச் சார்புடையதாக இருக்க வேண்டு மென நான் கருதுகிறேன். சரியான முறையில் வாழ வழியினைக் கண்டு பிடிப்பது, வாழ்க்கையின் பொரு ளையும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்வது ஆகியவற்றிற்கான ஒரு தேட்டமே கல்வியாகும். தகுந்த ஆன்மீக வழியே அனைத்து மக்களுக் கும் அடிப்படையில் பொருந்துவது என நான் நம்புகிறேன். மனித சமு தாயத்தின் அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றின் இயல்பான எளிமை, சிக்கலாக்கப்பட்டதன் மூலம், வேலைப் பகிர்வு

(Division of Labour) என்பது அவசியமாக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்திலேயே மனித சமுதாய முழுமைக்கும் இது சரியான நடை முறையாகவே இருந்து வந்தது.'

தொழிற் புரட்சியின் தொடக்கம், விஞ்ஞான மனப்பான்மை காலத் தைக் கட்டியம் கூறியது. இதுவே ஒரு தொழில்நுட்ப நாகரீகத்திற்கு, குறிப் பாக மேலை நாடுகளில், அடிக்கல் நாட்டியது. கல்வியைப் பற்றிய மனித மனோபாவத்தில் மாபெரும் மாறுதல்களை இவையனைத்தும் உருவாக்கின. கல்வி பிழைப்புக்கான ஒரு வழியாக மாறியிருக்கிறது.

அறிவைப் பேணுவது பிழைப்புக் கான ஒரு ஆதாரமாகக் கருதப் படுகிறது. கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதிகளைப் பெற்றிருப்ப தின் மூலமாக ஒருவன் தன் வாழ்க் கைத் தகுதியை உயர்த்திக் கொள்ள ஒரு வழி முறையாகவே கல்வி கருதப்படுகிறது. தொழில்நுட்பம் என்பது வேலைகளை, பகுப்பது ஆகும். அதனால் சிறப்பான திறமை களைப் பெறுவது அவசியமாகிறது. விஞ்ஞானமும் சிறப்புத் தகுதி களும் கைகோர்த்துச் செல்கின்றன. ஒருவருடைய புரிந்து கொள்ளும் தன்மை எவ்வளவு விசாலமானது என்பதோ அவருடைய அறிவு எவ் வளவு ஆழமானது என்பதோ அல்லது அவருடைய கல்வி கற்கும் நோக்கம் எவ்வளவு உன்னதமானது என்பதோ கேள்வி அல்ல. இன் றைய தொழில் மயமான நவீன சமுதாயத்தில், பங்கு பெற, ஒருவன் சிறப்பான தொழில்நுட்பத் தகுதி களைப் பெற வேண்டியதே தலை யாய அவசியமாகும். ஒருவன் தன் னுடைய பொருளாதாரத்தில் அடைந் துள்ள வெற்றி என்பது அவன் பெற்ற, தேர்ச்சி அடைந்துள்ள சிறப் பான தகுதிகளைப் பொருத்தே அமைந்துள்ளது.

நம் நாடு 1947-இல் சுதந்தர மடைந்து விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரக் கலாச்சார வளர்ச் சிகளில் மேலை' நாடுகளைப் பின் பற்றி, பிறகு மாறிவரும் கலாச்சாரத் தேவைகளுக்கேற்ப நமது கல்வி நிறு வனங்கள் தங்களை மாற்றி அமைத் துக் கொண்டுள்ளன. இது இயற்கை யாகவே நமது நாட்டைத் தேர்ச்சி பெற்ற உயர் கல்விப் பாதையில் செல்ல வைத்தது.

எனினும் இன்று நம் நாட்டில் கல்வித்துறை நிறைய சிக்கல்களை உள்ளடக்கியுள்ளது. நம் நாட்டி லுள்ள அனைத்துக் குழந்தைகளுக் கும் ஆரம்பக் கல்வியினை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தரும் கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. பள்ளிகளில் முறை யாகப் பயில இயலாத ஏராளமான மக்களுக்கு வாழ்க்கை நீரோட்டத் திற்குக் கொண்டுவரத் தேவையான அடிப்படை அறிவைக் கொடுத்தாக வேண்டும். தொழில்நுட்ப வளர்ச் சிக்கேற்ப சமூக மற்றும் பொருளா தார உற்பத்திகளை அடிப்படை



யாகக் கொண்டுள்ள வேலைகள் தரப்பட வேண்டிய ஏராளமான இளைஞர்களை நம் கல்வி முறை கையாள வேண்டியுள்ளது. தொழில் முன்னேற்றத் தேவைகளும், உலகப் பொருளாதாரத்தின் பாதிப்புகளும் உயர்நிலைத் தொழில்நுட்பங்களை அமல்படுத்துவதும் சேர்ந்து பல்கலைக் கழகப் பட்டங்களுடனோ அவை இல்லாமலோ தேர்ச்சி பெற்ற, மிகவும் திறமையான இளைஞர்கள் பல்வேறு பதவிகளை வகிக்க தேவைப்படுகின்றனர். இதற்கெல் லாம் அடிப்படைத் தேவையாக ஆசிரியர்கள் அறிவுத் திறனையும், அனுபவத்தையும் வளர்க் கிறார்கள். ஏனெனில், சிறந்த அறிவைப் பெறுவதில் உள்ள போட்டி களில் அவர்கள் தோற்றுவிடாமல் இருக்க வேண்டும். இவையனைத்துக் கும் மேலாக இருப்பது அபாயகர மான அளவில் வளர்ந்து இந்த அனைத்து வசதிகளும், மிகக் குறுகிய நேரத்தில் தங்களுக்கு, வேண்டு மெனப் போராடும் மிகப்பெரிய மக்கள் தொகையே ஆகும். கல்வித் துறையில் வேறு எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு பிரச்சினை களை நாடு இன்று சந்தித்துக் கொண்டு இருக்கிறது. அது கல்வி யிலுள்ள நம்மைப் பற்றிய பிரச்சினை யாகும். நாம் வழங்கும் கல்வியி லிருந்து அனைத்து நலன்களையும் பெற வேண்டிய புதிய தலைமுறை, மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கல்வியின் திறன் மீது உள்ள நம்பிக்கையை இழந்து வருகிறது. தவறான கொள்கைகளை அமல் படுத்துவதினாலும், தவறான அணுகு முறைகளினாலும் போதிய அடிப் படை வசதிகள் இல்லாமையாலும் தவறான விதிகளை வகுப்பதாலும் நடைமுறைக்கு ஒவ்வாத இலட்சியங் களை அமைத்துக் கொள்வதாலும் இப்பிரச்சினை தீவிரமடைகிறது. இப்பிரச்சினையின் முக்கியமான அம்சங்களைக் கீழ்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. மக்களின் கல்வியறிவில்லாமயை ஒழிப்பது.
2. ஆரம்பக் கல்வியை அனைவருக் கும் போதிப்பது.
3. சமூக, அரசியல் விழிப்புணர்ச்சிக்காகக் கல்வித் திட் டத்தை அமைத்துக் கொள்வது.
4. ஒற்றுமை உணர்வு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவைகளை வளர்த்து, சாதி இன மற்றும் இதர தீய சக்திகளினால் உருவாகும் பிரிவுகளை ஒழிப்பது.
5. விஞ்ஞானத் தொழில்நுட்பங்கள் மீது அதிக அக்கறை காட்டுதல்.
6. கல்விச் சந்தர்ப்பங்களை அதி கரித்தல்.
7. சரியான அணுகுமுறை, மதிப் பீடுகளை வளர்த்துக் கொள்ளுதல், பல்வேறு பிரச்சினைகளை மனி தாபிமானத்தோடும் கருணையோடும் அணுகுதல்.
8. முறையான தகுதியுள்ள சமூகக் கல்வியை வழங்குதல்.
9. பள்ளிக்கூடத்திலிருந்தே, விஞ் ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சி களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கல்வியை விரிவுபடுத்துதல்.

இந்த அம்சங்கள் நம்மை அலைக் கழிப்பது போலவும், விடைகாண முடியாதவை போலவும் காணப் படலாம். ஆனால், இது குறித்து நாம் நம்பிக்கை இழக்கத் தேவை யில்லை..' நம் அரசியல் நிர்ணய சட்டத்தில், நம் கல்வித் திட்டத்தில் கல்வியின் பங்கைப் பற்றிய சரியான கண்ணோட்டம் கொண்டு, அதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், நாம் சந்திக்க வேண்டிய பிரச்சினைகளின் அளவைப் பார்க்கும்பொழுது நம் முயற்சிகளும் சாதனைகளும் மிகவும் பற்றாக்குறையாக உள்ளன.

'இந்தியாவின் விதி இப்பொழுது நம் வகுப்பறைகளில் நிர்மாணிக்கப் படுகிறது' என கோத்தாரி கமிஷன் கூறியுள்ளது. நம் விதியின் எஜ மானர்கள் நாம்தான். நமக்கு முக்கிய மானவர்களைநிர்மாணிப்பவர்களும் நாம்தான். எனவே, முறையான நல்ல கல்விக்கு உயர்ந்த முக்கியத் துவத்தை வழங்கவும், தேசத்தின் சிக் கல்களைக் கருத்தில் கொண்டு மக்கள் நலனுக்குப் பயன்படும் வகையில் கல்வித் திட்டங்களைத் தீட்டவும் நம்முடய ஒன்றுபட்ட அறிவு, உடல், பொருட்சக்திகளை ஒன்று திரட்ட வேண்டும்.

இந்த தொழில்நுட்ப நாகரீக உலகில் சிறப்பான அளவிற்கும் திறமைக்கும் வழக்கமான கல்வி யோடு, தொழிற்பயிற்சியும் சேர்ந்து தரப்படவேண்டும். நமது சக்தியின் வளர்ச்சிக்கும், தனிநபரின் திறமை களை வளர்த்துக் கொள்ளவும் பள்ளிப்படிப்பு மட்டும் போதாது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. ஒவ்வொருவருக் கும் தகுதிகளும் குணங்களும் உள்ளன. அவைகளை அர்த்தமுள்ளதாக உப போகிக்கத் தேவையானது. திறமை களைக் கண்டுபிடித்து, அவை களுக்கு உயிருட்டி, அன்றாட வாழ்க் கையிலும், நடைமுறைகளிலும் பயன் படுத்துவதேயாகும்.

பள்ளியிலும் கல்லூரியிலும் ஒருவனுடைய சாதனைகளை வைத்து அவனை மதிப்பிட்டு விடமுடியாது. சிறந்த மாணவர்கள் அனைவரும் பிற்கால வாழ்க்கையில் சிறந்த குடி மகனாகத் திகழ்ந்தது கிடையாது. சிறந்த மாணவர்களாக அல்லாத வர்கள் பிற்காலத்தில் புகழ்மிக்க, மிகவும் மதிக்கத்தக்க . குடி



கொள்வதின் தேவையைவிட, கொடுக்கப்பட வேண்டியதன் தேவை முக்கியமாகின்றது.

நாம் மாணவர்களுக்குத் தரும் கல்வி முறையினால் சமுதாய முழுமைக்கும் நன்மை ஏற்பட வேண்டும். சமுதாயத்தின் நன்மைக்கு, கல்வியே தவிர, கல்விக்காக சமுதாயமல்ல. மாணவர்களின் மனதில் இந்த அடிப்படை அம்சங்களைப் பதிய வைக்க கல்வி பயன்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். சில்லறை விஷயங்கள், குறுகிய மனப்பான்மை, சாதி, இன உணர்வுகளைத் தூண்டுதல் அல்லது மற்ற வெறுப்பு ஆகியவை அறவே ஒழிக்கப்பட வேண்டும். இந்தத் தேவை நம் அனைவருக்கும் மிகவும் முக்கியம். அதுவும் குறிப்பாகப் பிரிவினைவாத சக்திக்கு ஒரு பொய்யான மரியாதை கிட்டியுள்ள இந்தக் காலத்தில், இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு கூறினார்.

இந்தியாவில் முதலில் முக்கியமானது நாட்டின் ஒற்றுமையைப் பேணிக்காப்பதுதான், அரசியல் ஒற்றுமையை மட்டுமல்ல. பிரிந்து தனியே செல்ல வேண்டுமென்னும் தூண்டுதலை ஒதுக்கி மதத்தின் பெயரால் எழுப்பப்பட்டுள்ள தடைகளை உடைத்து - மாநிலங்களுக்கிடையேயுள்ள தடைகளை ஒடுக்கக்கூடிய சிந்தனைக்கும், மனதுக்கும் உள்ள ஒற்றுமையை பேணிக்காத்திட வேண்டும். தீவிரவாதத்திலும் வன்முறையிலும் நம்மை நாம் இழந்துவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியம். தேசிய ஒருமைப்பாடும், முறையான வளர்ச்சியும் இன்று மிகவும் அத்தியாவசியம்.' இந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இன்றும்உண்மையாக உள்ளன.

உங்களது பட்டமளிப்புகளின் சின்னமான உடைகளில் இன்று நீங்கள் காணப்படும் இந்த அருமையான சந்தர்ப்பத்தில், கல்வி முடிவேயில்லாமல் தொடருகிறது என்பதையும், கல்வியே சுய'வளர்ச்சிக்'காகத்தான் என்பதையும் மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்' என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். போட்டி தேவைதான் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அது ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும். தனிமனித முன்னேற்றம் தேவைதான். ஆனால். அது சமுதாயத்தின் சிறந்த, பெரிய அளவிலான நலத்தில் இருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தேவைதான். ஆனால், அது யாருடைய அழிவிலும் இருக்கக் கூடாது. சமூக நீதியின் தேவையை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும். தரமான கல்வி ஒருவன் தன் தனித்தன்மையையும் சமூக, தேசிய அடையாளங்களையும் பெறுவதற்கு உதவியாக இருக்க வேண்டும் நமக்குத் தெளிவான இலட்சியங்களை ~~அமைத்துக் கொ~~ள்வதில் தான் நம் முன்னேற்றம் அடங்கியுள்ளது. ஆனால், மகாத்மா காந்தி அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்ததைப் போல், வழிமுறைகளும் முக்கியமே. இதைச் சற்றுப் புரிந்து கொள்வோமேயானால், அது நம்மை நல்ல மனிதர்களாகவும், அதிக உபயோகமுள்ள குடிமக்களாகவும் உருவாக்கும்.

இங்கு பட்டங்களையும், பரிசுகளையும் பெற்ற அனைத்து இளைஞர்களையும் பாராட்டுகிறேன். நம் நாட்டிற்கும், மனித குலத்திற்கும் சேவை புரிவதில் சிறந்த எதிர்காலத்தைப் பெற்றிட உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கலை-பண்பாட்டு இயக்ககம்

**தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் அங்கமாக, கலை- பண்பாட்டு இயக்ககம் தொடங்கப்படும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார். அதன்படி, கலை-பண்பாட்டு இயக்ககம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்.**

**இந்த இயக்ககம், மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி, கலை- கைத்தொழிற் கல்லூரிகள், அரசு இசைப் பயிற்சி மையம், இயல், இசை, நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம் ஆகிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.**

**தமிழகத்தின் பழங்கலைகளுக்கும், இசை, நாட்டியம், நாடகம், கவின் கலைகள் ஆகியவற்றுக்கும் ஊக்கமும், ஆக்கமும் வழங்குவதை இந்தப் புதிய இயக்ககம் நோக்கமாகக் கொண்டு செயல்படும்.**

## ஊனமுற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சி

**தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்க, சமூகநலத்துறை திட்டமிட்டுள்ளது.**

**இந்தப் பயிற்சியில் சேர்வதற்குச் சில தகுதிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:**

**1. ஊனமுற்ற பெண்களாக இருக்க வேண்டும்.**
**2. வயது வரம்பு: 18 வயதுக்கு மேற்பட்டு 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.**
**3. 8-வது வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால், பயிற்சிக்குப் பின் அரசு நடத்தும் தேர்வில் பங்கு பெறலாம்.**
**4. 8-வது வகுப்புக்குக் கீழ் படித்தவர்கள் அரசுத் தேர்வு எழுத முடியாது.**
**5. பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.**
**6. பயிற்சிக் காலத்தில் 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.**

**இந்தப் பயிற்சியில் சேர விரும்பும் உடல் ஊனமுற்ற பெண்கள், உதவி இயக்குநர் (பணி அமர்த்துதல்), சமூகநல இயக்ககம், சேப்பாக்கம், சென்னை-600 005 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டும். பயிற்சிக்குப் பிறகு, கூட்டுறவுச் சங்கங்களில் அவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு உதவி செய்யப்படும்.**



# கர்நாடகக் கொடுமைகளுக்கு, ஜனநாயக வழியில் நிரந்தர முடிவு காண்போம்!

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

**கா**விரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், நமது பெருமுயற்சியால் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள நியாயமான வெற்றியை, கர்நாடக அரசும் அங்குள்ள அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளாததால், தற்போது அங்கு நடைபெற்று வரும் வன்முறை மற்றும் கலவரச் சம்பவங்களைப்பற்றி, நாம் அனைவரும் அறிவோம். கர்நாடகத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களின்மீது இப்படிக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களினால், அவர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொணாக் கொடுமைகளின் காரணமாக, அவர்கள் கர்நாடக மாநிலத்தை விட்டு வெளியேறி, தமிழகத்தை நோக்கித் தினந்தோறும் ஓடி வந்துகொண்டிருக்கின்றனர்.

இக்கொடுமைகளுக்கு ஜனநாயக வழியில் ஓர் நிரந்தர முடிவு காணவும், இப்பிரச்சினையில் தமிழகத்தின் முடிவினை ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் தான், இன்று இந்தக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். இக்கூட்டத்திற்கு வருகை தந்து நல்ல கருத்துகளையும், ஆலோசனைகளையும் கூற இருக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும், பிரதிநிதிகளையும், தமிழக அரசின் சார்பில் வரவேற்கின்றேன்.

தற்போது நம் முன் இருக்கின்ற இந்தப் பிரச்சினை குறித்து, இது நாள் வரை மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நம் அனைவரின் பெருமுயற்சி காரணமாக, தமிழகத்தின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், மத்திய அரசு காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் 10.12.1991 அன்று வெளியிட்டது. உச்சநீதி மன்றத்தின் ஆணைகளுக்கு இணங்க, மத்திய அரசால் சட்டத்திற்குட்பட்டுத் தோற்றுவிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் உச்சநீதி மன்றத்தின் கருத்துரைகளைப் பெற்ற பின்னரே மத்திய அரசு அதன் அரசிதழில் வெளியிட்டது. இதனை எதிர்த்து 12.12.1991 அன்று, மாண்டியா நகரில் வன்முறை வெடித்தது. அன்று கர்நாடக விவாசாயிகள் சங்கம் மாண்டியாவில் பந்த் அறிவித்து நடத்தியபோது, காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று.

கர்நாடக மாநிலத்தில் 13.12.'91 அன்று ஒரு பொது வேலைநிறுத்தம் அனுசரிக்கப் போவதாகக் கர்நாடக அரசே அறிவித்து, அதனை அரசியல் லாபத்திற்காகத் திசை திருப்பி, அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கி உள்ளனர். ஆண்டாண்டுக் காலமாகக் கர்நாடக மாநிலத்தில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்துவரும் தமிழ் மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்குக் கொடுமை இழைத்துள்ளனர். அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும்மனிதாபிமானமே இல்லாது சேதங்கள் விளைவித்துள்ளனர். ஒரு குற்றமும் செய்யாத தமிழ் மக்கள், அங்கு அவர்கள் தங்களது சுய உழைப்பால் ஈட்டிய சொத்துக்களை இழந்து, இன்று அகதிகளாக உயிருக்குப் பயந்து தமிழகத்திற்கு ஓடி வந்து கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமே, முன்னெச்சரிக்கையோடு சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற கர்நாடக அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்காததுதான். காலத்தோடு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், இந்த அநாகரீகமான அராஜகச் செயல்களைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

கர்நாடகத் தமிழர்களைக் காக்கின்ற தார்மீகப் பொறுப்பு தமிழக அரசிற்கும், தமிழக மக்களுக்கும் இருப்பதால், நான் 13.12.1991 அன்றே கர்நாடக முதல்வரை இப்பிரச்சினையில் உடனடியாகக் கவனம் செலுத்தி, கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அன்றே இந்தியப் பிரதமருக்கும் இது தொடர்பாக ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பி, கர்நாடகத் தமிழர்களைப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

14.12.1991 அன்றும் வன்முறைச் சம்பவங்கள் பெருத்த அளவில் தொடர்ந்தன. தமிழ் மக்கள் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தங்களின் உடைமைகளை இழந்தனர். அன்றே நான் மத்திய அரசு அமைச்சர்களான திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், திரு. சிந்தா மோகன் ஆகியோருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, இராணுவத்தையோ அல்லது மத்திய அரசின் காவற் படைகளையோ உடனடியாகக் கர்



நாடகத்திற்கு அனுப்பி வைக்க என் சார்பில் பிரதமரை வற்புறுத்துமாறு வேண்டினேன்.

15.12.91 அன்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தன. கர்நாடகத்தின் பல பகுதிகளில் தமிழ்மக்கள் தாக்குண்டனர். அன்றே நான் மீண்டும் கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், விரைந்து அமைதி காக்க வேண்டிய அவசியத்தையும், தமிழ் மக்களின் இழப்புகள் அனைத்தும் ஈடுசெய்யப்பட வேண்டுமென்றும் கோரினேன். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்குக் கர்நாடக முதலமைச்சர்தான் முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும், இந்தியப் பிரதமர் மேலும் தாமதிக்காமல் கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பி நிலைமையைச் சீராக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில் தான் மைய அரசு மத்திய காவல் படைகளைக் கர்நாடகத்திற்கு அனுப்பியது.

கன்னட வெறியர்களின் வன்முறை நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் தங்கள் சொத்துக்களை முழுமையாக இழந்து, அடிபட்டு, காயங்களுடன் கர்நாடக மாநிலத்தைவிட்டு வெளியேறி தமிழகம் வரத் தொடங்கினர். அவ்வாறு தமிழகம் வரும் தமிழர்களுக்கு உணவு, உடை, மருத்துவம் போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

தொடர்ந்து நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு டெலக்ஸ் செய்திகள் மூலமும், தொலைபேசி மூலமும் பல முறை தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண உதவும்படி தமிழக அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் கேட்டுக் கொண்டேன். மத்திய அரசும் எனது வேண்டுகோளுக்கு இணங்க கர்நாடக மாநிலத்திற்கு மத்திய காவற் படைகளை அனுப்பியதையும் இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த சூழ்நிலையில், மத்திய அரசு இது பற்றி மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டியதை வற்புறுத்தி, வன்முறை நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்த சிலரைச் சுட்டிக்காட்டி, ஏராளமான தமிழ் மக்கள் தமிழ்நாடு வந்துள்ளதையும், அதனால் இங்கு ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையையும் எடுத்துரைத்து, பிரதமர் இதில் உடனடியாகத் தலையிட்டு கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைக் காக்க வேண்டும் என்று கோரி, 21.12.1991 அன்று விரிவாகக் கடிதம் ஒன்றும் எழுதினேன்.

அதனைத் தொடர்ந்து, 23.12.'91 அன்று காலை 9.15 மணிக்கு நான் பிரதமர் அவர்களை டெல்லியில் நேரில் சந்தித்து இப்பிரச்சினை தொடர்பாக மெமோரண்டம் ஒன்றினையும் அவர்களுக்கு நேரில் கொடுத்து, தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும், நிலைமைகள் உடனே சீர்செய்யப்பட வேண்டுமென்றும், இழப்புகள் ஈடுகட்டப்பட வேண்டுமென்றும், விரைவில் கர்நாடக மாநிலத்தில் அரசியல் ரீதியிலும், மக்கள் உறவு முறைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டு, புதிய சுமுகமான உறவுகள் வளர்க்கப்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

இந்தியப் பிரதமர் அவர்கள் இது பற்றி மத்திய அரசு ஆவன செய்யுமென்றும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இழப்புகளை ஈடுசெய்ய வழிவகைகள் செய்யுமென்றும், கர்நாடக மாநில அரசுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குமென்றும் உறுதியளித்தார்.

வன்முறை குறைந்துள்ளது எனக் கருதிக் கொண்டிருக்கும் வேளையில், கடந்த வாரத்தில் மேலும் பல இடங்களில் மீண்டும் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. குறிப்பாக சாமராஜ்நகர், நஞ்சன் கூடு, குண்டலுப்பேட்டை, கொள்ளேகால் போன்ற இடங்களிலிருந்து மேலும் ஆயிரக்கணக்கானோர் நீலகிரி, பெரியார், கோவை மாவட்டங்களுக்குப் பரிதவித்து வரத் தொடங்கியுள்ளனர். இதுவரை 71,000 பேர்களுக்கும் மேலான தமிழர்கள் இவ்வாறு அகதிகளைப் போலத் தமிழகம் வந்துள்ளனர்.

> **உண்மையின் ஒளிப்பாதையில் நம்பிக்கை வைத்து அதைப் பின்பற்றிச் செல்லுங்கள். அந்த ஒளியே கருமேகத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப் போல் உலகம் முழுவதும் பிரகாசிக்கின்றது.**
>
> **—புத்தர்**

இவ்வாறு வரும் தமிழர்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகள் உடனடியாக அளிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்துள்ளது. கர்நாடக மாநில எல்லைக்கு அருகிலுள்ள தமிழக மாவட்டங்களில், இவ்வாறு வருபவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, அவரவர் விரும்புகின்ற அவர்களின் சொந்த ஊர்களுக்குப் பேருந்துகளில் இலவசமாக அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு சொந்த ஊர்களுக்குச் செல்ல விரும்பாதவர்களுக்காகத் தற்போது பெரியார் மாவட்டத்தில் 20 இடங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் 9 இடங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் 5 இடங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் 4 இடங்களிலும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 2 இடங்களிலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஓரிடத்திலும், உதவி மற்றும் நிவாரண முகாம்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடைகள், மற்றும் சமையல் பாத்திரங்கள் அளிக்கப்படுகின்றன. உடைகளைப் பொறுத்தமட்டில் ஆண்களுக்குப் பெரியவராயின் 2 வேட்டி அல்லது 2 லுங்கிகளும், 2 உள் அரைக்கால் சட்டையும் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்குப் பெரியவராயின் 2 சேலைகள், 2 சட்டைகள் மற்றுர் ஓர் உள் பாவாடை கொடுக்கப்படுகிறது. சிறுவர்களுக்கு 2 அரைக்கால் சட்டைகள், ஓர் உள் அரைக்கால் சட்டை மற்றும் ஒரு ஸ்லாக் சட்டை கொடுக்கப்படுகிறது. சிறுமியர்களுக்கு ஒரு பாவாடை, ஒரு சட்டை மற்றும் ஒரு கவுன் கொடுக்கப்படுகிறது. மேலும் ஒரு குடும்பத்திற்கு 2 துண்டுகளும், உணவு சமைக்க மூடியுடன் கூடிய ஒரு பாத்திரமும்,



# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உரிய பங்கை வழங்குக!

## புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

தேசிய வளர்ச்சிக்கான சில இன்றியமையாத விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடக்கூடியிருக்கும் இந்த வேளையில் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் பொதுவான பொருளாதார நிலை குறித்து அறிக்கைகள் கூறும் தகவல்களைக் கண்டு இடிந்து போய் விடாமல், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நாட்டை நிர்மாணிப்பதற்கான செயல்களில் தீவிரம் காட்டவேண்டும்.

வளைகுடா யுத்தம் போன்ற சம்பவங்களால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் வளர்ச்சியையும், ஸ்திர நிலையையும் அடைய முடியுமா? என்ற ஐயத்தை ஏற்படுத்திவிட்டது. பண வீக்கத்தையும், விலைவாசி உயர்வையும் உடனடியாகக் கட்டுப்படுத்தியாக வேண்டும். விலைவாசி உயர்வு குறித்துத் தங்களுக்கு ஏற்படும் அதிருப்திகளை மக்கள் மாநில அரசுகள் மீதுதான் காட்டுகிறார்கள். பொருளாதாரத் துறையில் அமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்யும்போது அவற்றால் ஏற்படும் தீய விளைவுகள் ஏழை மக்களைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திட்டமிடுகின்ற வேளையில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த தளராத முழுமையான நமது ஈடுபாட்டை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

திட்டமிடலில் காணப்படும் மாறுதல்கள் மகிழ்ச்சி தருகின்றன. மத்தியில் நாம்கடைப்பிடித்து வந்த அதிகாரக் குவியல்முறை மாறி இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் இடையூறுகளைக் களைகின்ற ஒரு புதிய திட்டம் வேண்டும். திட்ட அணுகுமுறை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான இலக்குகளைப் பாராட்டும் அதே வேளையில், நாம் கவனிக்க வேண்டிய பிற அம்சங்கள் குறித்தும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய வளர்ச்சிக்காக ஒவ்வொரு உத்தியைக் கையாள வேண்டியுள்ளது. இந்த நிலையில் மாநிலங்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்காகத் திட்டமிடல் அமைந்து விடக்கூடாது. தமிழ்நாட்டில் போதிய இயற்கை வளங்கள் இல்லை. எனவே அக வளங்களை மட்டும் நம்பியிராமல், புறம் சார்ந்து வளரக்கூடிய உத்தியை வகுக்க வேண்டிய கட்டாயம் அதற்கு இருக்கிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டுகின்ற வேளையில் மாநிலங்கள் தங்களது வளர்ச்சிக்கான யுக்திகளை வகுத்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

வேளாண்மைத்துறையும், கிராமப் பகுதிகளில் உள்ள இதரத் துறைகளும்தான் தொடர்ந்து பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன. இந்த வேளாண்மை சிறக்க தண்ணீர் வளம் வேண்டும். தமிழகம் தன்னுடைய நிலத்தடி நீர் இருப்பில் பெரும் பகுதியைப் பயன்படுத்திவிட்டது. கடலில் வீணாகக்கலக்கும் உபரி நீரை நாட்டின் வறட்சியான பகுதிகளுக்கு மடை மாற்றம் செய்யும் ஒரு 'நதி நீர்த் தொகுப்பை' (River Water Grid) உருவாக்க வேண்டியதின் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தீபகற்ப நதிநீர்த் தொகுப்புக்கான ஒரு தொடக்கம் அமையும் என்று நான் நம்புகிறேன். மத்திய அரசு முன்நின்றால் இது ஒன்றும் செய்ய முடியாத செயல் அல்ல என்று கருதுகிறேன்.

கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பெருமளவு முதலீடு எதையும் மத்திய அரசு செய்யவில்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான மத்திய அரசு நிறுவனங்களின் உத்தேசத் தொழில் திட்டங்களைப் பார்க்கும்போது, தமிழகத்துக்கான மத்திய அரசின் முதலீடு மிகக் குறைவு என்று தெரிகிறது. மத்திய அரசு இனியாவது தமிழகத் தொழில் திட்டங்களில் பெருமளவு முதலீடு செய்யும் என்று நம்புகிறேன். தென்னக நில வாயு தொகுப்புத் திட்டத்தை மத்திய அரசு விரைந்து தொடங்கவேண்டும். அது தமிழ்நாட்டுக்குத் தேவைப்படும் நில வாயுவை வழங்கும்.

வேளாண்மை, தொழில் துறை தவிர, ஏனைய துறைகளிலும் தனியார் முதலீட்டை அனுமதிப்பது என்ற முடிவு வரவேற்கத் தக்கது. அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு சரியாக இல்லை என்பதற்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெருக்காமல் விட்டுவிட முடியாது. ஜெயங்கொண்ட சோழபுரம் என்ற இடத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்கவும், அனல் மின்சார நிலையத்தை அமைக்கவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை நிறைவேற்ற உத்தேசித்துள்ளோம். கூட்டுத்துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்துக்கு ரூ.5,000 கோடி முதலீடு தேவைப்படும். 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும். தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையில் கணிசமான அளவை இது பூர்த்தி செய்யும். இந்தத் திட்டத்தை விரைவிலேயே நாங்கள் தொடங்கும் வகையில் மத்திய அரசின் அனுமதி கிட்டும் என்று நம்புகிறேன்.

உலகப் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பது எப்படி என்பதற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தமிழ்நாட்டுக்கும், சிங்கப்பூருக்கும் இடையே வர்த்தக உறவு ஏற்படுவது இதற்கு உதவும். இதற்காகத் தமிழ்நாட்டின் ஒரு துறைமுகத்தை மாற்ற வேண்டும். இந்த உத்தி வெற்றியடைய நாம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

புதிய சாலைகளை அமைக்கவும், ஏற்கெனவே போடப்பட்ட சாலைகளைப் பராமரிக்கவும் ஒதுக்கப்படும் நிதியின் அளவு வெகுகுறைவாக இருக்கிறது. 'மத்திய சாலை நிதி' இதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகுகூட, இந்த நிதி மாநிலங்களுக்குத் தரப்படவில்லை. சாலை மேம்பாட்டுக்காகவே உருவாக்கப்பட்டது இந்த நிதி. எனவே, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் மாநில அரசுகளுக்குக் கூடுதல் நிதி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். சாலைகளை உபபோகிப்போரிடமிருந்து வரி வசூலிப்பது குறித்து நாங்கள் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறோம்.

வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு ஆகிய அம்சங்களில் முக்கியத்துவம் காட்டவில்லையென்றால், திட்டமிடலுக்கே அர்த்தம் இல்லை. வறுமை ஒழிப்புத் திட்டங்களை ஒருங்கிணைப்பதை வரவேற்கும் அதேவேளையில், இவற்றைத் திட்டமிடவும், அமல் செய்யவும் மாநிலங்களுக்கு அதிக உரிமைகளை வழங்கவேண்டும்.

மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தமிழ்நாடு எப்பொழுதுமே முன்னுரிமை வழங்கி வந்துள்ளது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உதவும் குடும்பநலத் திட்டங்களை முறையாக அமல் செய்வதில் தமிழ்நாடு வெற்றி கண்டுள்ளது. குடும்ப நலம், ஊட்டச்சத்து வழங்கல், ஆரம்பக் கல்வி, குடிநீர் வசதி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஏழையர், நலிவுற்றோருக்கான திட்டங்கள் என மனித ஆற்றல் மேம்பட, தொகுப்பான பல திட்டங்களைத் தமிழகம் நிறைவேற்றி வருகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த முயற்சிகள் மேலும் வலுப்படுத்தப்படும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நாங்கள் மேற்கொண்ட முயற்சி, எங்களுக்கு எதிரான பலன்களைத் தந்துவிடக்கூடாது. 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையில் தான் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் மத்திய அரசின் நிதி உதவிகள் அமையும் என்ற வாக்குறுதி எனக்குத் தேவை.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அரசு நிறுவனங்களுக்கான மொத்த முதலீ

## தமிழ்நாட்டில் கன்னடியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டும்

# எங்கள் தமிழர்க்குக் கர்நாடகத்தில் இன்னலா?

## தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

1. கர்நாடக மாநிலத்தில் பல்லாண்டுக் காலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அங்குள்ள கன்னட வெறியர்களால் எந்தக் காரணமும் இன்றி வன்முறைக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கன்னடர்களால் திட்டமிட்டுத் தாக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். கர்நாடக மாநிலத் தமிழ் மக்கள் இப்படித் தொடர்ந்து பல்வேறு கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டு வருவது குறித்து அமைச்சரவை ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

2. வழிவழியாகக் கன்னடர்களோடு ஒன்றி வாழ்ந்து- கர்நாடக மாநிலத்தின் செல்வ உயர்விற்கும், வளர்ச்சிக்கும் உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், கலவரத்தின் மூலம் அவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை காரணமாக, இன்று தங்கள் இல்லங்களையும், உடமைகளையும் இழந்து தங்கள் உயிருக்கே பாதுகாப்புத் தேடும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர, கர்நாடக அரசு தவறியது குறித்து வருந்துவதோடு, இந்த வன்முறைச் செயல்களையும் அமைச்சரவை கண்டிக்கிறது.

3. வன்முறை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த பொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களுடன் நேராகவும், தொலைபேசி மூலமாகவும் டெலக்ஸ் செய்திகள் மற்றும் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும், இந்த வன்முறை மற்றும் கலவர நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டுமென்று பலமுறை கேட்டுக் கொண்ட பொழுதும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாகக் கர்நாடக மாநிலத்தில் உள்ள கலவரப் பகுதிகளுக்கு இராணுவத்தையோ அல்லது மத்திய அரசுப் படைகளையோ அனுப்பி அமைதி காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை மீதும் மைய அரசு காலம் தாழ்ந்து நடவடிக்கை எடுத்தது. குறித்த காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், வன்முறை நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இது குறித்து அமைச்சரவை அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

4. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டபொழுது, பிரதமர் அவர்கள் கர்நாடக மாநிலத்தில்நிலவும் பதட்ட நிலை குறித்து விசாரிக்க, மைய அரசின் இரண்டு மூத்த அதிகாரிகளை அனுப்புவதாகக் கூறியிருந்தும், மத்திய அரசின் உள்துறையைச் சார்ந்த இணைச் செயலாளர் மட்டத்தில் ஒரு அதிகாரியை மட்டும் கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பியிருப்பது வருந்தத்தக்கது. இந்த ஒரு அதிகாரியும், மிகக் குறுகிய கால கட்டத்தில் கர்நாடகத்தில் உள்ள உண்மை நிலவரத்தையும், அங்குள்ள தமிழ் மக்களின் பாதிப்புகளையும் முழுமையாக விசாரித்து அறிந்து கொள்வது என்பது நடைமுறையில் இயலாத ஒன்றென்பதால், பிரதமரின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பது பற்றியும் அமைச்சரவை அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

5. 70 ஆயிரத்திற்கும் மேலான தமிழ் மக்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது இங்கு ஒரு அசாதாரண நிலையினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வன்முறைச் சம்பவங்களால் அச்சத்திற்கும், கவலைக்கும் ஆளாக்கப்பட்ட தமிழ் மக்கள், பாதுகாப்பிற்காகத் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் கர்நாடக மாநிலத்தில் தற்போதும் தொடருகின்றன. இதனால் இங்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு, உணவளித்து, தங்க இடம் கொடுத்து, தேவையான பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை மாநில அரசு மேற்கொள்வதால் கணிசமான செலவு ஏற்படுகிறது. இந்தச் செலவு அனைத்தையும் மைய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவை தீர்மானிக்கிறது.

6. மேலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று தொடர்ந்து வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கர்நாடக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அறிவுரைகளை மத்திய அரசு கர்நாடக அரசுக்கு வழங்க வேண்டுமென்றும், அந்த அறிவுரைகளை உடன் செயற்படுத்த வேண்டுமென்றும், கர்நாடக, மத்திய அரசுகளைக் கேட்டுக் கொள்ள அமைச்சரவை தீர்மானிக்கிறது.

7. வன்முறைச் செயல்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களுக்கும், உடற்காயங்களுக்கும், பொருள் இழப்புக்களுக்கும் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்க வேண்டுமென்று அந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள அமைச்சரவை தீர்மானிக்கிறது.

8. அத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுது தமிழகத்திற்கு வந்து தங்கியிருப்பதால், அவர்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் இந்த நிவாரணத்தை வழங்குவதற்கான விசாரணையை நடத்த மத்திய அரசு உச்சநீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க முன்வர வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கோரிக்கைவிட அமைச்சரவை தீர்மானிக்கிறது. அத்தகைய விசாரணைக் குழுவின் நியமனத்தை ஏற்று, அதன் பணிக்கான எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டுமென்றும் அமைச்சரவை கர்நாடக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

9. இதுவரை தாக்குதலுக்குள்ளாகி கர்நாடகத்திலிருந்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபோதிலும், தமிழ் நாட்டின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த 380 கன்னடியர்கள் மட்டுமே கர்நாடக மாநிலத்திற்கு அச்சத்தின் காரணமாகச் சென்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தமிழகத்திற்குத் திரும்பி விட்டனர்.

தமிழ்நாட்டில் வாழ்கின்ற கன்னடியர்களுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அவர்களைப் பாதுகாக்க எல்லாவித நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்கும் என்ற உறுதியை இந்த அமைச்சரவைக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**—மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், கர்நாடக மாநிலத்திலிருந்து வந்துள்ள தமிழ்மக்களின் நிலை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழு விவரம்.**

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

---

சாம்பார் போன்றவை தயாரிப்பதற்கு ஒரு பாத்திரமும், 2 பெரிய கரண்டிகளும், 2 சாப்பிடும் தட்டுக்களும் மற்றும் 2 டம்ளர்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பெரியவர்க்கும் ஒரு பாய் மற்றும் போர்வையும் கொடுக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உதவி மற்றும் நிவாரண முகாம்களைத் திறக்க உத்தரவிடப்பட்டதோடு, மாண்புமிகு அமைச்சர்களையும், உயர்மட்ட அதிகாரிகளையும் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் அதிகமாக வந்து தங்கியுள்ள, கோவை, நீலகிரி, பெரியார், தருமபுரி, வட ஆர்க்காடு- அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டங்களுக்கு அனுப்பி, நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டுத் துரிதப்படுத்த ஆணையிட்டுள்ளேன்.

இந்த உதவி மற்றும் நிவாரண முகாம்களுக்காகும் பெரும் பொருள் செலவை, இக்கட்டான நிதி நிலையிலும் கூட இந்த அரசு ஏற்றுச் செய்து வருகிறது. ஏனென்றால், இது தமிழ்நாட்டின் மானப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையில் நாம் அணுக வேண்டிய நடைமுறைகளை உடன் தீர்மானிக்கின்ற பின்னணிக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து அவர்களுக்குத் தக்க புகலிடமும், நிவாரணமும் அளிப்பதோடு நில்லாமல், அவர்களது உரிமைகளையும், உடைமைகளையும் ஜனநாயக வழியில் அவர்களுக்கு மீட்டுத் தருவது போல், நமது தலையாய கடமையாகும் என்பதைத் தெளிவாக்க விரும்புகின்றேன்.

இந்தத் தருணத்தில் நமது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி என் நினைவிற்கு வருகின்றது. அதில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை இக்கூட்டத்தில் எடுத்துக் கூறுவது மிகவும் பொருத்தமாக அமையும் என்று நம்புகின்றேன்.

அது - 'நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்கவும், வலுப்படுத்தவும், என்னை அர்ப்பணித்துச் செயல்படுவேன் என்று மனமார உறுதி கூறுகிறேன். நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபடமாட்டேன் என்றும், மதம், மொழி, வட்டார மற்றும் அரசியல் அல்லது பொருளாதார பேதங்களுக்கு அமைதியான முறையிலும், அரசியல் சட்டத்திற்குட்பட்டும், தீர்வுகாணத் தொடர்ந்து பாடுபடுவேன் என்றும், நான் மேலும் உறுதி கூறுகிறேன்'- என்று உள்ளது.

கர்நாடக மாநில அரசும், அங்குள்ள அரசியல் கட்சிகளும், தீய சக்திகளும், நிச்சயமாக நமது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை மதிக்காதது மட்டுமல்ல, உடைத்தெறிந்துள்ளன என்பதை நாம் இன்று உணர்கின்றோம். ஆனால் நாம் என்றென்றும் நாட்டின் சுதந்திரத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் நம்மை அர்ப்பணித்துச் செயல்படுபவர்கள் என்பதை நாடு நன்கு அறியும். நாம் அந்தப் பெருமை மிக்க நிலையில் இருந்து சிறிதும் விலகாது செயல்பட்டு, அமைதியான முறையில், இன்று நம் முன்னர் உள்ள இந்த முக்கியப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரச் தீர்வு காணவேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள கட்சித் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**( சென்னையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை)**

---

## ஆயிரம் புது வழித்தடங்களில் பேருந்துகள்

**1992-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் தமிழ்நாட்டில் ஆயிரம் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்படும்.**

**உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.22 கோடி செலவில் 550 பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும், அதிக அளவில் டீசலைச் சேமித்த போக்குவரத்துக் கழக நிறுவனங்களுக்கும் சிறந்த ஓட்டுநர்களுக்கும் சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் பரிசளித்துப் பேசுகையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார்.**

# நூல் நயம்

### நாலடியார்

**உரையாசிரியர்கள்:**

**தி. சீனிவாசன்**
**சந்திரிகா ராஜமோகன்**

**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்
ஸ்ரீபுரம், 2-வது தெரு,
சென்னை-600 014.

பக்கம்:210 விலை:ரூ.5/-

**ப**தினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார், மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகிறது. 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியால் இதன் பெருமையை உணரலாம்.

நாலடியார் மூலமும்-உரையும் உள்ள டங்கிய நூலாக இது விளங்குகிறது. மூலமும் அதற்கு எதிரே உரையும் என்கிற வகையில் இது அமைந்திருக்கிறது. நூல் அறிமுகம், பாட்டு முதற் குறிப்பு ஆகி யவை படிப்போர்க்குப் பயனுள்ளவை யாகும். பள்ளி மாணவர்கள் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே, எளிய சொற்களோடு இனிய தமிழில் உரை வளம் உள்ளது, இதன் சிறப்பு. கையடக்க அளவில், மலிவு விலையில் அழகிய பதிப்பாக இது வெளிவந்திருக்கிறது.

### பெருமை கொள்வாய் தமிழா!

**ஆசிரியர்: திருச்சி பாரதன்**

**வெளியீடு:**

செந்தில் பதிப்பகம்,
136, பெருமாள் எடத் தெரு,
பாலக்கரை, திருச்சி-620 001.

பக்கம்:120 விலை:ரூ.16/-

**ஒ**ரு சமுதாயத்தைச் சீர்திருத்த - சீர்தூக்கப் படைப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன எனலாம். அந்த வகையில் இந்நூலாசிரியர் படைத்துள்ள இந்தப் படைப்பு தமிழனைப் பெருமை கொள்ள வைக்கும் என நம்பலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் ஆற்றிய உரையின் தொகுப்பாக, அத்துடன் தன் வரலாற்றுக் குறிப்பாக மலர்ந்துள்ள இந்நூலை தமிழ் ஆர்வலர் அனைவரும் படிக்கலாம்.

- பொ. மறைமலை.

### அறிவியல் புதுமைகள்

**ஆசிரியர்: மலையமான்**

**வெளியீடு:**

ஒளிப் பதிப்பகம்
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-600 018.

பக்கம்:104 விலை:ரூ.13/-

**அ**றிவியலின் அசுரவேக வளர்ச்சி யின் காரணமாக, பல அற்புதங்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஹெலிகாப்டர், சட்டைப்பைத் தொலைக் காட்சி, டெரிலின், ஜெராக்ஸ், லேசர் இப்படிப் பல சுவையான அறிவியல் துணுக்குகளின் அழகிய தொகுப்பாக விளங்குகிறது இந்நூல். பள்ளி மாண வர்கள் படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

- பூங்கொடி.

### வழிகாட்டிய ஒளிவிளக்குகள்

**ஆசிரியர்: பி.வி. கிரி**

**வெளியீடு:**

இராஜேஸ்வரி புத்தக நிலையம்
22, 6-வது தெரு,
பக்தவத்சலம் நகர், பழவந்தாங்கல்,
சென்னை-600 114.

பக்கம்:96 விலை:ரூ.12/-

**வ**ழிகாட்டிய ஒளிவிளக்குகளாய் விளங்கியவர்கள் நம் முன்னோர்கள். அவர்களது வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் வாழ்க்கையில் நடந்த சுவை யான நிகழ்ச்சிகள் இந்நூலில் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள், பாவேந்தர் பாரதிதாசன், டாக்டர் அம்பேத்கர், ஆனந்தரங்கப்பிள்ளை, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, மாயூரம் வேதநாயகர், தமிழ்த் தென்றல் திரு.வி.க., மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார், எழுத்தாளர் அகிலன் ஆகியோரின் வாழ்க்கைச் சித்திரங்கள் இந்நூலில் இடம் பெற் றுள்ளன.

மாணவர் மட்டுமல்ல, பெரியவர் களும் படிக்கலாம்.

### காந்தி வழி வாழ்க்கை

**ஆசிரியர்: டாக்டர் ஜே.சி. குமரப்பா**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625020

பக்கம்:67 விலை:ரூ.8/-

**அண்ணல் காந்தியடிகளின் வாழ்வு, நமக்கெல்லாம் வாழ வழிகாட்டியாக அமைகிறது. அவர் கடைப்பிடித்த அன்பு, சத்தியம், அகிம்சை, முதலானவை வாழ்க்கையின் வெற்றிக்கு வழி வகுத்த தத்துவங்களாகும். அண்ணலின் கருத்து ரைகள் நூல் முழுதும் விரவியுள்ளன.**

**எல்லாத் திறத்தாரும் படித்துப் பின் பற்ற வேண்டிய பயனுள்ள நூல்.**

### ஒப்பனை முகங்கள்

**ஆசிரியர்: ரவிசுப்ரமணியன்**

**வெளியீடு:**

அன்னம் (பி) லிட்.,
சிவகங்கை.

பக்கம்:72 விலை:ரூ.12/-

**க**விதைத் தொகுப்பு புதுக் கவிதைகள் பல இடங்களில் கவிஞரின் சிந் தனைகள் சிலிர்க்க வைக்கின்றன. உதாரணம்,

'சேவலின் கால்களில்
கத்தி பதித்து
ரத்தம் சுவைக்க நிற்கிறது
ஓநாய்கள் கூட்டம்'. —ஆர். சுகுமாரன்

### 'நேருமாமா'

**ஆசிரியர்: எம்.எஸ். தியாகராஜன்**

**வெளியீடு:**

தணிகை பதிப்பகம்
13, தேசிகர் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:96 விலை:ரூ.10.50/-

**கு**ழந்தைகள் படித்து இன்புறத்தக்க 8 சிறுகதைகளும், 'அறிந்து கொள்ள வேண்டிய அரிய செய்திகள்' என்ற தலைப்பில் 225 அறிவியல் துணுக்கு களும் இடம் பெற்றுள்ளன.

முதன் முதல் உலகப்படத்தை வரைந் தவர்... ஐ.நா. சபையிலுள்ள நூல் நிலையத்தின் பெயர்... இவை போன்ற சின்னஞ்சிறு துணுக்குகள் நாம் அறிந்து கொள்ள வேண்டியவைதான்.

- என். குமார்.

### 'அறிவூட்டும் பண்புக் கதைகள்'

**ஆசிரியர்: மனோகரன்**

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை
(மேற்கு தூளை மேடு), சென்னை-94.

பக்கம்:100 விலை:ரூ.12/-

**ஆ**சிரியர் வீட்டிற்குக் கல்விக் கற்க வந்த மாணவர்கள், மழை பெய்யத் தொடங்கவே ஆசிரியர் வீட்டிலே சிறிது நேரம் தங்க... மழை விடும் வரை கதை கூறுவதாக ஆசிரியர் கதை சொல்லத் தொடங்குகிறார்.

மழை ஓயும் வரை ஒன்பது கதை களைச் சொல்கிறார். ஒவ்வொரு கதை யின் முடிவிலும் சொல்லிய கதையிலி ருந்து மாணவர்களைக் கேள்விக் கேட்டுக் கதையின் நற்பண்பை உணர்த்தும் உத்தி சிறப்பு

- குமார்.



# வேளாண் வளர்ச்சிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம்

**பை**யூர் மண்டல ஆராய்ச்சி நிலையம், தருமபுரி கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில், தருமபுரியிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் அமைந் துள்ளது. தருமபுரி, சேலம் மாவட் டங்களை உள்ளடக்கிய தமிழ்நாட் டின் வடமேற்கு மண்டலத்திற்கான வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் தேவைகளை இந்நிலையம் மேற்கொண்டு வருகிறது.

இம்மண்டலத்தில் சுமார் 70 சதவிகிதம் மானாவாரி நிலங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்குச் சரா சரியாகச் சுமார் 825 மி.மீ. மழை 47 மழை நாட்களில் கிடைக்கிறது. இப்பகுதியிலுள்ள மண் வகை களைச் சுண்ணாம்பில்லாத செம் மண், சுண்ணாம்போடு கூடிய செம்மண் மற்றும் சுண்ணாம்புச் சத்துடன் கூடிய கருமண் எனப் பிரிக்கலாம். இந்நிலங்கள் குறைந்த அயனிகள் மாற்றும் தன்மையும், பெய்யும் மழை நீரைக் குறைந்த அளவே சேமிக்கும் தன்மையும் குறைந்த அளவே ஊட்டச் சத்துக் களையும் கொண்டவை, பயிர் களுக்கு இடப்படும் மணிச்சத்தைப் பயிர்களுக்கு எளிதில் கிடைக்காமல் செய்து வருகின்றன.

தழை மற்றும் மணிச்சத்து மிகக் குறைந்த அளவே காணப்படுகின் றது. கேழ்வரகு, நிலக்கடலை, சோளம், எள், கொள்ளு, நெல், சாமை, உளுந்து, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, பருத்தி, மரவள்ளி, காய்கறிகள், மல்லிகை ஆகியவை இம்மண்டலத்தில் சாகுபடிச் செய் யப்படும் முக்கியப் பயிர்களாகும். ஜூன்-ஜூலை மாதங்களில் கிடைக் கும் தென்மேற்குப் பருவ மழையைக் கொண்டு பெருவாரியான நிலங்கள் பயிரிடப்படுகின்றன. வடகிழக்குப் பருவமழை கிடைக்கும் பகுதிகளில் இரண்டாவது போகமும் மானா வாரியாகவே சாகுபடி செய்யப் பட்டு வருகின்றது. நிலக்கடலை, கேழ்வரகு, கம்பு, மரவள்ளி ஆகிய பயிர்கள் இறைவையிலும் பயிரிடப் படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள மா சாகுபடிப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு இம்மண்டலத்திலுள்ளது. திராட்சையும் பெருவாரியாகச் சாகுபடியிலுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கங்கள்

1. இராகி, கொள்ளு ஆராய்ச்சி களில் தலைமையகமாகப் பணி யாற்றுதல், முக்கியப் பயிர்களில் உயர் விளைச்சல் ரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.

2. மானாவாரி மற்றும் இறை வைச் சாகுபடிக்குத் தேவையான

ஆய்வு செய்யப்பட்டுவரும் **டி.பி.ஐ.45, டி.பி.ஐ.55 ஆகிய உயர் விளைச்சல் மாமரங்கள்.**





எவ்வளவு என்று தெரிந்தாலும், மத்திய, மாநில அரசுகளுக்குரிய பங்கு என்னவாக இருக்கும் என்று தெரியவில்லை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவை விட குறைந்து விடாதபடிக்கு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு அமைய வேண்டும். மத்திய அரசு திரட்டும் கடன் தொகையில் 40 சதவிகிதம் மாநிலங்களுக்குத் தரப்படுகின்றது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில் அது 50 சதவிகிதமாக உயரவேண்டும்.

ஒன்பதாவது நிதிக் கமிஷன் பரிந்துரைகளை மறு ஆய்வு செய்யவேண்டும். விலைவாசி நிலைமை கடந்த 2 ஆண்டுகளில் மோசமாகி விட்டதால், அதனடிப்படையிலான பரிந்துரைகளையும் மறுபரிசீலனை செய்வது அவசியம். திட்டமிலா இனங்களில் தமிழ்நாட்டுக்கு உபரி இருப்பதாக நிதிக் கமிஷன் கூறியிருப்பதாலும், உண்மையில் பற்றாக்குறைதான் ஏற்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்தும், மத்திய அரசின் வருவாய்ப்பற்றாக்குறை குறித்தும், கவனம் செலுத்தப்பட்டுள்ளதே தவிர, மாநிலங்களின் மோசமான நிதிநிலை குறித்துப் போதிய அக்கறை காட்டப்படவில்லை. மாநிலங்களின் கடன் பளுவும் கூடிவருவது கவலை தருகிறது. மத்திய எக்ஸைஸ் தீர்வையில் மாநிலங்களுக்குப் பிரித்துத் தரும் பங்கை 50 சதவிகிதம் உயர்த்த வேண்டும். கூடுதலான 5 சதவிகிதம் வரி மாநிலங்களுக்குக் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டும். இது நிறைவேற்றப்படாவிட்டால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்குக் கூட பல மாநிலங்கள் சிரமப்படும். ஒன்பதாவது நிதிக் கமிஷன் பரிந்துரை செய்த வருவாய் மானியத்தையும் பரிசீலித்து உயர்த்தவேண்டும்.



மாநிலங்களின் நிதி ஆதாரங்களை உடனடியாக வலுப்படுத்த வேண்டும். அனுப்புச் சரக்கு வரியைக் கொண்டு வர முடிவு செய்திருந்தோம். எதற்கு வரி விலக்குத் தருவது, எவ்வளவு வசூலிப்பது என்பதை விரைந்து முடிவு செய்யவேண்டும். சரக்கனுப்பு வரியை விதிக்க இந்தக் குழு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றும், மத்திய அரசு அடுத்த நாடாளுமன்றத் தொடரில் இதற்கான மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். சிறு சேமிப்பிலிருந்து கிடைத்து வந்த மாநிலங்களின் பங்கு குறைகிறது. இதையும் உயர்த்தித் தர வேண்டும்.

மத்திய அரசே ஏற்று நடத்தும் சில திட்டங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்படுவது பற்றி அடுத்துக் காண்போம். இந்த மாற்றம் அதிக அளவில் இல்லையென்றாலும் இதன்பின் உள்ள உணர்வை நான் மதிக்கிறேன். எட்டாவது திட்டத்தில் இன்னும் அதிக திட்டங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் மாற்றப்படுகையில் அவற்றுக்கு அளிக்கப்படும் உதவிகளும் தொடர வேண்டும். மத்திய அரசே ஏற்று நடத்தும் புதிய திட்டங்கள் பரவலாக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையும், மாநிலங்களுக்கிடையிலுள்ள திட்டங்களும் மட்டுமே தொடர அனுமதிக்க வேண்டும். இந்தத் திட்டங்களில்கூட, நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் மாநிலங்களுக்குப் போதிய உரிமை வழங்கப்பட வேண்டும்.

மத்திய உதவியையும், கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமான தொகைகளையும் மாநிலங்

(44-ஆம் பக்கம் பார்க்க)



# வளமுடன் வாழ்க!

வரப்புயர என்றந்நாள் பாட்டில்
வாழ்த்தியவள் இன்றிருந்தால் 'பூமிப்
பரப்பதுவே உள்ளதனால் பிள்ளை
பலபெறுதல் தவிர்த்திடுவீர், என்பாள்!

'வளமுடனே வாழ்க!' எனச் சொல்வார்!
வளமதுதான் குறையாமை வேட்பார்!
குளமதிலே மீன்களைப்போல் பிள்ளை
குவியாமை அதில்அடக்கம் அன்றோ?

'பதினாறும் பெறுக!' என வாழ்த்தின்
பதினாறு' பிள்ளையெனக் கொள்வார்!
'பதினாறு வகையான செல்வம்
பல்க!' எனப் பொருளாம்! உண்மை!

'வெல்க!' என விளம்புங்கால் நாடும்
வியனுலகும் வெல்வதெனல் அல்ல!
பல்கும்சேய் பிறவாமல் காத்தல்
பயனுறவே வெல்வதுதான், என்பேன்!

'நன்றாக இருங்கள்!' எனில் இன்மை
நலிவகல சிலபிள்ளை பெற்றே
என்றென்றும் நிறைகுடம்போல் செம்மை
இருந்தோங்க வாழ்வதுவே என்போம்!

குடிவிளங்க தீர்க்காயுசு என்றே
கூறுவன யாவையுமே பிள்ளை
நெடியதொகை பெருகாமல் காத்து
நிலவிடவே அமைதிசெயல் அன்றோ?

கவிஞர் மனசை ப.கீரன்




ஆய்வு மையத்தில் தயாரிக்கப்படும் காளான் வித்துக்கள்.

அனைத்துத் தொழில்நுட்பங்களையும் கண்டறிதல்.

3. பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய்களை அளவீடு செய்து அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை ஆராய்தல்.

4. முக்கியத் தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தொழில்நுட்பங்களை ஆராய்தல் மற்றும் ரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.

5. இம்மண்டலத்திற்குத் தேவையான புது வேளாண் கருவிகளை வடிவமைத்தல், நீர், மண் வளம் பராமரிப்பு முறைகளைக் கண்டறிதல்.

6. வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, சார்நிலைத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்.

7. வேளாண் பெருமக்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் ஆகியவைகளாகும்.

பயிர் மேம்பாடு, பயிர் மேலாண்மை, பயிர்ப் பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விரிவாக்கம் ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த 24 வேளாண் விஞ்ஞானிகள் ஒருங்கிணைந்த முறையில் இம் மண்டலத்திற்கு வேண்டிய ஆராய்ச்சிகள் அனைத்திலும் திட்டமிட்டுப் பயனுள்ள முறையில் செய்து வருகின்றனர்.

முனைப்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக பையூர்-1 என்று பெயரிடப்பட்டுள்ள நெல், இராகி, சோளம், சாமை, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, கொள்ளு, எள், பருத்தி, தக்காளி ஆகிய 10 உயர் விளைச்சல் ரகங்கள் இந்த நிலையத்திலிருந்து இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

பையூர்-1 நெல் ரகம், கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பாசனப் பகுதிகளில் மிக அதிக அளவில் சாகுபடியிலுள்ளது. தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. இதர பையூர்-1 ரகங்கள் வறட்சியைத் தாங்கி உயர் விளைச்சல் கொடுக்கக்கூடியவை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பயிர் மேம்பாடு ஆராய்ச்சியின் விளைவாக 17 உயர் விளைச்சல் வளர்ப்புகள் பல வித பரிசோதனைகளிலும், அனுசரனை ஆராய்ச்சியிலும் உள்ளன. இவை கூடிய விரைவில் சாகுபடிக்கென வெளியிடப்படும்.

இந்நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள பயிர் ரகங்களில் நிபுணர் விதை இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வேளாண் துறைக்கு விதைப் பெருக்கத்திற்காக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பயிர் மேலாண்மையில் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களில் நெல்லுக்குச் சாம்பல் சத்து மேலுரமிடல், யூரியாவில் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுதல், கிருஷ்ணகிரி பகுதியில் களர் - உவர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய ஜிப்சம் மற்றும் பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துதல், மானாவாரிப் பயிர்களுக்கு மக்கிய தென்னை நார்க்கழிவு உரத்தை இடுதல், மானாவாரிப் பயிர்கள் வறட்சி தாங்கி வளர விதைகளைக் கடினப் படுத்தும் முறைகள், ஊட்டமேற்றிய தொழு உரத்தின் பயன்கள், கலப்புப் பண்ணையின் பயன்கள், சோயா மொச்சையைத் தனிப் பயிராகவும் ஊடு பயிராகவும் சாகுபடி செய்யும் முறைகள், பல்வேறு மானாவாரிப் பயிர்களை விதைக்க ஏற்ற காலம், மரவள்ளி, தட்டைப்பயறு ஆகியவற்றின் உரத் தேவைகள் ஆகியன அடங்கும். தீவனப் பயிர்களான புல், பயறுவகைகள், மரவகைகள் ஆகியவற்றிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியப் பயிர்களுக்குத் தேவையான அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகியவற்றைத் தேர்வு செய்யும் ஆராய்ச்சியும் செய்யப்படுகிறது.

பயிர்ப் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், முக்கியப் பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள், பருத்தி, காய்ப்புழு, தக்காளி காய்ப்புழு, தட்டைப்பயிறு மற்றும் துவரையில் தோன்றும் காய்ப்புழு ஆகியவற்றை நச்சுயிரி கொண்டு கட்டுப்படுத்துதல், ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்தி தென்னைக் கருத்தலைப் புழுக்களைக் கட்டுப்படுத்துதல், நிலக்கடலையில் பல்வேறு பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

பல்வேறு 'மா' ரகங்கள் இங்கு ஆய்வு செய்யப்பட்டு டி.பி.ஐ.45, டி.பி.ஐ.55 ஆகிய உயர் விளைச்சல் 'மா' வளர்ப்புகள் இந்நிலையத்திலிருந்து வெளியிடப்படவுள்ளது. பச்சை திராட்சை மற்றும் அர்க்காவதி ஆகிய இரண்டு திராட்சை ரகங்கள் இப்பகுதிக்கு மிகவும் ஏற்றவை எனத் தெரியவந்துள்ளது.

## முழு அளவு எழுத்தறிவு பெற்ற புதுவை மாநிலம்!

**புதுவை மாநிலம், முழு அளவு எழுத்தறிவு பெற்ற யூனியன் பிரதேசமாக 30-11-1991 அன்று முறைப்படி அறிவிக்கப்பட்டது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் இது தொடர்பான அறிவிப்பைப் புதுவையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெளியிட்டார்.**

**நாட்டில் முழு அளவு எழுத்தறிவு பெற்ற இரண்டாவது மாநிலமாகப் புதுவை திகழ்கிறது. ஏற்கெனவே கேரள மாநிலம் இந்தச் சாதனையை அடைந்து முதல் இடத்தில் இருக்கிறது.**





அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் இயந்திரம்.

மண், நீர் வளப் பாதுகாப்பிற்கும், மண் ஈரம் காக்கவும் பகுதிப்பாத்தி முறை மிகவும் சிறந்தது என ஆய்வு மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மானாவாரியிலும், இறைவையிலும் கருப்பு பாலீதீன் தாள் கொண்டு போர்வை அமைத்தல் மண் ஈரம் காக்கவும், களைகளைக் கட்டுப்படுத்தவும் விளைச்சலைப் பெருக்கவும் உதவுகிறது. தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களை இரண்டு கட்டமாகச் செயலாக்கியதன் மூலம் வறட்சி மற்றும் பூச்சி நோய்கட்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட உயர் விளைச்சல் ரகங்களை வெளியிடுதல் மானாவாரிக்கான ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டங்களைக் கண்டறிதல், மாற்றுப் பயிர்கள் மற்றும் ஊடு பயிர்கள் ஆராய்ச்சி, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், உயர் விளைச்சல் காண வழிமுறைகள் இப்பகுதியில் மானாவாரிப் பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை மண்வரிசைக்கேற்றபடி அளவிடுதல், மண் இனக்கலவை ஆராய்ச்சி, மர, புல் மற்றும் தீவனப்பயிர்கள் ஆராய்ச்சி, தானியப் பயிர்களில் பயிர் விளை எண் குறியீடுகளை நிர்ணயித்தல், குறிப்பிட்ட திறன் வாய்ந்த நன்கு பயனளிக்கக்கூடிய ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா, மைக்கோரைசர் போன்ற உயிர் உரங்களைத் தேர்வு செய்தல் ஆகியவை தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உயிரினங்களைப் பயன்படுத்துதல் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. பூச்சி மற்றும் நோய்கள் தோன்றுவது குறித்து முன்கூட்டியே அறிவிக்க வழி வகைகள் காணுதல் பற்றிய ஆராய்ச்சிக்கும் முன்னுரிமை அளிக்கப் படுகிறது.

திராட்சை, குண்டு மல்லிகை மரவள்ளி ஆகிய பயிர்களுக்குத் தேவையான அனைத்துத் தொழில் நுட்பங்களையும் காணும் ஆராய்ச்சி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இறவைக்கேற்ற தக்காளி ரகத்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி தொடர்கிறது. திராட்சை, பீன்ஸ், முட்டைக்கோசு, முசுக்கொட்டை ஆகிய பயிர்களில் விவசாயிகளின் நிலங்களிலேயே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இம்மண்டலத்தில் பயன்படுத்தப் பட்டு வரும் விவசாயக் கருவிகளைப் பற்றி ஒரு அளவீடு மேற்கொள்ளப் பட்டு வருகிறது. புதுவகையான கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கும், வேலைப்பளுவைக் குறைப்பதற்கும் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

### இந்நிலையத்தில் செயல்பட்டு வரும் மற்ற பணிகள்

★ அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்களை அதிக அளவில் தயாரித்து விநியோகித்தல்.

★ மண், நீர் மற்றும் செடி மாதிரிகளை இந்நிலையத்திலுள்ள மண்டல மண் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்து தக்க பரிந்துரைகள் அளித்தல்.

★ வேளாண்துறை, தோட்டக்கலைத் துறை, சார்பு நிலையத்துறை ஆகியோருடன் இணைந்து செயலாற்றுதல்.

★ ஒவ்வொரு மாதமும் 7-ம் தேதியன்று காளான் வளர்ப்பு பற்றி பயிற்சி அளித்தல், மேலும் காளான் வித்து தயாரித்து விநியோகித்தல்.

★ வேளாண் பெருமக்களுக்கு ஆராய்ச்சி நிலையத்திலும் வெளியிடங்களிலும் பயிற்சி அளித்தல்.

★ பல்வேறு வேளாண் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தல்.

★ தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதித் திட்டத்தில் பங்கேற்று பணியாற்றுதல்.

★ மரப்பயிர்களுக்கு ரைசோபியம் நுண்ணுயிர்க்கலத்தலின் நன்மையைக் காட்ட தனித் திட்டம் மூலம் செயலாற்றுதல்.

★ விவசாயிகளின் நிலங்களில் வயல்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவைகளாகும்.

**மு. கிருஷ்ணன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

# விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி?

**விபத்துக்கள் எப்படி ஏற்படுகின்றன? அவற்றைத் தவிர்ப்பது எப்படி? என்பன போன்ற யோசனைகளைக் கூறுகிறது இக்கட்டுரை. சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் பொறியியல் துறையில் முதுநிலை உதவியாளராகப் பணியாற்றும் திருமதி எஸ்.வி. பட்டு இக்கட்டுரையை எழுதியுள்ளார். இது முதற் பரிசு பெற்ற கட்டுரையாகும்.**

'செய்வன திருந்தச் செய்' என்ற நல்ல அறிவுரையைக் கருத்தில் கொண்டு, நம் பணிகளைச் செவ்வனே செய்தால், 'விபத்து' என்ற சொல்லுக்கே இடமில்லாமற்போகும் 'விபத்து' என்றதுமே நமது உடலும் உள்ளமும் உறைந்து போகின்றன. காரணம், அது விளைவிக்கும் அச்சமும் அழிவும்தான், உடலுக்கும், உடைமைக்கும், உயிருக்கும், ஊறு விளைவிக்கும் 'விபத்து', நமது வாழ்க்கையில் வேண்டாத விருந்தாளி. எனவேதான் இந்த விபத்துக்களைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தும் உருவாகியது.

**விபத்துக்கள் நேர்வது எப்படி?**

விபத்துக்கள் நிகழ்வதற்கான காரணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன-

1. மனிதனின் கவனக்குறைவும், அலட்சியப் போக்கும்.
2. இயந்திர மற்றும் மின்சாரக் கோளாறுகள்.
3. இயற்கையின் சீற்றத்தினால் நிகழும் விபத்துக்கள்.

**மனிதனின் கவனக் குறைவும் அலட்சியப் போக்கும்**

இவ்வகை விபத்துக்களுக்கு சாலை விபத்துக்களையும் இரயில் விபத்துக்களையும் உதாரணமாகச் சொல்லலாம். வாகன ஓட்டுநர்கள், சாலை விதிகளை அறியாமலும், மீதியாமலும், அலட்சியப் படுத்துவதாலும் விபத்துக்குக் காரணமாகின்றனர். முன்னே செல்லும் ஊர்தியை முந்திச் செல்ல நினைக்கும் மதியற்ற செயலும் ஒரு காரணம். வாகனங்கள் சரிவர இயங்குகின்றனவா என்பதை அவ்வப்போது கவனிக்காமல் இருப்பதும் ஒரு காரணம். சாலை விபத்துக்களுக்குப் பாதசாரிகளும் காரணமாகின்றனர். எப்படியெனில் அவர்கள் நடைபாதையையும், சுரங்கப் பாதைகளையும் உபயோகப்புடுத்துவதில்லை. சாலையே தனக்குத்தான் சொந்தம் என்ற மிதப்பில் சாலையைக் கடக்கும்போது, வெகு விரைவாக, அல்லது வெகு நிதானமாக, எதிரில் வரும் வாகனங்களையும் கவனிக்காமல், சாலை விதிகளான 'கடக்கும் இடம்', மற்றும் 'சிக்னல்'களையும் கவனிக்காமல் சாலையைக் கடப்பதனால் அநேக விபத்துக்கள் நிகழ்கின்றன.

'இரயில் விபத்துக்கள்' நிகழ்வதற்கு ஓட்டுநர்கள், மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் கவனக்குறைவும், அலட்சியமும் மட்டுமின்றி, இயந்திரக் கோளாறுகளும் காரணமாகின்றன.

அடுத்ததாக கட்டடக் கோளாறுகளினால் ஏற்படும் விபத்துக்களுக்கும் கவனக்குறைவு காரணமாகிறது. கட்டட வரைபட வல்லுநர்கள். திட்டம் தீட்டுபவர்கள், பொறியாளர்கள், கட்டடத் தொழிலாளிகள் ஆகிய பலரது சிறிய கவனக் குறைவால் பெரிய விபத்தெல்லாம் நிகழ்கிறது. தரக் குறைவான பொருட்களை உபயோகப்படுத்துவதாலும், கலப்படத்தாலும் கூட கட்டட விபத்துக்கள் நிகழ்கின்றன.

அடுத்தபடியாக, இயந்திரப் பணியாளர்களின் கவனக்குறைவும், அலட்சியப், பாங்கும் விபத்துக்கள் நேரக் காரணமாகின்றன. இயந்திரச் சாதனங்கள் பழுதடையாமல் இருக்கின்றனவா என்று கவனிப்பதில்லை இயந்திரங்களை இயக்கும் வழிமுறைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதில்லை. இயந்திரச் சாதனங்களின் மேல் எழுதப்பட்டிருக்கும் 'எச்சரிக்கை' வாசகங்களைக் கவனிப்பதில்லை. எனவேதான் இயந்திரக் கோளாறுகளுக்கு மனிதன் காரணமாகிறான்.

**இயந்திர, மற்றும் மின்சாரக் கோளாறுகள்**

இவ்வகைக் கோளாறுகள் மனிதனின் சக்திக்கும் திறமைக்கும் அப்பாற்பட்டவை. உதாரணமாக, விமான விபத்துக்களைச் சொல்லலாம். 'கால நிலை' காரணமாகவும், இயந்திரக் கோளாறுகளாலும், விமான ஓட்டியின் கவனக்குறைவு அல்லது போதிய பயிற்சியின்மையும் விமான விபத்துக்களுக்குக் காரணமாகின்றன. இதற்கு உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்னால் பெங்களூரில் நிகழ்ந்த 'ஏ-320' ரக விமான விபத்தைச் சொல்லலாம். இந்த விபத்துக்குக் காரணம், 'கணினி' எனப்படும் 'கம்யூட்டர்' கோளாறும், விமான ஓட்டிக்குப் போதிய பயிற்சி தராமையுமே காரணங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளன.

அடுத்ததாக, 'போபால் விஷ வாயுக் கசிவு' என்னும் விபத்து, இது உலகறிந்த ஒன்று. அந்த ஆலை சரிவரப் பராமரிக்கப்படாததால் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணம் என்று சொல்லப்படுகிறது. இதனால் இவ்வாலையை நிர்வகிக்கும் அமெரிக்கநிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என முடிவாகியுள்ளது. இந்த விஷவாயுக் கசிவினால் எண்ணற்ற மக்கள் உயிர் துறந்தனர். பலர் நோய்வாய்ப்பட்டனர். சிலர் பயத்தினால் ஊரை விட்டே வெளியேறிவிட்டனர்.

அடுத்தபடியாக அணுசக்தியால் ஏற்படும் விபத்துக்கள். ஆக்க சக்தியான அணுசக்தி சில நேரங்களில் அழிவுச் சக்தியாகவும் மாறிவிடுகிறது. இதற்கு உதாரணம் - ரஷ்ய நாட்டில் செர்னோஃபில் என்ற இடத்தில் அணுசக்தி உற்பத்தி ஆலையில் நடந்த மிகப்பெரிய விபத்தாகும். இந்த விபத்திற்கு இயந்திரக் கோளாறுகள் காரணமாய் இருக்கின்றன. இதற்குப் பிறகு 'அணுசக்தி உற்பத்தி' அவசியமா? என்ற கேள்விக் குறி தோன்றிவிட்டது மக்கள் மனத்தில் சமைப்பதற்கு உதவும் நெருப்பு, தீயாக மாறினால் சோற்றுக்கே வழியில்லாமல் செய்துவிடுவது போல், பகைவரிடமிருந்து காத்துக்கொள்ளவும், ஆக்க சக்திக்கும் உதவும் அணுசக்தி இயந்திரக் கோளாறுகளினாலும், கவனக்குறைவாலும் சில நேரங்களில் அழிவுச் சக்தியாகவும் மாறிவிடுகிறது.

**இயற்கையின் சீற்றங்கள்**

இயற்கைக் கட்டுப்பாட்டை மீறினால் மனிதசக்தியால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. புயல், மழை, வெள்ளம், மின்னல், இடி, நில நடுக்கம், பூகம்பம், எரிமலை ஆகியவை இயற்கை ஏற்படுத்தும் விபத்துக்கள். இவ்விபத்துக்களால் ஏற்படும் அழிவு மிகப் பெரியது. விதியால் ஏற்படும் இவ்விபத்துக்களை மதியால் ஓரளவு தடுக்கலாம். இப்போது வெகுவாக முன்னேறி வரும் வானிலை ஆராய்ச்சியின் உதவிகொண்டு, இயற்கையின் விபத்துக்களை முன்பே அறிய முடிவதால், தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ள முடிகிறது.

இவை தவிர மின்சாதனங்களாலும், மின்சாரம் தடைப்படுவதாலும் கூட விபத்துக்கள் நேர்கின்றன.

**விபத்தைத் தடுப்பது எப்படி?**

விபத்துக்கான காரணங்களைப் பற்றி அறிந்த நாம் இனி விபத்துக்கள் நேராவண்ணம் தவிர்க்கும் வழிமுறைகளைப் பற்றி ஆராய்வோம். 'வருமுன் காப்பதே மேல்' என்ற வாசகத்தின்படி விபத்துக்களைத் தடுப்பதெப்படி? என்று சிந்திக்கும்போது - விபத்துக் கட்டளைகள் நினைவுக்கு வருகின்றன. விபத்தைத் தடுக்க-

**பணியாளர்களுக்கான (வி)பத்துக் கட்டளைகள்:**

1. கவனக்குறைவோடு காரியங்கள் செய்ய வேண்டாம்.
2. எச்சரிக்கை வாசகங்களை மறக்க வேண்டாம்.
3. பாதுகாப்புச் சாதனங்களை - கையுறை, தலைக் கவசம் போன்றவற்றை அணியாதிருக்க வேண்டாம்.
4. சாலைப் பாதுகாப்பு விதிகளை மீற வேண்டாம்.
5. தீப்பற்றும் பொருட்களை மின் சாரத்திற்கருகில் வைக்கவேண்டாம்.
6. குடிபோதையில் வேலைக்குச் செல்ல வேண்டாம்.
7. புகை பிடித்துக் கொண்டே பணிகளைச் செய்யவேண்டாம்.
8. தீ விபத்து ஏற்பட்டால் தன்னையும் பிறரையும் காத்துக் கொள்ளும் முறைகளை அறியாதிருக்க வேண்டாம்.
9. பாதுகாப்பு விதிகளைப் பற்றித் தெரியாதிருக்க வேண்டாம்.
10. பழுதுபட்ட இயந்திரங்களை இயக்கவேண்டாம்.

விபத்தைத் தவிர்ப்பதில் பணியாளர்களுக்கு மட்டுமல்ல, நிர்வாகத்தினருக்கும் பங்கு உண்டு. அதற்கான (வி)பத்துக் கட்டளைகள் பின்வருமாறு:

1. தொழிலுக்குத் தகுந்தாற்போல் பாதுகாப்புச் சாதனங்களை அளிக்க வேண்டும்.
2. எச்சரிக்கை வாசகங்களை ஆங்காங்கே எழுதவேண்டும்.
3. பாதுகாப்பு விதிகளை அனைவரும் அறியச் செய்யவேண்டும்.
4. பழுதுபட்ட இயந்திரங்களைச் சீராக்கவோ, மாற்றவோ வேண்டும்.
5. தீவிபத்து ஏற்பட்டால் தப்பிக்க வழிவகைகள் செய்ய வேண்டும்.
6. தகுதியையும், திறமையையும் சோதித்து, போதிய பயிற்சி பெற்றவரையே பணிகளில் அமர்த்த வேண்டும்.
7. தேவையற்ற கழிவுப் பொருட்கள் சேராமல் வெளியேற்ற வேண்டும்.
8. சுத்தமான காற்றும், வெளிச்சமும் சுலபமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.
9. ஆலை அமைக்கும் விதிகளை அறிந்திருக்க வேண்டும்; அதை அனுசரிக்க வேண்டும்.
10. மேற்பார்வை, கண்காணிப்பை மேம்படுத்த வேண்டும்.

மற்ற எல்லாத் துறையையும்விட, துறைமுகங்களில் விபத்துக்கள் நிகழ நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. துறைமுகங்களில் பல எண்ணெய், தானியக் கிடங்குகளும், தீப்பற்றக் கூடிய இரசாயனப் பொருட்களும் உள்ளன. இரயில் போக்குவரத்தும் உள்ளது. கப்பல்கள் நிறுத்தப் பட்டுள்ளன. கடல் சீற்றத்திற்கும் ஆளாகிறோம். எனவே,

'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு'

என்ற வள்ளுவர் வாக்குப்படி துறைமுகத்தில் வேலைபார்க்கும் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து விபத்துக்கள் ஏற்படாதவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(நன்றி: சென்னைத் துறைமுகம்)

## அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் துணி வகைகள்!

**இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் முதலிடம் வகிப்பது துணி வகைகள் ஆகும். நமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் சுமார் 25 சதவிகிதம் ஜவுளி ரகத்தைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.**

**ஒவ்வொரு ஆண்டும் ஜவுளி ஏற்றுமதி உயர்ந்துக் கொண்டே போவது மகிழ்ச்சிக்குரியதாகும். 1984-85-இல் ரூ.1,888 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஜவுளி, 1989-'90 ஆண்டுகளில் ரூ.6,501 கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது. இந்த ஏற்றுமதி 1990-'91-இல் குறிப்பிடப்பட்ட இலக்கான ரூ.7,330 கோடியையும் மிஞ்சி ரூ.8,409.68 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

**நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தருவதிலும் பெரும் பங்கு வகிப்பது ஜவுளித்துறையே ஆகும். மொத்த அந்நியச் செலாவணியில் ஏறக்குறைய 75 சதவிகிதம் ஜவுளி ஏற்றுமதியின் மூலமே கிடைக்கிறது.**

**—பத்திரிகை தகவல் அலுவலகம்.**





# அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா



இந்தியாவிலேயே மிருகக் காட்சி சாலையை முதன்முதலாக 1855-ஆம் ஆண்டில் சென்னையில் அமைத்தலின் மூலம், தமிழகம் பெருமையடைகிறது.

வண்டலூர் உயிரியல் பூங்கா 1985-இல் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த உயிரியல் பூங்காவில் சிறிய பெரிய யானைக் கூட்டங்களும் உள்ளன. புலி, கடமான், பன்னிறப் பறவைகள் முதலானவையும் பார்க்கப் பரவச மூட்டும்.

இந்த விந்தைமிகு விலங்குகள் உலகம் நம் சிந்தைக்கு விருந்தூட்டுவன. வாருங்கள்! அந்த உலகிற்குப் போவோம்!

## இரவு விலங்குகளின் உலகம்

அற்புதமான இரவு விலங்குகளின் செயல்களை நம்மில் பலர் பார்த்திருக்க வாய்ப்பில்லை. இரவு விலங்குகள் இரவில் மட்டுமே காணப்படுவதால் சில சாதாரண இரவு விலங்குகளைப் பற்றிக் கூட மனிதனால் அதிகம் அறிய முடியவில்லை. இரவு விலங்குகளில் 951 வகையான வௌவால்களும் 123 வகையான ஆந்தைகளும் உள்ளன. இவைகளின் வாழ்க்கை முறைகளும் பழக்க வழக்கங்களும் பகலில் காணப்படும் விலங்குகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இவை சிறப்பான முறையில் இரவு வாழ்க்கையை நடத்திடப் புதுமையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன.

ஆந்தைகளின் பெரிய கண்களும், வௌவால்களின் எதிரொலியைப் பயன்படுத்திப் பொருள்களை அறிவதையும் உதாரணங்களாகச்



சொல்லலாம். இரவு விலங்குகள் பகலில் தூங்குவதனால் சாதாரணமாக அவைகளின் செயல்களைக் காண வாய்ப்பில்லாமல் போகிறது. மேலும் பார்வையாளர்கள் இரவு நேரத்தில் அவைகளைக் காண்பதென்பதும் அரிது. எனவே இரவு, பகல் சூழ்நிலைகளை மாற்றி அவைகளுக்கேற்றவாறு இரவு விலங்குகளைச் செயல்பட வைக்கும் ஓர் புதிய உத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில் ஒரு சில உயிரியல் பூங்காக்களில் மட்டுமே இரவு விலங்குகள் உலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவும் ஒன்றாகும். இவ்விலங்குகள், இரவு விலங்குக் கூடத்தினுள், பகலில் குறைந்த ஊதா மற்றும் சிவப்பு ஒளி வெளிச்சத்தில் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது. இந்த இரவு விலங்குகளுக்கு நிறப்பார்வை இல்லாததனால் இவை இருளிலேயே இருப்பதுபோல் எண்ணிச் செயல்படுவதைப் பார்வையாளர்கள் கண்டுகளிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் இந்த இரவு விலங்குக் கூடங்கள் ஒளி வெள்ளங்



களினால் பகல் போன்று தோற்றுவிக்கப்படுவதால் விலங்குகள் ஓய்வு நிலைக்குச் சென்று விடுகின்றன.

இங்கு இரவு விலங்குகளின் இருப்பிடத்தின் உள்ளே சென்று அவைகளைக் காணும்படியாக அமைக்கப்பட்டுள்ள 'உட்சென்று காணும் இரவு விலங்குக் கூட' அமைப்பு ஓர் தனிச் சிறப்பு அம்சமாகும்.

## சிங்கம் உலவிடப் பூங்கா

நவீன உயிரியல் பூங்காக்களில், விலங்குகள் அவை இயற்கையில் வாழும் சூழ்நிலையை ஒத்த இடங்களில் வைக்கப்பட்டு வருகின்றன. விலங்குகளைப் பார்வைக்காக வைப்பது, முதலில் கூண்டிலேயும், பிறகு பெரிய தீவுகளிலேயும் தற்பொழுது உலவிடங்களிலும் வைக்கக்கூடிய அளவுக்குப் படிப்படியான வளர்ச்சியினை அடைந்துள்ளது. இவ்வாறு விலங்குகளை உலவிடங்களில் வைப்பதன் மூலம், அவை மகிழ்ச்சியோடு இருப்பது மட்டுமல்லாமல், காணும் பார்வையாளர்களுக்கும் ஒரு பரவச உணர்வை ஏற்படுத்துகின்றன. மேலும் விலங்குகளைச் சிறிய கூண்டில் வைப்பதனால் அவைகளுக்குச் சில அசாதாரண பழக்கங்கள் ஏற்படுவதுடன், அவைகளுடைய இயற்கைக் குணங்கள் மறைந்து இனவிருத்தியும் தடைப்படுகிறது. எனவேதான், உலவிடங்கள் ஐரோப்பிய நாடுகளில் முதலில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள நவீன உயிரியல் பூங்காக்களில் உலவிடங்கள் அமைப்பது, உயிரினப் பூங்காவின் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அமைக்க எழுதப்பட்ட திட்டத்தில் சிங்கம், காட்டெருமை, மான்கள் ஆகிய வைக்கும் உலவிடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உலவிடங்கள் நிலப்பரப்பில் சுமார் 70 எக்டேர் மலைச் சரிவைக் கொண்டது. இதில் சிங்கங்களுக்கான உலவிடம் 30 எக்டேர் பரப்பில் அமைந்துள்ளது. இதனை ஏற்படுத்துவதற்கான செலவு ரூ.23.58 இலட்சமாகும்.

மூன்றுவிதமான வனவிலங்குகளுக்கு மலைச்சரிவைக் கொண்ட பெரிய நிலப்பரப்பில் உலவிடங்கள் அமைந்திருப்பது இந்தியாவிலேயே ஒரு புதிய சிறப்பு அம்சமாகும்.

## ஊர்வன இல்லம்

பாம்புகள், முதலைகள், பல்லிகள், ஆமைகள் ஆகிய ஊர்ந்து செல்லும் விலங்கினங்கள் 'ஊர்வன' வகுப்பாகும். இவற்றில் பாம்புகள், முதலைகளைப் பற்றி மக்களுக்கு ஓரளவு தெரிந்திருந்தாலும், பல வகையான பல்லிகள், ஆமைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்தப் பலவகையான விலங்குகள் ஒரே வகுப்பில் அமைக்கப்பட்டிருந்தாலும் இவற்றின் வெளித் தோற்றங்கள் முழுமையாக வேறுபட்டிருப்பதைப் பார்க்கிறோம். காலில்லாத பாம்புகள், கடின மேலுறை கொண்ட ஆமைகள், ஆகியவை தோற்றத்தில் ஒன்றிற்கு ஒன்று சம்பந்தம் இல்லாமை போல் தோன்றுகின்றன. இவ்வகையான வேறுபட்ட ஊர்வன விலங்கினங்களை இங்கு அவற்றின் வாழ்விடங்களை ஒத்த இல்லங்கள் அமைத்துப் பாதுகாப்பாகப் பார்வையாளர்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு பார்வையாளர்களுக்கு ஊர்வன விலங்குகளின் பரிணாம வளர்ச்சி பற்றியும், விஷமுள்ள, விஷமற்ற பாம்புகள் பற்றியும் கற்றுக் கொள்ளும் விதமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பாம்புகளைப் பற்றி விரிவாக அறிய சிறிய செய்முறைப் பயிற்சிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாம்பு போல் வளைந்து செல்லும் இந்த இல்லத்தினுள் நடந்து செல்வதும், இதன் எதிரே அமைக்கப்பட்டிருக்கும் நில வடிவமைப்பும் பார்வையாளர்களுக்குப் பரவச மூட்டும். இந்த ஊர்வன இல்லத்தை அமைப்பதற்கான மொத்த செலவு ரூ.7.3 இலட்சம் ஆகும்.

## உட்சென்று காணும் பறவைக் கூடம்

உட்சென்று காணும் பறவைக் கூடம் ஒரு நவீன அமைப்புக் கொண்ட பறவைகள் காப்பகம் ஆகும். பழங்காலத்தில் பறவைகளைச் சிறு கூண்டுகளில் வைத்துத் தான் வளர்த்து பார்வைக்கு வைத்தார்கள் சில உயிரியல் பூங்காக்களில் பெரிய பறவைகளின் இறகுகள் பறக்காதவாறு நறுக்கப்பட்டு பெரிய திறந்தவெளிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதை அறிகிறோம்.







பெரும்பாலான பறவைகள் அவற்றின் இறகுகள் வெட்டப்படுவதாலும், சிறிய கூண்டுகளில் வைக்கப்படுவதாலும் இனவிருத்தி செய்வதில்லை. இந்தக் காரணத்தைக் கருத்தில் கொண்டே, சில நவீன உயிரியல் பூங்காக்கள், பெரிய பறவைக் கூடாரங்களைப் பறவைகள் உள்ளே உல்லாசமாகப் பறந்து வரும் விதமாக அமைத்து வருகின்றன. இவ்வாறாக அமைக்கப்படும் பெரிய உட்சென்று காணும் பறவைக் கூடங்களினால் இரண்டு பயன்கள் உண்டு. ஒன்று இதனுள் பறவைகள் உல்லாசமாகப் பறப்பதன் மூலமும் தோகை விரித்து ஆடுவதன் மூலமும் நன்கு இனவிருத்தி செய்கின்றன. இரண்டாவதாக, பார்வையாளர்கள் கூடாரத்தினுள் சென்று பறவைகளின் குணத்தையும், செயல்பாடுகளையும் தெளிவாகக் கண்டு அறிய ஏதுவாகிறது.

இந்தப் பறவைக் கூடம் கோடிக்கரை சரணாலய நீர்ப் பறவைகளுக்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டு, சில முக்கிய கோடிக்கரைச் சரணாலயப் பறவைகளான பூநாரை, கடல் காகம், சிறவி வகைகள், கொக்கு நாரை போன்றவைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கூடத்தினுள் புதர்கள் கொண்ட ஒரு சிறிய திடலும் (30 ச.மீ.) ஒரு பரந்த நீர்ப் பரப்புடன் (110 ச.மீ.) அமைக்கப்பட்டுள்ளன. கோடிக்கரைச் சரணாலயத்தில் இப்பறவைகளை அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலான காலங்களில் மட்டுமே காணலாம். ஆகவே அவற்றை ஆண்டு முழுவதும் பார்வையாளர்கள் பார்த்து மகிழ்வதற்கு வசதியாக, இப்பெரிய கூடத்தினுள் வளர்க்கப்பட்டு வரப்படுகிறது.

ஆகவே, இது கோடிக்கரைச் சரணாலயம் பறவைக்கூடம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனுள்ளே பறவையாளர்கள் நுழைந்து சென்று பறவைகளைப் பக்கத்தே பார்த்து மகிழலாம். இங்கே பூநாரைகள் ஆழமில்லா நீரில் தலையை நுழைத்து சேற்றைக் கிளறிப் பூச்சிகளை உண்டு மகிழும் விதத்தையும், பறந்த நீர்ப் பரப்பில் கடல்காகங்கள் நீந்திச் சென்று மீன் பிடிப்பதையும் கண்டு மகிழலாம். சிறிய நிலப்பரப்பில் உள்ள புதர்களில் சிறவிகள் தங்கி கூடு கட்டவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பில் உள்ள புதர்களில் சிறவிகள் தங்கிக் கூடு கட்டவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பின் தளம் பிளாட்டிங் விரிப்பில் பரப்பப்பட்டு அதன் மீது செங்கல் பரப்பப்பட்டு, எளிதான முறையில் நீர் பூமிக்குள் செல்லாதவாறு சேமிக்கப்பட்டுள்ளது. கூடத்தின் கூரையில் பரப்பப்பட்டுள்ள நீலநிற வலை வானத்து நிறத்துடன் ஒன்றி விடுவதால் உள்ளே உள்ள பறவைகள் மேற்கூரையை வானமென உணர்கின்றன.

இந்தக் கூடமும் இதனைச் சுற்றியுள்ள அமைப்பும் சுமார் ரூ.7.55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, ஆடவர் மகளிர் குழந்தைகள் கண்டு மகிழ்ந்திட அழகிய இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருப்பதுதான், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

சென்னைக்கு அருகில் அமைந்துள்ள இந்த இயற்கைப் பூங்கா நம்மவரை மட்டுமல்ல, வெளிநாட்டவரையும் வெகுவாக கவர்ந்து வருகிறது என்றால், அது மிகையாகாது!









அன்றும் இன்றும்...

# பல் மருத்துவம்

**பல் மருத்துவம் என்பது அந்தக் காலத்தில் எப்படியெல்லாம் இருந்தது - இந்தக் காலத்தில் எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையெல்லாம் இந்தக் கட்டுரை விளக்குகிறது.**

'தென்பாண்டி நாட்டிலே தேடியெடுத்த முத்துக்களோ' என்று பற்களின் அழகைப் புகழ்ந்து கவி பாடினர் புலவர்கள். ஆலும், வேலும் பல்லுக்குறுதி என்றார் ஔவை மூதாட்டி. நம் முன்னோர் பற்களின் வலிவையும் பொலிவையும் நன்குணர்ந்து, அவற்றைப் போற்றிப் பாதுகாத்து, வாழ்ந்து வந்தனர். பற்களைப் பராமரிப்பது குறித்தும், பற்களில் ஏற்படக் கூடிய நோய்களைப் பற்றியும், அந்நோய் தீர்க்கும் மருந்துகளையும் சித்தர் பாடல்கள் பல எடுத்துரைக்கின்றன:

'கல்லு மணலும் கரியுடனே
பாளைக்கும்
வல்லதொரு வைக்கோலும்
வைத்துநிதம் -பல்லதனைத்
தேய்த்திடு வாராயின்
சேராளே சீதேவி
வாய்த்திடுவாள் மூதேவி வந்து.'

'வேலுக்குப் பல்லிறுகும்
வேம்புக்குப் பல்துலங்கும்
பூலுக்குப் போகம்
பொழியுங்காண் - ஆலுக்குத்
தண்டா மரையாளுஞ்
சாருவளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்'

- என்ற பாடல்கள் பல் பராமரிப்பைப் பாங்குற விளக்குகின்றன. காலப்போக்கில், மக்களின் கவனக் குறைவாலும் உணவுப் பழக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்களாலும், பற்களைச் சரிவர சுத்தப்படுத்தாததாலும், பல் நோய்கள் மிகையாகப் பரவின. அவற்றைக் கட்டுப்படுத்தவும், குணமாக்கவும், கிராமங்களில் அந்தக் காலத்தில் முடிதிருத்துபவரே பல் மருத்துவராகவும் செயல்பட்டிருக்கிறார். இக்காலத்தை, பல் மருத்துவத்தின் தளர்ந்த காலம் எனலாம். விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகப் பல் மருத்துவம் நன்கு முன்னேறி, பட்டப்படிப்பும் பட்ட மேற்படிப்பும் தனியே உருவாகி, உபகரணங்களிலும் உபயோகிக்கும் பொருள்களிலும் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டு, இன்று பொது மக்களுக்குச் சீரிய சேவை செய்து வருகின்றது.

டாக்டர் எ. பரமேஸ்வரன்,
எம்.டி.எஸ்.,
டாக்டர் கே.எஸ். கார்த்திகேயன்,
எம்.டி.எஸ்.,

**பற்களின் தேவையும் அவற்றின் பாதுகாப்பும்**

முகத்தின் அத்தனை அங்கங்களுக்கும் மிகவும் எடுப்பாக அமைந்து, மிடுக்காக இருந்தாலும், பற்கள் இல்லாவிட்டால் அழகனைத்தும்

போய்விடும். பற்களின் பயன் பார்வைக்கு அழகு மட்டுமா? உணவினைக் கடித்து, மென்று கூழாக்கி எளிதில் ஜீரணிக்க உதவுவது பற்களல்லவா? அதுமட்டுமா? 'பல்லு போனால் சொல்லு போச்சு' என்ற முதுமொழிதான் எத்தனை உண்மை! வார்த்தைகளைத் தெளிவாக உச்சரிக்கப் பற்கள் எவ்வளவு உபயோகமாக இருக்கின்றன! 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பதுபோல, பலருக்குப் பற்களின் பெருமை, அவற்றை இழந்த பிறகு தான் தெரிகிறது. பற்களைப் பேணிப் பாதுகாத்து வந்தால், வாழ்நாள் முழுவதும் அவை பெரும் பயன் தரும். பற்களைப் பாதுகாக்க, ஆண்டுக்கு இருமுறை பல் மருத்துவரை அணுகி, அவரது ஆலோசனைகளைப் பெற்று, அதன்படி நடந்து பயன்பெறலாம்.

**பல் மருத்துவம் - அன்றைய நிலைமை**

பல் வைத்தியர் என்ற சொல் காதில் விழுந்ததுமே, பலருக்கு உடனடியாக மனதில் தோன்றும் மற்றொரு சொல், வலி என்பதாகும். அந்த அளவிற்கு, முந்தைய நாட்களில் பல் மருத்துவ முறைகள் குறையுடன் காணப்பட்டன. தவிரவும், முன்பு பல் துலக்க உபயோகப்படுத்தப்பட்ட கரி, சாம்பல், செங்கல் போன்ற கரகரப்பான பொடிகளால் பல்லின் மேற்பாகம் தேய்ந்து உரு மாறி உடைந்து பயனற்றுப் போய் பல்வலி அதிகமாகி பற்களை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தக்க தருணத்தில் சரியான முறையில் பல்லைப் பேணிப் பாதுகாக்காமல் மக்கள் விட்டுவிட்டதால் பல் மருத்துவர்களும் வேறுவழியின்றிப் பற்களை அகற்றி வந்தனர்; இதனால் பல் ம்ருத்துவம் என்றாலே பல்லைப் பிடுங்குதல் என்ற நினைப்பே அப்போதெல்லாம் மேலோங்கி இருந்தது.

குற்றவாளிகளின் பற்கள் பிடுங்கப்பட்டு, ஒரு தண்டனையாகவே நிறைவேற்றப்பட்டு வந்த காலமும் உண்டு! பற்களின் துவாரங்களைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் குறைந்த வேகங்களில் சுழன்றதாலும், உராய்வினால் சூடேறியதாலும், நோயாளிகளுக்கு அதிகமாகப் பற்கூச்சத்தையும் சிரமத்தையும் அளித்து வந்தன. மருத்துவரின் வசதிக்காக உபயோகித்த விளக்குகளும், பிணியாளர்களின் கண்களுக்கு அதீத பிரகாசத்தையும் வெப்பத்தையும் அளித்துக் களைப்புறச் செய்தன. முன்னாளில், நோயாளிகள் அமரும் நாற்காலிகளும் அவர்களது உடலுக்குச் சீரான சௌகரியம் அளிக்காமல் இருந்தன. பற்களுக்குள் அடைக்கும் பொருட்களும் உயர்ந்த தரமுள்ளவையாக இல்லாமலும், பற்களின் உட்புறத் திசுக்களுக்கு ஏற்புடையதாக வும் இல்லை. பல் மருத்துவரே பல் மருத்துவம் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் உதவியாளரின்றிச் செய்து வந்ததாலும், நின்றபடியே மருத்துவர் சிகிச்சை செய்ததாலும், பழைய் உத்திகளையும் கொள்கைகளையுமே பயன்படுத்தி' வந்ததாலும்

டாக்டர் எ. பரமேஸ்வரன்



எளிதில் அயர்வுற்றனர். இந்த நிலைமைகள் இன்று மாறிவிட்டன.

**பல் மருத்துவம் - இன்றைய நிலைமை**

பல் மருத்துவத்தின் எல்லாத் துறைகளிலும் இப்போது வியக்கத் தகுந்த முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. மரத்துப்போக உதவும் சிறந்த நவீன மருந்துகள் உள்ளதால், வலியே சிறிதும் இல்லாமல் பற்களில் சிகிச்சை செய்ய-அல்லது வீணான பற்களை எளிதில் பிடுங்கி விட முடிகிறது. சில பல் மருத்துவர்கள் ஹிப்னாடிச முறையையும், அக்குபஞ்சர் முறையையும் பின்பற்றி வலியற்ற வைத்தியம் புரிகிறார்கள். இப்போதைய நவீன முறைகளின் மூலமாக எவ்வளவு தூரம் பல்லைக் காப்பாற்ற இயலுமோ அவ்வளவு முயற்சிகளையும் செய்து பற்களைப் பிடுங்குவதைத் தவிர்க்கிறார்கள்.

பல் பரிசோதனைக்குப் பயன்படும் கருவிகளில் மின்னணுக் கருவிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. புதுமையான கண்டுபிடிப்புகளான சோதனைக் கருவிகள் சில பல் மருத்துவருக்குப் பெரிதும் உதவுகின்றன. எக்ஸ் கதிர்களை உபயோகித்து எக்ஸ்ரே படங்கள் எடுப்பதிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரே படத்தில் வாயிலுள்ள அனைத்துப் பற்களின் பிம்பங்களும் படியும் வண்ணம் எடுக்கப்படும் 'பான் எக்ஸ்ரே' என்கிற புதிய முறை மிகவும் வசதியானதாகும்.

நடமாட இயலாத நோயாளிகளுக்காக, இப்போது, நகர்த்திச் செல்லக்கூடிய எக்ஸ்ரே கருவிகள் கிடைக்கின்றன. இவற்றை நோயாளிகளின் படுக்கையருகில் கொண்டு சென்று, நோயாளிக்குச் சிறிதும்

டாக்டர் கே.எஸ். கார்த்திகேயன்



சிரமமின்றி எக்ஸ்ரே படங்களை எடுக்கலாம். நோய் குறித்துச் சரியான முடிவுக்கு வருவதற்கு இந்த எக்ஸ்ரே படங்கள் பெரிதும் உதவுகின்றன.

பல் மருத்துவரின் ஆய்வுக்கு உதவும் வகையில் கண்கள் கூசாத நிழலற்ற விளக்குகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. இவை போதுமான வெளிச்சத்தை அளித்த போதிலும் பிணியாளருக்குக் கண்களைக் கூசச் செய்யாதவண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பல் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் மற்றொரு விளக்கு, வெப்பமில்லா ஒளி விளக்காகும். இந்த விளக்கில், உபயோகிக்கப்படும் 'லாம்ப்' சற்று தூரத்தில் இருந்தபோதிலும், வெளிச்சத்தை மட்டும் செயற்கைக் கண்ணாடி இழைகள் மூலமோ அல்லது திரவங்கள் மூலமோ ஊடுருவிப் பிரதிபலிக்கச் செய்து நோயாளியின் வாயருகில் உபயோகிக்கிறார்கள்.



எவ்வளவு நேரம் இந்த வெளிச்சத்தில் வேலை செய்தாலும் வெப்பம் அதிகரிப்பதில்லை என்பதால், நோயாளிகளும், பல் மருத்துவர்களும் 'பைப்ரோ அப்டிக் லைட்' எனப்படும் இவ்விளக்கைப் பெரிதும் விரும்புகின்றனர்.

**ஏற்றபடி அமையும் இருக்கைகள்**

பல் நோயாளிகளுக்கான இருக்கைகளிலும் நிறைய மாறுதல்கள் செய்யப்பட்டு, உடலுக்கேற்ற வடிவமைப்புள்ள பல் மருத்துவ இருக்கைகள் கிடைக்கின்றன. இவற்றில் அமர்ந்து மருத்துவம் செய்து கொள்ளும் நோயாளிகள் மிகவும் சௌகரியமாக உணருகிறார்கள். அவர்களது உடல் முழுவதையும் ஒரே சீராக இந்த இருக்கைகள் தாங்கிக் கொள்ளுவதால், நோயாளிகளுக்கு முதுகு வலியோ கழுத்து வலியோ ஏற்படுவதில்லை.

நோயாளிகளின் சௌகரியம் மருத்துவத்தில் மிக முக்கியமான விஷயம். வசதியான முறையில் அவர்கள் அமர்ந்திருப்பது, மருத்துவம் செய்கையில் ஏற்படும் பாதிச் சங்கடங்களைத் தீர்த்துவிடும். பல் மருத்துவர்களும் இப்போது நின்று கொண்டே வைத்தியம் புரியாமல், தக்க இருக்கைகளில் அமர்ந்தபடி பணிபுரிகிறார்கள். இதனால் அவர்களும் எளிதில் சோர்வுறாமல், அதிக நேரம் வேலை செய்ய முடிகிறது. பல் மருத்துவர்களுக்கும், அவர்களது பணியின் காரணமாக, சாதாரணமாக ஏற்படக்கூடிய முதுகு வலி, மூட்டுவியாதி போன்றவை, இப்படி உட்கார்ந்தபடி வேலை செய்வதால் தவிர்க்கப்படுகின்றன. இவை தவிர பல்வேறு பல் மருத்துவக் கல்லூரிகளிலும் நன்கு பயிற்சியளிக்கப்பட்டு தேர்ச்சியடைந்த உதவியாளர்களைப் பயன்படுத்துவதால், வேலைகள் சரிவரப்பிரிக்கப்பட்டு, மருத்துவரின் வேலைப் பளு குறைகிறது. குறைந்த நேரத்தில் அதிக நோயாளிகளைக் கவனிக்கவும் முடிகிறது.



பற்களின் துவாரங்களைச் சுத்தப்படுத்தி வடிவமைக்க உருவாக்கப்பட்டுள்ள சுழற் கருவிகளிலும் மிக அதிக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தற்சமயம் உபயோகத்திலுள்ள அதிவேக ஆற்றல் சுழல் இயந்திரங்களைப் பயன்படுத்தி, நிமிடத்திற்கு மூன்று முதல் ஐந்து இலட்சம்



சுழற்சியினைக் கருவிகளில் பெற இயலும். இந்த வேகத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் மிக எளிதாக, நோயாளிக்கு வலியே தெரியாமல் பல்லில் துவாரம் செய்ய உதவுகின்றன. காற்றழுத்தத்தால் சுழலும் இக்கருவிகள் அதிர்வின்றி இயங்குவதால் நோயாளிக்கு எந்த விதமான சிரமமும் இருப்பதில்லை. பல்லின் துவாரங்களை அடைப்பதற்காகப் பயன்படுத்தும் பொருட்களிலும் நிறைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய பொருட்கள் பற்களின் இயற்கை நிறத்திற்கு ஏற்றபடியும், பல்லுடன் ஒட்டிக் கொள்ளும் தன்மையாகவும் நல்ல வலிவுடையதாகவும் விளங்குகின்றன உடைந்த பற்களைச் சீர்செய்யவும், சொத்தை விழுந்து நொறுங்கிய பற்களை மீண்டும் புதுப்பிக்கவும்,



விழுந்த பற்களை மீண்டும் பொருத்தவும் புதிய முறைகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

**புதிய சிந்தனைகள்**

பல் மருத்துவத் துறையில் புதிய சிந்தனைகள் செழித்து வளர்ந்துள்ளன. மக்களுக்குப் பற்களைப் பற்றிய சிந்தனையையும் விழிப்புணர்வையும் வளர்ப்பதற்காகக் கண்காட்சிகளும், சொற்பொழிவுகளும், ஒளிபரப்புக்களும் அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன. பற்சொத்தை வராமல் தடுக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மக்களுக்காகவே மருத்துவம் என்பதை உணர்த்துவது போல ஆங்காங்கு பல் மருத்துவம் இலவசப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன. நடமாடும் பல் மருத்துவ ஊர்தி, மருத்துவ வசதியற்ற பல ஊர்களில் பெரும் சேவை புரிகின்றது. உலகில் ஓர்புறத்தும் இல்லாதபடி, நம் தமிழகத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டமும் சிறப்புற நடந்து வருகிறது. நோய் வருமுன் காத்தலே சிறந்த மருத்துவம் என்னும்படி மக்களுக்குப் பல் நோய்த் தடுப்பு பற்றித் திரைப் படங்கள் மூலமாகவும் அறிவுறுத்தப் படுகிறது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; 'கால வகையினானே' என்ற வாக்குக்கு ஏற்ப காலப்போக்கில், பயன்தராத பழைய முறைகள் அநேகம் மறைந்து, அவற்றிற்குப் பதிலாக, ஏற்றம் மிகுந்த சீரிய புதிய முறைகள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டு, பல் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் உடல் நலத்தைப் பேணுவதில் பல் மருத்துவர்களுக்குப் பெரும்பங்கு இருப்பதால் பல் மருத்துவம், இப்போது தனி அந்தஸ்திற்கு உயர்ந்திருக்கிறது. பிணியாளர்களின் நன்மை ஒன்றையே கருத்தில்கொண்டு சேவை செய்துவரும் பல் மருத்துவத் துறையின் எதிர்காலம் மிகப் பிரகாசமானதாகும் என்பதில் சற்றும் ஐயமில்லை. ●

# அறிவுச் சுடர்

## மாணவர் பக்கம்

சுதந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்?

—கவிஞர் சரோஜினி நாயுடு

சோவியத் நாட்டிலிருந்து ஏவப்பட்ட இந்தியச் செயற்கைக் கோள் எது?

—ஆர்யபட்டா

தீக்குச்சி செய்ய உபயோகப்படும் இரசாயன மருந்து எது?

—பொட்டாசியம் குளோரைடு

பூமியில் நிலமும் நீரும் எத்தனைச் சதவிகிதம்?

—நிலம் 29%, நீர் 71%

போபால் விஷவாயு நிகழ்ச்சி நடந்த நாள்?

—டிசம்பர் 3, 1984

இந்தியாவையும், சீனாவையும் பிரிக்கும் எல்லைக்கோடு எது?

—மேக்மகோன் கோடு

நான்கு பக்கமும் கடலில் சூழப்பட்ட கண்டம் எது?

—ஆஸ்திரேலியா

இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் செயற்கைக் கோள் எது?

—ரோகினி

இந்தியாவில் மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் உள்ள இடம் எது?

—சோனாப்பூர் (736 மீட்டர்)

பறவை இனத்தில் பறக்கத் தெரியாதது எது?

—பெங்குவின்

கொம்பில் கண் உள்ள பிராணி?

—நத்தை

காலிலே காது உள்ள பூச்சி?

—வெட்டுக்கிளி

தென் ஆப்பிரிக்காவில் அண்ணல் காந்தியடிகளோடு சேர்ந்து போராடிய தமிழ்ப் பெண் யார்?

—தில்லையாடி வள்ளியம்மை

நீந்தத் தெரியாத மிருகம்?

—ஒட்டகம்

சிமெண்ட்டைக் கண்டுபிடித்தவர் யார்?

—பார்க்கர்

உலகில் நீளமான சுவர் எது?

—கிரேட்வால்-ஆப் சைனா. 2,710 கி.மீ.

இரத்தத்திலுள்ள நோய்க் கிருமிகளைக் கொல்வது எந்த அணுக்கள்?

—வெள்ளை அணுக்கள்

மஞ்சள் காமாலை நோய் எதனால் ஏற்படுகிறது?

—கல்லீரல் பாதிக்கப்படுவதால்

அறிவு வளர்ச்சி அதிகமுள்ள கடல் பிராணி எது?

—டால்பின்

இந்தியாவில் அதிகம் ஆப்பிள் விளையும் இடம் எது?

—சிம்லா

—மா.தா. ஸ்ரீதர்
12-ஆம் வகுப்பு 'பி' பிரிவு
ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன்
மேல்நிலை பள்ளி (தெற்கு)
தியாகராய நகர், சென்னை-17.



## தாய்நாடு

### - கவிஞர் தமிழ்முடி

வேர்நன்றாய் இருந்தால்தான்
    மரம்நன்றாய் வளரும்!
பேர்நன்றாய் புரிந்தால்தான்
    அஞ்சல்போய்ச் சேரும்!
ஊர்நன்றாய்த் தெரிந்தால்தான்
    போய்ச்சேர முடியும்!
ஏர்நன்றாய் நடந்தால்தான்
    சோறுணவு கிடைக்கும்!

காய்நன்றாய் இருந்தால்தான்
    கனியாகி இனிக்கும்!
வாய்மொழியில் சிறந்தால்தான்
    தாய்மொழியும் சிறக்கும்!
ஈபூத்தேன் குடித்தால்தான்
    தேனடைகள் கிடைக்கும்!
சேய்பண்பால் உயர்ந்தால்தான்
    தாய்நாடு சிறக்கும்!

மதுரமிகு தாய்மொழியில்
    பிழையின்றிப் பேச
மதலைமுதல் அக்கறையாய்
    உச்சரித்துப் பழகி
நிதமும்நல் பயிற்சியுடன்
    பழகிவரல் வேண்டும்!
அதனால்நம் மொழிசிறக்கும்
    இலக்கியங்கள் பிறக்கும்!





**திரைப்படங்களில், 'ஸ்லோ மோஷன்' காட்சிகளைப் பார்க்கிறோம். அவை எப்படி எடுக்கப்படுகின்றன தெரியுமா?**

இதற்கென்றே விசேட 'ஸ்லோ மோஷன்' காமிராக்கள் உள்ளன. சாதாரண திரைப்படக் காமிராக்கள் வினாடிக்கு 24 படங்கள் என்ற வீதத்தில் படம் பிடிக்கின்றன. அதற்கு மாறாக 'ஸ்லோ மோஷன்' காமிராக்கள் அதைவிடக் கூடுதலான அளவில் படங்களைப் பிடிக்கின்றன. இந்த முறையில் எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்தை வினாடிக்கு 24 படங்கள் என்ற வழக்கமான வேகத்தில் திரையில் காட்டும்போது, வழக்கமான வேகத்தைக் காட்டிலும் மிகவும் மெதுவாக அசைவுகள் ஏற்படுவதை நீங்கள் காண்கிறீர்கள்.



# தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம்



இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாக அமைப்பினை மாற்றி அமைத்து அதன்மூலம் திருக்கோயில்களின் பராமரிப்பு நிர்வாகம் வழிபாடு மற்றும் மத சம்பந்தமான விழாக்கள் நல்லமுறையில் நடைபெறுவதற்காகத் திருத்தி அமைக்கப்பட்ட அறநிலையத் துறைச் சட்டம், 1991 (சட்டம் 46/1991) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 13.12.1991 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் மாநில அளவில் இயங்கும். மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்கள் அமைக்கவும் இதன்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த வாரியத்தின் தலைவராகச் செயல்படுவார்.

திருக்கோயில்கள் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் உள்ளடங்கிய ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட வருவாயுடைய திருக்கோயில்களின் அறங்காவலர்கள் நியமனம் செய்யும் அதிகாரம் மாநில அளவிலான வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழ் உள்ள திருக்கோயில்களின் அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாவட்டக் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தத் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தில் அலுவல் சார்புடைய உறுப்பினர்கள் எட்டுப் பேரும், அலுவலர் சார்பில்லாத உறுப்பினர்கள் ஒன்பது பேரும் இருப்பார்கள். அலுவல் சார்பில்லாத அமைப்பில் ஓர் உறுப்பினர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்கள் மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தில் செயலாளராகச் செயல்படுவார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் இதுவரை செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்கள் தவிர மற்றவைகளைத் திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்டக் குழுக்களும் செயல்படுத்தும்.

13.12.1991 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின்படி மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது:

1. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைவர் (பதவி வழி)
2. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், உறுப்பினர்.
3. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், உறுப்பினர்.
4. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரசுச் செயலாளர், உறுப்பினர் (பதவி வழி)
5. ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, உறுப்பினர் (பதவி வழி)

அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள்

6. தலைமைச் செயலாளர்.
7. வருவாய்த்துறை அரசுச் செயலாளர்.

## வடகிழக்குப் பருவமழையால் கூடுதல் பாசனம்

தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 6,947 பொதுப் பணித்துறைப்பாசனக் குளங்களில் 1900 குளங்களில் சமீபத்தில் மழையின் பயனாக முழு அளவுக்குத் தண்ணீர் நிரம்பியுள்ளது. இந்த ஒவ்வொரு ஏரியின் மூலமும் சுமார் 100 ஏக்கருக்கு அதிகமான நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்.

இந்த ஏரிகளில் சுமார் 870 ஏரிகளில் 3 மாதப் பாசனத்துக்குத் தேவையான தண்ணீரும், 1,501 ஏரிகளில் 2 மாதங்களுக்குத் தேவையான தண்ணீரும், 1,624 ஏரிகளில் ஒரு மாதப் பாசனத்துக்கு வேண்டிய நீரும் இருப்பில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஏரிகளில் உள்ள மொத்தத் தண்ணீரைக் கொண்டு சுமார் 3.8 இலட்சம் எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும். இதன் மூலம் வட மாவட்டங்களில் 3-வது நெற்பயிரும், மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகளும் பயிர் செய்ய நல்ல வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள மொத்தம் 1,501 பாசன ஏரிகளில் 1,283 ஏரிகளில் முழு அளவுக்கு நீர் நிரம்பியிருக்கிறது. இதேபோல திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள மொத்தம் 407 ஏரிகளில் 115 ஏரிகளிலும், வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள 226 ஏரிகளில் 40 ஏரிகளிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள 809 ஏரிகளில் 52 ஏரிகளிலும், சேலம் மாவட்டத்தில் 172 ஏரிகளில் 60 ஏரிகளிலும், தருமபுரி மாவட்டத்தில் 95 ஏரிகளில் 73 ஏரிகளிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள 250 ஏரிகளில் 107 ஏரிகளிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 712 ஏரிகளில் 71 ஏரிகளிலும் முழு அளவுக்குத் தண்ணீர் நிரம்பியிருக்கிறது.

—நன்றி 'இந்து'

## மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.5 கோடி

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் கோரிக்கையை ஏற்று, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக, மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு இந்த ஆண்டு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், மண் வளப் பாதுகாப்பு, நீர் ஆதாரங்கள் மேம்பாடு, காடு வளர்த்தல், வனப்பகுதிகளில் சாலை வசதி போன்ற பணிகள் நிறைவேற்றப்படும்.**

**மலைப் பகுதிகளில் திருட்டைக் கண்டுபிடிக்க மிகவும் தாழ்வாகப் பறக்கக்கூடிய ஒரு சிறிய விமானம் வாடகைக்கு எடுத்து அந்த விமானத்தைப் பயன்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது.**

8. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை.
9. இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

**அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள்**

10. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம்.
11. திரு. டி.எஸ். சந்தானம், தலைவர். சுந்தரம் நிதி நிறுவனம்.
12. திரு. பா. சிவந்தி ஆதித்தன்.
13. திரு. எம்.ஏ.எம். ராமசாமி.
14. அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார், அல்லூர், திருச்சி.
15. திரு. கே. பராசரன், இந்திய அரசின் முன்னாள் சட்ட ஆலோசகர்.
16. திரு. வானமாமலை, இராமனுஜ ஜீயர், நாங்குனேரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
17. அக்னிகோத்ரம் இராமனுஜ தாத்தாச்சாரியார்.
18. திருமதி. ராணி டி. இந்திராதேவி, இராமநாதபுரம்.

இந்த, தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் செயல்படத் தொடங்கியுள்ளது.

மாவட்டக் குழுக்கள் ஓர் தலைவரையும் 11 உறுப்பினர்களையும் கொண்டதாக அமையும். மாவட்டக் குழுக்கள் மற்றும் அதன் தலைவர்கள் ஆகியோரை இந்த, தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் நியமனம் செய்யும். இதில் ஓர் உறுப்பினர் தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார். இந்த மாவட்டக் குழுக்களின் செயலாளராகத் துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் செயல்படுவார். மாவட்டக் குழு, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் கீழ் வருவாய் உள்ள திருக்கோயில்களின் பரம்பரை சாரா அறங்காவலர்களை நியமனம் செய்யும்.

மாவட்டக் குழு இதுவரை துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்தும்.

இந்தத் திருத்தி அமைக்கப்பட்ட சட்டம் 13.12.91 முதல் அமல் படுத்தப்பட்டுள்ளதால், இதுவரை பதவி வகித்து வந்த மண்டலக் குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அமலில் இருந்து வரும் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட அனைத்துப் பரம்பரை வழி சாரா அறங்காவலர்கள் அனைவரது பணியும் இதன்மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.





# மியூசிக் அகாடமியின் 65வது ஆண்டு இசை விழா

சென்னை "மியூசிக் அகாடமி"யின் 65-வது ஆண்டு இசைவிழா மற்றும் மாநாட்டை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 18.12.'91 அன்று தொடங்கி வைத்தார். விழாவுக்கு, இசைப் பாடகர் திரு. நெடுநேரி கிருஷ்ண மூர்த்தி தலைமை தாங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

"மியூசிக்-அகாடமி"யின் 65-வது இசை விழா மற்றும் மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்னையில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் நடைபெறும் இசைவிழாவைக் கண்டு, கேட்டு ரசிப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள இசை ரசிகர்கள் வருகின்றனர்.

இப்படிப்பட்ட இசை விழாவை, மியூசிக் அகாடமியினர் 65 ஆண்டுகளாகத் தொடர்ந்து எந்தவிதத் தடங்கலும் இன்றி நடத்தி வருகின்றனர் கர்நாடக இசை என்று சொல்லும் போது, அதில் தமிழ் இசைக் கலைஞர்களின் பங்கு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அதை யாரும் மறக்க முடியாது.

புறநானூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் போன்ற பழைய தமிழ் நூல்களிலேயே இசையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. இதில் இருந்தே தமிழ்நாட்டின் சிறப்பை உணர முடியும். இப்போது உலகம் முழுவதும் பழைய கலாசாரம் மங்கி வருகிறது. பழைய கலாசாரத்தை நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும். இந்தப் பணியில் இசை வல்லுநர்கள் ஈடுபட வேண்டும். அதைச் செய்வார்கள் என்று எண்ணுகிறேன். நம் கலாசாரத்தின் சிறப்பு அம்சங்கள் காப்பாற்றப்பட்டு வருங்காலச் சந்ததிகளுக்குப் பொக்கிஷமாக விளங்க வேண்டும். கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேல் இந்திய இசைக்கு "மியூசிக் அகாடமி"யினர் சிறப்பாகச் சேவை செய்து வருகின்றனர். எதையும் எதிர்பாராத அவர்களின் சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது ஆகும். உங்களுடைய இந்தச் சேவைக்கு எனது மனப்பூர்வமான பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நல்ல நேரத்தில் மியூசிக் அகாடமிதலைவர் திரு டி.டி.வாசுவுக்கும், நிர்வாகிகளுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

விழாவில், மியூசிக் அகாடமியின் சார்பிலான இசைக் கலைஞர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம் சொந்தப் பணத்தில் இருந்து ரூ.1 இலட்சம் வழங்குவதாக அறிவித்தார்.

மியூசிக் அகாடமி சார்பில் நடைபெற்ற இசை, நாட்டியப் போட்டிகளில் பெங்களூரைச் சேர்ந்த இளம் கலைஞர் இலட்சுமி கோபால்சாமி வெற்றி பெற்றிருந்தார். அவருக்கு, மியூசிக் அகாடமி சார்பிலான



''எம்.ஜி.ஆர். விருதை'' மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பொன்னாடை போர்த்தினார். மியூசிக் அகாடமித் தலைவர் திரு. டி.டி.வாசு அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

இசை விழா மற்றும் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. நெடுநேரி கிருஷ்ணமூர்த்திக்கு, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமியின் கணவர் திரு. சதாசிவம் பொன்னாடை போர்த்தினார்.

திரு. நெடுநேரி கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டி, புகழ் பெற்ற பாடகர் திரு. செம்மங்குடி சீனிவாச அய்யர் பேசினார். முன்னதாக மியூசிக் அகாடமித் தலைவர் திரு. டி.டி.வாசு அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ''என்பீல்டு'' அதிபர் திரு. விசுவநாதன் நன்றி நவின்றார்.

விழாவில், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நாதசுரக் கச்சேரி நடைபெற்றது.

## தமிழகத்துக்கு வரும் கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடி நிவாரண உதவி

கர்நாடக மாநிலத்தில் கன்னடர்களால் தாக்கப்பட்டு, தமிழகத்துக்கு வந்துள்ள தமிழ் மக்களின் நிலை பற்றி விவாதிப்பதற்காகச் சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கூட்டினார். இந்தக் கூட்டம் 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் நிலை பற்றியும், இது தொடர்பாகத் தமிழக அரசு எடுக்க வேண்டிய மேல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யவும் இந்தக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டினார்.

இதற்கிடையே, கோவை, நீலகிரி; வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், தருமபுரி மாவட்டங்களில் கர்நாடகத்திலிருந்து தமிழகத்துக்கு வரும் தமிழர்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களுக்கு உடனே சென்று, தகுந்த நிவாரண உதவிகளை அங்கு வரும் தமிழர்களுக்குக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சில அமைச்சர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. செ. அரங்கநாயகம் (கோவை, நீலகிரி), திரு. ஜி. விசுவநாதன் (வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர்), திரு. கே.ஏ. செங்கோட்டையன் (பெரியார்), திரு. அழகு திருநாவுக்கரசு (தருமபுரி) ஆகியோரை உடனடியாக அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்லுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அந்த மையங்களில் தமிழர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை நேரடியாகக் கண்டறிவதுடன், மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளை உடனடியாகச் செய்யவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் இந்த நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவ தமிழக அரசின் மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. சி.என். ராமதாஸ் (கோவை, நீலகிரி), திரு. கே.சந்திரதுடன் (பெரியார்), திரு. என்.ஹரி பாஸ்கர் (தருமபுரி), திரு. கங்காதர்ஜாஸ் (வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள்) ஆகிய நான்கு மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



# ஏழைகளுக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை!

## மாண்புமிகு முதல்வர் உரை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாடு தொடக்கத்தையொட்டி, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் சில வாரங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சாதாரண முறையில் சந்தித்தாலும், புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இதுதான் முதல் மாநாடு.

புதிய அரசு பொறுப்பேற்றவுடன் நான் துறைத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களை மறுபடியும் சந்தித்துப் பேச இந்த மாநாடு வாய்ப்பு அளித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் அரசுக்கு உள்ள திறமை குறித்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் கடும் பணி ஆற்ற வேண்டி இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தால் மக்கள் நம்பிக்கை எவ்வாறு நொறுங்கியது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. தீவிரவாதம், பயங்கர வாதத்துக்கு மாநிலத்தில் தாராளமான நடமாட்டம் அளிக்கப்பட்டு இருந்தது. அமைதி, மதச்சார்பின்மை, நல்லெண்ணத்துக்கு முன்பு நல்ல பெயர் பெற்று இருந்த தமிழ்நாட்டில் அவையெல்லாம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தன. இந்தச் சூழ்நிலையில் புதிய அரசு சட்டம் - ஒழுங்குக்கு முன்னுரிமை கொடுத்து, பணியாற்ற வேண்டி இருந்தது. புதிய அரசு மிக உறுதியுடன் சட்டம்-ஒழுங்கு நிர்வாகத்தைச் சீர்படுத்தப் பல நடவடிக்கைகளை எடுத்தது.

உங்களுடைய நிர்வாகத் திறமைகள், நேர்மை, உற்சாகத்தின் காரணமாகக் கடந்த சில மாதங்களில் அரசு சிறப்பான வெற்றியை அடைய முடிந்தது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய பணியை மிகவும் எளிதாக்கும் வகையில் தங்கள் கடமையில் முழுமூச்சுடன் ஈடுபட்ட காவல் துறையில் உள்ள ஆண்கள், பெண்கள், மாநில அரசு அலுவலர்கள், ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், இதோடு நாம் மன நிறைவடைந்து விட முடியாது. நம்மிடையே இருந்த பயங்கர வாதம், இன உணர்வுகள், தேசவிரோதச் சக்திகளை முழுமையாக நீக்கி விட்டோம் என்று நம்மால் சொல்ல முடியாது.

நம் நாட்டிலுள்ளதைப் போல பல கோணங்களுள்ள ஜனநாயகத்தில் பயங்கரவாதம், தீவிர வாதத்துக்கு இடம் இல்லை. இத்தகைய சக்திகள் தங்களின் அருவருக்கத்தக்க முகத்தைக் காட்டும் முன்பே மாவட்ட நிர்வாகத்தினர் மிக எச்சரிக்கையாக முழுவேகத்துடன் அதை அழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மிகுந்த கவனத்துடன் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் நிர்வாகம் தங்கள் கடமையில் முழுமையாக ஈடுபடாவிட்டால் வன்முறை, அமைதிச் சீர்குலைவை நீக்க எடுக்கப்படும் எந்த முயற்சிகளும் வெற்றி பெறா.

இப்போதுள்ள ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டப் பெருக்கம், விலைவாசி உயர்வு ஆகிய சூழ்நிலையில் மக்களின் கஷ்ட நிலையைப் போக்க அரசு தவறினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்களிடையே அமைதி இன்மை ஏற்பட்டு விடும். இதுபோல நடந்து விடாமல் பார்த்துக் கொள்வது மாவட்ட நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் ஒரு அரசாங்கத்தின் கண்களாகவும், காதுகளாகவும் இருக்கிறார்கள்.

உள்ளூர் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வதில் உங்களுக்குள்ள திறமை, தகுந்த நடவடிக்கைகளை வளர்ப்பதில் உங்களுக்குள்ள பார்வை, உங்கள் எல்லைக்குள் உள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வளர்ச்சிப் பணிகளை அமைப்பதில் உங்களுக்குள்ள பார்வை ஆகியவை ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகளைப் போக்குவதில் மிக முக்கியமாக இருக்கும்.

வளர்ச்சி நிர்வாகத்தில் தமிழகத்தில் உள்ள



மாவட்ட ஆட்சித் தலைவாகள் எப்போதுமே மிகச் சிறந்து விளங்கி இருக்கிறார்கள். அந்தப் பாரம் பரியத்தை நீங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், சாலைகள், பள்ளிக்கூட கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஆகிய முக்கிய இனங்களில் கிராமப்புற மக்களின் தேவைகள் முழுமையாத இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. கூடுமான வரையில் அந்தப் பகுதிகளில் உள்ள ஆதாரங் களைப் பயன்படுத்தி அங்குள்ள மக்களின் தேவை களை நிறைவேற்ற மரபு வழியல்லாத அணுகு முறை, நவீன முறைகளை வளர்க்க நாம் முயற்சிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக சமத்துவம், சமுதாய நீதி போன்ற குறிக்கோளை அடைய வேண்டுமானா லும், அறிவுபூர்வ வளர்ச்சியில் மக்களின் விருப்பம் நிறைவேற வேண்டுமானாலும் கல்வியின் பங்கு மிக முக்கியமானதாகும். என்றாலும் முறையான கல்வி மட்டும் இந்தப் பணியை நிறைவேற்றிட முடியாது. கல்வித் திட்டங்களைத் தமிழ்நாடு மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருந்தாலும், கல்வியை வெறும் ஒரு நிறுவன நடைமுறை என்பதில் இருந்து மாற்றி, தானாக முன்வரும் ஒரு சமுதாயக் கலாசாரமாக அமைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

அறிவொளி இயக்கம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள 7 மாவட்டங்களில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக உற்சாகத்துடன் இந்த இயக் கத்தை நடத்தி முழு அளவில் கல்வி அறிவை ஏற்படுத்த உறுதி கொண்டு செயல்படுகிறார்கள்

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு ரூ 24.55 இலட்சம் உதவி**

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பணித் திறனை மேம்படுத்தும் பொருட்டு அப்பல்கலைக்கழகத்தின், கணிப் பொறித் துறைக்குக் கணிப்பொறி மற்றும் அதற்குத் தேவையான நூல் களையும் உபகரணங்களையும் வாங்கு வதற்கும், இயற்பியல் துறையினை மேம்படுத்துவதற்கும் ரூபாய் 24.55 இலட்சத்தைப் பல்கலைக்கழகத் திற்கு வழங்குவதற்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் இயற்பியல் ஆய்வகம் ஒன்றை நிறுவவும் ஆணையிட்டுள் ளார். இதனால், இங்குக் கணிப் பொறி, இயற்பியல் முதுகலை பயிலும் மாணவர்கள் பெரிதும் பயனடைவர்.

என்பதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டம் மிக வெற்றியைப் பெற அவர் களையும் இந்தத் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள நூற்றுக்கணக்கான தொண்டர்களையும் நான் வாழ்த்துகிறேன்.

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் அறிவு விளக்கை ஏற்றுவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் செய்யும் என்று உறுதி கூறு கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள உயர்ந்த சொத்தாகும். இந்தத் திட்டத்தின் மூலம் படிக்கும் குழந்தைகளுக்கு உணவு அளிக்க முடிகிறது. இந்தத் திட்டத்தில் அரசுக்கு உள்ள உறுதி பற்றி புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. சத்துணவுக்கூட மையங்கள் நல்லமுறையில் நடப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்து உறுதிப்படுத்த வேண்டும். இளம் சிறுவர்-சிறுமிகளுக்கு உணவு அளிப்பதற்கு அடுத்தபடியாக நமது அடுத்த முக் கியப் பொறுப்பாக அவர்களின் ஆரோக்கியம் இருக்கிறது.

*1991-92*-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழு வதும் நடத்தப்பட இருக்கிற 10 ஆயிரம் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள் திட்டத்தை நான் விரைவில் தொடங்க இருக்கிறேன். டாக்டர்கள், சமூக சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் இந்தத்திட்டத்தால் அதிகமாகப் பயனடைய இருக் கும் கிராமப்புற மக்கள் ஆகியோரைக் கொண்டு வருவதில் டாக்டர்களின் பங்கு மிக முக்கியமான தாகும். இந்த முகாம்களையும் வெற்றிகரமாக நடத்தும் வகையில் மிகவும் ஆர்வத்துடன் செயல் பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மற்றும் சுகாதாரத் துறையின் பல்வேறு பிரிவு அலுவலர்களை நான் கேட்டுக் கொள் கிறேன்.

நாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே தமிழ்நாடும் ஏழைகளுக்குக் குடியிருப்பு அளிப்ப தில் பின்தங்கி இருக்கிறது. இங்கும்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் வீட்டு வசதித் திட்டங் களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள். தவறான வடிவமைப்புகள், முறையற்ற முறையில் திட்டம் நிறைவேற்றம், நிதியைத் தவறான முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சில நாட்களுக்கு முன்பு நான் பார்த்ததால் இந்தப் பணிகளை நிறுத்தச் சொல்லி உத்தரவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதுபோன்ற தவறான செயல்கள் தொடர்ந்து நடைபெறாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் கட்டடச் செலவு கணிச மாகக் குறையும் வகையில் அதிகச் செலவில்லாத வடிவமைப்புகள் இருக்கவேண்டும். சாதாரணத் தொழில்நுட்பத்துடன் அந்தப் பகுதியில் கிடைக் கும் பொருட்களைக் கொண்டு கட்டப்பட வேண்டும்.

ஹட்கோ நிறுவனம் அறிவித்துள்ள கட்டட மையம் திட்டத்தைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் கட்டடம் கட்டும் தொழில்நுட்பத்தைப் பெற வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறமையை வளர்க்க அதைப் பயன்படுத்த வேண்டும்.

20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிடப் பின்தங்கி இருக்கிறது என்பதை இந்த மாநாட்டுக் குறிப்பில் இருந்து நான் அறிந்தேன். இந்தக் குறை சரி செய்யப்படவேண்டும். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற முழு வேகத்துடன் செயல்பட வேண்டும். அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தை மறுபடியும் பெற எல்லா முயற்சிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு நமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் பளு மிகவும் அதிகரித்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் நடைமுறைகளில் பல முறைகேடுகளை நான் பார்க்க நேரிட்டது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உதவித்தொகை வழங்குவதில் மாநில அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைச் சீரமைக்க உங்களுக்குக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் பற்றி உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

ஏழை மக்களுக்கு இந்தத் திட்டத்தின் பலன்கள் போய்ச்சேரும் வகையில் திறமையாக, பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்தை நான் அறிய விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு, நாட்டில் இழந்த இடத்தைத் திரும்பப் பெற நாங்கள் முயற்சி எடுத்து வருகிறோம். அதிக முதலீட்டில் நிறைவேற்றப்படும் சில பெரிய திட்டங்கள், பொருளாதாரத்தை வளர்க்க உதவும் என்றாலும், கிராமப்புறங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் குறிப்பாக வேலை இல்லாப் பெண்களிடையே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் குடிசைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்களை வளர்ப்பதற்காக நல்ல சூழ்நிலைகளை வளர்க்க வேண்டும். கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை அமைத்தல் போன்றவைகளும் வேலை இல்லாத மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஊக்கம் அளிக்கும் வகையிலும் தகுந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக முக்கியமான பங்கை வகிக்க வேண்டும். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆராய்ந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

கிராமப்புறப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று நான் ஏற்கெனவே உறுதி அளித்துள்ளேன். இந்தத் திட்டத்தில் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்தி குறியீட்டை நிறைவேற்ற உதவ வேண்டும் என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் இங்கு விவாதத்துக்கு வருகின்றன. பல்வேறு பொருட்கள் குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் கருத்துக்களை நாங்கள் முழுமையாக எடுத்துக்கொள்வோம் என்று உறுதி கூறுகிறேன். உங்கள் பரிந்துரைகள், எதற்காக எங்களை மக்கள் ஓட்டுப்போட்டு பெரும் மெஜாரிட்டியில் எங்கள் கட்சியை ஆட்சிக்கு அனுப்பினார்களோ, அந்த அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான கொள்கைகளை உருவாக்க உதவும்.

## இரண்டாவது நாள்:

இரண்டாவது நாளாக நடந்த இந்த மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

"மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் 2 நாள் மாநாட்டை முடிக்கும் தருவாயில் இருக்கிறோம்.

நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டு மாநாட்டோடு தொடங்கினோம். பிறகு காவல் துறை தொடர்பான விஷயங்கள் பற்றி மட்டும் விவாதிக்கப்பட்டது. இன்று மாவட்ட நிர்வாகம் தொடர்பான பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதித்தோம். என்னைப் பொறுத்தவரையில், இந்த மாநாடு மிகவும் பயனுள்ள அனுபவமாக இருந்தது. ஏனெனில், இந்த மாநாட்டின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கவும், மாநிலத்துக்கு மிக முக்கியமான விஷயங்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறியவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

மாநிலத்தின் சிறந்த நிர்வாகத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் பங்கு மிக முக்கியமான பங்கு என்று நான் நேற்றே கூறினேன். உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றி முடிக்க உங்களிடம் சரியான கண்ணோட்டம், தேவையான ஆர்வம், முறையான ஊக்கம் இருப்பதை இந்த விவாதத்தின்போது நான் பார்த்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் விவாதித்த பல பொருட்கள் பற்றி அரசின் கொள்கையை நீங்களும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. உங்கள் பொறுப்புக்களை நீங்கள் ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் எல்லாவற்றுக்கும் மேலாக ஏழைகள் மற்றும் அடித்தளத்தில் உள்ள மக்கள் மீது, மனதில் உண்மையான அக்கறை கொண்டு நிறைவேற்றுவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டும். இந்த விஷயத்தில் நீங்கள் சிறப்பாகச் சேவையாற்றினால் நான் மகிழ்ச்சியடைவேன். தனிப்பட்ட முறையில் ஆர்வம் காட்டி மிகவும் பொறுப்போடு இந்த விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

பயங்கரவாதிகள், சாதிக் கலவரத்தை உருவாக்குபவர்கள், பிரிவினைச் சக்திகள் மீது நீங்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருந்து அவர்களைக் கண்காணித்து அவர்கள் சக்திவாய்ந்த படையாக மாறி நமது சமூகத்தின் அமைதியான சூழ்நிலையைக் கெடுக்கும் முன்பு அவர்களை நீங்கள் அடக்க வேண்டும்.

வளர்ச்சிப் பகுதியைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிப்பட்ட ஆர்வத்தோடு பல திட்டங்களை நிறைவேற்றுவதைப் பார்க்கிறேன். இதற்காக உங்களைப் பாராட்டுகிற நேரத்தில் 20 அம்சத் திட்டம் போன்ற ஏழைகளுக்கான திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து - குறியீட்டை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆதாரங்களைப் பயன்படுத்திக் கிராமப்புற மக்களுக்கு - குறிப்பாக, கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உள்ளூர்த் திட்டங்களைத் தீட்டி இதுவிஷயத்தில் அரசின் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் மாவட்டங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்த நீங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கொள்முதல் திட்டங்களை மிகவும் உற்சாகத்தோடு நிறைவேற்ற வேண்டும். உணவுத் தானிய வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், ஓட்டல் அதிபர்கள் ஆகியோருடன் பேசி உங்கள் மாவட்டத்தில் விலைவாசியைக் குறைக்க அவர்களை நீங்கள் தூண்ட வேண்டும். இந்த விஷயத்தில் உங்கள் செயல்பாட்டின் மூலம் உங்கள் திறமையை நான் தீர்மானிப்பேன்.

உணவுப் பொருட்களைக் கடத்துவோர், பதுக்கல் செய்வோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது உங்களின் உத்தரவு அல்லது தீர்ப்பில் உள்ள அற்ப மற்றும் சிறிய குறைகளின் அடிப்படையில் அவர்கள் தப்பித்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளூர் ஆதாரங்களைத் திரட்டி உங்கள் மாவட்டத்தில் உற்பத்தியை - குறிப்பாக



(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான உணவுப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். காய்கறி பயிரிடுதல், தோட்டக்கலை, காடுகளை உருவாக்குதல், மரம் வளர்த்தல் ஆகியவற்றில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும்.

நிர்வாகத்துக்கு நல்ல பெயரை உருவாக்குவது மிகவும் முக்கியமாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நல்ல முறையில் மக்கள் தொடர்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். மிகவும் பதட்டமாக, கஷ்டமான சூழ்நிலைகளில் அது உங்களுக்கு மிகவும் பலன் அளிக்கும். மாவட்ட நிர்வாகத்தில், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகம், வட்டார அலுவலகம், வட்ட அலுவலகங்களில் உள்ள அன்றாட நடைமுறைப் பிரச்சினைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அலுவலகங்களுக்கு வரும் ஏழை மக்களின் பல்வேறு தேவைகளை மிகவும் விரைவாகவும், இரக்கத்தோடும் பார்க்கவேண்டும்.

நிர்வாகத்தில் விரைவு ஏற்படுத்துவதற்கு வசதியாகப் புதிய முறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உருவாக்க வேண்டும். அடுத்த சில மாதங்களில் உங்கள் ஆற்றலின் அத்தாட்சியைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைவேன். மேலும் வளர்ச்சிகளைத் தெரிந்துகொள்ள நான் மறுபடியும் விரைவில் உங்களை இதுபோல கூட்டமாகவோ, தனித்தனியாகவோ சந்திப்பேன் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன்.'

கடந்த ஆண்டுக்கான சிறுசேமிப்பு வசூலில் சாதனை படைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அதிக அளவில் வசூல் செய்து - அதாவது, 37 கோடியே 19 இலட்சம் ரூபாய் வசூல் செய்த கோவை மாவட்டத்துக்குச் சிறப்பு விருது வழங்கப்பட்டது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். கலைவாணனுக்கும், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஏ.எம். ராமனுக்கும் முதல்வர் அவர்கள் விருது வழங்கினார்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.ஏ. ராமையா, முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. சுர்ஜித் கே. சவுத்ரி, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். விஜயகுமார், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. கே.தீனதயாளன், காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞானதேசிகன், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. டி.எஸ். ஸ்ரீதர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு. சி.எஸ். ராஜமோகன், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. பி. கோலப்பன், திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரிதின் ராஜ் லாங்தாசா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜீவ் நயன் சவுபே, முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. எம். கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு முதல்வர் அவர்கள் விருதுகள் வழங்கினார்.

## மகாகவி பாரதியாரின் 110-வது பிறந்தநாள் விழா

**த**மிழுக்கும், தேசியத்திற்கும் பெருமை சேர்த்த மகாகவி பாரதியார் அவர்களின் 110-வது பிறந்த நாள் விழாவினை மாநில அளவிலான விழாவாக அவர் பிறந்த மண்ணான சிதம்பரனார் மாவட்டம் எட்டயபுரத்தில் கொண்டாட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விழாவாக இவ்விழா எட்டயபுரத்தில் 11.12.91 அன்று மாலையில் பாரதியார் மணிமண்டப வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்கள் பாரதியார் மணிமண்டபத்தில் உள்ள பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி, இ.ஆ.ப. அவர்கள் மாலை அணிவித்தார். பின்னர் மணிமண்டப வளாகத்தில் மரக் கன்றுகளை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்களும், சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கனககோவிந்தராஜு அவர்களும் நட்டார்கள்.

விழாவிற்குச்சிதம்பரனார்மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை வகித்தார். விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் முழு உருவப் படத்தை திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்

விழாவில் டாக்டர் கனக கோவிந்த ராஜுலு, எம்.பி., திரு. எம்.ஆர். ஜனார்த்தனம், எம்.பி., திரு. செல்லத்துரை, எம்.எல்.ஏ., திருமதி. சியாமளா, எம்.எல்.ஏ., திருமதி கனகவல்லி, எம்.எல்.ஏ., காமராஜ் கல்லூரி முதல்வர் திரு. செல்வராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். விழா இறுதியில் திருநெல்வேலி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இன்னிசை நடைபெற்றது.

11.12.91 அன்று காலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மதுரை மண்டல போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. பார்த்தசாரதி அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் உறை வெளியிடும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பாரதி மணிமண்டப வளாகத்தில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை நலிந்தோர்க்கு வழங்கினார்கள்.

**க. தீனதயாளன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தூத்துக்குடி, சிதம்பரனார் மாவட்டம்.**



# கர்நாடக மாநிலத்தில் வன்முறைச்சம்பவங்கள்;
# ஜனவரி 2-ல் முழு வேலை நிறுத்தம்
## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

கர்நாடக மாநிலத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலை குறித்து ஆலோசனை செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் வருமாறு:

1. நமது அண்டை மாநிலமான கர்நாடகத்தில் பல்லாண்டுக் காலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அங்குள்ள கன்னட வெறியர்களால் ஒரு காரணமும் இன்றி வன்முறைக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கன்னட வெறியர்களால் தாக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். அம்மாநிலத்தில் உள்ள தமிழ் மக்கள் தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருவது குறித்து இந்தக் கூட்டம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

2. வழிவழியாகக் கன்னடர்களோடு ஒன்றி வாழ்ந்து கர்நாடக மாநிலத்தின் செல்வ உயர்விற்கும், வளர்ச்சிக்கும் உழைத்துக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாக, இன்று தங்கள் இல்லங்களையும், உடைமைகளையும் இழந்து தங்கள் உயிருக்கே பாதுகாப்புத் தேடும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர கர்நாடக அரசு தவறியது குறித்து வருந்துவதோடு, இந்த வன்முறைச் செயல்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த பொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களுடன் நேராகவும், தொலைபேசி மூலமாகவும் டெலக்ஸ் செய்திகள் மற்றும் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிக்கைகள் வாயிலாகவும் அத்தகைய நிகழ்ச்சிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டார். மத்திய அரசு கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தையோ அல்லது மத்திய அரசுப் படைகளையோ அனுப்பி அமைதி காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இது குறித்துத் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் இந்தக் கூட்டம் வரவேற்கிறது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைக் காக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்திருப்பதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

4. 70 ஆயிரத்திற்கும் மேலாகத் தமிழ் மக்கள் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது இங்கு ஒரு அசாதாரண நிலையினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வன்முறைச் சம்பவங்களால் அச்சத்திற்கும், கவலைக்கும் ஆளாக்கப்பட்ட தமிழ் மக்கள், பாதுகாப்பிற்காகத் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் கர்நாடக மாநிலத்தில் தொடருகின்றன. இதனால் இங்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு, உணவளித்து, தங்க இடம் கொடுத்துப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை மாநில அரசு மேற்கொள்ளுவதால் கணிசமான செலவு ஏற்படுகிறது. இந்தச் செலவு அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

5. மேலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று தொடர்ந்து வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவும், தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கர்நாடக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அறிவுரைகளை மத்திய அரசு கர்நாடக அரசுக்கு உடனடியாக வழங்க வேண்டுமென்றும், அந்த அறிவுரைகளைச் செயல்படுத்த வேண்டுமென்றும், கர்நாடக, மத்திய அரசுகளை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

6. வன்முறைச் செயல்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களுக்கும், உடற்காயங்களுக்கும், பொருள் இழப்புகளுக்கும் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்கவேண்டுமென்று அந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

7. அத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுது தமிழகத்திற்கு வந்து தங்கியிருப்பதால், அவர்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் இந்த நிவாரணத்தை வழங்குவதற்கான விசாரணையை நடத்த மத்திய அரசு பதவியிலுள்ள உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசை இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

8. கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவும் அந்த மக்களுக்குப் போதுமான பாதுகாப்பைத் தரத் தவறிய கர்நாடக மாநில அரசைக் கண்டிக்க

வும், கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக முதலமைச்சர் நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்ட பிறகும், மத்திய அரசு தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிக்கவும், கர்நாடகத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசும், கர்நாடக மாநில அரசும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவும் வருகிற ஜனவரி 2-ஆம் தேதி அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழகம் தழுவிய முழு வேலை நிறுத்தம் நடத்துவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

9. தமிழகத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்த ஜனவரி 2-ஆம் தேதி முழு வேலை நிறுத்தம் நடத்த இக்கூட்டம் தீர்மானித்திருப்பதால், இந்த ஒற்றுமை உணர்வை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக, தமிழகத்திலுள்ள சில அரசியல் கட்சிகள் தனித்தனியே அறிவித்துள்ள ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் கைவிடுமாறும், ஜனவரி 2-ஆம் தேதி நடைபெறவுள்ள முழு வேலை நிறுத்தத்தை முழு வெற்றி அடைய ஒத்துழைக்குமாறும், இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

## அரிசி ஏற்றுமதி: பிரதமர் அவர்களுக்கு முதல்வர் கடிதம்

'வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும்' என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்.

"அரிசி விலை எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யும் மத்திய அரசின் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதற்காகக் கிடைக்கிற அரிசியை ஏற்றுமதியாளர்கள் பதுக்கி வைக்கிறார்கள். இதனால் அரிசி விலை உயருகிறது. இந்தப் பதுக்கலின் விளைவாக, அரிசி விலை உயர்ந்து விடும் அபாய நிலைமை உருவாயிருக்கிறது. எனவே, மேற்கொண்டு அரிசி ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு உடனே நிறுத்த வேண்டும்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:

1. திரு. விஜயராகவலு
   மாநிலத் தலைவர்,
   (பாரதிய ஜனதா கட்சி)
2. திரு. பி. நல்லக்கண்ணு
   கூடுதல் செயலாளர்
   (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி)
3. திரு. ஏ. நல்லசிவம்
   செயலாளர்
   (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)
4. திரு. கே. ராமமூர்த்தி
   தலைவர்
   (இந்திய தேசிய காங்கிரஸ்)
5. திரு. தஞ்சை ராமமூர்த்தி
   (ஜனதா தளம்)
6. திரு. கே.ஆர். ராஜ்குமார்
   மாநிலத் தலைவர்
   (தமிழ்நாடு ஜனதா கட்சி)
7. திரு. பி.சி. பழனியாண்டி
   தலைவர்
   (லோக்தளம்)
8. திரு. பி. சாரதி
   தலைவர்
   (தமிழ்நாடு காங்கிரஸ்-சோசலிஸ்ட்)
9. திரு. ஆலடி அருணா
   (திமுக)
10. திரு. எஸ். ஆண்டித் தேவர்
    (பார்வர்டு பிளாக்)
11. திரு. கே. வீரமணி
    (திராவிடர் கழகம்)
12. திரு. அப்துல் சமது
    (முஸ்லீம் லீக்-(சமது))
13. திரு. எம். அப்துல் லத்தீப்
    (முஸ்லீம் லீக்-(லத்தீப் பிரிவு))
14. திரு. எஸ். திருநாவுக்கரசு
    (அண்ணா புரட்சித் தலைவர் முன்னேற்றக் கழகம்)
15. திரு. டி. இராஜேந்தர்
    (தாயக மறுமலர்ச்சிக் கழகம்)
16. டாக்டர் சிவசாமி
    (இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி)
17. திரு. ஜெய்னுதீன்
    தலைவர்
    (இந்திய மனித உரிமைக் கட்சி)
18. திரு. செ.கு. தமிழரசன்
    (இந்திய குடியரசுக் கட்சி)
19. தலைவர்,
    இந்திய ஜஸ்டிஸ் கட்சி
20. தலைவர்,
    அம்பேத்கர் மக்கள் இயக்கம்
21. தலைவர்,
    பாரதீய மக்கள் காங்கிரஸ்
22. தலைவர்,
    கிருஸ்துவ ஜனநாயக முன்னணி
23. திரு. எஸ். ஜோசப் பெர்னாண்டோ,
    தலைவர்,
    (கிறிஸ்துவ முன்னேற்றக் கழகம்)
24. திரு. கே. காளியப்பன்
    (இந்திய பொருளாதார விடுதலை இயக்கம்)
25. திரு. ஏ. ஜெகவீர பாண்டியன்
    (வேலை தேடுவோர் சங்கம்)
26. திரு. கே. செல்லப்பன்
    தலைவர்,
    (நாத்திக திராவிட முன்னேற்றக் கழகம்)
27. திரு. சீதாராம் கோயங்கா
    தலைவர்
    (ராம் ராஜ்ய மார்க்கம்)
28. திரு. ஆர். பக்தவச்சலம்
    தலைவர்,
    (தமிழர் கழகம்)
29. திரு. எம்.கே.டி. சுப்ரமணியன்
    தலைவர்,
    (தமிழக தேசிய இயக்கம்)
30. திரு. கே. முருகேசன்
    தலைவர்,
    (தமிழக முன்னேற்ற முன்னணி)
31. டாக்டர் அமான் கான்
    தலைவர்,
    (தேசிய மாணவர் கட்சி)
32. திரு. எம். ஜெபமணி
    தலைவர்,
    (தமிழ்நாடு ஜனதா கட்சி)
33. திரு. செங்கம் ஜப்பார்
    தலைவர்,
    முஸ்லீம் லீக் (ஜெ)
34. திரு. டி. வசீகரன்
    தலைவர்,
    (அனைத்திந்திய சிறுபான்மையினர் கழகம்)
35. திரு. தாஜித்தின்
    (தமிழ்நாடு முஸ்லிம் லீக்)
36. திரு. கே. செல்ல முத்து
    (இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி)
37. திரு. எஸ்.வி. சண்முகம்
    (ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி)
38. திரு. கந்தசாமி
    (பார்வர்டு பிளாக்-(க))





# கர்நாடகக் கலவரம் -
## மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கை

கர்நாடக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை உடனடியாக நிலைநாட்டிட வேண்டுமெனவும், அப்பாவித் தமிழ் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை உடனே நிறுத்த வேண்டுமென்றும் அம்மாநில முதல்வரை டிசம்பர் மாதம் 13-ஆம் நாள் நான் கேட்டுக் கொண்டேன். மோசமாகிக் கொண்டு வரும் சட்டம் ஒழுங்கு நிலைமையைத்திறமையாகச் செயல்பட்டு அடக்கி அப்பாவித்தமிழ் மக்களின் உயிர்களை காப்பாற்றும்படி கர்நாடக முதல்வருக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் அவர்களையும் கேட்டுக் கொண்டேன். சீன நாட்டுப் பிரதமர் வருகையினால் பிரதமர் அவர்களைத்தொடர்பு கொள்ள இயலாத நிலையில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களையும் டாக்டர் சின்தா மோகன் அவர்களையும் தொடர்பு கொண்டு, அவர்களை பிரதமருடன் பேசி, கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு 14.12.'91 அன்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் நிலைமையின் அவசரத்தை உணர்ந்து பிரதமருடன் இது குறித்துப்பேசுவதாகக்கூறினார்கள். கர்நாடக மாநிலத்தில் மீண்டும் அமைதியைக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கூறினார்கள்.

ஆனால், கர்நாடகத்தில் நடக்கும் சம்பவங்கள் வேறுவிதமாக இருக்கின்றன. தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களின் வீடுகளில் புகுந்து பொருட்களையும் சொத்துக்களையும் கொள்ளையடித்து, அவர்களுக்கு கடுமையான காயங்களை ஏற்படுத்துவதாக தகவல் வந்த வண்ணம் உள்ளன. இவை அனைத்தும் உள்ளூர்க் காவலர்களின் உதவியுடனும், தூண்டுதலுடனும் நடைபெறுவதாகச் செய்திகள் கிடைக்கின்றன. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து வயதானவர்களும், பெண்களும், குழந்தைகளும் அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டுக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதலை இந்நாட்டின் மனிதாபிமானமுள்ள மக்கள் அனைவரும் நேரடியாகக் கண்டிப்பார்கள் என நான் உறுதியுடன் நம்புகிறேன். இதிலிருந்து கர்நாடகத்தில் சட்டம் ஒழுங்கு மிக மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருப்பது நமக்குத் தெரிகிறது. தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுத் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நிலை இன்னும் நீடித்தால், இது தமிழ்நாட்டில் கடுமையான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என நான் அஞ்சுகிறேன்.

அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த முரட்டுத்தனமான வன்முறைகளுக்கு கர்நாடக முதலமைச்சர் முழுப் பொறுப்பேற்று, இத்தகைய வன்முறைச் செயல்களை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கர்நாடகத்தில் மாமூல் நிலைமையை உடனே கொண்டுவர மேலும் காலந்தாழ்த்தாமல் கர்நாடக முதல்வருடன் பேச வேண்டுமென நான் இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கர்நாடகக் காவலர்கள் அங்கு வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்புத்தரத் தவறியதுடன் அவர்களுக்கு எதிராகச்செயல்படுவதால், அங்கு வன்முறையைக் கட்டுப்படுத்த இராணுவத்தை அனுப்பி வைக்குமாறு நான் பிரதமர் அவர்களை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பெங்களூரிலும், கர்நாடகத்தின் பிற பகுதிகளிலும் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தங்கள் உடைமைகளை அப்படியே விட்டுவிட்டு அந்த மாநிலத்தை விட்டு ஓடி வருகிறார்கள். இவர்களின் இழப்புகளுக்கு முழு நஷ்ட ஈடு கொடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறு பிரதமர் அவர்களையும், கர்நாடக முதல்வர் அவர்களையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும்பணியாற்றிய தமிழ் இன மக்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல்கள் நடத்தத் தூண்டிவிடப்பட்டிருப்பது மிகப்பெரிய வெட்கக்கேடான காரியம் ஆகும். இத்தகைய வன்முறைகளைத் தவறாது கண்டிக்குமாறு நான் அமைதியை விரும்பும் மக்களையும் பொறுப்புள்ள தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களின் நிலைமை ஆபத்தாக இருக்கும் இந்தச் சூழ்நிலையில் கர்நாடக முதல்வரைச் சந்தித்துப் பேச பிரதமர் கூட்டும் எந்தக் கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளும் கேள்விக்கே இடமில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ●

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பகிர்ந்துகொள்ள, 1990-இல் மாற்றியமைக்கப்படுவதற்கு முன்பிருந்த காட்கில் உத்தியே போதுமானதாக இருந்தது. முன்பிருந்தபடியே 55 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதம் வரை மக்கள் தொகை அம்சத்திற்கு முக்கியத்துவம் தரும் யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

தனிநபர் மூலமான பகிர்வு முறையை நான் வரவேற்கிறேன். தேசிய சராசரி வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் சில மாநிலங்கள் விடுபடலாம் என்பதால் உச்ச பட்ச வருமானத்திலிருந்து உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் 20 சதவிகிதம் அளவீட்டைப் பகிர்ந்ததளிக்கலாம் என்பதை உங்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். தமிழகத்தின் பிரச்சினை தனித்தன்மை வாய்ந்தது. ஏழாவது திட்டத்தில், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம், தேசிய சராசரி வருமானத்தின் அளவிலோ அல்லது சற்றே அதிகமாகவோ இருந்ததாகக் கருதப்பட்டது. தேசிய வருமானத்துக்குக் கீழ் தனி நபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்படுவதிலிருந்து தமிழகம் விடுபட்டதால், சந்தைக் கடன் உள்ளிட்ட மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய புள்ளி விபர அமைப்பின் (Central Statistical Organisation) 82-85-ஆம் ஆண்டின் குறிப்பின்படி தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் தேசிய சராசரிக்குக் கீழ் உள்ளது. இந்த அமைப்பின் (CSO) 84-87 (அ) 85-88 குறிப்பின்படி தமிழகத்தின் தனி நபர் வருமானம் தேசிய சராசரிக்குச் சற்று கூடுதலாக உள்ளது. இந்த குறிப்பிட்ட காலக் கட்டங்களில் 80 வருமான மதிப்பீடுகளைப் பற்றி நாங்கள் சில வினாக்களை எழுப்பியுள்ளோம். இவை இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன. தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் இந்த மதிப்பீடுகளில் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாகவே இருக்கின்றது என்று நாங்கள் நம்பக் காரணம் உள்ளது. தனிநபர் வருமான மதிப்பீடுகளின் ஒப்பீடு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் அமைய வேண்டும். மக்கள் தொகையைக் குறிக்க மகத்தான முயற்சி எடுத்துள்ள மாநிலங்களுக்கு ஏற்ற பரிசாக இது அமையும். இது மட்டும் செய்யப்படுமானால் தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் தேசிய சராசரிக்கு மிகக் கீழாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலத்திலும்கூட நிலவரத்தைச் சரியாகச் சுட்டிக்காட்டாத வருமான மதிப்பீடுகள் இந்தக் குழுவினால் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பதாவது நிதிக்குழு செய்ததைப் போலவே 82-85 காலகட்ட வருமான மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு காரணத்துக்காகவோ இது ஏற்புடையதாக இல்லாதிருக்குமானால் மத்திய உதவி சந்தைக் கடன் ஆகிய இரண்டிலும் ஏழாவது திட்டத்தில் அளிக்கப்பட்டதைப் போலவே தமிழ்நாட்டிற்குத் தனிச் சிறப்புரிமை வழங்கப்பட வேண்டும்.

வரி முயற்சி, வரவு-செலவு, நிர்வாகம், சில சிறப்பு இனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 10 சதவிகித வரி வருவாய் பிரித்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாடு, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, அயல் உதவி திட்டங்களின் செயற்பாடு ஆகிய மூன்று செயல் திறன் குறியீடுகளிலும், தமிழகம் சாதனை படைத்துள்ளது. எனவே உச்ச பட்ச விபரங்கள் ஏற்கெனவே எட்டப்பட்ட நிலையில் எதிர்காலச் சாதனை என்பது ஏட்டளவில் சிறிதாகவே அமையும் வரவு-செலவு நிர்வாகம் ஏழாவது திட்டக் காலத்தின் நிலையைப் பிரதிபலிக்கிறது. வரி முயற்சி அம்சத்திற்கு 10 சதவிகிதம் ஒதுக்கி, திருத்தியமைக்கப்பட்ட காட்கில் திட்டத்தையே தக்க வைத்துக் கொள்ளலாம்.

தனித்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு ஒதுக்க 10 சதவிகிதம் தொடர இருக்கின்றது. அது, விருப்பம்போல் பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றது. 1991-92-இல் தமிழ்நாட்டிற்குப் போதுமான ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மிகக்குறைவான திட்ட உதவி உயர்வே தமிழகத்திற்குக் கிட்டியது. குறைந்தபட்ச திட்டத்தைக்கூட நிறைவேற்ற இயலாத சூழ்நிலையில் தமிழகம் உள்ளது. தமிழகத்திற்கான தனிநபர் திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி அளவைவிட மிகக்குறைந்து உள்ளது. வெளிநாட்டுத் தீவிரவாதிகளால் இந்த மாநிலத்திற்கு ஏற்பட்ட அபாயம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இது நிதி ஆதாரங்களைப் பெருக்கும் முயற்சிகளுக்குப் பெரும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்திவிட்டது. விருப்பம்போல் வழங்கப்படும் 10 சதவிகித உதவியில் தமிழகத்திற்குச் சிறப்புரிமை உறுதி செய்யப்படவேண்டும். இது குறித்து குறிப்பிடத்தக்க உறுதி மொழி ஒன்று வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய சராசரிக்குக் கீழ் தனிநபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்குச் சந்தைக் கடன்களைப் பெறுவதற்காக 20 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளது என அறிகிறேன். தேசிய வருமானத்துக்குக் கீழ் தனிநபர் வருமானம்கொண்ட மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்புச் செய்வதைத் தீர்மானிப்பதில் உள்ள சிக்கலை ஏற்கெனவே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். கடன்களினால் ஏற்படும் அதிகமான செலவினத்தைக் கருதும்பொழுது பின்தங்கிய மாநிலங்களுக்கான தனி ஒதுக்கீடு 20 சதவிகித அளவில் அமையலாம். இந்த 20 சதவிகித தனித் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்குச் சிறப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டும். அல்லது அதிக பட்ச அளவிலிருந்துள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் இந்த மொத்த தனித் தொகுப்பும் பகிர்ந்தளிக்கப்பட . வேண்டும். இந்த ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டிற்குத் தனிப் பாதுகாப்புத் தேவை என்று வேண்டிக் கொள்கிறேன்.

வெளிஉதவி பெறும் திட்டங்களுக்கு 100 சதவிகித உதவி உண்டு என்று நிகழ்ச்சிக் குறிப்பு தெரிவிக்கிறது. இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அடிப்படை வசதிகள் உள்ள பிரிவில் உள்ள திட்டங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் தொடர்ந்து பெற்று வருவது 70 சதவிகிதம் மட்டுமே. அனைத்து வெளி உதவித் திட்டங்களைப் பொறுத்த வரையில் 100 சதவிகித உதவியை மைய அரசு வழங்க வேண்டும். தற்பொழுது நடைபெற்று வருகின்ற திட்டங்களும் இதில் அடங்கவேண்டும். புனரமைப்பு வளர்ச்சிக்கான புதிய உத்திகளை வகுத்தல் ஆகியவற்றை மாநிலங்கள் செவ்வனே செய்யும் வாய்ப்பை வெளியுதவித் திட்டங்கள் வழங்குகின்றன. சமத்துவம் என்ற பெயரில் மாநிலங்கள், திட்டமிடுதல், திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைவிற்கும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படக்கூடாது.

கடல் எல்லைகளினால் ஏற்படும் தமிழகத்தின் தனிப்பட்ட சிக்கல்கள் தற்போது தான் சிறிது உணரப்பட்டுள்ளது. எட்டாவது திட்டத்தில் பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைத் தொடரும்போது கடற்கரை ஓரத்திலும் கடல் எல்லையிலும் காணப்படும் சிக்கல்களைக் களைவதற்காகச் சிறப்பு ஒதுக்கீடுகள் தேவை.

எட்டாவது திட்டத்தின் தொடக்கத்தில் தமிழகத்தின் மிக முக்கியக் கோரிக்கைகளை மட்டுமே வலியுறுத்தினேன். மத்திய அரசு நம்மைக் கவனிக்கவில்லையே என்ற ஆதங்கம்தான். பஞ்சாபிலும், காஷ்மீரிலும் வெவ்வேறு வடிவங்களில் வெடித்துள்ளது. அப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட விட்டுவிடக் கூடாது. கஷ்டங்களையும் தியாகங்களையும் பகிர்ந்து கொள்ளும் தமிழ்நாடு தேசிய நீரோட்டத்தில் கலந்துள்ள அதே நேரத்தில், தேசிய வளர்ச்சி, அபிவிருத்தியில் தனக்குரிய பங்கைக் கேட்பது நியாயமான ஒன்றே ஆகும்.

நன்றி.

**டில்லியில், மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**

## காவிரி நதிநீர்ப் பிரச்சினை:

## மாண்புமிகு பிரதமர் உறுதி

**இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைத் தமிழக முதல்வர் அவர்கள் 23-12-91 அன்று டெல்லியில் சந்தித்துத் தமிழ்நாட்டின் நலன் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.**

**காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கோரிக்கைக்குப் பதிலளித்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசுகையில், 'காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்' என்று உறுதி கூறினார்.**



பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளையும் எம்எம்டிஏ ஒருங்கிணைக்கிறது.

வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல், விரிவான வளர்ச்சித் திட்டங்களை (டிடிபி) தயாரித்தல் மாஸ்டர் பிளானை அவ்வப்போது திருத்தி அமைத்தல் ஆகிய சட்டப்பூர்வமான பணிகளை எம்.எம்.டி.ஏ. நிறைவேற்றுகிறது. கீழ்க்கண்ட முக்கியப் பணி வகைகள் எம்.எம்.டி.ஏ. வினால் நிறைவேற்றப்படுகின்றன.

1. திட்டங்களுக்கான அனுமதி அளித்தல்.

2. சப்-டிவிஷன், லே-அவுட்டுகளை அங்கீகரித்தல்.

3. நிலப் பயன்பாட்டு மண்டலங்களைத் திருத்துதல்.

4. பொதுமக்களுக்கு உதவ ஆலோசனை, வழிகாட்டுதல் பணி.

5. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டைப் பரிசீலித்தல்.

6. அமலாக்கம்.

இரண்டாவது மாஸ்டர் பிளானைத் தயாரிக்கும் பணியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது 1975-இல் அரசு அங்கீகரித்த முதலாவது மாஸ்டர் பிளானுக்குப் பதிலானதாகும்.

சட்டத்தின் 48-வது பிரிவின் கீழ் திட்ட அனுமதியை அளிப்பதன் மூலம் மாஸ்டர் பிளானில் உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் (டிசிஆர்) அமலாக்கப்படுகின்றன. நிலப் பயன்பாட்டு மண்டலத்துக்கு இணக்கமான சிறு திட்டங்களுக்கு, எம்.எம்.டி.ஏ. அளித்த அதிகாரங்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளே அனுமதி அளித்து வருகின்றன. இதர அனைத்துக் கோரிக்கைகளும், எம்.எம்.டி.ஏ.-வால் பரிசீலிக்கப்படுகின்றன. 1989-90-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் 2,794 திட்டங்களுக்கு எம்.எம்.டி.ஏ. அனுமதி வழங்கியுள்ளது. 1,104 திட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. சப்-டிவிஷன்கள், லே-அவுட்டுகளுக்கான அங்கீகாரம் கோரி 913 விண்ணப்பங்கள் வந்ததில், 12,000 மனைகளைக் கொண்ட 817 ஏக்கர் பரப்பளவுக்கான 394 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ●

## பார்த்தோம்-படித்தோம்

**1.12.91** இதழில் வெளி வந்த நேரு பிறந்தநாள் விழாவில் - முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை என் நெஞ்சை நெகிழச் செய்தது. மேலும், சிவானந்தா குருகுலத்திற்கு அன்பளிப்பாகப் பேருந்து வழங்கி உள்ளார். அது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

—எஸ்.பி.சந்தானராஜகோபால்,
களப்பாள்.

**ம**துவின் தீமையை விளக்கிடும் கதைகள், கட்டுரைகள், எளிய இனிய நடையில் படைத்து அரும் பணியாற்றுகிறது தமிழரசு.

—பச்சையப்பன்,
பள்ளிச்சந்தல்

**எ**ல்லாத் துறைகளிலும் மகளிரே வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வரின் செய்தி, மங்கலமும் மதிப்பும் மரியாதையும் பயனும் நிறைய விளைவிக்கும் என்பது திண்ணம்.

—அரிமா. பூபாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

**சி**க்கன முறையில் சீரோடு வாழ்ந்திட, பிறருக்கு, உதவி செய்யத் தூண்டுகின்ற சேமிப்பு பற்றி அழகான, அருமையான முறையில், கவிதை படைத்த கவிஞர்-பூங்கோவன் அவர்களுக்கு நன்றி!

—ப.அ. சண்முகம்,
களம்பூர்

**த**மிழ்நாடு முழுவதும் பெய்த கடும் மழை மற்றும் பெரும் காற்றினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, முதல்வர் அவர்களின் உதவி-நடுக்கடலில் தத்தளித்தவர்களுக்குக் கிடைத்த கப்பல் போன்றது.

—ந. சுந்தரபுத்தன்,
கண்கொடுத்தவனிதம்.

**சி**த்த மருத்துவப் பயனை அறிந்து, மகிழ்ச்சியடைந்தேன். இந்தக் கட்டுரை பலருக்கும் பயன் தரக்கூடியது.

—பி.ஜி. அழகிரி,
பெரம்பூர்.

"**கா**லம் போற்றி வாழ்க!" என்ற சீனி, விஜயராணி அவர்களின் 'மாணவர் பக்க'க் கவிதை மணியான கவிதை!

—கவிஞர் அ.சுப்பையன்,
செட்டிகுறிச்சி.

'**ம**ழை பாதித்த இடங்களில் முதல்வர்' - கட்டுரை, முதல்வருடன் சென்றதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

—நெல்லை நாதன்,
மேலத்திடியூர்.

"**உ**ணவே மருந்து" என்ற கட்டுரை மிகவும் அருமை. நாம் அன்றாடம் உண்ணும் கீரை வகைகளைப் பற்றித் தெளிவாகக் கூறியது.

—ஞான. சங்கர்,
தலைஞாயிறு.

"**ம**துவினால் அழிந்த சாம்ராஜ்யம்" என்ற புராணக் கதை படிப்பதற்கும், பார்ப்பதற்கும் அதிசயமாக இருந்தது.

—க. காவேரி,
வாழப்பாட்டாம்பாளையம்.

**தி**ங்கள் இருமுறை மலரும் 'தமிழரசு' முகர்ந்தேன். மனம் மகிழ மணம் நிறைந்தது. உளம் குளிர்ந்தது. வாழ்த்துக்கள்! சிறப்பான பூரணமான தகவல் ஏடாக மிளிர்வதைப் பாராட்டுகிறேன்.

—ந. தர்மலிங்கர்,
திருச்சி-3.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

VISIT INDIA
TOURISM YEAR 1991



# A Dance Festival That Will Sweep You Off Your Feet.

Mamallapuram. A seaside town 60 kms South of Madras famous for its ancient art and culture. Where tales of yester-years have been sculpted on stone. And history has been recorded on rock.

Come January, it'll be festival time in Tamilnadu. Pongal, the harvest festival, will be celebrated with pomp and splendour.





Mamallapuram will host a festival of dances – Bharata Natyam, Kuchipudi, Kathakali, Odissi and Folk. As our country's leading artistes converge here, remember to be around.

Jointly organised by
**Ministry of Tourism,** Govt. of India.
and
**Department of Tourism**
Govt. of Tamilnadu, Fort St. George
Madras 600 009

**Tamilnadu Tourism Development Corporation Ltd.**
25, Dr. Radhakrishnan Salai, Madras 600 004
Phone: 846843, 846825 Telex: 41-7758 Grams: TAMILTOUR

**MAMALLAPURAM**
Dance Festival
15th Jan. – 16th Feb. 1992

DIPR/MAA COMMUNICATIONS








# சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு சட்டம் 22, 1974-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நகர் மற்றும் ஊர்கள் திட்டமிடுதல் சட்டம் 1971-ன் படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ.) சட்டபூர்வ மாக அமைக்கப்பட்டது.

சென்னை நகரம், 5 நகராட்சிகள், 4 நகரியங்கள், 27 நகர் ஊராட்சி, 10 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 212 கிராமங்கள், 2 கன்டோன் மென்ட் போர்டு பகுதிகள் அடங்கிய 117 சதுர கிலோ மீட்டர் பரப்பை உள்ளடக்கிய சென்னைப் பெருநகரப் பகுதி (எம்.எம்.ஏ.) இதன் அதிகார எல்லைக்குள் வருவதாகும்.

**இந்தக் குழுமத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:**

1. சென்னைப் பெருநகரப் பகுதியின் அடிப்படை வசதிகள், பொருளாதார மேம்பாட்டுக்குத் திட்டமிடுதல்.

2. சென்னைப் பெருநகர் பகுதிக்கான மாஸ்டர் பிளானை அமல் படுத்துதல் மற்றும் இந்தத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப் படுத்துதல்.

3. பெருநகர வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல்.

**எம்.எம்.டி.ஏ. -வின் நடவடிக்கை சட்டப்பூர்வமான பணிகள்**

நகர் மற்றும் ஊர்கள் திட்டமிடுதல் சட்டத்தின்படி எம்.எம்.ஏ.-வின் வளர்ச்சியை முறைப்படுத்துவதே எம்.எம்.டி.ஏ. -வின் முக்கியமான சட்டப்படியான பணியாகும். மாஸ்டர் பிளான்களைத் தயாரித்தல், விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், இந்தத் திட்டங்களின் நிபந்தனைகளை வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் மூலம் நடைமுறைப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

**பணிகளைக் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல்**

அரசின் இதர அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படும் உலக வங்கி உதவியுடனான நகர்ப்புறத் திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மதிப்பிடல் ஆகியவற்றுக்கு எம்.எம்.டி.ஏ. பொறுப்பாகும். ரூ.57.71 கோடி செலவிலான சென்னை நகர வளர்ச்சித் திட்டம் - I (எம்யுடிபி)-1 ரூ. 87.26 கோடி செலவிலான சென்னை நகர வளர்ச்சித் திட்டம் - II (எம்யுடிபி) - II ஆகியவை அந்தத் திட்டங்களாகும்.

சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களின் முதல் 2 திட்டங்



## அட்டைப்பட விளக்கம்:

**முதல் அட்டை:**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தினை (டி.லிட்) மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் வழங்கினார் (19.12.91).

**இரண்டாம் அட்டை:**

சென்னை மியூசிக் அகாடமியின் 65-வது ஆண்டு இசை விழாவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவ்வமயம், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார் (18.12.91).

**நான்காம் அட்டை:**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

களின் மூலம் பொருளாதார ரீதியாக நலிவடைந்த 85,000 குடும்பங்கள் மனையும், 85,000 குடிசை வாழ் குடும்பங்களும் பயன்பெற்றன. 9000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது. 350 சிறு தொழிற்சாலைக் கூடங்கள், 47 குடிசைத் தொழிற்கூடங்கள் ஆகியவை கட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் 412 ப்ரீ-ஸ்கூல்களும், 22 மருத்துவ மையங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. 17.5 கி.மீ. உட்பட்ட சுற்றுப்பாதை அமைக்கப்பட்டது. 14.5 கி.மீ. தார்ச்சாலை மேம்படுத்தப்பட்டது. 200 கி.மீ. பாதசாரிகள் பாதை,50 கி.மீ. சைக்கிள் பாதை ஆகியவையும் அமைக்கப்பட்டன. 10 சுரங்கப்பாதைகள், 7 பாலங்கள், 2 கிரேடு செப்பரேட்டர்கள் ஆகியவையும் கட்டப்பட்டன

சென்னை நகருக்காக எம்.எம்.டி.ஏ. செயல்படுத்திய இரு திட்டங்களின் வெற்றிகரமான அனுபவத்தின் அடிப்படையில் மாநிலத்தின் 10 பெரிய நகரங்களின் வளர்ச்சிக்காக ரூ.632.60 கோடி செலவிலான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (டிஎன்யுடிபி) என்ற பல்துறைத் திட்டம் 1988 செப்டம்பர் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், எம்.எம்.ஏ. எல்லைக்குள் வரும் ரூ.354.85 கோடி அளவுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பில் எம்.எம்.டி.ஏ. உள்ளது. டிஎம்யுடிபி-யின் ஒரு அங்கமாக, எம்.எம்.ஏ.-வில் எட்டு இடங்களில் மனைகள் மற்றும் சேவைகள் திட்டத்தின் கீழ் சுமார் 30,000 மனைகளும், கைடட் அர்பன் டெவலப்மென்ட் (ஜியுடி) என்ற திட்டமும் திட்டமிடப்பட்டுள்ளன.

> **ஒரு மனிதன் சாகும்போது அவனுடைய செயல்களும் அடங்கி விடுகின்றன. ஆனால், மூன்று மட்டும் எஞ்சி நிற்கின்றன.**
>
> **1. அவனுக்குப் பிறகும் தொடர்ந்து நடைபெற்று வரும் அவனுடைய அறச் செயல்கள்.**
>
> **2. எல்லோருக்கும் பயன் தரக்கூடிய அவனுடைய அறிவு.**
>
> **3. அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் அவனுடைய சந்ததிகள்.**
>
> **—நபிகள் நாயகம்**

டிஎன்யுடிபி-யின் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், எம்எம்ஏ-வில் சுமார் 15,000 குடும்பங்களைக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் டிராபிக் நிர்வாகத் திட்டம் சாலை விளக்குகள் போடுதல், சாலைகள், உள்வட்டச் சாலைகள், பைபாஸ் சாலைகள் அமைத்தல், பாதசாரிகள் வழித்தடம், இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல் உள்ளிட்ட சாலை மேம்பாடு மற்றும் டிராபிக் சிக்னல் மயமாக்கல் திட்டங்களுக்கு நிதி வழங்குகிறது.

பஸ் நிலையங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மார்க்கெட்டுகள் போன்ற சேவை மற்றும் வருவாய் பெற்றுத் தரும் அமைப்புகளைக் கட்டுதல், பராமரித்தல், சாதனங்களை வழங்குதல் ஆகிய பணிகளுக்கு நிதி உதவி செய்ய புதியதாக நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி (எம்யுடிஎப்) என்று ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும் அனைத்து அமைப்புகளுக்கும் பயிற்சியும், தேவையான சாதனங்களை வாங்கி அளிப்பதற்கான தொழில்நுட்ப உதவியும் இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

இவை தவிர நடைபாதை வாசிகளுக்கான திட்டம், ஆற்றங்கரைகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு மறுவாழ்வு, இரவு தங்குமிடம், உள்ளாட்சி அமைப்புகளுக்கான உதவித் திட்டங்கள், துரித இரயில் திட்டம், எம்.எம்.ஏ.-வில் இரயில் போக்குவரத்தை அதிகப்படுத்துதல், பில்டிங் மையங்கள் மூலம் கட்டடப்

# எது உண்மை இலக்கியம்?

## - தந்தை பெரியார்



மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதும் அறிவையும், திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக்கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே உண்மையான தமிழ் உணர்ச்சியாகும்.

மனித சமுதாயத்திற்கே நல் வழிகாட்டி, நன்னெறியூட்டி, நற்பண்புகளையும், ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும் எல்லா மதத்த வரும் "எங்கள் குறள்" "எங்கள் மதக் கருத்தை ஒப்புக் கொள்ளும் குறள்" என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

குறள் வெறும் ஒழுக்கத்தையும், நல்வாழ்க்கைக்கு வேண்டிய அனுபவப்பூர்வமான பிரத்தியட்ச வழியையும் கொண்டதாகும். குறள் ஓர் அறிவுக் களஞ்சியம், பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.

நல்ல தமிழில் - இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதிநெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழியின் ஆர்வத்தையும், ஒற்றுமைகளையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்டும் பாட்டுக்களையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல் மனித சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் அது இருக்கவேண்டும் என்பது எனது கருத்து.



# உழவர் திருநாள்



## பேரறிஞர் அண்ணா

இன்று திருநாள்!

இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங்கலோ பொங்க'லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுள்ளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்!

'பால் பொங்கிற்றா?'- என்று, அன்பு பொங்கக்கேட்டு அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெல்லாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான் நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான்- நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம், பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்திடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்






# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

தைத் திங்கள் – 2

மலர்: 22 இதழ்: 14

16-1-1992




## இந்த இதழில்...


எது உண்மை இலக்கியம்?
—தந்தை பெரியார் ... 2

உழவர் திருநாள்
—பேரறிஞர் அண்ணா ... 3

உழைப்போம்! உயர்வோம்!
—டாக்டர் எம்.ஜி.ஆர். ... 5

வான்புகழ் வள்ளுவருக்கு
வாழ்த்து மாலை ... 13

புகழ்பாடு தை மகளே! (கவிதை) ... 14

பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து ... 17

இந்தியப் பொருளாதாரத்தில்
கால்நடைகளின் பங்கு ... 19

சென்னைப் பல்கலைக் கழகம்
அன்றும் இன்றும் ... 23

பொற்காலம் ... 24

இறந்தோரை அடையாளம் காணும்
ஒரு புதிய முறை ... 29

பாலக்கோடு கூட்டுறவுச்
சர்க்கரை ஆலை ... 31

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும்
தொழில் பொருட்காட்சி-1992 ... 33

தமிழ்நாட்டில் முழு அடைப்பு வெற்றி ... 37

இன்பம் தழைத்திடுக! (கவிதை) ... 41

சங்கப் புலவர் நினைவாக
நினைவுத் தூண் ... 43

உறுதி பிறந்தது! (கவிதை) ... 45

தனிச் சிறப்பு வாய்ந்த நடுகல் ... 48






போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது.

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான். கல்லிலும், முள்ளிலும் நடந்தான் - காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான் - பகலெலாம் பாடுபட்டான் - முளைவிட்டதும் மகிழ்ந்தான் - களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான் - கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ பொன்னாடை போர்த்துக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல் மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டுகோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வை சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் - மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய்தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறைமணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும்- பசுந்தழை பத்து வண்டி வேண்டும்- பண்ணையாரிடம் இன்னது கூற வேண்டும்- வேலியை இவ்விதம் சரி செய்ய வேண்டும்' என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான்- 'மணி' அவனுக்கல்ல



என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன், அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது - புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான் - தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள்' இப்பொங்கற் புதுநாள் - என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி நாற்று நாட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப் பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடன் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள் - ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை - நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவில் மாண்பினைக் குறித்து, வியந்து, விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும். இசையும் கூத்தும் உடற் பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடை பெறவேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும் அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நய வஞ்சகர் போக்கு பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும், அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கற் புது நாளே அமைந்திருக்கிறது.





# உழைப்போம்! உயர்வோம்!

## -டாக்டர் எம்.ஜி.ஆர்

தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும்என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா.

உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற்கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக் ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் திருவிழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டு முன்னேற்றத்துக்கான பணிகளிலும், நம்மை விட நலிந்துள்ள மக்களின் துயர்களைப் போக்குவதிலும் கூட்டு முயற்சியோடு நாம் இன்னும் நம்மை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வகையில் அரசின் திட்டங்களை நிறைவேற்றுகிற பொறுப்புக்களை ஏற்றுள்ளவர்களின் கடமை மகத்தானதாகும்.

''உழைப்பே உயர்வுதரும்''
''உழைப்போம், உயர்வோம்''
''உழைப்போரே உயர்ந்தவர்''
''உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்''

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாள் பொங்கல்!



# ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் பரிசு!

## விழுப்புரம் விழாவில்
## மாண்புமிகு முதல்வர் உரை

'காவிரி - தென்பெண்ணை - பாலாறு
எனமேவிய ஆறுகள் பல ஓடத்
தன்மேனி செழித்த தமிழ் நாடு'

—என மகாகவி பாரதி பாடிய பாட்டுக்கேற்ப நம்முடைய தென்பண்ணை ஆறு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத புதுமையாக, இந்த ஆண்டு கரைபெருக்கெடுத்தோடி, இம்மாவட்டத்தின் மேனி செழித்தது என்று சிறப்பைப் பெற்றுள்ள மகிழ்ச்சியோடு நாம் இங்கே கூடியுள்ளோம்.

இவ்வளவு பெருமகிழ்ச்சியை நமக்கு வழங்கிய இயற்கை, நாம் ஆற்றவேண்டிய கடமைகள் பலவற்றையும் சில சின்னங்களாக விடுத்துச் சென்றுள்ளது.

மாவட்டம் முழுவதிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின் விளைவுகளால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து, மக்களைக் காக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அனைவர்க்கும் என் பாராட்டை - நன்றியை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். கடும் மழை- வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் - இம்மாவட்டத்திற்கும், பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் எங்கள் கடமையை ஆற்றும் வகையில்தான், இம்மாபெரும் விழா நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

வழக்கம்போல் சில மேதாவிகள் இதையும் விமரிசனம் செய்வார்கள் என்பதை, என்னைவிட இங்கே அமர்ந்துள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள்.

''போற்றுவோர் போற்றலும் தூற்றுவோர் தூற்றலும் இவ்வையத்துள் இயற்கையே!''

என்பதை மனதில் கொண்டு எங்கள் பயணத்தை - பணியைத் தொய்வின்றி ஆற்றி வருகிறோம் என்பதன் எடுத்துக்காட்டுதான், இம்மாபெரும் விழா என்பதை முதற்கண் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

கடந்த ஆறு மாதமாக நடைபெற்று வரும் எங்கள் அரசு உங்கள் அரசாக செயல்பட்டு வருவதை உணர்ந்திருப்பீர்கள். மலிவு விலை மது ஒழிப்பில் உண்மையாகவும் - உறுதியாகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரசாக;

காவிரிப் பிரச்சினை மட்டுமல்லாது, எங்கெங்கு தமிழ் இனம் வாழ்கிறதோ, அங்கெல்லாம் அவர்களின் நலன் காப்பதற்கும், தமிழர்களுக்குள்ள உரிமையைக் காப்பதற்கும், நம் பக்கம் நியாயம் உள்ளது என்பதை உலகறியச் செய்வதற்கும் தீவிரம் காட்டுகிற அரசாக;



தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை மிகச் செம்மையாக நடைமுறைப்படுத்த, தன் உயிரையும் பணயம் வைத்துச் செயல்படுகிற அரசாக;

தமிழகத்தின் பொருளாதார நிலையினை உயர்த்தவும், தொழில் வளத்தைப் பெருக்கவும் முனைப்பான வேகம் காட்டுகிற அரசாக;

வளர்ச்சிப் பணிகளில் வேறெந்த அரசும் இது வரை செய்தறியாத, செம்மையான பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசாக,

எங்கள் அரசான உங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. அத்தகைய உங்கள் அரசுதான், மழையாலும் வெள்ளத்தாலும் அவதிக்குள்ளாகி இன்னல்படும் மக்களுக்கு, நேரத்தோடு ஓடிவந்து உதவி செய்தது; அதன் தொடர் நடவடிக்கைகள் எவ்விதத் தொய்வுமின்றி நடைபெற்றிடும் வகையில், இன்று இங்கே இவ்விழா மூலம் பல்வேறு பணிகள் நடைபெற நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறுமாதக் காலத்திற்குள் எண்ணற்ற இடர்ப்பாடுகளை, இடுக்கண்களைச் சந்தித்த அரசு, இந்தியாவில் ஒன்று உள்ளதென்றால், அது நம் தமிழக அரசாகத்தான் இருக்க முடியுமே ஒழிய, வேறெந்த அரசும் இத்தனை இன்னல்களை இவ்வளவு குறுகிய காலத்தில் எதிர்கொண்டிருக்க முடியாது.

இருந்தும், மக்கள் நலப் பணிகளை விரைந்தும், வேகமாகவும் ஆற்றிட, நாங்கள் என்றும் பின் வாங்கியதில்லை; இனி என்றும் பின்வாங்கப் போவதும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு இயந்திரம் செம்மைப்பட இயங்கிட, மிக இன்றியமையாத் தேவையான 'நிதி நிலை' நெருக்கடி, வேறெந்த காலக் கட்டத்திலும் இல்லாத அளவுக்கு இன்றைய உங்கள் அரசு எதிர் நோக்க வேண்டியுள்ளது என்பதை, விவரம் அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

தமிழகத்தை ஆண்ட ஒப்பாரும் - மிக்காரும் அற்ற, தனித்தன்மை மிக்க முதலமைச்சர்களாகக் கருதப்பட்டு வரும் மூதறிஞர் இராஜாஜி, கர்ம வீரர் காமராசர், பேரறிஞர் அண்ணா, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஆண்ட காலங்களில் எல்லாம்கூட, தற்போதுள்ளது போன்ற மிகக் கடுமையான நிதி நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் இருக்கவில்லை.

அவர்கள் அனைவரும் ஆண்ட காலங்களில்,

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் அன்புடன் வரவேற்றார்கள் (3.1.1992).**



கஜானா நிரம்பி வழிந்தது எனக் கூற முடியா விட்டாலும், மிகக் கடுமையான நிதிச்சுமை அவர்களுக்கு இருந்தது எனக்கூற முடியாது. குறிப்பாக இராஜாஜி அவர்கள் , முதலமைச்சராக இருந்த போதும், காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், பல ஆண்டுகளில் அவர்கள் 'உபரி பட்ஜெட்' போடும் அளவுக்கு மிகுதியான நிதி ஆதாரங்களைப் பெற்றிருந்தனர். அப்பேர்ப்பட்ட மகத்தான தலைவர்கள் எல்லாம் ஆண்டபோது, மிகச் சுலபமாகச் சமாளிக்கக் கூடிய பொருளாதாரப் பிரச்சினைகள் தான் இருந்துவந்துள்ளன.

அத்தகைய உயரிய தலைவர்கள் எல்லாம் சந்தித்து அறியாத நிதிச் சுமையினை - பொருளாதார நெருக்கடியை, சமாளிக்க வேண்டிய அவசியம், சாமான்யமான நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த வேளையில் ஏற்பட்டுள்ளது என்பதை, உங்களிடத்தில் விளக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

உங்கள் சகோதரியான நான் ஆட்சித் தலைமையேற்ற இந்த ஆறு மாத காலத்தில் மட்டும், ஏறத்தாழ 1,200 கோடி ரூபாய் அளவுக்கான பல்வேறு வகைகளிலுமான பட்ஜெட் பற்றாக் குறையை எதிர்கொண்டு, அவற்றை எல்லாம் சமாளித்து, இன்று வெற்றிநடை போடுகிறோம்

**'தடா' சட்டம் தமிழகத்தைக் காக்க- தமிழக மக்களைக் காக்க- இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கத் தான் பயன்படும்!**

என்பதில் இருந்து, எவ்வளவு கடினமாக நாங்கள் உழைத்து வருகிறோம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தும்கூட, மக்கள் நலப் பணிகளுக்காகக் கோடி கோடியாக இவர்கள் எப்படிச் செலவழக்கிறார்கள் என, மாற்றுக் கருத்துக் கொண்ட பலரும் இன்று நம்மைப் பார்த்து வியந்திடும் அளவுக்கு, பணி புரிந்து வருகிறோம் என்றால் அது மிகையாகாது.

ஒரு காலத்தில் ஒரு மாவட்டத்திற்கு மந்திரிகள் வருகிறார்கள் என்றால், தங்கள் செல்வாக்கைப் பிரகடனப் படுத்திக்கொள்ள வருவார்கள். அதிலும் சில மந்திரிகள் இருந்திருக்கிறார்கள்; அவர்கள் சொந்த ஊருக்குச் சென்றால் கூட அதிகாரம் கொடி கட்டிப் பறக்கும்; அரட்டல், உருட்டல், அரசாங்க எந்திரத் துஷ்ப்பிரயோகம் என்பது, கண்மண் தெரியாமல் தூள் பறக்கும்; அனுபவித்தவர்கள் தானே நீங்கள்.......? அதனால் அதிகம் சொல்ல வேண்டியதில்லை எனக் கருதுகிறேன்.

ஆனால், இன்று உங்கள் சகோதரியான நான், எங்கள் அமைச்சர்களை அழைத்துக் கொண்டு, முதலமைச்சராக ஒரு மாவட்டத்திற்குள் நுழைகிறேன் என்றால், நுழையும்போதே ஒருங்கிணைந்த வகையில், சுமார் 75 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய் வரையிலான பல்வேறு திட்டங்களை, உடன் செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்களோடுதான் நுழைகிறோம் என்பதில் இருந்து, இதுவரை ஆண்டவர்களுக்கும் எங்களுக்குமுள்ள வேறுபாட்டை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். இன்று நான் இங்கே கலந்து கொள்ளும் இந்த விழா நிகழ்ச்சி மூலம் மட்டும், இம்மாவட்டத்திற்கு 175 கோடி ரூபாய் திட்டங்கள் வந்துள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப் பார்த்துக் கூட சிலர் வயிற்றெரிச்சல் படுகிறார்கள்; 'ஆடம்பரப் பவனி' என்று ஓர் வார்த்தையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; எரிச்சலோடு எழுதுகிறார்கள்; ஏளனமாய்ப் பேசுகிறார்கள்; நெஞ்சம் குமுறுகிறார்கள்.

மக்கள் எங்கள் மீது செலுத்தும் அன்பும், அரவணைப்பும் அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்குகிறது; எனவே இதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. இவர்கள் பேச்சுக்கும், எழுத்துக்கும் நாங்கள் அஞ்ச வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஆனால்,

நாங்கள் மக்களுக்குப் பயப்படுகிறோம்;
நாங்கள் நீதிக்கும் நேர்மைக்கும் பயப்படுகிறோம்;
நாங்கள் உண்மைக்கும் சத்தியத்திற்கும் பயப்படுகிறோம்; அதே நேரத்தில், நான் இன்னொரு உண்மையைச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழி வந்த இந்த அரசு, எந்தக் காலத்திலும் எத்தகைய மிரட்டல்களுக்கும் பயப்படாது; குறிப்பாகப் புரட்டர்களுக்குப் பயப்படாது.

ஒரே வரியில் சொன்னால்,

நாங்கள் பயப்படவும் மாட்டோம் -
எவரையும் பயமுறுத்தவும் மாட்டோம்!

உண்மை இப்படி இருக்க,

'தடா' சட்டம் பயன்படுத்தப்படுகிறதே! எங்கள் மீது பாய்கிறதே!' என்றெல்லாம் பயந்துபோய், சிலர் தவறான தகவல்களைத் தமிழக மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்னும் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். அதுமட்டுமல்ல, 'வேங்கை வேதாந்தம் பேசுகிறது' என்பார்களே, அப்படித்தான் இவர்களது வாதமும் உள்ளது.

எந்த வகையில் நான் 'தடா' சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளேன்? சொல்ல முடியுமா அவர்களால்....?



என்னை அழிக்க நினைத்தவர்களுக்கு எதிராக நான் அதைப் பயன்படுத்தினேனா?

என்னை லாரி ஏற்றிக் கொல்ல நினைத்தார்களே சிலர்; அவர்களுக்கு எதிராக அதை ஏவி விட்டேனா?

இல்லை, எனக்கு மருத்துவ வசதியைத் தரக் கூடாது என்று அதிகாரத்தால் அனைவரையும் அதட்டினார்களே சிலர், அவர்கள் மீது அதைப் பிரயோகித்தேனா? சொந்த நலனுக்காகத் 'தடா' சட்டம் மட்டுமல்ல, வேறு எந்தச் சட்டத்தையும் துஷ்பிரயோகம் செய்கிற முதலமைச்சர் அல்ல நான், என்பதை மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்த மக்களுக்கு, எங்களை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு, இந்த உண்மை தெரியும்; இதன் உண்மையான அர்த்தமும் புரியும்! எனவே, எங்கள் மீது வசை பாடுவோரைப் பற்றித் துளியும் கவலைப்படாமல், எங்கள் கடமையைச் செய்கிறோம்; கவனத்தோடு செயல்படு கிறோம். மக்களுக்குத் தொண்டாற்றவே பொது வாழ்வுக்கு வந்துள்ளோம் என்பதை உணர்ந்து காரியமாற்றி வருகிறோம்.

எங்களது இலக்கினை, அடையவேண்டிய இலட்சியங்களை, நாங்கள் தெளிவாக உணர்ந்துள்ளதால், எங்களது நெடும் பயணத்தில் எந்த விதத் தயக்கமும் இல்லை; தடுமாற்றமும் இல்லை.

எங்களது கொள்கையில் தெளிவுள்ளதால், எவ்வித மயக்கமும் இல்லை. ஆனால், தங்களது கொள்கைகளைக் குழப்பிக் கொண்டவர்கள், மக்களைக் குழப்ப வேண்டும் என்பதற்காக, தவறான தகவல்களை இப்போது மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விளக்கம் அளிக்கவே இதனைத் தெரிவித்தேன்.

'தடா' சட்டம் தமிழகத்தைக் காக்க - தமிழக மக்களைக் காக்க - இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கத்தான் பயன்படுமே தவிர, எங்கள் அரசியல் எதிரிகளை அடக்குகிற ஆயுதமாக, சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்கிற கருவியாக, சுயநலத்திற்காகப் பயன்படுத்தப்படுகிற சட்டமாக, அதைப் பயன்படுத்த நாங்கள் நினைத்ததும் இல்லை; இனி நினைக்கப் போவதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள சிலருக்குச் சில வினோதப் பழக்க வழக்கங்கள் உண்டு. அதை நானும் அறிவேன்; மக்களும் அறிவார்கள்.

எங்கே தங்களை மக்கள் மறந்து விடுவார்களோ? எங்கே விளம்பரமின்றி மறைந்து போய் விடுவோமோ? என்ற பயத்தில், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் முயற்சியாக, தாங்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு புரளியைக் கிளப்பி விடுவது; அரசுப் பேருந்துகள் மீது அவர்களாகவே கல்லெறியச் செய்வது; மற்றவர்களைக் கலவரம் செய்யத் தூண்டுவது; 'கைது செய்து பார்', 'வானம் வில்லாக மாறும், பூமி பாயாகச் சுருளும்' என்றெல்லாம், அடிக்கடி நிறம் மாறும் சில பச்சோந்திகளை விட்டுப் பேசச் செய்வது; இவை எல்லாம் எதற்காக? ஏன் என்று நினைக்கிறீர்கள்? மக்கள் அவர்களை மறந்துவிடக் கூடாதே என்பதற்காகத் தானே தவிர,, வேறு எதற்காக?

அவர்கள் சம்பாதித்த பல கோடிகளைக் காப்பாற்றிக் கொள்ள, ஐந்தரைக் கோடி மக்களை அல்லலுக்கு உள்ளாக்க நினைக்கிறார்களே...... இது நியாயமா?

மக்களுக்கு உழைக்கத் தயாராக இருக்கும் இந்த அரசின் ஆக்கப் பணிகளுக்கு ஊறு விளைவிக்க நினைக்கிறார்களே........ இது நியாயமா?

அதோடு, அவர்கள் செய்திருக்கிற தவறுகளுக்காக, தமிழகத்திற்கு இழைத்திருக்கிற கொடுமைகளுக்காக, தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகங்களுக்காக, மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க, சிறைச்சாலைதான் பாதுகாப்பான இடம் எனக் கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை; அவர்களிடம் இத்தகைய அவசரப் பேச்சுக்கள் அதிகமாக உள்ளன.

ஆனாலும், அவர்கள் பாதுகாப்பாகச் சிறைக்குப் போக அவசரப்படுவது போல, அரசு அவசரப்பட முடியாது. அவர்கள் மக்களை ஏமாற்ற நடத்தும் போலி அரசியலை, மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டிய எங்கள் கடமையைத்தான் நாங்கள் செய்து வருகிறோம்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதற்கென, இடு பொருட்களைக் காலத்தோடு அவர்களுக்கு விநியோகிப்பதற்காக மட்டுமே, 10 கோடி ரூபாய் அளவில் உதவிகள்!**

குறிப்பாக, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இந்த அரசு எவரையும் கைது செய்யாது, பழி வாங்காது என்பதைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில்; மக்களுக்கு உண்மையைச் சொல்ல, சட்டம் தடையின்றி அதன் வேலையைச் செய்ய, இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெறுகிற இந்த அரசு விழாவில், மொத்தமாக 175 கோடி ரூபாய்க்கான பல்வேறு திட்டங்களை நான் துவக்கி வைத்துள்ளேன். குறிப்பாக, நல்ல மழை பெய்ததற்குப் பிறகு, உழவர்கள் தங்களது விவசாயப் பணிகளை உடன்



# ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழா.

ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொங்கலை முன்னிட்டு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழா தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் 7.1.1992 அன்று நடைபெற்றது.

விழுப்புரம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் திடலில் நடந்த இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, இந்தத் திட்டத்தையும் ரூ.175 கோடிக்கான பல் வேறு நலப்பணித் திட்டங்களையும் துவக்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில் ரூ.14.52 கோடி செலவில் கட்டப் பட்டுள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக ஊழியர் குடியிருப்பு மற்றும் பிற திட்டங்களையும், ரூ.46.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மீனவர் குடியிருப்புகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானியம்:

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடுபொருள் மானியம் வழங்கினார்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வீதம் இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 34 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன.

விழாவில் ரூ. 258 இலட்சம் செலவில் ஊரக வளர்ச்சித் துறைப் பணிகள், ரூ.60 கோடி செலவில் டானிடா திட்டப் பணிகள், ரூ.105 இலட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியப் பணிகள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல்வர் அவர்கள் விழா மேடைக்கு வரும் முன்னர், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகத்தில் ரூ.5 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் சிலை மற்றும் நுழைவுவாயில் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

விழாவிற்கு, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். முன்னதாக, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, இறுதியில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வாழ்த் துரை வழங்கினார்.

### நினைவுப் பரிசுகள்:

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் ஆகியோர் நினைவுப் பரிசுகள் வழங் கினார்கள்.

அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. சி. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. ஜி. விஸ்வநாதன், திரு. ஈ. மதுசூதனன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. கே.பி. கிருஷ்ணன், திரு. டி.எம். செல்வகணபதி, திரு. முகமது ஆசிப், திரு. டி. ஜெயக்குமார், திருமதி இந்திர குமாரி ஆகியோரும் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

விழாவினையொட்டி விழுப்புரம் நகரில் வண்ண மின்விளக்கு அலங்காரம் செய்யப் பட்டிருந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்.



# வான்புகழ் வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

எக்காலத்திற்கும் ஒத்துவரும் இயல் பினது. எண்ணில் வகைக் கவிஞரும் தம் நூல் ஏற்றமுற எடுத்த சொல்லையும் பொருளையும் உடையது. பல்லுரைகாரரும் பரிந்தெடுத்த பாங்கினது. ஞான நூலார் பலர்க்கும் நல்கிய பொருளது. எவ்வறத் தினரும் தள்ளாரும் கொள்ளுந் தருமத்தது. ஏனைய நூல்களை வாசிக்குங்கால் வரும் ஐயங்களை அகற்றும் ஆசிரியத் தன்மையது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது. வேற்று மொழி வல்லார் காணாத விளக்கத் தகத்து.

—திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

அறம், பொருள், இன்பம்- இம் முப் பொருளையும் ஒரிடத்தே இயையச் சேர்த்து விரிக்கற் பாலதை விரித்தும், சுருக்கற் பாலதைச் சுருக்கியும் அரும் பெறல் மணி களை யொருசிறுபேழையினகத்துப் பொற் புற வைத்தாங்குக் கவின் பெற மிளிரு மிவ்வருமைத் திருக்குறள் போன்ற ஒரு நூல் எம்மொழியிலும் காண்பதரிது. எப்பால வர்க்கும் எவ்வெக்காலத்தும் உயிர்க்குறுதி பயப்பனவாய பொருள்களை இன்புற விளக்கி அவரை யுய்விப்பதே இத்தொன் னூலின் மாட்சி.

— சுவாமி விபுலானந்தர்,
யாழ்ப்பாணம்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக் கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல் களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்த தென்பதற்கு இடை நெடுங்காலம் பிற பல நூலும் வழக்கிழந்தொழியவும், என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

திருவள்ளுவர் தெய்வப்புலமை வாய்ந் தவரென்பது திண்ணம். அவர் பெரும் புலமையும் நுண்ணறிவும், அரிய பொருள் களைச் சிறிய செய்யுளில் அமைத்துக் கூறும் ஆற்றலும் படைத்தவர். அவர் கூறியருளிய அறநூலொன்றே உலகத்தார் அறிந்துய்ய வேண்டிய அறங்களையெல்லாம் தெள்ளிதின் விளக்கிக் கூறுவது; அரிய பொருள்களை ஆடியிற் காட்டும் பொருள்போல் அமைத் துக் காட்டுவது; ஒப்புயர்வற்ற உவமை களைப் பொருள்களுக்கு ஏற்றவாறு பொருந் தக்கொண்டு விளங்குவது.

—பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டின ரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல்



ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். 2,000 வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த திருக்குறள் தலை சிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

—சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில் தொறும் நயம் பெருகும் நூலாய் விளங்கு கின்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்ற கடுந்தமிழ்ப் பதங்களும், பத்துப் பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் திருக்குறளில் இல்லை. நூல் முழுமையும் திருந்திய செப்பமும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும் இயல் களும், அதிகாரங்களும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பல தொடர்களால் அமைந்த அருமணி வடம் போல் விளங்கு கின்றன.

—டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெரு மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வருகின்ற ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும் பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பி யரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினை விற்கு வருகிறது. ''அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்'' என்று.

—ப. ஜீவானந்தம்.

''பாரத பூமியின் அறநெறியை விளக்கும் நூல்களுள் சிறந்தது திருக்குறளே''

—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கரசாரிய சுவாமிகள்

திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய் மொழி போல் விளங்குகிறது.

—டாக்டர் மு. வரதராசனார்.

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல் வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத் தின் நிலைக்களனாய் இனிது விளங்கும்.

—பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார்.

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங் களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால், திருக்குறள் ஒன்று தான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந் திருக்கிறது.

—தந்தை பெரியார்.

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறி யவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர் கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன் வரவேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள் கிறேன்.

—பேரறிஞர் அண்ணா.





# புகழ்பாடு தைமகளே!

## கவிஞர் இளந்தேவன்

மஞ்சள் முகம்காட்டி, மனைப்பொங்கல் மணங்காட்டி,
கொஞ்சும் வயல்மேனிக் கோலமிகும் எழில்காட்டி,
செஞ்சொல் தமிழ்காட்டி, சின்னஇடை நடம்காட்டி
வஞ்சியென வந்தவளே, வரவேற்றோம் தைமகளே!

அண்ணலார் காந்தி, அரும்பெரியார், பேரறிஞர்,
மன்னவராம் எம்.ஜி.ஆர்., மாக்கவிஞர் பாரதியார்
தன்னுரிமைப் பாவேந்தர் தம்கனவை நனவாக்கும்
பெண்ணரசி பெரும்புகழைப் பேசவந்தாய் தைமகளே!

வேளாண் குடிகளுக்கு இலவசமாய் மின்சாரம்
தாளாண்மைத் தொழிலாளர் தலைதூக்கத் தனித்தொண்டு
நூலாளும் நெசவாளர் துயர்தீர்க்கப் பேருதவி
மேலான தமிழாட்சி மேன்மையிது தமிழ்மகளே!

ஆலைக் கரும்பாய் அல்லலுற்றுத் தவிக்கின்ற
ஏழைக்குச் சேலை, எளியோர்க்கு வேட்டி, ஒரு
வேளைக்குச் சத்துணவு விரைவாய்க் கிடைக்குதடி
தாழைக்கு வாசம் தரவந்த தைமகளே!





சாராயம் தேங்கும் சதுப்புநில மாயிருந்து
தீராத துயர்க்கிருமி தினம்தந்த தமிழ்நாட்டில்
ஓராணை யாலே 'மது' அரக்கன் தனையொழித்த
தீராதி தீரமதைத் தினம்பாடு தைமகளே!

'தண்ணீரைத் தா!' என்றால் தங்கியுள்ள தமிழர்களின்
செந்நீரை ஓடவிட்டுச் சிரிக்கும்கரு நாடகத்தார்
வெந்நீரைத் தேசியத்தின் வேருக்கு வார்த்தாலும்
கண்ணீரை அடக்கிக் கட்டுண்டோம் தைமகளே!

தாய்கொண்ட பொறுமைதனைத் தன்னடக்கப் பண்பாட்டைப்
பேய்கொண்ட சிறுமதியார் பின்னும் மதியாரேல்
வாய்கொண்டு வரலாறு வாழ்த்துகின்ற தமிழ்வீரம்
பாய்கின்ற நாள்விரைவில் பார்ப்பாய்நீ தைமகளே!

மண்மகளின் பொறுமைக்கும் மலர்மகளின் திருவுக்கும்
நன்மகளாம் கலைமகளின் நல்லறிவுத் திறனுக்கும்
பெண்மகளாய் வந்துதித்த பெருமாட்டி யாய்விளங்கும்
பொன்மகளின் ஆட்சிக்குப் புகழ்பாடு தைமகளே!





துவக்குகிற வகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதற்கென, இடுபொருட்களைக் காலத்தோடு அவர்களுக்கு விநியோகிப்பதற்காக மட்டுமே, 10 கோடி ரூபாய் அளவில் உதவிகள், இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஊக்குவிக்கிற வகையில், எங்களால் தீட்டப்பட்டுள்ள சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகளை, போர்க்கால நடவடிக்கைகள் மூலம் தற்போது வழங்கிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில், இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம், 34 கோடி ரூபாய்க்கான திட்டங்கள், இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (District Rural Development Agency) மூலமும், ரூ.28 கோடி செலவில் இன்று பல்வேறு

**சென்னையையும் கடலூரையும் இணைக்கும் 178 கிலோமீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் இதர சாலைகளைச் செப்பனிடுகிற பணிக்காக, 19.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.**

திட்டங்கள் துவக்கி வைக்கப்படுகின்றன.

நமது கிராமங்களையும், பெரிய நகரங்களையும், சாலைகள் மூலம் இணைத்து, கிராமியப் பொருளாதாரத்தை விரைந்து முன்னேற்றுகின்ற எங்கள் அரசின் நோக்கமும், முன்னுரிமையோடு பல்வேறு இடங்களில் செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த மாவட்டத்தைப் பொருத்தவரை, அந்த எண்ணத்தை நிறைவேற்றுகிற வகையில், சென்னையையும் கடலூரையும் இணைக்கும் 178 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம், இதர சாலைகளைச் செப்பணிடுகிற பணிக்காக, 19.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்தின் முக்கியத்துவம், தற்போது நகரத்தில் வாழ்கிற மக்களாலும், கிராமங்களில் வாழும் மக்களாலும் நன்கு உணரப்பட்டுள்ளதால், போக்குவரத்து வசதிகள் சிறப்பாக அமைய, போக்குவரத்துக் கழகங்கள் செம்மையாகச் செயல்படுவது அவசியமாகும்.

அந்த வகையில், இந்த மாவட்டத்தில் இயங்கி வரும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணியாளர் குடியிருப்புகள், மற்றும் தொழிலாளர்களுக்கான மருத்துவமனை, ஆகியவற்றுக்கான பணிகளைத் தொடங்கி வைக்கிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேருந்து உதிரி பாக உற்பத்தித் தொழிலக விரிவாக்கக் கட்டடம், புதிய பணிமனைகள் மற்றும் தொழிலாளர் நலக் கட்டடங்கள், மனமகிழ் மன்றம், பயிற்சி மையம், மாமண்டூர் பயண வழி உணவகம் ஆகியவைகளுக்காக, 13.70 கோடி ரூபாய் செலவில், திட்டங்கள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் பரிசாக, இன்று ஒரு மாபெரும் திட்டத்தையும் இந்த விழாவில் தொடங்கி வைத்ததில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்புதிய திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அனைத்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோர், பொங்கல் பரிசாகச் சேலை, வேட்டி இலவசமாகப் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், தமிழர் திருநாளாம் பொங்கல் அன்றுகூட, புத்தாடை வாங்கி அணிய முடியாத நலிந்த பொருளாதார நிலையில் பலரும் உள்ளனரே என்று வருந்தினேன். அரசிற்கு நிதிநிலை நெருக்கடி இருக்கும் இத்தருணத்திலும், இந்த ஆண்டு பொங்கல் நாளை என் சகோதரிகளும், சகோதரர்களும், புத்தாடை அணிந்துதான் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்தேன். அதன்படி இன்று 41.56 கோடி ரூபாய் அளவிற்கு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோருக்கு, புத்தாடைகள் பொங்கல் திருநாளுக்கு முன்னரேயே வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளேன். இதிலிருந்து, தமிழகத்தில் வாழும் ஏழை எளியோருக்கென. எத்தகைய திட்டங்கள் என் மனதில் உள்ளன என்பதையும்,

இரவு பகல் எந்நேரமும்,

'இலையே, உணவிலையே - கதி
இலையே எனும் நிலையே இனி இலையே -
எனும் நிலையே இனி வரவே
முரசறைவாய் முரசறைவாய்'

—என்னும் பாவேந்தர் பாரதிதாசன் வறியோர் வளம் பெற பாடிய பாட்டின் உணர்வுதான், என்னகத்தே உள்ளது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.





இன்னும் கதர் கிராமத் தொழில் வாரியம், மீன்வளத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஆகிய பல துறைகளின் சார்பாகவும் திட்டங்கள் பலவற்றைத் துவக்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்களினால், விவசாயத்தை நம்பியிருக்கிற இம்மாவட்ட மக்கள், பெரிதும் பயனடைவார்கள் என்று உளமார நம்புகிறேன். தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முன்னே, இன்று விசுவரூபம் எடுத்துள்ள பிரச்சினைகள் பற்றி நம் அனைவருக்கும் நன்கு தெரியும்.

தமிழக விவசாயிகளுக்குள்ள பெரிய பலவீனமே, அவர்கள் பல காலம் விவசாயத்திற்காகப் பருவமழையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. சில நேரம் பாசனத்திற்குரிய தண்ணீரை, பக்கத்திலிருக்கிற மாநிலங்களில் இருந்து போராடிப் பெற வேண்டி உள்ளது. இந்த வகையில் உருவெடுத்தது தான் காவிரிப் பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரியும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் இயற்கையாகவே நியாயம் நம் பக்கம் இருந்ததால், கர்நாடக அரசு நீதி வழங்க மறுத்த நேரத்தில், வானம் மழை பொழிந்து நமது இன்னலைத் தீர்த்து வைத்தது. இப்போது உச்ச நீதிமன்றத்தின் மூலமும், மத்திய அரசின் மூலமும், சட்டத்தின் மூலமும், நமது நியாயம் உணரப்பட்டு, நீதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த நீதி மதிக்கப்படாமல், அதுவே காழ்ப்புணர்ச்சியைத் தூண்டுகிற காரணமாகி, கர்நாடகத்தில் வாழ்ந்து வருகிற ஏதுமறியாத தமிழர்கள் பெருத்த துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாகப் பண்பாட்டால், பழக்கவழக்கங்களால், திராவிட இன ஒற்றுமையால், கர்நாடக மக்களோடு இணைந்து வாழ்ந்து வருகிற தமிழர்கள், தாங்கள் செய்யாத தவறுக்காக, எவ்வகையிலும் அவர்கள் சம்பந்தப்படாத பிரச்சினையில், அவர்கள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்; அவர்களது உடைமைகளும் சொத்துக்களும் பறிபோயுள்ளன; மனித உயிர்களும் பறிக்கப்பட்டுள்ளன. எஞ்சியோர் தங்கள் மானத்தையும், உயிரையும் காத்துக்கொள்ள, அகதிகளாய் இலட்சத்திற்கும் அதிகமானோர் தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஒரே வரியில் சொல்லப்போனால், நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கப்பட்டுள்ளது! சிறுபான்மையாய் வாழ்கிற எந்தச் சமூகத்தின் மீதும், கலவரத்தின் மூலம் பெரும்பான்மையாய் வாழ்கிற மக்களால், அநீதி இழைக்கப்பட முடியுமென்றால், பிறகு எந்த மாநிலத்திலும் அமைதி நிலவ வழியில்லை!! இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், கர்நாடகத்தில் சிறுபான்மையாய் வாழ்கிற தமிழர்களுக்கு, முழுப் பாதுகாப்பு வழங்க, மத்திய அரசை நான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறேன். தமிழகத்திற்குத் தர்மத்தின் அடிப்படையில், சட்டத்தின் அடிப்படையில், அமைந்துள்ள உரிமையை நிலைநாட்ட, தமிழ்நாடு எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்!

நியாயமும் - நீதி மார்க்கமும் - தர்மமும் நம் பக்கம் உள்ளதால், நாமே இறுதி வெற்றி பெறுவோம் என்னும் உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையில் ஏற்படும் இன்னல்களையும், சோதனைகளையும், வேதனைகளையும், இடர்ப்பாடுகளையும், இழப்புகளையும், வழிந்தோடும் விழி நீரைத் துடைத்தெறிந்து விட்டு, இன்முகத்தோடு எதிர் கொள்வோம்! வீறுநடை பயில்வோம்! வெற்றி கொள்வோம்! எனச் சூளுரைத்து, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக்கூறி விடை பெறுகிறேன்.

***—ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (7.1.92)***







# பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து

கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

பொன்னிநதிக் கென்றேகல் லணை எழுப்பி,
பெருக்கெடுக்கும் வெள்ளத்தால் நாட்டு மக்கள்
இன்னலுறாப்படிகாத்தான் கரிகாற் சோழன்;
இரண்டாம்ரா சராசனென்ற சோழ மன்னன்
தன்னாட்டை வளப்படுத்தும் காவி ரிக்குத்
தடைநேர்ந்த தோர்மலையால் என்ற றிந்து,
சென்றந்த மலைதகர்த்துக் காவி ரித்தாய்
துள்ளிவரச் செய்திட்டான்-அற்றை நாளில்!

பொன்னியாற்றங் கரைநெடுகச் சிலமன் னர்கள்
பக்தியினால் சிவன்கோயில் எடுப்பித் தார்கள்;
பின்வந்த சோழப்பே ரரச ரெல்லாம்
பாங்குறவே கரைஉயர்த்திச் சிறப்புற் றார்கள்;
இன்னும்சில முடிமன்னர் கிளைக்கால் வாய்கள்
ஏற்படுத்திச் சோணாட்டை வளநா டாக்கி
மன்னுபுகழ் பெற்றார்கள்! நமக்கும் வற்றாக்
காவிரிக்கும் உள்ளதொடர் பைக்கண் டீரா?

இத்தனைக்கா லத்தொடர்பைப் பொய்என் றார்கள்
இலந்தைநிறக் கருநாட கத்தார்; நாமோ
எத்தனைக்கா லம்ஆன போதும் நீதி
எங்கள்தமிழ் நாட்டினுக்கே என்றோம்; வென்றோம்!
தித்திக்கும் செங்கரும்பு, திராட்சை, வெல்லம்,
தேய்ந்தபிறை வடிவமுந்திரி எல்லாம் சேர்த்துப்
புத்தரிசிப் பொங்கல்வைக்கும் இந்த ஆண்டில்
பொன்னியினை வரவேற்போம்; வாழ்த்து வோமே!



## நாய்களைப் பாதிக்கும் நச்சுயிர் நோய்!

சென்னை மாநகரில் உள்ள நாய்களில் பார்வோ நச்சுயிர் நோயில் காணப்படுவது போன்ற அறிகுறிகளான வாந்தி, பேதி ஆகியன அதிகமாகக் காணப்படுகின்றன. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நாய்களில் ஏறக்குறைய 20 சதவிகித நாய்கள் இந்நோயால் பாதிக்கப் பட்டுள்ளன.

பெரும்பாலான நாய் வளர்ப் போர், இந்நோய்க்கான தடுப்பூசி போடத் தவறுவதாலேயே இந்நோய் உண்டாகிறது. இந்நோய் உணவுப் பாதையைப் பாதிக்கக்கூடிய ஒரு தீவிர மற்றும் பரவக்கூடிய தொற்று நோயாகும். எந்த வயதானாலும் இந் நோய் பாதிக்க வாய்ப்புண்டு. எனினும், குட்டி நாய்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுகிறது. பொதுவாக, இந்நோய் வெளிநாட்டு இன நாய்களை அதிகமாகத் தாக்கு கிறது. இந்நோய், நச்சுயிர் கலந்த மலம் - வாய் வழியாகப் பரவவும் வாய்ப்புண்டு.

**நோயின் அறிகுறிகள்:** வாந்தி மற்றும் பேதி அதிதீவிரமாகக் காணப் படும். இவற்றில் இரத்தம் கலந் திருக்குமாதலால் சிவப்பு அல்லது கறுப்பு நிறத்தில் காணப்படும். பசியின்மை, சோர்வு மற்றும் நீர்வற்றி காணப்படும். காய்ச்சல் காண வாய்ப் புண்டு. சில நாய்கள் நோயின் அறிகுறிகள் கண்ட 24 மணி நேரத் தில் இறக்க வாய்ப்புண்டு. 4 முதல் 12 வார வயதான குட்டிகளில் இதய தசைகள் பாதிக்கப்படுவதால், இதயத் துடிப்பு நின்று திடீரென இறக்க நேரிடலாம். இறப்பதற்குச் சில மணி நேரங்கள் முன்பாக மூச்சு விடத் திணறல், கத்துதல் இருக் கலாம்.

இந்நோய் கண்ட நாய்களுக்குத் தாது உப்புக்கள் கலந்த நீரை இரத்தம் வழியாகச் செலுத்த வேண்டியது அவசியம். மேலும், நோயின் தன்மை யைப் பொறுத்து இரத்தம் தர வேண் டியும் நேரிடலாம். எனவே, உடனடி யாகக் கால்நடை மருத்துவரிடம் கொண்டு செல்வது அவசியமாகும். வாந்தி நின்று 24 மணிநேரம் ஆகும் வரை வாய்வழியாக எதுவும் தருதல் கூடாது. 7 முதல் 9 வார வயதான நாய்க் குட்டிகளுக்குத் தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோயினைத் தடுக்கலாம்.

*கால்நடை மருத்துவ அறிவியல் தகவல் பணி மையம்,*
*தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்,*
*சென்னை.*

## மூளை அழற்சி நோய் ஏன் ஏற்படுகிறது?

'அல்ஷைமர் நோய்' (Alzheimer's Disease) என்று அழைக்கப்படும் மூளை அழ்ற்சி நோயைப் பற்றிப் புரிந்து கொள்வதில் நல்ல முன்னேற்றம் ஏற் பட்டுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வயதானவர்களையே இந்த நோய் தாக்குகிறது. 85 வயது வரையில் உயிர் வாழ்வோரில் 25 சதவிகிதம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் கண்டவர்களின் மூளையிலுள்ள பல செல்கள் அழிந்து போகின்றன. இதனால் இவர்களுக்குத் தீவிரமான ஞாபக மறதி ஏற்படுகிறது.

மனித மூளையிலிருந்து எடுக்கப்பட்ட 'பீட்டா அமிலாய்ட்' (Beta Amyloid) எனப் படும் புரதப்பொருளை, நன்கு வளர்ச்சி யடைந்த எலிகளின் மூளைக்குள் ஊசி மூலம் விஞ்ஞானிகள் செலுத்தினர். அல்ஷைமர் நோய் கண்டவர்களின் மூளையில் ஏற்படுகின்ற அதே மாதிரி யான அழற்சி இந்த எலிகளின் மூளை யிலும் ஏற்பட்டது.

இதேபோன்று, மனித மூளையிலி ருந்து எடுக்கப்பட்ட 'சப்ஸ்டன்ஸ் பி' (Substance P) என்று அழைக்கப்படும் மற்றொரு புரதப் பொருளை இந்த எலி களின் மூளைக்குள் ஊசியால் செலுத்திய போது, அந்த எலிகளின் மூளைச் செல்கள் அழிவது தடுக்கப்பட்டது.

மனிதர்களுக்கும் இந்தப் புரதங்களைக் கொடுத்துச் சோதனை செய்து பார்ப்ப தற்குப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். எனினும் அல்ஷைமர் நோயைத் தடுக்க முடியும் அல்லது குறைந்தபட்சம் தாமதப் படுத்த முடியும் என்பது, எலிகளிடம் இப்போது நடத்தப்பட்டுள்ள சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரங்குகளுக்கும் இந்தப் புரதத்தைக் கொடுத்து இதுபோலச் சோதனை நடத்து வதில் விஞ்ஞானிகள் முனைந்து வரு கின்றனர். குரங்குகளின் மூளை கிட்டத் தட்ட மனிதனின் மூளையைப் போன்று இருப்பதே இதற்குக் காரணமாகும்.

*-அமெரிக்கத் தகவல் நிலையம்*

# இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு

தமிழகத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை தொடங்கி நூறு ஆண்டுகளாகின்றன. இத்தருணத் தில் நமது நாட்டின் கால்நடைகளின் முக்கியத்துவம், அவற்றின் மதிப்பு, நாட்டின் பொருளாதாரத்தில் அவற் றின் பங்கு பற்றியும், கால்நடை வளர்ப்பில் இன்றுள்ள முக்கிய பிரச்சினைகள் பற்றியும், அதற்குப் பரிகாரங்கள் பற்றியும் சிந்திப்பதும் பரிசீலனை செய்வதும் மிக அவசிய மாகும்.

நமது நாட்டின் பொருளாதாரத் தில் கால்நடைகளின் பங்கு மிக முக்கியமானதாகும். மற்ற நாடுகளை விட, நமது நாட்டில் அதிகமாக மர்டுகளும் எருமைகளும் உள்ளன. 19 கோடி மாடுகள், 7 கோடி எருமைகள், 9.5 கோடி வெள்ளா டுகள், 5 கோடி செம்மறியாடுகள், 20 கோடி கோழிகள், ஒரு கோடி பன்றிகள் மற்றும் 20 இலட்சம் குதிரைகளும், ஒட்டகங்களும் நமது நாட்டில் உள்ளன.

நமது நாட்டிலுள்ள கால்நடை களை எல்லாம் ஒன்றன்பின் ஒன் றாக ஒற்றை வரிசையில் நிறுத்தி னால், பூமியைச் சுற்றி 11 சுற்று நிறுத்தலாம். அதேபோல் பூமி யிலிருந்து சந்திரன் வரை நிறுத்த லாம். இந்த அளவிற்கு நமது நாட் டில் மிகுதியாக உள்ள கால்நடைச் செல்வங்களின் மதிப்பு 45 ஆயிரம் கோடி ரூபாய் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இந்தக் கால்நடை களிலிருந்து ஆண்டிற்குச் சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பலனும், வருவாயும் நமது நாட்டிற் குக் கிடைக்கிறன. இது நமது நாட் டின் மொத்த தேசிய வருவாயில் 10 சதவீதம் ஆகும்.

**- டாக்டர் எஸ். சுப்பையா,**
**துணை இயக்குநர்,**
**கால்நடை பராமரிப்புத் துறை**
**மாவட்டக் கால்நடைப் பண்ணை**
**ஒரத்தநாடு.**

தற்சமயம் ஆண்டிற்கு 50 மில்லியன் டன் பால் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. இத னுடைய மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். விவசாயப் பணிகள் மற்றும் வண்டிகள் மூலம் பாரம் இழுப்பது போன்ற பணிகளையும் நமது கால்நடைகள் செய்கின்றன. இந்த பணிகளின் மதிப்பு ஆண் டிற்கு 10 ஆயிரம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. கால் நடைகளிலிருந்து கிடைக்கும் எரு வின் மதிப்பு 10 ஆயிரம் கோடி ரூபாய், இறைச்சியின் மதிப்பு 6 ஆயிரம் கோடி ரூபாய். தோல், தோல் பொருட்களின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய். முட்டைகளின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாயாகும்.

உழவுத் தொழிலுக்கும் மற்றும் பாரம் இழுப்பதிலும் கால்நடைகள் முக்கியப் பணியாற்றுகின்றன. இந்தப் பணிகளில் 7.2 கோடி எருதுகள், 20 இலட்சம் பசுக்கள், 80 இலட்சம் எருமைகள், 20 இலட்சம் ஒட்டகங்கள் மற்றும் குதிரைகளும் ஆக மொத்தம் 8.4 கோடி கால்நடைகள் பயன்படுத்தப் படுகின்றன. இந்தக் கால்நடைகளின் மதிப்பு மட்டும் 15 ஆயிரம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.





நமது நாட்டில் 1.5 கோடி கட்டை வண்டிகள் உள்ளன. இவற்றின் மதிப்பு 4 ஆயிரம் கோடியாகும். இந்த மாட்டு வண்டிகளை நம்பி 2 கோடி பேர் வாழ்கிறார்கள். இந்த வண்டிகள் மூலம் ஓர் ஆண்டில் 25 ஆயிரம் மெட்ரிக் டன் கிலோ மீட்டர் பாரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வதெல்லாம் இந்த நாட்டின் பொருளாதாரத்திலும், முக்கியத் தொழிலான விவசாயத்திலும், மக்களின் வாழ்விலும் கால்நடைகள் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். மேலும், கால்நடை வளர்ப்பு மிகவும் இலாபகரமானது என்பதையும் அறியலாம்.

இத்தகைய சிறப்பு மிக்க, நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கக்கூடிய கால்நடை வளர்ப்புத் தொழிலில் பல பிரச்சினைகள் உள்ளன. பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை அறிந்து அவற்றிற்குத்தகுந்தபரிகாரம் காண்பதால் நமது கால்நடைகளிலிருந்து அதிகபட்ச வருவாய் பெறலாம். இன்றைய நிலையில் கால்நடை வளர்ப்பில் முக்கியப் பிரச்சினையாக விளங்குவது தீவனப் பற்றாக்குறையே.

உதாரணத்திற்கு, தமிழ்நாட்டின் நிலையை ஆராயலாம். 2.5 கோடி கால்நடைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தக் கால்நடைகளிலிருந்து அதிகபட்ச பலனும் வருவாயும் பெற ஆண்டிற்கு 100 மில்லியன் டன் தரமான தீவனம் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், தற்சமயம் தமிழ்நாட்டில் 30 மில்லியன் டன் தீவனம் தான் கிடைக்கிறது. பெரும்பாலும் தரக் குறைவான வைக்கோல் மற்றும் தட்டு போன்ற தீவனமே அதிகமாக உள்ளது.

நமது கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனம், அளவிலும் தரத்திலும் மிகவும் குறைவாக உள்ளது. நமது நாட்டில் கால்நடை வளர்ப்பில் இதுவே ஒரு பெரிய பிரச்சினையாகும். தேசிய வேளாண்மைக் குழுவின் அளவுகோல் மற்றும் பரிந்துரையின்படி நமது நாட்டில் வேளாண்மைக்குப் பயன்படும் நிலத்தில் 7.34 சதவிகிதம் நிலப் பரப்பு கால்நடைத் தீவனத்திற்கு என்று ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், நடைமுறையில் அதில் பாதி பரப்பளவில் கூட கால்நடைத் தீவனம் சாகுபடி செய்யப்படுவதில்லை. நமது அரசும், விவசாயிகளும், சம்பந்தப்பட்ட துறைகளும் போதுமான அளவு தரமான கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்வதற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து நடைமுறை சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது இன்றைய நிலையில் அவசரமும் அவசியமுமான செயலாகும்.

கால்நடைத் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டமிடுகையில் இரண்டு விஷயங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்று மாறுபட்ட, மேம்படுத்தப்பட்ட அதிக உற்பத்தித் திறனுள்ள



கால்நடைகளுக்கு ஏற்ப புரதச் சத்து மிக்க தரமான பசுந் தீவனம் அதிகம் சாகுபடி செய்ய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நமது கால்நடைகளின் உற்பத்தித் திறன் எல்லா வகையிலும் குறைவாகவே இருந்தது. பால் உற்பத்தியைக் காட்டிலும் உழவுத் தொழில் பணிகளை மேற்கொள்ளவும், நில வளத்திற்கு வேண்டிய எருவிற்காகவும் தான் முன்பு மாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நமது கறவை மாடுகள் தினமும் சராசரியாக ஒன்றிலிருந்து ஒன்றரை லிட்டர் பால் மரபியல் திறன் (Genetical capacity) கொண்டதாக இருந்தது. ஆனால், இன்று ஒரு நாளைக்கு 10 லிட்டருக்கும் கூடுதலான பால் வழங்கும் கறவை மாடுகளை நாம் காண்கிறோம்.

மாராட்டிய மாநிலம் புனாவிற்கு அருகில் உருளிகாஞ்சலில் உள்ள (Baif) (பெய்ப்) நிறுவன பால் பண்ணையில் ஒரு ஹோல்ஸ்டன் பிரிஷியன் ஒரு நாளில் 62.5 லிட்டர் பால் வழங்கியது. இதுவே நமது நாட்டில் பால் உற்பத்தியில் முதல் பரிசு பெற்ற பசுவாகும்.

இந்த அளவிற்கு நமது கால்நடைகளின் உற்பத்தித் திறன் நாளுக்கு நாள் உயர்ந்து வரும் நிலையில் அதற்கு ஏற்றாற்போல் புரதச் சத்து மற்றும் வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த பசுந் தீவனத்தை அதிக அளவில் சாகுபடி செய்து நமது கால்நடைகளுக்கு வழங்குவது அவசியமாகும்.

பருவ மழை பெய்வது அடிக்கடி தவறி வறட்சி நிலை அதிகமாக நீடிப்பது, நாளுக்கு நாள் தரிசு நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதும், கால்நடைகள் தீவன உற்பத்திக்குப் பெரிய பிரச்சியையாக உள்ளது. இந்த யதார்த்த நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் கால்நடைத் தீவன உற்பத்திக்குத் திட்டமிட வேண்டும்.

வழக்கமாக இதுவரை நாம் சாகுபடி செய்து வரும் கிளியாபுல், கோ.1, எருமைப்புல், குதிரை மசால் போன்ற தீவனப் பயிர்களைச் சாகுபடி செய்வதிலும் இன்றைய வறட்சி நிலையாலும் போதுமான நீர்ப்பாசன வசதியில்லாமையாலும் சிரமமாக உள்ளது.



இன்றைய நிலையில் நீண்ட கால வறட்சியைத் தாக்குப்பிடிக்க கூடியதும், ஒரு முறை நட்டு வளர்த்து விட்டால் பல ஆண்டுகள் வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் தழைத்து நீண்ட காலம் பலன் கொடுக்கக் கூடியதும், குறைந்த பட்சத் தண்ணீர் மற்றும் மழையைக் கொண்டு வளரக் கூடியதும், விவசாயத்திற்குப் பயன்படாத வளமற்ற நிலத்திலும் வளரக் கூடியதும் அதே சமயம் கால்நடைகளுக்குத்தீவனம் வழங்கக்கூடியது மாகிய மரங்களைச் சாகுபடி செய்வதே சரியான அணுகுமுறையாகும்.

இந்தக் குறிக்கோளுடன் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சுபாபுல் என்ற தீவன மரம் நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று இந்த மரம் பரவலாகச் சாகுபடி செய்யப்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் இந்த சுபாபுல் தேவையான அளவிற்கும் சாத்தியமான அளவிற்கும் சாகுபடி செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை. இன்னும் அதிக அளவில் சாகுபடி செய்து நமது கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

கிளிரிசிடியா என்ற மரத்தின் இலைகளையும் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தலாம் என்று சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதன் இலைகளில் 27 சதவிகிதம் புரதமும், 2 சதவிகிதம் கால்சியமும், மற்றும் வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தும் மிகுந்துள்ளது. இதனைக் கறவை மாடுகளுக்குத் தீவனமாகப் போடுவதால் பால் உற்பத்தி கணிசமாகக் கூடும். பருத்திக் கொட்டை, புண்ணாக்கு, தவிடு, கலப்புத் தீவனங்கள் செலவு குறைகிறது. ஒட்டுமொத்தமாகப் பால் உற்பத்தித் தொழிலில் இலாபம் கணிசமாகக் கூடுகிறது.

இந்த கிளிரிசிடியா மரம் நமது விவசாயிகளுக்குப் புதியதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே பசுந்தாள் உரத்திற்கென்று, நில வளத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மரம். நீண்ட வறட்சியைத் தாக்குப் பிடித்து உயிர் வாழக் கூடியது இந்த மரம்.

ஒரு முறை நட்டு வளர்த்து விட்டால் இதன் கிளைகளை வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் தழைத்து நீண்ட காலம் பலன் கொடுத்துக் கொண்டே இருக்கும். இதனைச் சாகுபடி செய்வதோ மிகவும் சுலபம். இதன் கிளைகளைப் பதியமாக நட்டு மரமாக்கலாம். விதையை நட்டும் வளர்க்கலாம்.

வேறு எந்த விவசாயப் பயிரோ, தீவனப் பயிரோ சாகுபடி செய்யப் பயன்படாத களர் நிலங்களிலும், வளமற்ற நிலங்களிலும் கிளிரிசிடியா வளரக் கூடியது. இதனையெல்லாம் கருத்தில் கொண்டு கால்நடைகளின் தீவனத்திற்குக் கிளிரிசிடியா மரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இதனை அதிக அளவில் சாகுபடி செய்யவும், தீவனமாகக் கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் இந்த கிளிரிசிடியாவைத் தீவன மரமாக அங்கீரித்து இதனை விவசாயிகள் மத்தியில் பிரபலபடுத்தும்படி துறையில் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார். இவ் விஷயத்தில் தமிழ்நாடு இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது.

இன்னமும் இது போன்று தீவனமாகப் பயன்படக்கூடிய இலைகளை வழங்கக் கூடிய பல மரங்களையும் கண்டுபிடித்துப் பயன்படுத்தலாம். இந்தப் புதிய அணுகுமுறையே அதாவது தீவன மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இன்றைய நிலையில் கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்குச் சிறந்த வழியாகும்.

# நூல் நயம்

### செந்தமிழ் இன்பம்

**ஆசிரியர்:** கவிஞர் பெ. வரதராசன்
**வெளியீடு:**
தேன்மொழிப் பதிப்பகம்
2-83 A கொழுந்தம்பட்டு அஞ்சல்,
சம்புவராயர் மாவட்டம் 606 706.

பக்கம்:88 விலை:ரூ.10/-

மரபுக் கவிதை மலர்களால் உருவாக்கப்பட்டுள்ள இலக்கிய மாலை இந்நூல். இதில் இடம் பெற்றுள்ள இருபது கவிதைகளும் இனிமையின் உறைவிடமாகத் திகழ்கின்றன. செந்தமிழின் பெருமை குறித்துப் பாடப் பெற்றுள்ள கவிதைகள் நமது சித்தத்தை மகிழ்விக்கின்றன.

சிலம்பு தரும் பத்தினிகள், புகழ் பெற்றாள் மருதி ஆகிய கவிதைகளில் நயம் கொழிக்கிறது. நல்ல தமிழ் கொலுவோச்சுகிறது. மொத்தத்தில் செந்தமிழ் இன்பம் என்னும் இக்கவிதை நூல் நமது உள்ளத்திற்கு இன்பம் அளிக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

### புதிய அறம்கூற வந்தோர்

**ஆசிரியர்:** டாக்டர் மா.பா. குருசாமி
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை-20

பக்கம்:100 விலை:ரூ.10/-

வாழ்க்கை வரலாறுகள், வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் வாழ்க்கைச் சுவடுகளை நமக்குக் காட்டுவன. தன்னம்பிக்கை, விடா முயற்சி, உழைப்பு முதலான தன்மைகளோடு நாட்டுப்பற்று, தியாகம், வீரம் முதலானவற்றையும் எடுத்துக்காட்டுவன. அவை படிப்போருக்குப் படிப்பினை மட்டுமன்று, படிப்படியாக உயரவும் வழிகாட்டும். அந்த வகையில் இந்த நூலில் 14 தேசத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, திலகர், வ.உ.சி., பாரதியார் இப்படிப் பல தலைவர்கள் இந்த நூலிலே பேசப்படுகிறார்கள்.

—'பூங்கொடி'

### நாடகச்சோலை

**ஆசிரியர்:** மா. அய்யாசாமி
**வெளியிட்டோர்:**
மங்கை இல்லம்
75, என்.ஜி.ஓ. காலனி
திருவள்ளூர்-602 001.
செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்

பக்கம்:140 விலை:ரூ.12/-

இந்தியத் திருநாட்டின் பண்பாட்டையும், பெருமைகளையும் விளக்கவல்ல வீரவரலாறுகள் சிலவற்றை, சரித்திரங்களில் இருந்தும், இதிகாசப் புராணங்களில் இருந்தும் எடுத்து நாடகமாக்கியுள்ளார் ஆசிரியர். இளம் மாணவமணிகள் தெள்ளெனப் புரிந்து கொள்ளும் வகையில் ஆக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த நாடக நூல்.

### ஒரே வானம் ஒரே நிலவு

**ஆசிரியர்:** பி.வி. கிரி
**வெளியீடு:**
திருமலைப் பதிப்பகம்,
பிளாக். N-385,
அறிஞர் அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:112 விலை:ரூ.14/-

குழந்தைகளுக்காக எழுதப்பட்ட "ஒரே வானம் ஒரே நிலவு" என்னும் நூல் 12 சிறுகதைகளைக் கொண்டதாக உள்ளது. இந்நூலிற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கதையும், வெவ்வேறு நீதி போதனையை நமக்குப் போதிக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் வண்ணம் ஆசிரியர் கதைகளை எழுதியிருப்பது இந்நூலின் ஒரு தனிச் சிறப்பாகும்.

அட்டைப்படம் கண்ணைக் கவர்கிறது. ஒவ்வொரு கதைக்கும் ஒவ்வொரு படமும், கதை முடிவில் கையிலேந்திய தீபமும் அமைந்திருப்பது நூலுக்கு எழிலூட்டுகிறது. பள்ளி மாணவர்க்கேற்ற நூல்.

—தே. மணி

### 'ஆனந்த வடிவு'

**ஆசிரியர்:** சு. போகு
**வெளியீடு:**
பதிப்பாளர். துரை இராமு
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம்,
சென்னை-600 045.

பக்கம்:42 விலை:ரூ.5/-

'ஆனந்த தீர்த்தம்' என்னும் கிராமத்தில் நடைபெறும் கதைதான் ஆனந்த வடிவு.

ஆசிரியர் தனது வர்ணனைகளைக் குறைத்துக் கொண்டு, சொல்வதை நறுக்குத் தெறித்தாற்போல் சொல்லியிருந்தால் கதையின் வேகம் சற்றுக் கூடியிருக்கும். பொதுவாக, படிக்கலாம்.

- குமார்.

### இயற்கைக் கோள்களும் செயற்கைக் கோள்களும்

**ஆசிரியர்:** மனோகரன்
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.12.50/-

விண்வெளி விந்தை மிக்கது. விஞ்ஞான வளர்ச்சியின் மூலம், வியப்பான செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அத்தகைய செய்திகளைத் தொகுத்துத் தருகிறது இந்நூல்.

நட்சத்திரங்கள், சூரியன், கோள்கள், பூமி, சந்திரன் ஆகியவை குறித்தும், செயற்கைக் கோள்கள் குறித்தும் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்க்குப் பயனுள்ள நூல்.

### அழிவுற்ற வாழ்வு

**ஆசிரியர்:** ஜெ.சி. குமரப்பா
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை.

பக்கம்:150 விலை:ரூ.16/-

கதர், கிராமத் தொழில்களின் ஆக்கத்திற்கும் மேம்பாட்டிற்கும் தொண்டாற்றிய இந்நூலாசிரியரின் இந்த நூலுக்கு அண்ணல் காந்தியடிகள் போற்றத்தக்க வகையில் முன்னுரை வழங்கியுள்ளார்.

டாக்டர் குமரப்பா அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் காந்திய இலக்கியச் சங்கத்தினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

இந்நூல் இரண்டு பாகமாக உள்ளது. முதல் பாகம் தனிமனித வாழ்க்கையையும், இரண்டாம் பாகம் மக்களின் கூட்டு வாழ்க்கையையும் ஆராய்கிறது.

### குழந்தை வளர்ப்பு

**ஆசிரியர்:** டாக்டர் திருஞானம்
**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:415 விலை:ரூ.50/-

ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய அருமையான குழந்தை வளர்ப்பு நூல் இது. குழந்தை பிறப்பதற்கு முன்பிருந்தே செய்ய வேண்டியவை பற்றியும், பிறந்த பின் பேணி வளர்க்கும் முறை பற்றியும், சத்துணவு, வைட்டமின்கள், குழந்தைக்கு வரும் நோய்கள் பற்றியும், அவர்தம் மனோபாவங்கள் பற்றியும் தெளிவாக எழுதப்பட்ட நூல்.

—சுகுமாரன்

# சென்னைப் பல்கலைக்கழகம்
## அன்றும் இன்றும்

**பேராசிரியர் டாக்டர் சே. சாதிக்**
**துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்**

**1857**-ஆம் ஆண்டின் இந்திய மேலவைச் சட்டம் வாயிலாக பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. இந்தச் சட்டத்திற்கு அடிப்படையாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் 1854-ஆம் ஆண்டு அறிக்கை அமைந்தது. தொடக்கத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் நன்கு வளர்ந்த கல்லூரிகள் இணைக்கப்பட்ட நிலையில் தேர்வு நடத்தும் நிறுவனமாக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1923-ஆம் ஆண்டுச் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஆய்வு புரிதல், பயிற்றுவித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. மேலும் ஆய்வு நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்கும் நிலையினையும் எய்தியது.



தென்னிந்தியா முழுவதையும் தனது கல்வி ஆளுகைக்குள் கொண்டிருந்த சென்னைப் பல்கலைக்கழகம் தென்னகத்தில் புதிய பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்கியது. 1916-இல் மைசூர்ப்பல்கலைக்கழகம், 1918-இல் உசுமானியாப் பல்கலைக்கழகம், 1926-இல் ஆந்திரப் பல்கலைக் கழகம், 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1937-இல் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் (இது 1957-இல் கேரளப் பல்கலைக் கழகமாயிற்று), 1954-இல் திருவேங்கடவன் பல்கலைக்கழகம், 1966-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1971-இல் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆகியன தோன்றின. அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (1978), தமிழ்ப் பல்கலைக்கழகம், (1981), பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்கள் (1982) ஆகியன அண்மையில் தோன்றிய பல்கலைக்கழகங்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் (திருத்தச்) சட்டம் 1966-இன் படி, திருச்சி, கோவை நகர்களில் இப்பல்கலைக்கழகத்தின் பட்டமேற்படிப்பு விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை 1976-77-இல் தன்னாட்சி மையங்களாக வளர்ச்சியுற்றுப் பின் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களாக 1982-இல் வளர்ச்சியுற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தலைமையகம் சேப்பாக்கத்தில் 1879-இல் அமைந்தது. அப்போது பேரவைக் கட்டடம் ஒன்று அழகுறக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தில் பல்கலைக்கழக நூலகம், அலுவலகங்கள், ஆராய்ச்சித்துறைகள் ஆகியன இடம் பெற்று நீண்ட காலம் செயல்பட்டு வந்தன. நூறு வயதைக் கடந்த இந்தக் கட்டடம் பல்கலைக்கழகத்தின் மையப்பகுதியில் அமைந்த முதல் கட்டடம் மட்டுமன்று; பண்டைக் கட்டடக் கலையின் பெருமையினைப் பறைசாற்றும் கட்டடம் மட்டுமன்று; இந்திய நவீனக் கல்வியின் தோற்றுவாயைக் குறிக்கும் வரலாற்றுச் நினைவுச் சின்னமும் ஆகும். இக்கட்டத்தைச் புதுப்பித்து அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றை விரைவில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொன்மையான துறைகள் இந்திய வரலாற்றுத் துறையும் பொருளியில் துறையும் ஆகும். பிற துறைகள் அவ்வப்போது தோற்றுவிக்கப்பட்டு இப்போது 68 துறைகள் சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி ஆகிய நான்கு வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. பயிற்றுவித்தல், ஆய்வு புரிதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன உலகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பவும், வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைக்கு ஏற்பவும் பல்கலைக்கழகத் துறைகளும் பாடப் பிரிவுகளும் பலவாறாகப் பகுக்கப் பட்டுச் சிறந்த முறையில் உயர் கல்விப்பணி பல்கலைக்கழகத்தில் ஆற்றப்பட்டு வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் தனது தரமான கல்விப்பணியினைப் பொதுமக்கள் நலன் கருதி மேலும் பரவலாக்கியுள்ளது. அஞ்சல்வழிக் கல்வி, பணிநோக்குடைய சார்புத் தொழிற்கல்வி ஆகியன இவ்வகையின. 1981-இல் தொடங்கப்பெற்ற அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம் 1981-82-இல் 28,000 மாணவர்களைக் கொண்டிருந்தது. ஆண்டுக்காண்டு மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டில் 68,000 ஆடவரும், 45,000 மகளிரும் அஞ்சல் வழியாகப் பயின்று வருகின்றனர்.

சென்னைப் பல்கலைக்கழகம் 113 இணைப்புக் கல்லூரிகளையும் 7 ஏற்புக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது. ●

# பொற்காலம்





மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்

**கலைகளிலும் செல்வ நிலைகளிலும் உயர்ந்திருந்த காலத்தைப் பொறகாலம் என்பது உலக வழக்கு. அது உருவகமாக உரைக்கப்பட்ட பெயர். உண்மையிலேயே, பொன்னையே மிகுதியாகப் பயன்படுத்திய காலம் தமிழர்க்கன்றி வேறு எவர்க்கும் இருந்ததில்லை. அந்தப் 'பொற்காலத்தை'ப் பற்றிய அரிய செய்திகளை இக்கட்டுரை வழங்குகிறது.**

தமிழர் வரலாற்றுக் காலப் பகுதிகளுள், பழங்கற்காலம், புதுக்கற்காலம் என்னும் இரண்டும் அவ்வக் காலத்தோடு முடிந்து போனவையாகும். பழங்கற்காலக் கருவிகள் புதுக்கற் காலத்திலும், புதுக்கற்காலக் கருவிகள் பெரும்பான்மையாகப் பொற்காலத்திலும் வழங்கியிரா. ஆயின், பொற்காலம் முதலிய பிற்காலக் கருவிகள் உலகுள்ள காலமெல்லாம் வழங்கும்.

பொற்காலம் செம்புக் காலம் உறைக்காலம் இரும்புக் காலம் எனப் பிரித்ததெல்லாம், பெரும்பாலும் அவற்றின் பயன்பாட்டுத் தொடக்கம் பற்றியேயன்றி முடிவு பற்றியன்று. ஆயினும், முடிவு குறிக்கப்பட்டிருப்பது, அவ்வக்காலத்து மாழை பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்ட காலத்தின் முடிவைக் குறித்ததற்கே என அறிக.

பொன் அணிகலத்திற்கும், செம்பும் உறையும் (வெண்கலமும்), குடவமும் (பித்தளையும்), நீர்க்கலத்திற்கும், இரும்பு எல்லாக் கருவிகட்கும், என்றும் பயன்படுத்தப்படும். இவற்றுள், பொன் மிகச் சிற்றளவாகவும் இரும்பு மிகப் பேரளவாகவும் இருக்கும்.

பொற்காலம் என ஒன்று தமிழகம் தவிர வேறெந்த நாட்டிற்கும் இருந்ததில்லை. பிற நாடுகளிலெல்லாம் பொற்காலம் என்பது, அணியியற் பொருளில், ஒழுக்கத்திலும் செல்வத்திலும் கல்வியிலும் தலைசிறந்த காலத்தைக் (Golden Age) குறிக்குமேயன்றி, செஞ்சொற்பொருளில் பொற்கருவிகளே வழங்கிய காலமொன்றைக் குறிக்காது. தமிழ்நாட்டிலுள்ள பல்வகைத் தனிச் சிறப்புகளுள் பொற்காலமும் ஒன்றாகும். பொலிவுற்றது பொன்னெனப்பட்டது. பொல்-பொலி-பொலிவு. பொல்-பொற்பு. பொல்லுதல்-அழகாதல், பொலிதல். பொற்ற-அழகிய, சிறந்த, பொன்னாலான, பொல்-பொன், பொல்- பொலம்-பொலன்.

குமரிநாட்டிற் பொற்காலமிருந்தமைக்குச் சான்றுகளாவன:

(1) பொன்னின் பெயர் மாழைப்பொதுப் பெயரானமை.

தமிழரால் முதன் முதற் கண்டுபிடிக்கப்பட்ட மாழை (Metal) பொன்னாதலால், அதன் பெயரே பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிறவற்றிற்கும் பொதுப்பெயராயிற்று.

எடுத்துக்காட்டு: செம்பொன்-செம்பு. வெண்பொன்-வெள்ளி.

கரும்பொன்-இரும்பு.

'தூண்டிற்பொன் மீன்விழுங்கியற்று'. என்னுங் குறளடியில் (931), பொன் என்னுஞ் சொல் அடையின்றியும் இரும்பைக் குறித்தது. நாக(இய) மணல் பொன்வித்து எனப்படும்.

(2) கடைக்கழகக் காலத்திலும் பொன் மிகுதியாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன் மிகுதியாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன்னாயிருந்தமையால், காசு பொன் என்றும், பணமுடிப்பு பொற்கிழி என்றும், பணத்தண்டம் பொன் தண்டம் என்றும், சொல்லப்பட்டன. அரசர் தம்மைப் பாடிய புலவர்க்கு இலக்கக்கணக்கிற் பொற்காசை வாரி வழங்கினர். கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகால் வளவனைப் பாடிப் பதினாறிலக்கம் பொன் பெற்றார். காப்பியாற்றுக் காப்பியனார் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைப்பாடி, நாற்பதிலக்கம் பொன்னும் அவன் ஆண்டதிற் பாகமும் பெற்றார். காக்கைபாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடி, அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பெற்றார். கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடி ஓரிலக்கம் பொற்காசும் ஒரு நாடும் பெற்றார். அரிசில்கிழார் தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறையைப் பாடி, தொண்ணிலக்கம் (ஒன்பது நூறாயிரம்) பொற்காசும் அரியணைக் கீடாக அமைச்சுரிமையும் பெற்றார். பெருங்குன்றூர்க்கிழார் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடி, முப்பத்தீராயிரம் பொற்காசும் பல்வகைப் பரிசிலும் பெற்றார்.

மாதவி போல் தன் ஆடல்பாடலை அரங்கேற்றிய நாடகக் கணிகைய ரெல்லாரும், ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பெற்றனர். அரசரை



யடுத்துப் பாடிய பாணரெல்லாரும் பொற்றாமரையும், பாடினியரெல்லாரும் பொன்னரிமாலையும், பரிசாகப் பெற்றனர்.

பொன் கிடைக்கும் வகைகள், தூள் (Dust), மணல் (Grain), தகணை (Nugget), நரம்பு (Lode or Vein), கலப்பு (Mixture) என ஐந்து.

1850-இல் ஆத்திரேலியப் பொன் கண்டு பிடிக்கப்பட்டபின், பொற்பித்தர் பெருந்திரளாகப் போய் அங்குச் சரிந்தனர். பலவிடத்திற் பெருந் தகணைகள் நிலமட்டத்திற்கு ஒரு சில விரலங் கட்குக் (Inches) கீழேயே கண்டெடுக்கப்பட்டன. 'அரம்ப மலை மணல்' தகணை ('Sierra Sands' nugget)1,117 விரனையும் (oz), 'ஆத்தம் பெருமாட்டி' (Lady Hotham) 1,177 விரனையும், 'நல்வரவு அயலார்' தகணை (Welcome Stranger Nugget), 2,000 விரனைக்கு மேலும், 'ஆலதர்மன் தகணை' (Holtermann Nugget) 200 துலத்திற்கு (lb.) மேலும் எடை நின்றன.

குமரிக்கண்டம் ஆத்திரேலியாவோடும் தென் ஆப்பிரிக்காவோடும் இணைந்திருந்ததனால், அந் நடுவிடத்திலும் பொற்றகணைகள் எளிதாய்க் கிடைத்திருத்தல் வேண்டும்.

முழுகிப் போன குமரிக் கண்டத்தைச் சேர்ந்த தமிழ் நிலம் முழுவதும் பழம் பாண்டி நாடாகும். சோழ நாட்டின் வடபகுதி தொண்டை மண்டலம் என்று பிரிந்தது போன்றே, சேரநாட்டின் வடபகுதியும் கொங்கு மண்டலம் எனப் பிரிந்தது. அக்கொங்கும் பின்னர்க் குடகொங்கு குணகொங்கு என இருபாற்பட்டது. கொங்கு நாட்டிலும் சோழ நாட்டிலும் ஓடும் பேராறு காவேரி. அக்காவேரி பொன் கலந்த மணலைக் கொழித்த தனாற் பொன்னியெனப்பட்டது.

சோழ நாட்டில் மிகுதியாகப் பொன் கிடைத்த தனால், முதற் பராந்தகன், இரண்டாங் குலோத் துங்கன் முதலிய சோழவேந்தர் பலர் தில்லைச் சிற்றம்பலம் பொன் வேய்ந்தனர். இரண்டாம் இராசராசன், சிற்றம்பலம் மட்டுமின்றிப் பேரம் பலம் மாடமாளிகை கூடகோபுரம் முதலிய பலவற்றையும், பொன்னா லணிவித்துத் தில்லையைப் பொன்வண்ண மாக்கினான்.

'சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும்-சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமுங் கோபுரமும்
சூளிகையு மத்தெருவுந் தோரணமும்-ஆளுடையான்
கோயில் திருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயில் திருச்சுற்று மாளிகையும்-தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து
முன்னிற் கடல்களுள் சூழ்குவித்த சென்னி'

- இராசராச தேவருலா.

அரண்மனைகளில் அரசன் தங்கும் தனி மாளிகையும் பொன்னால் வேயப்பட்டிருந்தது சுந்தரச் சோழனைப் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று கல்வெட்டுக் கூறுதல் காண்க.





யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.

கொங்கு நாட்டிற் கிடைத்த பொன் கொங்குப் பொன் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது. இன்றும் சுரங்கத்திற் பொன்னெடுக்கும் குவளாலபுரம் (கோலார்) பண்டைக் கொங்குநாட்டைச் சேர்ந்ததே.

'கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரோடு நின்றோர் ஏர்மங் கலமும்'

என்னும் சிலப்பதிகார நாடுகாண் காதையடிகட்கு (132-5)

'செந்நெற் கதிரோடே அறுகையும் குவளையையும் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பாரைப் போலப் போற்றுவார் தொழப் பொன்னேர் பூட்டி நின்றோர் ஏரைப் பாடும் ஏர்மங்கலப் பாட்டுமென்க'. என்று அடியார்க்கு நல்லார் உரை வரைந்துள்ளார்.

உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி பொற்றேரை யுடையவனாயிருந்தான்.

'பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கடல் நிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ'

(புறம்.4)

என்று பரணர் பாடுதல் காண்க. பண்டைத் தமிழரசரின் தேர், குதிரை, யானைகள் பொற் படைகளால் அணிசெய்யப் பெற்றிருந்தன.

'மகிழா தீத்த இழையணி நெடுந்தேர்'

- (புறம். 123:4)

'பாடிப் பெற்ற பொன்னணி யானை'

புறம். 177:3

'வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே.'

(புறம்.116)

அரசருடைய போர் முரசும் அதுபோன்ற பிற சின்னங்களும் பொன்னால் அணி செய்யப் பட்டிருந்தன.

'பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுறுகெழு முரசம்'

(புறம்.50).

கி.மு. 11-ஆம் நூற்றாண்டிற்கும் 10-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் யூதேயா நாட்டை யாண்ட சாலோமோன் அரசன் (1015-975), ஒப்பீர் (Ophir) என்னும் இந்தியத் துறைமுகத் தினின்று வருவித்த பொருள்களுள் பொன்னும் ஒன்று. அத்துறைநகர், வேம்பாய் எனப்படும் பம்பாய் மாநகர்க்கு வடக்கே 37 கல் தொலைவிலிருந்த, உப்பரா அல்லது உப்பரகா என்று ஆராய்ச்சியாளராற் கருதப்படுகின்றது. கால்டுவெலார் அது ஒருகால் பாண்டி நாட்டின் கீழ்க் கரையிலுள்ள உவரியாயிருக்கலாமென்று கருதினர். எதுவாயினும், ஒப்பீர் ஓர் இந்தியத் துறைநகர் என்பது உறுதி. சாலோமோன் காலத்திற் சேரநாடு குச்சரம் (குசராத்து) வரை பரவியிருந்தது.

தொன்று தொட்டுப் பொன் இந்தியாவினின்று மேனாடுகட்கு ஏராளமாக ஏற்றுமதியாகி வந்த தனால், சேக்கசுப்பியர் (Shakspeare) தம் 'பன்னிரெண்டாம் இரவு' (Twelth Night) என்னும் நாடகத்தில், பொன்னை 'இந்திய மாழை' (Metal of India)என்றார். (2:5).

(4) குமரிநாட்டில் பொன் கிடைத்தமை பற்றிய நெட்டிமையார் கூற்று:

'........................................தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'.

(புறம்.9).

இதன் பழையவுரை: 'தம்முடைய கோவாகிய சிவந்த நீர்மையையுடைய பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க் கடற்றெய்வத்திற் கெடுத்த விழாவினையுடைய நெடியோனா லுளதாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி யென்னு மாற்றின் மணலினும் பல காலம்.'

குறிஞ்சியிலும் முல்லையிலும் பெரும்பாலும் பாலும் சூட்டிறைச்சியுமே உண்டதனால், அவ் வுணவிற்கு உவர்ப்புப் பொருள் தேவையில்லா திருந்தது. முல்லை நிலத்தில், தினை வரகு சாமை முதலியவற்றின் அரிசியைப் பாலிலுஞ் சமைத்திருக்கலாம். மருத நிலத்திற்கு வந்தபின்பே சிறந்த முறையில் சமையல் தொடங்கியதால், பொங்கல் புழுங்கல் அவியல் சுண்டல் துவட்டல் புரட்டல் காய்ச்சல் பொரியல் முதலிய வினைகளை நீரிற் செய்தற்கு, உவர்ப்புச் சரக்குச் சேர்க்க வேண்டியதாயிற்று. உப்பு விளைக்கும் உவர்நீர்க் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தை அடுக்குமுன், உமணையே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். உமண் என்பது உவர்மண். அதை முதலில் விற்றவர், பின்பு நெய்தல் நிலத்து உப்பளத்தில் உப்பு விளைத்த போதும், உமணர் எனப்பட்டனர்.

'களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்'

(நாலடி. 133)

பொரியல் முதலில் ஆவின் நெய்யிலேயே செய்யப்பட்டது. அதனாலேயே, பின்னர் எள்ளி லிருந் தெடுக்கப்பட்ட நெய்ப் பொருள் எண்ணெய் (எள்நெய்) எனப் பெயர் பெற்றது. எள்ளின் நெய்யே முதற்காலத்திற் பெருவழக்காக வழங்கின தினால், பிற்காலத்தில், ஆவின் நெய் தவிர மற்றெல்லா நெய் வகைகட்கும் எண்ணெய் என்பது பொதுப் பெயராயிற்று.

சமையற்கு வேண்டிய நெருப்பு, நாள்தொறும் ஞெலிகோலால் விரைந்து கடையப்பட்டது. அது வீடுதொறும் இறவாணத்திற் செருகப்பட்டிருந்தது. குறிஞ்சி வாணரும் முல்லை வாணரும் வேட்டைக் காரரும், அதை என்றுங் கையில் வைத்திருந்தனர்.

'இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல'

(புறம். 315:4).

'கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து'

(புறம்.247:2).

'புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியுங்
கல்லா விடையன் போல'

(புறம். 331:4).

'செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதன னெழுவேற் கைகவித் திரீஇ

## மதுவிலக்குப் பிரச்சாரம்



★ மதுவிலக்குத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றுவதும் - உரிய முறையில் பிரச்சாரம் செய்வதும் தேவையாகும். மதுவினால் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கவும், சம்பந்தப்பட்ட மக்களுடன் தொடர்பு கொண்டு நல்லமுறையில் அறிவுரைகளைக் கூறவும், மதுவிலக்குச் சட்ட அமலைத் திறம்பட நடத்தவும் ஏற்படுத்தப்படவிருக்கும் 'கண்காணிப்புப்' படையில் சேர்ந்து தொண்டாற்ற முன்வரவேண்டுமென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொள்கிறேன்'.

இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்'

(புறம். 150:7-13)

இவை பிற்காலத்துச் செய்யுளாயினும், முற் காலத்து நிலைமையையுங் குறிக்கும்.

நாகரிகத்தின் முளை குறிஞ்சி நிலத்திலேயே தோன்றிய தேனும், அது முழுவளர்ச்சி யடைந்தது மருதநிலத்து நகர்ப்பாங்கே யென்றும், குறிஞ்சி நாகரிகமும் முல்லை நாகரிகமும் மருத நாகரிகத் தின் கீழ்நிலைகளே யென்றும், நெய்தல் நிலை வணிக வளர்ச்சிக்கும் செல்வப் பெருக்கிற்குமே ஏதுவென்றும், பாலைநிலை நாகரிக வளர்ச்சி யின்றிப் பண்பாட்டிழிபையே காட்டுமென்றும், அறிதல் வேண்டும்.

மருதநிலக் குழுகாய வாழ்வில், ஒருமனை மணமும் இறப்பு வரை பிரியா இல்வாழ்வும் பெரும்பான்மையாயின. ஒருவனால் மணஞ் செய்யப் பட்டமைக்கு அறிகுறியாகப் பெண்ணின் கழுத்திற் பொற்றாலி கட்டப்பட்டது. பன்மனை மணமும் தீர்வைமுறையும் தொடர்ந்தனவேனும், தொல்லை மிகுதியும் பண்பாட்டிழிபும் பற்றி அவை தாழ்வாகக் கருதப்பட்டன. ஊர்த்தலை வனும் அவனுக்கு மேற்பட்ட அரசரும், இன்பச் சிறப்பு நோக்கிப் பன்மனை மனத்தையே கடைப் பிடித்தாரேனும், அதன் இழிவை அவரது தெய்வத் தன்மையான அதிகாரம் முற்றிலும் மறைத்து விட்டது. மருத நிலத்து நிலையான குடியிருப்பும் பயிர்த்தொழிலிற் குடும்பக் கூட்டுழைப்பும், கணவன் மனைவியர் காதலை வளர்த்து மணவாழ்க்கையை நீடிக்கச் செய்தன. உயிருக் கின்றியமையாத உணவுப் பொருள்கள் ஏராள மாகக் கிடைத்ததனால், வயிறாரவுண்டு இன்புற வும், உழைக்க இயலாதவர்க்குதவி அறம் வளர்க்க வும், ஏதுவாயிற்று.

பொற்காலத்தில் அசையெழுத்துத் தோன்றி யிருத்தல் வேண்டும். அசையெழுத்தாவது (Syllabary), உயிர்மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரிக்காமல் தனியெழுத்தாக எழுதுவது.

பழங் கற்காலத்தில் பத்து வரையும், புதுக் கற்காலத்தில் நூறு வரையும், பொற்காலத்தில் ஆயிரம்வரையும், குமரி மாந்தர் எண்ணத் தெரிந் திருக்கலாம். ●

## டாக்டர் அம்பேத்கர் பெயரில் விருது



டாக்டர் அம்பேத்கர் பெயரில் தேசிய விருது ஒன்றை வழங்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. சமூக நல்லிணக்கத்துக்காகச் சிறந்த சேவை புரியும் தனிநபர் அல்லது நிறுவனத்துக்கு ரூ.10 இலட்சம் கொண்ட இந்த விருது ஆண்டு தோறும் வழங்கப்படும். இந்த விருது மத்திய சமூக நலத்துறையால் ஏற் படுத்தப்படுகிறது.

டெல்லியில் நடந்த டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாக் குழுவின் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மத்திய சமூக நல அமைச்சர் திரு. சீத்தாராம் கேசரி, மேற்கொண்ட விருதை அமைக்கும் முயற்சிகள் நடந்து வரு வதாகக் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர் நினைவைப் போற்றும் வகையில், ஏழு பல் கலைக் கழகங்களில் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்படும். டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூல்களையும், கட்டுரை களையும் இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பது, உயர்நிலை ஆய்வுப் படிப்புகளை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களும் மேற்கொள் ளப்படும்.

## தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பைக் குறைத்திட...

பிறந்த சில மாதங்களிலேயே இறந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தற் போது ஆயிரத்துக்கு 67 என்ற விகிதத்தில் உள்ளது. இதை இன் னும் பத்து ஆண்டுக்காலத்தில் 50-க்கும் கீழாகக் குறைக்க முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நோய்த்தடுப்பு திட்டங்கள், குழந் தைகள் குறைந்த வயதில் இறப் பதை ஓரளவு தடுத்து நிறுத்தி உள்ளன. இந்த முயற்சிகளின் காரணமாக சுமார் ஒரு கோடிக் கும் அதிகமான குழந்தைகள் உயிர் பிழைத்துள்ளன.

தமிழ்நாட்டில் தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் காரணமாக குழந்தைகள் இறப்பு விகித இலக் கினைத் தமிழகம் மிஞ்சிவிடும் எனத் தமிழகச் சுகாதாரத்துறைச் செயலர் திரு. கே.இன்பசாகரன், அண்மையில் இந்தியக் குழந்தை மருத்துவச் சங்கம் ஏற்பாடு செய் திருந்த ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது தெரிவித்தார்.





# இறந்தோரை அடையாளம் காணும் ஒரு புதிய முறை

தடய அறிவியல் துறைப் பேராசிரியர் டாக்டர் ப. சந்திரசேகரன், இறந்தோரை அடையாளம் காணுமுகமாக ஒரு புதிய முறையை வகுத்துள்ளார். முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு எழுந்த சில விசித்திரமான சூழ்நிலையில், இந்தப் புதிய முறையை வகுப்பதற்கான தேவை எழுந்தது.

குற்றப் புலனாய்வு முறையில் இறந்தோரை அடையாளம் காணுதல் அடிப்படை தேவை மட்டுமல்ல; ஒரு முக்கியமான வழிமுறையும் கூட ஆகும். எல்லாவகையான அடையாள முறைகளும் இறப்பிற்கு முன் உள்ள ஆவண மற்றும் பிற குறிப்புகளை இறப்பிற்குப் பின் கிடைக்கும் மீதங்களுடன் ஒப்பிட்டு வழி காணும் வகையிலேயே அமைந்துள்ளன.

முக அடையாளங்கள் முழுமையாக இருந்தால், உற்றார் உறவினர் மற்றும் நண்பரைக் காணவிட்டு அடையாளம் காணலாம். பார்வை மூலம் அடையாளம் காணுதலும் ஒரு அறிவியல் வழிமுறையே ஆகும். உறவினரது மனதில் பதிந்துள்ள முக அடையாளங்களுடன், மரணமுற்றோரின் முக அடையாளங்களை முழுமையாக மனதில் ஒப்பிட்டு அடையாளம் காணப்படுகிறது. இம்முறையில் அடையாளம் காணுவோரின் மூளை ஒரு கணிப்பொறி போல இயங்குகிறது. இந்த முறையிலும் ஒரு சிக்கல் உள்ளது. அடையாளம் காணுவோர் இறந்தவரை முன்னமே கண்டிராது வெறும் நிழற்படத்தை மட்டும் கண்டிருந்தால் இம்முறை சிரமமாக ஆகிவிடுகிறது.

சில வழக்குகளில் இறந்தவர் பல பெயர்களில் உளவிட நேர்ந்திருக்கும்; திரு. ராஜீவ் காந்தி வழக்கில் சம்பந்தப்பட்டவர் போல; இவர்களை அடையாளம் காண நெருங்கிய உறவினர் இல்லாது போகலாம். நமக்குக் கிடைத்தவரை வெறும் சில நிழற்படங்களே ஆகலாம். அவையும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். இவ்வகையாக நிழற்படங்களும் மட்டும் கண்டிருந்தால் இம்முறை சிரமமாக ஆகிவிடுகிறது.

சில வழக்குகளில் இறந்தவர் பல பெயர்களில் உளவிட நேர்ந்திருக்கும்; திரு. ராஜீவ் காந்தி வழக்கில் சம்பந்தப்பட்டவர் போல; இவர்களை அடையாளம் காண நெருங்கிய உறவினர் இல்லாது போகலாம். நமக்குக் கிடைத்தவரை வெறும் சில நிழற்படங்களே ஆகலாம்.

அவையும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். இவ்வகையாக நிழற்படங்களும் குறிப்பிட்ட நபரைத் தனியாக ஒரு குறிப்பிட்ட கோணத்திலோ அல்லது ஒரு கும்பலிலோ இருக்கும்படி எடுத்திருக்கப்பட்டிருக்கலாம். இவ்வகைச் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நபரைப் புகைப்படத்தில் மட்டும் கண்டிருப்பவர் இறந்தவரது உடலை அடையாளம் கண்டிடச் சிரமப்பட நேரிடும்.

பேராசிரியர் டாக்டர் சந்திரசேகரனின் புதிய அடையாளம் காணும் முறை இவ்வகை சந்தர்ப்பங்களில் மிகவும் உதவிகரமானதாக இருக்கும். இம்முறையில் இறந்தவரது தலை மாதிரியை இறந்த உடலிலிருந்து வார்ப்படம் போல தயாரித்து, அன்னாரது புகைப்படத்துடன் மின்னனு ஒப்பிடு கருவியில் ஒப்பிட வழி வகுக்கப்பட்டுள்ளது. இம்முறையில் தலையின் மாதிரியை, புகைப்படத்தில் உள்ள கோணத்திலேயே நிறுத்தி ஒப்பிடுவதற்கு வகை உள்ளது. இரண்டு மின்னனுப் புகைப்படக் கருவிகள், புகைப்படக் கலவைமானி மற்றும் நுண்கருவி முதலியவை உபயோகிக்கப்படுகின்றன.

திரு. சந்திரசேகரனின் முன்னைய கண்டுபிடிப்பான மின்னனு மண்டையோடு அடையாளம் காணும் இயந்திரம் இந்த முறைக்கும் உபயோகப்படுத்தலாம். இவ்வகை இயந்திரத்தை இவர் கண்டுபிடித்தபோது, இவ்வகை கருவிகளை உபயோகித்த மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. இறந்தவரது முகக் குறியீடுகள் முழுமையாக இருக்கும்பட்சத்தில் வார்ப்பட முறை மிகவும் முக்கிய வழிமுறையாகி உதவுகிறது. பாசி பூசின முறைமூலம் வார்ப்படம் எடுக்கப்படுகிறது. இவ்வார்ப்படத்தை உபயோகித்து இரண்டு பகுதிகளாகப் பிளாஸ்டர் வார்ப்படம் தயாரித்தவுடன் இந்த மாதிரி இறந்தவரது தலைபாகத்தின் அசல் நகல் போல் உதவுகிறது. இதற்கான நிலையில் இந்த வார்ப்படத்தை நிறுத்தி, இதனை முன் பின்னாகவோ, பக்கவாட்டிலோ அசைத்து, புகைப்படத்திலுள்ள அதே கோணத்தில் பல வகைப் பிம்பங்களுடன், புகைப்படத்தையும், வார்ப்படத்தையும் இணைத்துச் சரியான ஒப்பீடு முறை காணப்படுகிறது. முக குறியீடுகள் மற்றும் பிற புகைப்பட அடையாளக் குறியீடுகள் இம்முறையில் ஒப்பிடப்படுகின்றன. சாதாரண முறையிலுள்ள சிறு தவறுகள் கூட இந்த முறையில் நிகழ்வதில்லை.

தமிழ்நாடு தடய அறிவியல் பணியில் 33 ஆண்டுகளாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திரு. சந்திரசேகரனை, நாட்டிற்கு இம்முறையை அர்ப்பணிப்பதில் மிகவும் பெருமையை கொண்டுள்ளார். குறிப்பாக 35-வது அனைத்திந்தியக் காவல் பணி போட்டிகளுக்காக எல்லா மாநிலத்து புலனாய்வுப் பணியாளரும் நம் மாநிலத்தில் குழுமியுள்ளபோது இம்முறை நாட்டுப்பணியில் அர்ப்பணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.








**பா**லக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தருமபுரி மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றி வருகிறது.

ஒரு நாளைக்கு 2,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1990-91-இல் தனது 20-வது அரவைப்பருவத்தில் 3.73 இலட்சம் டன் கரும்பை நல்ல முறையில் அரவை செய்துள்ளது. இவ்வாண்டு அரவை செய்த கரும்புக்கு ரூ.1,267 இலட்சம் கரும்பு கிரயமாகவும் ரூ.93.61 இலட்சம் லாரி வாடகை மானியமாகவும், ரூ.4.05 இலட்சம் விதை மற்றும் கரும்பு வளர்ச்சிக்கான மானியமாகவும், கொடுக்கப்பட்டுள்ளது. சென்ற அரவைப் பருவத்தில் ஒரு டன் கரும்புக்குக் கரும்பு விலையாக ரூ.352.60 கொடுக்கப்பட்டது.

இவ்வாலை 1987-88-ஆம் ஆண்டிற்கு உற்பத்தித் திறனுக்காக மாநில அளவிலான முதல் பரிசு பெற்றது. 1988-89-ஆம் அரவைப் பருவத்தில் உற்பத்தித் திறனில் சிறப்பாகச் செயல்பட்டிருந்தமைக்காக அகில இந்திய அளவில் தேசிய உற்பத்திக் குழுவின் பாராட்டையும், விருதையும் பெற்றுள்ளது.

இவ்வாலை மூலம் ஒவ்வொரு அரவைப் பருவத்திலும் சுமார் 8,500 கரும்பு விவசாயிகள் சுமார் ரூ.1,225 இலட்சம் ரூபாயும், நேரடி வேலைவாய்ப்பின் மூலம் 950 தொழிலாளர்கள் 200 இலட்சம் ரூபாயும், மறைமுகமாகச் சுமார் 2,100 விவசாயத் தொழிலாளர்கள், சுமார் 105 இலட்சம் ரூபாயும், சுமார் 860 பேர் வாகனப் போக்குவரத்து மூலம் சுமார் 24 இலட்சம் ரூபாயும் பெற்றுப் பயனடைகிறார்கள் என்று கூறிக் கொள்வதில் இவ்வாலையின் நிர்வாகம் பெருமைப்படுகிறது.

மேலும், இவ்வாலையில் தற்போது 17,698 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்கள் 135.55 இலட்சம் ரூபாயும், மாநில அரசு 40.55 இலட்சம் ரூபாயும், கூட்டுறவு நிறுவனங்கள் 0.06 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் ரூ.176.16 இலட்சம் பங்கு மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. எனவே, உறுப்பினர்கள் நீர் ஆதாரத்தைப் பெருக்கிக் கொள்ள மத்திய அரசு அனுமதித்துள்ள சர்க்கரை வளர்ச்சி நிதிக் கடனில் இதுவரையில் ரூ.148.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஜூன் மாதம் முடிய 1,830 உறுப்பினர்களுக்கு ரூ.127.55 இலட்சம் புதிய கிணறு தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்திக் கொள்ளவும், ஆயில் என்ஜின் மற்றும் மின் மோட்டார் பொருத்தவும் 8 சதவிகிதம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஆண்டில் ரூ.20.94 இலட்சம் நீர்ப்பாசனத் திட்டத்திற்கென உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு வகைகளில் ரூ.300 இலட்சம் கடனுதவி வழங்க முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

தரமான நாற்றங்காலை ஊக்குவிக்கவும், அதிக மகசூல் தரக்கூடியதும் நல்ல சர்க்கரைக் கட்டுமானம் தரக்கூடியதுமான புதிய ரகக் கரும்பு பயிர் செய்யவும், தக்க மானியம் வழங்குதல், மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகள், களைக் கொல்லி மற்றும் வைரஸ் மருந்துகள் வழங்குதல், வறட்சிக் காலத்தில் பொட்டாஷ் உரம் வழங்குதல், ஊடு பயிர் செய்வதற்காக மானிய விலையில் விதைகள் வழங்குதல் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்யவும் அதிகமான மகசூல் எடுத்த விவசாயிகளுக்குப் பரிசுகள், கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல், கரும்பு பரிசோதனை வயல்களுக்கு மானியம் வழங்குதல், லாரி வாடகை மானியம் போன்ற கரும்பு வளர்ச்சிப் பணிக்

காக ரூ.45 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிணற்றில் தண்ணீர் குறைவாக இருக்கும்போது சொட்டுநீர்ப் பாசன முறையில் கரும்பை நன்கு பராமரிக்க இண்டாக் கோரமண்டல், சென்னை என்ற நிறுவனம் மூலம் சோமனிஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கே.நாராயண் என்பவரது நிலத்தில் மாதிரி வயல் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சொட்டு நீர்ப் பாசனத்திற்காக ஏற்படும் செலவுகளில் 50 சதவிகிதத்தை ஆலையே ஏற்கிறது. மீதியுள்ள 50 சதவிகிதம் தொகையை 4 ஆண்டுகளில் சம தவணைகளில் 12.5 சதவிகித வட்டி விகிதத்தில் கரும்பு கிரயத்தில் பிடித்தம் செய்ய வகை செய்து முன்னோடி விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டு அரவைக்கு இதுவரை 9,532 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர் மழையின் காரணமாக இன்னும் கரும்பு நடவு செய்யப்பட்டு வருகிறது. சுமார் 1,200 ஏக்கர் கரும்புப் பதிவு ஆலையுடன் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட 9,532 ஏக்கர் கரும்பில் 5,110 ஏக்கர் கரும்பிற்குக் கரும்பு மகசூல் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடவு கரும்புக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,450 மறுதாம்புக் கரும்புக்கு ரூ.3,350 மத்திய மற்றும் வர்த்தக வங்கிகளின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வரும் அரவைப்பருவத்தில் சுமார் 4 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரும்புச்சாலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7 சாலைகள் 44.45 கிலோ மீட்டர் தூரம் மற்றும் ஒரு பாலம் ஆகியவை ரூ.166.2 இலட்சம் செலவில் ஆலை மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் நலன்களுக்காகச் சிற்றுண்டிச்சாலை, தொழிலாளர் ஓய்வு விடுதி, உணவு அறை, மருந்தகம், கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கம், ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் நலன் காப்பதுடன் ஒரு நல்லுணர்வு ஏற்படவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது. ஆலையரால் மெட்ரிகுலேஷன் பள்ளி ஒன்று நடத்தப்படுகிறது. இதில் தொழிலாளர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் அலுவலர்களின் குழந்தைகள் கல்வி பயிலுகின்றார்கள். ஆலையில் பணி புரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டுகளில் 20 சதவிகிதம் அதிகபட்ச போனஸ் வழங்கப்பட்டது.

ஆலை விவசாய உறுப்பினர் குழந்தைகள், ஆலைத் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் பல்தொழில் நுட்பக் கல்வி பயில வசதி செய்து இம்மாவட்டத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கிணங்க, அரசு இந்த ஆலையில் பல்தொழில் நுட்பப் பயிலகம் ஒன்றைச் சுயநிதி ஏற்பாட்டின்கீழ் தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, அதன்படி பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்கி 540 மாணவ மாணவியர் பயின்று வருகிறார்கள்.

இவ்வாறு, இந்தச் சர்க்கரை ஆலை தருமபுரி மாவட்ட ஏழை எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுவதில் சிறப்பிடம் பெற்று வருகின்றது.

- மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

## தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் குற்றத்திற்கு எதிராக நடவடிக்கை:

தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் குற்றத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.40.00 இலட்சம் அனுமதியளித்துள்ளார்.

சந்தன மரக் கடத்தலைத் தடுக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசின் வரவு செலவு அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. வனத்துறை அலுவலர்களுக்குப் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளை அதிகப்படுத்துவதற்கே இதில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.10 இலட்சமும், கம்பியில்லாத தந்தி வசதிக்கு ரூ.8 இலட்சமும் செலவிடப்படும். சாலை வசதியைப் பெருக்க ரூ.5 இலட்சமும், இரட்டைத் தொலைநோக்காடிகள் மற்றும் திசைகாட்டும் கருவிகளுக்கு ரூ.5 இலட்சமும், ஆயுதங்கள் வாங்க ரூ.9 இலட்சமும், வான்வழி கண்காணிப்புக்காக ரூ.3 இலட்சமும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

**முதலில் உழையுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம். முதலில் உழையுங்கள். பிறகு ஓய்வெடுத்துக் கொள்ளலாம். முதலில் பலவீனத்தை அகற்றுங்கள். பிறகு, துணிவைப் பெறலாம். முயற்சி, உழைப்பு, துணிவு ஆகிய மூன்றினால் ஆரம்பக் காலத் துன்பத்தை வென்று அழகான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.**

**—ஜேம்ஸ் ஆலன்**



## 18-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1992



**18**-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1992 தொடக்க விழா 6.1.1992-ஆம் நாள், சென்னை காமராசர் சாலையிலுள்ள தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பொருட்காட்சியைத் தொடக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

செய்தி சுற்றுலாத்துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும், 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி துவக்கி வைக்கப்பட்டு, நமது கவனத்தைக் கவர்ந்தும், பொது மக்களுக்குத் தேவையான பொழுதுபோக்கினை வழங்கியும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இப்பொருட்காட்சி தமிழ்நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பொது மக்களைக் கவர்ந்து இழுக்கிற பெருமை பெற்றிருக்கிறது என்பதை நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். தற்போது அதை நேரடியாகவே பார்க்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன்.

தமிழகத்தின் தலைநகரில் இது தொடங்கப்பட்டாலும், 'அகில இந்திய' என்கிற அடைமொழியோடு அழைக்கப்பட்டு, தேசிய ஒருமைப்பாட்டின் நோக்கத்தை நிறைவு செய்கிற பெருமையையும் இப்பொருட்காட்சி பெற்றுள்ளது.

இந்திய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படும் வகையில், தற்போது நாட்டின் பல்வேறு சம்பவங்கள் நடந்து வருவதை நாம் அனைவரும் அறிவோம். ஆண்டாண்டுக் காலமாகத் தான் பிறந்த இடத்தில், தான் வளர்ந்த இடத்தில், தான் உழைத்த இடத்தில், தமிழன் உரிமையோடு, பாதுகாப்போடு வாழ முடியாத நிலைமை இன்று நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் 'சுற்றுலா' விருப்பங் கொண்டு, எந்தத் தமிழனும் பக்கத்து மாநிலத்துக்குப் போக முடியாத சிக்கல் இருக்கிறதென்ற உண்மையை, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டும்.

இந்தியா பல்வேறு மாநிலங்களின் தொகுப்பு; தேசிய ஒருமைப்பாடுதான் அந்த மாநிலங்களை நிலைத்த தேசப்பற்றால், கலாச்சாரப் பெருமைகளால், பண்பாட்டுப் பெருமிதங்களால், ஒன்றாகக் கட்டி வைத்திருக்கிறதென்று நாம் பெருமைப்பட்டோம்; இன்றும் பெருமைப்படுகிறோம். அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கின்ற முன்மாதிரி சக்தியாகத் தமிழ்நாடு இன்றும் இருந்து வருகிறதென்பதைக் காட்டத்தான், நாம் பல்வேறு

மாநிலங்களையும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கச் செய்துள்ளோம்.

அதே நேரத்தில், பல்வேறு துறைகளில் தமிழகம் கண்டுள்ள முன்னேற்றம் குறித்தும், தமிழக மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கென்று தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்தும், இந்திய மக்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் இந்தப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது. குறிப்பாக, இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படுவதால், தமிழகத்தின் கலாச்சாரப் பண்பாட்டுப் பலகணியாகவும் இந்தப் பொருட்காட்சி திகழ்கிறது.

மேலும், மனிதாபிமான வழியில் இப்பொருட்காட்சியின் மூலம், ஏறத்தாழ 20,000 நபர்களுக்குத் தற்காலிக வேலைவாய்ப்பும், 2,000-க்கும் மேற்பட்ட கலைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சி நடத்துவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. ஏழைக் கலைஞர்களுக்கு வாழ்வளிப்பதை எண்ணும்பொழுது, அது மகிழ்ச்சிகரமான உணர்வினையும் நமக்குத் தருகிறது.

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; வற்றாத வளங்கள் கொண்ட சரித்திரப் பூமி; காண்போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசஸ்தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்கலன்களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக்கலைக்கு மகுடம் சூட்டிய பெருமை இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்ற புராதன பொக்கிஷங்களாகும்.

இவைகளைப் பார்க்க வருகிற நோக்கில், தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிற வகையில், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளை அமைத்துக் கொடுக்கத்தான், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சுற்றுலாவை வளர்ப்பதும், சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைப் பெருக்குவதும் இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோள்களாக இருக்கின்றன.

தொடர் வளர்ச்சியையும், நிலையான வருமானத்தையும் உண்டுபண்ணுகிற அமைப்பாக, எந்த அரசு நிறுவனமும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டால், அரசுத் துறை நிறுவனங்கள் பலவற்றின் மீது குறை கூறுகின்ற சந்தர்ப்பம், எவருக்கும் வராமல் நாம் செய்துவிட முடியும்.

அந்த வகையில் பார்க்கிறபோது, 5 ஓட்டல்களுடனும், 2 சொகுசுப் பேருந்துகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம், இன்று 34-க்கும் மேற்பட்ட ஓட்டல்களையும், இளைஞர் விடுதிகளையும் இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது, சாதனைகளை நிகழ்த்தும் இக்கழகத்தின் வெற்றிக்குரிய சான்றாகும். அதேபோன்று, 22 சொகுசுப் பேருந்துகளையும், 5 கார்களையும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இந்த நிறுவனம் நடத்தி வருகிறது என்ற செய்தி, இவர்களுடைய உழைப்பு வளர்வதோடு, ஊக்கமும் வளருகிறது என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

பணம் படைத்தவர்கள்தான் சொகுசான ஓட்டல்களில் தங்க முடியும் என்கிற நிலையை மாற்றி, ஏழை மற்றும் நடுத்தர மக்களும் வசதியோடு தங்குகிற வகையில், ரூ.20 முதல் ரூ.600 வரை நாளொன்றுக்கு வாடகை கொண்ட அறைகளையும் வழங்குவதோடு, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 14 வகைப்பட்ட சுற்றுலாப் பயணங்களை அமைத்துக் கொடுத்து, உள்நாட்டுப் பயணிகளாலும், வெளிநாட்டுப் பயணிகளாலும் பாராட்டப்படுகிற பெருமையையும் கொண்டிருக்கிறது இந்தச் சுற்றுலாக் கழகம்!

இந்த ஆண்டு சுற்றுலா ஆண்டாக இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டிலும் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக பல்வேறு ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்து வருகின்றன. அவைகளில் சில முக்கியமானவற்றை உங்களுக்குத் தெரிவிப்பதில், நான் சுற்றுலாத் துறையின் அமைச்சராகவும் இருப்பதால், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய விவரங்களை முழுமையாகத் தெரிந்து





உழவே செல்வம் உண்டு பண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்

—நாமக்கவிஞர் வெ. இராமலிங்கனார்.

கொள்கிற வகையில், இந்த ஆண்டு ஒரு புத்தகம் அரசால் வெளியிடப்படும். பொங்கல் திருநாளை ஒட்டி மாமல்லபுரத்தில் ஒரு நாட்டிய விழா தொடர்ந்து ஒரு மாதம் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, சிதம்பரத்தில் இந்த ஆண்டு ஒரு நாட்டியாஞ்சலியும், சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை அரிமா சங்கத்துடன் கலந்து ஒரு காற்றாடித் திருவிழாவினையும் (Kite Festival) இம்மாதம் சென்னை மெரினா கடற்கரையில் நடத்தும். அடுத்து, ரிக்கி, டிக்கி, டாவி Youngster Club of India என்ற அமைப்பின் உதவியுடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் Wind Surfing Regatta என்ற நிகழ்ச்சிகளை, அகில இந்திய அளவில் அடுத்த மாதம் முட்டுக்காட்டில் நடத்த உள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக மட்டுமின்றிப் புதுமையான வகையில், காஷ்மீர் மற்றும் கேரள மக்களின் உணவு வகைகளைக் கற்றுத்தரும் வகையில், சிறப்புச் சமையல் கண்காட்சிகளும், இளைஞர்களுக்காக மலையேறும் பயிற்சி போன்றவற்றையும் அமைத்துக் கொடுத்து, சுற்றுலாத் துறையும் சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், பல்வேறு புதுமைகளைப் புகுத்தி வருகின்றன. இந்த ஆண்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படுகின்ற ஓட்டல்களில், நவம்பர் மாதம் வரை 2,87,644 பேர் தங்கிப் பயனடைந்துள்ளனர்.

இதில், 13,062 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது, நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சொகுசுப் பேருந்துகள் மூலம் இதுவரை 52,210 பேர் பயணம் செய்துள்ளனர். காலத்தின் தேவைக்கேற்ப, சுற்றுலாக் கழகம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்ற முயற்சிக்கு, வரவேற்பு வழங்குகிற சாதனைகளே இவைகள் என்றால் அது மிகையாகாது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில் கொண்டு திருத்தணி, திருக்கழுக்குன்றம், மேல்மருவத்தூர், கடலூர், மேட்டுப்பாளையம், கூடலூர், குன்னூர், திருச்செந்தூர், இராமேசுவரம் மற்றும் ஓசூர் போன்ற இடங்களில், ஓட்டல்கள் புதிதாகக் கட்டப்பட்டு, விரைவில் திறக்கப்படும் நிலையில் இருக்கின்றன. மேலும் இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை, சேலம், கும்பகோணம், தஞ்சாவூர், கொடைக்கானல் போன்ற இடங்களில் புதிதாக ஓட்டல்களும் கட்டப்படும். சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில், பிராட்வேயிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியினை, எல்லா வசதிகளும் கொண்ட ஓட்டலாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்துக்கும் மேலாக - சுற்றுலா என்பது தொழிலாக 1986-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், சுற்றுலாத் திட்டங்களுக்குத் தொழிற்சாலைக்குரிய சலுகைகள் ஏதும் அறிவிக்கப்படவில்லை. எனவே, புதிய தொழிற்சாலைகளுக்குத் தரப்படும் சலுகைகளுடன், ஒரு சில மாற்றங்களுடன் புதிய சுற்றுலாத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும். மேலும், மாநிலங்களிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களின் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்கும், அழகுபடுத்துவதற்கும், சிறப்புச் சுற்றுலாத் தேர்விடங்களாக (Heritage Towns) அறிவிக்க மத்திய அரசு உத்தேசித்துள்ளதால், தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை அத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள ஆவன செய்யப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், சுற்றுலா மேம்பாட்டைப் பொருத்தவரையில், சுற்றுலாத் தலங்களைத் தூய்மையாக வைப்பதும், புராதனச் சின்னங்களைப் பேணிக்காப்பதும், நமது தலையாயக் கடமையாக இருக்க வேண்டும். எனவே, இப்பணியில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி, அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்து அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - எனக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்!"

விழாவில் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

# இந்தப் பொருட்காட்சியில்...

**1974**-ஆம் ஆண்டு முதற்கொண்டு 'பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சியைத்தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் நடத்தி வருகிறது. இவ்வாண்டு 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் முற்றும் மாறுபட்ட வகையில் வெகு சிறப்பான முறையிலும் அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு துறைகளில் தமிழகம் கண்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கெனத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டுமென்பதே இப்பொருட்காட்சியின் முக்கிய நோக்கமாகும்.

தமிழகத்தின் தன்னிகரற்ற சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்களை இம்மாநிலத்தினர் மட்டுமன்றி இந்தியாவின் மற்ற மாநிலத்தவரும் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வண்ணமும், நம் சிறப்பை அறிந்துகொள்ளும் வகையிலும் இப்பொருட்காட்சி வகை செய்வதுடன், இதன்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கும் நம் மக்களுக்கும் பொழுதுபோக்கும் ஓர் மகிழ்விடமாகவும் துணை செய்கிறது. சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அதிகமாக இருப்பதன் காரணமாக, இச்சுற்றுலாப் பொருட்காட்சி இக்காலகட்டத்தில் நடத்தப்படுகின்றது.

இவ்வாண்டுப் பொருட்காட்சியில் நம் மாநில அரசின் துறைகளும் மாநில அரசு நிறுவனங்கள் 37-ம் வெளி மாநிலச் சுற்றுலாத் துறைகள் 2-ம் வெளி மாநில நிறுவனங்கள் 10-ம் கலந்து கொள்கின்றன. மேலும், இவை தவிர தனியார் துறை நிறுவனங்களும், கைத்தறிச் சங்கங்களும் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த 205 அங்காடிகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்பது சிறப்பம்சமாகும்.

பொருட்காட்சியின் நிரந்தரக் கலையரங்கமான 'அறிஞர் அண்ணா கலையரங்கத்தில்' தினந்தோறும் இன்னிசை, நாடகம் மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.தற்காலிகத் திறந்த வெளித் திரையரங்கம் அமைக்கப்பட்டு நாள்தோறும் ஓர் திரைப்படம் திரையிடப்படுகிறது. அன்னை இந்திரா சிறுவர் உல்லாச உலகத்தில் நாள்தோறும் நடைபெறும் கிராமிய நாட்டியம், நடனம், வீர விளையாட்டுகள், தந்திரக் காட்சிகள் குழந்தைகளைக் களிப்புறச் செய்கின்றன.அங்கே சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தின் அறிவியல் உல்லாச உலகத்தின் காட்சிக் கூடத்தில் இளந்தளிர்கள் எளிய முறை அறிவியல் அறிவு பெற ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

வண்ண வண்ண மீன்கள் மீன்காட்சியகத்தில் கண்களைக் கொள்ளை கொள்கின்றன. இந்த 18-வது பொருட்காட்சியில் அனைவரும் ஆவலுடன் குதுகலிக்கும் சிறுவர் இரயிலும், குதிரைச் சவாரியும் இவ்வாண்டு நடைபெறுகின்றது.

**ஓட்டல் தமிழ்நாடு (டிரைவ்-இன்-ரெஸ்டாரண்ட்)**

பொருட்காட்சித் திடலில் நிரந்தரமாக அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாடு உணவகம் மக்களுக்காகச் சுகாதாரமான முறையில் தயாரித்து சுவையான உணவு வகைகள், சைவம்-அசைவம் இரண்டும் பரிமாறி நற்பெயர் பெற்றுள்ளது.

இப்பொருட்காட்சி நாள்தோறும் பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணி வரையும், விடுமுறை மற்றும் விழாக் காலங்களில் காலை 11 மணி முதல்இரவு 10 மணி வரை யும் திறந்துவைக்கப்படும்.

இவ்வாண்டு பொருட்காட்சிக் காலத்தில் கீழ்க்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

1. தென்னிந்தியக் கலாச்சார மையக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள்
2. மிகப் பழமையான ஊர்திகளின் கண்காட்சி
3. ஆடை அலங்காரக் கண்காட்சி
4. உணவுக் கண்காட்சி
5. பொம்மைக் கண்காட்சி
6. தோட்டக்கலைக் கண்காட்சி
7. புத்தகக் கண்காட்சி
8. நாய்க்கண்காட்சி
9. மகளிருக்கான கோலப் போட்டி
10. கல்லூரி மகளிருக்கான கலை நிகழ்ச்சிகள்.

இதுவரை நடைபெறாத மிகப் பழைய ஊர்திகளின் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட உள்ளது. முதன் முறையாக இப்பொருட்காட்சியில் பழைய ஊர்திகளின் விவரங்களுடன் கூடிய புகைப்படங்கள் கொண்ட இக்கண்காட்சி சுற்றுலா அரங்கில் இடம்பெற்றுள்ளது. மேலும் பழைய ஊர்திகளின் ஓட்டமும், அக்கார்களின் கண்காட்சியும் நடைபெற உள்ளது. பழைய ஊர்திகளின் ஓட்டத்தில் பலவகையான சுமார் 40 மிகப் பழமையான கார்கள் பங்கெடுக்க இருக்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் தாங்களே ஓட்டும் வகையில் சிறிய கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் பல்வேறு மாநிலங்களில் உள்ள புகழ்வாய்ந்த கோயில்களின் படங்களும், கலாச்சாரங்களை விளக்கும் படங்களும் நுழைவாயிலில் இடம் பெறுகின்றன.



# தமிழ்நாட்டில் முழு அடைப்பு வெற்றி!

## பொதுமக்களுக்கு மாண்புமிகு முதல்வர் நன்றி

கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவும், அந்த மக்களுக்குப் போதுமான பாதுகாப்பைத் தரத் தவறிய கர்நாடக மாநில அரசைக் கண்டிக்கவும் கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக முதல்வர் நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்ட பிறகும், மத்திய அரசு தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிக்கவும், கர்நாடகத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசும் கர்நாடக மாநில அரசும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவும் ஜனவரி 2-ஆம் தேதி (2.1.1992) காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழகம் தழுவிய முழுவேலை நிறுத்தம் நடத்துவதென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 30.12.1991-இல் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து 2.1.1992-ஆம் நாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 12 மணிநேரம் முழு அடைப்பு அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் கடைகள் மூடிக் கிடந்தன. பேருந்து, இரயில், ஆட்டோ, டாக்சிகள் எதுவும் ஓடவில்லை. அனைத்து அரசு அலுவலகங்களும், அரசுத் துறை நிறுவனங்களும், பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தன. அன்று பொதுவிடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. வங்கிகளுக்கும் அன்று விடுமுறை அளிக்கப்பட்டது. திரைப்படக் கொட்டகைகளின் காலைக் காட்சியும், பிற்பகல் காட்சியும் ரத்து செய்யப்பட்டன. திரைப்படப்பிடிப்பு நிலையங்களில் படப்பிடிப்பு நடைபெறவில்லை. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான பேருந்துகள் எதுவும் ஓடவில்லை. பேருந்து நிலையங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இரயில், விமானப் போக்குவரத்துகள் மாலை 6 மணி வரை நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. தமிழ்நாட்டின் அனைத்து நீதிமன்றங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.





தொடர்புடைய மாநிலத்திற்குக் கூட்ட விவாதப் பொருளைத் தெரிவிக்காமலும் அம்மாநிலத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ள விழையாமலும், ஒருதலைப்பட்சமாக ஒரு தீர்மானத்தை நிறை வேற்றிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் நடவடிக்கைகள் வருந்தத் தக்கது என நான் கருதுகிறேன். இந்த நிலையில் இன்று கர்நாடகத் தில் நிலவும் அசாதாரண நிலையை ஜனநாயகத் திலும் தேசிய ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கையுள்ள எந்த ஒரு மத்திய அரசும் அனுமதிக்காது.

இந்திய அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளையே பறித்த கர்நாடக அரசின் மீது இதுவரை எந்தவிதப் பயனுள்ள நடவடிக்கைகளை யும் தொடராத மத்திய அரசையும் என் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கடந்த 13.12.1991 அன்று கர்நாடக அரசு அறிவித்து நடத்திய முழு அடைப்பு, கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைப் பெரிதும் பாதித்தது. ஆனால், இன்று (2.1.1992) பாதிக்கப்பட்ட தமிழர்களின் பக்கமிருக்கும் நாம் நமது உணர்ச்சி களைக் கட்டுப்படுத்தி அமைதியான முறையில் இன்றைய முழு அடைப்பை நடத்திக் காட்டி யுள்ளோம்.

தமிழகத்தில் முழு அடைப்பு என்று அறிவித்த உடனேயே கர்நாடக அரசு அறிவித்த முழு அடைப் பின்போது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை யைப் போலவே தமிழகத்திலும் திட்டமிட்டு நடை பெறப் போகிறது என்று கர்நாடகத்தில் உள்ள வர்கள் எதிர்பார்த்தார்கள். இந்தக் கருத்தில்தான் முழு அடைப்பை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் முன்னாள் முதல் அமைச்சர் களும் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால், தமிழகத்தில் சுயகட்டுப்பாட்டிற்கு இந்தியாவிலேயே ஈடுஇணையில்லை என்பதை நிலைநாட்டிக் காட்ட வேண்டும் என்ற உறுதியுடன் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, முழு அடைப்பு நடைபெற்றே தீரும் என்று கூறினேன். நான் எண்ணியபடியே முழு அமைதி காத்து, எவ்வித வன்முறைக்கும் இடம் தராமல் வெற்றி கரமாக இந்த முழு அடைப்பைத் தமிழக மக்கள் நடத்திக் காட்டியதால் தமிழகத்தின் மதிப்பை வானளாவ இன்று உயர்த்தியிருக்கின்றார்கள்.

வன்முறை நிகழும் என்ற எதிர்பார்ப்பில் இன்று காலை முதல் மாலை வரை அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கர் நாடக அரசு அதிகாரிகள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை பற்றி விசாரித்தபடியே இருந் தார்கள். எவ்வித வன்முறைச் சம்பவமும் நடை பெறவில்லை என்பதை அறிந்து அவர்கள் வியப் பில் ஆழ்ந்து போனார்கள்.

தமிழகத்தில் முழு அடைப்பு என்றாலே காட்டுத் தர்பார் கட்டவிழ்த்து விடப்படப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த கர்நாடக அரசியல் வாதிகள் இந்தியா முழுவதிலுமுள்ள அரசியல் விமர்சகர்கள், சில மத்திய அமைச்சர்கள், மத்திய அரசு அதிகாரிகள், அகில இந்திய நாளேடுகள் உட்பட இப்படித் தமிழகத்தைப் பற்றித்தவறான கணிப்புச் செய்த அனைவருமே ஏமாந்துபோனார்கள்.

தமிழரின் பண்பாடு எத்தகைய மகத்துவம் வாய்ந்தது என்பதை உலகிற்கு உணர்த்திக் காட்டிய தமிழக மக்களின் பொற்பாதங்களில் என் நன்றி யைக் காணிக்கையாக்குகின்றேன்.'





# இன்பம் தழைத்திடுமே!

கவிஞர் சாமி பழனியப்பன்

வையம் வாழக் குறள்தந்த
வள்ளுவன் நமது முன்னவனாம்
தெய்வப் புலமை வள்ளுவனைத்
தினமும் போற்றித் தொழுதிடுவோம்!

உளநோய் தீர்க்கும் மருந்தாகி
உயர்வை வளர்க்கும் விருந்தாகுந்
தெளிதமிழ்க் குறளை நாம்கற்றுச்
சிறுமை நீங்கி வாழ்ந்திடுவோம்!

ஒட்டைச் சாண்மனம் உடையவனை
உலகின் மனிதன் எனமாற்றும்
ஏட்டைத் தந்தநம் வள்ளுவனை
இனிதே கற்றுத் தேர்ந்திடுவோம்!



சத்துப் பொருள்கள் பலகூட்டிச்
சமைத்த உணவாம் குறளமுதை
நித்தம் கற்றுத் தெளிந்திடுவோம்
நிறையுடைய யோராய் வாழ்ந்திடுவோம்!

உலகின் ஒருமை பேணிடவும்
ஒற்றுமை யாகு வாழ்ந்திடவும்
நலங்கள் பலவும் பெற்றிடவும்
நாளும் திருக்குறள் கற்போமே!



அறம்பொருள் இன்பம் கூறுகிற
அறங்குறள் நமக்கு வழிகாட்டும்
பிறழா தவ்வழி நின்றிட்டால்
பேதையும் மேதை யாகிடுவான்!

வாழ்வே குறளுக் குரையானால்
வையகந் தன்னில் துன்பமில்லை
தாழ்வும் இல்லை; இறப்புமிலை
தரணியில் இன்பம் தழைத்திடுமே!





காய்கறிக் கடைகள், நடைபாதைக் கடைகள் அனைத்தும் மூடிக்கிடந்தன.

மக்களின் அத்தியாவசியத் தேவையான பால் விநியோகம், குடிநீர் வழங்கல், மருத்துவமனை, பத்திரிகை அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

முழு அடைப்பு வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற்றதற்குத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டார்:

'கர்நாடகத் தமிழ் மக்கள் மீது கடந்த இரு வாரங்களாகக் கன்னட வெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் செயல்களால் தாங்கொண்ணாத் துயர் அடைந்து தமிழகத்திற்கு ஓடிவந்து கொண்டிருக்கும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தலைமுறை தலைமுறையாகத் தங்கள் மாநிலத்தில் தங்கி வாழ்ந்து வரும் தமிழர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கத் தவறிய கர்நாடக அரசைக் கண்டித்தும், இந்திய ஒருமைப்பாட்டையே அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கர்நாடக அரசைக் கண்டித்து உரிய நேரத்தில் நடவடிக்கைகள் தொடரத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும், இன்று தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட முழு வேலை நிறுத்தமும், முழு அடைப்பும் மாபெரும் வெற்றி பெறச் செய்த தமிழக மக்களுக்கும், அரசியல் கட்சியினருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழனின் மாபெரும் தன்மானப் பிரச்சினையை அணுகும் பொழுதும், நாம் உணர்ச்சி வசப்படாமல் அமைதியான முறையில் இந்த முழு அடைப்பினை நடத்திக் காட்டியுள்ளது நமக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. தமிழ் மக்கள் அனைவரின் ஒருமித்த உணர்வினைக் கர்நாடக அரசும், மத்திய அரசும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் இன்றைய முழு அடைப்பினை நாம் நடத்தி முடித்துள்ளோம்.. இம்மாபெரும் வெற்றியை இந்த இக்கட்டான காலகட்டத்தில் நமக்கு ஈட்டித் தந்த ஒவ்வொருவருக்கும் என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டுதலையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடத்தி முடித்த முழு அடைப்போடு நாம் நமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தமிழர்கள் விழிப்புணர்வோடு இருந்தால்தான் தங்களின் உரிமைகளைக் காக்க முடியும் என்ற அவலநிலை இன்றும் நமது நாட்டில் தொடர்கின்றது. கர்நாடகத் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு ஏவி விடப்பட்ட வன்முறைச் செயல்களைத் திசை திருப்பப் பல முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவேதான், நாம் மிக்க விழிப்புணர்ச்சியுடனும், எச்சரிக்கையுடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் வாழும் கன்னடர்களுக்குப் பாதுகாப்பு இல்லாதது போலவும், அவர்கள் தாக்கப்படுவது போலவும், தமிழகத்தை விட்டு அவர்கள் கர்நாடகத்திற்கு ஓடுவது போலவும் ஒரு பொய்யான பிரச்சாரத்தைத் திட்டமிட்டுக் கர்நாடக அரசு செய்யத் தொடங்கியுள்ளது.

கர்நாடகத்தில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவலநிலை போல், தமிழகத்தில் வாழும் கன்னடர்கள் எவருக்கும் ஏற்படவில்லை. தமிழக அரசு இந்தப் பிரச்சினை தொடங்கிய நாள் முதல் கன்னடர் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தமிழக மக்கள் தங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அமைதி காத்து வருகின்றனர்.

தமிழகத்தில் வாழும் பல இலட்சம் கன்னடர்கள் இன்றும் பாதுகாப்பாக, எவ்வித அச்சமும் இன்றி, தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குத் தொடர்ந்து அரசும், தமிழக மக்களும் துணை நின்று எப்போதும் பாதுகாப்பு அளிப்பார்கள்.

நேற்று முன்தினம் டெல்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அக்குழு கர்நாடக அரசிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் அமைதி காத்து இயல்பு நிலைக்குத் திரும்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டும், இப்பிரச்சினை குறித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலை என்ன? கர்நாடகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை என்ன? என்பதை நாமும் அறிவோம், நாடும் அறியும். இதுவரை கர்நாடகத்திலிருந்து 87,813 தமிழர்களுக்கு மேலாக தமிழகத்திற்கு ஓடிவந்துள்ளனர். ஆனால், தமிழகத்திலிருந்து 380 கன்னடர்கள் மட்டுமே அச்சத்தின் காரணமாகக் கர்நாடகம் சென்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தமிழகம் திரும்பி விட்டனர்.

இந்த உண்மை தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவிற்கு எப்படித் தெரியாமல் போனது என்பது வியப்பாக உள்ளது. இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள உண்மை நிலையைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக் குழு தனது பாராட்டைத் தெரிவிக்காவிட்டாலும், உண்மையை உணர மறுத்து தமிழகத்தை, கர்நாடகத்தோடு ஒப்பிட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் இந்தியத் திருநாட்டில் எந்தப் பகுதியிலும் குடியேறலாம். வாணிபம் செய்யலாம். வாழ்க்கை நடத்தலாம் என்று இந்திய அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையே பறித்து அரசியல் சாசனச் சட்டத்தையே உடைத்தெறிந்துள்ள கர்நாடக மாநிலத்தையும், தற்போது அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தையும் சமமாக மதித்து எடைபோட்டுப் பார்க்க நினைக்கின்றனர் என்றால் அதனை என்னவென்று குறிப்பிடுவது?

இரு மாநில அரசிற்கும் தனது தீர்மானத்தின் மூலம் அறிவுரை வழங்கிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம், கர்நாடகம் தேசிய ஒருமைப்பாட்டில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளது என்பதையும், அதன் தற்போதைய நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, கர்நாடக மாநிலம் இந்தியாவுடன் தான் உள்ளதா என்பதையும் முதலில் உறுதி செய்யத் தவறிவிட்டது.

மேலும், 31.12.1991 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் காஷ்மீர் மற்றும் பஞ்சாப் நிலை குறித்து மட்டுமே விவாதம் நடைபெற இருப்பதாகக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டு எனக்கும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கர்நாடகத் தமிழர்கள் தாக்கப்பட்டிருப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்க உள்ளனர் என்ற விவரம் எனக்குத் தெரிவித்திருந்தால், நான் நிச்சயமாக அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பேன்.



அஞ்சும் மனத்தவரும் - கொஞ்சம்
ஆண்மை தருமனப் பான்மை யடைந்திட
மஞ்சு விரட்டிடுவோம் - துஷ்ட
மாட்டையும் அடக்கும் தாட்டிகம் காட்டுவம்.

—நாமக்கல் கவிஞர்

## தமிழ்நாடு அரசின் கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதி

கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தமிழகத்திற்கு வந்திருக்கின்ற கர்நாடகத் தமிழர்களின் மறு வாழ்விற்காகவும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின்பேரில் தமிழக அரசு ஒரு நிதியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நிதிக்குத் தமிழில் 'தமிழ்நாடு அரசின் கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதி' என்றும், ஆங்கிலத்தில் 'Tamil Nadu Government Fund for Rehabilitation of Karnataka Tamils' என்றும் பெயரிடப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து ரூ.1,08,000 இந்த நிதிக்குக் கொடுத்து, நிதியினைத் துவக்கி வைத்துள்ளார்.

## கர்நாடகத்திலிருந்து தமிழகம் வந்துள்ளவர்களின் எண்ணிக்கை

14.1.1992 வரை கர்நாடக மாநிலத்தி லிருந்து வன்முறை தாக்குதலுக்கு உள்ளாகி தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்கு வந்துள்ள தமிழர்களின் எண்ணிக்கை மொத்தம் 1,04,693. அவ்வாறு வந்தவர்கள் மாவட்ட வாரியாக பின்வருமாறு:-

சென்னை 76, தென்னார்க்காடு 837, வட ஆர்க்காடு-அம்பேத்கர் 13,009, திருவண்ணாமலை-சம்புவராயர் 3,854, தர்மபுரி 21,596, சேலம் 11,857, பெரியார் 29,939, கோவை (நகரம்) 6,165, கோவை (ஊரகம்) 8,818, நீலகிரி 7,410, மதுரை (ஊரகம்) 1,132 ஆக மொத்தம் 1,04,693.

## காவிரி ஆலோசனைக் குழு

காவிரி ஆற்று நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக அரசுக்கு ஆலோசனைக் கூற 5 பேர் கொண்ட குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:-

அந்தக் குழுவின் தலைவராகத் திரு. ஆர். திருமலை (ஓய்வு பெற்ற இ.ஆ.ப. அதிகாரி) நியமிக்கப் பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் அமைப்பாளர் ஆகப் பொதுப்பணித்துறை செயலாளர் திரு. சி. செல்லப்பன் இ.ஆ.ப., நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் உறுப்பினர்களாகக் 'காவிரி டெக்னிகல்' பிரிவுத் தலைவர் திரு. ஏ. மோகனகிருஷ்ணன், கோவையில உள்ள விவசாயிகள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ்.ஜெயராஜ் மற்றும் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் திரு. எஸ். இராமச் சந்திரன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

காவிரித் தண்ணீர்ப் பிரச்சினையில் இப்போது எழுந்துள்ள சிக்கலில் தமிழக அரசுக்கு ஆலோசனை கூறுவதுடன், காவிரி நீர்ப்பாசன முறைகள் விவசாய வளர்ச்சிக்காக எப்படிப் பயன்படுத்துவத என்பது பற்றித் தமிழக அரசுக்கு இந்தக் குழு ஆலோசனை தெரிவிக்கும்.



# சங்கப்புலவர் நினைவாக நினைவுத்தூண்

ஒக்கூர்........ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சிவகங்கைக்கும் திருக்கோட்டியூருக்கும் இடையில் உள்ள அழகிய சிற்றூர்'......... இந்தச் செம்மண் பூமியில்தான் சங்கப்புலவர்கள் மாசாத்தியார் - மாசாத்தனார் ஆகியோர் தோன்றி, தமிழுக்குப் புகழ் சேர்த்தார்கள்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' என்னும் நில எல்லை கடந்த தீந்தமிழ்த் தேருக்குச் சங்கப் புலவர்கள்தாம் அச்சாணி என்பதை அறிவோம்.

அகம்.....புறம்.... என இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துப் பாடிய தமிழ்ச்சான்றோர்களின் இலக்கிய வரிகள் உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்புவாய்ந்த சங்க கால உலகில், பாண்டிய நாட்டுப் பெண்பாற் புலவர்களில் ஒக்கூர் மாசாத்தியார் தலைசிறந்தவர்; இவர் மொத்தம் எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் அகநானூற்றில் இரண்டும், புறநானூற்றில் ஒன்றும், குறுந்தொகையில் ஐந்தும் எனக் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் வாழ்ந்த ஆண்பாற் புலவர்களுக்கு இணையாகப் பெண்பாற் புலவர்களும் தமிழையும் தமிழர் வீரத்தையும், வளர்த்தார்கள் என்பதற்கு இவருடைய 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' எனத் தொடங்கும் புறப்பாடல் ஒன்றே சிறந்த சான்றாகும். அகத்திணைப் பாடல்களில் இவர் சிறந்த உவமைகளைக் கொண்டு பாடியுள்ளார். சான்றாக - 'முல்லை அரும்பியிருத் தலைக் காட்டுப்பூனை சிரித்தாற் போல்' என்று ஒப்பிடுவதைக் குறிப்பிடலாம். குறுந்தொகையில் இவர் பாடல்கள் பெரும்பான்மை முல்லைத் திணைப் பாடல்கள் ஆகும்.

ஒக்கூர் மாசாத்தியாரின் பிறப்பிடமான அதே ஒக்கூரில்தான் சங்ககாலப் புலவர் ஒக்கூர் மாசாத்தனாரும் பிறந்தார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றும் உள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்கப்புலவர்களின் மாப்புகழைப் போற்றும் வகையில் ஒக்கூரில் தமிழக அரசு நினைவுத்தூண் நிறுவியுள்ளது. இதன் திறப்புவிழா ஒக்கூரில் 10.12.91 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இச்சீரிய விழாவிற்குப் பசும் பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். விழாவிற்கு வருகை தந்தோரைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் பேராசிரியர் கு. சிவஞானம் வரவேற்றார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் நினைவுத்தூண் திறந்து வைத்து, இலக்கியச் சிறப்புரை ஆற்றினார். விழாவில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திரு. கரு. முருகானந்தம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார். தமது தலைமையுரையில் உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் 'ஒக்கூரில் உள்ள ஊராட்சி மன்றக் கட்டட அலுவலகத்திற்கு 'மாசாத்தியார் மாளிகை' எனப் பெயர் சூட்டி விழாவிற்குப் புகழ் சேர்த்தார். விழாவில் தமிழ்ப் பண்பாட்டுத் துறைத் துணை இயக்குநர் முனைவர். த. பெரியாண்டவன் நன்றி கூறினார். அறிவொளி இயக்கக் கலை நிகழ்ச்சி நடந்தது.

எண்ணுதலும், எழுதுதலும் தமிழிலேயே இருத்தல் வேண்டும் என நடைமுறைப்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசில் - சங்கப்புலவர் புகழ்பாடி நினைவுத்தூண் அமைத்துப் போற்றுவது வியப்பிற்குரியதல்ல! அவர்தம் ஆட்சியில் மேலும் சங்கத் தமிழ் வளர்ப்போம்! ஒக்கூர் மாசாத்தியார்-மாசாத்தனார் புகழ் ஓங்குக!

**- ரெ. இராவணன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன்**
**முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.**

> தமிழின் தலைசிறந்த இலக்கிய ஏடு, உலகின் ஒப்புயர்வற்ற தனிமுதல் ஒழுக்க நூல் என்ற புகழைத் திருக்குறள் பெற்றுள்ளது.
> —பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்.



## அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் பரிசு

மத்திய அரசு போனஸ் வழங்கும் முறையைப் பின்பற்றி ஊதிய விகிதங்களில் ரூ.2,500, அதற்குக் குறைவாக மாத ஊதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு 16 நாட்கள் ஊதியம் போனசாக வழங்கப்படும். இதனால் ஊழியர்களுக்குக் குறைந்த பட்சப் போனசாக ரூ.604 கிடைக்கும். இது கடந்த ஆண்டைவிட ரூ.86 அதிகமாகும். அதிகப்பட்சமாக ரூ.2,500 ஊதியம் பெறும் அலுவலர்களுக்குப் போனஸ் வழங்கும் முறையில் ரூ.1,600 என்ற அளவில் தொடர்ந்து கணக்கிடப் பட்டு நிர்ணயிக்கப்படும். இந்த அதிகப்பட்ச அளவில் இம்முறை ரூ.853 போனசாக வழங்கப் படும். இது கடந்த ஆண்டைவிட ரூ.53 அதிக மாகும்.

ஊதிய விகிதங்களில் ரூ.2,500-க்கு மேல் ஊதியம் பெறும் அலுவலர்கள், அதாவது மாநில-மைய அரசு ஊதிய விகிதம், பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதம் போன்ற அலுவலர் களுக்குச் சிறப்புப் போனசாக ரூ.475 வழங்கப் படும்.

சில்லரைச் செலவினத்திலிருந்து நிலையான மாதாந்திர ஊதியம் பெறும் பகுதி நேர முழு நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் கிராமப் பணியாளர் அமைப்பில் உள்ள அலு வலர்கள் மற்றும் ஆண்டொன்றுக்கு 240 நாட் களுக்குக் குறையாமல் தினக் கூலியாகப் பணி யாற்றும் பணியாளர்களுக்கும் சிறப்புப் போனசாக ரூ.475 வழங்கப்படும்.

கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும் ரூ.72.17 கோடி செலவில் சுமார் 11 இலட்சம் அரசு மற்றும் உள்ளாட்சி அலு வலர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்பினை வெளி யிட்டார்.

அரசு, தனியார் உதவி பெறும் கல்வி நிறு வனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிறுவன அனைத்து ஒய்வூதியதாரர்கள்-குடும்ப ஒய்வூதிய தாரர்களுக்கு 1992-ஆம் ஆண்டுக்கான பொங்கல் பரிசாக ரூ.100-ஐ மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். இதனால் 2.30 இலட்சம் ஒய்வூதிய தாரர்கள் பயனடைவார்கள், அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.2.3 கோடி ஆகும்.

## திருக்கோயில் பணியாளர்களுக்கு கருணைத்தொகை

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின்கீழ் திருக்கோயில் களில் பணிபுரியும், முதுநிலை திருக் கோயில் பணியாளர்களுக்கு ரூ.350-ம், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.300-ம், 1992-ஆம் ஆண்டிற்குக் கருணைத் தொகையாக வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள் ளார்.

## சென்னைத் தரமணியில் நிரந்தர வர்த்தகப் பொருட்காட்சி

சென்னைத் தரமணியில் நிரந் தர வர்த்தகப் பொருட்காட்சியில் பிரபல தொழிலதிபர்கள் பங்கு பெறுவது தொடர்பாக 6.1.92 அன்று தென்னகத்திலுள்ள பிரபல தொழிலதிபர்களின் கூட்டத்தைத் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டினார். அகில இந்திய வர்த் தகப் பொருட்காட்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. மூலா ராஜா (Chairman and Managing Director of Trade Fair Authority of India)

அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்களின் பிரதி நிதிகள் உள்பட 21 தொழிலதி பர்கள் இக்கூட்டத்தில் பங்கு கொண் டார்கள்.

1. வீல்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.
2. மங்களூர் கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைஸர்ஸ் லிமிடெட், பெங்களூர்.
3. விசாகப்பட்டினம் இரும்புத் தொழிற்சாலை, விசாகப்பட்டினம்.
4. டியூப்ஸ் இந்தியா குரூப்ஸ் மற்றும் ஆல் இந்தியா லெதர் டிரேட் அசோசியேஷன்ஸ்.






சமுதாய வீதியிலே
சத்தியத்தேர் ஓட்டவும்,
சமமாக எல்லாரும்
சேர்ந்திசை பாடவும்,
அமுதான தமிழ்ப்பெருமை
அனைத்துலகு எட்டவும்,
நமக்கெல்லாம் உரமேற்ற
நன்னாளும் வந்ததே!

வன்முறைப் பேய்களின்
வாலை நறுக்கவும்,
நன்முறை நாயகர்க்கு
நல்வாழ்த்துக் கூறவும்,
தன்னலக் கூட்டங்கள்
தலைதெறிக்க ஓடவும்,
பொன்னாளாய்ப் புலர்ந்ததே
பொங்கலெனும் திருநாளே!

கல்லாதார் இல்லாத
காலம் கனியவும்,
இல்லாதார் மகிழ்ந்திட
எல்லாமும் கிடைக்கவும்,
சொல்லாமல் செய்திடும்
செயல்வீரர் பெருகவும்,
எல்லார்க்கும் வந்ததே
இன்சுவைப் பொங்கலே!

கன்னியரை விலைபேசும்
காமுகர் குறையவும்
அன்னியரை வரவிடாத
ஆண்மை பெருகவும்,
என்னருமைப் பொன்னாடு
ஏற்றம் பெற்றிடவும்,
என்னுள்ளே உறுதிமொழி
இந்நாளில் பிறந்ததுவே!



# தனிச்சிறப்பு வாய்ந்த நடுகல்

திருச்சி-மதுரை நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இனாம்குளத்தூரைச் சார்ந்த வட சேரி ஏரியின் அருகில் மிக முக்கிய நடு கல்லொன்றினைத் தமிழ் நாடரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.


நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை


நீள் செவ்வக அமைப்பிலான இந்நடுகல்லில் வீரனொருவன், வலக்கரத்தில் கத்தியும், இடக்கரத் தில் வில்லும் பிடித்த நிலையில், புடைப்புச் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளான். வீரனுக்கு வலப்புறம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தமைதியில் கல்வெட்டு பொறிக்கப் பெற்றுள்ளது.

''ஸ்ரீ கொற்றம் பூதி நிரை பின் போடி பட்ட இடம்'' என்பது கல்வெட்டு வரி

கொற்றம் பூதியெனும் வீரன் ஆநிரைகளின் பின்பு ஓடிச் சென்று இறந்த இடம் என்பது பொருள். பகைவர்களால் கவர்ந்து செல்லப் பட்ட ஆநிரைகளை மீட்கச் சென்ற போது பகைவர்களால் தாக்கப்பட்டு இவ்வீரன் இறந்திருக்கலாம்.

தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் ஏறக்குறைய 500 நடுகற்களை இது வரை கண்டறிந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவில் தான் கிடைத்துள்ளன. அவற்றுள் இந்நடுகல் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. கி.பி. 9-10-ஆம் நூற் றாண்டளவில் கோனாட்டினை ஆண்ட இருக்குவேளிர் குலத்தைச் சார்ந்த வீரனொருவனின் வீரத்தைக் காட்டும் கல்லிது. இருக்குவேளிர் களின் தலைநகரான கொடும் பாளூர், இவ்வடசேரிக்கு அரு கிலேயே உள்ளது. இவ்வீரன் கொடும்பாளூர் படைகளைச்சார்ந்த வனாக இருப்பானாயின் இக்கல் வெட்டு மிகவும் மதிப்பு வாய்ந்த தாகிறது.

ஆநிரை மீட்கும் போரில் ஈடு பட்டு இறந்த அந்த இடத்திலேயே இக்கல் நடப்பட்டிருப்பதும் மற் றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்துறை இனாம்குளத்தூரில் மேலும் மூன்று கல்வெட்டுக்களை யும் கண்டறிந்துள்ளது. நடுவில் காளையும், சுற்றிலும் தாமரை மலரமைப்பினையும் மேற்பகுதியில் பெற்றுள்ள தூண்கள் வடிவில் அமைந்த இக்கற்களில் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தமைதியில் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை சிலருக்கு ஏற்பட்ட தீராத நோய் தீரும் பொருட்டு இறைவனை வேண்டிக் கொள்ளும் வகையில் நாட்டப்பட்ட கற்களாகத் தெரிய வருகின்றன.

வடசேரியைச் சேர்ந்த திரு. எம்.குப்புசாமி மற்றும்இனாம்குளத் தூரைச் சேர்ந்த திரு. எம்.ஏ. பொன்னுசாமி ஆகியோர் கொடுத்த தகவலின் பேரில் மேற்காணும் கல்வெட்டுக்களை இத்துறையின் திருச்சிப் பதிவு அலுவலர் திரு. ஸ்ரீதரன் மற்றும் இளநிலைக் கல் வெட்டாய்வாளர் திரு. ஜெயராமன் ஆகியோர் கண்டுபிடித்துள்ளனர்.

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை:**

ஒரு கோடியே இருபது இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கு, இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழுப்புரத்தில் தொடங்கி வைத்தார் (7.1.'92).

**இரண்டாம் அட்டை:**

பொங்கல் திருநாளைச் சித்திரிக்கும், நம் ஓவியரின் கைவண்ணம்.

**நான்காம் அட்டை:**

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1992 - மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (6.1.'92).


ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் ; 568926, 568927



எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், ... துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

## மதுவின் தீமைகளை விளக்கும் திரைப்படம், மற்றும் நாடகம் தயாரிக்க மாண்புமிகு முதல்வர் உத்தரவு:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டத்தில் மதுவின் தீமைகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதற்காகத் திரைப்படம் ஒன்றும், நாடகம் ஒன்றும் தயாரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் மதுவின் தீமைகளை விளக்கும் பிரச்சாரத் திரைப்படம் ஒன்றும், நாடகம் ஒன்றும் உள்துறையின் ஒத்துழைப்போடு, செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் விரைவில் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திரைப்படம் ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் வரை ஓடும் கால அளவு உள்ளதாகவும், நாடகம் இரண்டு மணி நேரம் நடைபெறக் கூடியதாகவும் இருக்கும். இவைகளைத் தயாரிக்கும் முழுச் செலவினையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும். திரைப்படம் தயாரிக்கும் பொறுப்பு மாநில மது விலக்குப் பிரச்சாரக் குழுவின் உறுப்பினரும், பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும் ஆன திரு. ஜி. வெங்கடேஷ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடகம் தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலரும் நாடகக் காவலர் என்று போற்றப்படுபவரும் ஆகிய திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படம், மற்றும் நாடகம் மூலமாக மதுவின் தீமைகளை தமிழகம் முழுவதும் மக்களிடையே தீவிரமாகப் பிரச்சாரம் செய்யத்தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## பார்த்தோம் - படித்தோம்

பொதுவாக அரசியல், மருத்துவம், கல்வி, கவிதை, பொது அறிவு போன்றவைகளை அறிந்து கொள்ள "தமிழரசு" இதழ் மக்களுக்கு இன்றியமையாத ஒரு கருவூலம் என்றால் அது மிகையல்ல!

—ப. அருணாசல சண்முகம்,
களம்பூர்,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

இலக்கிய விருந்தாக 'ஞானம்' என்ற தலைப்பில் வந்த டாக்டர். அரங்க இராமலிங்கம் அவர்களின் அரிய கட்டுரையைப் படித்துப்பரமானந்தம் அடைந்தேன். மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது என்பது போல, இச்சிறிய கட்டுரை பெரிய ஞானப் பெட்டகமாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு இதழிலும் இது போன்ற கட்டுரையை வெளியிட வேண்டுகிறேன்.

—ந. பாலு
தென்னாறு,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

"யான் எனது எனும் செருக்கு" அற 'ஞானம்' எனும் இலக்கிய விருந்து கட்டுரை மூலம் தெரிந்து கொண்டேன்.

—இன்பவல்லியன்,
கீரைசாத்து.

குடும்ப அட்டை வினாத்தாள் குறித்து அரசின் விளக்கம், பொதுமக்களுக்கு உதவிகரமாக இருந்தது, தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம் பயன்படும்படியாக இருந்தது. மருத்துவக் கட்டுரை-இரத்தக்கொதிப்பு-சிறப்பாக இருந்தது. தொடரட்டும்!

—அ.கந்தசுவாமி
திருப்பூர்
(கோவை மாவட்டம்)

மருத்துவக் கட்டுரை "இரத்தக் கொதிப்பு" தெளிவாகவும், எளிதில் புரியும்படியாகவும் இருந்தது. இது போன்ற மருத்துவக் கட்டுரை ஒவ்வொரு இதழிலும் வெளிவந்தால் பொது மக்களுக்கு மிகவும் பயன்படும்.

—கே.அனந்தநாராயணன்,
கன்னியாகுமரி

"கல்லும் சொல்லாதோ" கதையில் ம.காந்தியவர்கள் கடலூர் அருங்காட்சியகத்தின் அருமை பெருமைகளைக் கூறியிருந்தார். கட்டுரையைப் படித்து முடித்ததும் அருங்காட்சியகத்திற்கு வாசகர்கள் அனைவரும் சென்று வந்தது போலொரு பிரமையே ஏற்பட்டது.

—அரிமா பூமாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி, (கோவை மாவட்டம்)

"கல்லும் சொல்லாதோ கதை" கட்டுரை படித்தேன். பல அரிய செய்திகளைத் தெரிந்து கொண்டேன்.

—எஸ். பிரபாகரன்,
மேல்பாலானந்தால்,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

புலவர் க. அண்ணாமலை எழுதிய 'மரம் வளர்ப்போம்!' கவிதை அருமையாக இருந்தது.

—ராசியில்லாத ரகு
பள்ளிச்சேரி,
(தென்னார்க்காடு மாவட்டம்)

"கவிஞர் பா.திருநாவுக்கரசின் "கல்விச் செல்வம்" கவிதைப் படைப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

—கெ. குமாரப்பிள்ளை
கன்னியாகுமரி.





## மூதறிஞர் இராஜாஜி 113-வது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 113-வது பிறந்த நாள் விழா தருமபுரி மாவட்டத்தில் அவர் பிறந்த ஊரான தொரப்பள்ளியில் 10.12.91 அன்று சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'மூதறிஞர் இராஜாஜி அவர்களின் இலட்சியங்களைத் தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்' என்றார்.

அவர் மேலும் பேசுகையில், ஓசூர் நகரில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 18,000 வீடுகள் கட்டப்படும் என்றும், குறிப்பிட்டார். மேலும் இந்நிகழ்ச்சியில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 103 பேருக்கு ரூ.5.31 இலட்சம் கடன் உதவியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மு. தம்பித்துரை அவர்கள் இராஜாஜியின் ராஜதந்திரம், நிர்வாகத் திறன் ஆகியவற்றை நினைவுகூர்ந்து பேசினார். மேலும் விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., தலைமை உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஏ. மனோகரன், திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. முனிவெங்கடப்பன், திரு. எம்.ஜி. சேகர், திரு. கே. சிங்காரம், திரு. எம். வெங்கட்ராமரெட்டி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் செய்தி- மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மு. கிருஷ்ணன் நன்றி கூறினார்.

விழாவிற்கு முன்னதாக தேசிய மாணவர் படை மற்றும் சாரண இயக்கத்தைச் சார்ந்த 200 பேர் சைக்கிள் பேரணியாக ஓசூரிலிருந்து மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த ஊரான தொரப்பள்ளிக்கு ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாளையொட்டி, 10.12.91 அன்று காலை ஓசூர் நகரில் முக்கிய வீதிகள் வழியாகப் பள்ளி மாணவ, மாணவியர்கள், தேசிய மாணவர் படை, சாரணர் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் ஊர்வலமாக வந்தனர்.

மேலும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டு, அங்குள்ள இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தார்.

மு. கிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்.


# ஸோமசுந்தரம் ஸூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ்
# (தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் அலகு)
# முத்தனேந்தல் 623 602

போன்: 65 மானாமதுரை    தந்தி: ஸூப்பர்ஸ்பின்ஸ்

எங்களது ஆலையில் கீழ்க்கண்ட தரமான நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

சிட்ட நூல்: 10,20,40ஸ்
கோன் நூல்: 10, 20ஸ், 34ஸ், 40ஸ்
முறுக்கு நூல்: 2/17ஸ், 2/40ஸ்

தங்களது தேவைக்கு எங்களை அணுகுங்கள்

மு. சுப்பிரமணியன்
பொது மேலாளர்


வள்ளுவர்
16-1-1992
தமிழரசு
1-2-1992





மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் (17.1.'92).

## இந்த இதழில்...


குடியரசு நாள் விழா ... 2
தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு ... 4
காங்கேயத்தில், அரசு விழாவில் முதல்வர் உரை ... 5
மாமல்லபுரம் பொங்கல் நாட்டிய விழா ... 9
நீலகிரி மாவட்ட நலப் பணிகள் ... 13
திண்டுக்கல் அண்ணா மாவட்டப் பட்டுத்தொழில் வளர்ச்சி ... 15
திருவள்ளுவர் திருநாள் ... 17
சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ... 20
தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்வி ... 22
மனிதாபிமானத்தின் மணிமகுடம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். -மாண்புமிகு முதல்வர் உரை ... 23
கர்நாடகக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பாதுகாப்பு ... 27
உணவு: சில மருத்துவ உண்மைகள் ... 29
பனை ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல் ... 33
மருத்துவ வசதிகளைப் பரவலாக்கப் பத்தாயிரம் முகாம்கள் —மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 36
தெலுங்கு கங்கைத் திட்டம்: தமிழக—ஆந்திர முதல்வர்கள் சந்திப்பு ... 38
பர்கூரில், அரசு விழாவில் முதல்வர் உரை ... 43
கலைமாமணி விருது வழங்கும் விழா ... 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

தைத் திங்கள் - 18

மலர்:22 1-2-1992 இதழ்:15



157892

## சென்னையில்
# குடியரசு நாள் விழா

இந்தியாவின் 43-வது குடியரசு நாள் விழா, 26.1.92 அன்று தமிழக மெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது; சென்னையில் நடை பெற்ற குடியரசு நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர் களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்களைத் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப., அவர்கள் வர வேற்றார்.

காமராசர் சாலை-காந்தி சிலையருகில் அன்று காலை 8 மணி யளவில் மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைத்தார்.

தீரச்செயல் புரிந்த 9 பேருக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்திலான அண்ணா வீரப்பதக்கத் தையும் ஆயிரம் ரூபாய்க் கான காசோலையையும் வழங்கிப் பாராட்டினார்.

திருவண்ணாமலை தண்டராம்பட்டு திரு. வெங்கடேசன், திரு நெல்வேலி ஸ்ரீபுரம் கல் லூரி மாணவி கே. மைதிலி, வேளாங்கண்ணி, திரு.இராசேந்திரன், திரு. இரத்தினம், திரு. குழந்தை வேலு, திரு. சாமிக் கண்ணு மற்றும் பரமக் குடி பொதுவக்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளித் தலைமை யாசிரியர் திரு. கே. பாலானந்தம், கோவை மாவட்ட வனச்சரக அதி காரி திரு. ஜி.கே. முத்துசாமி, பத்மாநாப புரம் உதவி மாவட்ட ஆட்சியாளர் அலுவலக தபேதார் திரு. குமரேசன் ஆகியோர் அண்ணா பதக்கத்தை பெற்றனர்.

தொடர்ந்து நடை பெற்ற அணிவகுப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் பல்வேறு துறை களின் அலங்கார ஊர்திகள் இடம் பெற் றன. தேசிய ஒருமைப் பாட்டைச் சித்திரிக்கும் பல்வேறு மாநிலக் கலைக் குழுவினரின் நிகழ்ச்சி களும் 13 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவி களின் கலைநிகழ்ச்சி களும் இடம் பெற்றன.

நிகழ்ச்சி முடிவில்-சிறப்பாக அலங்கரிக்கப் பட்டிருந்த விவசாயத் தோட்டக்கலை ஊர்திக்கு முதல் பரிசும், சமூக நலத் துறை ஊர்திக்கு இரண் டாம் பரிசும், மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊர் திக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

பள்ளி மாணவ மாண விகளின் அணிவகுப்புக் கலைநிகழ்ச்சியைச் சிறப் பாக அமைத்திருந்தமைக் காக- ஜவகர் பால பவனுக்கு முதல் பரிசும், லேடி வெல்லிங்டன் பள் ளிக்கு இரண்டாவது பரிசும், சில்ரன் கார்டன் மேநிலைப் பள்ளிக்கு மூன்றாம் பரிசும் வழங் கப்பட்டது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
**என். இளங்கோ**









தெரிவிக்கப்பட்டது.

**உங்கள் வீட்டுப் பிள்ளை**

இச்சூழ்நிலைகளை விளக்கித்தான், இத்தொகுதியில் உள்ள வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் கைப்படவே கடிதம் எழுதி நேரில் அனுப்பி இருந்தேன், மேலும் என் கடிதத்தில், 'என் உயிருக்குப் பயந்து உங்களைக் காண நேரில் வராதிருக்கிறேன் என யாரும் கருதிட வேண்டாம். காவல்துறையினரது அறிவுரைக்கும், கழக முன்னணியினர் அன்புக் கட்டளைக்கும் கட்டுப்பட்டுத்தான், உங்களைக் காண வெளியில் வரமுடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளேன். விரைவில் இந்த நிலை மாறும்; நம்முடைய ஆட்சி அமையும்; தமிழகத்தில் சீரழிந்துபோன சட்டம்-ஒழுங்கு சீர்படுத்தப்படும்; அமைதி மிக்க தமிழ்நாடு உருவாகும். அத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கித் தந்துவிட்டு, ஓடோடி உங்களை வந்து சந்திப்பேன்; நன்றி கூறுவேன், தொகுதிக்கான நற்பணிகளை மேற்கொள்வேன்' என்றும் தெரிவித்திருந்தேன். என் நிலைமையை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இங்கு நான் கிராமம் கிராமமாக நேரில் சென்று ஆதரவு கோரியபோது, 'என்னை உங்கள் வீட்டுப்பிள்ளையாக நினைத்து, எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன். அந்த என் அன்பு வேண்டுகோளை மனமுவந்து ஏற்று, என்னை உங்கள் வீட்டுப் பிள்ளையாகவே பாவித்து, எனக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்த காங்கேயம் தொகுதி மக்களுக்கு, நான் என் வாழ்நாள் முழுவதும் பணிபுரியக் கடமைப்பட்டுள்ளேன்.

சொன்னது சொன்னபடி, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குச் சீர்செய்யப்பட்டு, போராளி குழுக்களின் நடமாட்டத்தையும், அவர்களது மிரட்டல்களையும் ஒடுக்கி, சரித்திரச் சாதனைகள் பலவற்றை அரசின் மூலம் நிகழ்த்திவிட்டு, உங்களைச் சந்திக்க ஓடோடி வந்திருக்கிறேன்.

நான் இத்தொகுதியின் பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் பொறுப்பேற்காமல், என்னை வெற்றி பெறச்செய்த இன்னொரு தொகுதியான பர்கூர் தொகுதியின் பிரதிநிதியாகச், சட்டமன்றப் பேரவையில் அங்கம் வகிப்பதற்கான உண்மைக் காரணத்தை இன்று உங்களிடம் தெரிவிக்கவும் நான் கடமைப்பட்டுள்ளேன். காங்கேயம் தொகுதி அமைந்துள்ள பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், தற்போது ஒன்றுக்கு இரண்டு அமைச்சர்கள்; மாண்புமிகு சகோதரர்கள் முத்துசாமி அவர்களும், செங்கோட்டையன் அவர்களும் இருக்கின்றனர். ஏற்கெனவே



பல்வேறு சந்தர்ப்பங்களில், வேறு பலரும் இப்பகுதியில் இருந்து அமைச்சர்களாக இருந்துள்ளனர். அந்த வகையில் காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, இம் மாவட்டத்தில் ஏனைய தொகுதிகளும், அவ்வப்போது சில அமைச்சர்களின் நேரடிப் பராமரிப்பில் இருந்திட வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

ஆனால், உங்களைப் போன்றே பெரும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புக்களுடனும், என்னை வெற்றி பெறச் செய்திட்ட, பர்கூர் தொகுதி அமைந்துள்ள தர்மபுரி மாவட்டத்தின் பிரதிநிதிகளாக, இதுவரை, நமது நாடு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே பார்த்தால் கூட, ஒருவர்கூட அமைச்சரவையில் பொறுப்பேற்கவில்லை, என்ற வருந்தத்தக்க நிலையே இருந்து வந்துள்ளது.

**பர்கூர் தொகுதிச் சிறப்பு**

பெரியார் மாவட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தருமபுரி மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். எனவே, அப்பகுதி மக்களின் அப்பெருங்குறையை, வாட்டத்தைப் போக்கவே, பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைத்துக்கொண்டு, இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தேன் என்ற உண்மையை - எனது உள்ள உணர்வை - தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இதுதவிர, வேறு எக்காரணமும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களாகிய உங்களை நான் என்றுமே மறக்க முடியாது. ஏனென்றால், என்னை முதலில் தேர்ந்தெடுத்து முதலமைச்சராக ஆக்கியதோடு மட்டுமல்லாமல், நான் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து நடந்த இடைத்தேர்தலில், என்மீது கொண்ட நம்பிக்கை காரணமாகவும், என் வேண்டுகோளுக்குச் செவிமடுத்தும், எனக்காக நீங்கள், இங்கே வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களையும், அமோகமாக வெற்றிபெறச் செய்து, இது எனது தொகுதிதான் என்பதை உறுதிப்படுத்தினீர்கள்.

ஆனால், என்னை நம்பி வாக்களித்த உங்களை மறந்துவிட்டேனா என எவரும் அஞ்ச வேண்டாம். உங்களையெல்லாம் நேரில் சந்தித்து, இந்த உண்மையைத் தெரிவித்துக்கொள்ளவே, இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, இப்போது அலைகடலெனத் திரண்டுள்ள உங்கள் முன் நின்று கொண்டிருக்கின்றேன்.

பர்கூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை நான் தக்கவைத்துக் கொண்டுள்ளேன் என்றாலும், என்னை முதலமைச்சராக்கிட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும், உற்சாகத்தோடும், என்னை வெற்றி பெறச்செய்த இக் காங்கேயம் தொகுதி, என்றும் எனது சொந்தத் தொகுதிதான் என்பதை, மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் தொகுதிக்கு என் மனதில் என்னென்ன வகையில் முன்னுரிமை உண்டோ - அதே முன்னுரிமை காங்கேயம் தொகுதிக்கும் உண்டு; என்றென்றும் உண்டு என்பதை மிக அழுத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் - பர்கூர் மட்டுமல்லாமல், மிகச் சோதனையான ஓர் காலக்கட்டத்தில், 1989 தேர்தலில் என்னை முதன் முதலாகச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த, மதுரை மாவட்டம் போடி



# சரித்திரச் சாதனைகள் பல நிகழ்த்தியுள்ள அரசு இது!

தொகுதியும் எனது தொகுதியே என்பதையும் நன்றியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னைத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச்செய்த இம்மூன்று தொகுதிகள் மட்டுமல்லாமல், என்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு, தமிழகம் முழுவதும் உள்ள தொகுதிகள் அனைத்திலும், அமோக வெற்றியை எங்கள் அணிக்கு அள்ளிக் குவித்தார்களே; அந்த வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளும் எனது தொகுதிகளே என்ற உணர்வுடன் தான், உங்கள் சகோதரியான நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

**மனித தெய்வங்கள்**

எங்களை வழிநடத்திச் செல்வது - எங்களை இத்தகைய உயர்வுக்கு ஆளாக்கியுள்ள ஏழை, எளிய, பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்களாக உள்ள மனித தெய்வங்கள் எங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் - மாமனிதர்களாக வாழ்ந்து மறைந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் நல்ல தத்துவங்களும் தான் ஆகும்.

நாங்கள் மக்களை முழுமையாக நம்பி தேர்தலில் நிற்பவர்கள். அதனாலேதான், எந்த வேட்பாளரை எங்கு நிற்க வைத்தாலும், எங்கள் வெற்றி உறுதியாகிறது. சில கட்சிகள் வேட்பாளரை மாற்றினால் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில், ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கி, பல முறை முழுத் தோல்வியைத் தழுவிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

மக்களையும் என்னையும் எந்தச் சக்தியும் பிரித்துவிட முடியாது, என்பதற்குரிய அனுபவ, நேரடி எடுத்துக் காட்டுகளில் ஒன்றுதான், எனது காங்கேயம் தொகுதியின் தொடர் வெற்றியாகும். எங்களை நம்புகிறவர்களுக்கு நாங்கள் தொண்டு செய்கிறோம். நம்பாதவர்கள் தோல்வியால், விரக்தியால் துவண்டு போகிறார்கள். ஏழைகள் என்னை, என் இயக்கத்தை அதிகமாக நேசிக்கிறார்கள், நம்புகிறார்கள். அது ஏழைகளின் குற்றமா? அல்லது எங்கள் குற்றமா? ஏழைகளின் குரலாய் இருந்து, ஏழைகளின் நலனுக்காகவே நல்லாட்சி புரிந்த புரட்சித் தலைவரின் வாரிசுகள் நாங்கள், ஆகவேதான் என்ன எதிர்ப்பு வந்தாலும், அது எந்தத் திசையிலிருந்து வந்தாலும், அவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், நான் ஏழை மக்களுக்குப் பணியாற்றுவதையே, என் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன்.

என்மீது தமிழக மக்கள் கொண்டுள்ள அளப்பரிய அன்பை ஈடுகட்டுவதற்காகவும், அவர்கள் என்மீது செலுத்தியுள்ள நம்பிக்கைக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காகவும், நான் மேற்கொண்டுள்ள புனிதப் பயணத்தை, என் உயிருக்கேகூட ஊறு நேரலாம் எனப் பலரும் எச்சரித்து வந்தாலும், தொய்வில்லாமல் தொடருவேன் என்று உறுதி கூறுகின்றேன். என்னைப் பொறுத்தமட்டில், உயிருக்குப் பயந்து, ஏற்றுக்கொண்ட புனிதப் பணியில் இருந்து சிறிதும் நான் பின்வாங்க மாட்டேன்;

நான் மக்களாகிய உங்களை மட்டும் நம்புவதால், எக்காலத்திலும் சோர்ந்து போக மாட்டேன்.



'அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா'

- எனப் பரணி பாடிய புரட்சித் தலைவர் வழி நடக்கும் என்னை, எவரும் பயமுறுத்திப் பணிய வைத்துவிட முடியாது. எனது நோக்கத்தைத் திசை திருப்பி, மக்கள் மன்றத்திலிருந்து என்னை அகற்றிவிட, எவர் நினைத்தாலும் அவர்கள் துவண்டுபோவார்கள், தோல்வியைத் தழுவுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த எதிர்ப்பையும் சந்திக்கின்ற, சமாளிக்கின்ற பயிற்சியை, நான் புரட்சித் தலைவரின் பாடசாலையின் நன்கு பயின்று உள்ளேன்.

**ஊக்க சக்தியும் ஆக்க சக்தியும்**

புரட்சித் தலைவர் எனக்கு வழங்கிவிட்டுப் போயிருக்கிற அளவிட முடியாத ஊக்க சக்தி அது! என்மீது மறைமுகத் தாக்குதல் நடத்துவோரின் வியூகத்தை முறியடிக்கும் ஆக்க சக்தி அது!!

சீர்கெட்டுக் கிடந்த தமிழகச் சட்ட ஒழுங்கு நிலையினை நிமிர்த்திக் காட்டிய பாங்கறிந்து, இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பலரும் நம்மை மனந்திறந்து பாராட்டும் நிலையை எய்தி உள்ளோம். தமிழகம் இழந்த பெருமையை மீண்டும் ஈட்டித் தருவதில், நமது அரசும், இயக்கமும் விரைந்து செயலாற்றி வருகின்றன.

இன்றைய தினம், காங்கேயம் மற்றும் அனைத்துத் தொகுதி மக்களின் நல்லாதரவோடு அமைந்துள்ள, உங்கள் சகோதரியின் தலைமையிலான உங்கள் அரசு, ஒட்டுமொத்த தமிழகத்தின் உயர்வுக்கும் - வளத்திற்கும், உரிய உயர்வான பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஆட்சிப் பொறுப்பேற்று, உங்கள் ஆசியோடு முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்தவுடன், முதல் உத்தரவாக மலிவுவிலை மதுக்கடைகளை மூடியதிலிருந்து, அண்மையில் நிலமற்ற ஏழை எளியோர் அனைவர்க்கும் பொங்கல் திருநாளுக்கென, இலவசமாக வேட்டி சேலைகள் வழங்க உத்தரவிட்டது வரை, ஏழை எளியோர் துயர் துடைப்பதையே, குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வருகிறோம்.

அதே நேரத்தில், நமது திட்டமிட்ட பயணத்தில் பல்வேறு இன்னல்களையும், எதிர்பாராத இடர்ப்பாடுகளையும் சந்திக்கிற பின்னணிக்கு, நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இதில் குறிப்பாக ஏழைகளைப் பாதிக்கிற பிரச்சினைகள் பற்றி,



# தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு: திட்டக்குழுத் துணைத்தலைவருடன் மாண்புமிகு முதல்வர் டெல்லியில் ஆலோசனை

1992-'93- ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டின் திட்ட ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை 10.1.'92 அன்று புதுடெல்லியில் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சு வார்த்தையின் போது, மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நெடுஞ்செழியன் மற்றும் அரசு அலுவலர்கள் முதல்வருக்கு உதவியாக இருந்தனர்.

திட்டத்தின் ஆதாரங்களைக் கணக்கிடுவதற்கு இடையூறாக இருக்கும் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். மத்திய அரசு, பண்டங்களின் நிர்ணய விலையை உயர்த்துவதற்கு முன்பு, மாநில அரசைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு பெருமளவில் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1992-93-ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசின் திட்ட முதலீடு தொகையை ரூ.1,751 கோடி என்று திட்டம் தீட்டியிருப்பதாகக் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது மிகவும் குறைந்த பட்சத் திட்ட முதலீடு என்று கூறினார்.

இந்த ஆண்டு தமிழக அரசு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் பெரும் முயற்சி எடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டி, மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தமிழகத்தின் வெற்றிகரமான நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சியைக் கருத்திற்கொண்டு அதற்கு இணையாக மத்திய அரசும் தன்னால் இயன்ற அளவு கணிசமான கூடுதல் மத்திய உதவி அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசு எதிர்நோக்கியுள்ள மிக மோசமான நிதி நெருக்கடியின் காரணமாக மாநில அரசுக்கான மத்திய நிதி உதவியைக் கொஞ்சமாகத்தான் உயர்த்த முடியுமெனத் திட்டக் குழுத் துணைத் தலைவர் குறிப்பிட்டார். இருந்தாலும் குறைந்தபட்சமாகத் தேசிய சராசரிக்கு இணையாகத் தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டு தனிநபர் திட்ட முதலீடு இருக்கும் வகையிலாவது 1992-'93-ஆம் ஆண்டுக்கான திட்டம் இருக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

இது குறித்து மேலும் ஆய்வு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை அலுவலர்களுக்கு முதல்வரின் விருதுகள்

1992-பொங்கல் திருநாளையொட்டி காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை ஆகியவற்றைச் சேர்ந்த 1,047 அலுவலர்களுக்கு முதலமைச்சரின் விருதுகள் வழங்க மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

காவல் துறையைச் சேர்ந்த 927 காவலர்களுக்கும், தீயணைப்புப் படையைச் சேர்ந்த 100 அலுவலர்களுக்கும், சிறைத் துறையைச் சேர்ந்த 20 அலுவலர்களுக்கும். ஆகமொத்தம் 1,047 பேர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

இந்த விருது பெறுவோருக்கு 1992 பிப்ரவரி மாதத்திலிருந்து மாதந்தோறும் அவர்களின் பதவியைப் பொறுத்து ரூ.20 அல்லது ரூ.25-ஊதியத்தில் கூடுதலாகக் கிடைக்கும்.



# என்னை வழிநடத்திச் செல்லுவது மனிததெய்வங்களின் நம்பிக்கையும் மாமனிதர்களின் தத்துவங்களுமே!

## காங்கேயத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் பெருமிதம்

நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பெயர் சூட்டப்பட்ட பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், தந்தை பெரியாரின் துணிவான குரல் ஒலித்த இடத்திலிருந்து, அவரது காலடி மண் மீது நின்று, எனதருமை வாக்காளப் பெருமக்களைச் சந்திப்பதில் பெருமிதம் அடைகின்றேன். எனது அரசியல் பயணத்தில், எனக்கு மாபெரும் வெற்றியை முதன்முதலாகத் தேடித்தந்து, இன்று நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலிருப்பதற்கு அன்றே அடித்தளம் அமைத்துக் கொடுத்த சிறப்பிற்குரிய மாவட்டம், உங்கள் மாவட்டம்.

சென்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், நான் எங்கு போட்டியிடுவேன் என்பதைத் தெரிந்துகொள்ள, நம்மவர்களும் மிக்க ஆவலோடு இருந்த நேரம்; நம் எதிரிகளும் மிகுந்த அக்கறை காட்டிய நேரம். அந்த இக்கட்டான நேரத்தில் தான், நான் போட்டியிடத் தேர்ந்தெடுத்த தொகுதி, காங்கேயம் என்றால், நான் உங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு என்பதை நீங்கள் உணர முடியும்! என் நம்பிக்கை வீண் போகவில்லை. நான் தேர்ந்தெடுத்துப் போட்டியிட்ட இத்தொகுதியில், வாக்காளப் பெருமக்கள் என்னை அமோகமாக வெற்றி பெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாட்சியை, மீண்டும் தமிழகத்தில் மலரச் செய்திடும் வாய்ப்பையும் வழங்கிவிட்டனர்.

அவ்வாறு என்னை மகத்தான வெற்றி பெறச்செய்த, இத்தொகுதியின் வணக்கத்திற்குரிய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், எனது இதய பூர்வமான நன்றியை முதற்கண் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்தக் காங்கேயம் தொகுதியில், நான் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த நேரத்தில், இத்தொகுதியின் அனைத்துக் கிராமங்களுக்கும் நேரில் சென்று வாக்குக் கேட்பது என்ற முடிவிலேயே இருந்தேன். அந்த வகையில்தான், இத்தொகுதியில் ஒரு நாள் முழுவதும் பல்வேறு கிராமங்களிலும், இதே காங்கேயம் நகரிலும், சென்னி மலையிலும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, உங்களை எல்லாம் நேரில் சந்தித்துச் சென்றேன். முதலில் திட்டமிட்டபடி, தேர்தல் கடந்த மே மாதம் 26-ந் தேதியே நடந்திருக்குமானால், 21,22 ஆகிய தேதிகளில் நான் பர்கூர் தொகுதிச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, 23,24 ஆகிய தேதிகளில் மீண்டும் இங்கு வந்து, எஞ்சிய எல்லா ஊர்களுக்கும் நேரில் சென்று, உங்களை எல்லாம் சந்தித்திருப்பேன்.

ஆனால், நாம் அனைவரும் சற்றும் எதிர்பார்க்காத, கொடிய நிகழ்ச்சியான ராஜீவ் காந்தி படுகொலை, 21-ந் தேதி அன்று நடைபெற்று, நடக்க இருந்த தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார் என்ற கொடுமையான செய்தி, அன்று பர்கூர் தொகுதியில் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் உடனடியாக எனது சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தச் செல்ல வேண்டியதாயிற்று. நம்முடைய வெற்றி விழாவில் கலந்து கொள்ள வரவேண்டிய, அந்த நல்லவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதே, என்ற பெருந்துயருடன் டெல்லி சென்று வந்தேன்.

அதன் பின்னர்தான், ராஜீவ் காந்தியைக் கொன்ற கொடியவர்களின் குறி, அவர்மீது மட்டுமல்லாது, என் மீதும் இருந்தது என்பதும், அக்கொலைக் கும்பலை இயக்கிய கொடியோர், பின்னாலிருந்து என்மீது தாக்கிடவே கட்டளையிட்டிருந்தனர் என்ற செய்தியும் கிடைத்தது. தேர்தல் ஜூன் மாதம் 15-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து நான் சுற்றுப் பயணம் செய்வது நல்லதல்ல என்ற எச்சரிக்கையும் என்னிடம்



ஏற்கெனவே மக்களின் கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன்.

மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், மத்திய அரசு அரசி விலையை உயர்த்தி உள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்களுக்குப் பதில் சொல்கிற நிலையில், இப்போது நான் இருக்கிறேன். அரிசி விலை உயர்வினால் மற்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் ஏறியுள்ளன. இந்த விலையேற்றத்திற்கான காரணங்களை மட்டும், சாத்ரண மக்களுக்குச் சொல்லிவிட்டால் போதுமா?

அதனால் அவர்களைத் திருப்திப்படுத்தி விட முடியுமா? அவர்களைக் கைதூக்கி விடுகிற காரியத்தை, அவர்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் காண, நமது அரசே முன்வர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

உர விலை ஏறியபோது, மண்ணெண்ணெய் விலை ஏறியபோது, டீசல், பெட்ரோல் மற்றும் சமையல் வாயு விலை ஏறியபோதெல்லாம், நான் மத்திய அரசின் கவனத்திற்கு அவைகளை நேரத்தோடும், காலத்தோடும் கொண்டு வந்திருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டின் திட்டச் செலவினை மத்திய அரசு குறைத்துவிட்டது என்று, பல்வேறு விவாதங்கள் மக்கள் மன்றத்தில் இப்போது நடந்து வருகின்றன. ஒரு சிலர், வேறு எந்தப் பிரச்சினையைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்புப் பெறாத காரணத்தினால், திட்டச் செலவுப் பிரச்சினையை முன்வைத்து, நம்மைத் திட்ட முன் வந்திருக்கின்றார்கள். மக்களைத் திசை திருப்ப முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டச் செலவிற்கு, எங்கள் அரசின் செயல்பாடுகள் காரணமில்லை. இருந்தபோதிலும், தமிழகத்தின் ஒட்டுமொத்த நலன் கருதி, இந்த ஆண்டுத் திட்டச் செலவினை மத்திய அரசிடமிருந்து உயர்த்திப் பெறுவதற்கு, அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். திட்டச் செலவுகளுக்குப் பணம் பெறுவதை மட்டும் அளவுகோலாக வைத்து, ஒரு மாநில அரசின் திறமையை, செயல்பாட்டை எவராலும் எடைபோட முடியாது. ஒரு ஜனநாயக நாட்டில், நிர்வாக முடிவுகளுக்கும், அரசியல் முடிவுகளுக்கும் உள்ள தொடர்பை, உண்மையான திறனாய்வாளர்களால்தான் கண்டுகொள்ள முடியுமே தவிர, அரசியல் குழப்பவாதிகளால் அதனை அறிந்து கொள்ளமுடியாது. இந்திய அரசியல் அமைப்பில், மாநிலங்கள் தங்களது எதிர்ப்பை ஜனநாயக முறையில் தெரிவிக்கிற பழக்கம், நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு மாநிலமும், திட்டச் செலவு குறித்து, மத்திய அரசிடம் அந்த வகையில்தான் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

**தொழிலாளர் நலன்**

இப்படிப்பட்ட தடைகளின் மூலம், எங்கள் அரசின் மக்கள் நலப்பணிகளை, எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஆரம்ப காலத்திலேயே, எதிர்ப்பட்ட தடைகளைக் கடந்துதான், இந்த அரசு எல்லா வகையிலும் செயல்பட்டு வருகிறது.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்தான், நாட்டில் மிகவும் குறைந்த வருமானம் உள்ள தொழிலாளர்கள் என்பதை உணர்ந்து, தொழிலாளர்கள் நலன் பேணி, அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கும் எங்கள் அரசு, இந்த ஆண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் நாளையொட்டி, ஒரு கோடியே இருபது இலட்சம் விவசாயத் தொழிலாளர்



• வீடு சின்னதாக இருக்கும் காரணத்தாலேயே ஒருவருடைய மனமும் சின்னதாக இருக்கும் என்று அர்த்தமல்ல.

களுக்கு, இலவசமாக வேட்டி, சேலை வழங்கி வருகிறது.

பணப்பற்றாக்குறை உள்ளபோதிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் செயல்வடிவம் கொடுத்துத் துவக்கிய, தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டுக்கு ஆந்திர மாநிலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும்பணி, விரைவில் முடிக்கப்படப் போராடும் உத்வேகத்தில்தான், அண்மையில் ஐதராபாத் நகரில் ஆந்திர முதல்வர் அவர்களைக் கலந்து பேசினேன். விரைவில் புரட்சித் தலைவர் அவர்களின் கனவு நனவாக்கப்படும் என்பதை, மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக் குடிநீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதோடு மட்டும், தண்ணீர்ப் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை.

**ஆத்திரக்காரர்கள்**

தமிழ் மக்கள் தாய் என்று போற்றி வணங்கும் காவிரி நதி நீரைத் தமிழ் நாட்டிற்கு வரவிடாமல் தடுக்கும் சிலரின் நியாயமற்ற முயற்சிக்கு, இந்த அரசு கடுமையாக எதிர்ப்புக் குரல் கொடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். காவிரி நீர் நடுவர் மன்றமும், உச்சநீதி மன்றமும், அரசிதழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பை வெளியிட்ட மத்திய அரசும், நமது நியாயத்தைஉணர்ந்துதான் இருக்கின்றன. ஆனால் அதை உணர வேண்டிய அண்டை மாநிலமான கர்நாடக அரசு மட்டும், அதை உணர்ந்ததாகவே தெரியவில்லை. ஆண்டாண்டுக் காலமாய், கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சிக்கு உழைத்து வரும் கர்நாடகத் தமிழர் மீது, வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சியில், கர்நாடகத் தமிழர்கள் பங்கு எப்படிப்பட்டது என்பதை, கர்நாடகத்தில் வாழும் கன்னட மக்கள் அனைவரும் அறிவார்கள்.

மாநில அரசு மட்டும் மவுனம் சாதிக்கிறது; மக்களைத் திசை திருப்புகிறது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது போல, ஒரு சில கன்னட வெறியர்கள் அவிழ்த்துவிட்ட வன்முறையால், ஒரு இலட்சத்திற்கும் மேலான, ஒரு பாவமும் அறியாத அப்பாவி கர்நாடகத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வன்முறையைத் தூண்டியவர்கள்மீது, கர்நாடக அரசு கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும்; இந்திய ஒருமைப்பாடு காக்க உடன் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பொது வாழ்வில் சுயநலம் தேடும் கர்நாடக வன்முறைக் கும்பல்களைக் கட்டுப்படுத்தி, தமிழ்நாட்டிற்கு ஓடி வந்துள்ள கர்நாடகத் தமிழர்களை, மீண்டும் முன் போலவே கர்நாடகத்தில் பாதுகாப்பாக வாழவைக்க, அனைத்து ஏற்பாடுகளையும் கர்நாடக அரசு செய்து தரவேண்டும். தமிழகத்தின் பெருந்தன்மையை, பொறுமையை, எவரும் பலவீனமாகக் கருதிடக் கூடாது என்று, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயமாகக் கிடைக்க வேண்டிய காவிரி நீர், தற்போதைக்குக் கிடைக்காமல் இழுபறியாய் இருந்தாலும், தமிழகத்தின் பெருந்தன்மைக்கு இயற்கையே உதவும் வகையில், நமது மாநிலத்தில் போதுமான அளவு மழை பெய்து, இந்த ஆண்டு தமிழகத்தில் வேளாண்மை, வெற்றிகரமாக அமையும் சூழ்நிலை உருவாகியுள்ளது கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மேம்பாட்டுக்கு உளப்பூர்வமாக, தீவிரமாக உழைக்கின்ற அரசு எங்கள் அரசு என்பதை, ஆட்சிப் பொறுப் பேற்ற ஒருசில மாதங்களிலேயே, தமிழக மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். தேர்தல் வாக்குறுதிகளாக நாங்கள் அறிவித்திருந்த அனைத்தையுமே, ஒன்றன்

(41—ஆம் பக்கம் பார்க்க)







# மாமல்லபுரம்

# பொங்கல் நாட்டிய விழா

## மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசும் மத்திய அரசும் இணைந்து, மாமல்லபுரத்தில் நடத்தும் இந்தப் பொங்கல் நாட்டிய விழாவில் கலந்துகொண்டு, அதைத் தொடங்கி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மக்கட்பணி ஆற்றி வருகின்ற எனக்கும் நாட்டியத்திற்கும், நிறைய தொடர்பு உண்டு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். பன்னாட்டுப் பயணிகள் நம் நாட்டிற்கு வருகை தந்து, இந்தத் துணைக் கண்டத்தில் உள்ள பல மாநிலங்களுக்குச் சென்று, அங்குள்ள கலை நுட்பங்கள், சிற்பங்களின் பெருமைகள், திருக்கோயில்களின் புராதனம், மக்களின் எளிமை, அவர்களின் உயர்ந்த பண்பு, ஆகியவற்றையெல்லாம் கண்டு களித்து; நமது சிறப்பான வரலாறு, உயர்ந்த நாகரீகம் போன்றவற்றை, ஆழ்ந்து உணர்ந்துகொள்ளக் கூடிய வாய்ப்பினை அவர்களுக்கு இந்த விழா தருகிறது. அந்த அடிப்படையில், இதுபோன்ற விழாக்களை ஏற்பாடு செய்வது, இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

நம் நாட்டிற்கு, குறிப்பாக இவ்வாண்டு, வெளிநாட்டுப் பயணிகள் அதிக அளவில் வரவேண்டும் என்ற நோக்கத்துடன், இதுபோன்ற விழாக்கள் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாநில அரசோடு மத்திய அரசும் இணைந்து இம்முயற்சியில் ஈடுபட முன்வந்துள்ளதை, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். சுற்றுலா வளர்ச்சியில் மத்திய அரசும், மாநில அரசும் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இணைந்து செயல்பட்டால்தான், சுற்றுலா வளர்ச்சியில் சிறந்த சாதனைகளைப் புரிய முடியும். அதற்கு ஒரு முன்னோடியாகத் தான், இன்று இந்தப் பொங்கல் நாட்டிய விழா இங்கே நடத்தப்படுகிறது.

நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை



மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரதநாட்டியம் விளங்குகிறது.

"அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" என்று, இறைவனையே பரதக் கலையின் கண் கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

இந்தியத் திருநாட்டின் நடனங்கள், கலைப் பொக்கிஷங்கள் மட்டுமல்ல, அவை இந்திய

## பொங்கல்-நாட்டிய விழா தொடக்க விழா

பொங்கல்-நாட்டிய விழா 15.1.92 அன்று மாலை 6 மணி அளவில் மாமல்லபுரத்தில் தொடங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நாட்டிய நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து, மாமல்லபுரம் நகர் வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விழா தொடங்கு முன்பாக, மாமல்லபுரம் புதிய அமைப்பின் மாதிரி அமைப்பினைப் பார்வையிட்டார். விழாவிற்குச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுற்றுலாத் துறையின் சார்பில் பொன்னாடை போர்த்தினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலா பிரியா இ.ஆ.ப. அவர்களும் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை உரை ஆற்றினார். இதனை அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் அடிக்கற்களைத் திறந்து வைத்தார். ரூ.20 இலட்சம் செலவில் கிழக்கு—ராஜவீதி அபிவிருத்தித் திட்டம், ரூ.88 இலட்சத்தில் பேருந்து நிலையம், 7.07 இலட்சம் ரூபாய் செலவில் கோயில் அருகில் வாகனங்கள் நிறுத்தும் இடம், 5.60 இலட்சம் ரூபாய் செலவில், ஐந்து ரதங்கள் அருகில் வாகனங்கள் நிறுத்துமிடம், மற்றும் 2.87 இலட்சம் ரூபாய் செலவில் ஓய்வெடுக்கும் இடத்தையும் அர்ச்சுனனின் தவம்' இடத்தை அபிவிருத்தி செய்யவும் அடிக்கல் திறந்து வைக்கப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்தபின், சிறப்புரை ஆற்றினார்.

விழா துவங்கும் வரையில் நாதசுவர இசை வழங்கிய டாக்டர் நாமகிரிப்பேட்டை திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும், பரத நாட்டியம் ஆட இருந்த டாக்டர் பத்மா சுப்பிரமணியத்திற்கும் முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. க.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவில் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். விழாவிற்கு வருகை தந்திருந்த மக்கள் வெள்ளத்தில் ஏராளமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் காண முடிந்தது.

விழா இறுதியில் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் பரத நாட்டிய நிகழ்ச்சியும், ஆவடி காவல் துறையினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலை நிகழ்ச்சிகளைக் கடைசிவரை இருந்து கண்டுகளித்தார்.

நிகழ்ச்சித் தொகுப்பு
இரா. இராச சேகரன்



### திருக்குறள் அரசு

இன்று திருக்குறள் அரசு நடக்கிறது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்; இதுவரை வேறு எந்த முதல்வரும் இப்படி அறிக்கை விட்டதில்லை. இதற்காகத் தமிழர்கள் அனைவருமே அவரைப் பாராட்ட வேண்டும்.

கோயில்களே ஒழுக்கத்தைக் [illegible] கல்லூரிகள் என்பதால்தான் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தை முதன்மைப்படுத்தியிருக்கிறார்; மனிதனுக்கு ஒழுக்கம் அவசியம் என்பதால்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோயில் திருப்பணி நிதியைத் துவக்கியிருக்கிறார்; அதையடுத்துத் தண்ணீரின் அவசியத்தைச் சொல்லியிருக்கிறார் திருவள்ளுவர்; இதையுணர்ந்தே தட்டுப்பாடின்றித் தண்ணீர் கிடைக்கவும் செய்திருக்கிறார் காவிரிச் செல்வியாம் நம் முதலமைச்சர். மூன்றாவதாகக் கள்ளுண்ணாமையை வலியுறுத்தியிருக்கிறார் திருவள்ளுவர்; இதையறிந்துதான், நமது முதல்வர் அவர்கள், மதுவிலக்கை மிகத் தீவிரமாக அமல்படுத்தியிருக்கிறார்.

இதற்காகவே புரட்சித்தலைவி அவர்களைக் கோயில் கட்டிக் கும்பிட வேண்டும்.

—திருக்குறளார்
திரு. வீ. முனிசாமி
(16.1.92-இல், திருவள்ளுவர் திருநாளில் பேசியதிலிருந்து)

நாட்டின் ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகவும் விளங்குகின்றன. எனவே, இந்தக் கலைகளைக் கட்டிக்காத்து வளர்ப்பது, நமது தலையாயக் கடமையாகும்.

இந்தப் பொங்கல் நாட்டிய விழா, வரலாற்றுச் சிறப்புமிக்க, உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரத்தில் நடைபெறுகிறது. மாமல்லபுரம் ஒரு காலத்தில் வளம் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிய இடம். தமிழகத்தின் வரலாற்றுப் புகழையும், பண்பாட்டுப் பெருமையையும், நாகரிக மேம்பாட்டையும், விளக்கிக் காட்டிடும் தொல்பொருள் செல்வங்கள், இங்கு ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்தின் வரலாற்றுக்கு, புகழ் தரக்கூடிய பற்பல உண்மைகள் இங்கே புதைந்து கிடக்கின்றன. எத்தனையோ குடவறைக் கோயில்கள், பாறைச் சிற்பங்கள், கட்டடக் கோயில்கள், பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டு, இன்றும் தமிழகத்தின் பழமைக் கலைகளைப்பறைசாற்றும் சாட்சிகளாக நிலைத்திருக்கின்றன. அதற்கு மேலாக, மாமல்லபுரத்தை நிர்மாணித்த மன்னன், ஓர் கலையுலகையே இங்கு அமைத்துள்ளார்.



மாமல்லபுரத்துக் கலைகள், என்றென்றும் மக்கள் மனதில் அழியாத இடம் பெற்றுள்ளது போல, பன்னாட்டு மக்களை மாமல்லபுரத்தில் வரவேற்று, அவர்கள் தமிழகத்தின் எழில் மிகுந்த கலைகளைக் கண்டு, கேட்டு, இன்புறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பொங்கல் நாட்டிய விழாவும், மக்கள் மனதில் நின்று நிலவி, புகழ்பெற வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில், மாமல்லபுர நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், சுற்றுலா அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்ததிலும், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் கலந்து கொண்டுள்ள அனைத்துக் கலைஞர்களுக்கும், வருகை தந்துள்ள பன்னாட்டுப் பயணிகளுக்கும், இங்கு கூடியுள்ள அனைத்துப் பெருமக்களுக்கும், எனது பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாமல்லபுரம் பொங்கல்-நாட்டிய விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் (15.1.1992) ஆற்றிய உரை**

# நீலகிரி மாவட்ட நலப்பணிகள்



நீலகிரி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டிற்கு ரூ.49.190 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில். மொத்தம் 1,574 நபர்களுக்கு மானியத் தொகையுடன் கூடிய கடன் வழங்கப்படும். இதில் மத்திய, மாநில அரசுகளின் பங்குகளாக ரூ.24.595 இலட்சம் வீதமாக இருக்கும்.

நடப்பு ஆண்டில் எண்ணிக்கை, நிதி அளவு கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்படும்:

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு - மொத்த இலக்கில் 50 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

2. பெண்களுக்கு - மொத்த இலக்கில் 40 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

3. ஊனமுற்ற நபர்களுக்கு மொத்த இலக்கில் 3 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

இதுவரையிலும் மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ரூ.24.594 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

பயனாளிகளின் தேர்வு முடிவு பெற்றுள்ளது. இதுவரையில் மொத்தம் 1,086 நபர்களுக்கு, ரூ.22.634 இலட்சம் வங்கிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சி (டிரைசம்):**

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டிற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 35 நபர்கள் வீதம் மொத்தம் 140 நபர்கள் பல்வேறு பயிற்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் தற்போது 50 நபர்கள் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 300 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ரூ.55.500 இலட்சமும், ஒரு ஊராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.0.910 இலட்சமும், 4 பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு 7.200 இலட்சமும், 9 சிறிய பாலம் கட்டுவதற்கு ரூ.2,899 இலட்சமும், 2 மதிய உணவுக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.2.00 இலட்சமும், 25 தார்ச் சாலைகள் (20.2 கி.மீ.) அமைப்பதற்கு 44.897 இலட்சமும், 9 கப்பிச் சாலைகள் (6.8 கி.மீ.) அமைப்பதற்கு 11.480 இலட்சமும் 21 வடிகால் வேலைகள் செய்வதற்கு 5.997 இலட்சமும், 4 குடிநீர் வினியோகம் செய்வதற்கு 1.140 இலட்சமும், 13 இதர வேலைகளுக்காக 4.847 இலட்சமும், 250 எக்டேர் பரப்பிற்குச் சமூகக் காடுகள் ஏற்படுத்த ரூ. 5.480 இலட்சமும் ஆக ரூ.142.350 இலட்சத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதி ரூ.41.60 இலட்சம் இதுகாறும் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.40.24 இலட்சம் கிராம மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் மற்றும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் வேலைகளை நிறைவேற்றப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

தமிழக அரசு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான சில அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதாகும். இத்திட்டத்தின் கீழ், பருவ நிலைக்கு ஏற்ற வகையில் சாலைகள் அமைத்தல், இதுவரை குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சொந்தக் கட்டடம் இல்லாத பள்ளிகளுக்கு ஒரு சொந்தப் பள்ளிக் கட்டடமும், ஆரம்பப் பள்ளிக்கு ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடமும் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையம் கட்டடம் இல்லாத மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்தல், தெருவிளக்கு போடுதல், ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல் ஆகிய பணிகள் செய்து தரப்படும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவும் செப்டம்பர் 1992-க்குள் முடிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்ட நிதியுடன் சேர்த்து ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையின் மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செவ்வனே நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> **அறியாமை-இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம், குருட்டு நம்பிக்கையின் அன்னை, சங்கடம் தோன்றிய இடம், அழிவும், வறுமையும் வாழ்ந்து வரும் தாயகம்.**
>
> —இங்கர்சால்

**நீலகிரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சிப் பணிகள்**

இயற்கை எழிலுக்குப் பெயர் பெற்றது நீலகிரி மாவட்டம். இம்மாவட்டத்தில் தேயிலை, காப்பி, காய்கறிகள், வாசனைப் பொருட்கள் உற்பத்தி போன்றவை முக்கியத் தொழில்களாக இருப்பினும், பட்டு வளர்ச்சித் தொழிலும் இம்மாவட்டத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பட்டு வளர்ப்பு மூலம் இம்மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றம் போன்றவைகளுக்குப் பட்டு வளர்ப்புத் தொழில் முக்கிய காரணமாக அமைகின்றன.

இம்மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி 1981-82-ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு, தற்சமயம் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம், தாழ்த்தப்பட்டோருக்கான சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குன்னூரில் உள்ள மாநில பட்டு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தின் மூலம் 'தமிழ்நாடு வெள்ளை' என்ற வெள்ளை நிற நாட்டினக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, மத்திய பட்டு ஆராய்ச்சி மையத்தினரால் சிறந்த இனம் என ஒப்புதல் பெற்றுள்ளது இதன் சிறப்பாகும்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

1991-92-ஆம் ஆண்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.9.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 50.00 ஏக்கரில் புதிதாக முசுக்கொட்டை நடவு செய்யப்பட்ட மாதம் ரூ.150 உதவித்தொகையுடன் 51 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ள்ளது. இதில் 31 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள். இதன்பின் தலா ரூ.300 மதிப்புள்ள இலவசப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்கப்படவுள்ளன். அடுத்த ஆண்டில் நடவு மேற்கொள்ளத் தனியார் மூலம் சாம்பல் நோய் தாக்காத இனமாக எம்ஆர்.2 இனத்தில் 2.0 இலட்சம் நாற்றுகளும், அரசுப் பண்ணைகளின் மூலம் 1.44 இலட்சம் நாற்றுகளும் நடவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் குன்னூர் அருகே உள்ள ஸ்பிரிங்பீல்டு பட்டுப் பண்ணையில் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க ரூ.3.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பண்ணைக்காக 2.00 ஏக்கரில் முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வெள்ளேரிக் கம்பையில் உள்ள ஆதிவாசிகள் பண்ணையைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்க ரூ.0.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் தலா ரூ.8,500 வீதம் 51 நபர்களுக்குக் கடன் வழங்கி அதில் 20 பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 15 சதவிகித மானியமும், 31 தாழ்த்தப்பட்ட, மலைச்சாதியினருக்கு 25 சதவிகித மானியமும் வழங்கத் தொகை ஒதக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் இதுவரை 26 நபர்களுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1989-90-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1991-92-ஆம் ஆண்டு முசுக்கொட்டை விரிவாக்கம் இலக்கு 125.00 ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டு 120.00 ஏக்கர் முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டுள்ளது. இதில் 40 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு தலா ரூ.150 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்குத் தலா ரூ.150 மதிப்புள்ள விஞ்ஞானப் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. இதில் 12 நபர்கள் தாழ்த்தப்பட்ட, மலைச் சாதி இனத்தவர்கள், 20 பேர் பெண்கள். இத்திட்டத்தின் மூலம் தலா ரூ.8,500 வீதம் 42 நபர்களுக்கு மானியமில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 85,000 முட்டைத் தொகுதிகள் வளர்த்து சுமார் 28.0 இலட்சம் மதிப்புள்ள 22,350 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், சரக உதவி ஆய்வாளர், இளநிலை ஆய்வாளர்கள் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**பைவோல்டின் பண்ணை, மசக்கல்**

இந்தப் பண்ணையில் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யத் தேவையான இரு சுழற்சி இனப் (பைவோல்டின்) பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசு வித்தகம் கோவைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் 1991-92-ஆம் ஆண்டில் 1.15 இலட்சம் இரு சுழற்சி இன விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**இளம்புழு வளர்ப்பு மையம் தெங்குமாராஹாடா**

இந்தப் பண்ணை மூலம் நவீன முறையில் இளம்புழு வளர்த்துத் தருவதால் தனியார் விவசாயிகள் முதிர்ந்த புழு வளர்ப்பில் தோல்வியைத் தவிர்த்து அதிகப் பட்டுக் கூடுகள் அறுவடை செய்கிறார்கள். இம்மையத்தில் 1991-92-ஆம் ஆண்டில் 36.600 முட்டைத் தொகுதிகள் இளம் புழுக்களாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பது அமர கவியின் வாக்கு. இவ்வாக்கினை அடிப்படையாகக் கொண்டு பட்டுத் தொழில் வளர்ச்சி நீலகிரி மாவட்டத்தில் செம்மையுற நடைபெற்று வருகிறது.

*-மு.நா. கிருஷ்ணசாமி,*
*உதவி மக்கள் தொடர்பு அலுவலர்*
*நீலகிரி மாவட்டம்*

இலட்சம் செலவில் விரிவுபடுத்தப் பட்டு வருகிறது.

புதியதாகப் பட்டுநூற்பு ஆலைகள் தொடங்க உள்ள பட்டுநூற்பாளர் களுக்கு நடைமுறை மூலதனக் கடன் பெற உதவி செய்யப்படுகிறது. இதில், ஒரு பேசினுக்கு ரூ.9,000 வங்கிக் கடன் பெறவும் அவ்வாறு கடன் வழங்கும் வங்கிகளுக்கு ஒரு பேசினுக்கு ரூ.4,500 அரசு நிரந்தர இட்டு வைப்பு வழங்குகிறது. அதிலிருந்து வரக்கூடிய வட்டியின் ஒரு பகுதி, கடன் பெற்ற நூற்பாளருக்கு வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 120 பேசின்களும் 14 சர்க்காக்களும் பட்டுநூற்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 300 பெண்கள் நிரந்தர வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

விவசாயிகட்குத் தரமான முட்டை வழங்க ஆண்டுக்கு 10 இலட்சம் முட்டை உற்பத்தி செய்யும் திறனுடன் ஒரு பட்டு முட்டை வித்தகம் செயல்பட்டு வருகிறது. இவ்வித்தகம், மதுரை, பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளின் தேவைகளையும் பூர்த்திசெய்து வருகிறது. இது தவிர, நடப்பு ஆண்டில் ஒரு தனியார் வித்தகம் திண்டுக்கல்லில் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், செயல்பட்டு வருகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளைத் தரத்திற்கேற்ற நியாயமான விலைக்கு விற்பனை செய்ய திண்டுக்கல்லில் அரசு பட்டுக்கூடு அங்காடி செயல்பட்டு வருகிறது. இங்கு அரசு மற்றும் தனியார் பட்டுநூற்பாளர்கள் ஏல முறையில் பட்டுக்கூடு கொள்முதல் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு 1.5 இலட்சம் கிலோ கூடுகள் அங்காடி மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தேசியப்பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், புதிய பட்டு நூற்பாளர்களுக்குத் தேவையான தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு கிராமியப் பட்டுநூற்பு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, ஆண்டுக்கு 40 பெண்களுக்கு 6 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ஒரு பயிற்சியாளருக்கு ரூ.250 பயிற்சித் தொகை வழங்கப்படுகிறது. மூன்று ஆண்டுகளில் 128 பயிற்சியாளர்கட்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. உதவித் தொகை மற்றும் கச்சாப் பொருள் ஆகியவற்றுக்கு ஆண்டுக்கு ரூ.4.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மாதிரி மல்பரி, பண்ணைகள் மூன்று சின்னகலையம்புத்தூர், நாகம்பட்டி, வேல்வார்க்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இங்கு இளம்புழு வளர்த்து விவசாயிகட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுக்கு 45,000 முட்டைகள் வளர்த்து விநியோகம் செய்யப்படுகின்றன. இங்கு மல்பரி நாற்றுகள் வளர்த்து விவசாயிகட்கு வழங்கப் பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 100 விவசாயிகட்கு 1991-92-ஆம் ஆண்டில் 2.63 இலட்சம் செலவில் திட்டம் அனுமதிக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், புதியதாக நடவு செய்யும் விவசாயிகட்குப் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி, கல்விச் சுற்றுலா, புழு வளர்ப்பு மனை கட்ட புழு வளர்ப்புத் தளவாடம் மற்றும் செடி நடவு செய்யக் கடன் ரூ.9,000 வழங்கப்பட்டு அதில் 25 சதம் மானியமாக வழங்கப் படுகிறது.

இம்மாவட்டத்தில் ஏழு தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 ஏக்கரில் மல்பரி நடவு செய்யவும், 20 பெண்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், 20 புழு வளர்ப்பு மனைகள் அமைத்து அதில் தேவையான உபகரணங்கள் வைக்கவும் பயிற்சி பெற்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் 0.50 ஏக்கர் மல்பரி தோட்டமும் புழு வளர்ப்பு மனை அதற்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டு உள்ளன. 5 ஆண்டுகள் கழித்து இதிலிருந்து வரக்கூடிய வருமானத்தைச் சேமிப்பு செய்ததன் மூலம் சொந்த நிலம் வாங்கி இதே தொழிலைத் தொடரத் திட்டமிடப்பட்டு 1,440 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு ஆகும் மொத்தம் ரூ.16.10 இலட்சத்தில் அரசு உதவியாக ரூ.11.16 இலட்சம் ஏழு தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

திண்டுக்கல், பழனி, நத்தம், நிலக்கோட்டை ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை விவசாயிகட்குத் தேவையான இடுபொருள்கள் வழங்கவும், மேலும் தேவையான சேவைகளைச் செய்து வருகின்றது. இங்கு பட்டுநூல் முறுக்கேற்றும் பணி நடைபெற்று வருகின்றன. இங்கு சின்னாளப்பட்டியில் ரூ.4 இலட்சம் செலவில் பெண்களுக்கான பட்டுநூல் நூற்பு மற்றும் முறுக்கேற்றும் சங்கம் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 60 பெண்கள் அங்கத்தினர்களாகவும், சங்கத்தில் பணி செய்வதன் மூலம் நிரந்தர வேலைவாய்ப்பும் பெற்று வருகின்றனர்.

**மு. பிச்சையா**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்**

## சாலை விபத்துக்கள் குறைந்துள்ளன!

**1990-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1991-ஆம் ஆண்டில் சாலை விபத்துக்கள் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.**

**1990-இல் நடந்த 5,877 விபத்துக்களில், 481 பேர் இறந்துள்ளனர். 1991-இல் 5,103 விபத்துக்களில், 416 பேர் இறந்துள்ளனர்.**

**சென்னை நகரில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 1991-இல், 1,01,513 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் அதிக வேகமாக வாகனங்களை ஓட்டியதற்காக 36,798 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதேபோல சமிக்ஞைகளை மதிக்காமல் சென்றதற்காக 26,557 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.**

**இந்தத் தகவல்களைச் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ராஜகோபாலன் தெரிவித்தார்.**



மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ் விழாவில் கலந்துகொண்டு - திருவள்ளுவர் விருது, சிறந்த நூல்களுக்குப் பரிசு, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி, தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதிய அரசு அலுவலர்களுக்குப் பரிசுகள் ஆகியவற்றை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

கொண்டு வந்தார்; இன்றைய தினம் அதற்கு ஆக்கம் தருகிறார் புரட்சித் தலைவி அவர்கள்; புதியதோர் வரலாற்றைப் பொன்னெழுத்துக்களால் பொறித்து வருகிறார்' என்று அப் போது அவர் குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு, இராம வீரப்பன்

# திருவள்ளுவர் திருநாள்



திருவள்ளுவர் திருநாள் விழா, தமிழ்நாடு அரசு சார்பில் 16.1.1992 அன்று மாலை சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழா மேடையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர் படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

**வரவேற்புரை**

தமிழ்த்தாய் வாழ்த்தோடும், டாக்டர் சிவ சிதம்பரம் பாடிய திருக்குறள் வாழ்த்தோடும் தொடங்கிய இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற் புரையாற்றினார்.

'இந்த நந்நாள், தமிழ் வளர்ச்சித் துறைக்கு வாய்த்த ஒரு பொன்னாள்; இந்த நாளில் புரட்சித் தலைவர் அவர்களே திருவள்ளுவர் விருது வழங்கும் முறையினைக்

அவர்கள் பொன்னாடை அணிவித்தார்.

**தலைமையுரை**

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில்-

'புரட்சித் தலைவியின் அரசு காயாத சூரியனாகத் தேயாத சந்திரனாகப் பவனி வந்துகொண்டிருக்கிறது. காய்கின்ற சூரியன் வெளியே எங்கோ இருக்கலாம்; அது மாலை





# தகவல் தொடர்பில் அஞ்சல் துறையின் அரிய சாதனை

நமது நாட்டில் தகவல் தொடர்பில் முக்கியப் பங்கு வகிப்பது அஞ்சல் துறையே ஆகும். இந்தியாவின் மக்கள் தொகையில் பாதிக்குமேலானோர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள். தொலைதூரப் பகுதிகளிலும் மூலை முடுக்குகளிலும் வசிக்கும் இந்த மக்களுடன் தொடர்பு கொள்ள உதவும் ஒரே சாதனம் கடிதப் போக்குவரத்தே ஆகும்.

உலகத்திலுள்ள அனைத்து நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது தபால் துறையே மிகப் பெரிய விரிந்த துறையாகும். ஆண்டுதோறும் சுமார் 4,000 மில்லியன் கடிதங்களை இத்துறை கையாளுகிறது. இந்தியாவிலுள்ள மொத்தம் 1,47,500 அஞ்சல் அலுவலகங்களில் சுமார் 89 சதவிகிதம் (1,32,500) கிராமப்புறங்களில் நிறுவப்பட்டுள்ளன. நமது நாட்டின் மிகத் தொன்மையான துறைகளில் ஒன்றான அஞ்சல் துறை, சுமார் 6 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தகவல் தொடர்பில் ஈடுபட்டுள்ள பிற துறைகள், நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு மிக வேகமாக முன்னேறி வந்தாலும், அஞ்சல் துறையும் தனது சேவையில் பின்தங்கிவிடவில்லை. அஞ்சல் அலுவலகங்களில் போதிய இடவசதியின்மை, ஒழுங்கற்ற முறையில் விரைவில் உருவாகிவிடும் நகரங்கள், கடிதங்களை விரைவில் பட்டுவாடா செய்வதற்கு இடையூறாக உள்ள போக்குவரத்து நெரிசல்கள், நாளுக்கு நாள் பெருகிவரும் ஆயிரக்கணக்கான கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்தக் கிடைக்கும் குறுகிய காலம் போன்ற பல இடையூறுகள் அஞ்சல் துறையின் பணியை மிக வெகுவாகப் பாதித்த போதிலும், இத்துறை தனது பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு செவ்வனே பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது.

அஞ்சல் துறையின் பணியினை மேம்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்ட நிபுணர் குழு 1980-இல் அளிக்கப்பட்ட தனது அறிக்கையில், அஞ்சல் துறை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தது. இதன் அடிப்படையில் இந்திய அஞ்சல் பணியில் நவீன தொழில்நுட்பங்களைப் படிப்படியாகப் புகுத்த அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

நமது நாட்டில் சென்னை, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் உச்சி வேளைகளில் பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் வந்து குவிகின்றன. இவைகளைக் குறுகிய காலத்திற்குள் பிரித்து பட்டுவாடா செய்யவேண்டியிருக்கிறது. மனிதர்களைக் கொண்டு இவற்றைப் பிரிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதால், ஒரு நாளைக்கு 30 ஆயிரம் கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்தக்கூடிய அஞ்சல் பிரிக்கும் இயந்திரங்களைக்கையாள அஞ்சல் துறை தீர்மானித்துள்ளது. இதன்படி முதல்கட்டமாக சென்னை, டெல்லி, கல்கத்தா, பம்பாய், பெங்களூர், ஆமதாபாத், ஐதராபாத் ஆகிய நகரங்களில் இத்தகைய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைப்போல அஞ்சல் அலுவலகங்களில், மணியார்டர்கள், பதிவு அஞ்சல்கள், பார்சல்கள், துரித அஞ்சல் (Speed Post) போன்றவற்றைக் கையாளுவதில் ஏற்படும் நீண்ட காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், நாட்டின் பல்வேறு அஞ்சல் அலுவலகங்களிலும் உள்ள சுமார் 8,000 கவுண்டர்களை இயந்திரமயமாக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவைகளில் பலநோக்குப் பயனுடைய இயந்திரங்களைக் கொண்ட கணிப்பொறிச் (Computer) சாதனங்கள் நிறுவப்படும். இவற்றால் கடிதப் போக்குவரத்து துரிதப்படுத்தப்படுவதுடன், அஞ்சல் அலுவலகங்களில் தற்சமயம் நிலவும் இடநெருக்கடியும் கணிசமான அளவுக்குக் குறையும்.

மணியார்டர்களைப் பட்டுவாடா செய்வதில் ஏற்படும் காலதாமதம் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், இன்னும் நமது நாட்டிலுள்ள சில கிராமங்களுக்கு மணியார்டர் சென்றடைய 15 நாட்களுக்கு மேல் ஆகிறது. கிராமப்புறங்களில் மணியார்டர்களைக் காலதாமதமின்றி உடனுக்குடன் பட்டுவாடா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மணியார்டர்கள் மற்றும் கடிதங்களைத் துரிதமாக அனுப்ப மின்னணுச் சாதனங்கள் (Electronic Money Order Transfer) அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

நகரங்களில் நாளுக்குநாள் உருவாகிவரும் பல மாடிக் கட்டடங்களில் குடியிருப்பவர்களுக்கு வீடுவீடாகச் சென்று தபால் பட்டுவாடா செய்வதில் அஞ்சல் துறைக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டும், கடிதங்களை விரைவில் பட்டுவாடா செய்யவும் பல மாடிக் கட்டடங்களில் குடியிருப்பவர்கள் தங்கள் கட்டடத்தின் அடித்தளத்தில் தனியாகத் தபால் பெட்டி வைத்து அஞ்சல் துறைக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்எனவும்வேண்டுகோள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டபூர்வமான ஆணை 1991 நவம்பர் 1 முதல் அமலுக்கு வந்துள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் நாட்டில் எந்த ஒரு கிராமமும் 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அஞ்சல் நிலையம் இல்லை என்ற குறையைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர, தற்போது நடைமுறையிலிருக்கும் உள்நாட்டுத் துரிதக் கடிதப் போக்குவரத்துப் போல, பம்பாய், டெல்லி நகரங்களிலிருந்து பன்னாட்டுத் துரித கடிதப் போக்குவரத்தை 1992-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் அறிமுகப்படுத்த அஞ்சல் துறை திட்டமிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.





## திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில்

# பட்டுத்தொழில் வளர்ச்சி

தென் மாவட்டங்களில் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பட்டுத் தொழிலில் முன்னணியில் விளங்குகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பட்டுத் தொழில் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் 2,732 ஏக்கரில் பட்டுச் செடி நடவு செய்த 3,500 விவசாயிகள் பட்டுத் தொழில் செய்து வருகின்றனர். ஒரு ஏக்கரில் மல்பரி நடவு செய்தால் 5 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புக் கிடைத்து வருகிறது. பட்டுத் தொழிலை ஊக்கப்படுத்த அரசு பல திட்டங்களையும் உதவிகளையும் அளித்து வருகிறது.

திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டப் பட்டுத் தொழில் மையம் இயங்கிவருகிறது. இம்மாவட்ட மையத்தின்கீழ் ஐந்து தொழில்நுட்பச் சேவை மையங்கள் பழனி, வத்தலகுண்டு, வேடசந்தூர், சாணார்பட்டி, நத்தம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இம்மையங்கள் மூலம் பட்டுத் தொழில் செய்யப் புதிய விவசாயிகளைத் தேர்வு செய்தல், அவர்கள் மல்பரி செடி நடவு செய்யத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்குதல், விவசாயிகட்குத் தேவையான பட்டுப் புழு வளர்ப்புப்பயிற்சி அளித்தல், பட்டு முட்டைகள் வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன. இந்த ஐந்து தொழில்நுட்பச் சேவை மையங்களில் 45 சரக அலுவலர்கள் இந்தப் பணியைச் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு 300 விவசாயிகட்குப் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக் காலத்தில் ரூ.150 உதவித் தொகையாகவும் ரூ.150 மதிப்புள்ள உபகரணங்களும் வழங்கப்படுகின்றன். கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ஆயிரம் விவசாயிகட்குப் பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

உலக வங்கி உதவியுடன் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு மொத்த ஒதுக்கீடான ரூ.41.7 கோடியில் ரூ.2 கோடி இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு 1989-90-இல் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. 1991-92 திட்டத்தின் மூன்றாவது ஆண்டு ஆகும். ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 1,500 ஏக்கர் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு முடிய 900 ஏக்கர் நடவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புதிதாக மல்பரி நடவு செய்யும் விவசாயிகட்கு, மல்பரி நாற்றுக்கள் ஏக்கருக்கு 5,000 என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. நாற்றுக்கென அரசு ஏக்கருக்கு ரூ.300 மானியம் வழங்குகிறது. புது நடவு செய்த விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி அளித்தல், அவர்கட்குப் புழு வளர்ப்புத் தளவாடச்சாமான்கள் புழு வளர்ப்பு மனை கட்ட ரூ.7,500 வங்கிகள் மூலம் கடன் பெற உதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், திண்டுக்கல்லில் ஏற்கெனவே உள்ள பட்டு முட்டை வித்தகம், பட்டுக்கூடு அங்காடி ஆகியவை சுமார் ரூ.25



யில் மறைந்துவிடும். இந்தச் சூரியனோ, மாலை வந்தும் மறையாமல் இருப்பதோடு, தேயாத சந்திரனாகி ஒளிவீசி ஜொலிக்கிறது; அதனால்தான் காயாத சூரியன் தேயாத சந்திரன் என்று நான் குறிப்பிடுகிறேன்' என்றார்.

### சிறப்புரை

திருவள்ளுவர் திருநாள் விழாவில்-திருக்குறளார் திரு. வீ.முனுசாமி அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

### முதல்வர் உரை

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, இருபதாயிரம் ரூபாய்க்கான காசோலையும் வாழ்த்தும் உடையதான திருவள்ளுவர் விருதும், 42 சிறந்த நூல்களுக்குப் பரிசும், அவற்றைப் பதிப்பித்தோர்க்குச் சான்றிதழ்களும், அகவை முதிர்ந்த 20 தமிழறிஞர்களுக்குப் பரிவுத் தொகையும், தமிழில் சிறந்த வரைவுக் குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர் மூவருக்குப் பரிசுகளும் வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழறிஞர்களும், 'தாய்மார்களுமாகப் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்த இவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்ஆற்றிய விழாப் பேருரை விவரம் வருமாறு:

'உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல் தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரீகம் தமிழ் நாகரீகம்! அந்தப் பெருமைமிகு தமிழ் இனத்தின் தலையாய நூல் திருக்குறள்! இருபது நூற்றாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது, இந்த நூற்றாண்டுக்கும் உரியதாக விளங்க முடியுமென்றால், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் ஏற்றது என்றால், அந்த ஒப்பிலாச் சிந்தனைச் செறிவை என்னவென்று சொல்வது?

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது; சாதாரண மக்களாலும் புரிந்து கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது; நடையிலே எளியது; ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு - திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர், திருவள்ளுவர்.

தமிழ்நாடு புகழ் கண்டதற்கு, ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வான்புகழ் கொண்டதற்கு ஒரே காரணம், வள்ளுவர்! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். கவிஞர்கள் வார்த்தைகளைச் செதுக்கிச் செதுக்கி எழுதுகிறவர்கள்.

வள்ளுவனைத் தமிழ்நாடு ஊருக்குத் தரவில்லை; ஒரு நாட்டுக்குத் தரவில்லை; ஓர் இனத்துக்குத் தரவில்லை; ஒரு மொழிக்குத் தரவில்லை; உலகுக்கே தந்தது - என்று உணர்ந்து உணர்த்தினார் பாரதியார்.

'திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவொளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது' - என்று தீர்ப்புக் கூறினார் தந்தை பெரியார்.

There hardly exists in the literature of the world a collection of maxims in which, we find so much lofty wisdom.

- அதாவது, 'உலக இலக்கியம் எதனினும், இவ்வளவு உயரிய ஞானத்தை உள்ளடக்கிய அறவுரைத் தொகுப்பு அமைந்ததில்லை' என்கிறார் ஆல்பிரட் சுவிட்சர்.

மன்னருக்கு நீதி சொன்னவர்கள், சின்னவருக்குச் சொன்னதில்லை. எளியோருக்குச் சட்டமியற்றியவர்கள், வலியோருக்கு அதை வகுத்ததில்லை. இந்த மரபை, 2,000 ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு தமிழ்ச் சிந்தனையாளர் உடைத்திருக்கிறார் என்றால், அது தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். அரசருக்கு, அமைச்சருக்கு, மக்களுக்கு, ஆசிரியருக்கு, மாணவருக்கு, தலைவருக்கு, தொண்டருக்கு, இல்லறத்தாருக்கு, துறவறத்தாருக்கு, பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு, ஆடவருக்கு, பெண்டிருக்கு என்று - எல்லோருக்கும் வாழும் வழியையும், நெறியையும் வகுத்துக் கொடுத்தவர், வள்ளுவர். அவர் ஓர் யுகத்துக்குரியவரல்லர்; எல்லாக் காலத்துக்கும் ஏற்றவர்.

வள்ளுவரின் பொருட்பாலில், கள்ளுண்ணாமை வலியுறுத்தப் பட்டதைப் போல், விந்தியத்துக்கு இப்பாலும், அப்பாலும், எவராலும் சொல்லப்படவில்லை.



'துஞ்சினார் செத்தாரின்
வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'.

- கள் உண்பவர்கள் விஷத்தை உண்பவர்கள் என்று, வள்ளுவப் பெருமான் கண்டித்துச் சொல்கிறார். வள்ளுவருக்கு நாம் செய்யும் வழிபாடு, அவர் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதுதான். எவ்வளவு இடர்ப்பாடுகளும், எதிர்ப்புகளும், இழப்புகளும் இருந்தாலும், அவற்றை முகமலர்ச்சியுடன் தாங்கி, வள்ளுவன் உரைத்த கள்ளுண்ணாமையைத் தமிழ்நாடு கடைப்பிடிக்க, எங்கள் அரசு எடுத்துவரும் தளராத முயற்சிகளை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை, வேத வாக்காகக் கொண்டு, மதுவை ஒழிக்கப் போராடும் என் முயற்சிகளுக்கு, ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டியது, உங்கள் கடமை ஆகும்; தங்களது இணையற்ற எழுத்தோவியங்களுக்காக, தமிழ்த் தொண்டிற்காக, பரிசு பெறும் படைப்பாளர்களின் கடமையும் ஆகும் என்பதை, அன்போடு நினைவூட்டக். கடமைப்பட்டிருக்கிறேன்.

1985-ஆம் ஆண்டு நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'திருவள்ளுவர் விருது' வழங்கும் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ், திருக்குறள் தொடர்பான நூல் எழுதுபவர், அல்லது திருக்குறள் தொடர்பான கருத்துக்களைப்பரப்புபவர் ஒருவரை, ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுத்து 'திருவள்ளுவர் விருது' வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு திருவள்ளுவர் விருதினை நமது மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் பெறுகிறார்கள் என்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நாவலர் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை நூல்' உரைநூல்களில் சிறந்ததாக, உண்மைக்கு உகந்ததாக, அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளதை, தமிழ் நல்லுலகம் பாராட்டுகின்றது. நாவலர் அவர்களுக்கு நான், இன்று 'திருவள்ளுவர் விருதினை' வழங்கிச் சிறப்பிப்பதில், பெருமை அடைகின்றேன். அவரது தமிழ்த்தொண்டு மென்மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, வள்ளுவப் பெருந்தகையாரை நினைவுகூரும் வகையில், 'திருவள்ளுவர் விருதும்', சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசுகளும் வழங்குவதில், பெருமிதம் அடைகின்றேன். இந்த விழாவிலேயே அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு, அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் முகத்தான், நிதி உதவி அளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.





• இழிவின் மூலகாரணம் என்னவென்று சிந்தித்துப் பார்த்து, அவ்விழிவு பின் சந்ததிக்கும் என்றென்றும் திரும்பி வரமுடியாதபடி, பரிகாரம் தேடுவதே உண்மையான சீர்திருத்தவாதியின் கடமை.

நாட்டிற்கும், மக்களுக்கும், மொழிக்கும், உழைத்த நல்லவர்களை நாம் நினைவுகூர வேண்டும், பாதுகாத்து அரவணைக்க வேண்டும், என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணங்களை, அவர் வழி நடக்கும் எங்கள் அரசு, தொடர்ந்து தொய்வில்லாமல் செயல்படுத்தும்.

### நன்றியுரை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின், பரிசு பெற்றோர் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'திருவள்ளுவர் விருதோடு எனக்குப் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியுள்ள இந்த இருபதாயிரம் ரூபாயையும் மாணவர் பரிசுத் திட்டத்திற்காக அளிக்கிறேன். அதாவது பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியரிடையே திருக்குறள் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெறுவோருக்குப் பரிசு வழங்கப்படும். இந்த இருபதாயிரம் ரூபாயும் வைப்பு நிதியில் போடப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு இந்தப் பரிசு அளிக்கப்படும்'- என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

விழா முடிவில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு. த. பெரியாண்டவன் அவர்கள் நன்றி கூறினார். ●



# சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

ஒவ்வொர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

அதற்கேற்ப, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை 1991 செப்டம்பர் தொடங்கி ஓராண்டில் நிறைவேற்றி முடிக்க முதல்வர் அவர்கள் தகுந்த ஆணை களைப பிறப்பித்துள்ளார்.

அவ்வாணைப்படி, இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில் தொடங்கப்பெற்று 1992-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுறவிருக்கிறது. அனைத்துப் பணிகளும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில் ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளது சிறப்பிற்குரியதாகும்.

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ரூ.194.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கேற்ப நிதி வசதியை உரிய நேரத்தில் அரசு ஒதுக்கும்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் 7 முக்கிய அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், தொடக்கப் பள்ளிகளுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் இத்திட்டத்தில் அடங்கும்.

கிராமங்களுக்கருகில் உள்ள முக்கிய சாலையிலிருந்து 1.60 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள 1000-க்கு அதிகமாகவும் 500-லிருந்து 1000-க்குக் குறைவாகவும் மக்கள் தொகையுள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். இதனால் கிராம மக்கள் நகரங்களுடன் எளிதாகத் தொடர்பு கொள்ளவும், வேளாண்மை, கைவினைப் பொருட்கள் போக்குவரத்திற்கும் சிறந்த வசதிகள் ஏற்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. நடப்பாண்டில் ரூ.83.34 கோடி செலவிட்டு 3,874 கி.மீ. சாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

குடிநீர் வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தர இத்திட்டம் வகை செய்கிறது. தவிர, கோடைக் காலத்தில் குடிநீர் வசதியேயில்லாத அல்லது மிகக் குறைந்த வசதியுள்ள வாழ்விடங்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படும். 1991-92-ஆம் ஆண்டில் 5,999 வாழ்விடங்களுக்கு ரூ.53.36 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தர அரசு முடிவு செய்துள்ளது.

புதிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்படுவதுடன், தற்போது இவ்வசதியைப் பெற்றுள்ள இடங்களில் உள்ள குறைகள் களையப்படுவதுடன் கூடுதலாகத் தெரு விளக்குகள் அமைத்துக் கிராமங்கள் ஒளிமிகுந்த இடங்களாக மாறும்



எஸ்.பி. இளங்கோவன்,
இ.ஆ.ப.,
அரசுச் செயலர்,
ஊரக வளர்ச்சித்துறை
சென்னை.





பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;

நாள் அண்மையிலேயே உள்ளது. இவ்வாண்டில் ரூ.19.88 கோடி செலவில் 69,781 தெரு விளக்குகள் தமிழகக் கிராமங்கள் அனைத்திலும் அமைக்கப்பட்டு ஒளிவீசத் தொடங்கும்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள குளங்களையும், பழைய ஜமீன் குளங்களையும் மேம்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு அவை தரமுள்ளதாக நிலைப்படுத்தப்படவுள்ளன. நடப்பாண்டில் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், கசிவுநீர்க் குட்டைகள் உட்பட 2,677 பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கால்வாய்கள் தூர் எடுக்கும் பணியும் இதில் அடங்கும். பல்வேறு இடங்களிலுள்ள கால்வாய்களைத் தூரெடுக்கும் மொத்த நீளம் 1,305 கி.மீ. இவற்றிற்கென ரூ.11.82 கோடி செலவாகுமென கணக்கிடப்பட்டு நிதி வசதி செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் அரசினரால் நடத்தப்படும் தொடக்கப் பள்ளிகளுக்கு நிலையான கட்டடங்கள் ஒன்றேனும் இல்லாதிருந்தால் இத்தகைய இடங்களில் ஒரு பள்ளிக் கட்டடம் அமைக்கப்படும். தொடக்கப் பள்ளிகளின் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்து 1,068 கட்டடங்கள் ரூ.14.79 கோடி செலவில் அமைக்கப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு நிலையங்களுக்கு நிலையான கட்டடங்கள் உருவாக்கப்படும். இந்த பணிக்காக ரூ.9.98 கோடி செலவு செய்யப்பட்டு 1,409 கட்டடங்கள் கட்டப்படும்.

வேளாண்மை, கால்நடை, துப்புரவு, ஊரக வளர்ச்சி, கேளிக்கை போன்ற நிகழ்ச்சிகளைக் கிராம மக்கள் கண்டு களித்துப் பயனடைய 978 தொலைக்காட்சிப் பெட்டிகளும் உண்டு. இதற்காக ரூ.1.45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு தொடங்கி ஈராண்டுகளில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும். அப்போது 7,502 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டு கசிவு நீர்க் குட்டைகள் உட்பட 3,231 சிறு பாசனத் திட்டங்கள் சீரமைக்கப்பட்டுவிடும். மேலும் 2,198 தொடக்கப் பள்ளிகள் 2,879 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்கள் கட்டப்பட்டுவிடும். 8,972 வாழ்விடங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு 1,94,000 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். மேலும் 2,910 கி.மீ. தொலைவுப் பாசன வாயக்கால்களில் தூர் எடுக்கும் பணி நிறைவடையும். தவிர 1,861 ஊராட்சிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். ஈராண்டுகளிலும் இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.387.24 கோடியாகும்.

மாநில அளவில் இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றிடும் பொறுப்பை ஊரக வளர்ச்சி ஆணையரிடமும், மாவட்ட அளவில், ஊரக வளர்ச்சி முகமைகளின் தலைவர்களுமான மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது. ●

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 16.1.1980 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதையும், அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரா, கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் முக்கியமான இடங்களையும் இப்போக்குவரத்துக் கழகம் தனது இயக்க எல்லைகளாகக் கொண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாட்டில் 124 வழித்தடங்களிலும், கர்நாடக மாநிலத்தில் 29 வழித்தடங்களிலும், ஆந்திர மாநிலத்தில் 21 வழித்தடங்களிலும், கேரள மாநிலத்தில் 24 வழித்தடங்களிலும், பாண்டிச்சேரியில 22 வழித்தடங்களிலும், மூன்று மாநிலங்கள் உட்பட 6 வழித்தடங்களிலும் ஆக மொத்தம் 226 வழித்தடங்களில் 848 பேருந்துகளை இயக்கி வருகிறது. 31.12.1991 வரை 924 பேருந்துகளைத்தன்னகத்தே கொண்ட இப்போக்குவரத்துக் கழகத்தில் 122 சொகுசுப் பேருந்துகளும் (Deluxe Coach) அடங்கி உள்ளன.

ஒரு நாளில் சுமார் 6 இலட்சம் கி.மீட்டர் தூரம் இயக்கப்படும் இப்பேருந்துகளில் ஒரு நாளைக்குச் சராசரி 1.15 இலட்சம் பயணிகள் பயணம் செய்கிறார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகம் 20 பணிமனைகளையும், 4 தொழிற்பட்டறைகளையும், 3 ஓட்டுநர் தொழிற் பயிற்சி நிலையங்களையும் கொண்டுள்ளது. மேலும் ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் (I.T.I.) இப்போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப் பட்டு வருகிறது. பயணிகளின் வசதிக்காக மாநிலம் முழுவதும் 15 சிற்றுண்டிச் சாலைகளையும், 5 சாலையோர உணவகங்களையும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நடத்தி வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் ஒரு நாளைய சராசரி மொத்த வருமானம் ரூ.27 இலட்சம்.



## தமிழகத்தில்

# தொழில் நுட்பக் கல்வி

பேராசிரியர் தி.இரா. நடேசன்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்வி முறை கிழக்கிந்தியக் கம்பெனியார், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1794-ஆம் ஆண்டு, நில அளவைப் பள்ளியினை நிறுவிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நில அளவைப் பள்ளி விரிவடைந்து ஒரு பொறியியற் கல்லூரியாக மலர்ந்தது.

1886-ஆம் ஆண்டு சென்னை வேப்பேரியில் துவக்கப்பட்ட செங்கல்வராயன் பாலிடெக்னிக்கும் 1890-ஆம் ஆண்டு மதுரையில் துவக்கப்பட்ட தமிழ்நாடு பாலிடெக்னிக்கும், முன்னாட்களில் துவக்கப்பட்ட ஒரு சில தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களின் முன்னோடியாகத் திகழ்ந்து, சுதந்திரம் உதித்த நிலையில், மைய அரசும் மாநிலத்தில் உள்ள அரசும் இணைந்து, தொழில் மயமாக்கும் நிலையைப் புகுத்தியபோது நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வளரத் தூண்டுதலாகி, தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்காகாமல், ஒரு நல்ல சூழ்நிலை உருவாகிற்று. 1957- ஆம் ஆண்டுவரை, தொழில் நுட்பக் கல்வி முறையின் நிர்வாகம், பொதுக் கல்வி இயக்குநரின் வசமிருந்தது. 1957-ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வித்துறை அமைக்கப்பட்டு, அது பொறியியற் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் வளர்ச்சியை ஊக்குவித்தது.

தற்போது பட்டப்படிப்பு நிலையில் தொழில் நுட்பக் கல்விக்கான வசதிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும், ஐந்து அரசு பொறியியற் கல்லூரிகள், மூன்று அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் முப்பது சுயநிதி பொறியியற் கல்லூரிகள் ஆகியவற்றினால் அளிக்கப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பொறியியற் கல்லூரி, இந்தியன் தொழிற்கல்வி நிலையம் (ஐ.ஐ.டி.) மற்றும் திருச்சியிலுள்ள பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஆகியவை பல பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டக் கலையினைப் போதிக்க வழிவகை செய்துள்ளன. தமிழ் நாட்டிலுள்ள இரண்டு மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்திலும் குறைந்தது ஒரு பொறியியற் கல்லூரியாவது அமையப் பெற்றுள்ளது. இவை அனைத்திற்குமான மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கை எட்டாயிரத்து ஐநூறாகும். தமிழகம் மட்டுமே பெண்களுக்கென்றே ஒரு தனியான பொறியியற் கல்லூரி அமையப் பெற்று பிற பொறியியற் கல்லூரிகளில், இருபாலரும் கல்வி கற்கும் வசதிகள் பெற்ற சிறந்த தனித்தன்மை பெற்ற மாநிலமாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் ஐந்து தன்னாட்சிப் பொறியியற் கல்லூரிகளும் இரண்டு பல்கலைக் கழக மற்றும் பல்கலைக் கழகமாகக் கருதக் கூடிய கல்லூரிகளும் உள்ளன. பணிபுரியும் பட்டயப்படிப்பு முடித்தவர்கட்குப் பகுதிநேரப் பொறியியற் கலையும் பதினோரு கல்லூரிகளில் போதிக்கப்படுகின்றன.

தொழில் நுட்ப வினைஞர்கள், தொழில் நடவடிக்கைகட்கு முதுகெலும்பைப் போன்றவர்கள், எனவே தொழில் நுட்ப வினைஞர்களை உருவாக்கிப்பயிற்சியளிக்கப்பட்டயப் படிப்பு மற்றும் பட்டயப் பிற்படிப்பினைக் கற்பிக்க இம்மாநிலத்தில் நூற்றி இருபத்தொன்பது தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (பாலிடெக்னிக்குகள்) உள்ளன. (அரசு பாலிடெக்னிக்குகள் இருபத்தொன்று, அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள் முப்பத்தைந்து, மற்றும் சுயநிதி பாலிடெக்னிக்குகள் எழுபத்தி மூன்று). இவற்றின் மொத்த சேர்க்கை எண்ணிக்கை சுமார் இருபத்து இரண்டாயிரத்து ஐநூறு ஆகும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு பாலிடெக்னிக்காவது உள்ளது. தொழில் நுட்பக் கல்வியில் பெண்களின் தேவை பெண்களுக்கென்று தனியாக அமையப் பெற்ற பதினோரு பெண்கள் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களாலும், இருபாலருக்குமான கல்வி நிறவனங்களாலும் நிரப்பப்படுகிறது. மைய அரசின் சமுதாய வளர்ச்சித் தொழில் நுட்பக் கல்வி நிலையத் திட்டம் இந்த மாநிலத்திலுள்ள பதினொரு தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் அமையப் பெற்று, நாட்டுப் புறங்களில் வேலையில்லா இளைஞர்கட்கு உதவுகின்றது.

வளர்ந்து வரும் தொழில் மற்றும் சமூகத்தின் தேவைக்கேற்ப தொழில் நுட்ப மனித வளத்தினை மேம்படுத்தி, திறமையை ஊக்குவிப்பதே தற்போதைய தொழில் நுட்பக் கல்வியின் நோக்கமாகும். ●








## மனிதாபிமானத்தின் மணிமகுடம்

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

## டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புகழாரம்!

இந்த ஜனவரி 17-ஆம் நாள், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பிறந்த நாள்;

'எங்க வீட்டுப் பிள்ளை - எங்கள் வீட்டுப் பிள்ளை' என, இன்றும் தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்கள் எல்லாம், யாரை ஏற்றிப் போற்றிக் கொண்டாடி மகிழ்கிறார்களோ, அந்தப் பிள்ளை 75 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த நாள்...

'ஓர் சகாப்தம் கண்விழித்த இனிய நாள்;
ஓர் சரித்திரம் தொடங்கிய திருநாள்;
ஓர் உயரிய தத்துவம் உதித்த நன்னாள்'

எனச் சொன்னால் அது மிகையாகாது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவரின் வாக்கிற் கொப்ப, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தோன்றி - வளர்ந்து - ஈடுபட்ட துறைகள் அனைத்திலும், தன் புகழ் முத்திரையினைப் பதித்தவர் ஆவார்.

கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும் - புது நம்பிக்கையாகவும், தன் இளமைக் காலம் முதல், திரைப்படத் துறையிலும்- அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித் தலைவர்.

மக்களோடு பழகி,
மக்களோடு வாழ்ந்து,
மக்களுக்காக உழைத்து,
மக்களுக்கு வாரி வழங்கி,
மக்களுக்காகச் சிந்தித்து,
'மக்கள் திலகமாய்',
'மன்னாதி மன்னனாய்', வாழ்ந்து மறைந்த அவரைத்தான், இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள், தங்கள் இதயக் கோயிலில் தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள்.

அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும் - மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும், உலக வரலாறு காணாத அற்புதங்களை நிகழ்த்திக் காட்டின.

அவர் ஏற்றுக்கொண்ட அரசியல் ஆசானாம் பேரறிஞர் அண்ணாவை, 1967-இல் ஆட்சிக் கட்டிலில் அமர்த்திக் காட்டிடும் அளவுக்கு, அவரது மக்கள் செல்வாக்கு அன்றைக்குத் திகழ்ந்தது.

அண்ணா அவர்கள், கூட்டணி ஆட்சி அமைக்கும் அளவுக்கே தனக்கு வலுவுள்ளது எனக் கருதிக் கணக்கிட்டுக் கொண்டிருந்த வேளையில், புரட்சித் தலைவருள் மறைந்திருந்த மக்கள் சக்தி, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தனிப் பெரும்பான்மை பலத்தை அன்றைக்கு உண்டாக்கிக் காட்டியது.

தான் மகத்தான சத்துணவுத் திட்டமாகும். மனித வள மேம்பாடு பற்றிச் சிந்தித்த வேறு எவரும், இதுவரை சிந்திக்காத ஓர் உன்னதத் திட்டம் என, உலகின் பல பகுதியினராலும் பாராட்டப்பட்ட திட்டமாகும்.

அந்த இளகிய தலைவனின் உள்ளத்தைப் பெற்றிருக்கும் ஆட்சியாக, இன்றைய உங்கள் ஆட்சி அமைந்துள்ளதால் தான், அத்தகைய திட்டங்களைத் தொய்வின்றி நடத்திட உறுதி பூண்டுள்ளது.

1.7.82-இல் தொடங்கிய அந்தத் திட்டம், இன்று 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்னும் பெயரில் விரிவுப் படுத்தப்பட்டு, புதிய உத்வேகத்தோடு செயல் படுத்தப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஆறேழு மாதங்களாக, 'ஏழைகளைக் கண்ணால் பார்ப்பதை விட, இதயத்தால் பார்க்க வேண்டும்', என்ற புரட்சித் தலைவரின் கொள்கைப்படி நடந்து வருவதைக் கண்டு வருகிறீர்கள்.

அந்த அடிப்படையில் உதயமானது தான், நாங்கள் இன்றைக்கு நிறைவேற்றியுள்ள, ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை எளியோருக்கான இலவச வேட்டி-சேலைத் திட்டமாகும்.

'மக்களின் வரிப்பணம் மக்கள் நல்வாழ்வுக்கே பயன்பட வேண்டும்' என்றார் பேரறிஞர் அண்ணா.

'திட்டங்களின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்' என்றார் புரட்சித் தலைவர்.

இவ்விரு தலைவர்களின் அடிச் சுவட்டில் நடைபோடும் எங்கள் அரசு - அவர்கள் காட்டிய இந்த உயரிய நோக்கங்களைத் தனது இலக்காகக் கொண்டு, எவ்வளவு தெளிவாகவும், தீர்மானமாகவும், உறுதியாகவும் காரியமாற்றி வருகிறது என்பதை, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களில் இருந்து, மிகத் தெளிவாக அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

'எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பது மட்டுமல்லாமல்; எத்தகைய மக்களுக்காகத் திட்டங்கள் தீட்டுகிறோம்' என்பதற்கே முதலிடம் தந்து, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.



மாணவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களுடைய இதயங்களை ஆசிரியர்கள் பண்படுத்திவிடட்டும். ஏமாற்றம், ஏக்கம் என்ற இரண்டு வார்த்தைகளையும் அகராதியில் இருந்து துடைத்துவிட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவி புரியட்டும்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்னும் குறள் நெறிக்கேற்ற நாடாக, தமிழகத்தை உயர்ந்தோங்கச் செய்திட, எங்களது அன்றாடத் திட்டங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. புரட்சித் தலைவரின் பொற்காலக் கனவை நனவாக்கும் வகையிலேயே, எங்கள் செயலும் சிந்தனையும் அமைந்திருக்கும்.

புரட்சித் தலைவர் அவர்கள் தனது அரசியல் எதிரிகளை மட்டும் வெற்றி கண்டார் என்றில்லை;

நோயை எதிர்த்து வெற்றி கண்டார்;
சாவை எதிர்த்து வெற்றி கண்டார்;
பகையை எதிர்த்து அவர் வெற்றி கண்டார்;
பசியை எதிர்த்து அவர் வெற்றி கண்டார்.

அம் மாபெரும் வெற்றிச் செல்வனின் மகத்தான வாரிசுகள் நாம்; அப்புகழ்மிக்க புரட்சித் தலைவரின் இதயச் சோலையில் மலர்ந்த பூக்கள் நாம், என்பதை இப்புவிக்குத் தெரிவித்துக் கொண்டுள்ளோம்.

ஏழ்மை இருளை...
இல்லாமை எனும் மருவை...
அறியாமை எனும் பேதமையை...
வறுமை எனும் கொடுமையை...

இனி - என்றென்றும் நம் இனிய தமிழகத்தை தீண்டாது துரத்துவோம்! வன்முறைக் கலாச்சாரம் நமக்கு வழக்கமில்லை;

நம் அரசியல் எதிரிகளும் - அண்டை மாநிலத்தினரும் - அதைப் பயன்படுத்தினாலும் - நாம் அடக்கத்தோடு அதனை எதிர்கொள்வோம்.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'

என்ற நம்பிக்கை நமக்குள்ளது;

இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ஆசியும் - அருளும் என்றும் நமக்குள்ளது; அவர் இறவாது வாழ்கிறார்; நம்மோடிருக்கிறார்; இருக்கிறார் என்ற உணர்வு நமக்குள்ளது.

அந்த உணர்வினை நம் இதயத்தில் தேக்கி, நாம் புனிதப் பயணம் தொடர்வோம்; மங்காப் புகழ்மிகு அச்சரித்திர நாயகன் புகழ் காக்க, சங்கநாதம் முழங்கிடுவோம்;

வளமும் - நலமும் மிக்க தமிழகத்தை - தமிழ் இனத்தைக் காப்போம் என இந் நன்னாளில் உறுதி ஏற்போம்!

— பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவில் (17.1.92) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

### கர்நாடகக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் திரும்பும்

# தமிழர்களுக்குப் பாதுகாப்பு

**கா**விரி நதி நீர்ப்பங்கீட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் உச்ச நீதிமன்றம் தமிழகத்திற்கு 205 டிஎம்சி தண்ணீர் ஆண்டிற்கு விட வேண்டும் என கர்நாடகா அரசிற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கியதன் விளைவாக, கடந்த டிசம்பர் மாதம் 13-ஆம் தேதியன்று கர்நாடகாவில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த 2-ந் தேதி தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனையொட்டி, தீயசக்திகளினால் அங்கு பல ஆண்டு வாழும் தமிழர்களுக்கு அசம்பாவிதங்களும், சொத்துக்களைச் சேதப்படுத்துவதும், தமிழர்களைத் துரத்துவதுமான சம்பவங்கள் நடைபெற்றன.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து, தமிழர்கள் கர்நாடகாவில் பெங்களூர், சத்தியகால் ஜாகரி, மைசூர், மண்டியாலா ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறினர். தருமபுரி மாவட்டத்திற்கு ஓசூர் வழியாகவும், ஜவலகிரி வழியாகவும், வந்து எட்டு வட்டங்களில் பல ஊர்களில் தங்கியுள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், கர்நாடகா கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் தமிழகத்திற்கு வரும் தமிழர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் எல்லையில் வரவேற்பு முகாம் அமைக்கும்படி மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கியதால், தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் ஜீஜுவாடி, ஜவ்லகிரி, தருமபுரி ஆகிய இடங்களில் வரவேற்பு மையமும், ஓசூர், தருமபுரி ஆகிய இரு மையங்களில் 'நிவாரண மையமும்' திறக்க உடனடி நடவடிக்கை மேற்கொண்டார். வரவேற்பு மையத்தில் கர்நாடகாவிலிருந்து வரும் நபரின் முழு விவரம் பதிவு செய்யப்பட்டு, அங்கு அவர்களுக்கு உணவு, உடை இருப்பிடம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

தருமபுரி மாவட்ட மாரவாடியில் கிட்டத்தட்ட 139 குடும்பம் கர்நாடகாவிலிருந்து வந்துள்ளனர். அவர்களைச் சந்தித்தபோது, அவர்கள் பெங்களூர் நகரைச் சுற்றியுள்ள பகுதியில் வசித்து வந்துள்ளனர். அனைவரும் கட்டடத் தொழில் புரிந்ததாகவும், தமிழர் என்றாலே அவருடைய வீட்டுக்குத் தீவைப்பதும், கண் எதிரே வீட்டிலுள்ள பொருட்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றதாகவும், பயங்கர ஆயுதங்களுடன் தாக்க வருவதால் உயிருக்குப் பயந்து வந்துள்ளதாகவும் தெரிவித்தனர். மையத்திலுள்ள தமிழ்ப் பெண்கள், தங்கள் கழுத்தில் உள்ள மஞ்சள் கயிற்றைக் கொண்டு, நாங்கள் தமிழ்ப் பெண்கள் என்பதை அறிந்து தாக்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மேலும், சத்யகால் ஜாகரிப் பகுதியில் 7 கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் காவிரி வழியாகவே வந்து பரிசல் மூலம் காவிரி ஆற்றைக் கடந்து பென்னாகரம் வருகின்றனர். அவ்வாறு சத்தியகால் ஜாகரிப் பகுதியில் 14 ஆண்டுகளாக வசித்து வந்த திரு. கருப்புசெட்டி என்பவரைச் சந்தித்தபோது- 'அவர் சேலம் மாவட்டம் கொளத்தூர் அருகே உள்ள சேத்துக்குழியைச் சேர்ந்தவர் என்றும், அவருடன் தாயார் எல்லம்மாள், தந்தை முனியன், மனைவி



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 18.1.92 அன்று, சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இராணி மெய்யம்மை மண்டபம் மற்றும் ராஜா முத்தையா மண்டபம் ஆகியவற்றைக் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார்.



மதி மற்றும் ஆண், பெண் குழந்தையுடன் 85 வயதுடைய பாட்டி திருமதி சடையம்மாளையும் அழைத்து வந்ததாகவும், வரும் வழியில் பாட்டியால் நடக்க முடியவில்லை. எனவே, எனது மனைவி குழந்தைகளை உறவினர்களுடன் அனுப்பி வைத்துவிட்டு என் பாட்டியை நான் தூக்கி வந்தேன். ஆனால், என்னால் தொடர்ந்து தூக்கி வரமுடியவில்லை. மேலும் என் பாட்டி உடல்நிலை மிகவும் மோசமான நிலை ஏற்பட்டதால், 'நீ மட்டுமாவது தப்பிப போய்விடு என்னைப் பற்றி கவலைப் படாதே' என்று கூறினாள். எனவே, என் பாட்டியைக் காட்டிலேயே விட்டு விட்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் நாங்கள் சத்தியகால் ஜாகிரிப் பகுதிகளிலிருந்து பென்னாகரம் வர கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் மலைப்பகுதியில் வரவேண்டும். நாங்கள் 7 நாட்கள் நடைப்பயணம் செய்து வந்தோம்' எனக்கண்ணீர் மல்கக்கூறினார்.

இதே பகுதியை சேர்ந்த குழந்தைசாமி என்பவரைப் பேட்டி கண்ட போது, 'நானும் சத்யகால் ஜாகிரி பகுதியைச் சார்ந்தவன், நாங்கள் 15 ஆண்டுகளாக அங்கு இருந்து மேட்டு நிலத்தை விளை நிலமாக்கி நல்ல தோப்பும் வயலமாக மாற்றி உள்ளோம். அங்குத் தமிழனைக் கண்டாலே அடித்துத் துரத்துகிறார்கள். கும்பல் கும்பலாக இரவில் வந்து வீட்டுக்குத் தீவைக்கிறார்கள்,' என்று குறிப்பிட்டார் மேலும் நாங்கள் ஏழு நாட்கள் இரவு பகல் பாராமல் மலை, காட்டுப் பகுதிகளில் நடந்து காவிரி கரையைப் பிடித்தால் தமிழ் நாடு அடையலாம் என நினைத்துக் காவிரி ஓரமாகவே வந்தோம். வரும் வழியில் உணவு இல்லாததால், கூட்டிக் கொண்டு வந்த ஆடுகளை வெட்டிச் சுட்டுச் சாப்பிட்டோம். ஒரு சிலர் புளியங்காய், உப்பு வைத்துச் சாப்பிட்டு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர்களுடன் வேறு ஊரைச் சார்ந்த கர்ப்பமுற்ற பெண்மணி இரண்டு நாட்கள் இடுப்பு வலியுடன் நடந்து வந்து, வரும் வழியிலேயே பிரசவித்த நிலைமையும் ஏற்பட்டது என்றும் நெஞ்சை உலுக்கும் வகையில் தெரிவித்தார்கள்.

இவ்வாறு கர்நாடகத்திலிருந்து வந்த தமிழர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்கள் ஜூஜூவாடி, காணசந்திரம், ஆட்டுக்காரன்பட்டி, தருமபுரி, குப்பூர், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு நிவாரண ஆணையர், திரு. ஹரி பாஸ்கர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., ஓசூர் சார் ஆட்சியர் திரு. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு. பி.சி. பந்த், இ.கா.ப., காவல்துறைத் துணைத் தலைவர் (ஆயுதப்படை) திரு.கே.ராமலிங்கம், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. ராமானுஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.பி. முனுசாமி, திரு. முனிவெங்கடப்பன், திரு. சிங்காரம் ஆகியோர் உடன் சென்றனர்.

மேலும், கர்நாடகாவில் அல்லல் பட்டுத் தமிழகம் திரும்பும் தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொருட்டு, கர்நாடகாவில் தமிழர்களின் சொத்துக்கள் இழப்பை மதிப்பிடும் பொருட்டும் தமிழர்களுக்கு உண்டான பாதிப்பை அறியவும், கர்நாடகாவில் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என வற்புறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதன் அடிப்படையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வரின் வற்புறுத்தலின்படி, மத்திய அரசின் உள்துறை இணைச்செயலாளர் திரு. குர்னிகால்சிங் சந்த், இ.ஆ.ப., அவர்களை இரு மாநிலங்களிலும் உள்ள நிலைமைகளைக் கண்டறியும் பொருட்டு உத்தரவிட்டார்கள்.

மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் அவர்கள் ஜூஜூவாடி, சாணசத்திரம், அதகப்பாடி, நல்லம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும், முகாமில் உள்ள தமிழர்கள் கர்நாடகாவில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள், மற்றும் சேதமான சொத்துக்கள், உயிர்ப்பலி பற்றி அவரிடம் எடுத்துரைத்தனர்.

உள்துறை இணைச் செயலாளரைப் பேட்டி கண்ட போது 'கர்நாடக மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்தேன். மேலும் நிலைமை சீரடைந்துள்ளதாகவும், தீவைப்பு, கொள்ளை, திருட்டு ஆகிய சம்பவங்கள் நடந்ததாகவும், கொலை, கற்பழிப்பு ஏதும் நடைபெறவில்லை எனவும்தெரிவித்தார். மேலும் தமிழகத்திற்கு வந்தவர்கள் மீண்டும் தைரியமாக கர்நாடகம் செல்லலாம் எனவும் இது விஷயமாக கர்நாடக அரசு நல்ல சூழ்நிலையினை உருவாக்கி வருகிறது எனவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசு பாதுகாப்பு, முழு நஷ்டஈடு, ரேஷன் ஆகியவற்றை உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளதாகவும், வேலை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பும், வீடு இழந்தவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்டத்தில் கர்நாடகாவிலிருந்து வந்த தமிழர்களுக்கு வேட்டி, சேலை, ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் வேறு ஊர்களுக்குச் செல்ல விரும்புவோருக்கு பயணத் தொகையும் அரசு சார்பில் அளிக்கப்பட்டு வருகிறது.

**மு. கிருஷ்ணன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**



மருத்துவம்:

# உணவு சில மருத்துவ உண்மைகள்

**டாக்டர் எஸ். நந்தகுமார், எம்.டி.,**



**நம் உணவில உளள சததுப பொருட்கள் யாவை - அவை நமக்கு எப்படிப் பயன்படுகின்றன?**

நாம் அன்றாடம் உண்ணும் உணவில் மாவுச்சத்து (Carbohydrate), புரதச் சத்து (Protein), கொழுப்புச் சத்து (Fatty acid), ஆகியவை அடங்கியுள்ளன.

இவற்றில், மாவுச்சத்திலுள்ள உணவானது மனிதனுக்குத் தேவையான சக்தியைக் கொடுத்து, தசைகளின் இயக்கம், உடல் உறுப்புகளின் இயக்கம் ஆகியவற்றிற்கு மூல காரணமாக உள்ளது. இச்சத்தானது- தானிய வகைகள், சர்க்கரை, வெல்லம், கிழங்கு வகை ஆகியவற்றில் உள்ளது.

புரதச் சத்துள்ள உணவானது, மனிதனின் தசைகள் வளர்ச்சி பெறுவதற்கும், இரத்தத்தில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கவும், மேலும் இரத்தத்தின் முக்கியப் பகுதியாகவும் Haemoglobin, Harmones, Enzymes போன்றவற்றை உற்பத்தி செய்யவும் பயன்படுகிறது. இந்தப் புரதச் சத்தானது - முட்டை, பால், இறைச்சி, மீன் ஆகியவற்றிலும் பருப்பு வகைகள், கொட்டைகள், கடலைகள் ஆகியவற்றிலும் உள்ளன.

கொழுப்புச் சத்துள்ள உணவானது நம் உடலில் உருவ அமைப்பு, தோலின் உலர்வற்ற தன்மை, உடல் உஷ்ணநிலைப் பாதுகாப்பு முதலியவற்றிற்குக் காரணமாக உள்ளது. இது - மீன், முட்டை, பால், இறைச்சி ஆகியவற்றில் உள்ளது.

**வைட்டமின்களும், தாது உப்புகளும் எப்படி நமக்கு உதவுகின்றன?**

வைட்டமின்கள், தாதுஉப்புகள், அடங்கிய உணவு வகைகள் மனிதனை நோய் நொடியிலிருந்து காப்பாற்றும் மேலும், அவைகள் நம் உடலின் முக்கிய இரசாயன மாற்றங்களுக்கும் காரணமாகின்றன. எலும்புகள், பற்கள் வளர்ச்சிப் பாதுகாப்பு போன்றவற்றிற்கும், இரத்த விருத்தி, இரத்தம் உறைதல் போன்றவற்றிற்கும் தைராய்டு எனப்படும் சுரப்பி வேலை செய்யவும் அவை பயன்படுகின்றன.

வைட்டமின்கள் 15-ம், தாது உப்புகள், 24-ம் நமக்கு முக்கியமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. வைட்டமின்கள் மிக முக்கியமாக A, D, E, K, B-Complex ஆகியவைகளும் - தாது உப்புக்களில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, சோடியம், பொட்டாசியம், குளோரின், அயோடின், துத்தநாகம் போன்றவைகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

வைட்டமின்களும், தாது உப்புக்களும், வைட்டமின் 'ஏ' Codliver oil, Shark liver oil, கல்லீரல், வெண்ணெய், நெய், முட்டை, கேரட், மாங்காய் முதலியவைகளில் நிறைந்திருக்கின்றன.

வைட்டமின் B-Complex கைக்குத்தல் அரிசி, முழு கோதுமை, வேர்க்கடலை, கடலைப் பருப்பு, எள், பால், முட்டை, மீன், இறைச்சி முதலியவைகளில் இருக்கின்றது.

வைட்டமின் C நெல்லிக்காய், எலுமிச்சை, ஆரஞ்சு, மற்றும் அனைத்துக் கீரை வகைகளிலும் உள்ளது.

வைட்டமின் D - Sharkliver oil, Cod liver oil கல்லீரல், முட்டை, பால், வெண்ணெய், மீன் ஆகியவைகளில் இருக்கின்றது.

மேற்கூறிய அனைத்து உணவு வகைகளிலும் தாது உப்புக்கள் உண்டு. மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் அனைத்தும் சரியான விகிதத்தில் வயது, எடை, அவரவரும் செய்யும் வேலைக்கேற்ப உண்ணப்படுவதே சரிவிகித உணவாகும்.

மாவுச்சத்து (தானிய வகை) 60 சதவிகிதமும், புரதச் சத்து 20 சதவிகிதமும், கொழுப்புச் சத்து 20 சதவிகிதமும் அன்றாட உணவில் இருத்தல் அவசியமாகும்.

**இரத்தத்தில் நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் சேருவது எப்படி?**

நாம் உண்ணும் உணவில் உள்ள 'கார்போஹைட்ரேட் என்ற மாவுச்


டாக்டர் எஸ். நந்தகுமார்



அச்சரித்திர நாயகனின் வரலாறு, அதன் பின்னர், தமிழ்நாட்டில் அவர் யாரை அடையாளம் காட்டுகிறாரோ, அவர் தான் ஆட்சி அரியணை ஏறி அமர முடியும் என்னும் அளவுக்கு, உயர்ந்தோங்கியது.

அவரால் ஆட்சிக் கட்டிலுக்கு ஏற்றி விடப் பட்டோர், ஏறிய ஏணியை இடறிவிட்ட சூழ் நிலையில் தான், 1972-இல் தனக்கென - தன்னை நம்பியிருந்தோர்க்கென, தனி இயக்கம் கண்டார்.

அரசியலில் தனக்குக் கலங்கரை - விளக்காய் - வழி காட்டியாய் திகழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் புகழை - பெருமையை - பெயரை, என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் நோக்கில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனத் தனது அரசியல் இயக்கத்திற்கும் பெயர் சூட்டினார்.

அந்த ஆலமரம் தான், எண்ணற்ற இலட்சிய வேங்கைகளைத் தன்னகத்தே பெற்ற, திராவிட இயக்கப்பரிணாம வளர்ச்சியாக இன்றைய தினம் காட்சியளிக்கிறது.

'புரட்சித் தலைவர் நடந்தால் ஊர்வலம்; அவர் நின்றால் மாபெரும் பொதுக் கூட்டம்; மாநாடு' என்ற சரித்திரச் சாதனைகள் பல அன்றைக்கு நிகழ்ந்தன.

எனவே தான், உலக வரலாற்றில் வேறெங்கும் காண முடியாத ஓர் அபூர்வமாக, 1972-இல் ஓர் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்து, ஐந்தே ஆண்டுகளில், அசைக்க முடியாத ஓர் ஆட்சி அமைத்துக் காட்டும் அளவுக்கு, ஓர் சரித்திரச் சாதனையை நிகழ்த்திக் காட்டினார் புரட்சித் தலைவர்.

*1977 ஜூன் திங்கள் 30-ஆம் நாள்*, தங்களது பொற்கால வரலாற்றை எழுதும் பொறுப்பினை, அந்தப் பொன்மனச் செம்மலிடம் தமிழக மக்கள் ஒப்படைத்தனர்.

*11 ஆண்டுகள்* அந்தப் பொற்காலம் நீடித்தது. சங்க காலச் சிறப்புக்குப் பின், தமிழ் வரலாற்றில் 'களப்பிரர்கள் காலம்' என்னும் ஓர் இருண்ட காலம் எப்படி இருந்ததோ - அதேபோல், ஓர் இரண்டாண்டுக் கால இருண்ட காலத்தை, இருபதாம் நூற்றாண்டிலும் தமிழகம் தாண்டி வரவேண்டிய அவலம் நிகழ்ந்தது.

## பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா- 17.1.92

தமிழக முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 17.1.92 அன்று நடை பெற்றது. மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்.

முன்னதாக, செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பிறகு முதல்வர் அவர்கள் விழா மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்— திரு. இ.மதுசூதனன், திரு. கே.ஏ.செங்கோட்டையன், திரு. சு.முத்துசாமி, திரு. இராம.வீரப்பன், திரு. எஸ்.டி.சோமசுந்தரம், திரு. எஸ்.கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. கோ.விசுவநாதன், திரு. டி.எம்.செல்வகணபதி, திருமதி. ஆர்.இந்திரகுமாரி, திரு. எம்.ஆனந்தன் மற்றும் திரு. டி.ஜெயக்குமார் ஆகியோர் டாக்டர் எம்.ஜி.ஆரின் அரசியல், திரைப்படத்துறை சாதனைகளையும் அவரது நல்லியல்புகளையும் நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டினார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றுப் பேசுகையில், ''மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். 1977-இல் ஆட்சிக்கு வந்த பிறகு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடினார். அந்தப் புரட்சித் தலைவனுக்கு இன்று நமது முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அரசு விழா நடத்துகிறது. தமிழக சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் முழு திருவுருவப் படத்தைச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்'' என்று கூறினார்.






தமிழகச்சரித்திரத்தில் படிந்துவிட்ட, அக்கரும் புள்ளி மருவுக்குப் பின் - புரட்சித் தலைவரிடம் நம்பித் தங்களை ஒப்படைத்துக் கொண்ட தமிழக மக்கள் - கடந்த ஜூன் மாதம் 24-ந் தேதி, தங்கள் பொற்கால வரலாற்றை எழுதும் பொறுப்பை—

அவரிடம் கொண்டிருந்த அதே நம்பிக்கையோடு, இன்னும் அதைவிடக் கூடுதலான எதிர்பார்ப்புக்களோடு நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

புரட்சித் தலைவரின் புனிதப் பயணம் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறுகிறது; 'எம்.ஜி.ஆர்.'- 'எம்.ஜி.ஆர்.' - என்னும் தாரக மந்திரம்; சாகா வரம் பெற்ற அச்சரித்திர நாயகனின் தத்துவம்; தொடர்ந்து நமக்குத் தலைமை ஏற்று வழி நடத்திச் செல்கிறது.

புரட்சித் தலைவரின் சாதனைகள் கலை உலகில் கணக்கில் அடங்காதவையாகும்; அரசியல் உலகில் அதைவிட அதிகமாகும்.

எத்தனையோ தலைவர்களைக் கண்டுள்ளது இந்திய நாடு; ஆனால் மூளை பலமும், இளகிய இதயமும் கொண்ட மாமனிதர்கள், ஒரு சிலரே ஆவர். அவர்களில் முதன்மையானவர்கள்தான், அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணாவும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரும் ஆவர்.

அதிலும் மனிதாபிமானத்தின் மணிமகுடமாகத் திகழ்ந்தவர் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆவார். எனவே தான் இன்றும் அவரை 'ஆயிரத்தில் ஒருவர்' என உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அந்த 'அன்னமிட்டகை', தன் இளமையில் ஒரு கவளம் சோறின்றிப், பல நாள் பசியால் துடித்திருக்கிறது என்பதை இன்று நினைத்தாலும், நம் விழிகள் ஈரமாகின்றன.

'கொடிது கொடிது வறுமை கொடிது',
என்ற அவ்வைப் பிராட்டியார்,

'அதனினும் கொடிது இளமையில் வறுமை'
என்றார்.

அந்தக் கொடுமையைப், பசியோடு இளமையில் அனுபவித்த காரணத்தால் தான் - இனி எந்தத் தலைமுறைக்கும் இளமையில் பசி என்கிற கொடுமை இருந்திடலாகாது, எனத் திண்ணமாக ஓர் முடிவெடுத்து - அவர் கொண்டு வந்த திட்டம்

மாணவ, மாணவிகளுக்குப் பரிசு:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின், டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் பேட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். விழாவில் சென்னை மாவட்டத்தின் சார்பில் ரூ.1,20,620/- மதிப்பில் 91 நபர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. பின்னர் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தலைமைச் செயலர் அவர்களும், பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

கலைநிகழ்ச்சி:

விழாத் தொடக்கத்தில் பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

விழா முடிவில் வயலின் மேதை திரு. குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினரின் வயலின் இசைக்கச்சேரி நடைபெற்றது.

முன்னதாக மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 75-வது பிறந்த நாளையொட்டி சென்னை அண்ணா சாலையிலுள்ள எம்.ஜி.ஆரின் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை அணிவித்தார்.

[illegible]ழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்

சத்தானது Glucose என்ற சர்க்கரைச் சத்து ஆகவும் புரோட்டின்-அமினோ அமிலம் (Aminoacid) எனப்படும் பொருளாகவும், கொழுப்பு வகைகள் (Fatty acid) என்பதாகவும் மாற்றமடைகின்றன. இவ்வாறு மாறிய பிறகே அவையெல்லாம் நமது இரத்தத்தில் கலக்க முடியும்.

இவற்றில், குளுக்கோஸ் எனப்படும் சர்க்கரைச் சத்து இரத்தத்தில் கலந்த பிறகு உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் சென்று எரிபொருளாக மாற்றமடைகிறது. இவ்வாறு எரிபொருளாக மாற 'இன்சுலின்' (Insulin) என்ற ஹார்மோன் தேவை.

**கலோரிச் சத்து என்றால் என்ன?**

சர்க்கரைச் சத்தானது - எரிபொருளாகி, மனிதனின் இயங்கும் சக்தியாக மாற்றமடைவதையே நாம் கலோரிச் சத்து என்கிறோம். இந்த வகையில் பார்த்தோமானால் -

1 கிராம் மாவுச்சத்து (Carbohydrate) - 4 கலோரியாகும்;

1 கிராம் புரதச் சத்து (Protein) - 4 கலோரியாகும்;

1 கிராம் கொழுப்புச் சத்து (Fattyacid) - 9 கலோரியாகும்.

**எதுவும் உண்ணாமல் பட்டினி இருப்பது உடலுக்கு நல்லதா?**

வாரம் அல்லது மாதம் ஒரு வேளைமட்டும் உண்ணாமல் இருப்பதில் தவறு ஏதும் இல்லை; அது நல்லதும் கூட, ஆனால், சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு இது பொருந்தாது.

இயற்கையில், மனித உடலில் குளுக்கோஸ் சத்தானது எரிபொருளாக மாற்றப்படுவதால் எந்தவித ஆபத்தும் இல்லை. ஆனால் ஒருவர் பலவேளை உண்ணாமல் இருக்கும் போது, அவர் உடலில் உள்ள கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் கரைந்து எரிபொருளாக மாற்றப்பட்டு அவரது உடல் உறுப்புகளை இயங்கச் செய்கிறது. இவ்வாறு மாவுச்சத்து அல்லாமல், - புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் எரிபொருளாக மாற்றம் அடையும் போது உடலுக்கு ஆபத்தைத் தரும் இரசாயனப் பொருட்கள் இரத்தத்தில் கலந்துவிடும்.

அதே நபர் சில நாட்கள் மேலும் உண்ணாமல் இருந்தால், இந்த இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் இரத்தத்தில் கலந்து, அந்த நபரைக் கோமா நிலைக்குக் கொண்டு போய்விடும். இதையே மருத்துவத்தில் Keto acidosis என்கிறோம். இன்சுலின் என்ற ஹார்மோன் குறைப்பாட்டினாலும் இதுபோன்ற கோமா நிலை • ஏற்படும். இதை 'Insulin Dependant diabetes Mellitus Complicating keto acidosis' என்று கூறுகிறோம்.

இந்த வகை சர்க்கரை வியாதியில் சர்க்கரையின் அளவு இரத்தத்தில் மிக அதிகம் இருந்தாலும், அவை இன்சுலின் பற்றாக்குறையினால் மாற்றம் அடைவதில்லை.




**புரதச் சத்து நமக்கெல்லாம் மிக இன்றியமையாதது என்கிறார்களே - ஏன்?**

நம் உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்களில், பத்து வகையான அமினோ அமிலங்களை நமது உடலால் தயாரிக்க முடியாது. எனவே, அவற்றை நாம் உண்ணும் உணவில் இருந்துதான் பெற வேண்டும். இவைகள் புரதச் சத்தில் மிகுதியாக உள்ளன. இந்தப் பத்தும் இருந்தால்தான் நம் உடலில் அந்தப் புரதச் சத்து பயனுள்ள வகையில் சேகரிக்கப்படும். எனவே, இவை அடங்கிய உணவு வகைகளை 'முதல் தரப் புரதச் சத்து' என்கிறோம்.

ஒன்று அல்லது இரண்டு அமினோ அமிலங்கள் குறைவு பட்டால்கூட, அந்தப் புரதச் சத்து உடலில் வீணாகி அதனுடைய முழுப் பயன் நமக்குக் கிடைக்காமல் போய் விடும்.

இவ்வாறு அனைத்து அமினோ அமிலங்கள் அடங்கிய புரதச் சத்து பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றில் சுமார் 20 சதவிகிதம் அடங்கியுள்ளது. ஆனால், தாவர வகைப் புரதச் சத்தான பருப்பு, கொட்டை, கடலை போன்றவற்றில் ஒன்று அல்லது இரண்டு அமினோ அமிலங்கள் குறைபாடாகவே உள்ளன. இந்த உணவு வகைகளை 'இரண்டாம்தரப் புரதச் சத்து' என்கிறோம்.

குறைபாட்டை ஈடுசெய்ய - நாம் புரதச் சத்து உணவுகளைத் தானிய வகைகளுடன் (அரிசி, கோதுமை) சேர்த்து உண்ணும்போது, அவை முற்றிலும் பயனுள்ளதாக மாற்றப்படுவது மட்டுமின்றி, இறைச்சி, மீன் போன்றவை உண்ணுதலுக்குச் சமமாகவும், முதல்தரப் புரதச் சத்தாகவும் மாற்றம் பெறுகிறது.

நம் முன்னோர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்துதான் பொங்கல், இட்லி, பருப்புடன் கலந்த சாதம் போன்றவற்றைச் சாப்பிடும் உணவுப் பழக்கவழக்கத்தை அக்காலத்திலேயே உண்டாக்கியிருக்கிறார்கள் போலும்.

பத்து அமினோ அமிலங்கள் அடங்கிய தாவர புரதச் சத்து சோயா பீன்ஸ் எனப்படுகின்ற கொட்டை வகையாகும். இதில் இருந்து பால், பவுடர் முதலியன எடுக்கப்பட்டு, சிறு குழந்தைகளுக்கு நல்ல உணவாகக் கிடைக்கப்பெறுகிறது. இதையே Vegetable milk என்கிறோம். 100 கிராம் அளவுள்ள சோயாபீன்ஸில் 43 கிராம் முதல்தரப் புரதச் சத்து உள்ளதாகக் கணக்கிடப்படுகிறது.

**நார்ச்சத்து (Fibre Diet) என்றொரு புதிய கண்டுபிடிப்புப் பற்றி மருத்துவ உலகில் பேசப்படுகிறதே - அதென்ன?**

வைட்டமின்களில் கூறிய கீரை, காய்கறி, பழவகைகளில் நார்ச்சத்து எனப்படும் ஒரு பொருளும் அதிகம் இருக்கிறது. பழங்களைத் தோலுடன் சாப்பிடுவது நல்லது. நம் உடலுக்கு இந்த நார்ச்சத்தானது மிகவும் முக்கியமாகும்.

காரணம் என்னவென்றால் - இந்த நார்ச்சத்தானது -

1. நம் சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றில் புற்றுநோய் வராமல் இது தடுக்கிறது.

2. Cholesterol என்னும் கொழுப்பு, உடலில் மிதமாக இருக்க உதவுகிறது

3. நீரிழிவு நோயாளிகளின் உடலில் சர்க்கரை அதிகரிக்காமல் பாதுகாக்கிறது.

4. இரத்த நாளமானது கொழுப்பு மிகுதியால் அடைப்பட்டுக் கடினமாவதால் ஏற்படும் Atheroselerosis என்ற நோய் வராமல் தவிர்க்கிறது.

5. மலச்சிக்கல் ஏற்படாதிருக்கச் செய்கிறது.

**யார் யாருக்கு எவ்வளவு கலோரி தேவைப்படுகிறது.?**

(Recommended energy requirements)

1. பிறந்த முதல் மாதத்திலிருந்து 11 மாதங்கள் வரை. 100 முதல் 120 கலோரிகள் ஒரு கிலோவிற்குத் தேவை.

2. 1-3 வயது-1220, 4-6 வயது-1720, 7-9 வயது-2050 கலோரிகள் ஒரு நாளைக்குத் தேவை.

3. 10-12 வயது-2420, (ஆண்) - 2260 (பெண்), 13-15 வயது வரை-2660 (ஆண்) - 2300 (பெண்), 16-18 வயது வரை - 2800 (ஆண்), - 2200 (பெண்) கலோரிகள் ஒரு நாளைக்குத் தேவை.

4. ஆண்: (கலோரிகள் ஒரு நாளைக்கு)

55 கி.கி. எடையுள்ள மிதமான வேலை செய்வோருக்கு (light work)- 2400 கலோரிகள். சற்றுக் கடினமான வேலை செய்வோருக்கு (Moderate work) - 2800 கலோரிகள். கடினமான வேலை செய்வோருக்கு (Heavy work) - 3900 கலோரிகள்.

பெண்: (கலோரிகள் ஒரு நாளைக்கு)

மிதமான வேலை செய்வோருக்கு (light work) - 1900 கலோரிகள். சற்றுக் கடினமான வேலை செய்வோருக்கு (Moderate work) - 2200 கலோரிகள். கடினமான வேலை செய்வோருக்கு (Heavy work) - 3000 கலோரிகள். குழந்தைக்குப் பால்தரும் பருவம் உள்ளோருக்கு (Women during pregnancy & Lactation) (45 K.G.)




300-லிருந்து 500 வரை கூடுதல் கலோரிகள் தேவை.

**உணவு வகைகளை எப்படி அறிந்து-அளந்து சாப்பிடுவது?**

எந்தெந்த உணவில் தோராயமாக எவ்வளவு கலோரி இருக்கிறது என்று இந்தப் பக்கத்தில் தெளிவாகப் பட்டியலிட்டுக் கூறியிருக்கிறோம். அவற்றில் இருந்தே, நாம் சாப்பிடத்தக்க சரிவிகித உணவு என்ன என்றும் நீங்களே அறிந்து கொள்ளலாம்.

**நோயாளிகள் - எதுவுமே உண்ணாமல் வெறும் வயிறுடன் இருக்கலாமா?**

உடல் நலக் குறைவு என்றால் சிலர் சாப்பிடாமல் இருப்பார்கள்; 'லங்கனம் பரம ஔஷதம்' என்பார்கள்; அது நல்லதல்ல. அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் எளிதாக ஜீரணமாகக்கூடிய இட்டலி, இடியாப்பம் போன்ற உணவு வகைகளை நோயாளிகள் மிதமாக உண்ணுவது நல்லது.

சர்க்கரை வியாதி உள்ளோர் தாம் செய்கிற வேலைக்கு ஏற்பவும், சாப்பிடும் மருந்துகளுக்கு ஏற்பவும் உண்ணவேண்டும்.

இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குக் கொழுப்புச் சத்து, உப்பு ஆகியவற்றை உணவில் தவிர்க்கலாம்; சிறுநீரக நோயாளிகளுக்கு உண்ணும் உணவில் ஒரு குறிப்பிட்ட அளவே புரதச் சத்தும், உப்புச் சத்தும் பொருந்தும்.

**உடல் பயிற்சிகள் ஒருவருக்கு எப்படியெல்லாம் உதவுகின்றன?**

உடல் பயிற்சி செய்வதென்பது, மனிதனுக்கு மிகமிக இன்றியமையாதது ஆகும்; அதுவும் ஒவ்வொருவரின் உடலுக்கு ஏற்றவாறு அமைந்திருப்பது மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக, 40 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் - காலை-மாலை நடப்பது, சைக்கிள் மிதிப்பது

சாதாரணமாக நாம் உண்ணும் உணவில் - எது எதில் எந்த அளவு கலோரிச் சத்து இருக்கிறது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்:

| உணவு வகை | சுமாராக எடை | கலோரி |
|---|---|---|
| தோசை | 100 கிராம் | 200 |
| இட்டலி | 140 கிராம் | 200 |
| பொங்கல் | 100 கிராம் | 356 |
| ஊத்தப்பம் | 100 கிராம் | 330 |
| பூரி | 40 கிராம் | 184 |
| சைவ பிரியாணி | 100 கிராம் | 244 |
| கிச்சடி | 100 கிராம் | 168 |
| உப்புமா | 100 கிராம் | 233 |
| முறுக்கு | 100 கிராம் | 521 |
| சமோசா | 100 கிராம் | 256 |
| அடை | 100 கிராம் | 571 |
| உருளைக்கிழங்கு சிப்ஸ் | 20 கிராம் | 113 |
| வாழைப்பழம் | 100 கிராம் | 100 |
| ஆப்பிள் | 80 கிராம் | 50 |
| மாங்காய் | 70 கிராம் | 50 |

போன்ற உடற்பயிற்சிகளை மட்டும் செய்வதே போதுமானதாகும். சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கும், இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் அந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தபிறகே அவ்வாறான உடற்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

உடல் பயிற்சியினால் உடலில் உள்ள குளுகோஸ் அளவும், கொழுப்புச் சத்தின் அளவும் மிதமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. மனிதனுக்கு உடல் ஆரோக்கியத்தையும் மூளைச் சுறுசுறுப்பையும் இது கொடுக்கும்.

***கடைகளில், டின்களில் அடைத்து அதிக விலையில் விற்கப்படும் குழந்தை உணவுகள் பற்றி உங்கள் கருத்தென்ன?***

டின்களில் அடைத்துப் பல பெயர்களில் கடைகளிலே விற்கப்படுகின்ற குழந்தைகளுக்கான விலை உயர்ந்த உணவுப் பொருட்களில் சரிவிதித அளவில் சத்துக்கள் இருக்கின்றன என்பது ஒரு விதத்தில் சரியே; ஆனால், இன்றைய சூழ்நிலையில் வசதியற்ற பாமர மக்கள் அதை வாங்கிப் பயன்படுத்துவது மிகவும் கடினமாகும்.

ஆனால், அவைகளுக்குச் சமமாக




கவோ, அதைவிட மேலானதாகவோ, குறைந்த செலவில் நாமே அப்படிப்பட்ட உணவைத் தயாரிக்க முடியும். இதற்காக-அதிக உழைப்போ, செலவோ கூடத் தேவையில்லை. ஏழை எளிய மக்களும் இதை எளிதாகத் தயாரிக்க முடியும். இவற்றை மனதில் கொண்டே, நமது அரசின் மதிய உணவுத் திட்டமும் குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கு ஏற்ப சரியான விகிதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட அட்டவணையைப் பார்த்தால் நாமே அப்படிப்பட்ட உணவைத் தயாரிக்கலாம் என்பது உங்களுக்குப் புரியும்.

முழுக் கோதுமை அல்லது

| | |
|---|---|
| கேழ்வரகு | — 40 கிராம் |
| உளுத்தம் பருப்பு | — 16 கிராம் |
| வேர்க்கடலை | — 10 கிராம் |
| வெல்லம் | — 20 கிராம் |
| ஆக மொத்தம் | — 86 கிராம் |

அது 330 கலோரிகள் (புரோட்டீன் 11.3 கிராம்) ஆகும். இவ்வகையில் ஒன்று சேர்த்து அரைத்து மாவாக்கித் தயாரிக்கப்படும் உணவு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு மிகுந்த சக்தி தரும் நல்ல உணவாகப் பயன்படுகிறது.

**நீண்ட நாட்கள் வாழ விரும்புவோர் என்ன செய்யவேண்டும்?**

நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என விரும்பினால் நீங்கள் சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளப் பழக வேண்டும்; ஒரே வேளையில் மிக அதிகமாகச் சாப்பிடுவதும், ஒரு வேளைக்குச் சாப்பிடாமல் இருப்பதும் முறையல்ல.

சில சமயங்களில் அது உடலுக்குத் தீமையை உண்டாக்கும் 'Eat to live is better than live to eat' என்று காந்தியடிகளே கூறியிருப்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

2. இரவில் விரைவில் உறங்குவதும், அதிகாலையில் எழுதுவதும் உடலுக்கு இன்றியமையாத ஒன்றாகும். 'Early to bed and early to rise is wise and healthy' என்ற ஆங்கிலப் பழமொழி இதைத்தான் வலியுறுத்துகிறது.

3. மதிய உணவிற்குப் பிறகு சிறிது நேரம் ஓய்வெடுப்பதும், இரவு உணவிற்குப் பிறகு சிறிது தூரம் நடப்பதும் இன்றியமையாத உடற்பயிற்சியாகும். இதைக் குறிப்பிடும் விதத்திலேயே - Rest for a while after lunch; and walk for a mile after dinner' என்பார்கள் ஆங்கிலத்தில்.

4. இதோடு மட்டுமல்லாமல், மூன்று வேளையும் நாம் சாப்பிடும் உணவானது சத்துள்ளதாக இருத்தல் வேண்டும்; மாவுச்சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து ஆகியவைகள் கலந்தவையாக இருத்தல் வேண்டும்.

இந்த முறையை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்தீர்களேயானால் கண்டிப்பாக நீண்ட நாட்கள் வாழலாம்.

**சந்திப்பு: பி.எல்.ஆர்.**




**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தொழிலதிபர் டாக்டர் எம்.ஏ.எம்.இராமசாமி அவர்கள் ரூ.5,00,001 க்கான காசோலையை 18.1.92 அன்று வழங்கினார்.**





# பனை ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல்

**கா**கிதத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு தெற்கு, தென் ஆசிய நாடுகளில் பனை ஓலையை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். பெரும் பகுதி பனை ஓலைச் சுவடிகள் தனியார் மற்றும் நிறுவனங்களின் பொறுப்பில் உள்ளன. அவைகளில் பெரும்பான்மை 11 அல்லது 12-வது நூற்றாண்டைச் சேர்ந்தனவையாகும்.

சோலிங்கனூர் வித்தியாபீடம் பள்ளியிலிருந்து ஐந்து பெட்டிகளில் 10,25,28,29 மற்றும் 7 கட்டுகள் அடங்கிய ஓலைச்சுவடிகள் வேதியல் பிரிவில் பாதுகாக்கப் பெறப்பட்டன. இவை வித்தியாபீடம் பள்ளிக்கு அவ்வூரிலுள்ள திரு. சம்பத் என்பவரால் வழங்கப்பட்டன.

எழுத்தாணியைக் கொண்டு பனை ஓலையில் எழுதப்பட்டுள்ளது. எழுதப்பட்ட பகுதியில் கரித்துண்டினால் தேய்ப்பதால் எழுத்து நன்றாகத் தெரிகிறது. பனை ஓலையின் இரண்டு முனைகளிலும் துவாரம் ஏற்படுத்தப்பட்டு கயிற்றினால் இணைத்துச் சுவடிகளை இரண்டு மரச்சட்டங்களின் இடையில் வைத்து ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

கருவேட்டு நகர் அரசாட்சியில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் இப்போது உள்ள பள்ளிப்பட்டு பக்கத்தில் திரு. வெங்கட்ராயப் பிள்ளை என்பவர், 600 கிராமங்களைப் பரிபாலித்து வந்தார். அவர் பத்மாபுரம் என்கிற இப்போது உள்ள எரும்பி என்ற ஊரில் வசித்து வந்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் இந்த சமஸ்தானம், உடையத் தொடங்கியபோது, பனை ஓலைச் சுவடிகள் அனைத்தும் பெரிய பொறுப்பில் இருந்த இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த ஓலைச் சுவடிகள் அனைத்தும் சுமார் 200 ஆண்டுகளுக்குமுன் அந்த ஆட்சியின்போது இருந்த அறிஞர்களால் தயாரிக்கப்பட்டன. அவர் இறக்கும்போது இந்தச் சுவடிகள் அனைத்தும் கிராம அலுவலராகப் பணிபுரிந்த அவருடைய புதல்வர் திரு. பெருமாள் பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன்பின்பு இவை அவருடைய புதல்வர் திரு. சம்பத் அவர்களின் கண்காணிப்பில் வந்தன. இவரால் அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாத காரணத்தால், அநேகச் சுவடிக் கட்டுகளை எடுத்துச் சென்று கங்கையில் விட்டுவிட்டார். மிஞ்சிய ஓலைச்சுவடிக் கட்டுகளைப் பேணிப் பாதுகாக்கவும், படித்து அறியவும் உதவிடும் எண்ணத்துடன் வித்தியாபீடம் பள்ளிக்கு வழங்கினார்.

வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் இந்தப் பனை ஓலைகள் பெறப்பட்டபோது, இவை உலர்ந்து உடையும் நிலையில் இருந்தன. மிருதுவான தன்மையும், வளைந்து கொடுக்கும் தன்மையும் இழந்து காணப்பட்டன. மேலும், தூசி படிந்தும், வண்ணம் இழந்தும் காணப்பட்டன. இந்த ஆவணங்கள் பூச்சிகளாலும், பூஞ்சைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தன. கிழிசலும் பூச்சித் துவாரங்களும் காணப்பட்டன.

இந்தச் சுவடிகளில் படிந்திருந்த தூசி, மிருதுவான தூரிகை கொண்டு நீக்கப்பட்டன. பின் புகைப்பெட்டியில் வைத்து பாராடைகுளோரா பென்ஜீன் (Para-Dichloro Benzene) கொண்டு பத்து தினங்களுக்குப் புகையூட்டப்பட்டன. (Fumigation) ஓலைச்சுவடிக் கட்டுகள் நல்ல நிலையில் உள்ளனவற்றைத் தனியாகவும் மிகவும், பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளவற்றைத் தனியாகவும் பிரிக்கப்பட்டன. சுவடிகளில் நல்ல நிலையில் உள்ளனவற்றைச் சோலிங்கனூர் வித்தியாபீடம் பள்ளிக்கு இவ்வருங்காட்சியக வேதியல் பாதுகாப்பு அலுவலர்கள் எடுத்துச் சென்று மாணவர்களுக்கு ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பது குறித்து செய்முறைப் பயிற்சி அளித்தார்கள்.

பனை ஓலைச்சுவடிகள் கட்டிலிருந்து பிரிக்கப்பட்டு பென்சிலைக் கொண்டு பக்க எண்கள் இடப்பட்டன. பின் பஞ்சை சாராயத்தில் நனைத்து அவற்றில் பூசப்பட்டு மிருதுவாக்கப்பட்டன. அதன்பின் சாராயத்தில் (Rectified Spirit) 5 சதவிகிதம் எலுமிச்சை எண்ணெய் (Lemon Grass Oil) —

கலந்து, அவற்றில் பூசப்பட்டு பாதுகாக்கப்பட்டன. இறுதியாக,

**சு. தங்கவேலு**
**காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியகம்**
**சென்னை**



பனை ஓலைகள் ஒன்று சேர்க்கப் பட்டுக் கட்டாகக் கட்டப்பட்டன. இவ்வாறாக மாணவர்கள் சுவடி களைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தப் பட்டனர்.

மிகவும் பாதிக்கப்பட்ட சுவடிகள் அரசு அருங்காட்சியக வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் பாதுகாக்கப் பட்டன. தேவையற்ற பனை ஓலை ஒன்று தண்ணீர் நிரம்பிய தட்டில் இடப்ப்ட்டு அதில் உள்ள எழுத் துக்கள் அழியாமல் இருக்கின்றனவா என்பது உறுதி செய்யப்பட்டது. எழுத்து அழியாமல் இருந்ததால் ஓலைச்சுவடிகளைப் பரப்பி, கண் ணாடித் தட்டில் வைத்து தண்ணீரில் இடப்பட்டன. பின் இந்த ஓலைச் சுவடிகள் கண்ணாடித் தட்டுடன் (Glass Plate) 5 சதவிகிதம் சோடியம் குளோரைட்டில் (Sodium Chloride) இடப்பட்டு புகைப்போக்கியில் (Fume Exhaust) வைக்கப்பட்டது. பார்மலின் (Formalin) இந்தக் கரை சலில் 15 சதவிகிதம் ஆகும் அள வுக்கு ஊற்றப்பட்டது. தட்டு அடிக் கடி குலுக்கப்பட்டது. இதில் இருந்து உண்டாகும் குளோரின் காற்று பனை ஓலைகளைச் சலவை செய் கிறது. 10 நிமிடங்களுக்குப் பின் சுவடிகள் முழுவதும் (Bleaching) சலவை செய்யப்பட்டவுடன், கண் ணாடித் தட்டுடன் கூடிய சுவடிகள் எடுக்கப்பட்டு, குழாய் நீரில் காட்டிச் சுத்தம் செய்யப்படுகிறது. அதற்குப் பின் மிகவும் சுத்தமான நீரில் சுத்தம் செய்யப்படுகின்றன. பின் இவை உலர்த்தப்பட்டு அசிடோன், டால பினால் 10 சதவிகிதம் பாலி வினைல் அசிடேட் தயாரிக்கப்பட்டு சுவடிகள் கெட்டிப்படுத்தப்படுகின் றன. இப்படியாக, பனை ஓலைச் சுவடிகள் புதுப்பிக்கப்பட்டுப் பாது காக்கப்படுகின்றன. இந்த முறையில் பனை ஓலைகள் சலவை செய்யப் படுவதுடன் அவற்றில் உள்ள அமிலங்களும் நீக்கப்படுகின்றன.

மேலும், இதிலிருந்து காரமான குளோரின் காற்று உற்பத்தியாவ தால் இது (Fumigated) புகை உண் டாக்கியாகவும் செயல்படுகிறது.

இந்த ஆவணங்களில், தமிழ் அகராதி - நிகண்டு, அருணகிரி அந்தாதி, திருகச்சியூர் நொண்டி நாடகம், சம்பை விநாயகர் விருத்தம், சுபமுத்து அரிக்கினமுத்து சுந்தரவிலாசம், மாரியம்மன் உலா, கும்பக்கணக்கு, சுந்தர காண்டம், ஆயுர் வேத மருந்துகள் தயாரித்தல், மார்க்கண்டேய நாடகம் ஆகியவை அடங்கியுள்ளன. மற்ற ஓலைச் சுவடிகள் தெலுங்கில் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பல இலக்கி யங்கள் அடங்கியுள்ளனவாகும்.

இந்தப் பனை ஓலைச் சுவடி களை ஆராய்ந்தறிய தொல்பொருள் துறை இயக்குநர் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகக் கட்ட டத்தில் உள்ள கீழை நாட்டு ஆவண நூலகக் காப்பாட்சியர் அவர்களும் உதவினர்.


தமிழ்நாடு



# நாடகத் தந்தை சம்பந்தனார்

'தமிழ் நாடகத் தந்தை' என்று நாட்டோரால் போற்றிப் புகழப்படும் பம்மல் சம்பந்தனார், காலமெல்லாம் நாடக வளர்ச்சிக்காகவே அரும்பாடு பட்டார்.

அக்கால நாடக நிலையைக் கண் ணுற்ற சம்பந்தனார், அதிலே மறுமலர்ச்சி உண்டாகக்கப் பெரிதும் உழைத்தார். பல நாடகங்களைப் பார்த்தார். அதிலே உள்ள குறைகளைப் போக்க என்ன செய்யலாம் என்று சிந்தித்தார். பழைய புராண இதிகாச நாடகங்களைத் திரும்பத் திரும்ப நடத்துவதைவிட, புதிய புதிய நாடகங்கள் மேடைக்கு வரவேண்டும் என்று விரும்பினார்.

1891 முதல் 1936 வரை இவர் தமிழ் நாடகங்களை எழுதி, நடித்து, உழைத்து வந்தார். அவற்றையெல்லாம் 'நாடக மேடை நினைவுகள்' என்னும் நூலில் தொகுத்துத் தந்துள்ளார்.

எனவே, அந்தக் காலத்திலேயே, தமிழ் நாடகங்களில் புதுமையைப் புகுத் தினார். தரமான நாடகங்களைத் தயாரிக்க அவர் வழி வகுத்தார்.

அன்னாரின் வாழ்க்கை, இன்றைய நாடக உலகுக்கு மட்டுமல்ல, வருங்கால நாடக உலகுக்கும் வழிகாட்டியாக விளங்கும் என்றால், அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

சம்பந்தனாரின் முழு வாழ்வு, நாடக வாழ்வு. அவரது வாழ்க்கை ஏட்டைப் புரட்டும்போது நேர்மையும் நீதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலைக் களன் களாக விளங்குவதைப் பார்க்கலாம்.

சம்பந்தனாருக்கு, கல்வி மீது உற் சாகம் ஏற்பட, இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, இவருக்கு ஆசிரியராக இருந்த சுப்பிரமணியம் ஐயர், இவர் வீட்டிற்கு வந்து இவர் தந்தையிடம், 'சம்பந்தம், எம்.ஏ. ரங்கநாத முதலி யாரைப்போலப் படித்து முன்னுக்கு வருவான்!' என்றாராம். இதைக்கேட்ட சம்பந்தனாருக்குக் கர்வம் பிறக்கவில்லை. உண்மையில் பயமே ஏற்பட்டது.

அந்தக் காலத்தில், ரங்கநாத முதலியார் என்பவர், சிறந்த கல்விமான் என்று பெயர் பெற்றவராம். அவரைப் போல நம்மால் வரமுடியுமா என்கிற பயம் சம்பந்தனாருக்கு. ஆகவே, எப்படியாவது கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும் என்று ஊக்கம் பிறந்தது.

இரண்டாவது — பள்ளியின் ஆண்டு விழாவில், மெட்ரிகுலேஷன் தேர்வில் முதலாவதாகத் தேறிய ஒரு மாணவன் தங்கப்பதக்கம் பெற்றதை இவர் பார்த் தார். அப்போது, நாமும் இதேபோல் பெறவேண்டும் என்று உறுதி கொண்டார். அவர் நினைத்தது நடந்தது. சம்பந்தனாரும் தங்கப்பதக்கம் பெற்றார்.

* * *

'1891-ஆம் ஆண்டு, என் ஆயுளில் இரண்டு முக்கியமான சம்ப வங்கள் நேர்ந்தன. ஒன்று மிகவும் துக்க கரமானது. மற்றொன்று மிகவும் சந் தோஷமானது' என்று கூறுகிறார் சம்பந்தனார். அவை என்ன?

முதலில் இவர் அன்னை மறைந்ததை மனவேதனையோடு குறிப்பிடுகிறார். எப்படித் தெரியுமா? 'பகற் காலத்தில் வானம் களங்கமில்லாமலிருக்கும்போது, இடி விழுந்ததுபோல என்னை மகத்தான துயரத்தில் ஆழ்த்தியது' என்கிறார்.

இரண்டாவது, மகிழ்ச்சியான நிகழ்ச்சி யாக ஒரு நாடகத்தைப் பார்த்தது பற்றிக் குறிப்பிடுகிறார். அதாவது, ஆந்திர நாடகத் தந்தை வெ. கிருஷ்ணமாச்சார்லு என்பவர், பெல்லாரியிலிருந்து சென் னைக்கு வந்து, தான் ஏற்படுத்திய சரச விநோத சபை உறுப்பினர்களுடன் தெலுங்கு நாடகமொன்றை நடத்தினார். அதை, தகப்பனாருடன் போய்ப் பார்க்கும் வாய்ப்பும் பெற்றார்.

சம்பந்தனார் பிற்காலத்தில், தமிழ் நாடகங்கள் எழுதுவதற்கும், தமிழ் நாடகங் களில் நடிப்பதற்கும் இதுஒரு அரியநிகழ்ச்சி யாக இருந்தது.

'அன்னையும் பிதாவும், முன்னறி தெய்வம்' என்பார்கள். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் நாம் படித்திருக்கிறோம். சம்பந்தனாரின் பெற்றோர்கள் அவருக்குக் கூறிய அறி வுரைகள் - அறவுரைகள் பல. அவற்றை யெல்லாம் அப்படியே தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார் சம்பந்தனார். அந்த இனிய உரைகள் தாம் என்னென்ன?

* என்ன இடுக்கண் நேர்ந்தபோதிலும் தைரியத்தைக் கைவிடாதே. தெய்வத்தை நம்பியிரு.

* எல்லாரையும் மகிழ்வித்து, நீ மகிழ்ச்சியாய் இரு.

* உண்மையே எப்பொழுதும் பேசு.

* கடுகடுத்துப் பேசாதே. இனிமை யாய்ப் பேசு.

* உனக்கு யாராவது கெடுதி செய் தால் அதைப் பொறுத்துக் கொள். அவர்களுக்கு நீ நன்மை செய்யும்படி முயல்.

* கோபத்திற்கு இடம் கொடாதே. கோபம் வந்தால் முற்றிலும் அடக்கிவிடு.

* எந்நேரமும் நகை முகத்துடன் இரு.

* செல்வம் வந்தால் செருக்கடை யாதே. ஏழ்மை வந்தால் தளர்ச்சி யடையாதே.

* மனத்தினால் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. வாக்கினால் தீமை பேசாதே. செய்கையால் தீங்கு இழைக்காதே.

* பேராசைப் படாதே. கிடைத்தது போதும் என்று மகிழ்ச்சியுடன் இரு.

* வரும்படிக்குமேல் செலவு செய்யாதே. உன்னால் இயன்ற அளவு தர்மம் செய்.

* இன்றைக்குச் செய்ய வேண்டிய ஒரு வேலையை இன்றைக்கே செய்து முடி. நாளைக்கென்று தள்ளிப்போடாதே.

* புண்ணியம் செய். பாபம் செய்யாதே.

- இந்த நீதிபோதனைகள் அவருக்கு மட்டுமா? இல்லை. நமக்கும்தான்!

* * *

'மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் இறைவனிடம் மூன்று வரங்கள் கேட் பேன்' என்கிறார் சம்பந்தனார். அந்த மூன்று வரங்கள்தாம்:

1. அப்பிறப்பில் — இப்பிறப்பில் எனக்குத் தாய் தந்தைகளாய் இருந்த வர்களே, அப்பிறப்பிலும் தாய் தந்தையர் களாய் இருக்க வேண்டும்.

2. இப்பிறப்பில் என் நண்பர்களாய் இருந்தவர்களே எனக்கு நண்பர்களாய் இருக்க வேண்டும்.

3. அப்பிறப்பிலும் நான் ஒரு தமிழ் நாடக ஆசிரியனாகவும், விநோதத்திற் காகத் தமிழ் நாடகங்களில் நடிக்கும் நடிகனாகவும் இருக்க வேண்டும்.

* * *

1898-இல் மதுவிலக்குச் சங்கத் தில் உறுப்பினராகச் சேர்ந்த இவர், 64 ஆண்டுகள் உழைத்தார். மூன்று மாதத் திற்கு ஒரு முறை அருகிலுள்ள ஏதாவது ஒரு ஊருக்குப்போய், மதுவினால் உண் டாகும் கேடு குறித்து பிரச்சாரம் செய் தார். அன்றைய ஆங்கிலேய அரசு, மது விலக்குப் பிரச்சாரக் குழுவொன்றை ஏற் படுத்தி அக்குழுவிற்குச் சம்பந்தனாரைத் தலைவராக நியமித்தார்கள்.

—பி.வி.ஜி.

* * *

சம்பந்தனார் பிறந்த நாள்: பிப்ரவரி-1

தமிழகக் கிராமங்களில்

# மருத்துவ வசதிகளைப் பரவலாக்கப் பத்தாயிரம் முகாம்கள் நடத்தப்படும்!

## 'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்' தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பு

தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கை வளம் பெறவும், அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையவும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பல்வேறு கனவுகளை நனவாக்கும் வகையிலும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வெற்றி கண்டு வரும் நமது அரசின் மற்றுமொரு புதிய திட்டமாகிய, இம் மருத்துவ நலத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் பெருமிதம் அடைகின்றேன். மருத்துவத் துறைக்காக 1.50 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைப்பதிலும்; 5.83 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் முன்னரே எங்களது தேர்தல் அறிக்கையில், 'அனைவர்க்கும் சுகாதார நல்வாழ்வு அளிப்பதே எங்கள் ஆட்சியின் நோக்கமாக அமையும். இந்த இலக்கை அடையும் வகையில், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும், மருத்துவ வசதி கிடைக்க அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்யும். கிராமப்புற ஏழை மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில்,நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல் முதலான பொதுச் சுகாதாரத் திட்டங்கள், தக்க முறையில் மாற்றியமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும். கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளில், மருத்துவவர்கள் மற்றும் மருந்துகள் இல்லை எனும் குறை அறவே நீக்கப்படும்', என்று குறிப்பிட்டிருந்தோம்.

தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இந்தப் புதிய திட்டம் அமைந்துள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்து, அவற்றைத் திறமையுடனும், விரைவாகவும் நிறைவேற்றுவதற்கான தக்க நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலமாக வசதிகளை முழு அளவில் செய்து, வெற்றி காண்பதில் தமிழகம் இணையற்று விளங்குகிறது என்பதை, அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலங்களுக்கும், ஓர் முன்னுதாரணமாக இத்திட்டத்தையும் தொடங்குகிறோம்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 'சத்துணவுத் திட்டம்', இந்திய நாட்டிலேயே முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டது. முதற்கட்டத்தில் இத்திட்டத்தின் நோக்கம், பலன்கள் போன்றவற்றை முழுமையாக அறியாத சிலர், தேவையற்ற விமர்சனங்களைச் செய்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால், இன்று, அனைத்து நாட்டு மக்களும் இத்திட்டத்தின் பலனைக் கண்டு, நாம் பெருமைப்படும் வகையில் வியந்து போற்றுகின்றனர். புரட்சித் தலைவரின் தொலை நோக்கினைப் பாராட்டுகின்றனர்.

அதேபோல், இன்று தொடங்கப்படவிருக்கும் மருத்துவ நலத் திட்டமும் தமிழ்நாட்டில் குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் நல்வாழ்வினை அளித்து, எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உரிய, திடகாத்திரமான உடல் வலிவைப் பெற்றவர்களாக அவர்கள் திகழ, இத்திட்டம் பெரிதும் உதவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

எனினும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. திட்டங்களை நிறைவேற்றும் அணுகுமுறையில், செயல்பாடுகளிலும், நாம் மேலும் முன்னேற்றம் காண்பது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமாகிறது.

தொழுநோய், காசநோய், கண்நோய் போன்றவை, தமிழக மக்களை அதிகமாகப் பாதித்து வருகின்றன. இந்த நோய்களைத் தீர்க்க, கிராம மக்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொண்டுதான் கிராம மக்களுக்காக, அவர்கள் இருக்கும் இடத்திலேயே மருத்துவ வசதிகள் செய்து தருவது என்கிற எங்கள் இலக்கினை அடைய, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



கிராமப்புறங்களில் மருத்துவர்களைக் காண்பது அரிது என்றிருக்கும் அவல நிலையைப் போக்கிடும் வகையில், பல்வேறு மருத்துவத் துறையில் உள்ள நிபுணர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி, பரிசோதனை வசதிகள் செய்து கொடுத்து, மருத்துவ வசதிகளைப் பரவலாக்கிட இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் இன்னதென ஆராய்ந்து, நோயின் காரணங்களை அறிந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, அந்த வழிகள் உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும். வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் சுட்டிக்காட்டியதற்கு, இம் மருத்துவ நலத் திட்டம் உரிய வகையில் செயல் வடிவம் தரும்.

இந்தத் திட்டத்தின்கீழ் முகாம்கள் நடத்தப்பட்டு, விளக்க உரை, கண்காட்சி மற்றும் வீடியோ படங்களின் மூலம், சுகாதாரக் கல்வியும் போதிக்கப்படும். கிராமப்புற மக்கள் தங்களின் நல்வாழ்விற்காக, தங்களின் பழக்க வழக்கங்களை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறப்படும்.

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதன் மேன்மை, குடிப் பழக்கத்தினால் ஏற்படும் தீமை, தவறான பழக்க வழக்கங்களினால் உடலுக்கு ஏற்படும் குறைகள், மற்றும் இடர்ப்பாடுகள் பற்றியும் இம்முகாம்களில் எடுத்துரைக்கப்படும்.

இன்னும் ஆறுமாதக் காலத்திற்குள், தமிழகத்தில் இதுபோன்ற 10,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கால கட்டத்திற்குள், தமிழக மக்களுக்கு நான் கொடுக்க நினைத்த, சுகாதாரப் பாதுகாப்பு அரணின் அடித்தளம் நிர்மாணிக்கப்படும் என்று நம்புகிறேன். மேலும் இத்திட்டத்தை நீட்டித்து, தமிழக மக்களுக்கு முழு மருத்துவப்" பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் மாபெரும் வெற்றி அடைய, அரசும், அரசு அலுவலர்களும், அரசு மற்றும் தனியார் மருத்துவர்களும் இதில் ஈடுபட்டால் மட்டும் போதாது. இத்திட்டத்தின் பயனைப் பெற இருக்கின்ற பொதுமக்கள், முழுமனதுடன் இத்திட்டத்தில் ஈடுபட வேண்டும், பயன்பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நோய் இருப்பதை மறைப்பதால், நோயைக் குணப்படுத்த முடியாது. அது உங்களின் நிரந்தரக் குறையாக அமைந்துவிட வாய்ப்புள்ளது. எனவே, மக்களிடையே சுகாதார வாழ்க்கை குறித்த விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். நீங்கள் மனமுவந்து முன் வந்து நலம் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சிறந்ததொரு முன்னோடித் திட்டத்தை, முழுமையாக வெற்றிபெறும்படி நிறைவேற்றிடும் வகையில், உதவ முன்வந்துள்ள பல்வேறு துறை அதிகாரிகளுக்கும், தனிப்பட்ட மருத்துவர்களுக்கும், மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கும், என் சார்பிலும் அரசின் சார்பிலும், இதய பூர்வமான நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சி தமிழ்நாட்டில் மருத்துவப் புரட்சி', எனப் பலரும் பாராட்டும் வகையில் அமைந்திட வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்கச் செயல்பட்டு, பசிப்பிணி போக்கிடப் புரட்சித் தலைவர் தொடங்கிய சத்துணவுத் திட்டம் போல், நாம் தொடங்கிடும் இத்திட்டமும், நோயற்ற வாழ்வை நம் தமிழ் மக்களுக்கு வழங்கிச் சிறந்திடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**(18.1.92 அன்று, கலைவாணர் அரங்கில் இலவச மருத்துவ நலத் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.)**

## பார்த்தோம் படித்தோம்

**தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் டாக்டர் பட்டம் பெறும் அட்டைப்படமும் அரிய பட்டமளிப்பு விழாப் பேருரையும் என்றும் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கக்கூடியது.**

—பி.ராஜசேகரன்,
மதுரை.

**கர்நாடகக் கொடுமைகளுக்கு அனைத்துக் கட்சி சார்பிலும் நிரந்தரத் தீர்வு காணுவதாகக் கூறிய முதல்வரின் உரை பாராட்டத் தக்கது.**

—காகை ஜெ.ரவிக்குமார்
காங்கேயம்-1.

**"மனிதனின் கவனக்குறைவு மற்றும் அலட்சியப் போக்கினால் ஏற்படும் விபத்துக்கள், இயந்திரம் மற்றும் மின்சாரக் கோளாறுகளினாலும் இயற்கையின் சீற்றத்தினாலும் நிகழும் விபத்துக்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது எப்படி என்று முழு விவரமாக அமைந்த அந்தக் கட்டுரை- பயனுள்ளதாக அமைந்திருந்தது.**

—ந.சுந்தரபுத்தன்,
கண்கொடுத்த வனிதம்.

# தெலுங்கு கங்கைத் திட்டம்

## தமிழக-ஆந்திர முதல்வர்கள் சந்திப்பு

சென்னை மாநகருக்கு, கிருஷ்ணா நதியில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கான தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களும்,மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். ஜனார்த்தன ரெட்டி அவர்களும் 11-1-92 அன்று புதிய உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர்.

இரண்டு முதலமைச்சர்களும் 90 நிமிட நேரம் பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக இந்தப் புதிய உடன்படிக்கை எட்டப்பட்டது.

இதன்படி, சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை 1995-96-ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள்ளாக கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குக் கிடைத்துவிடும்.

1983-ஆம் ஆண்டு தொடங்கிய இந்தத் திட்டம், ஏற்கெனவே 1992-ஆம் ஆண்டு முடிவடைந்து விடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அது ஓராண்டு தாமதப்படும் என்று இந்தப் புதிய உடன்படிக்கையின் மூலம் முடிவாகியிருக்கிறது.

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா ஆற்றில் இருந்து சென்னைக்குக் கொண்டு வரும் தெலுங்கு கங்கைத் திட்டத்துக்கு 1983-ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டம் பாதி முடிவடைந்த நிலையில் உள்ளது.

இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது பற்றி மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்களுடன் பேச்சு நடத்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஐதராபாத் சென்றார். ஆந்திர மாநில தலைமைச் செயலகத்தில் 11-1-92 அன்று இரு முதல்வர்களும் சந்தித்துப் பேசினர்.

தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள் நடந்து வருவது தொடர்பான வரைபடங்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் காட்டப்பட்டது. திட்டப் பணிகள் தொடர்பான வீடியோ படம் ஒன்றும் போட்டுப் பார்க்கப்பட்டது.

சென்னை நகர மக்களுக்குத் தெலுங்கு கங்கைத் திட்ட தண்ணீர் விரைவில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பேச்சுவார்த்தையின்போது மாண்புமிகு ஆந்திர முதல்வரிடம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். நீண்ட நேரப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, தெலுங்கு கங்கைத் திட்டத்தை 1995-96-இல் நிறைவேற்றி முடிப்பது என இரு தலைவர்களும் முடிவு செய்தனர். இது பற்றிய ஒப்பந்தத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஜனார்த்தன ரெட்டி அவர்களும் கையெழுத்திட்டனர்.

தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற 1,003 கோடி ரூபாய் செலவாகும் என்று 1989-ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டது. விலைவாசி உயர்வு காரணமாக இந்தத் திட்டச் செலவுக்கு 1,120 கோடி ரூபாய் ஆகும் என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்குத் துணையாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. செல்லப்பன், கிருஷ்ணா நீர்த் திட்டத் தலைமைப் பொறியாளர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

'தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து ஐதராபாத்தில் பரஸ்பரப் பேச்சு வார்த்தை நடத்துவதற்குச் சம்மதித்த மாண்புமிகு ஆந்திர முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்துக்கு இந்தத் திட்டம் மிகவும் தேவையானது போல உங்களுக்கும் முக்கியமானது என்பதை அறிவேன். இந்தியாவில் 4- வது பெரிய நகரமான சென்னை நகரம் பல ஆண்டுகளாகக் கடும் குடிநீர்ப் பற்றாக் குறையை எதிர்நோக்கி உள்ளது. சென்னையில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்குள் போதுமான நீர் ஆதாரம் எதுவும் இல்லை.

வடகிழக்குப் பருவ மழையை நம்பித்தான் குடிநீர் வழங்கல் இருக்கிறது. இந்தப் பருவமழை நிலையற்று இருப்பதால் இதைச் சார்ந்து இருக்க முடியாத நிலையில் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. நாட்டிலேயே சென்னை நகரில்தான் தனி நபருக்கு வழங்கப்படும் குடிநீர் வழங்கல் அளவு குறைவு. விரைவில் தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்றுவது தேவையான ஒன்றாகும்.

'மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திர ஆகிய மாநிலங்கள் கிருஷ்ணா நதியில் இருந்து தங்கள் பங்கு தண்ணீரில் தலா 5 டி.எம்.சி. தண்ணீரைத் தரச் சம்மதித்து இருக்கிறது என்று மறைந்த பிரதமர் இந்திராகாந்தி 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னையில் அறிவித்தார். அதில் இருந்து ஆந்திராவும், தமிழக அரசும் 15 டிஎம்சி கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து பெண்ணாறு மூலமாக எடுக்கும் திட்டத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

'ஐதராபாத்தில் 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ந் தேதி ஆந்திரா மற்றும் தமிழ்நாடு முதல்வர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது, இரு மாநில மக்களிடமும் பெரிய நம்பிக்கைகள் தோன்றின. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். ஐதராபாத்துக்கு வந்தபோது அவரிடம் காட்டப்பட்ட மரியாதையையும் நல்லெண்ணத்தையும் நான் அறிவேன்.

'ஆண்டுகள் கழிந்தபிறகும் இந்தத் திட்டம் இன்னும் முடிவடையவில்லை. இந்தத் திட்டம் நிறைவேறுவது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து இரு மாநில அலுவலர்களும் அடிக்கடிச் சந்தித்துக் கருத்து பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள். அவர்களால் முடிந்த அளவு பல இடையூறுகளை நீக்கி வருகிறார்கள்.

'இரு மாநில தலைமைச் செயலாளர்களும் சந்தித்து இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த முடிவுகளை எடுத்து வருகிறார்கள். தலைமைச் செயலாளர்களின் கடைசிக் கூட்டம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் தேதி சென்னையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் பல பிரச்சினைகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

'ஆந்திராவில் 5 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் கொடுக்கும் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து சென்னை நகரின் குடிநீர் வழங்கலுக்கு 15 டிஎம்சி தண்ணீர் தரும் வகையிலான இந்தத் திட்டம் மிகச் சாதாரணமானதும், பாரம் பரியமானதுமாகும். எந்தவிதத் தொழில்நுட்பச் சிக்கலும் இதில் இல்லை.

'இந்தத் திட்டத்துக்கான செலவுத் தொகையை எவ்வாறு தமிழக அரசும், ஆந்திராவும் பிரித்துக் கொள்ள வேண்டும்? தமிழ்நாடு எல்லையில் எப்போது குடிநீர் வழங்கலுக்காகத் தண்ணீர் கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் அந்த ஒப்பந்தத்தில் விரிவாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. வேலைகள் நடக்கும்போது தமிழ்நாடு எவ்வாறு பணம் வழங்க வேண்டும் என்பதெல்லாம் ஒப்பந்தத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.




'பொது ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை எல்லாம் தமிழ்நாடு நிறைவேற்றி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்தபட்சம் 3 ஆண்டில் அதிகப் பட்சம் 6 ஆண்டுக்குள் சென்னை நகருக்குக் குடிநீர் கிடைக்கும் வகையில் பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு, ஆந்திர முதல்வர்கள் முடிவு செய்தனர்.

துரதிருஷ்டமாக மத்திய அரசின் வனத்துறை அனுமதி இந்தத் திட்டத்துக்குக் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம், நிதி நெருக்கடி, தேவையான அளவு முதலீடு செய்யாதது போன்ற பல காரணங்களால் இந்தப் பணிகள் நடப்பதற்கு இடையூறு ஏற்பட்டது.

'விரைவில் சென்னை நகர மக்கள் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைப் பெறும் வகையில் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த விசேஷமாக உங்கள் உதவியைக் கோரி நான் இங்கு வந்து இருக்கிறேன். சமீபத்தில் நடந்த நமது மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தில் இடையூறுகளை எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி பலனாவது கிடைக்கும் வகையில் பணிகளை விரைவுபடுத்த அவர்கள் நம் முன்பு ஆலோசனைகளை வழங்கி உள்ளனர்.

'இந்த இலக்குத்தேதியில் பணிகளை முடிக்க ஒரு செயல் திட்டதைத் தீட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தச் செயல் திட்டம் குறித்து நாம் விரிவாக விவாதித்து, அந்தத் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்பட்டு அடிக்கடி இந்த மாநில தலைமைச் செயலாளர்கள் கூட்டுக் கூட்டத்தில் தீவிரமாகக் கண்காணிக்கப்பட நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

'ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி தமிழக அரசு தனது பங்கை வழங்கும் என்று தமிழக அரசின் சார்பில் நான் உறுதி அளிக்கிறேன். விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற நீங்கள் உதவவேண்டும்.

'சென்னை நகர மக்களுக்கு ஆந்திர முதல்வர் அவர்கள் புதியவர் அல்ல. சென்னை நகர் மீது அவருக்குள்ள அன்பின் காரணமாக, இந்தத் திட்டத்தில் அவர் விசேஷ அக்கறை எடுப்பார் என்பதில் எனக்கு ஐயமில்லை' ●

அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொற்கால வரலாறு**

அலைகடலென ஆர்ப்பரித்து வருகை தந்துள்ள இலட்சோப இலட்சம் தாய்மார்கள், பெரியவர்கள், இளைஞர்கள் அனைவருக்கும், என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இன்றைக்கு காங்கேயத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது போன்ற பல்வேறு திட்டங்கள், தொடர்ந்து இங்கேயும் தமிழகத்தில் ஏனைய பகுதிகளிலும் நிறைவேற்றப்படும்.

தமிழகச் சரித்திரத்தில், புரட்சித் தலைவர் வழியில் ஓர் நல்லரசு, பொற்கால வரலாறு ஒன்றை உருவாக்கியது என நிகழ்காலத்தில் மட்டுமல்ல; வருங்காலத்திலும் வரலாறு நமக்கு வாழ்த்துப் பாடிடும் அளவுக்கு, நமது இலக்கினை அடையத் தொடர்ந்து பணிபுரிவோம்.

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெல்லும் முழங்கு நஞ்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு'

- எனப் பாவேந்தர் விரும்பிய நல்ல நாடாகத் தமிழகத்தைத் திகழ்ந்திடச் செய்வோம்.



'அச்சீர்மிகு திசை நோக்கித் தமிழகத்தை அழைத்துச் செல்ல, காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள சான்றோர்கள் ஆன்றோர்கள் அனைவரது நல்லாதரவையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

**– பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், 22.1.92 அன்று நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.**




# "பார்த்தாஸ்"

(ஏர்கண்டிசன்ட்) கேப்ரோடு, நாகர்கோவில்.

**தொலைபேசி: அலுவலகம்: 7698, இல்லம்: 3886**

**கன்னியாகுமரி மாவட்டத்திலேயே ஓர் ஒப்பற்ற ஜவுளி மாளிகை! ஆடவர், பெண்டிர், குழந்தைகள் ஆகியோருக்கான தரம் மிக்கதும், விலை குறைவானதும் ஆன ஜவுளிகளை அள்ளி வழங்கும் ஒரு தலைசிறந்த ஆடையகம்!**

**மற்ற மாநிலங்களில் தயாராகும் பட்டுச் சேலைகளும்**

**காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, தர்மாவரம், வாரணாசி**

பட்டுச் சேலைகளும் குறைந்த விலையில் கிடைக்கும்.






# காலமெல்லாம் உங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை!

## பர்கூர் அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் உரை

**த**மிழகத்தில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று, தமிழக முதலமைச்சராக என்னைப் பொறுப்பேற்கச் செய்திட்ட, என் பாசத்திற்குரிய பர்கூர் தொகுதி மக்களை, மீண்டும் இன்று நான் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நான் உங்களுக்குப் பணிபுரிய மிகவும் கடமைப்பட்டுள்ளேன். ஆகவேதான், பதவிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே பர்கூர் நகருக்கு நான் நேரில் வந்திருந்து, பலகோடி ரூபாய்க்கான பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்துச் சென்றேன்.

தொடர்ந்து பல பிரச்சினைகள் இருந்தும்கூட, எனக்கு வாக்களித்த உங்கள் அனைவருக்கும் என்னால் ஆன பணிகளை, தொண்டினை ஆற்றிட வேண்டும் என்ற உணர்வோடு, இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கும் இந்த நல்ல வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

நீண்ட நெடுங்காலமாகவே தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு, ஆட்சியின் அரவணைப்போ, அலுவலர்களின் கவனிப்போ அற்ற நிலையில் இருந்த ஓர் தொகுதி என்பதால், பல்வேறுபட்ட குறைபாடுகள் உடைய தொகுதியாக இத்தொகுதி இருந்துவருகிறது.

அந்த அளவுக்குப் பின் தங்கிய தொகுதி, வறண்ட தொகுதி, வறுமையில் வாடும் தொகுதி என்பதால் தான், இதுபோன்ற தொகுதிகளை முன்னுக்குக் கொண்டுவரும் ஒரே எண்ணத்தில், இத்தொகுதியை எனக்கெனத் தேர்ந்தெடுத்து, இங்கே இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்றம் சென்றுள்ளேன்.

எனவே - ஏனைய தொகுதிகளில் உள்ள வாய்ப்பும், வசதியும், பர்கூர் தொகுதியும் பெற்றிடும் திட்டங்கள் அனைத்தும், ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படுத்தப்பட உள்ளன.

அந்த வகையில் தான் இப்பகுதியின் குடிநீர்த்தேவைக்கான திட்டங்களுக்கும், சாலை மேம்பாட்டுச் சீர்திருத்தங்களுக்கும், போக்குவரத்து வசதிகளை உருவாக்கும் பணிகளுக்கும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முடுக்கி விடப்பட்டுள்ளன.

நிலமற்ற ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள், மற்றும் அடித்தளத்தில் வீழ்ந்து கிடக்கும் மக்களுக்கும், முதியோர் மற்றும் தாய்மார்களுக்கும், அரசின்

# நூல்நயம்

### சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (முதல் பாகம்)

**ஆசிரியர்: மானோஸ்**
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:100 விலை:ரூ.12/-

மனிதனின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு உதவும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தன்னம்பிக்கையின் உதவியினால் வெற்றி பெற்ற பெருமக்கள் குறித்துச் சுவையாக எடுத்துக் கூறியுள்ளார் நூலாசிரியர்.

தோல்வி பெற்ற பெருமக்கள் பலர் மனந்தளராமல் பணியாற்றி வெற்றியை ஈட்டிய செய்தியும் விவரிக்கப்பட்டுள்ளது ஊனமுற்றவர்களும் முயற்சியின் காரணமாக வெற்றி பெற்ற வரலாறும் இந்நூலில் காணப்படுகிறது. மொத்தத்தில், வெற்றிக் கனியைப் பறித்துக் கொண்ட பல்வேறு நாட்டுப் பெருமக்களை இந்நூலின் உதவியால் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ள இந்நூல் துணை புரிகிறது.

### சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (இரண்டாம் பாகம்)

**ஆசிரியர்: மானோஸ்**
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:67 விலை:ரூ.8/-

மனமும் வாக்கும் ஒன்றுபட்டால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இந்தக் கருத்துக்கு அரண் சேர்க்கும் வண்ணம் பல்வேறு செய்திகள் இந்நூலில் பரவிக் கிடக்கின்றன. மனம் வலிமை பெறுவதற்கு உடல் நலமும் தேவை என்பதை ஆணித்தரமாகக் கூறும் நூலாசிரியர், 'தாழ்வு மனப்பான்மையை மனிதன் அகற்ற வேண்டும்; அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற இயலும்' என்பதை நன்கு விளக்கியுள்ளார். சரளமான நடை - இனிய சொல்லாட்சி இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

### சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (மூன்றாம் பாகம்)

**ஆசிரியர்: மானோஸ்**
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:91 விலை:ரூ.12/-

மனிதன் சாதனை புரிய வேண்டும் என்பதை, அறிவியல், உள இயல், வரலாற்று இயல், புவி இயல், ஆன்மீக இயல் இப்படிப் பல்வேறு இயல்களின் உதவி கொண்டு இந்நூலில் விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

எங்கெங்கே சுற்றினாலும் சொந்த வீட்டுக்குத் திரும்பித்தான் ஆக வேண்டும். என்னதான் மேலை நாட்டு நாகரிகம் - பழக்க வழக்கம் ஆகியவற்றை நாம் பின்பற்றினாலும் நமது சொந்த நாட்டுப் பண்பாடே உயர்ந்தது என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. நோய் நீங்க - நல வாழ்வு கிடைக்க யோகாவும் பிராணாயமும் தேவை என்பதை நூலாசிரியர் எடுத்துச் சொல்லியிருப்பதன் மூலம் நமது பண்பாட்டுச் சிறப்பு தெற்றென விளங்குகிறது. வாழ்க்கையில் வெற்றி பெற ஒருவரிடம் உறைந்திருக்கும் நலன்கள் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

—தமிழ்ப்பித்தன்

### மலரும் நினைவுகள்

**(மறக்க முடியாத தன் வரலாற்றுக் குறிப்புகள்)**

**எழுதியவர்: திருமதி இந்திரா காந்தி**
**தமிழாக்கம்: கி. வேங்கடசுப்பிரமணியன்**
**வெளியிட்டோர்:**
பூரம் பதிப்பகம்
59, ராஜூ நாய்க்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-600 033.

பக்கம்:106 விலை:ரூ.13

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய முக்கியத்துவம் வாய்ந்த தன் வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டது இந்நூல். இதனை டாக்டர் கி.வேங்கட சுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்.

ஆனந்த பவனம் தொடங்கி, இறுதி உரை வரை - திருமதி இந்திரா காந்தி அவர்கள் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இதிலே தொகுத்துக் கூறியுள்ளார்.

இந்தச் சுவையான துணிச்சல் மிக்க வீர வரலாற்றை இளைய தலைமுறை மட்டுமல்ல, எல்லாத் தரப்பினரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

— கிரி

### இயற்கை மருத்துவம்

**ஆசிரியர்: மகரிஷி க. அருணாசலம்**
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:351 விலை:ரூ.30/-

இயற்கை மருத்துவத்தில் உலகத்துக்கே வழிகாட்டியாகத் திகழ்வது நம் இந்தியத் திருநாடு. அண்மைக் காலங்களில் நமது அரசும், நம் மக்களும் இயற்கை மருத்துவத்தின் பால் தமது அக்கறையையும், ஆர்வத்தையும் திருப்பியுள்ளனர்.

இந்நூலாசிரியர் உண்ணா நோன்பின் வகைகளையும், அதன் பலன்களையும், கொள்ளும் வழிகளையும், பிராணாயாமம் என்ற காற்றுச் சிகிச்சை முறைகளைப் பற்றியும், மற்றும் வெப்பச் சிகிச்சை, நீர்ச் சிகிச்சை, மண் சிகிச்சை போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களையும் எளிய நடையில் வழங்கியுள்ளதோடு, சில ஆசனங்களைப் பற்றியும், அவைகளை எக்காலத்தில், எதற்கு எப்படிச் செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளக்கப் படங்களுடன் விவரித்துள்ளார். அத்துடன் ஆஸ்த்மா, நீரிழிவு, குடல்வால் நோய், பற்களில் வரும் வியாதிகள் பற்றியும் விளக்கமாகக் கூறி அவைகளைத் தடுக்கும் இயற்கை மருத்துவத்தின் மகிமையைப் பற்றியும் குறிப்புகள் தந்துதவியுள்ளார். அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய நூல்.

—சுகுமாரன்

### அறுவடை பின்சார் தொழில் நுட்பம்

**ஆசிரியர்: ப. பிள்ளையார்**
**டாக்டர் வ. சுப்பிரமணியன்.**
**வெளியீடு:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:179 விலை:ரூ.25/-

விவசாயிகள், தானிய விற்பனையாளர்கள் போன்றோருக்கு மிகுந்த பயன்தரவல்ல அருமையான நூல்.

உணவு தானியங்களின் ஊட்டச்சத்து முதல் கதிர் அடிப்பு முறைகள், தானியம் உலர்த்தும் வழிமுறைகள், சேமிக்கச் சிறந்த வழிகள், பயறுகள் உடைத்தல், எண்ணெய் வித்துக்களைப் பதப்படுத்தும் முறைகள், அறுவடை இயந்திரம், கதிர் அடிப்பான்கள் தூற்றும் இயந்திரங்கள் என்று படிக்கப் படிக்க பிரமிப்பைத் தரும் விவசாய முன்னேற்றமும் நூதன முறைகளும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆலை அமைப்பு முறைகளும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

எல்லாவற்றிற்கும் விளக்கப்படங்கள் தெளிவாகவும், புரிந்துகொள்ள எளிமையாகவும் உள்ளன. விவசாய சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய பயனுள்ள நூல்.

- என். குமாரசாமி.

(8 -ஆம் பக்கம் தொடர்ச்சி)

பின் ஒன்றாக நிறைவேற்றி வருவதே இதற்குச் சாட்சியாகும்.

மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் விளங்கும் எங்கள் அரசு, தமிழகத்தின் எதிர்பார்ப்புகளை விரைவில் முழுவதுமாக நிறைவேற்றும். எங்கள் இலட்சியப் பாதையில், முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

**இம்மாவட்டத்திற்கு ரூ.225 கோடி**

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களை நமக்குத் தந்த இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கென, இவ்விழா நிகழ்ச்சியில் மட்டும், ஏறத்தாழ 225 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.

நான் இங்கே வேட்பாளராக உங்களைச் சந்தித்தபோது, மிக முக்கியப் பிரச்சினையாக முழுவதும் நிலவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு பற்றித்தான்.

நான் தேர்தல் பிரச்சாரத்திற்காகக் காங்கேயம் தொகுதியைச் சுற்றி வந்தபொழுது, ஒவ்வொரு கிராமத்திலும் நான் சந்தித்த தாய்மார்கள் அனைவரும் என்னிடம் கேட்டுக்கொண்டது-

'நாங்க உங்களுக்கு ஓட்டுப்போடறோம். நீங்க வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினரா வந்து, எங்க குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்க' என்பதுதான், நானும் அவர்களிடம், 'நிச்சயமாக உங்களது கோரிக்கையை நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன் நிறைவேற்றித் தருகிறேன்' என்று வாக்குறுதி அளித்தேன். தற்போது நான் உங்கள் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத போதிலும், நான் நேரில் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கத்தான், இன்று இங்கு வந்துள்ளேன். காங்கேயம் தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினையினை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக, இன்று இந்த விழாவில், காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளேன்.

இத்திட்டத்திற்காக ரூ.20.43 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளேன். இந்தத் திட்டத்தினால், காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களின் பல்லாண்டுக் கோரிக்கையான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் நான் இத்தொகுதித் தாய்மார்களுக்குக் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளேன், என்பதையும், பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, வெள்ளக் கோயில், பொங்களூர் மற்றும் தாராபுரம் தொகுதிகளிலுள்ள பல கிராமங்களுக்கும், நிரந்தரப் பயன் கிடைக்க உள்ளது என்பதை, இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு பகுதிகளில் சிறு தொழில்கள் தொடங்கவும் - தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு மானியங்கள் வழங்கவும் மட்டும், 16 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான மதிப்பீடுகள் அரசால், ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தகைய நல்ல திட்டங்களையும் தற்போது, உங்கள் அனைவரது கரவொலி வாழ்த்துக்களோடு தொடங்கி வைத்துள்ளேன்.

இப்பகுதி மக்கள், நீண்ட நெடுநாட்களாகக் கோரி வந்துள்ள, ரூபாய் 13 கோடி செலவிலான நொய்யல் அணைக்கட்டுத் திட்டத்தையும், மெத்த மகிழ்ச்சியோடு திறந்துவைத்துள்ளேன்.

குறிப்பாகக் காங்கேயம் தொகுதியின் மிகப்பிரதான சாலையாகக் கருதப்படும், பெருந்துறை-காங்கேயம் நெடுஞ்சாலையைச் செப்பனிட்டுச் சீர்செய்ய மட்டும், ரூ.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சாலையில் சென்னிமலை அருகே, பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தை, மீண்டும் புதுப்பித்துக் கட்டுவதற்காக மட்டும், ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசின் சாதனைகள்**

வருவாய்த்துறை மூலமும், சமூக நலத்துறை மூலமும், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறைகள் மூலமும், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத் துறை மூலமும், பொதுப்பணித்துறை மூலமும், கைத்தறித்துறை மூலமும், ஊரக வளர்ச்சித்துறை மூலமும், இன்னும் அரசின் அனைத்துத் துறைகள் மூலமும், ஏராளமான திட்டங்களை உங்கள் கண் முன் இதோ தொடங்கி வைத்துள்ளேன். இவை எல்லாம், கடந்த ஏழு மாத காலம் நடந்துள்ள எங்கள் ஆட்சிச் சாதனைகள் என்பதை மெத்தப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்டுள்ள நிகழ்ச்சிகள் மூலமும், பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

> கல்வியும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
>
> —தந்தை பெரியார்

ஆனால், இன்று பெரியார் மாவட்டத்தில்தான், மற்ற எல்லா மாவட்டங்களையும் மிஞ்சும் அளவுக்கு, மற்ற மாவட்டங்களில் தொடங்கிய திட்டங்களைவிட அதிகமாக, ரூபாய் 225 கோடிக்கான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

மேலும், இன்றைக்கு நடைபெறும் அரசு விழாவை, ஓர் மாநில மாநாட்டை மிஞ்சும் அளவுக்கு இங்கே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இத்தனைச் சிறப்புற நடத்திடக் காரணமாக இருந்து, உழைத்திட்ட அமைச்சர் பெருமக்களையும் அரசு அலுவலர்களையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்; எனது அன்புச் சகோதரர் செங்கோட்டையன் அவர்களின் கண்துஞ்சாத பணி ஆற்றலை, இந்த நல்ல நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். நான் கடந்த சட்டமன்றத் தேர்தலில், பெரியார் மாவட்டத்தில்தான் போட்டியிடவேண்டும் என வற்புறுத்தி அழைத்ததில், பெரும்பங்கு அவருக்கு உண்டு.

சகோதரர் செங்கோட்டையன் அவர்கள், தொடக்க காலத்தில் இருந்து தான் கொண்ட கொள்கையிலிருந்தும், ஏற்றுக்கொண்ட தலைமையிலிருந்தும் துளிகூட மாறுபடாத பாங்குடையவராக வளர்ந்து வந்துள்ளார். கட்சியின் அடிமட்டத் தொண்டர்களில் ஒருவராகப் பணியைத் தொடங்கி, மாவட்டச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, தலைமைக்கழகத்தின் அமைப்புச் செயலாளராக, தற்போது கொள்கை பரப்புச் செயலாளராக, இப்படிப் பல்வேறு பொறுப்புக்களிலும், கொடுத்த பணியைச் சிறப்புடன் செய்து முடிக்கும் செயல் வீரராகத் திகழ்ந்துள்ளார் என்று சொன்னால், அது மிகையாகாது.

கழகத்திற்குச் சோதனை வந்த காலத்தில் எல்லாம், சற்றும் சருக்கலுக்கோ, வழுக்கலுக்கோ, இடம் கொடுக்காது, தன்னுடைய அரசியல் நிலையிலிருந்து சற்றும் சலனத்திற்கு ஆளாகாது, எப்போதும் தனது நிலையிலிருந்து மாறாத பண்பாளராக, சகோதரர் செங்கோட்டையன் திகழ்ந்த காரணத்தால்தான், இன்று அவர் அமைச்சரவையில் பொறுப்பேற்கும் அளவுக்கு உயர்ந்துள்ளார். கழகப் பணியிலும் சரி, அரசுப் பணியிலும் சரி, அவரது கடின உழைப்பினைப் பல்வேறு சந்தர்ப்பங்களில், நானே வியந்து பாராட்டியுள்ளேன்.

அத்தகைய அருமைச் சகோதரர் செங்கோட்டையன் அவர்களும், அவருக்குத் துணையாகப் பணியாற்றி வரும் மற்ற எனது உடன்பிறப்புகளும், இங்கே சிறப்புறப் பணியாற்றி, இச்சீர்மிகு விழாவினை நடத்தியுள்ளார்கள். அவர்கள்

# 'கலைமாமணி' விருது வழங்கும் விழா

தமிழ்நாடு இயல்,இசை,நாடக மன்றத்தின் சார்பில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கும் விழா, சென்னைக் கலைவாணர் அரங்கில் 26.1.92 அன்று மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவிற்கு, மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவில், விருதுபெறும் கலைஞர்களுக்கு, மேதகு ஆளுநர் அவர்கள் பொன்னாடையும் பொற்பதக்கமும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விருது பெறும் கலைஞர்கள் 39 பேர்களுக்குக் 'கலைமாமணி' பட்டம் வழங்கினார்.

விழாவில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார் இது தவிர, மறைந்த 14 கலை மேதைகளின் திருவுருவப் படங்களையும் திறந்துவைத்தார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற திரு. சி.எஸ். ஜெயராமன், திரு. கள்ளபார்ட் நடராஜன், திருச்சி திரு. சுவாமிநாதன் ஆகியோருக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் பொற்கிழியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

சிறந்த நாடகக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை நாடகப் பிரியாவுக்கும், சிறந்த கலை நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்புக்கும் விழாவில் கேடயங்கள் வழங்கப் பட்டன.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பேசுகையில்- 'பல்வேறு வகையான கலைக் கருவூலங்களைத் தென்னிந்தியா தன்னகத்தே கொண்டுள்ளது. இன்று வரை அது உண்மை அழகோடு பாதுகாக்கப்பட்டு வருகிறது. கலை, பண்பாட்டுப் பரிவர்த்தனை மூலம், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடிகிறது' என்றார்.

## மாண்புமிகு முதல்வர் உரை:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

'கலை! மனித மனத்தின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு! உள்ளத்து உணர்வுகளின் பிரதிபலிப்பு! தான் வாழ்வதோடு, தன்னைப் படைத்தவனையும் வாழவைக்கும் வல்லமையுடையது கலை! அது காலத்தால் அழியாதது! கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும், நம் ஆன்மாவோடு உறவாடும் ஆற்றல் பெற்றது.

உலகத்தில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, நம் தாய்மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஏனெனில், தமிழ் மொழி மட்டும் தான் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆயிரக்கணக்கான இயற்றமிழ் விற்பன்னர்கள், இசைத் தமிழ் வேந்தர்கள். நாடகத் தமிழ் வல்லுநர்கள் ஆகியோரின் கூட்டுப் படைப்பாக முத்தமிழ் விளங்குகிறது. இதுவே, நம் அன்னைத் தமிழின் தனிச் சிறப்பாக, தரணி எல்லாம் போற்றப்படுகிறது. முத்தமிழைக் காக்கும் அமைப்பாக இயங்குகின்ற இயல், இசை, நாடக மன்றத்தின், இச்சீர்மிகு விழாவில் கலந்துகொள்வதில் உவகை அடைகின்றேன்.

தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான, இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை

அறிஞரைப் போற்றாத நாட்டில்
அறிஞர்கள் தோன்றுவதில்லை!

வீரரைப் போற்றாத நாட்டில்
வீரர்கள் தோன்றுவதில்லை!

கவிஞர்களைப் போற்றாத நாட்டில்
கவிஞர்கள் தோன்றுவதில்லை!

கலைமேதைகளைப் போற்றாத நாட்டில்
கலைமேதைகள் தோன்றுவதில்லை!

இதனை உள்ளத்துள் கொண்ட அரசாக, இந்த அரசு திகழுவதால் தான், தமிழ்காத்து, தமிழர்தம் நலம் பேணி, தமிழ்க் கலைகளுக்கு அரணாக விளங்குகின்ற உங்கள் அரசு, முத்தமிழிலும் சிறந்தோர்களைத் தேர்ந்தெடுத்து, கலைமாமணி விருது வழங்கும் இவ்விழாவினை, இன்று சிறப்பாக நடத்திக்கொண்டு இருக்கிறது.

இந்த விழாவில் கலந்துகொளகிற போது, என் மனதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் ஏற்படுகின்றது. ஏனெனில், இந்தக் கலைமாமணி விருது ஒரு காலத்தில் எனக்கும் வழங்கப்பட்டது. அவ்வகையில் கலைமாமணிகள் வரிசையில் நானும் இருக்கிறேன். 1972-ஆம் ஆண்டு நான் கலைமாமணி விருது பெற்றேன். இன்று நானே கலைமாமணி விருது வழங்குகிறேன். கடந்த 20 ஆண்டுகளில் எவ்வளவு மாற்றம்! அன்று விருது வாங்கிய நான், இன்று விருது வழங்குகிறேன்.

இந்த வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் யார் காரணம் என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். என் வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த என் தாயார் அவர்களும், என்னை வழி நடத்தும் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், என்னை வாழ வைக்கும் தெய்வங்களான இலட்சோப இலட்சம் தமிழ்ப் பெருமக்களும்தான் இதற்கெல்லாம் காரணம் என்பதை உணர்கிறேன்.



1955-ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட இயல்,இசை,நாடக மன்றத்திற்கு, அன்றைய பெயர், மெட்ராஸ் ஸ்டேட் சங்கீத நாடக சங்கம் என்பதாகும்.

தமிழக அரசால் நிறுவப்பட்ட இந்த இயல்,இசை,நாடக மன்றம், இதுவரை 752 கலை மேதைகளுக்குக் கலைமாமணி விருதை வழங்கி உள்ளது. இந்த ஆண்டு, புதிய புதிய கலைப்பிரிவுகளைக் கௌரவிக்கும் வகையில், வழக்கமாக வழங்கப் படும் 31 கலைத் துறைகளுடன், கூடுதலாக 8 துறைகளைச் சேர்த்து, 39 கலைத் துறைகளைச் சார்ந்த பெருமக்களுக்கு, கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற கலை மேதைகளில், மூவர் இன்று பொற்கிழி பெறுகிறார்கள். சிறந்த நாடகக் குழுவிற்கும், சிறந்த கலை நிறுவனத்திற்கும், அவர்களைப் பாராட்டி சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எல்லா வகையிலும் எனக்கு ஆசானாக, குருவாக விளங்கிய, என் உயர்வுக்குக் காரணமாகிய, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை, இன்று நான் தமிழகத்தின் முதலமைச்சராகத் திறந்து வைக்கும் வாய்ப்புப் பெற்றதை, நான் பெற்ற பெரும் பேறாகவே கருதுகிறேன்.

பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியோராய்த், தமிழகக் கலைச் சோலையில் பூத்துக் குலுங்கி, புகழ் பெற்றோராய்த் திகழ்ந்த 186 கலை மேதைகளின் படங்கள், ஏற்கெனவே இம்மாமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இன்று 14 பெருமக்களின் படங்களை நான் திறந்து வைத்துள்ளேன். இந்தப் படங்களில், மாமன்றத்தின் 200-வது படமாகத் திறக்கப்பட்டுள்ளது, நம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புனித உருவம், என்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது-

கலைத் துறையில் முடிசூடா மன்னராகச் சாதனைச் சரித்திரம் படைத்து, பொது வாழ்க்கையில் புகழ் மகுடம் சூடி, அரசியல் அரங்கத்தில் காலத்தால் அழியாத காவியமாக விளங்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றுவோர் எல்லோரும் போற்றப்படுவார்கள்; எந்த மாமன்றத்திலும் எந்தக் காலக் கட்டத்திலும், அவருக்கு ஓர் தனி இடம் உண்டு என்பது உண்மையாகிறதல்லவா? இன்றும் அதனை நம்மால் உணர முடிகிறதல்லவா? அம்மாமனிதரின் புகழ்பாடி, தமிழ்க் கலைகளை வளர்க்க, காக்க, உங்கள் அரசு தொடர்ந்து செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

வாழ்வில் நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.250 வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இன்று முதல் ரூ.400 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இயல்,இசை,நாடக மன்றச் செயலாளர் ஆர்.எஸ். மனோகர் அவர்கள் இங்கே வைத்த இதர கோரிக்கைகளை அரசு பரிவுடன்

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை:**

திருவள்ளுவர் திருநாளில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்குத் 'திருவள்ளுவர் விருதினை' வழங்கினார்.

**இரண்டாம் அட்டை:**

தருமபுரி மாவட்டம், பர்கூரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**நான்காவது அட்டை:**

தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றத்தின் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீதிபதி மு.மு. இஸ்மாயில் அவர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கினார்.

**அடுத்த இதழில்...**

தமிழ்நாடு சட்டப் பேரவையில், மேதகு ஆளுநர் உரை (30.1.92)- மற்றும் [illegible] பேரவை [illegible]- சட்டப்பேரவையில் டாக்டர் எம்.ஜி.ஆர். படத்திறப்பு விவரங்கள்- தமிழ்நாடு தொழில் கொள்கை [illegible] ஆகியவை இடம் பெறும்.



நலத்திட்ட உதவிகள் தங்கு தடையின்றி முழுமையாகக் கிடைக்க, தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோருக்குப் பொங்கல் திருநாளை ஒட்டி சேலை, வேட்டி இலவசமாக வழங்கும் ஒரு மாபெரும் திட்டத்தைச் சமீபத்தில் நான் அறிவித்தேன். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும், உங்கள் அரசு இந்தச் சிறு உதவியை, நலிந்த பொருளாதார நிலையில் உள்ள என் சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் வழங்க முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவில் இன்று நான், என் தொகுதி மக்களாகிய உங்கள் அனைவரையும் நேரில் சந்தித்துப் புத்தாடைகளை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், தொகுதியில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளும் - மக்கள் குறைகளும், கோரிக்கைகளும் - உடனுக்குடன் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்;

அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடன் அவற்றுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்திட வேண்டும் என்ற நோக்கத்தோடும், இன்று முதல் எனது சட்டமன்றத் தொகுதி அலுவலகம் ஒன்று, பர்கூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்னும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அலுவலகம், பர்கூரில் உள்ள ஜெகதேவி சாலையில், 163-ஆம் எண் உள்ள கட்டடத்தில், இன்றுமுதல் தொடங்கப்பட உள்ளது. அந்த அலுவலகம் வாரத்தில் அனைத்து நாட்களிலும், காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். என்னால் நியமிக்கப்படும் எனது நேரடிப் பணியாளர்கள் அங்கு பொறுப்பில் இருப்பார்கள்.

எனவே தொகுதி மக்கள், இவ்வலுவலகத்தைப் பயன்படுத்தி, தொகுதியின் பிரச்சினைகள், கோரிக்கைகள், குறைபாடுகள், மற்றும் புகார்களை, எனக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அலுவலகத்தில் நீங்கள் கொடுக்கும் கோரிக்கை மனுக்களும், மற்றவைகளும், நேரடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதோடு, உரிய அரசு அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றத் தொகுதி அலுவலகம் திறக்கப்பட்டுவிட்டது; இனிமேல் நான் இங்கு வரமாட்டேன் என எவரும் ஐயுற வேண்டாம். தற்போது எப்படி மூன்று மாத கால இடைவெளிக்குள்ளேயே, மீண்டும் உங்களைச் சந்திக்கத் தேடி நேரில் வந்துள்ளேனோ, அதேபோல் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் உங்களை நேரில் வந்து சந்திப்பேன்.

பர்கூர் தொகுதியில் 22 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை அமைக்கவும்; 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் நிறுவவும் ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்பகுதியில் பல தொழிற்சாலைகள் தொடங்க ஏற்பாடுகள் செய்து வருகிறேன். அவற்றிற்கெல்லாம் அடிக்கல் நாட்ட விரைவில் நான் மீண்டும் இங்கு வந்து உங்களைச் சந்திப்பேன். தேர்தல் காலத்தில் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை, முழுமையாக நிறைவேற்றுவதில், கண்ணும் கருத்துமாகச் செயல்படுவேன் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'காலத்தி னாற்செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

- என்ற கொள்கை உடையவள் நான். எனவே, என்னை அமோகமாக வெற்றிபெறச் செய்த உங்கள் பேருதவிக்காகக் காலமெல்லாம் உங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை, என்ற எனது உள்ள உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பெரியார் மாவட்டம் பர்கூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், 23.1.92 அன்று ஆற்றிய உரை.)

## காங்கேயம் பர்கூர்- தொகுதிகளில் முதல்வர் நிகழ்ச்சிகள்:

**பெ**ரியார் மாவட்டம் காங்கேயத்தில், அரசுத் திட்டப் பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, 22.1.1992 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.225 கோடி செலவில், அரசின் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தும் நலிந்த பிரிவினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பேசினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பலர் வாழ்த்துரை நல்கினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 225 கோடி ரூபாய்க்கான அரசு நலத் திட்டங்களைத் தொடங்கிவைத்து, நொய்யல் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை, சத்தியமங்கலம் பேருந்து நிலையம், தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணி உள்பட 109.66 கோடி ரூபாய்க்கான திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். 25.52 கோடி ரூபாய்க்கான அரசு நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார். ஜீவா, சேரன், தீரன், சின்னமலை, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 70 புதிய பேருந்துத் தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ஆலய புனரமைப்பு நிதிக்கு 4.77 இலட்சம் ரூபாயும், கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதிக்கு 5.16 இலட்சம் ரூபாயும் வழங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் கர்நாடகத் தமிழர் நிதிக்குத் தனது 3 மாத ஊதியம் மற்றும் காங்கேயம் தொகுதி மக்கள் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., நன்றியுரையுடன் விழா இனிது முடிவடைந்தது.

**த**ர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி, மத்தூர், பர்கூர் ஆகிய இடங்களில் 81,300 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் விழா, 23.1.1992 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 81,300 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கி, சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.



பர்கூர் தொகுதி மக்களின் குறைகளையும் வேண்டுகோள்களையும் உடனுக்குடன் தமது கவனத்திற்குக் கொண்டுவரும் வண்ணம் பர்கூரில் உள்ள ஜெகதேவி சாலையில் புதிய அலுவலகம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இவ்வலுவலகம் வார நாட்கள் அனைத்திலும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களால் நியமிக்கப்படும் 3 நேரடிப் பணியாளர்கள் அங்கு பொறுப்பில் இருப்பார்கள். இது தவிர 100 பேர் மக்களிடம் நேரிடையாகச் சென்று மனுக்களைப் பெற்று வருவார்கள். இப்பணிக்கென அவர்களுக்கு 100 சைக்கிள்களும் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு 3 ஸ்கூட்டர்களும் வழங்கப்படும்.

மேலும், பர்கூர் தொகுதியில் 22 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய நூற்பாலை அமைக்கப்படும் என்றும் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் நிறுவப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிது முடிந்தது. – தொகுப்பு: தே. மணி.

## சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழக அரசின் புதிய சலுகைகள்

**த**மிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் பொருட்டு சில அடிப்படைத் தேவைகளை அமைப்பதற்காகச் சுற்றுலாத் திட்டங்களுக்குப் பல சலுகைகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.1.'92 அன்று அறிவித்தார்.

சுற்றுலாவை ஒரு தொழிலாக அறிவிக்க ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அரசு ஆராய்ந்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் திட்டங்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்க ஆணையிட்டுள்ளது.

◎ புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

◎ புதிய ஓட்டல்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்.

◎ புதிய ஓட்டல் திட்டங்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு ஆடம்பர வரியில் 50 சதவிகிதம் சலுகைகள் உண்டு.

◎ புதிய தொழில்களுக்கு வழங்கப்படுவது போல சுற்றுலாத் துறைக்கும் மின்சாரக் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும்.

◎ புதிய சுற்றுலாத் திட்டங்களுக்காக மின்சார ஜெனரேட்டர்கள் வாங்கினால் அதன் விலையில் 15 சதம் வரை மானியம் வழங்கப்படும்.

◎ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிஐஐசி) மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிப்காட்) ஆகியவை வசூலிக்கும் வட்டியிலோ அல்லது 14 சதவிகிதம் வட்டியிலோ சுற்றுலாத் திட்டங்களுக்குக் கடன் வழங்கப்படும்.

மூன்று நட்சத்திரத் தகுதி வரையிலான ஓட்டல்கள், மத்திய அரசு அங்கீகரித்துள்ள ஓட்டல்கள், பூங்காக்கள், கோல்ப் விளையாட்டுப் பயிற்சி, குளிர்ப்பதனச் சுற்றுலாப் பேருந்துகள் ஆகியவற்றுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கும். நான்கு மற்றும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களுக்கு மேற்கண்ட சலுகைகள் கிடைக்காது.

சென்னை, மதுரை, கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட சுற்றுலாத் திட்டங்களுக்கு இச்சலுகைகள் பொருந்தாது.

இதுபற்றிய முழு விவரங்களை, தமிழ்நாடு அரசிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.





பரிசீலித்து நல்ல முடிவுகளை அறிவிக்கும்.

இன்றைய தினம் கலைமாமணி விருது பெற்ற கலைமேதைகள் அனைவருக்கும், பொற்கிழி பெற்ற சான்றோர்களுக்கும், சுழற்கேடயம் பெற்ற நாடகக் குழுவினருக்கும், கலை நிறுவனத்தினருக்கும், எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்

தமிழ்நாடு இயல்-இசை-நாடக மன்றம், தமிழ் அன்னைக்கு மேலும் பல அணிகலன்கள் சேர்த்திடும் வண்ணம் செயல்படவேண்டும், தனது சீரிய பணியைச் சிறப்பாகத் தொடரவேண்டும், வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.



விழாத் தொடக்கத்தில் மன்றத் தலைவர் திரு. குன்னக்குடி வைத்திய நாதன் அனைவரையும் வரவேற்றார் மன்றச் செயலாளர் திரு. ஆர்.எஸ். மனோகர் ஆண்டறிக்கை படித்தார்; விழா முடிவில் நன்றி நவின்றார்.

விழா முடிவில் கலைமாமணி திரு. யூ. சீனிவாசன் அவர்களின் மாண்டலின் இசை நிகழ்ச்சி நடந் தது. மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்களும் இசை நிகழ்ச்சியை இறுதிவரை கேட்டு மகிழ்ந்தார்கள்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
**பி.வி. கிரி.**

## கலைமாமணி விருதுபெறும் கலைஞர்கள்

| | |
|---|---|
| நீதிபதி எம்.எம். இஸ்மாயில் | - இயற்றமிழ்க் கலைஞர் |
| டாக்டர் விக்ரமன் | - இயற்றமிழ்க் கலைஞர் |
| திருமதி சி. சரோஜா (பம்பாய் | - இசைக் கலைஞர் |
| திருமதி சி. லலிதா சகோதரிகள்) | - இசைக் கலைஞர் |
| தஞ்சாவூர் திரு. வி. சங்கர அய்யர் | - இசைக் கலைஞர் |
| திருமதி டி. ருக்மணி | - வயலின் கலைஞர் |
| பாலக்காடு திரு. ஆர். ரகு | - மிருதங்கக் கலைஞர் |
| மைசூர் திரு. துரைசாமி அய்யங்கார் | - வீணைக் கலைஞர் |
| சித்தூர் திரு. ஜி. வெங்கடேசன் | - புல்லாங்குழல் கலைஞர் |
| திரு. திருவிழா ஜெய்சங்கர் | - நாதசுரக் கலைஞர் |
| மன்னார்குடி திரு. எம்.ஆர். வாசுதேவன் | - தவில் கலைஞர் |
| திரு. டி.கே. தட்சிணாமூர்த்தி | - கஞ்சிராக் கலைஞர் |
| திரு. ஏ.பி. சண்முகம் | - தில்ரூபா கலைஞர் |
| டாக்டர் சீர்காழி ஜி. சிவசிதம்பரம் | - இறையருட் பாடல் கலைஞர் |
| திருமதி கலாநிதி நாராயணன் | - பரதநாட்டிய ஆசிரியர் |
| திருமதி சரஸ்வதி | - பரதநாட்டியக் கலைஞர் |
| மதுரை திரு. டி. சேதுராமன் | - பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| பந்தணைநல்லூர் திரு. பி. சீனிவாசன் | பரதநாட்டிய - மிருதங்கக் கலைஞர் |
| திரு. ஆர்.சி. தமிழன்பன் | - நாடக ஆசிரியர் |
| திரு. கே.எஸ். நாகராஜன் | - நாடகத் தயாரிப்பாளர் |
| திரு. கே.டி. ராஜகோபால் | - நாடக நடிகர் |
| திரு. ஏ.ஆர். சீனிவாசன் (ஏ.ஆர்.எஸ்.) | தொழில்முறை அல்லாத - நாடக நடிகர் |
| திரு. 'ஒருவிரல்' கிருஷ்ணா ராவ் | - நாடக நகைச்சுவைக் கலைஞர் |
| திருமதி எஸ். சுகுமாரி | - நாடக நடிகை |
| திரு. ஜி. வெங்கடேஸ்வரன் | - திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. சி.வி. இராசேந்திரன் | - திரைப்பட இயக்குநர் |
| திரு. சத்யராஜ் | - திரைப்பட நடிகர் |
| செல்வி பானுப்ரியா | - திரைப்பட நடிகை |
| திரு. 'வெண்ணிற ஆடை' மூர்த்தி | - திரைப்பட நகைச்சுவை நடிகர் |
| திரு. 'சித்ராலயா' கோபு | - திரைப்பட வசனகர்த்தா |
| திரு. தேவா | - திரைப்பட இசை அமைப்பாளர் |
| திருமதி பி. லீலா | - திரைப்பட பின்னணிப் பாடகி |
| மேலக்கரந்தை திருமதி பொன்னம்மாள் | - வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| திரு. பி. சுந்தரராஜ் நாயுடு | - கரகக் கலைஞர் |
| திரு. டி.ஏ.ஆர். நாடி ராவ் | - புரவிநாட்டியக் கலைஞர் |
| திரு. பி.எஸ். நாகராஜ பாகவதர் | - இசை நாடக நடிகர் |
| திருமதி கே.வி. ராஜம் | - இசை நாடக நடிகை |
| திருமதி பி. ஞானாம்பாள் | - இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| கும்பகோணம் திரு. டி.என். சங்கரநாதன் | - பொம்மலாட்டக் கலைஞர் |

### பொற்கிழி

கலைமாமணி திரு. சி.எஸ். ஜெயராமன்
கலைமாமணி திரு. 'கள்ளப்பார்ட்' நடராஜன்
கலைமாமணி திருச்சி திரு. சுவாமிநாதன்

### சுழற்கேடயம் பெறும் சிறந்த நாடகக் குழு

'நாடகப்ரியா' சென்னை.

### சிறந்த கலை நிறுவனம்

மையிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப், சென்னை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



ஆணையர்,
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
3 மார் 1992
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600 008.

# இந்த இதழில்...

அமைதியான சூழ்நிலையில் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைவோம்! —மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை ... 2

இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் கட்டிக் காக்க மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆதரிப்போம்! —புதுடெல்லியில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 11

சட்டப்பேரவையில் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்திறப்பு விழா ... 14

பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப் பணிகள் ... 19

பனிமலரைச் சூடுதற்குக் கட்டணமா? (கவிதை) ... 21

கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள் ... 24

புற்றுநோயைக் குணப்படுத்தலாம்! ... 27

மகளிர் நலம் பெற ... 29

ஆளுநர் உரை மீது நடந்த விவாதங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த பதிலுரையின் சில பகுதிகள் ... 33 ... 40

சட்டப்பேரவையில் ...
சமூக-பொருளாதார நீதி ஏழைகளுக்குக் கிடைப்பதே தர்மம்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 41

புதிய தொழில் கொள்கை — 1992. -மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 43

## அட்டைப்பட விளக்கம்



முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை, சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (31.1.1992).



சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. எம்.எச்.கனியா அவர்கள் திறந்து வைத்தார் (8.2.1992).



1992-ஆம் ஆண்டின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தில், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் உரையாற்றினார் (29.1.1992).

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
மாசித் திங்கள் - 4
மலர்:22 இதழ்:16
16-2-1992



# அமைதியான சூழ்நிலையில் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைவோம்!

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆற்றிய உரை (29.1.1992).

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

புதிய ஆண்டில் தொடங்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதற் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1992-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொருளாதாரம் படிப்படியாக உயரவும், வறுமை அகலவும், மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வில் வளம் காணவும் வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியங்களை அடைய, புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இப்புதிய அரசு முழு மூச்சுடன் மிகச்சீரிய முறையில், தொடர்ந்து பாடுபட்டு, வெற்றி காணும் என நம்புகிறேன்.

2. மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாடு மாநிலத்தில் முன்பு நிலவிய சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து நன்கு அறிவார்கள். புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்குமுன் நமது மாநிலத்தில் வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் எந்த அளவிற்கு இங்குள்ள வாழ்க்கை முறையில் ஊடுருவி இருந்தார்கள் என்பதையும், இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலைநாட்டி, இம்மாநிலத்தில் அமைதி தவழச் செய்ய எடுக்கப்பட்ட துணிவு மிக்க நடவடிக்கை பற்றியும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அரசு இப்பணியை நிறைவேற்றுவதில் மிகுந்த அவசர முக்கியத்துவம் கொடுத்து, திட்டமிட்ட, முழுமையான முறையில் நடவடிக்கைகளை எடுத்து, காவல் துறையினரிடம் புதிய நம்பிக்கை உணர்வினை ஊட்டியது; அவர்கள் தங்கள் கடமையின்பால் முழு அர்ப்பண உணர்வுடன் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊக்கம் அளிக்கும் அரசின் நடவடிக்கை தொடர்ந்தது. தமிழ்நாட்டு மக்கள் இந்த முயற்சிகளை முழுமனதுடன் வரவேற்றார்கள். அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளுக்கும் தங்கள் முழுமையான பேராதரவை வழங்கினார்கள். இதன் விளைவாக, புதிய அரசு பதவி ஏற்ற ஒரு சில வாரங்களிலேயே இம்மாநிலத்தில் ஊடுருவி இருந்த வெளிநாட்டுப் போராளிகள் மற்றும் தீவிரவாதிகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தவும், அறவே ஒடுக்கவும் முடிந்தது. இப்பெரிய பணியை மேற்கொள்ளுகின்றபோது, காவல் துறை முற்றிலுமாகச் சீர்திருத்தி அமைக்கப்படவும் நவீனப்படுத்தப்படவும் வேண்டும் என்பது தெரியவந்தது. காவல் துறையைச் சீர்திருத்திக் காலத்திற்கேற்ற வகையில் மாற்றி அமைப்பதன் மூலமே, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் சதித் திட்டங்களுக்கு எதிராக, காவல்துறை பயனுள்ள வகையில் இயங்கி நடவடிக்கை எடுக்க முடியும்; மேலும், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப்பராமரிக்கின்ற வலிமை வாய்ந்த காப்பாளராகவும் செயற்பட முடியும். இதற்கிணங்க, மாநிலக் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று ரூபாய் 80.45 கோடி செலவில் தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக, இதற்கென ரூபாய்10கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காவல்துறையில் கடந்த சில மாதங்களில் கொண்டுவரப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்கள், இதற்கு ஒரு புதிய பார்வையைப் புதிய பாதையைப் புதிய செயல்நோக்கத்தைக் கொடுத்துள்ளன. தன் முன்னுள்ள அரும்பணியை ஆற்றுவதற்கு, காவல்துறை தயங்காமல் விரைந்து முன்வந்து, அயராது பாடுபட்டுத் தன் பொறுப்பினை மிகவும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றியுள்ளது, நமக்கெல்லாம் மிகப்பெரும் அளவில் மனநிறைவைத் தருகின்றது. இதன் விளைவாக, மாநிலத்தில் சட்டத்தின் ஆட்சியை நாம் மீண்டும் நிலைநாட்டிட முடிந்துள்ளது.




3. காவிரி நீர்த் தகராறு குறித்து இவ்வரசு தனது நிலையில் மிகவும் உறுதியாக இருந்து வருகிறது என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். தமிழ்நாட்டின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுத்தர, முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். அதை நான் இங்கு மீண்டும் விரித்துரைக்கத் தேவையில்லை. காவிரி ஆற்று நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையை, மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்று, இந்த அரசு மிகவும் வற்புறுத்தியது. இந்திய அரசு சில பிரச்சினைகளை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்தது. இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு முற்றிலும் தமிழ்நாடு மாநிலத்திற்குச் சாதகமாக அமைந்தது. இறுதியில், காவிரி ஆற்றின் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை இந்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டது. இதற்கெல்லாம் முழு முதற்காரணம், தமிழக முதல்வர் அயராமல் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளே ஆகும். இது தொடர்பாகத் தமிழகத்து மக்களின் குரல் இந்நாட்டின் மிக உயர்ந்த மன்றங்களில் ஒலித்துள்ளது. அவை நம்முடைய மக்களின் நியாயமான இயல்பைத் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளன. அதே சமயத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் வெளியிடுவது மட்டும் போதாது என்று இவ்வரசு கருதுகின்றது. இந்த ஆணையை உரியவாறு செயற்படுத்துவதை உறுதி செய்ய, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை எத்தகைய உணர்வுடன் அரசிதழில் வெளியிட்டதோ, அதே உணர்வுடன் தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

4. நிலைமை இவ்வாறிருக்க, 13.12.1991 - ஆம் நாளில் கருநாடக மாநிலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பந்த்தினைத் தொடர்ந்து, பெருமளவில் கலவரங்கள் நடந்தன. பலதலைமுறையாக அங்கே அமைதியுடன் வாழ்ந்து வந்த, ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக, முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வன்முறையால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் மிகப்பரவலாகச் சேதப்படுத்தப்பட்டன. கருநாடக மாநிலத்தில் வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிருக்கு அஞ்சி, பாதுகாப்பு வேண்டி தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்து வந்தனர். கருநாடக மாநிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களைக் கொடுந்துயரம் கவ்வியது. ஈவிரக்கமற்ற முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் செயல்களால் அவர்களுடைய உயிர்களுக்கு எங்கே ஊறு நேர்ந்து விடுமோ என்ற அச்சமும், வேதனையும் அவர்களை ஆட்கொண்டன. இந்த வன்முறைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்குமாறும், கருநாடகத்தில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுமாறும், அங்கிருந்து பெயர்ந்து வந்த தமிழர்கள் மீண்டும் அம்மாநிலத்திற்குத் திரும்புவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கித் தருமாறும், முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்தியப் பிரதமரையும், கருநாடக முதலமைச்சரையும் கேட்டுக் கொண்டார். 30.12.1991-ஆம் நாளில் கூடிய தமிழக அமைச்சரவை இது தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை இயற்றியது. அதே நாளில் தமிழக முதல்வர் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானம், தமிழ் மக்கள் மீது தொடர்ந்து நடத்தி வருகின்ற வன்முறைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இந்த வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான அளவிற்கு இழப்பீடுகள் வழங்குவதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப்பிரதமரைக் கேட்டுக்கொண்டது. வன்முறைச் செயல்கள் கருநாடகத்தை உலுக்கிவிட்ட நிலையில், தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு ஆணை பிறப்பித்ததன் மூலம், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காக்கும் ஏற்பாடு செம்மையாகச் செயல்பட்டது. இங்கே, அரசு, அமைதியைப் பேணிக்காத்து, இன ஒற்றுமைக்கு உறுதி செய்தது. அவரது அரசியல் மேதகைப் பண்பினாலும், சரியான வகையில் முன்கூட்டி எண்ணிச் செயற்படும் திறத்தாலும் தமிழகத்து மக்கள் இன, மொழி வேறுபாடு பாராட்டாமல் அமைதியைப் பாதுகாத்தனர்; மிகமிகப் பாராட்டத் தகுந்த வகையில் பொறுமை காத்தனர்; இதனை இந்த நாடே வியந்து பாராட்டியுள்ளது.

5. கருநாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்து வந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி, புகலிடம் அளிக்க இவ்வரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. நிவாரண முகாம்கள் நிறுவப்பட்டன. நிவாரண முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் தங்கியிருந்த தமிழர்களுக்கு உணவு, துணிமணிகள், ஏனைய அடிப்படைத் தேவைப்பொருட்கள் வழங்கப்பட்டன. இதனால், அரசிற்குப் பெருமளவில் செலவு ஏற்பட்டது என்பது உண்மையே. என்றாலும், எதிர்பாராத, முன் எப்போதும் கண்டிராத வகையில் எழுந்த நிலைமையையொட்டி, அரசு தன்னுடைய நிதி நெருக்கடி நிலைமைக்கு இடையேயும் இதற்கான செலவு முழுவதையும் தானே ஏற்றுள்ளது. அது, இச்செலவினத்திற்கு நிதியுதவி வழங்குமாறு இந்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மத்திய அரசிடமிருந்து இந்தக் கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று நம்புகிறோம். இழப்பீடு வழங்குமாறு கேட்டுவரும் கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான

அளவிற்கு இழப்பீடு வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசையும், கருநாடக அரசையும் வற்புறுத்தி வந்துள்ளது. கருநாடகத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்படுத்தவும், அவர்கள் கருநாடகத்திற்குத் திரும்பிச் செல்லச் சாதகமான நிலைமையை உருவாக்கவும், இதுதான் ஒரே வழி என்று இவ்வரசு கருதுகிறது. எனினும், கருநாடகத்தில் இரக்கமற்ற முறையில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களின்போது பெருமளவு இழப்பிற்கு ஆளான தமிழர்களுக்கு இழப்பீடு வழங்க, இந்திய அரசோ அல்லது கருநாடக அரசோ இன்னும் உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க நிலை ஆகும்.

6. கருநாடக மாநிலத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இரக்கமற்ற வன்முறைச் செயல்களையும், பல்வேறு இனத்தவர்கள், பல்வேறு மொழிபேசும் மக்களிடையே நிலவும் உறவு முறையைச் சிதைப்பதையும் நாடு முழுவதும் உள்ள பொறுப்புள்ள மக்கள் கண்டிக்கத் தயங்க மாட்டார்கள். நம்முடைய அரசியலமைப்பு கூட்டாட்சி அரசமைப்பாகும். மாநில அரசுகளும், மத்திய அரசும் அரசமைப்புச் சட்டப்படி தத்தமக்கு வழங்கப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்கும் என்ற உயரிய கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்ததே கூட்டாட்சி அரசமைப்பு




ஆகும். மத்திய அரசு, மாநில அரசுகளின் நடவடிக்கைகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காமல், அது அந்தந்த மாநிலங்களின் நிலைகளை முறையாகப் புரிந்து கொண்டு, நியாயமான முடிவுகளைப் பயனுள்ள வகையில் ஏற்கச் செய்வதன் மூலம், மாநில அரசுகளுக்கிடையேயான வேறுபாடுகளைக் களைய உதவ வேண்டும். மாநில அரசுகள் தொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நியாயம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும், பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் பிரித்துப்பார்க்க வேண்டிய கடமையும் மத்திய அரசுக்குள்ளது. இத்தருணத்தில் கருநாடக மாநிலத்திலுள்ள பாதிக்கப்பட்ட, தமிழ் மக்கள் அனைவருக்கும் போதிய அளவிற்கு இழப்பீடு வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டிய கடமை மத்திய அரசுக்குள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்த விழைகிறேன்.

7. முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்றவுடன் அறிவித்த மதுவிலக்குக் கொள்கை, வெற்றி பெறுமா என்பது குறித்துப் பல்வேறு ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டன என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். மதுப் பழக்கத்திற்கு அடிமையாகும் சமூகக் கொடுமையை வேரோடு களைந்திட உறுதி செய்யும் வகையில், முதலமைச்சர் தாமே முன்னின்று மது ஒழிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். மது ஒழிப்புக் கொள்கை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதன் மூலம் கள்ளச் சாராய விற்பனை பெருமளவில் குறைந்துள்ளது. கள்ளச் சாராயம் தலைதூக்க வொட்டாமல் செய்யும் வகையில், மதுவிலக்கு நடைமுறைப் பிரிவு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கள்ளச் சாராய விற்பனை நடைபெறும் வழிகளைக் கண்டுபிடித்து வெற்றிகரமாக ஒழிப்பதில், அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது. இத்துடன், போதை மருந்துத் தொல்லை பரவுவதை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவும், இளைய சமுதாயத்தை, குறிப்பாக மாணவர்களை, போதை மருந்துப் பழக்கத்திற்கு ஆட்படாமல் தடுத்திடவும், குடிப்பழக்கம், போதை மருந்துப் பழக்கம் இவற்றின் கேடுகளை மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைக்கவும், அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குக் கொள்கைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அரும்சாதனை புரிந்துள்ளதற்காக, இந்நேரத்தில், இந்த அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

8. நாட்டை எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி கிட்டத்தட்ட குடிமக்கள் அனைவரையும் பாதித்துள்ளது. மத்திய அரசு, இந்நிலைமையைச் சீர்படுத்திப் பொருளாதார வளர்ச்சி முன்னேற்றப்படிகளில் நாட்டைத் திரும்பவும் இட்டுச் செல்லும் வகையில், அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது; அதே வேளையில், மத்திய, மாநில அரசுகள் எடுத்து வருகின்ற சிக்கன நடவடிக்கைகளால், ஏழை, எளியவர்களும், வசதி வாய்ப்பு அற்றவர்களும் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தேசியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்முன் எடுக்கப்பட வேண்டிய, மேற்சொன்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கையைக் குறித்து, 1991 டிசம்பரில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார். பாமர மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கான விலைகள் பெரிதும் உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இன்றியமையாப் பண்டங்களின் நிர்ணய விலைகள் உயர்த்தப்படுவதற்கு முன்னர், மத்திய அரசு, அனைத்து மாநில அரசுகளையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இருந்தபோதிலும், மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், அண்மையில் அரிசி, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி ஆகியவற்றின் விலைகளைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. மத்திய அரசு தன்னிச்சையாக மேற்கொண்ட இந்த நடவடிக்கை, மாநில அரசுக்குக் கடுமையான வேதனை தரும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்த விலை உயர்வுகளை ஏற்றுக்கொள்வதா, அல்லது, திட்டச் செயல்பாட்டையும் அதன் விளைவாக மாநிலப் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கும் வகையில், நமது திட்டச் செலவினங்களைக் கடுமையாகக் குறைப்பதா, என்பது பற்றி அரசு முடிவு செய்ய வேண்டியுள்ளது.

9. சான்றாகப் பொது விநியோக முறையில் மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையை மத்திய அரசு கடுமையாக உயர்த்தியது. மாநில அரசு, சாதாரண ரகம் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 வீதத்திலும், சன்ன ரகம் மற்றும் மிகச்சன்ன ரகம் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 வீதத்திலும், மானியம் மிக அதிக அளவில் வழங்கப்படும் நிலையில் பொது விநியோக முறையிலிருந்து அரிசி வழங்கி வந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மத்திய அரசு அறிவித்த வழங்கல் விலையைத் திருத்தியமைத்ததன் விளைவாக, மாநில அரசின் மொத்த மானியச் சுமை ஓராண்டில் மிக உயர் அளவிற்கு, அதாவது, ரூ.503 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இப்போதுள்ள மிகக் கடுமையான நிதி நெருக்கடியில், இந்த அளவிற்கு மானியச் சுமையைத் தொடர்ந்து தாக்குப்பிடிப்பது மிகவும் சிரமமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் இந்த விலைத் திருத்தங்கள் பற்றித் தனது தாளமுடியாத மனவருத்தத்தைத் தெரிவித்ததோடு, இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஏழை எளியவர்களே என்றும், இந்த விலை ஏற்றத்தை அவர்கள்தான் தாங்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக் காட்டினார். ஆயினும், ஏழை மக்கள் பாதிக்கப்படாத வகையில், இவ்வரசு சாதாரண ரக அரிசிக்குக் கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 என்ற விலையை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டுள்ளது. இவ்வளவு குறைந்த விலையில் சாதாரண ரக அரிசி வழங்கப்படுவதனால் உதவி மானியம் மிக அதிக அளவிற்கு வழங்கப்படுகிறது. புகழ் பெற்ற நமது புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பின்பற்றிய கொள்கையின் அடித்தளமாக இருந்தது ஏழை, எளியவர்களின் சுமையைப் பகிர்ந்து கொள்வது என்பதே. அதனை அடியொற்றியே, இவ்வரசு இதனை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. மேலும், விலைகளைக் கட்டுப்படுத்த இவ்வரசு ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. வணிகர்கள் வெளிச்சந்தையில் அரிசி விலையைக் குறைப்போம் என்று அவர்கள் அளித்த உறுதிமொழிக்கிணங்க, வர்த்தகர்கள் 'லெவி' நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெளிச்சந்தை விலை குறைய ஏதுவாகப் பொது விநியோக முறையில் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களை வழங்கும்.

10. ஒருபுறம் பொருளாதார நிலையிற்காணும் பண வீக்கப் போக்கிலிருந்து ஏழைகளை ஓரளவிற்காவது காக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசிற்கு உள்ளது. மறுபுறம், ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு, திட்ட ஒதுக்கீடுகளை, அதே அளவில் வைத்திருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது எளிதான பணி அன்று. இதற்குச் சில தியாகங்களைச் செய்தாக வேண்டும். ஒட்டுமொத்த நிலைமைக்கேற்ப, எமது அரசு இது தொடர்பாக, எண்ணிப்பார்த்து நியாயமான நிலையை மேற்கொண்டுள்ளது. ஏழைகள், நலிந்த பிரிவினர், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்க அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. இதன்மூலம், உணவு மானியத்தை அதிக அளவில் தொடர்ந்து வழங்கிவருதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருதல் ஏழைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்க உதவித் தொகை வழங்குதல் ஆகியவற்றுக்கு உயர்முன்னுரிமை அளிக்கப்படும் என்பது தெளிவாகியது. ஏழைகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய இத்தகைய பொறுப்பின் அடிப்படையில்தான், ரூ.41.56 கோடி செலவில் 1.20 கோடி ஏழை மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகளை வழங்கும் திட்டத்தை அண்மையில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்துள்ளார். ஏழைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற இன்றியமையா அடிப்படைத் தேவைகளை வழங்க இவ்வரசு பொறுப்பேற்கிறது. அதற்கிணங்க, இவ்வரசு, இது தொடர்பாக உரிய திட்டங்களை வகுத்து நிறைவேற்றும். இதன் விளைவாகத் திட்டங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்களை வழங்குவதில் மாநில அரசுக்குப் பெரும் இடர்ப்பாடு உள்ளது. இருப்பினும், அரசின் முற்போக்கான நலத்திட்டங்களால், ஏழை, எளிய மக்களின் குறைந்தபட்சத் தேவைகள் நிறைவு செய்யப்படவிருக்கின்றன என்பதே மன நிறைவளிப்பதாக உள்ளது.




11. தேசிய வளர்ச்சிக்குழு, 1991 டிசம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் 'காட்கில்' விதிமுறையில் மேலும் திருத்தங்கள் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் தமிழ்நாட்டிற்கு முழுவதும் மனநிறைவளிப்பதாக இல்லாமலிருந்தபோதிலும், அவை, 1990 அக்டோபரில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்தங்களை விட மேம்பட்டதாக உள்ளன. இதில் மிக முக்கியமான அம்சம் என்னவெனில், மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய மத்திய அரசின் நிதியுதவி குறித்த பொதுநிதி போதிய அளவிற்கு அதிகரிக்கப்பட்டிருப்பதேயாகும். நல்வாய்ப்பற்ற நிலை காரணமாக, மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் நிதியுதவி குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெரிதும் உயர்ந்துள்ளதாகத் தோன்றவில்லை. தமிழ்நாடும் குறிப்பிடத்தக்க வகையில் இடர்ப்பாட்டிற்குள்ளாகியுள்ளது. திருத்தப்பட்ட 'காட்கில்' விதிமுறைகளின்படி, தேசிய சராசரி அளவிற்குக் கீழ் நபர்வாரி வருமானத்தைக் கொண்டிருக்கும் மாநிலங்களுக்கான 20 சதவீத அளவிலிருந்து நிதியுதவி பெற நமது மாநிலம் தகுதி பெறவில்லை. 1982 முதல் 1985 வரையிலான கால அளவில், தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரி அளவைவிடக் குறைவாக இருந்து வந்துள்ளது. அதன் பின்னர், உள்ள கால அளவில், இது, தேசிய சராசரி அளவிற்குமேல் சென்றுள்ளது. நபர்வாரி வருமானத்தைச் சரியாகக் கணக்கிடுவதிலும் இடர்ப்பாடுகள் உள்ளன. கணக்கிடுவதில் உள்ள இத்தகைய இடர்ப்பாடுகளை எளிதில் களைய இயலாதுள்ளதால், ஏழாம் திட்டக் காலத்தில் அளிக்கப்பட்டது போல, திருத்தி அமைக்கப்பட்ட 'காட்கில்' விதிமுறைகளின் கீழ்த் தனிப்பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்ட 7.5 சதவீத நிதித் தொகுப்பிலிருந்து சிறப்பு ஒதுக்கீடாக மத்திய அரசு நிதியுதவியையும், பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களிலிருந்து சிறப்பு ஒதுக்கீட்டையும், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே நிதி நெருக்கடிக்கு ஆட்பட்டுள்ள தமிழ்நாடு, இந்தச் சிறப்பு ஒதுக்கீடுகள் இல்லாமல், மத்திய அரசு நிர்ணயித்த விலை உயர்வுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் மேலும் புண்பட்டுள்ள சூழ்நிலையில், மனநிறைவளிக்கத்தக்க வகையில் எட்டாம் திட்டத்தை எதிர்பார்க்க இயலாது என்பதை முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். மத்திய அரசு கூடுதலாக நிதியுதவி அளிக்க வேண்டும்; பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களிலிருந்து கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற தமிழ்நாட்டின் கோரிக்கை தனித்த இயல்புடையது.இதனை ஏற்க வேண்டியது அவசியமாகும். தமிழ்நாட்டின் கடற்கரையோர நெடுகிலுமான எல்லையோரப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்கு, இவற்றை எல்லையோரப் பகுதி மாநிலங்களுக்கு இணையாகக் கடற்கரையோர எல்லைப்பகுதிப் பிரச்சினையாகக் கருதிச் சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டும்.

12. மாநிலத்தின் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து விரிவான கண்ணோட்டம் கொண்டு, 1992-97ஆம் ஆண்டுகளுக்கான எட்டாம் திட்டத்திற்குரிய ஒதுக்கீடு ரூ.9,500 கோடியாக இருக்கலாம் என்று இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கும், மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற விவாதங்களில், 1992-93ஆம் ஆண்டுத் திட்டம் மட்டுமே இடம் பெற்றது. 1992-93ஆம் ஆண்டிற்காக நியாயமான அளவிற்குள் இருக்குமாறு தயாரிக்கப்பட்ட ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை பெருமளவிற்கு உள்ளது. இதன்பொருட்டு, மாநில அரசு கணிசமான அளவிற்கு நிதி ஆதாரங்களைத் திரட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது குறித்து ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் நிலையில், நம்முடைய தனிவகையான இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அதிக அளவிற்கு நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே, 1992-93 ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவை நிர்ணயிக்க வேண்டியிருக்கும். இது குறித்து மேற்கொண்டும் திட்டக் குழுவுடன் விவாதித்து வருகிறோம். நிதி ஆதாரங்களின் இடர்ப்பாடுகள் கடுமையாக இருந்தபோதிலும், இறுதியாக முடிவு செய்யப்படக் கூடிய 1992-93ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, நடப்பாண்டு ஒதுக்கீட்டு அளவைவிட அதிகமாக இருக்குமென நம்புகிறோம். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு குறித்து, மத்திய திட்டக் குழுவுடன் மேற்கொண்டும் விவாதம் நடத்திய பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

13. நடப்பாண்டில், இம்மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் மனநிறைவளிக்கும் வகையில் இருந்தன. சில மாவட்டங்களில், குறிப்பாக வடக்கு மாவட்டங்களில், மழையளவு இயல்புக்கும் அதிகமாக இருந்தது. 1991, நவம்பரில் புயல், பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால், பயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பரவலான சேதங்கள் ஏற்பட்டன. அரசு விரைந்து செயல்பட்டுப் பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.30 கோடி அனுமதித்தது. இத்துடன், இயற்கைச் சீற்றங்கள் குறித்த நிவாரண நிதியில் இருந்த தொகை முழுவதும் செலவிடப்பட்டு விட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள, பெரும் கட்டுமானத் திட்டம் ஒன்றை இவ்வரசு வகுத்துள்ளது. விரைவில் இதற்கு அனுமதி பெற்றுத் தருவதற்கு உலக வங்கியை அணுகுமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

14. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெருமளவு பகுதிகள் பாதிக்கப்பட்ட போதிலும், பயிர்களைப் பாதுகாக்க அல்லது மீண்டும் பயிரிடும் வகையில் உழவர்களுக்கு நிதியுதவி அளிக்க விரைவான நடவடிக்கை எடுத்துள்ளோம். நல்ல விளைச்சல் கிடைக்கும் வகையில் பயிர்த் தொழிலை மேற்கொள்ள விதைகள், உரங்கள், பூச்சிகொல்லிகள் ஆகியவை போதிய அளவுக்கு வழங்கப்பட்டன. நடப்பாண்டில், அரிசி உற்பத்தி எப்போதுமில்லாத அளவுக்கு உயரளவாக 65.25 இலட்சம் மெட்ரிக் டன் இருக்கும் என்பது பெருமையளிக்கக் கூடியதாகும். மொத்த உணவு தானிய உற்பத்தி 90.45 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில், கரும்பு மற்றும் பயறு வகைகளின் உற்பத்தியும் மிக உயரளவுக்கு இருக்கும். பருத்தி உற்பத்தியும் உயரளவு 6 இலட்சம் பேல்கள் இருக்கும். நல்ல பருவத்தில் முதலீடு செய்வதில் உழவர்கள் ஆர்வம் காட்டியதாலும், சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் பல்வேறு இடுபொருள்களை உரிய காலத்தில் வழங்கி, ஆலோசனை நல்கி வழிகாட்டியதாலும் இந்த வெற்றி கிட்டியது. இது விலைவாசி உயர்வினை மட்டுப்படுத்த உதவும் என்று நாம் நம்புகிறோம்.

15. வேளாண்மைத் தொழிலுடன், கடல் மீன்வளம் மற்றும் உள்நாட்டு மீன்வளம் இவற்றை மேம்படுத்தும் வகையில், உயர் முன்னுரிமை அளிக்கவும் அரசு விழைகிறது. தமிழ்நாட்டில் உவர்நீர் இறால் பண்ணைகள் வளர்ச்சியடைய நல்ல வாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பாகக் கடந்த காலத்தில் திட்டமிடப்பட்ட சில நடவடிக்கைகள், எதிர்பார்த்த பயன்களை அளிக்கவில்லை. உவர் நீர் இறால் பண்ணை வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் அடைய புதிய கொள்கை ஒன்று வகுக்கப்படும். வரும் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் குறைந்தளவு 1,000 எக்டேரில் இறால் பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

16. வரும் ஆண்டில் காடு வளர்ப்புத் திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும். அதே நேரத்தில் வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபட்ட காடுகளை மீண்டும் உருவாக்கத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபட்ட காடுகளில் சுமார் 2,000 எக்டேர் பரப்பில் காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். தனியாரிடமுள்ள பெரும் அளவிலான நிலங்கள் காடு வளர்ப்பிற்குச் சரியாகப் பயன்படுத்தப் படுவதில்லை. அத்தகைய நிலங்களில், விறகு மரங்கள், கால்நடைத் தீவனம், விளைபொருள் தரும் மரங்கள் ஆகியவற்றைப் பயிரிடப் பயன்படுத்தும் வகையிலும், முறையாக ஆண்டுதோறும் பயிர்கள்




விளைவிக்க முடியாத நிலங்களில் மரங்களை வளர்க்க உழவர்களுக்கு ஊக்கத் தொகைகள் அளிக்கும் வகையிலும், திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

17. இந்தியப் பொருளாதாரம் மாறுதலடைந்து வருகிறது. நம்முடைய வெளிச் செலாவணிக் கையிருப்புத் தொகை நிலைமையை முன்னிட்டும், தேசிய அளவில் பொருளாதாரத் துறையில் நிலவிய கட்டாயங்களை முன்னிட்டும் இந்திய அரசு ஒரு புதிய தேசியத் தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. தாராளமயமாக்கும் புதிய தொழில் கொள்கையின் அனுகூலத்தைப் பயன்படுத்தி, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த, மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தொன்னூறாம் ஆண்டுகளில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட தொழில் வளர்ச்சியில் முன்னிலை பெற்று விளங்கும் வகையில், புதிய தொழில்கள் வளர்ச்சிக்குப் பெரிதும் தேவைப்படும் தூண்டுதல் அளிக்கும் வண்ணம், ஊக்க உதவிகளும், வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். பெருகி வரும், படித்த வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு ஆக்கபூர்வமான வேலைவாய்ப்பு அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அரசின் புதிய தொழில் கொள்கையை அண்மையில் அறிவித்துள்ளார்கள். முதல் முறையாகத் தொழில் வளர்ச்சித் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான கொள்கை விளக்கம், தொழில் முனைவோர் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது. கொள்கை விளக்கம், ஊக்க உதவிகள், வசதிகள் ஆகியவற்றைத் தொழில்கள் நன்கு பயன்படுத்த இயலும் வகையில், அவை அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. புதிய தொழில் கொள்கையை மற்ற மாநில அரசுகளின் தொழில் கொள்கைகளுடன் ஒப்பிடுகையில் நமது தொழில் கொள்கை சிறந்து காணப்படுகிறது. இந்தப் புதிய தொழில் கொள்கை, நாடெங்கிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் முனைவர்கள் தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்க அவர்களைக் கவரும் என்று நம்பப்படுகிறது. இத்துடன், தொழில் முனைவர்களின் நியாயமான தேவைகளுக்கு, உரிய நேரத்தில், ஆக்கப்பூர்வமான உதவி அளிக்கும் வகையில் நிர்வாக அமைப்பு உரியவாறு சீரமைக்கப்படும். இந்தப் புதிய இசைவான சூழ்நிலை, மாநிலத்தை விரைந்து தொழில் மயமாக்குவதற்கு வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

18. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு 1969 ஆம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது. அது, 1989-90ஆம் ஆண்டில் 5.21 சதவீதமாகக் குறைந்துள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், உருவாகி வரும் புதிய திட்டங்களின் மீது மத்திய அரசின் மொத்தப் பொதுத் துறை முதலீடுகளில், தமிழ்நாட்டின் பங்கு மிகவும் குறைந்த அளவே இருக்கும் என்று இந்தியப் பொருளாதார மதிப்பீட்டு மையம் அண்மையில் நடத்திய ஆய்வு குறிப்பிடுகிறது. இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மத்தியத் திட்டங்களுக்கு விரைவில் அனுமதி அளிக்குமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. நல்வாய்ப்பற்ற நிலை காரணமாக, இத்திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை. நெய்வேலியில் மூன்றாம் சுரங்கம் வெட்டுதல், தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டு வருவதற்காகத் தென் மாநிலங்களுக்கான எரிவாயுக் குழாய் அமைக்கும் திட்டம் ஆகியவற்றை மத்திய அரசு எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும். எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டம், மணலியில் தேசிய அரோமேட்டிக் திட்டம் தொடங்குதல், இம்மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப்பாதை சாலைகளாக மாற்றுதல், கிழக்குக் கடற்கரை தேசிய




நெடுஞ்சாலையை ஏற்படுத்தல் முதலியவை போன்று, நீண்டகாலமாக நிலுவையாக இருக்கும் திட்டங்கள் மத்திய அரசின் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புதிதாகப் பெரிய மத்தியத் திட்டம் ஒன்று கூட தமிழ்நாட்டில் தொடங்கப்படவில்லை. இக்குறை களையப்பட வேண்டும்.

19. புதிதாக மூன்று பெரிய தொழில்வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கு மத்திய அரசு இதுவரையிலும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த மூன்று தொழில் வளர்ச்சி மையங்களையும் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தொழில் வளர்ச்சி மையங்கள் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் அமைக்கப்படும். இந்தப் புதிய வளர்ச்சி மையங்கள் மூன்றையும் ஏற்படுத்த, புதிதாகத் தொடங்கப்பட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID) உரிய நடவடிக்கைகளை எடுக்கும். மிகக்குறுகிய காலத்திற்குள் இந்த வளர்ச்சி மையங்களைச் செயல்படச் செய்வதே இவ்வரசின் நோக்கமாகும். அரசு வழங்கும் என்று உறுதி அளித்த ஊக்க உதவிகளும், மானியங்களும் எவ்விதக் காலதாமதமுமின்றித் தொழில்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்ய அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. புதிய தொழில்களுக்கான மானியக் கோரிக்கைகளின் நிலுவைகளைத் தீர்க்க ஒருமித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுவது அதிகச் செலவு பிடிப்பதாக இருக்கும்போது, இதனைத் தொழில்முனைவோர் அனைவரும் வரவேற்பர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

• 20. புனல்மின் திட்ட நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதாலும், அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி கொண்டுவர சிறப்பு நடடிக்கைகள் எடுக்கப்பட்டதாலும், தமிழ்நாட்டில் மின்வெட்டு வராமல் பார்த்துக்கொள்ள முடிந்தது. கோடை மாதங்களில் ஏற்படும் ஏதேனும் அவசரத் தேவையைச் சமாளிக்க நாங்கள் நிலக்கரி இருப்பு வைத்துள்ளோம். இம்மாநிலத்தில் தொழில் வுளர்ச்சியை எளிதாக்குவதில் மின்சக்தித் துறை ஆற்றும் முக்கியப் பங்கை இவ்வரசு உணர்ந்துள்ளது. இது, நம்முடைய நிதி ஆதாரங்களில் நிலவும் நெருக்கடிகளுக்கு இடையேயும் மின்சக்தி குறித்த திட்ட ஒதுக்கீட்டிற்குப் பாதிப்பு நேராமல் இருக்க உறுதி செய்துள்ளது. தொடர்ந்து நடைபெற்று வருகின்ற எல்லாத் திட்டப்பணிகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரத்தில், பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கும், தனியார் துறை மின் உற்பத்தி செய்வதற்கும் இயலும் வகையில், ரூ.7000 கோடி செலவிலான புதிய பெருந்திட்டம் முடிவாக்கப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் 1500 மெகாவாட் மின்விசை உற்பத்தி செய்ய இயலும் என்பதையும் அறிந்து உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் இசைவைப் பெறவேண்டியுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு விரைவில் இசைவளிக்குமானால், அது, அடுத்த பத்தாண்டு காலத்திற்குத் தமிழ்நாட்டின் மின்விசைத் தேவைகளை நிறைவு செய்யும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அமையும்.

21. பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத் தேவையான சாலை ஏற்பாட்டினைப் பராமரித்தல், பழுதுபார்த்தல், தரமுயர்த்துதல் ஆகிய பணிகளில் அரசு தனி கவனம் செலுத்தி




வருகிறது. பொதுத்துறையில் உள்ள அடிப்படை வசதி குத்தகைப் பணிகள் நிதியுதவி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் ரூ. 30 கோடி செலவில் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கையை அறிய இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டத்திற்கு நிதி பெற மாவட்டத்தின் எல்லையில் பொருத்தமான இடங்களில் சுங்கக் கட்டண வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் நிதியாண்டில், முதல்முறையாக சாலைகள் பராமரிப்பிற்காக விதிமுறைகளின்படி நிதி ஒதுக்கம் செய்யப்படும் என்பது மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். நம்முடைய நெடுஞ்சாலைகள்,மாவட்டச் சாலைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதில் இது பெரிதும் உதவும். சாலை மேம்பாட்டு வசதியுடன், தொலைக்கோடியிலுள்ள கிராமப் பகுதிகளுக்குச் சென்று வர, பேருந்து வசதிகளை அதிகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்படும். 1992 டிசம்பர் இறுதிக்குள் 1000 மக்கள் தொகைக்கு அதிகமாகவுள்ள கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் பேருந்து வசதி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு தொடங்கி வைத்துள்ளது.

22. கிராமப் பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்குரிய அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எமது அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். குடிநீர் வழங்கல் தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 1.4.1991 நிலவரப்படி நீர் வழங்கல் ஆதாரம் ஒன்று கூட இல்லாத குக்கிராமங்கள் 2483 உள்ளன. ஒருமித்த நடவடிக்கையின் வாயிலாக, இதுவரையில் இத்தகைய 2422 குக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது; எஞ்சிய கிராமங்களுக்கும் 1992 மார்ச் இறுதிக்குள் குடிநீர் வழங்கப்படும் என்பது மனநிறைவளிப்பதாகவுள்ளது. இதன்மூலம், நடப்பாண்டின் இறுதிக்குள் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத கிராமங்கள் எவையுமில்லை என்கிற நிலை உருவாகும். நடப்பாண்டில் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத 1956 ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் குக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அண்மையில் ஐதராபாத் சென்று, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திச் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவருவதற்கு உறுதி செய்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைவீர்கள். சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதற்குத் திட்டவட்டமான கால அட்டவணையை, அதாவது 1995 ஜூன் என்கிற கால அளவை நிர்ணயிக்க, இரு முதலமைச்சர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் பெரிய தடைகள் எவையுமில்லை. திருத்தப்பட்ட திட்ட இலக்கு நிர்ணய கால அளவின்படி, இத்திட்டத்தை விரைவுபடுத்த, நல்ல முறைகளில் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு இவ்வரசு தன்பங்கிற்கு உறுதி செய்யும்.

23. ஆக்க நல அரசு, மக்களுக்குத் தேவையான சமுதாய அடிப்படை வசதிகளை வழங்கவேண்டும். அப்போதுதான், மக்கள் குறிப்பாக, ஏழைமக்கள், சமுதாயத்தில் வசதி வாய்ப்பற்றவர்கள் தங்களுடைய உடல், மன, அறிவாற்றல் ஆதாரங்களை மேம்படுத்திக்கொள்ள இயலும்; மேலும், நாட்டின் பயனுள்ள குடிமக்களாகத் தங்களை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்பையும் பெற இயலும். இதனைக் கருத்தில் கொண்டு, மனிதவள மேம்பாட்டிற்குச் சமுதாயப் பணிகளில் முதலீடு செய்வது முக்கியமானதாகும். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, மதுரை, வடார்க்காடு அம்பேத்கார், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய ஏழு மாவட்டங்களில் முழு அளவில் எழுத்தறிவு இயக்கம் ஒன்றை, அரசு வெற்றிகரமாகத் தொடங்கிவைத்துள்ளது. மேற்சொன்ன ஏழு மாவட்டங்களில் ரூ.11.95 கோடி செலவில் வயதுவந்த 18.35 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு புகட்ட இத்திட்டம் வகைசெய்யும். இத்திட்டம் மேலும் படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டம் முழு அளவில் 1993-94 ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். தொடக்கக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது. வரும் ஆண்டில், இம்மாநிலத்தில் தற்போதுள்ள ஓராசிரியர் பள்ளிகளுக்குக் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவாரென்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டில், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திலும் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனித்தனியே கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதையும் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய அளவுக்குப் பள்ளிக் கட்டிடங்கள் இல்லை என்பதை உறுப்பினர்கள் அறிவர். தொடக்க, நடுநிலைப்பள்ளிகளுக்கு அத்தகைய கட்டிடங்களைக் கட்டிக்கொடுப்பதற்கு அரசு பொறுப்பேற்கிறது. அதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகளுக்கு அத்தகைய கட்டிட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, இப்பணியில் தொண்டுமனப்பான்மை கொண்டவர்கள் பங்குகொள்ள நாம் முயற்சி எடுக்கவேண்டும். பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதில் தொண்டுமனப்பான்மையுடையோர் பங்குகொள்ளச் செய்திட அரசு ஊக்கமளிக்கும்.

24. மக்கள் நல்வாழ்வு மருத்துவப்பணிகள், முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது நல்வாழ்வுப்







பணிகளிலுள்ள பெரிய குறைபாடுகளில் ஒன்றாகும். துணை மையங்கள், பொதுச் சுகாதார நிலையங்கள், வட்ட, மாவட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில், மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு நாம் மிகப் பெரிய அளவில் முதலீடுகளைச் செய்துள்ள போதிலும், கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் இன்னும் எட்டாத நிலையிலேயே உள்ளன. இந்த அவல நிலையை முற்றிலுமாகக் களைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் பலமுனை மருத்துவ நலத்திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார். 'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்' என்கிற இப்புதிய திட்டத்தின் கீழ், ஆறுமாத கால அளவில் 10,000 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். தொலைக் கோடியிலுள்ள கிராமப் பகுதிகளுக்கும் இலவசமாக சிறந்த மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் சிறப்பாகும். போதிய அளவிற்கு மருத்துவப் பணியாளர்களை நியமித்தும், மருந்துகள் மருந்துப் பொருட்களை வழங்கியும், அத்துடன் தொண்டுமனப்பான்மை கொண்டோர் மனமுவந்து அளிக்கும் உதவிகளைப் பெற்றுத்தந்தும், அவற்றின் வாயிலாக, இம்மருத்துவ நல்வாழ்வு முகாம்களுக்குப் போதிய வசதிகள் அளிக்கப்பட்டுவருகின்றன. ஏழை, எளிய மக்கள் பெரும்பாலானோரைச் சென்றடையக்கூடிய நிலையான மருத்துவநலப் பெருந்திட்டம், நாட்டிலேயே வேறு எங்குமில்லாதவகையில், முதல் முறையாக இம்மாநிலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. சிறந்த முறையில் தாய் சேய் மருத்துவ நலப்பணி ஆற்றும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதாரச் சத்துணவுத் திட்டப்பணிகள் முழு அளவில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. தொண்டு நிறுவனங்கள், மருந்துத் தயாரிப்பாளர்கள், வணிகர்கள், தனியார் மருத்துவர்கள் இத்திட்டத்தில் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் பங்கேற்க முன்வந்துள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

25. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடர்ந்து முழு வேகத்துடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக இலட்சக்கணக்கான குழந்தைகள் பயனடைந்து வருவது நாடறிந்ததாகும். நாடெங்கிலும், ஏன் வெளிநாட்டிலும்கூட, இத்திட்டத்திற்கு மிகப் பெரிய அளவில் பாராட்டுதல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் உதவுவதன் வாயிலாக, இத்திட்டத்தில் தொழில் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், கொடையாளிகள் பங்கேற்கச் செய்யவும் அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான ஆதரவு நல்ல முறையில் உள்ளது கண்டு நான் மகிழ்வடைகிறேன்.

26. ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்கிற புதிய திட்டம், கிராமப் பகுதிகளிலுள்ள ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதி அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிற இத்திட்டம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தை இம்மாநிலம் முழுவதிலும் விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை எஞ்சிய மாவட்டங்களிலும் நிறைவேற்றுவதற்குரிய தொடக்கப்பணி நடந்தேறி வருகிறது. மகளிர் வாழ்க்கைத் தரத்தினையும், பொருளாதாரத் தகுதியினையும் மேம்படுத்த, கிராமப்புற மகளிரிடையே ஆர்வமூட்டும் வகையில், சமூகத்தின் ஆதரவைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

27. அடிப்படை நிருவாக ஏற்பாடு மக்களுக்கு மிக நெருங்கி வரும் வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும். இதில் காலதாமதம் ஏற்படுவதை அறவே ஒழிக்க வேண்டும். நிலப்பதிவேட்டு முறை மிகப்பழைமையானதாகவே இருந்து வந்துள்ளது. இம்முறையை நவீனப்படுத்த விரிவான முயற்சி எடுக்கப்படும். பட்டா பாஸ் புத்தகம் வழங்குதல், நிலப்பதிவேடுகளைக் கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை பெற்றுள்ள அனுபவங்களைக் கொண்டு, நமது பணிகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். 'நிலப்பதிவேட்டு மேலாண்மைத் திட்டம்' என்கிற விரிவான புதிய திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, மாநில அளவில் பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தங்களுடைய உடைமை நிலங்களைச் சரியாகவும், முழுமையாகவும் அறிய முடியும். விவசாய மேம்பாட்டிற்காகக் கடன் வசதியினைப் பெற, நடைமுறையை எளிதாக்கவும் இது உதவும்.

28. உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தவாறு, 1992 மே இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல்கள் நடத்த இவ்வரசு பொறுப்பேற்றுள்ளது. முதலாவதாக கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பதை ஒழிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் உண்மையில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், அவர்களுடைய தலைவர்களைத் தெரிந்தெடுக்க, இதன்மூலம் வாய்ப்பு கிடைக்கும். அவசியமான சட்டம் ஒன்றைக் கொண்டுவந்த பின்னர், கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல்களை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

29. மாநிலம் கடும் நிதி நெருக்கடியில் இருந்த நிலையில் இந்த அரசு பதவி ஏற்றது. 1991-92 - ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.1600 கோடி என்பதையும், ஆண்டுத்திட்ட ஒதுக்கீட்டைச் செயற்படுத்துவதில் மாநில அரசுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை மிக அதிக அளவில், அதாவது, ரூ.1220 கோடி அளவிற்கு இருந்தது என்பதையும் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். அப்போதிருந்தே மாநில அரசின் நிதி ஆதார நிலைமையை மேம்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசு நிர்ணய விலைகளை மத்திய அரசு மிக அதிகமாக உயர்த்தியுள்ளதால், மாநில அரசு மேலும் அதிக நிதி இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி இருந்தபோதிலும், நடப்பாண்டின் ஆண்டுத் திட்டத்தை எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்ற, அனைத்து நிலைகளிலும் முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக, அவசியமான நிதி ஆதாரங்களைத் திரட்ட முடிந்துள்ளது. 1991-92-ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.1600 கோடி அளவை எய்த முடியும் என்று அரசு நம்பிக்கையுடன் உள்ளது. இதனால், கணிசமான அளவிற்கு நிதி நெருக்கடி ஏற்படும்

இணைந்த ஒரு பகுதி. எந்த ஒரு நாடும் இதை மறுக்க முடியாது. இந்த நிலையில் உலக நாடுகளுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டிய விவரம் என்னவென்றால், இந்திய நாடு மதத்துக்கு முக்கியத்துவம் அளித்து உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற சுதந்திரம் மற்றும் சகிப்புத்தன்மை அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பதைத்தான். மதம் மற்றும் இனப் பாகுபாடு காரணமாகக் கடந்த காலத்தில் அதிக அளவில் ரத்தம் சிந்தப்பட்டிருப்பதை நாடு சந்தித்து இருக்கிறது. இந்நிலை தொடர அனுமதிக்கக்கூடாது.

தமிழ்நாடு, கேரளாவைப் போன்று, ஜம்மு-காஷ்மீர் மாநிலமும் நமது நாட்டைச் சேர்ந்தது என்பதை அனைத்துத் தரப்பு மக்களும் சாதி-மதப் பேதமின்றி அங்கீகரிக்க வேண்டியது. அல்லது ஒப்புக்கொள்வது இன்றைய நாட்டின் ஒற்றுமைக்கும் - ஒருமைப்பாட்டுக்கும் முக்கியமான ஒன்றாகும். இதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். காஷ்மீர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகும். அங்கு தோன்றி உள்ள தீவிரவாத, பயங்கரவாதச் சக்திகளை இதன் அடிப்படையில் தான் நாம் போராடி வெற்றி காண வேண்டும். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள மக்களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகள் பயங்கர வன்முறையில் ஈடுபட்டதன் மூலம் பொருளாதார நிலை அப்படியே ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மதத்தின் பெயரில் அங்குள்ள மக்களிடையே விஷத்தைப் பரப்பி அங்குள்ள சமுதாய மக்களின் இரக்கக் குணத்தைப் பெற்றுள்ளனர். இப்படிப்பட்ட தீவிரவாதிகள்-பயங்கரவாதிகள் அடியோடு ஒழிக்கப் படவேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

இதே போல் வேறு நாட்டிலிருந்து நமது சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் நுழைந்து, மொழியின் பெயரால் பொது மக்களிடையே குழப்பம் விளைவித்து, பேராசை பிடித்த சில அரசியல்வாதிகளைத் தங்கள் கையில் போட்டுக் கொள்ளும் தீவிரவாதிகளின் கசப்பான நடவடிக்கைகளை, தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில் நான் காண நேர்ந்தது. அப்படிப்பட்ட தீவிரவாதிகளை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இங்கு கூடியிருக்கும் தலைவர்களுக்குத் தெரியும் எனக் கருதுகிறேன்.



இந்தியாவில் குழப்பம் ஏற்பட வேண்டும். அதன் மூலம் இந்தியா துண்டுபட வேண்டும் என்று, சில நாடுகள் ஆசைப்படுவதால், அந்த நாடுகளின் ஆதரவு இதுபோன்ற வேரூன்றிய தீவிரவாதிகளுக்கு இருக்கத்தான் செய்யும்.

இப்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இந்த நேரத்தில், ஒற்றுமைதான் மிகவும் அவசியம் ஆகும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை காஷ்மீர் தீவிரவாதிகளை ஒடுக்க மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்று நான் இங்கு உறுதி அளிக்கிறேன்.

இங்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லையோரப் பகுதிகளிலும் ஊடுருவலைத் தடுக்க இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் நாங்கள் முழு ஒத்துழைப்பு தருவோம் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால், சுதந்திரத்துக்காக நமது முன்னோர்கள், தலைவர்கள் செய்த தியாகம் வீணாகிப் போய்விடும். அதேநேரம் பல்வேறு சமயங்கள்-மதங்களில் நம்பிக்கையுள்ளவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவை மதிக்கப்படவேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த நாட்டில் உள்ள மக்கள் இந்துக்களாகவோ, சீக்கியர்களாகவோ, முஸ்லீம்களாகவோ, கிறிஸ்துவர்களாகவோ, ஜைனர்களாகவோ, புத்த மதத்தவராகவோ, பார்ஸிய மதத்தவர்களாகவோ அல்லது எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்தியர்கள்தான், காஷ்மீரில் முஸ்லீம்கள் அதிகமாக இருந்தாலும் சரி, அல்லது மற்ற மாநிலங்களில் இந்துக்கள் அதிகம் இருந்தாலும் சரி,

**• ஒவ்வொரு கடமையும் புனிதமானது. இந்தக் கடமையில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வது, கடவுள் வழிபாட்டு முறைகளிலேயே மிக உயர்ந்ததாகும்.**

**- சுவாமி விவேகானந்தர்**



எல்லா மாநிலங்களும் நமது நாட்டைச் சேர்ந்ததுதான் என்பதை யாரும் மறுத்திட முடியாது. காஷ்மீரில் ஒரு பகுதி இந்தியாவில் இல்லை என்ற நிலை உருவானால் அதை இந்தியாவுக்குள் கொண்டு வரவேண்டும்..

காஷ்மீரில் வாழும் முஸ்லீம்கள் இன்னொரு மாநிலத்தில் வாழும் இந்துக்களைப் போலவே உணர்வு பெற்று இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுக்கு இந்தியத் திருநாட்டின் உணர்வு இருக்க வேண்டும். இதை உறுதிப்படுத்த தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாத நடவடிக்கைகள் எந்த முறையில் கட்டுப்படுத்தப்பட வேண்டுமோ அந்த முறையில் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் மக்கள் மனநிலையில் நல்லுணர்வை விரைவில் ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். நல்லெண்ணம், நெருங்கிய பிணைப்புகள் மக்கள் மத்தியில் உருவாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக்காக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளை ஆதரிப்போம் என்பதை அண்ணா தி.மு.க. சார்பாக மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாத நடவடிக்கைகள் எந்த உருவில் வந்தாலும் அதைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையும் ஆதரிப்போம். காஷ்மீர் மக்கள் இந்தியக் குடிமக்கள் என்ற நல்லுணர்வை ஏற்படுத்தும் அனைத்து முயற்சிகளையும் ஆதரிப்போம்.

காஷ்மீர் மக்களின் நலன், அமைதி, வளமான வாழ்வு மீது இந்தியத் தலைவர்கள் மற்றும் நமது அனைவரின் உண்மையான எண்ணம் உள்ளது. இதில் காஷ்மீர் மக்களின் உண்மையான நம்பிக்கையைப் பெற்றிட இந்த நெருக்கடியான நேரத்தில் எடுக்கப்படும் எல்லா உறுதியான நடவடிக்கைகளையும் நாங்கள் ஆதரிப்போம்.'

***"ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் புது டில்லியில் கூட்டிய, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (10.2.1992)***

## பார்த்தோம், படித்தோம்

**16.1.1992** இதழில் உழவர் திருநாளைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய தேன் சொட்டும் சுவையான கட்டுரையைப் படித்துச் சுவைத்தேன்.

'ஏது உண்மை இலக்கியம்'? என்ற தலைப்பில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கருத்துக்கள் பாதுகாக்க வேண்டிய சொத்துக்கள்.

காரை. புரட்சிமணி
காரையூர்
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

'உழைப்போம்! உயர்வோம்! இது பொங்கலுக்காக, எங்களுக்குத் தந்த பிரசாதம்.

- க. திருவாசகம், கா. குமார்
முகிழ்தகம்
இராமநாதபுரம் மாவட்டம்

ஒக்கூர் என்ற சிற்றூரில், ஒரு முகத்தில் இரு கண்களைப் போல் அமைந்த மாசாத்தியார்-மாசாத்தினார் என்ற இரு சங்கப் புலவர்களால் தமிழுக்குப் புகழளித்த பெருமையைக் கண்டேன். இந்த மாபெரும் 'நினைவுத்தூண்' நீடு புகழ் பெறுக!

- ப. அருணாசல சண்முகம்
களம்பூர்
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

கவிஞர் இளந்தேவன் எழுதிய 'புகழ்பாடு தைமகளே!' என்னும் கவிதை மிகவும் அருமையாக இருந்தது.

- டி. ஆறுமுகம்
சந்தைவெளி
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

புகழ்பாடு தை மகளே கவிதை நன்றாக இருந்தது.

- அ. ஆளவந்தார்
வீரசோழபுரம்
தென்னார்க்காடு மாவட்டம்

கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன் எழுதிய 'பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து' என்ற கவிதை மிகவும் அருமை. அக்கால மன்னர்கள் பொன்னிக்குப் புகழளித்த அரும் பெரும் பணியை இக்கவிதை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

- சாந்தி-ராஜசேகரன்
சைதை-ஆரணி
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

'தமிழரசு' இதழ் தமது நூல் நயப் பகுதியில் நூலின் நுண்மாண் நுழைபுலங்களையும், அருமை பெருமைகளையும், ஆற்றல் பெருந்திறன்களையும் நயமுடன் ஆய்ந்து கூறி அறிமுகப்படுத்தினால், கண்ணை மூடிக்கொண்டு வாங்கிப் படிப்போம்! அந்த அளவுக்குத் தரத்தில் உயர்ந்த நூல்களையே சிகரத்தில் ஏற்றுகிறது நூல் நயம்!

- அரிமா பூபாளம்
ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
கோவை மாவட்டம்

பொங்கல் இதழ் சர்க்கரை, கற்கண்டு, தேன்பாகு கலந்த பொங்கலாக, தந்தை பெரியாரின் பொன்மொழிகள், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியம், மொழி ஞாயிறு, ஞா. தேவநேயப்பாவாணர் கட்டுரை எனத் தித்திக்கும் பொங்கல் விருந்தாக அமைந்தது.

உரந்தை மதி. தமிழரசன்,
அருள்மொழி தமிழரசன்
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

கவிஞர் பி.வி. கிரியின் உறுதி பிறந்தது! கவிதைப் படைப்பு மிகவும் அருமையாக இருந்தது.

ப. சிவராமகிருஷ்ணன்
விருதுநகர்-2
காமராசர் மாவட்டம்

'உறுதி பிறந்தது!' (கவிதை) படித்து என் உள்ளத்திலும் உறுதி பிறந்தது!

- த. சுரேஷ்
குரும்பேரி
வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம்

'இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு' பற்றிய டாக்டர் எஸ். சுப்பையா அவர்களின் கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

- ஜி. ராமநாதன்
திண்டுக்கல்

என்பதில் ஐயம் இல்லை. மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கிடைக்குமென இன்னும் எதிர்பார்க்கிறோம். இம்மாநிலத்திற்கு ஏற்பட்ட தனி வகையான இடர்ப்பாடுகளின் காரணமாக, இம்மாநில அரசுக்குத் தேவைப்படக்கூடிய நிதியுதவி குறித்து முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களுடனும், மத்திய நிதி அமைச்சர் அவர்களுடனும் மேற்கொண்டும் கலந்துரையாடியுள்ளார்கள். நம் தேவைகளை மத்திய அரசு உணர்ந்து, 1991-92-ஆம் நிதி ஆண்டு முடிவதற்கு முன் நமக்குப் போதிய அளவிற்கு உதவ முன்வரும் என்று நம்புகிறோம்.

30. இதுவரையில், இம்மாநிலத்தின் மேம்பாட்டிற்காக எமது அரசு இனி மேற்கொள்ளவிருக்கின்ற நிலையினைப் பொதுவாகச் சுட்டிக்காட்டுவதாக அமையும் சில கொள்கைகளை உங்கள் கவனத்திற்காக முன் வைத்துள்ளேன். தேசியப் பொருளாதார நிலைமை, தொடர்ந்துவரும் பணவீக்கப்போக்கு, நம்முடைய மாநிலத்தில் போராளிகளையும், தீவிரவாதிகளையும் ஒடுக்குவதில் நாம் எதிர்கொள்ள வேண்டி இருந்த கட்டாயங்கள், கருநாடக மாநிலத்தில் வாழும் தமிழ் மக்கள் அடைந்துள்ள இன்னல்கள், சோதனைகள் ஆகியவை நமக்கு மிக இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளன. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், இன ஒற்றுமையையும் அமைதியையும் காக்கவும், இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த வகையில் அனைத்து முனைகளிலும் இவ்வரசு வெற்றிகண்டு வருகிறது என்றே கூறலாம்.

31. பொருளாதார நிலையில், மாநிலத்தின் மேம்பாட்டு நலனுக்காகத் தெரிந்தே கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது. நாம் எடுக்கக்கூடிய பொருளாதார அல்லது நிதி நிலை குறித்த முடிவுகள், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் மீது தற்போதுள்ள சுமையை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். மத்திய அரசு பொருளாதார வகையில், பற்றாக்குறையை ஈடுசெய்யும் நடவடிக்கையை எடுக்கலாம் என்றும், ஆனால், அது ஏழை மக்களைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்றும் அரசு மீண்டும் மீண்டும் தொடர்ந்து வலியுறுத்தும். காவிரி நீர்ப்பிரச்சினையைப் பொறுத்தமட்டில், காவிரி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், கருநாடக மாநிலத்தில் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு சிறப்பான முறையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தொடர்ந்து மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும். அமைதியான சூழ்நிலையில் மாநிலம் அனைத்து வழிகளிலும் மேம்பாடு அடைய எமது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

32. அரசு பல முனைகளிலும் எடுத்துள்ள நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தமிழகத்தில் ஏழை, எளியவர்கள் மற்றும் வசதி வாய்ப்பு அற்றவர்கள் ஆகியோரின் வளமான வாழ்விற்கு உறுதி செய்யவும், விரைவான வளர்ச்சிக்கு வகை செய்யவும் அரசு தன் கொள்கைகளையும் திட்டப்பணிகளையும் முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த இயலும் வகையில், இம்மாமன்றத்தில் உறுப்பினர்களின் விவாதங்கள் அமையும் என்று நம்புகிறேன். உங்கள் கருத்துக்கள் ஆக்கப்பூர்வமானவையாகவும், பொருள் பொதிந்தவையாகவும் அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

நன்றி, வணக்கம்.

## தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு: மானியம் வழங்கக் குழு அமைப்பு

குறைந்த செலவில் தரமான தமிழ்த் திரைப் படங்களைத் தயாரித்து வெளியிடும் தயாரிப் பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு தோறும் அத்தகைய படங்களைத் தேர்வு செய்து அரசு மானியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1991-ஆம் ஆண்டுக்கான தேர்வுகளைச் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார். அதன்படி 1991-ஆம் ஆண்டுக்கான குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழுவை அரசு அமைத்து உள்ளது.

1. திரு. கே. பொன்னுசாமி - தலைவர்
மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
சென்னை-9.

2. திரு. ஆர்.எஸ். மனோகர் - உறுப்பினர்

3. திரு. பி.எஸ். வீரப்பா - உறுப்பினர்

4. திரு.கவியரசு நா.காமராசன் - உறுப்பினர்

5. திருமதி சி.கே.கரியாலி, - உறுப்பினர்
செயலாளர், இ.ஆ.ப.,
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை
சென்னை-9.

6. இணை ஆணையாளர்,
வணிகவரித் துறை,
சென்னை-9. - உறுப்பினர்

7. அரசு துணைச் செயலாளர்,
உள்துறை, சென்னை-9. - உறுப்பினர்

8. முதல்வர்,
தமிழ்நாடு திரைப்படத்
தொலைக்காட்சிப் பயிற்சிக்
கல்லூரி, சென்னை-113. - உறுப்பினர்

இக்குழு 1.1.1991 முதல் 31.12.1991 முடிய வெளிவரும் குறைந்த செலவு தயாரிப்புப் படங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும். தேர்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்படும் படங்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் அரசு மானியம் வழங்கப்படும்.



# ''இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்க மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம்!''

## புதுடில்லியில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

'நம் நாட்டின் வரலாற்றில், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். காஷ்மீர் பற்றிய மிக முக்கியமான உணர்ச்சி பூர்வமான பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததற்காகப் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காஷ்மீர் பிரச்சினை, நம் நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்குமான ஒரு முக்கிய பிரச்சினையாகும். நாட்டின் அடிப்படைக் கொள்கையான மதச்சார்பின்மை மற்றும் மதச் சகிப்புத் தன்மை ஆகிய கொள்கைகளுக்குச் சவாலாக அமைந்திருப்பதால் இந்தப் பிரச்சினை உணர்ச்சிபூர்வமானதும் ஆகும். நம் நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்தே காஷ்மீர் பிரச்சினை நமது பொறுமையைச் சோதித்து வருகிறது இந்தப் பிரச்சினையில் இதுவரை சரியான நடவடிக்கைகளையே எடுத்து வந்துள்ள மேதைகளுக்கு இது ஒரு புகழாரம் ஆகும். ஆனால், கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும் உறுதியற்ற எண்ணங்களே வளர்ந்து வருவதால், காஷ்மீர் பிரச்சினையில் ஒரு இறுதி முடிவை மேற்கொள்ள வேண்டும்.

காஷ்மீரில் தீவிரவாதமும், ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளும் தலைதூக்கி இருக்கிறார்கள். எல்லைக்கு அப்பால் இருந்து தீவிர இராணுவ உதவியுடன் பயிற்சியும், ஆயுதமும் நிதி உதவியும் பெற்ற தீவிரவாதிகள் நாட்டின் ஒரு பகுதியை வசமாக்குவதையும், சர்வதேச அளவில் அதை விளம்பரப்படுத்துவதையும் எந்த நாடும் பார்த்துக்கொண்டு இருக்காது. தீவிரவாத நடவடிக்கையுடன் மதச்சார்பான ஊக்கமும் அளிக்கப்படுவதால் பிரச்சினை சிக்கலாகி இருக்கிறது. மத சுதந்திரம் பற்றி செய்யப்படும் தவறான பிரச்சாரம், நாட்டில் பிற மாநிலங்களில் வாழும் மற்ற பல்வேறு சமுதாயத்தினரிடையே குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. என்றாலும் நம் நாட்டு மக்கள் பொய்ப் பிரச்சாரத்தை நம்பாததும், அடிப்படை மத ஒற்றுமை, மதச்சார்பின்மை, சுதந்திரம் ஆகியவை காஷ்மீரில் மட்டுமல்ல நாட்டின் மற்ற எல்லா மாநிலங்களிலும் நிலைத்து நிற்பதும் நமக்கெல்லாம் மிகுந்த ஆறுதல் அளிக்கும் ஒரு விஷயமாகும்.

ஜம்மு-காஷ்மீர் நம் நாட்டுடன்

# சட்டப்பேரவையில் புரட்சித் தலைவரின் திருவுருவப்படத் திறப்பு விழா



பாரத ரத்னா, புரட்சித் தலைவர், மூன்று முறை தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று அப்பதவிக்குப் பெருமை சேர்த்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களது திருவுருவப் படத் திறப்பு விழா, 31.1.1992 வெள்ளியன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

அன்று சட்டப்பேரவை முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபம் முழுவதும் மல்லிகை மணம் வீசியது. தலைமைச் செயலக வாசலிலிருந்து, சட்டமன்ற மண்டப நுழைவு வாயில் வரை வண்ண வண்ண ஜரிகைத் தாள்களால் அலங்காரப் பந்தல் போடப்பட்டு சிறப்பாகக் காட்சி அளித்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நடந்துவரும் பாதை ரோஜா மலர்களால், மலர்ப் பாதையாக அமைந்திருந்தது.

சட்டசபையில் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த திருவள்ளுவர், அண்ணல் காந்தி அடிகள், பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கர், முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்குப் பெரிய ரோஜா மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

விழா நடைபெறும் சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலை 9.55 மணிக்கு வருகை புரிந்தார். சட்டசபை சார்ஜண்ட் முன்னால் வர, அவரைத் தொடர்ந்து சட்டசபைச் செயலர் திரு. ஜானகிராமன் அவர்கள் வர, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. பொன்னுசாமி அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணிவகுத்து அழைத்து வந்தனர்.

சட்டப்பேரவைத் தலைவர் இருக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர்ந்தார். அவருக்கு இடப்புறம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், வலது புறம் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும் அமர்ந்தனர். சரியாக 10 மணிக்கு விழாத் தொடங்கியது.

'வரலாற்று நாயகர் திருவுருவப் படத்தைத் தங்கத் தலைவரின் அரசியல் வாரிசாகத் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைப்பார்கள்' என சட்டப் பேரவைத் தலைவர் அறிவித்தார். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேசையிலிருந்த பொத்தானை அழுத்த, எதிரே இருந்த எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்தின் பட்டுத்திரை விலகியது. அந்தத் திருவுருவப் படத்தை பார்த்து மாண்புமிகு முதல்வர் வணங்கினார். எம்.ஜி.ஆரின் படத்தின் கீழ் 'வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்' என்று எழுதப்பட்டிருந்தது.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்றார். அவர் பேசியதாவது:



'யார் யார் இந்த நாட்டுக்குப் பெருமையையும், புகழையும் சேர்த்து, வழிகாட்டியாக இருந்தார்களோ அவர்களுடைய திருஉருவங்கள் இந்த மணி மண்டபத்தில் அணி செய்கின்றன.

புரட்சித் தலைவர் வாழ்ந்து காட்டிய வரலாறு இந்த நாட்டில் வாழவேண்டும் வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இருப்பவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

புரட்சித் தலைவர் படத்தை இந்த மணி மண்டபத்தில் வைப்பதும், அதைப் புரட்சித் தலைவி திறந்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருப்பதும் மிகவும் பொருத்தமானதாகும்.

புரட்சித் தலைவரின் பொற்கால ஆட்சியை மீண்டும் நிலைத்த, நீடித்த, நீதி தருகிற ஆட்சியை அமைத்து புரட்சித் தலைவி நடைமுறைப்படுத்தி வருகிறார். புரட்சித் தலைவர் உழைப்பால் உயர்ந்தவர், உள்ளத்தால் சிறந்தவர். தனது அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு வாழ்ந்தார். படிப்படியாக அவர் வளர்ந்தார், வளர்ந்து கொண்டே இருந்தார். எந்த இடத்திலும் சறுக்கல் ஏற்பட்டது இல்லை.

'நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு'

என்னும் வள்ளுவர் குறளுக்கு இணங்க இறவாப் புகழை எய்தியவர்.

1953-ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்த அவர், அண்ணா, பெரியாரின் கோட்பாடுகளை ஏற்றவுடன் 'என்னை அறியாமல் ஒரு கனி என் மடியில் விழுந்தது. அந்தக் கனியின் அருமை கருதி இதயத்தில் வைத்துக் கொண்டேன்' என்று அப்போது அண்ணா கூறினார்.

எதையும் எடை போட்டுப் பார்த்துத்தான் அண்ணா பாராட்டுவார்.



அன்பு காட்டவே பிறந்த இதயம் அவருடையது. வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல் என்றும், எம்.ஜி.ஆர். கழகத்தின் கண்மணி, குணத்தில் தங்கம், கொதித்தெழுந்தால் சிங்கம் என்றும் அண்ணா பாராட்டினார்.

எம்.ஜி.ஆருக்குப் பொன்மனச் செம்மல் என்ற பட்டத்தைக் கிருபானந்தவாரியார் வழங்கினார். புரட்சித் தலைவர் வழியொட்டி, அவர் தீட்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி, ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வுக்காகத் தனது நேரத்தையும், உழைப்பையும் பயன்படுத்தி புரட்சித் தலைவி திட்டங்களைத் தீட்டி வருகிறார்.

அவர் புரட்சித் தலைவரின் படத்தைத் திறந்து வைப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்'.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை உரை ஆற்றினார். அவர் பேசியதாவது:

'வரலாற்று நாயகரின் படத்தை அந்தத் தங்கத் தலைவரின் அரசியல் வாரிசாகன புரட்சித் தலைவி திறந்து வைப்பது மிகவும் பொருத்தமேயாகும். இன்றைய தினம் அவர் வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகிறார். அழியாத புகழுக்கும், சிறப்புக்கும் உரியவராகத் திகழ்ந்து வரும் மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆரின் படத்தை அவரது புகழை அழியாது காத்து வரும், தமிழக மக்களின் நிகழ் காலத்துக்கும், எதிர்காலத்துக்கும், எக்காலத்துக்கும் உத்தரவாதமாக நல்லாட்சி செய்து வரும் புரட்சித் தலைவி திறந்து வைத்து இருக்கிறார்.

இறந்தும் இறவாப் புகழைப் பெற்று இருக்கும் புரட்சித் தலைவர் படத்தை அவர் மறைந்து நான்கு ஆண்டுகள் கழித்து, அந்தப் படத்தைத் திறக்கத் தகுதியுடைய தலைவரான புரட்சித் தலைவி திறந்து வைத்து இருக்கிறார். புரட்சித் தலைவரின் படத்தைத் திறந்து வைக்கத் தகுதி படைத்த ஒரே தலைவர் புரட்சித் தலைவிதான்.

இந்தத் தலைவி மட்டும் இல்லை என்றால், 1987-இல் என்றைக்குப் புரட்சித் தலைவர் உடலை பூமிக்குள் இறக்கினோமோ அன்றைக்கே சகாப்தம் முடிந்து இருக்கும். இந்தத் தலைவி இல்லை என்றால் வரலாறு அன்றே முடிந்து இருக்கும்.

எம்.ஜி.ஆரின் வரலாற்றை மறைந்து விடாமல் அதைக் காப்பாற்றும் தலைவியாகத் திகழும் புரட்சித் தலைவியின் பொற்கரத்தால் சாகாவரம் பெற்ற அந்தத் தலைவரின் புகழ் தமிழ்நாட்டில் என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று காட்டுகிற வகையில் புரட்சித் தலைவர் படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் இந்த அவையில் படமாக, பாடமாக இருக்கிறார்'.

- அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா

அவர்கள் சிறப்புப் பேருரை ஆற்றினார்:

'மனித குல வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் தனிப்பெரும் தத்துவமாகத் திகழும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழகச் சட்டமன்றப் பேரவையில் திறந்து வைப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதன், பிறந்தான் - வாழ்ந்தான் - மறைந்தான் என்பதுதான் வாழ்க்கை நியதியாக இயற்கை நமக்கு அளித்துள்ளது. ஆனால், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரோ பிறந்தார் - வாழ்ந்தார், இன்றும் நம் இதயத்தில் வாழ்கிறார். இனி என்றென்றும் வாழப் போகிறார் என்கிற தனி நியதியை உருவாக்கிச் சென்றுள்ளார்.

அவர் வளர்ந்து வந்த பாதை, அனைவருக்கும் பாடமாக அமையத் தக்கதாகும். இளமை முதல் அவர் வாழ்க்கையில் எதிர் கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளமாகும். அனைத்தையும் அவரது மனோபலத்தினாலும் - ஒப்பற்ற மனிதாபிமான அணுகுமுறையாலும் எளிதில் வென்று எதிர்ப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சாதனைகளாக்கிச் சரித்திரம் படைத்தவர் புரட்சித் தலைவர்.

செல்வச் சீமான் வீட்டில் ஓர் பிள்ளையாகப் பிறந்து, ஏழாவது வயதிலேயே, ஏதுமற்ற ஓர் நிர்கதியான குடும்பப் பிள்ளையாய் தமிழ்நாட்டிற்கு வந்து, 'எங்கள் வீட்டுப் பிள்ளை'யெனத் தமிழகம் புகழ்ந்த மாமனிதர் நம் புரட்சித் தலைவர். இளம் பருவத்தில் ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் முழுக்க மாறுபட்ட வறுமைச் சூழ்நிலைக்கு ஆளாகும் நிலை, பொதுவாக எவர்க்கும் ஏற்பட்டிருக்காது. வறுமையின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு, தான் அனுபவிக்காத வேறுபட்ட வாழ்க்கையை, அதுவும் மாறுபட்ட ஓர் நிலப் பகுதிக்குச் சென்று தொடங்க வேண்டிய அவலத்திற்கு ஆளாக்கப் பட்டவர் நமது புரட்சித் தலைவர்.

சிறுவனாய் இருந்த காலத்தில் வறுமையில் வாடினார். பசியின் கொடுமைக்கு ஆளாக்கப் பட்டார். அவ்விளமைப் பருவத்திலேயே கூட, மூன்று நாள் தொடர்ந்து பட்டினி கிடந்தும், மானத்தோடு வாழ வேண்டும் என்ற மனோதிடத்தைப் பெற்ற மாமனிதர்தான் புரட்சித் தலைவர். அந்த அனுபவங்களே அவர் மனதில் இரக்கமும், ஈகையும் வளர அடித்தளமாக அமைந்தன. அந்த அடித்தளத்தின் மீது அவரால் உருவாக்கப்பட்டது தான், இன்று அகிலம் போற்றும் இலவசச் சத்துணவுத் திட்டம்.

கலைத்துறையில் ஈடுபட்டு, அத்துறையின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த வேளையில்தான், அவர் கொலைவெறிக்கு ஆளாகிக் குண்டடிபட்டு, தன் இனிய குரலை இழக்க நேரிட்டது. கலைத் துறையின் கவர்ச்சிக்கு மிக இன்றியமையாத இதனை இழந்த நிலையிலும், அக்குறையே அவரது



நிறை என்ற வகையில் தொடர்ந்து கலைத் துறையில் சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டினார்.

புரட்சித் தலைவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரசியல் வாழ்விலும், 72-ஆம் ஆண்டில் மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப் பட்டார். தான் வளர்த்த இயக்கத்தில் இருந்து, தன்னால் உயர்வு பெற்ற தலைவர்களாலேயே தன்னந்தனியாகத் தூக்கி எறியப்பட்டார். 'அஸ்தமனம்' என்கிற வார்த்தை புரட்சித் தலைவரின் அகராதியில் எப்போதுமே இருந்ததில்லை. தனி ஒருவராகத் தன்னந்தனியராக, தான் வளர்த்த இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சியே, அவருக்கு அரசியலில் மக்கள் ஆதரவைப் பெற்றுத்தரும், மகத்தான சூழ்நிலையை உருவாக்கித் தந்தது. தனிமரம் ஆகிவிடுவார் என எண்ணிய, அவரது அரசியல் எதிரிகளின் எண்ணத்தில் மண் விழும் அளவிற்கு, இலட்சோப இலட்சம் இரத்தத்தின் இரத்தங்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டு, புதியதோர் இயக்கம் கண்டார்; தனது அரசியல் எதிரிகளை மக்கள் முன் தோலுரித்துக் காட்டியதோடு, நாடு போற்றும் நல்லாட்சி ஒன்றினைத் தமிழகத்திற்கு, ஒன்றுக்கு மூன்று முறை வழங்கும் உயர்வினையும் பெற்றார்.

இந்த நேரத்தில் தத்துவமேதை சாக்ரடீஸ் அவர்களின் தெளிவான கருத்தான -

Nothing can harm a good man
either in life or after death*

என்பது நினைவிற்கு வருகின்றது.

ஒரு நல்ல மனிதரின் புகழுக்கும் பெருமைக்கும், அவரது வாழ்நாளிலும் அவர் மறைந்த பின்னரும், எந்தச் சக்தியாலும் கேடு விளைவித்திட முடியாது என்பது, இப்போது நடைமுறை உண்மையாகிவிட்டது. இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறதென்றால், அதன் வாரிசாக நான் ஆட்சியில் பொறுப்பேற்றிருக்கிறேனென்றால், அதற்குப் புரட்சித் தலைவரின் புகழும், பெருமையுமே முழு முதற் காரணமாகும். எனவே, ஒரு நல்ல மாமனிதரின் வாரிசான எங்களையும், எந்தக் கேடும், எந்த உருவிலும் நெருங்கிட முடியாது என்று, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைத்துறையிலும், பொது வாழ்விலும், தனக்கு நேர்ந்த மிகச் சோதனையான இடர்ப்பாடுகளை மீறி, காலத்தை வென்றவர் 1984-இல் மருத்துவமனையில் படுத்த படுக்கையாய் இருந்த

**பழங்கள் நிறைந்திருக்கும் மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளைந்திருக்கும். அதுபோல் நாமும் பெருமையை அடைய வேண்டுமானால், எவ்லோரிடமும் அடக்கத்தோடும், பணிவோடும் இருக்க வேண்டும்.**

**—இராமகிருஷ்ணர்**

காலக் கட்டத்தில், காலனையும் வென்று சரித்திர நாயகனாய்க் காட்சி அளித்தார். இன்று நம்மைக் காக்கும் காவல் தெய்வமாக நின்று நிலவுகிறார்.

ஊர் ஊராய்ச் சுற்றிச் சுற்றி வலம் வந்து வாக்குச் சேர்க்கும் வள்ளல் இல்லை; இனி வீழ்ந்தது இவரது இயக்கம் எனக் கணிப்புக் கணித்தோர் இதிலும் வீழ்ந்தனர். அன்று அவர் இல்லாத குறையை நிறைவு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர் இருந்திருந்தால் பெற்றிருக்கும் வெற்றியைப் பெற்று - அவர் அமெரிக்காவிலிருந்து உடல் நலத்தோடு தாயகம் திரும்பியதும், அவர் காலடியில் அவ்வெற்றிச் செய்தியைக் காணிக்கையாக்கும் வாய்ப்புப் பெற்ற எனக்கு, அவர் இல்லாத இந்த அவையில், நாட்டுக்கு நல்ல பாடமாக அமைந்துள்ள, இவரது படத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, ஆனந்தக் கண்ணீர் உகுக்கும் நிலைமையில் உங்கள் முன் நிற்கிறேன்.

இப்படிக் கலைத்துறையிலும் - பொது வாழ்க்கையிலும், தன் சொந்த வாழ்க்கையிலும் சரித்திரச் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி - இழப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சோதனைகளையும், சாதனையாக்கிக் காட்டிய, ஈகைக் குணம் கொண்ட ஏந்தல், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், இச்சட்டமன்றப் பேரவையிலும், தமிழக ஆட்சியிலும், சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

11 ஆண்டுகள் முதலமைச்சராய் இப்பேரவையில் அங்கம் வகித்து, தமிழகத்தை ஆட்சி செய்தார் என்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து எவ்வித இடைவெளியும் இல்லாது மும்முறை தேர்தல்களில் மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர், அவர்தான் என்ற சிறப்பையும் - கீர்த்தியையும் பெற்றவர் புரட்சித் தலைவர் ஆவார்.

இச்சட்டமன்றப் பேரவையில் மற்ற எல்லா முதலமைச்சர்களையும்விட, மிக அதிகமான ஆண்டுகள், 1967 முதல் தொடர்ந்து 20 ஆண்டுகள் உறுப்பினராகவும் அங்கம் வகித்து, ஒரு பிரச்சினையில் மிக அதிக நேரம் பேசியவர் என்ற சாதனையினையும் நிகழ்த்தியவர். 1979 பிப்ரவரி 26-ஆம் தேதி தேதி, அவரது அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அன்று ஒரே நாளில் தொடர்ந்து 7 மணி நேரம் பேசினார்.

இச்சட்டப்பேரவை வரலாற்றில், நிலைத்திருக்கும் சாதனைகள் பல நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக முதல்வராய் நிர்வாகத்திலும் வியக்கத்தகு சாதனைகளை நிகழ்த்தி உள்ளார்.

தனது அரசியல் ஆசான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற நெறியினைத், தன் ஒரே நோக்கமாகக் கொண்டு, ஆட்சி நடத்தினார். தனது ஆட்சியின் மூலம், அதிகபட்ச நன்மைகள், தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதிலேயே, கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஏழைகளின் பாதுகாவலராக வாழ்ந்ததால் தான், தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும், குடிகொண்டுள்ள ஈடுஇணையற்ற தலைவராக இன்றும் வாழ்கிறார், என்றும் வாழ்வார்.

அந்த வகையில் தமிழக மக்களுக்கு உழைத்து, அவர்களை உயர்த்திய மாமனிதரின் திருவுருவப் படம், மக்கள் பிரதிநிதிகள் கூடும் இந்த மாமன்றத்தில் திறந்து வைக்கப்பெறுவது, மிகப் பொருத்தமானதாகும். அத்திருவுருவப் படத்தைத் திறக்கும் வாய்ப்பை, அவரால் உருவாக்கப்பட்டு, உயர்வு அடைந்து, இன்று அவர் வழி நடக்கும் எனக்குக் கிடைத்திருப்பதை, என் வாழ்க்கையில் கிடைத்த மாபெரும் பேறாகக் கருதி, பெருமை அடைகிறேன்'.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சந்தன மாலை அணிவித்தார். சட்டசபை நுழைவுவாயிலும், மாண்புமிகு முதல்வருக்கு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் செங்கோல் வழங்கிய உருவமும் பொருத்தப்பட்ட நினைவுப் பரிசை சட்டப்பேரவைத் தலைவரும், சட்டப்பேரவைத் துணைத் தலைவரும் சேர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்கள்.

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்தை வரைந்த ஓவியர் திரு அல்போன்சுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, தனது சொந்தச் செலவில் தங்க மோதிரம் பரிசாக அளித்தார். பின்பு, தேசிய கீதத்துடன், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்விழா இனிது நிறைவுற்றது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**என். இளங்கோ.**

# கணிதமேதை ராமாநுஜன் நூல் வெளியீடு

எழுபதாண்டுகளுக்கு முன்பாகக் காலமான, இந்தியக் கணிதமேதை சீனிவாச ராமாநுஜனின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்று அமெரிக்காவில் வெளியாகியுள்ளது. 'தி மேன் ஹூ நியூ இன்பினிட்டி' என்னும் பெயர் கொண்ட இந்தப் புதிய நூலை, ராபர்ட் கனிகெல் என்னும் அமெரிக்கர் எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்த நூலை எழுதுவதற்குத் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து, ராமாநுஜனின் வாழ்க்கையைப் பற்றிய புதிய பரிமாணங்களைத் தாம் அறிந்து கொண்டதாகவும், தாமும் பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டதாகவும் இந்த நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ராமாநுஜன் சென்னையில் ஒரு குமாஸ்தாவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பிரபல பிரிட்டிஷ் கணித மேதை ஜி.எச். ஹார்டிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதில் தம்மைத் தாமே அவர் அறிமுகம் செய்து கொண்டு இருந்தார். தாம் கண்டுபிடித்துள்ள பல கணித வாய்பாடுகளையும் விதிமுறைகளையும் பற்றி அக்கடிதத்தில் ராமாநுஜன் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதம் எழுதும் போது ராமாநுஜனுக்கு வயது இருபத்தைந்துதான்.

பள்ளிப்படிப்பு மட்டுமே முடித்திருந்த ஒரு நபர், அதுவும் கல்வித் தலங்களாகத் திகழும் மேலை நாடுகளிலிருந்து தொலை தூரத்தில் வாழும் ஒரு நபர் கணிதத்தில் இவ்வளவு அரும்பணி ஆற்றி இருப்பது கண்டு பேராசிரியர் ஹார்டி மிகவும் மகிழ்ந்து போனார். கேம்பிரிட்ஜுக்கு வருமாறும், தம்முடன் பணியாற்றுமாறும் ராமாநுஜனுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பைக் கண்டு ராமாநுஜன் பரவசமடைந்தார். ஏனெனில் அதற்கு முன்பு அவர் எத்தனையோ பேராசிரியர்களுக்கு எழுதியும், அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. அவர்கள் யாரும் அவரிடம் அக்கறைகூட காட்டவில்லை.

ராமாநுஜன் கேம்பிரிட்ஜுக்குச் சென்று பேராசிரியர் ஹார்டியுடன் ஆறு ஆண்டுக்காலம் இணைந்து பணியாற்றினார். இருவரது பின்னணியும் வெவ்வேறாக இருந்தும்கூட, இவர்களது கூட்டுப்பணி மிகவும் வெற்றிகரமாக நடந்தது.

ஆனால், எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்ட ராமாநுஜன் தமது 32-வது வயதிலேயே அகால மரணமடைந்தார். தமது குறுகிய வாழ்நாளிலே ராமாநுஜன் கடுமையாக உழைத்தார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கணித வாய்பாடுகளை அவர் கண்டுபிடித்தார். அவற்றையெல்லாம் பல நோட்டுப் புத்தகங்களிலும் துண்டுத்தாள்களிலும் அவர் குறித்து வைத்திருந்தார்.



மிகவும் ஏழ்மையான குடும்பத்திலே பிறந்தவராதலால், அவர் கடும் நிதி நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி இருந்தது. தமக்குத் தோன்றும் கணித விதிகளை அவர் முதலில் ஒரு சிலேட்டுப் பலகையில்தான் எழுதிப் பார்ப்பார். உறுதியான முடிவு கிடைத்த பின்னரே அதனை நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்வார்.

ராமாநுஜனின் நோட்டுப் புத்தகங்கள் கேம்பிரிட்ஜில் உள்ள டிரினிட்டி கல்லூரி நூலகத்தில், அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தன. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜார்ஜ் ஆண்ட்ருஸ் என்னும் அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் 1976-ஆம் ஆண்டில் அவற்றைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அவர்தான் அவற்றை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

ராமாநுஜன் தமது கண்டுபிடிப்புகளின் இறுதி முடிவுகளையே நோட்டுப் புத்தகங்களில் குறித்து வைத்திருந்தாரே தவிர, எப்படி அவர் அந்த முடிவுக்கு வந்தார் என்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இந்தக் கணித உண்மைகளைப் புரிந்து கொள்ளும் பணியில், பேராசிரியர் ஆண்ட்ருகம் இதரக் கணித நிபுணர்களும் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தனர்.

சாதாரண சிலேட்டுப் பலகையில் ராமாநுஜன் கணக்குப்போட்டு பார்த்து உருவாக்கிய கணித விதிகளைப் புரிந்து கொள்ள, அவர்கள் நுட்பமான கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்த வேண்டி இருந்தது. இப்போதுதான் அந்த விதிகள் மற்றும் வாய்பாடுகளின் சிறப்பு அவர்களுக்குப் புலனாகத் துவங்கியுள்ளது.

"கடைசியில், இராமாநுஜனின் சிந்தனைச் செறிவைக் கணித நிபுணர்கள் புரிந்து கொள்ளத் துவங்கியுள்ளனர்" என்று அறிவியல் எழுத்தாளர் ஒருவர் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

பள்ளிக்கூடப் படிப்பு இருக்கும் வரையில் மாணவன், அது முடிந்து விட்ட பின் மாணவன் அல்லன் என்று எண்ணுவது சரியன்று. நாற்பது ஆண்டுகளுக்கு முன், அதாவது நான் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திய பின்னரே, 'மாணவன் என்ற வாசற்படியில்' ஏற ஆரம்பித்தேன்.

—அண்ணல் காந்தியடிகள்





# பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப்பணிகள்

## மாவட்ட ஊரக வளர்ச்சி

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டு உள்ளது. பயன்தாரர்கள் தேர்வு 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டு, தகுதியுள்ள பயன்தாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வங்கிகளில் கடன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 7,141 பயனாளிகளுக்கு ரூ.156.77 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 2,958 நபர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

தொகுப்பு வீடுகள் 1950-இல் 384 கட்டி முடிக்கப்பட்டது. நாளது வரை தொகுப்பு வீடுகளுக்கு ரூ.221.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் 10.00 இலட்சம் செடிகள் உருவாக்கப்பட்டு, 450 எக்டரில் நடவு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் நாளது வரை 420 எக்டரில் 850 இலட்சம் செடிகள் நடப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.28.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 3 ஊராட்சிகளில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4 இலட்சம் பனை விதைகள் சுமார் 211 எக்டரில் நடும் பணி முடிவுற்றது. நாளது வரை 500.40 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 19.126 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்:** 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 106 பள்ளிக் கட்டடங்கள் ரூ.146.550 இலட்சம் செலவிலும், 92 புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ரூ.64.653 இலட்சம் செலவிலும், 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.7.200 இலட்சம் செலவிலும், 404 ஊரகக் குடிநீர்க் குழாய்கள் ரூ.135.670 இலட்சம் செலவிலும், 3,500 தெரு விளக்குகள் ரூ.70 இலட்சம் செலவிலும், 60 சாலைப் பராமரிப்புப் பணிகள் ரூ.180 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சாண எரிவாயுத் திட்டம்:** சாண எரிவாயுத் திட்டத்தில் 1991- 92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. இது வரையில் 709 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

**மாபெரும் திட்டம்:** இத்திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.12.71 இலட்சம் மானியமாக 337 பயன்தாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டோர் 24 பயன்தாரர்கள். அவர்களுக்கு மானியம் ரூ.0.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய குடும்ப அட்டைகள்:** நவம்பர் 1991-இல் குடும்ப அட்டை அல்லாத 1,583 குடும்பங்களுக்கும், டிசம்பர் 1991-இல் குடும்ப அட்டை அல்லாத 2,055 குடும்பங்களுக்கும், புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. நவம்பரில் 1991-இல் 2,959 போலி குடும்ப அட்டைகளும், டிசம்பர் 1991 மாதத்தில் 2,596 போலி குடும்ப அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் 5,101 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ளன.

## சமூக நலத்துறை

**டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்:** இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.35 ஆயிரம் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. உரிய பயன்தாரர்கள் பெரியார் மாவட்டச் சமூக நல அலுவலருக்கு விண்ணப்பித்துப் பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டம்:** ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 3 நபர்கள் பயன்பெற ரூ.3,000 கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் பெரியார் மாவட்டச் சமூக நல அலுவலருக்கு நேரிடையாக விண்ணப்பித்துப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## வேளாண்மைத் துறை

**அரசு விதைப் பண்ணைகளை மேம்படுத்த ரூ.8 இலட்சம்:** பவானியில் உள்ள அரசு விதைப் பண்ணையில் ரூ.2.5 இலட்சம் செலவில் 4 இடங்களில் புது ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப் படவுள்ளன. சத்தியமங்கலத்தில் உள்ள அரசு விதைப் பண்ணையில் ரூ.3 இலட்சம் செலவில் மத்திய விதை சேமிப்புக் கிடங்கு ஒன்றும் அமைக்கப்படுகிறது. இப்பண்ணையில் ரூ.50 ஆயிரம் செலவில் 2 கிணறுகளை ஆழப்படுத்தவும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பவானி சாகரில் உள்ள அரசு விதைப் பண்ணையில் சிமெண்ட் கால்வாய்கள் அமைக்க ரூ.2 இலட்சம் செலவிடப்படும். இப்பணிகள் அனைத்தும் இன்னும் ஓரிரு மாதங்களில் முடிக்கப்படும்.

நெல், சோளம், கம்பு, ராகி, மக்காச் சோளம் ஆகியவற்றில் உள்ள புதிய ரகங்களை விவசாயிகளிடையே பிரபலப் படுத்த ரூ.1.26 இலட்சம் மதிப்புள்ள 13,906 மினிகிட் பைகள் அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ரூ.22 மதிப்புள்ள தலா 4 கிலோ எடை கொண்ட நெல் விதைப் பைகள் ஒவ்வொன்றும் சலுகை விலையாக ரூ.3-க்கும், சுமார் 2 கிலோ வரை எடை கொண்டதும், ரூ.4 முதல் 10 வரை மதிப்பு கொண்டதுமான

ரா. கண்ணன்.இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரியார் மாவட்டம்.

# பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது எப்படி?

**செய்யக்கூடியவை:**

பூச்சி மருந்து கொள்கலனுடன் இணைக்கப் பட்டுள்ள குறிப்பேடுகளை உபயோகிக்குமுன் கவனமாகப் படிக்க வேண்டும்.

மருந்து தெளிப்போர் முகத்தை முறைத்தும், கண்ணாடி அணிந்தும் மருந்து தெளிக்க வேண்டும்.

ஒரு வேளை பூச்சி மருந்துடன் பூஞ்சாணக் கொல்லி சேர்த்து தெளிக்க வேண்டியிருந்தால் அதனுடன் இணக்கமான பூஞ்சாண மருந்துகளைத் தான் கலந்து தெளிக்க வேண்டும்.

அதிகாலை வேலைகளிலும், மாலை வேளை களிலும் மட்டும் பூச்சி மருந்து தெளிக்கவோ, தூவவோ செய்ய வேண்டும்.

தெளிப்பானுக்குத் தக்கவாறு மருந்துக் கரை சலைத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

மருந்தடிக்கும் முன்பும், பின்பும் தெளிப்பான் களை நன்கு கழுவ வேண்டும்.

மருந்து தெளித்த பின் கை, கால்களைச் சோப்புப்போட்டு நன்கு கழுவிய பிறகு மற்ற வேலைகளைச் செய்ய வேண்டும். கையுறைகள், பாதுகாப்பு உடைகள் போன்றவற்றையும் நன்கு கழுவி உலர்த்த வேண்டும்.

மருந்தடித்த வயலில் தெளிக்கப்பட்ட மருந்து, தேதி மற்றும் பூச்சிக்கொல்லிகளின் அளவுகளைக் கையேடுகளில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பூச்சி மருந்தடிப்போர் அடிக்கடி தங்கள் உடல் நிலையை மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

திரவ மருந்துகளையும், திட மருந்துகளையும் தனித்தனியே சேமிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லி மருந்துகளை, குளிர்ந்த உலர்ந்த நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்கில்தான் சேமிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லிகள் மிகவும் விலையுயர்ந்த பொருள். அவைகளைப் பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளில், தேவை எற்பட்டால் மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

**செய்யக்கூடாதவை**

பூச்சி மருந்துகளை வீட்டில் உபயோகிக்கும் மருந்துகள், உணவுப் பண்டங்களின் அருகில் வைக்கக்கூடாது. குழந்தைகள் கைக்கு எட்டாத வாறு வைக்கவேண்டும்.

பூச்சி மருந்தை நீரினில் இட்டுக்கலக்கும்பொழுது கைகளை இட்டுக்கலக்கக்கூடாது. வயதில் சிறிய வர்களைப் பூச்சி மருந்து தெளிக்கப்பயன்படுத்தக் கூடாது.

காற்றடிக்கும் திசைக்கு எதிராகப் பூச்சி மருந்து தெளிக்கவோ, தூவவோ கூடாது.

பூச்சி மருந்து தெளிக்கும்பொழுது உண்ணுதல், புகைபிடித்தல், வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சி மருந்துகளைக் கலந்து தெளிக்கக்கூடாது.

குழல் மூலம் பூச்சி மருந்தை உறிஞ்சக் கூடாது.

தெளிப்பான் அடைபட்டிருந்தால் நாஸிலை வாயினால் ஊதக்கூடாது.

மருந்தடிக்கப்பட்ட வயலுக்கு அருகில் ஆடு, மாடுகளை மேயவிடக்கூடாது. மருந்தடிக்கப்பட்ட காய்கறிச் செடி அல்லது பழ மரங்களிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்குக் காய் அல்லது பழங்களைப் பறிக்கக்கூடாது.

பூச்சி மருந்து தெளித்த பின் டப்பாக்களைப் பயன்படுத்தக்கூடாது.

எஞ்சிய பூச்சி மருந்துக் கரைசலை ஒருபோதும் சேமித்து வைக்கக்கூடாது.

நீர் நிலைகள், குடிநீர்ப் பகுதிகள், கழிவு நீர், வாய்க்கால், நீர்ப்பாசன வாய்க்கால் போன்றவற்றின் அருகில் மருந்துக் குப்பிகளை ஏறியவோ, புதைக்கவோ கூடாது.

காலக்கெடு முடிந்த பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாது.

புழங்கும் இடங்களிலும், சேமிப்பு அறை களிலும் பூச்சி மருந்து கொட்டி விட்டால் திரவ மருந்தாக இருந்தால் உறிஞ்சக்கூடிய ரம்பத் தூளைத் தூவி திட வடிவமாக்கி அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை அடையாளமிட்ட பாத்திரத்தில் சேகரித்து சுண்ணாம்பு கலந்து நச்சு முறிவு செய்யவேண்டும்.

தொடர்ந்து ஒரே ஆள், பூச்சி மருந்து தெளிக்கக்கூடாது.

பூச்சி மருந்து தெளிப்போர் தொடர்ந்து ஒரே ஆடையை அணியக்கூடாது.

**- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம்.**



# நூல் நயம்

### நீரிழிவுக்குச் சித்த மருந்துகள்

**ஆசிரியர்:**
டாக்டர் பொ.இரா. இராமசாமி எம்.டி.
**வெளியிட்டோர்:**
அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24

பக்கம்:188 விலை:ரூ.20/-

நீரிழிவு பற்றியும் அதற்குரிய நிவாரண முறைகள் பற்றியும் டாக்டர் பொ.இரா. இராமசாமி எழுதிய இந்த நூல் மருத்துவ அடிப்படையில் மட்டுமல்லாமல், இலக்கியம், வரலாறு, சோதிடம், ஆன்மீகம், யோகம் ஆகிய அடிப்படைகளிலும் நீரிழிவை ஆய்கிறது. மேலும் சித்த மருந்துகள் மட்டுமன்றி, ஆயுள்வேத மருந்துகளையும் அறிமுகம் செய்கிறது. நீரிழிவைப் பற்றிய அரிய நூல் இந்த நூல் எனலாம். 'ஒவ்வொரு நோய் பற்றியும் இப்படி நூல் வருமானால், அது மருத்துவர்க்கும், மாணவர்க்கும் மட்டுமன்றி மற்றவர்க்கும் மாபெரும் பயனளிக்கும்.

—இரா. முத்துராமலிங்கம்

### மூன்றாம் இரவு முனை

**ஆசிரியர்கள்:**
நித்யாமூர்த்தி,
ஆருத்ரா பாலன்
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:212 விலை:ரூ.21/-

திருமதி நித்யா மூர்த்தி எழுதிய மூன்றாம் இரவு நாவலும், திரு. ஆருத்ரா பாலன் எழுதிய மூன்றாம் முனை என்ற நாவலும் இணைந்த ஒரே நூல் இது.

ஆதரவற்ற பெண்ணான சித்ரா வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு, எதிர்ப்படும் சோதனைகளை வென்று இறுதியில் வெற்றிவாகை சூடுவதை விறுவிறுப்புடன் சொல்லும் நாவல் மூன்றாம் இரவு.

மூன்றாம் முனை நாவலின் நாயகி சீதாவோ இராமாயண நாயகியின் பெயரைப் பெயரளவுக்குக் கொண்டிருப் பினும், கணவன் செய்த அநியாயத்திற்குத் துணை போகாமல், அஞ்சி நடுங்கிப் பணிந்து போகாமல், தலைநிமிர்ந்து எதிர்த்துப் போராடி வென்று தன் தனித் தன்மையைத் தக்க வைத்துக் கொண்ட பாரதி கண்ட புதுமைப்பெண். ஆண் ஆதிக்கத்தைத் தலைகுனிந்து ஏற்றுக் கொண்ட பெண்களின், மத்தியில் சீதா போன்ற பெண்கள் உருவாகத் தூண்டும் புதுமை நாவல்.

—கருமார்

### மகிழ்நன் ஆராய்ச்சிக் கட்டுரைகள்

**ஆசிரியர்:** க.ப. சந்தோஷம்,
**வெளியிட்டோர்:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
அஞ்சல் பெட்டி எண் 501,
பார்க் டவுன், சென்னை-600 003.

பக்கம்:101 விலை:ரூ.20/-

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தயாரிப்பான 'செந்தமிழ்ச் செல்வி' திங்களிதழில் 'மகிழ்நன்' எனும் பெயரில் நூலாசிரியர் எழுதிவந்த அரிய தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

தனக்கென ஒரு தனி நடையை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் ஆசிரியர்; ஆங்கில மொழிப் புலமையும் மிக்கவராதலின், ஆய்வுக் கட்டுரைகளில் ஆழ்ந்த ஞானம் வெளிப்படுகிறது; 50 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது பதிப்பாக இந்நூல் வெளி வருவது வேதனைக் குரியது.

சொற்சுவை, பொருட்சுவை, நகைச் சுவை மிகுந்த இதுபோன்ற நூற்கள் - மொழி ஆர்வலர்களால் பெரிதும் ஆதரிக்கப்படவேண்டும்.

—'சோழராஜா'

### சிறுவர்க்கான இராமானுசம் எண்கள்

**ஆசிரியர்:** டாக்டர் மெ. மெய்யப்பன்
**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்
சென்னை-600 098.

பக்கம்:74 விலை:ரூ.8/-

தமிழகத்தில் பிறந்து 32 வயதிற்குள் உலகளாவிய புகழையும், பட்டங்களையும், விருதுகளையும் சுமந்து மறைந்த கணிதமேதை இராமானுஜம் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களும், கணிதவியல் பற்றிய எளிய குறிப்புக்களும் கொண்ட நூல். கணிதத்தில் முதன்மை நிலை அடைய விரும்புவோர்க்கு வழிகாட்டியாகத் திகழவல்ல எளிய நூல்.

### வினாக்களும் சுரதாவின் விடைகளும்

**ஆசிரியர்:** உவமைக் கவிஞர் சுரதா
**வெளியீடு:** சுரதா பதிப்பகம்
56-அ, இலட்சுமணசுவாமி சாலை,
கே.கே. நகர்,
சென்னை-600 078.

பக்கம்:176 விலை:ரூ.23/-

நாடறிந்த கவிஞர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள். அவர் தமது கவிதை வாயிலாகத் தனி முத்திரை பதித்த வித்தகக் கவிஞர். அவாது கவிதை சித்திரக் கவிதை மட்டுமல்ல, விசித்திரக் கவிதை மட்டுமல்ல, பேசும் சித்திரமாக விளங்குவதை நாம் கண்டு வருகிறோம்.

பாவேந்தரின் மாணவருள் மூத்தவரான உவமைக் கவிஞரை உலகுக்குக் காட்ட அவரது நேர்காணல் என்னும் பேட்டிகள் பெரிதும் துணை புரிவன என்பது மட்டுமல்ல, கால காலத்துக்கும் நிற்பவையுமாகும்.

1952 முதல் 1991 முடிய கவிஞரது 50 பேட்டிக் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கவிஞரை முதன் முதலில் பேட்டி கண்டவர் நாவலாசிரியர் ஜெகசிற்பியன் பேட்டி வெளிவந்த இதழ் 'சிரஞ்சீவி' (1952). ஒவ்வொரு பேட்டிக் கட்டுரையும் ஒரு காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. 'கல்கி'யில் வெளிவந்த 'கவிதை பிறந்த கதை' யாகட்டும், 'தமிழரசு' இதழில் வெளிவந்த மலரும் நினைவுகளாகட்டும் எல்லாமே கவிஞரின் ஆழ்ந்த புலமையை, அபார நினைவாற்றலை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

பேட்டிக் கட்டுரைகளின் தொகுப்பு நூலாக இது விளங்குவதால், நூலின் தொடக்கத்திலேயே ஒரு அரிய தொகுப்பைத் தந்துள்ளார் கவிஞர். அதுதான், ''தமிழ் வித்துவான் தாண்டவராயரின் வினாவிடை முதல் தன்மானக் கவிஞர் சுரதாவின் வினாவிடை வரை (1820-1991)'' என்பது. கவிஞரின் சிறப்பு, இதுவரை யாருமே செய்திராத ஒரு செய்தியை சொல்லுவதுதான். அதற்கு எடுத்துக்காட்டுத்தான் மேற்குறிப்பிட்ட தொகுப்பு.

பேட்டி காண்பது என்பது சாதாரண காரியமல்ல. அதைப்போல பேட்டிக்குப் பதில் சொல்வதும் ஒரு கலைதான். அதை இந்த நூலில் பார்க்கிறோம்.

இளைஞர்கள் இளங் கவிஞர்கள், இதழியல் துறையில் ஆர்வம் செலுத்தும் மாணவர்கள் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும்.

—பி.வி. கிரி



சிறுதானிய விதைப் பைகள் ஒவ்வொன்றும் ரூ.1 வீதமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

**கல்வி உதவித் தொகை - பிற்பட்ட வகுப்பினர்:** பிற்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.1,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.66,246 செலவு செய்யப்பட்டு இதனால் 2,851 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத்திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.10,56;486 செலவு செய்யப்பட்டு 4,509 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.7,47,000 ஒதுக்கீட்டில் ரூ.7,97,226 செலவு செய்யப்பட்டு, 1,021 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**மிகவும் பிற்படுத்தப்பட்டோர்:** பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.2,67,491 செலவு செய்யப்படடு, 5,795 நபர்களும், இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ. 8,00,000 ஒதுக்கீட்டில், ரூ.7,09,604 செலவு செய்யப்பட்டு 2,289 நபர்களும், போஸ்ட்மெட்ரிக் திட்டத்தின் கீழ் ரூ.5,80,000 ஒதுக்கீட்டில் ரூ.4,27,016 செலவு செய்யப்பட்டு, 791 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

## மாவட்டத் தொழில் மையம்

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக டிசம்பர் 1991 திங்கள் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 721 நபர்களுக்கு ரூ.160.35 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இதில் 150 நபர்களுக்கு ரூ.34.28 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 70 நபர்களுக்கு 15.65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## பட்டு வளர்ப்புத் துறை

**பட்டுக் கூடு உற்பத்தி:** 1990-91-ஆம் ஆண்டில் 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1991 வரை 268990.50 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.268.990 இலட்சம் ஆகும்.

நடப்பாண்டில் 600 ஏக்கர்கள் அளவில் மல்பரி பயிர் இறைவைச் சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 601.00 ஏக்கர்களில் மல்பரி இறைவையின்கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கு 180 பயன்தாரர்களுக்கு மல்பரி பயிர்க் கடனும், 360 பயன்தாரர்களுக்குப் பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களுக்கான கடனும், 200 பயன்தாரர்களுக்குப் புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கான கடனும், புதிய கிணறு அமைக்க 12 பேருக்கும், கிணறு ஆழப்படுத்த 8 பேருக்கும், கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சிப் பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி நடைபெற்று பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது. பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு டிசம்பர் 1991 வரை ரூ.30 ஆயிரம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கு 15 பட்டு நூற்பகங்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## குடும்ப நலத்துறை

கடந்த ஆண்டு டிசம்பரில், 1,249 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயனடைந்துள்ளனர். நடப்பாண்டில் டிசம்பர் 1991 வரை 10,670 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறியீடான 15,000-இல் இது 71.1 சதவிகிதச் சாதனையாகும்.

இம்மாவட்டத்தில் 66 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 8 அரசு மருத்துவமனைகள், 64 தனியார் மருத்துவமனைகள், 2 தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் குடும்ப நலத் திட்டம் செம்மையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.





# பனிமலரைச் சூடுதற்குக் கட்டணமா?

## புலவர் தமிழ்ப்பித்தன்

அன்பிருக்கும்; அருளிருக்கும்; அமைதி கொஞ்சும்
அழகிருக்கும்; எவரிடத்தும் இனிதாய்ப் பேசும்
பண்பிருக்கும்; பரிவிருக்கும்; பாசம் பொங்கப்
பழகுகின்ற இயல்பிருக்கும்; கல்வி கற்ற
தென்பிருக்கும்; தெளிவிருக்கும்; இளமை பொங்கும்
திறமிருக்கும்; தரமிருக்கும்; என்றா லுந்தான்
கன்னிமயில் புழுங்குகின்றாள் மணத்தை எண்ணி!
கனவுலகில் மிதக்கின்றாள் நித்த நித்தம்.

வரனுக்குத் தட்சணைகள் வழங்கு தற்கே
வகையில்லை அவள்வீட்டில்; அதனால் அன்னாள்
இரவெல்லாம் கண்ணீரை அருவி யாக்கி
இதயத்தை உலைக்களமாய் விரைவில் மாற்றி
உரமில்லா வயல்போலும் செழிப்பே இன்றி
உணவில்லாச் சிறுகுழவி போலே நொந்து
உறவெல்லாம் பகையென்றே எண்ணிச் சோர்ந்து
உருகுகிறாள்; அவள்துன்பம் இமயம் ஆகும்!

ஏழையராய்ப் பிறந்தவள் தவறோ? கொஞ்சும்
இளமையிலே நீந்துவதும் தவறோ? மின்னும்
மாழையைப்போல் நற்குணங்கள் பெற்ற தெல்லாம்
மங்கையவள் செய்ததொரு தவறோ? துன்பப்
பீழையிலே நெளிவதுவும் தவறோ? நித்தம்
பெருமூச்சை உதிர்ப்பதுவும் தவறோ? நாட்டில்
கோழைமனம் கொண்டிருக்கும் ஆண்கள் கூட்டம்
குவிந்ததுதான் மாப்பெரிய தவறே ஆகும்!

இனிக்கின்ற சர்க்கரையை, பாகை உண்ண
இவ்வுலகம் வரிவிதித்தல் நியாயம் ஆமோ?
பனிமலரைச் சூடுதற்கே கட்ட ணங்கள்
விதிப்பதுதான் எவ்வாறு நேர்மை ஆகும்?
கனிபோன்ற கன்னிகையை மணமே செய்யக்
காசுபணம் கேட்பதுதான் குற்றம் அன்றோ?
இனிமேலும் இளைஞர்களே உறுதி கொள்வீர்
''இழிவான வரதட்சணை கேளோம்'' என்றே!

## மாணவர் பக்கம்

# முதன் முதலில்

அரசுப் பணிகளுக்காக ராபர்ட் கிளைவ் 1760-இல் தபால் முறையைத் தொடங்கினார். 1837-இல் மக்களுக்கும் இவ்வசதி கிடைத்தது.

1852-இல் சிந்து மாகாணத்தில் முதல் தபால் தலை வெளியிடப்பட்டது. 1911 பிப்ரவரி 18-ஆம் தேதி முதன் முதலில் விமானத்தில் தபால் எடுத்துச் செல்லப்பட்டது.

1851-ஆம் ஆண்டு தந்தி முதன் முதலில் வந்தது. 1867 முதல் நாடு முழுவதும் அது விரிவாக்கப்பட்டது.

முதல் பத்திரிகை 'பெங்கால் கெஜட்'. இது, 1780-இல் கல்கத்தாவில் வெளியிடப்பட்டது. ஜேம்ஸ் ஹிக்கி இந்த இதழை நடத்தினார்.

இந்தியரால் தொடங்கப்பட்ட முதல் பத்திரிகை 1816-இல் வெளிவந்தது. கங்காதர் பட்டாசார்ஜி நடத்திய இதன் விலை அப்போதே ஒரு ரூபாய்.

1822-இல் 'மும்பை சமாசார்' என்ற குஜராத்தி மொழிப் பத்திரிகை வெளிவந்தது. 1832-இல் அது நாளிதழாயிற்று. இன்று 'பம்பாய் சமாசார்' என்ற பெயரில் வரும் நாளிதழின் முன்னோடி அது.

வானொலி 1927-இல் தனிப்பட்டவர்களால் தொடங்கப்பட்டது. அரசு அதனை மேற்கொண்டு 1930 முதல் இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ் என்ற பெயரில் நடத்தியது.- 'ஆல் இந்தியா ரேடியோ' என்ற பெயர் 1936-இல் ஏற்பட்டது.

தொலைக்காட்சி 1957 செப்டம்பரில் அமைக்கப்பட்டது. அப்போது பள்ளிகளுக்கும், கிராமங்களுக்கும் மட்டுமே அது நிகழ்ச்சிகளை ஒளி பரப்பியது.

1965-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்தான் எல்லோருக்கும் பயன்படும் பொது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மாலையில் மூன்று மணி நேரம் மட்டுமே நிகழ்ச்சிகள் இருந்தன.

பம்பாய்த் தொலைக்காட்சி நிலையம் 1972 அக்டோபர் 2-ஆம் தேதி செயல்படத் தொடங்கியது. 1976-இல் வர்த்தக ஒளிபரப்பு தொடங்கியது.

இந்தியா 1000 சுவையான செய்திகள்' என்னும் நூலிலிருந்து.





### திருக்குறள் இரட்டையர்!

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வடசிறுவலூர் திருவள்ளுவர் மன்றச் சிறப்பு உறுப்பினர்கள் ச. யுவராசன், ச. குமரகுருபரன் இருவரும் சகோதரர்கள். 1,330 அருங்குறளையும் அப்படியே ஒப்புவிக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல இலக்கிய அமைப்புகளில் இவர்கள் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

ச. யுவராசன் திருச்சிற்றம்பலம் (வானூர் வட்டம்) காந்தி மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படிக்கிறார். ச. குமரகுருபரன், கோட்டக் குப்பம் அரசு உயர் பள்ளியில் 9-ஆம் வகுப்பு படிக்கிறார்.

முதலில் இவர்கள் நாள்தோறும் காலையிலும், மாலையிலும் ஐந்து ஐந்து குறள்களாக மனப் பாடம் செய்தனர். பிறகு எல்லாவற்றையும் மனப் பாடம் செய்தனர். அதிகாரத்தைச் சொல்லிக் கேட்டாலும் சரி அல்லது குறள் எண்களைக் கேட்டாலும் சரி. உடனே அதற்குப் பதில் சொல்கிறார்கள்.

### முதல் வகுப்புப் படிக்கும் குழந்தை முதலில் வந்தது

செட்டிநாடு வித்யாஸ்ரமத்தில் முதல் வகுப்பில் பயிலும் குழந்தை அருண் பாலாஜி. வயது ஐந்தரைதான் ஆகிறது. ஆனால் இவன் எல்லோரையும் மூக்கின்மேல் விரலை வைக்கும்படி ஒரு சாதனையே புரிந்துவிட்டான்!

சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் 5,600 மீட்டர் தூரத்தை (112 லாப்) 3 மணி, 5 நிமிடம், 51.44 விநாடிகளில் நீந்தி முடித்ததுதான் அந்தச் சாதனை!

இந்தச் சிறிய வயதில் இப்படி ஒரு பெரிய சாதனை நிகழ்த்தியிருப்பதை யார்தான் பாராட்டாமல் இருப்பார்கள்!

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ரவீந்திரநாத் இந்தப் போட்டியைத் தொடங்கி வைக்க, தமிழ்நாடு காவல்துறை ஐஜி (குற்றப்பிரிவு) திரு. இ.ஹரிஹரன் இந்த இளம் நீச்சல் வீரருக்குப் பரிசுகள் வழங்கினார்.





சுமார் 1,80,000 பேர் புற்று நோய்க்கு ஆளாகியுள்ளனர். இவர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அடங்குவர். இந்த ஆண்டில் அந்நோயிலிருந்து அவர்கள் காப்பாற்றப் படுவர் என்ற மகிழ்ச்சியான செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. இன்னொரு முக்கியமான செய்தி... ஆரம்ப கட்டத்திலேயே இந்நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம், மேலும் தொண்ணூறாயிரம் பேரைக் காப்பாற்றலாம் என்பதே அது.

ஓர் எச்சரிக்கை: பெண்களைக் காட்டிலும், ஆண்களையே புற்றுநோய் அதிக அளவில் பிடிக்கிறது.

# புற்றுநோயைக் குறைப்படுத்தலாம்!

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்?

உடல் என்னும் சுவர் நன்றாக இருந்தால்தான், சித்திரம் என்னும் செயலை நாம் ஒழுங்காகச் செய்ய முடியும்.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில், நம் உடலைக் கவனிக்க மறந்து விடுகிறோம்.

ஆம். எத்தனையோ நோய்கள் நம்மைத் தாக்கி வருகின்றன. சில நம்மையறியாமலேயே நம் உடலில் மறைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் கவனிப்பதில்லை; கவனிக்க நேரமும் இருப்பதில்லை. இவற்றுக்கு எல்லாம் இன்னொரு காரணம், நம்முடைய அலட்சியப்போக்குதான்!

மனிதனைப் பிடிக்கும் நோய்களில் புற்றுநோயும் ஒன்று. புற்றுநோய் என்று சொல்லும்போதே, அது ஒரு பயங்கர நோய் என்று அச்சப்படுகிறோம்.

எந்த நோயும் பயங்கர நோய் அல்ல, தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப் பட்டால்! புற்றுநோய், தொடக்கத்தில் உடலில் ஒரு சிறு புள்ளியாகத்தான் உருவெடுக்கிறது. உடலில் உள்ள திசுக்கள், இயல்பான வளர்ச்சியடைவதற்குப் பதிலாக, அளவுக்கு மீறி வளர்கின்றன. அதாவது, சிறிய புள்ளி, பெரும் புள்ளியாக உருமாற்றம் பெறத் தொடங்குகிறது.

இதில் ஒரு விந்தை என்னவென்றால், தனது உடல் நலத்துக்கு ஏதோ ஊறு ஏற்பட்டிருப்பதாக ஒருவர் தெரிந்து கொள்ளுவதற்குள்ளாகவே, இது நிகழ்ந்து விடலாம் என்பது தான்! இந்த அசுர வேகத்தை நம்முடைய விவேகத்தால் வெல்ல வேண்டும். எப்படி? அதை விளக்கியது அண்மையில் நடந்த ஒரு அரிய கண்காட்சி!

அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையும், இந்தியப் புற்றுநோய்க் கழகமும் இணைந்து நடத்திய, புற்றுநோய் சிறப்புக் கண்காட்சிதான் அது.

கண்காட்சிக்குள் சென்று அங்கே உள்ள படங்களையும், பாடங்களையும் பார்த்தபோது, பல விவரங்களை, விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு புள்ளி விவரம், நமக்குப் பள்ளிப் பாடமாய் அறிவுறுத்துவதை ஒரு கையேட்டிலிருந்து அறிகிறோம்.

தற்சமயம் ஒவ்வோராண்டும், ஒவ்வொரு ஆறு புற்றுநோயாளிகளில் இருவர் புற்றுநோயிலிருந்து காக்கப்படுகின்றனர் என்றும், ஆனால் அந்த ஆறு பேர்களில் மூன்று பேரைப் புற்றுநோயிலிருந்து காப்பாற்ற முடியும் என்றும் கூறுகிறது அந்த அறிக்கை.

ஆண்களைப் பொறுத்தவரையில் உண்டாகும் சாதாரணப் புற்றுநோய்கள் எவை தெரியுமா? வாய், அடித்தொண்டையில் ஏற்படும் புற்றுநோய், வயிறு, குடல்கள், ஆசனவாய் ஆகிய ஜீரண மண்டல உறுப்புகளில் உண்டாகும் புற்றுநோய், குரல் வளை, நுரையீரல்கள் ஆகிய சுவாச உறுப்புகளைத் தாக்கும் புற்று நோய், இதுதவிர, உதடுகளில் உறவாடும் புற்று நோயும் உண்டு.

பெண்களுக்கு எந்த வயதிலும் புற்று நோய் வரலாம் என்பதை நாம் கோடிட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் முழுமை அடைய அடைய, புற்றுநோயும் அவர்களை அதிக அளவில் பாதிக்கிறது என்பது, மருத்துவர்கள் கூறும் உண்மை. கருப்பை, மார்பகம், வயிறு, குடல்கள், ஆசனவாய் போன்ற ஜீரண மண்டல உறுப்புகளில் மகளிர்க்குப் புற்று நோய் ஏற்படுகிறது.

மார்பகங்களின் மீது தோன்றும் தசை முண்டுகள் பெரும்பாலும் புற்று நோய் காரணமாக ஏற்படுவதில்லை என்பது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். ஆனால், குறிப்பாக மாதவிடாய்க் காலங்களுக்கிடையில் இரத்தம் வெளிப்படும் போது அல்லது மாதவிடாய் நின்று விட்ட பிறகு இரத்தம் வெளிப்படும்போது மேற்குறிப்பிட்ட அபாய அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று

# திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்

## கதர் கிராமத் தொழில்கள் வளர்ச்சிப் பணிகள்



திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிச் சிறப்பு விற்பனைக் காலங்களில், கதருக்கு 35 சதவிகிதம், கதர் பாலியஸ்டர் ரகங்களுக்கு 30 சதவிகிதம், பட்டு உல்லன் ரகங்களுக்கு 20 சதவிகிதம், சிறப்புத் தள்ளுபடியில் கதர் விற்பனை நடைபெற்றதால், இவ்வாண்டு ரூ.60 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு, ஆண்டுக் குறியீட்டளவான ரூ.56 இலட்சத்தைத் தாண்டிச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் அனைத்து வட்டங்களையும் உள்ளடக்கிய பகுதிகளில் 32 கிராமிய நூற்பு நிலையங்கள் கதர் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 960 மகளிர் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர். மேலும் உற்பத்தியாகும் நூலினைக் கொண்டு 200 நெசவாளர் குடும்பங்கள் கதர் நெசவு செய்து தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் பல்வேறு கிராமியத் தொழில் கைவினைஞர்கள் 77 பேர்களுக்கு ரூ.7.50 இலட்சம் கடனுதவியும், ரூபாய் 1.30 இலட்சம் மானியமும், அளிக்கப்பட்டுள்ளது. ஒரு கைவினைஞருக்கு ரூபாய் 2,500 முதல் ரூ.1,00,000 இலட்சம் வரை தொழிலுக்குத் தகுந்தவாறு கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாரியம் வழங்கும் கடனுதவிக்கு குறைந்த வட்டி விகிதம் 4 சதவிகிதம் ஆகும்.

சாலை ஓரங்களில் காலணி தயாரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் தொழில் செய்யும் ஆதிதிராவிடத் தொழிலாளர்களுக்கு வெயில் மழையிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் ரூ.7,500 மதிப்புள்ள இலவசக் காலணி பணிக்கூடங்கள் வழங்கப்பட்டு, இதன்மூலம் 45 குடும்பங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கதர் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உண்ணா எண்ணெய் சோப்புத் தொழில் அலகு, கைமுறைக் காகித அட்டை உற்பத்தி அலகு, காலணி உற்பத்தி அலகு, குரோம் தோல் பதனிடும் அலகு, மண்பாண்ட உற்பத்தி அலகு, போன்றவை செயல்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம் சுமார் 150 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்து வருகிறார்கள். இவ்வலகுகளின் மூலம் தொழிற்பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 79 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு தொழில்களுக்காகப் பதிவு செய்யப்பட்டு ஆங்காங்கே சிறந்த மு[illegible]ல் செயல்பட்டு வருகின்றன. இ[illegible] களில் சுமார் 1,000-க்கு[illegible] பட்ட கைவினைஞர்கள் உ[illegible] களாகச் சேர்ந்து பயனடைந்து வருகிறார்கள். இக்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமியத் தொழில் வாரியம், மூலதனக் கடன், முதலீட்டுக் கடன், மற்றும் கைவினைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களின் நூதனப் பயிற்சிகளும் அளித்து வருகிறது.



# 1990-91-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

மாண்புமிகு முதல்வர். புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1990-91-ஆம் ஆண்டுகளில் ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளியான தமிழ்த் திரைப்படங்களிலிருந்து கீழ்க்கண்ட விருதுகளுக்குச் சிறந்த திரைப்படம், நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்ய ஆணையிட்டுள்ளார்.

சிறந்த திரைப்படங்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையாக முதல் மூன்று தமிழ்த் திரைப்படங்களுக்கும், சிறப்புப் பரிசு பெறும் தமிழ்த் திரைப்படத்துக்கும் கடந்த ஆண்டில் வழங்கியதைவிட இவ்வாண்டு தலா ரூபாய் 25,000 (ரூபாய் இருபத்தி ஐயாயிரம் மட்டும்) அதிகரித்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதுபோல கடந்த ஆண்டுகளில் வழங்கியது போல் அல்லாமல் பரிசு பெறும் சிறந்த நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் பாகுபாடின்றித் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் வழங்க ஆணையிட்டுள்ளார்.

### இவ்வாண்டு வழங்கப்படவுள்ள திரைப்பட விருதுகள் (விவரம்)

**சிறந்த திரைப்படங்கள்**

1. முதல் பரிசு ... ரூ. 1.25 இலட்சம் ரொக்கம் மற்றும் கேடயம்.
2. இரண்டாம் பரிசு ... ரூ.75,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
3. மூன்றாம் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
4. சிறப்புப் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

**கலைஞர்களுக்கான பரிசுகள்**

1. சிறந்த நடிகர் ... 5 பவுன் தங்கப்பதக்கம்.
2. சிறந்த நடிகை ... "
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) ... "
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) ... "
5. சிறந்த இயக்குநர் ... "
6. சிறந்த கதையாசிரியர் ... "
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் ... "
8. சிறந்த இசையமைப்பாளர் ... "
9. சிறந்த பாடலாசிரியர் ... "
10. சிறந்த பின்னணிப் பாடகர் ... "
11. சிறந்த பின்னணிப்பாடகி ... "
12. சிறந்த ஒளிப்பதிவாளர் ... "
13. சிறந்த ஒலிப்பதிவாளர் ... "
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) ... "
15. சிறந்த ஆர்ட் டைரக்டர் ... "
16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் (ஸ்டண்ட் மாஸ்டர்) ... "
17. சிறந்த நடன ஆசிரியர் ... "

**சிறப்பு விருதுகள்**

1. இராஜா சாண்டோ விருது ... 5 பவுன் தங்கப்பதக்கம்
2. கலைவாணர் விருது ... "
3. அறிஞர் அண்ணா விருது ... "
4. எம்.ஜி.ஆர். விருது ... "
5. பாவேந்தர் பாரதிதாசன் விருது ... "

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திரைப்பட விருதுகளுக்குத் தேர்வுகளைச் செய்து முடிப்பதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் அவர்களது தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு ஒரு தேர்வுக்குழுவை அரசு நியமித்துள்ளது.

**திரைப்பட விருது தேர்வுக்குழு**

1. தலைவர் .. நீதிபதி எஸ். பிரதாப்சிங்
2. உறுப்பினர் .. திரு. கே.வி. மகாதேவன்.
3. உறுப்பினர் .. திரு. ஏ.சி. திருலோகசந்தர்
4. உறுப்பினர் .. திரு. வி. இராமமூர்த்தி
5. உறுப்பினர் .. திரு. எம்.என். நம்பியார்
6. உறுப்பினர் .. திரு. ஆர்.கே. இராமச்சந்திரன்
7. உறுப்பினர் .. திருமதி பண்டரிபாய்
8. உறுப்பினர் .. திருமதி. பி. சுசீலா
9. உறுப்பினர் .. கவிஞர் முத்துராமலிங்கம்
10. உறுப்பினர் .. திருமதி மஞ்சுளா ரமேஷ்
11. உறுப்பினர் .. இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை.



• எவனொருவன் தன் அறிவைக் கொண்டே தன்னைக் காத்துக்கொள்ளத் திறன் உடையவனோ, அவனே உண்மையான கல்வியை அடைந்தவனாவான்.

- சுவாமி விவேகானந்தர்

159892

## தமிழ்ப் புத்தாண்டில்

## பி அண்ட் சி ஆலை

## திறக்கப்படும்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 4.2.1992 அன்று பி அண்ட் சி ஆலையைத் திறப்பது குறித்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், நிர்வாகத்தினர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

வருகிற ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, மூடியுள்ள பி அண்டு சி ஆலையைத் திறக்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது. பி அண்டு சி ஆலையைச் சீரான முறையிலும், இலாபகரமான முறையிலும் நடத்த உரிய திட்டம் வகுப்பதற்கு முத்தரப்புக் குழு ஒன்றை அமைக்க இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

---

தொழில். தானாக வளர்ந்திருக்கும் கற்றாழையில் இருந்து எடுக்கப்படும் நாருக்குக் கைப்பணம் போடத் தேவையில்லாமல் - வருமானத்திற்கு வழி செய்கிறது

தானாகக் கிடைக்கும் கடல் பாசிகள், சிப்பிகள், அச் சிப்பிகளைக் கொண்டு அலங்கார மணிகள், வாயில் தோரணங்கள், தீரைச்சீலை போல் அழகிய கதவுத் தோரணங்கள், சுவர்ச் சித்திரங்கள் எனப் பலப்பல பொருள்கள் செய்யப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதனால் பெறும் வருமானம் பெண்களின் வாழ்க்கையில் நிம்மதியைத் தருகின்றது.

மரப்பிசின்கள், கோந்துகள், அருகம் புல், இயற்கையில் வரப்புகளில் வயல் வெளிகளில் மலை ஓரங்களில் குன்றுகளில் தானாக முளைத்துள்ள துளசி இலை, கீழா நெல்லி, ஆவாரம்பூ, முதலிய இயற்கை மூலிகைகள் சேகரித்தல் சேகரித்த மூலிகைகளைப் பக்குவப் படுத்தல் முதலிய பயிற்சி அளிக்கப் படுகிறது.

இந்த மூலிகைகள் இங்கு விலைக்கு வாங்கப்பட்டு, சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

இலவச அரிய சித்த வைத்திய சிகிச்சை இங்கு நாள்தோறும் நடைபெறுகிறது. ஏழை மக்கள் மற்றும் பொது மக்கள் இங்கு வைத்தியத்திற்கு வருவது நாள் தோறும் அதிகரித்து வருகிறது. இயக்கத்தின் கிராமப் பணியாளர்கள் கிராமங்களிலேயே பாரம்பரிய நல வாழ்வுப் பணியைச் செய்து வருகிறார்கள். இங்கு தயாரிக்கப்படும், 'முடி வளரும் தைலம்', 'முடி உதிர்வதைத் தடுக்கும் தைலம்', சரும வியாதிக்கான சிகிச்சை, நீரிழிவுக்கான தேநீர் சிகிச்சை போன்றவை புகழ் பெற்று வருகின்றன.

இங்கு பயிற்சி பெறும் பெண்கள் தங்கள், தங்கள் ஊர்களிலேயே வைத்தியம் பார்க்கிறார்கள். மூலிகை வைத்தியத்தில் ரகசியம் என்ற வார்த்தைக்கே இங்கு இடமில்லை.

தேள்கடி, பூரான், வண்டுக்கடி, முதலியவற்றிற்கு உடனடி சிகிச்சை தரச் சோலை இயக்கத்தால் பயிற்சி பெற்ற பெண்கள் தங்கள், தங்கள் பகுதிகளிலேயே ஓரளவு வருமானம், பெற்று இதைத் தொண்டாகச் செய்து வருகிறார்கள்.

ஆண்டு முழுவதும், ஆங்காங்கே ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டு, கிராம மக்களிடையே இதன் மூலம் சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை, கல்வியின் இன்றியமையாமை, நட்பு, உதவி செய்து வாழ்தல், முதலிய நல்ல பண்புகளைத் தங்கள் கலாச்சாரக் குழுக்கள் மூலம் கிராமப்புறங்களில் ஏற்படுத்தி வருகிறது.

### முதலீட்டுத் தொழில்கள்

தையல் பயிற்சி, ஆயத்த ஆடை தைத்தல், பூ வேலைப்பாடு முதலியவைகளுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதற்கு ஒரு நாளைக்கு ஐம்பது காசு கட்டணம் வாங்கப்படுகிறது. முதலில் இலவசமாகவே இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. பயிற்சி பெறுபவர் அக்கறைக் குறைவும், கவனிப்புக் குறைவும் பயிற்சியின் நோக்கத்தை நிறைவேற்ற உதவவில்லை. எனவே, கட்டணம் குறைந்த அளவாகவே வாங்கப் படுகிறது.

இங்கு பயிற்சி பெறும் பெண்கள் ஆயத்த ஆடை நிலையங்களில் இன்று வேலை செய்கின்றனர். தனியாகவும், தொழில் செய்து சம்பாதிக்கின்றனர். இதே போல் 'சோலை அச்சகத் தொழில் பயிற்சி நிலையம்' இங்கு ஆரம்பிக்கப் பட்டுப் பெண்களுக்கு அச்சுத் தொழில் கற்றுத் தரப்படுகிறது. இதற்கும் தற்பொழுது நாளொன்றுக்கு ஐம்பது காசு என்று குறைந்த கட்டணம் வசூலிக்கப் படுகிறது. இன்று வேலூரில் உள்ள அச்சகங்களில் பெண்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களை உருவாக்கியதே இச்சோலை நிறுவனம் எனலாம்.

இங்கே சுகாதாரம், கிராம வைத்தியம், சிறுதொழில்கள் முதலியவைகளைப் பற்றி 20-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் சோலை நிறுவனத்தால் அச்சிட்டு எளிய விலையில் விற்கப்பட்டு வருகிறது.

பழரசம் செய்தல் - பழப்பக்குவம் செய்தல், ஜாம் செய்தல், ஊறுகாய் தயாரித்தல், இங்க், பெனாயில், பற்பொடி முதலிய பொருள்கள் செய்யவும் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.

### காளான் உற்பத்தி

எல்லாத் தொழில்களுக்கும் சிகரமாக விளங்குவது 'காளான் பயிரிடுதல்' பயிற்சியாகும். 'காளான் வளர்ப்பை' நேரில் கண்டால் யாரும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போவார்கள்.

காளான் வளர்ப்புக்கு மற்ற பயிர்களைப் போல் மண், தண்ணீர், தேவையில்லை என்பதுதான் அதிசயம், ஏன்? இதற்காகப் பெரிய இடம்கூடத் தேவைப் படாது. வீட்டுத் தோட்டம் அல்லது குடிசையில் ஒரு பகுதியே காளான் வளர்க்கப் போதுமானதாகும்.

இதற்காகப் பெரிய மூலதனம் தேவைப் படாது, சிறிய பிளாஸ்டிக் உறைகள் - கொஞ்சம் வைக்கோல் ஆகியவை இருந்தால் போதுமானது.

ஒரு ஆர்லிக்ஸ் பாட்டில் அளவுள்ள காளான் விதை 6 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. இதிலிருந்து காளான் 21 நாளிலேயே கிடைத்து விடுகிறது. முதலீட்டுக்கு 3 மடங்கு அளவு இலாபம் கிடைக்கிறது. 1000 ரூபாய் முதலீட்டில் 3000 ரூபாய் கிடைக்கிறது.

இதற்கு மாதந்தோறும் ஒரு நாள் பயிற்சியும் இது தவிர, 3 மாதப் பயிற்சியும் நடத்தப்படுகிறது. பயிற்சி பெறுபவர்கள் தங்கள் இடங்களிலேயே வளர்த்து அங்கேயே விற்பனை செய்து கொள்ளலாம்.

காளான் உற்பத்தி செய்யும் பெண்கள் ஒன்று சேர்ந்து காட்பாடியில் காளான் விற்பனை நிலையத்தினை (பதிவு) நடத்தி வருகின்றனர். நல்ல முறையில் இலாபகரமாக இயங்கி வருகிறது.

உலகில் ஆங்காங், சீனா, தாய்லாந்து, கொரியா முதலிய நாடுகளில் காளான் தான் உணவில் முதலிடம் வகிக்கிறது. காளானில்தான் அதிக அளவு புரோட்டின் சத்தும் மற்ற உடல் வளர்ச்சிக்குத் தேவையான அம்சங்களும் அடங்கியுள்ளன.

இது உணவு மட்டுமல்ல; சர்க்கரை வியாதிக்கும், இரத்த அழுத்த நோய்க்கும் சிறந்த நிவாரண உணவாகவும் விளங்குகிறது. நிறைந்த வலிமைக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், காளான் மிகச் சிறந்த உணவாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இது 'சைவ உணவு' என்பதைக் கவனத்தில் பதிப்பது மிக முக்கியம் - ஏனெனில் உணவைப் பற்றிய நமது மக்களின் பார்வையில் பெரிய மாற்றம் தேவைப் படுகிறது. சோலை நிறுவனம் காளான் பயிற்சி மூலம் காட்பாடி, வேலூர் பகுதிகளில் உணவு முறையில் மிகச்சிறந்த புரட்சியை செய்து வருகிறது.

### சோலை இயக்கமும் - பெண்கள் முன்னேற்றமும்

சோலை இயக்கம் தன் இருப்பிடத்தில் இருந்தே சேவை செய்யவில்லை. கிராமங்கள் தோறும் சென்று பெண்களைச் சந்தித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வருவாய்தரும் வழிகாட்டியாக உள்ளது.

காட்பாடி அதன் சுற்றுப்புறங்களில் மட்டும் இதன் சேவை நடைபெறவில்லை. காட்பாடியில் இருந்து சோளிங்கர் வரை சுமார் 200 கிராமங்களில் இது விரிந்து செயல்படுகிறது.

சமுதாய வீணைகள் பெண்கள். அவர்கள் நலம் பெறச் சமுதாயத்தின் புழுதிகளைத் துடைப்பதில் 'சோலை' நிறுவனம் தன்னிகரற்று விளங்குகிறது.

**எஸ்.டி. ராஜேந்திரன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வட ஆர்க்காடு-**
**அம்பேத்கர் மாவட்டம்.**

---

## 1992 ஒலிம்பிக்ஸ் போட்டிகள்

1992 ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் ஸ்பெயின் நாட்டில் நடைபெறவிருக்கின்றன1936-இல் பீப்புள்ஸ் ஒலிம்பிக்ஸ் நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஸ்டேடியம் மற்றும் இதர வசதிகள் அங்கு ஏற்கெனவே இருப்பதால், 1992 ஒலிம்பிக்ஸை நடத்த அந்த நாட்டுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

ஸ்பெயின் நாட்டின் கடற்கரையையொட்டிய சிறு குன்றின் உச்சியில் உள்ள பழைய ஸ்டேடியம் ஒலிம்பிக் விளையாட்டுக்காகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவும், நிறைவு விழாவும் இங்கே நடைபெறும். அதன் அருகிலேயே 17,000 பேர் அமரக்கூடிய வகையில் புதிய அரசாங்கம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. பலவிதமான விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான 44 நிலைக் களன்கள் இங்கு தயார் நிலையில் உள்ளன.

உபயோகமற்ற பழைய தொழிற்சாலைகளும், கிடங்குகளும் அமைந்துள்ள பகுதியை முற்றிலுமாக நவீனமயமாக்கி, விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான "ஒலிம்பிக் கிராமம்" உருவாக்கப்பட்டுள்ளது. கடற்கரையையொட்டி அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் சுமார் இருபதாயிரம் 'அபார்ட்மெண்ட்'கள் கட்டப் பட்டுள்ளன.

ஒலிம்பிக்ஸ் சமயத்தில் நகருக்குள் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, புறநகர்ப் பகுதியில் சுமார் 44 கி.மீட்டர் அளவுக்குப் புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. சுரங்கங்களில் இயங்கும் கன்வேயர் பெல்ட் போல 14,000 மக்களை இடம் விட்டு இடம் அழைத்துப் போகும் பிரம்மாண்டமான திறந்தவெளி எஸ்கலேட்டர்கள் ஸ்டேடியத்தை நோக்கிப் போய் வந்த வண்ணமிருக்கும்.

உலகெங்கிலுமிருந்து சுமார் 4 இலட்சத்திற்கும் அதிகமான பேர் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நேரில் பார்க்க வருவார்களெனக் கணக்கிடப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் தங்குவதற்காக ஓட்டல்களிலும், தனியார் வீடுகளிலும் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

ஒலிம்பிக்ஸ் போட்டியின் ஆரம்ப தின விழா டிக்கெட் கட்டணம் 400 டாலர். இதர நிகழ்ச்சி டிக்கெட்டுக்கள் 27 டாலருக்குக் கிடைக்கும். ஸ்பானிஷ் நகர மக்களுக்கு மட்டும் 80 சதவிகிதம் டிக்கெட்டுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸின் சின்னம் 'கோபி' என்ற நவீன தோற்றமுடைய நாய்க்குட்டி.

—நன்றி: 'கல்கி'

தென்பட்டால், அதனைப் புற்று நோய் என்று கொள்ளலாம்.

புற்று நோய் எப்படி ஏற்படுகிறது? இதை எந்த அறிகுறிகளால் நாம் தெரிந்து கொள்ளலாம்?

1. குடல் அல்லது இரைப்பை செயல் படும் முறையில் மாற்றம்.

2. நெடு நாட்களாக இருந்து வரும் ஆறாத புண் அல்லது காயம்.

3. வழக்கத்திற்கு அதிகமாக, உடலில் எந்தப் பாகத்திலிருந்தும் இரத்தம் கசிதல் அல்லது வெளியேறுதல்.

4. மார்பகத்தில் அல்லது உடலின் மற்ற பகுதிகளில் தடிப்பு அல்லது தசை முண்டுகள் காணப்படுதல்.

5. தீராத அஜீரணம் அல்லது உணவு விழுங்குவதில் தொல்லை.

6. சதை வளர்ச்சி, மரு அல்லது மச்சத்தில் வெளிப்படையான மாற்றம்.

7. இடைவிடாத இருமல் அல்லது தொண்டை கரகரப்பு.

இந்த ஏழு அறிகுறிகள் காணப் படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள் அதனாலேயே, புற்று நோய் வந்து விட்டது என்று பயப்பட வேண்டாம். மேற்கூறிய அறிகுறிகளில் ஒன்று, இரண்டு வாரங்களுக்கு மேல் தொடர்ந்து காணப் பட்டால், உடனே மருத்துவரைப் போய்ப் பார்க்க வேண்டும்.

• சிறுநீரில் இரத்தம் கலந்து வெளிப் பட்டால், உடனடியாக அதைக் கவனிக்க வேண்டும்.

• புற்று நோயின் ஆரம்பக் கட்டத்தில் வலி எதுவும் ஏற்படுவதில்லை.

• எனவே, அபாய அறிகுறிகள் தென்பட்டால், வலி ஏற்படும் வரை காத்திராமல் மருத்துவரின் ஆலோசனை பெறுவதுதான் நல்லது.

• புற்று நோய்ச் சிகிச்சைக்காக வீட்டுச் சிகிச்சை முறைகளையோ அல்லது இரகசிய சிகிச்சை முறைகளையோ கையாள்வது கூடாது.

நுரையீரல் புற்று நோய் தோன்று வதற்கு மூல காரணமே, புகைபிடிப்பது தான் என்பது மருத்துவப் பரிசோதனை களிலிருந்து தெரியவந்துள்ளது.

வாய்ப் புற்று நோயும் பெரும்பாலான வர்களுக்கு வருகிறது. இதற்கு முக்கியக் காரணம், வெற்றிலை பாக்கு புகையிலை போடுவதாகும்.

குடலில் புற்று நோய் ஏற்படக் காரணம் என்ன?

"அதிக அளவு உப்பு, காரம் கொண்ட ஊறுகாய்களைச் சாப்பிடுவதால் குடற் பகுதியில் புற்று நோய் ஏற்படக் கூடுதல் வாய்ப்புள்ள உள்ளன. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. உணவுப் பழக்க வழக்கங் களும் வயிற்றில் புற்று நோய் ஏற்பட முக்கியக் காரணமாக உள்ளது என்றும் தெரியவந்துள்ளது"

அரிசியை அதிக அளவு பயன் படுத்தும் இந்த இரு மாநிலங்களைச் சேர்ந்த ஏழை எளியவர்கள், ஊறுகாய் களையும் அதிக அளவில் பயன்படுத்து வதால், இந்தப் பகுதியில் வயிற்றில் புற்று நோய் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இந்த உணவுகளுடன் புகைப்பிடித் தல், மது அருந்துதல் ஆகியவை புற்று நோய் ஏற்படுவதை விரைவுபடுத்து கின்றன.

"காய்கறிகள், பழங்கள் ஆகிய வற்றைப் பாதுகாக்கத் தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளும், பொது மக்களுக்குப் புற்று நோய் ஏற்படுத்தக் காரண மாக அமைகின்றன. இவையெல்லாம் புற்று நோய் ஏற்பட பல்வேறு காரணங் களாகக் கூடப்பட்ட போதிலும், இயற்கை யிலேயே புற்று நோய்க்கு ஆளாகக்கூடிய தன்மை ஒருவருக்கு இருந்தால், அவருக்கு மேலே குறிப்பிட்ட எந்தவிதமான பழக்க வழக்கங்களோ இல்லாமல் இருந்தால் கூட, புற்று நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது" என்று சென்னை அடையாற்றின் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தின் துணைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

புற்று நோயைக் குணப்படுத்தலாம். அதிவேக விஞ்ஞான வளர்ச்சியில், நவீன சிகிச்சை முறைகளும், சக்தி வாய்ந்த மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இக்காலக் கட்டத்தில், நோயின் ஆரம்பத் திலேயே மருத்துவரை அணுகினால், இந்த அபாயத்திலிருந்து நாம் விடு படலாம்.

"உங்கள் மார்பகங்களை எவ்வாறு சோதிப்பது என்பதைக் கற்றுக் கொள் ளுங்கள். அதற்குச் சில நிமிடங்கள் போதுமானது. தவறாது ஒரு முறை அவ் வாறு செய்யுங்கள் அல்லது இந்தியப் புற்று நோய்ச் சங்க சென்னைக் கிளை யில், (127, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001) விளக்கப் படங் களுடன் கூடிய மடிப்புப் பிரதியைக் (Folder) கேட்டுப் பெறுங்கள். அப்பிரதி யின் பெயர், "You are the first to know" "உங்களுக்குக் கண்டுள்ள புற்று நோயை நீங்கள் தான் முதலில் அறிவீர்கள்" என்பதாகும். அதனைப் படித்துப் பலர் பயனடைந்துள்ளனர். அதுமட்டுமல்ல, பலரது உயிரும் காப்பாற்றப்பட்டிருக் கிறது". என்று இச்சங்கக் கையேடு ஒன்று தெரிவிக்கிறது.

—பி.வி.கிரி

## தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்

இந்து ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றது. அதில் 'தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்' என்ற திட்டம் மிக முக்கியமான திட்டமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) மூலம் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் அதிகப்பட்சம் ரூ:5 இலட்சம் வரை தொழில் தொடங் கக் கடன் உதவி வழங்கப்படுகின்றது. அதாவது, ஓர் இந்து ஆதிதிராவிடர் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தொழில் தொடங்க முன்வருவாரேயானால், அவருக்குத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மானியமாக ரூ.15,000-மும் விளிம்புத் தொகையாக (Margin Money) ரூ.85,000-மும் வழங்குகிறது.

இந்த விளிம்புத் தொகை மிகக் குறைந்த வட்டி விகிதமாக 4 சதவிகித வட்டியுடன் 10 ஆண்டு காலத்திற்குள் சுலபத் தவணைகளில் வசூலிக்கப் படுகிறது. இந்தச் சலுகையைப் பெற ஒருவருடைய குடும்ப வருமானம் ஆண் டிற்கு ரூ.15,000-க்குள் இருக்க வேண் டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு இதுவரை பின்பற்றப்பட்டு வந்தது.

இந்த வருமான வரம்பு காரணமாகப் பலர் இத்திட்டத்தின் பயனை அடைய முடியாமல் உள்ளதை நடைமுறையில் அரசு கண்டறிந்து, இந்த நிலையைப் போக்க வேண்டும் என்ற எண்ணத் துடனும் மற்றும் இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட் டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனும் ஆய்வு செய்து, ரூ. 15,000 என அறிவிக்கப் பட்டுள்ள வருமான வரம்பை முழுவது மாக நீக்கிவிட முடிவுசெய்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட் டுள்ளார். இதனால் பலர் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்.



# மகளிர் நலம்பெற...

கிறிஸ்தியான் பேட்டை -

காட்பாடிக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் சித்தூர் செல்லும் சாலை யில் அமைந்துள்ள சிற்றூர். சோலை இயக்கம்' கிறிஸ்தியான் பேட்டையில் அமைந்து, தொண்டினால் முனைந்து தாய்க்குலத்தின் தாழ்நிலையை உயர்த்தி வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத் துக்கு ஓர் அணிகலனாக விளங்குகிறது.

இந்திய சமூக வாழ்க்கை மேம்பாட்டு இயக்கம் எனப் பொருள்படும். SOCIAL LIFE ANIMATION INDIA (SOLAI) என வழங்கும் இந்நிறுவனத்தை ஏற்படுத்தி, சிறந்த சமூகத் தொண்டராகப் பணி செய்து வருகிறார், 51 வயது இளைஞர் திரு. ஆர்.டி. இராசன்.

இச் 'சோலை' நிறுவனத்தை - இதன் பணிகளை நேரில் சென்று காண்பவர்கள் இதன் செயல்பாடுகளைப் பார்த்து வியந்து நிற்பர்.

இந்திய வரலாற்றில் இதுவரை ஓரங் கட்டப்பட்டு வாழ்க்கைத் தரத்தில் - மனித உரிமைகளில் உரிய இடத்தைப் பெறா திருக்கும் சமூகத் தொகுப்புகளான பெண்கள் - தாழ்த்தப்படும் மக்கள்- கிராமத்து ஏழைகள் ஆகிய பிரிவினரின் மேம்பாட்டுக்கென அவர்களோடு உழைப்பதே 'சோலை' இயக்கத்தின் மையக் குறிக்கோளாகும். இதில் குறிப் பாக அடித்தளத்துப் பெண்களின் மேம் பாட்டு முயற்சிகள், முன்னுரிமை இயக்கமாக விளங்குகிறது. ஆம் பெண் களின் அடிமை நிலையை அகற்றவும், ஆண்களோடு சரிநிகர் சமானமாய் சம்பாதித்து உயரவும் சமூகக் கொடுமை களிலிருந்து மீளவும் சுய கவுரவத்துடன் வாழவும் - இச்'சோலை' நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

1. பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட, வயோதிகத் தாய்மார்கள்

2. சேரிகளில் - கிராமத்துக் குடிசைப் புறங்களில் வாழும் சமூகத்தால் ஒதுக்கப் பட்டுள்ள விதவைப் பெண்கள்.

3. கணவனால் கைவிடப்பட்டு வாழ்க்கையை இழந்து - சமூகத்தால் ஓரங் கட்டப்பட்டுள்ள அபலைப் பெண்கள்.

4. வறுமையில் நொடித்து - வாழ்வ தற்கே அல்லல்படும் குடும்பங்களில் உள்ள திருமணமாகாத இளம் பெண்கள்.

மொத்தத்தில் கிராமத்து ஏழைப் பெண்கள் தான் இச்'சோலை' இயக்கத் தின் முன்னணி உறுப்பினர்கள். இப் பெண்களில் மிகப் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்டவர் மற்றும் சொந்த இடம் கூட இல்லாமல் அரசு தரிசு நிலங்களில் (புறம்போக்கு) குடியிருப்பவர்கள்.

### பணிகள்

60 கிராமப்பள்ளி மையங்கள் வழி யாகத் தற்குறித்தனத்தைப் போக்கும் படிப்பறிவுப் பணி.

பெண்களே பொறுப்பேற்று நடத்தும் கிராம நூலக இயக்கம்.

பெண்கள் சக்தியைக் கிராம அளவில் வட்டார அளவில் ஒன்றுபடுத்தி தலைமைத் துவம் விளக்கும் விழிப்புணர்வுப்பணி.

பாலின் அடிப்படையில் நிலவும் அநீதிகளை உணர்ந்து அவற்றை முறி யடிக்கும் முயற்சிகள் Gender Junction. வலுவான பெண்கள் சங்க (உமா சங்கம்) அமைப்புகள்.

12 வயது முதல 14 வயது சிறுமி களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி.

பெண்கள் வேலைவாய்ப்புக்கான செயல்பாடுகள்.

சோலை இயக்கம் சிறுசிறு தொழில் களின் மூலம் பெண்கள் சம்பாத்தியத்தை முதலில் சாத்தியமாக்குகிறது; 21 வகை யான சிறு சிறு தொழில்களைப் பெண்கள் மத்தியிலே ஏற்படுத்தி உள்ளது; இதனால் இவர்கள் பெறும் வருமானம் முதலில் மன நிம்மதியை - மகிழ்ச்சியை ஏற்படுத்து கிறது; வாழ்க்கையின் கவலைகள் வரு மானத்தால் மாற்றம் பெறுகிறது.

ஓர் விதவைப் பெண் இங்கே நுழையும்போது இருக்கிற சோகம் கப்பிய- விரக்தியான முகமும் - மிரட்சியான கண்களும் சிறிது காலத்தில் மழையில் நனைந்த வாடிய பயிர் பசேலென்று துளிர்ப்பது போல் - ஓர் பத்திர உணர்ச் சியை - வாழ்க்கையில் துளிர்ப்பை உணர் கின்றனர்.

அப்படி என்ன தொழில்கள் எவ்வளவு மூலதனம் தேவை?

மூலதனமே தேவையில்லாத வருவாய் தரும் தொழில்கள், சொற்ப மூலதனத் தில் (ரூ.100 முதல் 1000 வரை) நல்ல வருவாய் தரும் தொழில்கள் - இதில்தான் சோலை நிறுவனத்தின் சிறப்பு அடங்கி இருக்கிறது.

### மூலதனம் இல்லாமல் வருமானம்

வாழை - கற்றாழை முதலியவைகளில் இருந்து நார் உரித்தல் பயிற்சி அளிக்கப் படுகிறது. அவரவர் வாழும் இடத்தில் வீணாகும் வாழை மரத்துப்பட்டைகள் அதைச் சேகரித்து அதிலிருந்து உரிக்கப் படும் நார்களை உற்பத்தி செய்யும்










# ஏழை எளியவர்களின் இலட்சோப இலட்சம் இல்லங்களில் ஒளியேற்றிட அயராது பாடுபடுவோம்!

## மாண்புமிகு முதல்வர் உரை:

**சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் (7.2.92)**

**வா**ழ்நாளெல்லாம் தொண்டு செய்து, பழுத்த தந்தை பெரியாரைப் போற்றுகிற தமிழக மக்களால்; வாழ்நாள் முடியும் வரை மக்களுக்கு உழைத்த பேரறிஞர் அண்ணாவைப் பூஜிக்கிற தமிழக மக்களால்; 'இறந்தும் மக்கள் மனதில் இறவாமல் வாழுகிற புரட்சித் தலைவரின் புகழ் பாடுகிற தமிழக மக்களால், தங்கள் சகோதரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன்; மக்கள் ஆதரவு பெற்ற ஒரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளராக, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளேன்; இந்த மாநிலத்தின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி, எனப் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளேன். எனவே, அந்த மக்களுக்கு வாழ்வளிக்கிற வழிகளை, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற பணியினை, அவர்களது எதிர்காலத்திற்கு உத்தரவாதம் வழங்குகிற முயற்சியினை, எவர் தடுத்து நிறுத்த முயன்றாலும், அவர்களை, அவர்களது எதிர்ப்பை, உடைத்தெறியத் தயங்கமாட்டேன் என்பதை இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

**க**ர்நாடக வெறியர்களின் வன்முறை காரணமாக, தமிழகத்திற்கு ஓடி வந்த தமிழ்ச் சகோதர சகோதரிகளுடைய நிலைமைகளைச் சரி செய்யவும், அவர்கள் திரும்ப கர்நாடகத்தில் வாழ்வதற்கு வழிவகை செய்யவும், நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மேலும் அவர்கள் இழந்த சொத்துக்களுக்குரிய நஷ்ட ஈட்டினைப் பெற்றுத் தருவதினையும், அவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பினை வழங்குகிற பணியினையும், நாம் மேற்கொண்டு வருகிறோம்.

★ ★ ★

**ம**துவை விலக்கி மனித இனத்தைக் காக்க, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த உடனே, மலிவு விலை மதுவை ஒழித்த மகத்தான சாதனையை இம் மாமன்றம் நன்கறியும். இவ்வாறு செய்வதன் மூலம் அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நட்டம் என்றாலும்கூட, அதைப் பொருட்படுத்தாது மக்கள் நலமே எங்களின் முன்னுரிமையாக இருந்தது. மலிவு மதுவை ஒழித்த சூட்டோடு சூடாக, கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடும் என்று எதிர்பார்த்தார்கள். ஏசினார்கள். பேசினார்கள். இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், கள்ளச் சாராயம் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும், சிலர் இல்லை, இல்லை, தாராளமாகக் கிடைக்கிறது; அண்டை மாநிலத்திலிருந்து வருகிறது; ஏராளமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், எதார்த்தமாகப் பேச விரும்புகிறேன். கள்ளச் சாராயம் முழுக்க முழுக்க ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதைவிட, பெருவாரியாக நிறுத்தப்பட்டுவிட்டது என்பதே உண்மை. அங்கும் இங்கும், சிற்சில இடங்களில் கள்ளச் சாராய நடமாட்டம் இருக்கிறது; இருக்கக்கூடும் என்பதை உணர்கிறேன். இது எப்பாடுபட்டாவது முழுவதும் ஒழிக்கப்படவேண்டும்; தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு துடிப்பாக இருக்கிறது. இதற்கென நியமிக்கப்பட்ட மதுவிலக்குப் பிரிவுக்

காவல் துறையினர் முடுக்கிவிடப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியாளர்களும், காவல்துறைக் கண் காணிப்பாளர்களும் தக்க வகையில் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். மதுவிலக்கை அமலாக்குவதில் தீவிரம் காட்டிச் செயல்படுத்தும் அதே நேரத்தில், குடிப்பது தீது, அது குடியையே கெடுத்துவிடும் என்ற சித்தாந்தத்தைத் தீவிரப்படுத்த, மாநில மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரச்சாரக் குழு, என் தலைமையில் கூடி, அரும்பெரும் ஆலோசனை களைத் தந்துள்ளது. அவை செயல் வடிவம் பெற்று வருகின்றன. இதற்கெனத் தரமான நாட கம், திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளு கிறேன். குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களை, அக்கொடிய பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மையங் களை நிர்மாணிக்கவும் தீர்மானித்துள்ளோம். சுருங்கக் கூறின் இத்திட்டம் நிறைவேற, மக்கள் ஒத்துழைப்பும், ஈடுபாடும் வெகுவாகத் தேவை.

★ ★ ★

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழ் நாட்டுக் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்போ, கட்டுப்பாடோ இன்றி, வெகு சாதாரணமாகத் தங்களது சட்ட விரோத, வன்முறைச் செயல்கள், மற்றும் கள்ளக்கடத்தலை நடத்திக் கொண்டிருப் பதை உணர்ந்த இவ்வரசு, இதற்கு ஒரு முடிவு கட்டும் வகையில், இவ்வரசு பதவி ஏற்ற நாள் முதல் பல்வேறு தீவிர மற்றும் திடமான நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது. அந்த நடவடிக்கை களின் ஒரு பகுதியாக, முதன் முதலில் இந்தியக் கடற்படை (Navy) மற்றும் கடலோரப் பாது காப்புப் படையினரின் (Coast Guard) உதவியுடன், கடலில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. தமிழக மீனவர்கள் உட்பட எவரும் கடலில் இந்திய எல்லையைத் தாண்டிச் செல்வதும், ஊடுருவல் புரிவதும், இனியும் இயலாது என்ற அளவில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளில், இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் நடமாட்டம் புரிவதைக், கண்டுபிடித்து ஒடுக்கும் பொருட்டு, தமிழக மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. இவ்வடையாள அட்டைகள் இல்லாத மீனவர்கள், கப்பற்படை மற்றும் கடலோரக் காவல் படையினரால் பிடிக்கப்பட்டு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்படும் முறை செயல் பாட்டில் உள்ளது. மேலும், அந்நியரின் படகோ, அல்லது விசைப்படகோ நடமாடுவதைத் தடுக்கும் பொருட்டு, தமிழக மீனவர்களின் படகுகளுக்கு வரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு எண் பொறிக்கப்படாமல் நடமாடும் படகுகள், இனம் கண்டு கொள்ளப்பட்டுப் பறிமுதல் செய்யப் படுகின்றன.

★ ★ ★

தற்போது தமிழ்நாட்டில் சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற அளவில் உள்ளது. அதே நேரத்தில் மத்திய அரசு நமக்கு வழங்கக்கூடிய அரிசியின் விலையும், இதர மாநிலங்களில் உள்ள விநியோக விலையும் பின் வருமாறு அமைந்துள்ளது:- கிலோ ஒன்றுக்கு ரூ.

| | |
|---|---|
| மத்திய அரசு விலை | ... 3.77 |
| ஆந்திரப்பிரதேசத்தில் விற்கப்படுகிற விலை | ... 3.50 |
| கர்நாடகத்தில் விற்கப்படுகிற விலை | ... 3.50 |
| கேரளத்தில் விற்கப்படுகின்ற விலை | ... 3.15 |
| மேற்கு வங்காளத்தில் விற்கப்படுகின்ற விலை | ... 4.61 |
| ஒரிஸ்ஸாவில் விற்கப்படுகின்ற விலை | ... 4.32 |

அனைத்து மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டில்தான் சாதாரண ரக அரிசி விலை மிகக் குறைந்த அளவான கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்று விநியோகம் செய்யப் படுகின்றது. இவ்வளவு கடுமையான நிதி நெருக் கடி இருந்தபோதிலும், தமிழக அரசு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். காட்டிய பாதை யில், அதாவது சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்தக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படை யில், தொடர்ந்து சாதாரண ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்று நிர்ணயித்துள்ளது.

எங்களுடைய ஆட்சி யிலும், சாதாரண ரக அரிசியின் விலை தொடர்ந்து ரூ.2 என்ற வகையிலே எந்தவித மாற்றமும் இல்லாமல், பொது விநியோக முறை மூலம் வழங்கி வருகிறோம். சன்னம், மிகச்சன்ன ரக அரிசி விலையைப் பொறுத்த வரையில், மத்திய அரசு வெளியீட்டு விலையை உயர்த்தியுள்ள தனால், வேறு வழி இல்லாமல் அந்த ரக அரிசி விலையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற் பட்டது.

தமிழக அரசுதான் இந்தியாவிலேயே முன்னோடி யாக ஒரு சிறப்பான முயற்சி எடுத்து, 18,000 டன் பாமாயில் வெளிநாட்டிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. இதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஒதுக்க இயலாது என்ற ஒரு பிரச்சினையையும் கடந்து, அந்நியச் செலா வணியைப் பெறுவதற்கான ஒரு சிறப்பான முயற்சியை ஏற்படுத்திக் கொடுத்து, 12,000 டன் பாமாயிலை மலேசியாவிலிருந்து பெற்று அது விநியோகிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,000 டன் பாமாயில் வெகுவிரைவில் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும். உள்ளபடியே வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு சிறப்பான முயற்சி எடுக்கப்படவில்லை.

மேலும் தமிழக அரசு நேரடியாக இறக்குமதி செய்துள்ள பாமாயில் விலையை, கிலோ ஒன்றுக்கு ரூ.22.50 என்று நிர்ணயித்து விநியோகம் செய் துள்ளது. மத்திய அரசு தொகுப்பிலிருந்து நிர்ண யித்துள்ள விலை, கிலோ ஒன்றுக்கு ரூ.25 என்று இருக்கின்றது.

★ ★ ★

இந்த அரசு பொறுப்பேற்ற பொழுது, தமிழகத் தில் இருந்த சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக சோதனை மிகுந்த கடுமையான நிதி நெருக்கடியை, இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற் பட்டது. துவக்கத்திலேயே சுமார் ரூ.898 கோடி பற்றாக்குறையை இவ்வரசு ஏற்க வேண்டியிருந் தது. ஏழை எளியவர்களின் இலட்சோப இலட்சம் இல்லங்களில் ஒளியேற்றி, தாய்மார்களின் துன் பங்களைத் துடைக்கும் நேரத்தில், வருமானம் தந்து கொண்டிருந்த மலிவு விலை மதுக்கடைகளை மூடி விட்டோம். இதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.322 கோடி ஆகும். ஆக மொத்தம் ரூ.1,600 கோடி ஆண்டுத் திட்டத்திற்கு, ரூ.1,220 கோடி பற்றாக் குறையை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பிறகு பல நிதி ஆதாரங்களைத் திரட்ட சிறந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. வணிகவரித் துறையில் கூடுதல் நிதி திரட்டுதல், கள்ளச் சாராய ஒழிப் பினால் IMFS மீது கூடுதல் ஆயத் தீர்வை, மற்றும் விற்பனை வரி பெறுதல், செம்மையான வரி வசூல் செய்தல், சிறுசேமிப்பில் கணிசமான முன் னேற்றம் அடைதல், போன்ற பல்வேறு முயற்சி களை இந்த அரசு மேற்கொண்டது. அதே நேரத் தில் நட்டத்தைத் தடுக்கும் முயற்சியாக, தவிர்க்க முடியாத சில நடவடிக்கைகளான மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பேருந்துக் கட்டணத் தைச் சற்று உயர்த்துவது, போன்றவற்றை செயல் படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதை யெல்லாம் கருத்தில் கொண்டுதான், கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், நடப்பாண்டில் ரூ.1,600 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டினை, இந்த அரசு முழுமையாக வெற்றிகரமாகச் செயல் படுத்தும் என்பதை, நான் இங்கே திட்டவட்ட மாகக் கூற விரும்புகிறேன்.

சிலர் விமர்சிப்பதுபோல, தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களின் மீது அக்கறை இன்றி இந்த அரசு செயல்படுவதாக இருந்தால், இந்த அரசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த திட்ட ஒதுக்கீடான ரூ.1,600 கோடியை, செயல்படுத்த இயலாது என்று முதற் கட்டத்திலேயே கைவிட்டு இருக்கலாம். இந்த முறையைத்தான் முன்பு இருந்த ஆட்சி 1988-89-இல் செய்தது. குடியரசுத் தலைவர் ஆட்சியில், ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.1,457 கோடி என்று திட்ட ஒதுக்கீடு செய்யப் பட்டது. இதனைச் செயல்படுத்த இயலாது என்று கூறி, ரூ.1,457 கோடி என்ற திட்ட ஒதுக் கீட்டினை, ரூ.1,202 கோடி என்று முன்பு இருந்த ஆட்சி மாற்றிக் கொண்டது. இதனை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், நாங்களும் மிகச் சுலப மாக ரூ.1,600 கோடி என்ற நடப்பாண்டின் திட்ட ஒதுக்கீட்டினை, ரூ.1,400 கோடி என்று குறைத்துக் கொண்டு, வரும் ஆண்டில் ஒரு உயர்வு காண்பிப்பதுபோல், ஒரு கண் துடைப்பு வேலை யைச் செய்திருக்கலாம். ஆனால் இந்த அவை யிலும் சரி, மக்கள் மத்தியிலும் சரி, உண்மையான நிலையை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என நான் விரும்புகிறேன். அதைத்தான் மக்களும் என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். எனவே கண் துடைப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் ஒத்துக் கொள்ளப்பட்ட ஆண்டுத் திட்டத்தினை முழுமை யாகச் செயல்படுத்த, அனைத்து நடவடிக்கைகளை யும் நாங்கள் எடுத்திருக்கிறோம். ரூ.1,600 கோடி என்ற ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை முழுமை யாகச் செயல்படுத்த, இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது என் பதை, நான் இங்கே மீண்டும் மீண்டும் வலி யுறுத்திக் கூற விரும்புகிறேன்.




★ ★ ★

இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியிலும், விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரத்தின் வாயிலாக ஏற்படும் நிதிச் சுமையை ஏற்றுக் கொண்டுள்ளது. தற் போதுள்ள சுமார் 4,000 மில்லியன் யூனிட் மின்சாரம் இலவசமாக விநியோகம் செய்யப் படுகின்றது. இதனால் ஆண்டொன்றுக்கு ஏறத் தாழ ரூ.560 கோடி நிதிச்சுமை ஏற்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல முறையில் இயங்கி இதனை ஓரளவிற்கு ஈடுகட்டினாலும், நிகரமாக மாநில அரசு, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.350 கோடி மானியமாக வழங்குவதுடன், மாநில அரசுக்கு மின்சார வாரியத்திடமிருந்து வந்து சேர வேண்டிய ரூ. 100 கோடி வட்டியை யும் விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக் கின்றது. கடுமையான நிதி நெருக்கடியிலும் இதனைக் குறைக்காமல், இந்த அரசு தொடர்ந்து விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஏற்றுக் கொண்டு வருகின்றது.

★ ★ ★

நெல் உற்பத்தியாளர்களுக்கு, மத்திய அரசு பரிந்துரைத்த கொள்முதல் விலையை, இந்த அரசு வழங்கி வருகிறது. கடந்த செப்டம்பர் மாதத்தில் நெல் கொள்முதல் விலை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.25 என்று உயர்த்தப்பட்டது. சாதாரண ரக

நெல்லின் கொள்முதல் விலை, குவிண்டால ஒன்றுக்கு ரூ.205-இல் இருந்து ரூ.230-ஆக நிர்ணயித்தது. அதேபோல் சன்ன ரகத்திற்கு ரூ.215- லிருந்து ரூ.240 ஆகவும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ.225-லிருந்து ரூ.250 ஆகவும் உயர்த்தியது. இந்த விலையை முழுமையாக வழங்குவதோடு, ஊக்கத்தொகையாக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 கூடுதலாக இந்த அரசு வழங்கியுள்ளது. எனவே நெல் உற்பத்தியாளர்களுக்கு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, மிக அதிகமான விலையை இந்த அரசு வழங்கி வருகிறது.

★ ★ ★

**கி**ராமப்புறங்களில் உள்ள நிலமற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற மக்கள் ஆகியோருக்கு, 1992 பொங்கல் திருநாளை முன்னிட்டு இலவச சேலை, வேட்டி வழங்க அரசு ஆணை பிறப்பித்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தேவைப் பட்டியலை ஒட்டி, வருவாய்த் துறை ஆணையர் இத்திட்டத்தினை நிறைவேற்ற, 56,94,681 சேலைகளும், 58,41,551 வேட்டிகளும் தேவை எனக் கூறியுள்ளார். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.42 கோடி.

**சி**றப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில் தொடங்கப் பெற்று, 1992-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுற இருக்கிறது. அனைத்துப் பணிகளும், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில், ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு ரூ.387.24 கோடி ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக, ரூ.194.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் போதிய நிதியை உரிய நேரத்தில் அரசு வழங்கும்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், 7 முக்கிய அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், தொடக்கப் பள்ளிகளுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டுதல், மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் இத்திட்டத்தில் அடங்கும்.

★ ★ ★

**செ**ன்னை மாநகருக்கு ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்குத், தீர்வுகாணுகிற முயற்சிகளின் தொடர்ச்சியாக, 11.1.1992 அன்று ஐதராபாத்தில் ஆந்திரப் பிரதேச மாநில முதல்வருக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தில், தெலுங்கு கங்கைத் திட்டம் செயல்படுத்துவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் 1995-ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பாசன வசதி அளிக்கவும், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கவும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கூறிய இலக்கினை எட்ட, தமிழக அரசு தன் பங்கிற்கேற்ப போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும், ஆந்திர மாநிலம் இத்திட்டத்திற்கான முக்கிய பாகப் பணிகளை மேற்கொண்டு முடிக்கும் பொருட்டு, போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. தற்பொழுது நிலவி வரும் விலைப் பட்டியலின்படி, இத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றி முடிக்க நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் முக்கிய பணிகளை மட்டும் மேற்கொண்டு முடிக்க, போதிய கவனம் செலுத்தப்படும் என்றும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டுக்குள், தெலுங்கு கங்கைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதற்குத் தேவையான நிதி, திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கும் மேலாகத் தேவைப்படுவதால், கூடுதல் நிதியைப் பெறும் பொருட்டு, வெளிநாடுகளில் வாழுகின்ற இந்தியர்களை இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் பங்கு பெறுவதற்கென அழைப்பதற்கு, இரு மாநில அரசுகளும் எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளும். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொழுது ஏற்படும் சிக்கல்களை, சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு, இரு மாநில அலுவலர்களிடையே அடிக்கடி கூட்டங்கள் கூட்டப்பட்டு, இத்திட்ட முன்னேற்றத்தைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். இரு மாநில அரசு அலுவலர்களாலும் ஒரு செயல் திட்டம் (Action Plan) வகுக்கப்பட வேண்டுமென்றும், அச்செயல்









திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

★ தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு தனி நிதி கடந்த ஆண்டு துவக்கப்பட்டது. இந்த நிதி ஒவ்வொரு தொழிலாளர்க்கு ரூ.2 என்று தொழில் நிறுவனத்திடமிருந்தும், அரசு தரப்பில் ரூ.2-ம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியைப் பயன்படுத்தி, தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதியும், விளையாட்டு மையங்களும் ஏற்படுத்துவதற்கு வழி செய்யப்படுகிறது. இதனைக் கண்காணிக்க அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட ஆட்சி தலைவரின் பொறுப்பில் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

ஆடிப்பாடி விளையாட வேண்டிய பருவத்தில், வறுமையினால் வேலைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலையை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இதற்கு நாம் சட்ட ரீதியான அணுகு முறையைப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில், வறுமையினால் ஏற்படக் கூடிய நிலைமையை தவிர்க்க, நாம் வேறு சில நடவடிக்கைகளும் எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனால்தான் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளம் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில், இந்த நிதியை வலுப்படுத்த நாம் முடிவு எடுத்துள்ளோம். எனவே, ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளர்க்கும் ரூ.2 என்ற அடிப்படையில் வழங்கப்படும் தொகையை, இந்த அரசு ரூ.10-ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது. அதேபோல் தொழில் நிறுவனங்களும் அவர்கள் தரப்பில் ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் ஆண்டுதோறும் ரூ.10 வழங்க வேண்டும். மேலும், தற்போது இந்தத் திட்டம் தீப்பெட்டித் தொழிலுக்கு மட்டும் தான் பொருந்தும். இனிமேல், பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளம் தொழிலாளர்களுக்கும் இதனை வழங்க முடிவு செய்துள்ளோம்.

★ ஆளுநர் உரையில் ஆரம்பக் கல்விக்கு சிறப்பான முன்னேற்றம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தற்போதுள்ள ஓராசிரியர் பள்ளிகளில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாகச் செயல்படுத்த இருக்கின்றோம். இது மட்டுமல்லாமல், ஆரம்பக் கல்வியில் மேலும் சிறப்பான முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்கத்துடன், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். இந்தத் திட்டத்தில் 2 ஆசிரியர்கள் இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளில் மூன்றாவது ஆசிரியரை நியமிப்பதற்கு வழிவகை செய்யப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.62.47 கோடியாகும். இந்தத் திட்டம் மத்திய அரசின் உதவி பெற்று விரைவில் செயல் படுத்தப்படும்.

★ ★ ★

**த**மிழக அரசு ஆதரவற்ற முதியோர்களுக்கும், விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும், மாதந்தோறும் ரூ.50 உதவித் தொகை தற்போது வழங்கி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் 5.15 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர். எங்கள் திட்டங்களில் மனிதாபிமானத்தின் வெளிப்பாடு மகத்தான பங்கு வகிக்கிறது. முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோருக்கு, வாரந்தோறும் அரிசி வழங்கும் திட்டத்தை முந்தைய அரசு கைவிட்டது. ஆனால் நாங்கள் பொறுப்பேற்ற உடன், முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோர் அனைவருக்கும், ஒவ்வொரு வாரமும் அரிசி வழங்கும் திட்டத்தை மீண்டும், 15.9.91 முதல் அமலுக்கு கொண்டு வந்துள்ளோம். முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு, தற்போதைய விலைவாசி உயர்வினைக்கருத்தில் கொண்டு, மேலும் சிறிது உதவும் நோக்கத்தோடு அவர்களுக்குத்தற்போது வழங்கப்படும் ஓய்வூதியமான ரூ.50-, ரூ.75-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 15.45 கோடி கூடுதல் செலவு ஆகும்.

★ ★ ★

**ஓ**ய்வூதியம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படா வண்ணம், இந்த அரசு கவனித்துக் கொள்ளும். காத்திருப்போர் பட்டியலில் உள்ள 19.509 நபர்களுக்கு, உடனடியாக ஓய்வூதியம் வழங்க இந்த அரசு ஆணையிடுகின்றது. இதற்காக ஆண்டொன்றுக்கு ரூபாய் 1.76 கோடி கூடுதல் செலவு ஆகும். இதன்படி தமிழகத்தில் 5.35 இலட்சம் பேர் இத்திட்டத்தின் கீழ் இனிப் பயனடைவர்.

★ ★ ★

**கி**ராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்து, கூடுதல் வருமானம்



# சட்டப்பேரவையில்...

- 29.1.1992 முதல் 10.2.1992 வரை நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட பல முக்கிய அறிவிப்புகளில் சில இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

★ 'ஒரு மகிழ்ச்சியான செய்தி; தமிழகத் திட்டங்களுக்குக் கூடுதல் தொகை ஒதுக்க வேண்டும் என்ற நமது கோரிக்கையைத் திட்டக்குழு ஏற்றுக்கொண்டது. இதன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொகையுடன் ரூ.265 கோடி அதிகரிக்கப்பட்டு, ரூ. 1,751 கோடி ஒதுக்கப்படும்' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் (6.2.1992) அன்று சட்டமன்றத்தில், உறுப்பினர்களின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே அறிவித்தார்.

★ 'ஆதிதிராவிடர் நலன் பற்றிய வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் பெஞ்ச் அமைப்பது பற்றி விரைவில் தமிழக அரசு முடிவுசெய்யும்' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேதகு ஆளுநர் உரைமீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார் (7.2.92)

★ 'கடல் நீரிலிருந்து குடிநீர் தயாரிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு விரைவில் நிறைவேற்றும்' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார் (7.2.92).

★ 'கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகம் திருவிழாவை முன்னிட்டு, அங்கு உள்ள கோயில்களைப் புதுப்பிக்க அரசு ரூ. 46 இலட்சம் வழங்கியுள்ளது' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார் (7.2.92).

★ 'முதியோர் ஒய்வூதியம் பெறுவோருக்குத் தற்போதைய விலைவாசியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூ.50-லிருந்து ரூ.75-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.15.45 கோடி கூடுதல் செலவாகும். காத்திருப்போர் பட்டியலில் உள்ள 19,509 பேர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்கப்படும்; இதற்கு ரூ.1.76 கோடி கூடுதல் செலவாகும்' என்று (7.2.92) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

★ 'மாநில சட்டக் கமிஷன் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவில் அமைப்பார்' என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார் (10.2.92).

★ 'கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் பற்றி எழுத்து மூலம் தகவல்கொடுத்தால் அதுகுறித்து அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும்' என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார் (31.1.92).

★ 'சத்துணவுத் திட்டம் புதிய வளர்ச்சியைப் பெறவேண்டும் என்ற அக்கறை மிகக் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், குழந்தைகள் காப்பகத்தில் உள்ள பிள்ளைகளுக்கு நாள்தோறும் காலை 10 மணி முதல் 11 மணி வரை விளையாட்டு மூலமாக (அவுட்டோர் கேம்ஸ்) உடற்பயிற்சி அளிக்க ஆணையிட்டுள்ளார்' என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் தெரிவித்தார் (1.2.92).

★ 'சென்னையில், 10 மாத காலமாகப் பல்வேறு கார்ணங்களால் மூடப்பட்டுள்ள 'பி அண்ட் சி மில்' மீண்டும் திறக்கப்படுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டது; இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள முடிவின்படி வரும் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று (ஏப்ரல் - 13), 'பி அண்ட் சி மில்' திறக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார் (4.2.92).

★ 'ஒரு இலட்சம் ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் உன்னதத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது; உடல் ஊனமுற்ற தாழ்த்தப்பட்ட பெண்களுக்குப் பலன் அளிக்கும் வகையிலான இத்திட்டம் ரூ.11கோடி செலவில் தீட்டப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரத்தால் இந்தத் திட்டம் தொடங்கப்படும்' என்றும் 'படிக்காத பார்வை அற்றோருக்கு அரசு அலுவலகங்களில் உள்ள நாற்காலிகளுக்கு ஒயர் பின்னும் தொழில் அளிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளதாகவும்' மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர்.இந்திரகுமாரி அவர்கள் தெரிவித்தார் (5.2.92).

★ பால் விற்பனை நிலையங்களில் பெண்களை வேலைக்குச் சேர்ப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் தெரிவித்தார் (6.2.92).

★ 'கேரளா, மேற்கு வங்காளம் போன்ற மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் தான் அரிசி விலை குறைவு' என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.ஜி.விசுவநாதன் அவர்கள் தெரிவித்தார் (7.2.92).

- தொகுப்பு: பி.எல்.ஆர்.





# சமூக - பொருளாதார நீதி ஏழைக்குக் கிடைப்பதே தர்மம்!

## மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், ரூ.4 கோடியே 54 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் கட்டடத்தின் திறப்பு விழா, 8.2.92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.எம்.எச். கனியா அவர்கள் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

'இந்தப் புதிய கட்டடம் கட்ட முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986-இல் அனுமதி வழங்கினார். அந்தப் பணி இப்போது முடிவடைந்து, கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. ஜனநாயக அமைப்பில் நீதித்துறையின் பங்கு முறையாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். ஆகவே, அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய முக்கியமான இடம் நீதித்துறைக்குக் கிடைத்திட எனது தலைமையிலான அரசு தொடர்ந்து பாடுபடும் எனக் கூறிட விரும்புகிறேன்.

மிகச் சிறந்த கட்டடக் கலை அமைப்புகள் கொண்ட சென்னை மாநகரில் உயர்நீதிமன்றக் கட்டடம் மிக முக்கியமானது. இங்கு கூடுதல் தேவை கருதி, இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் நீதிபதிகள், வழக்குரைஞர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு உரிய பயன் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றம் 130 ஆண்டுக் காலப் பாரம்பரியம் கொண்டது. பாரபட்சமற்ற, நியாயமான தீர்ப்புகளை அச்சமின்றி தலை நிமிர்ந்து வழங்கும் பண்பாட்டை இங்கு நீதிபதிகளும், வழக்குரைஞர்களும் வளர்த்தனர். அதே மரபுகளைப் பின்பற்றும் வாரிசுகள் நாம் என்ற பெருமை இந்த விழாவில் பங்கேற்கும்போது உண்டாகிறது. நீதிபதிகள் முத்துசாமி அய்யர், சங்கரன் நாயர், மாதவன் நாயர், கே.சுந்தரம் செட்டியார், வே.பா.ரமேசன் ஆகியோர் இந்த உயர்நீதி மன்றத்தில் பணிபுரிந்து பெருமை சேர்த்தவர்கள். அதேபோல, மிகப் பெரும் வழக்குரைஞர்களான பாஷ்யம் அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயங்கார், வி.எஸ். எத்திராஜ் ஆகியோர் உட்பட பலர் இந்த உயர் நீதிமன்றத்தில் பணிபுரிந்து பெருமை சேர்த்தனர்.

ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டு நமது அரசியலமைப்புச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஆதார உரிமைகளை அரசியலமைப்புச் சட்டம் வழங்கி உள்ளது. ஆனால், பொது நலன் அடிப்படையில் இவைகளுக்கு ஒரு வரம்பு உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் இலட்

பெறுவதன் மூலம், இந்த விலை உயர்வினை ஏழைத் தொழிலாளர்கள் சந்திக்க உதவும் என்ற வகையில், 'தமிழக அரசு வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்' என்ற புதிய திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படும். முதல்கட்டமாக, தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகி வரும் மாவட்டங்களாகிய தருமபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள நிலமற்ற ஆண் மற்றும் பெண் விவசாயத் தொழிலாளர்கள், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் தங்களுடைய பெயர்களைப்பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பின் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் பரவலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பணிகள் உருவாக்கிச் செயல்படுத்தப்படும். இப்பணிகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் வரம்புக்கு உட்பட்டு, மாவட்ட அளவில் கண்காணிக்கப்படும். குளங்கள் வெட்டுதல், ஏரிகளை மேம்படுத்துதல், வரத்துக் கால்வாய்களைச் சீர்படுத்துதல், வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல், சமூக நலக் காடுகளை வளர்த்தல், சாலை வசதிகளை மேம்படுத்துதல், போன்ற பல்வேறு நலப்பணிகள் இதில் அடங்கும். இப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியமான ரூ.14 நாளொன்றுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

★ ★ ★

**அ**ண்மையில் துவக்கப்பட்டுள்ள தமிழக அரசின் புதிய மருத்துவ நலத் திட்டத்தின் மூலமாக, தொடர்ந்து போதுமான அளவு மருந்துகள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1000 மருத்துவ முகாம்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுள்ளன. அதில் 5 இலட்சத்திற்கும் அதிகமான பேர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்- இந்தத் திட்டம் முழுமையடைகின்றபொழுது, கிட்டத்தட்ட 50 இலட்சம் பேர் இதன்மூலம் பயனடைவார்கள். இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெற, அனைத்துத் தொண்டு நிறுவனங்கள், மருந்து தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், வணிகர்கள் போன்றவர்கள், தங்கள் முழு ஒத்துழைப்பினை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

★ ★ ★

**ச**த்துணவு மையங்களில் தற்போது 2 வயதிலிருந்து 6 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகின்றது. இப்பொழுது, இத்திட்டத்துடன் சத்துணவு மையங்களில், 6 மாதத்திலிருந்து 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், ஊட்டச் சத்து வழங்குவதற்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலுட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்து வழங்குவதற்கும், ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மருத்துவ வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த திட்டம் 11 மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டு உள்ளது. மேலும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மகிழ்ச்சிகரமான அறிவிப்பு ஒன்றை வெளியிட விரும்புகிறேன். இந்தத் திட்டம் படிப்படியாக, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விரிவாக்கப்படுமென்று அறிவிக்கின்றேன்.

இந்தத் திட்டம் முழுமையாக விரிவாக்கப்படும் கட்டத்தில், மொத்தம் சுமார் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்து வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும். மேலும் சுமார் 7 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கப்படும். கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இந்தத் திட்டத்தில் பயன்பெறுவதால், மேலும் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 2 கோடி கூடுதல் செலவு ஆகும்.

இந்தத் திட்டம், உடனடியாக தர்மபுரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படும். இத்திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 8,000 கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும், சுமார், 30,000 சிறு குழந்தைகளும் ஆண்டுதோறும் பயன்பெறுவார்கள். இதற்கு ஆண்டுக்கு ஆகும் செலவு ரூ. 3 கோடியாகும்.

★ ★ ★

**கு**ம்பகோணத்தில் உள்ள சிவாலயங்கள், வைணவத் திருக்கோயில்கள் ஆகியவற்றைப்புதுப்பிக்கும் பணிக்காக, ரூ.46.28 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது. மகாமகம் திருவிழாவில் பங்குகொள்ள வரும் பக்தர்களுக்கு, செய்ய வேண்டிய வசதிகளுக்காக கும்பகோணம் நகராட்சிக்கும், பொது சுகாதாரத்துறை, மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் உள்ள தெருக்கள், சாலைகள் மேம்படுத்துதல், தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி அமைத்தல், பாலங்கள், வாய்க்கால்களைச் சீரமைத்தல், மகாமகம் குளத்தைச் சீரமைத்தல் போன்ற பணிகளுக்கு, ரூபாய் 67.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கழிப்பிட, துப்புரவு வசதிகளைச் செய்ய, பொதுச் சுகாதாரத் துறைக்கு ரூபாய் 48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தைச் சுற்றியுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூபாய் 126 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கும்பகோணம் கிராமப்புறக்கூட்டுறவு மின்னமைப்பிற்கு ரூபாய் 6.5 இலட்சம் மானியமாக வழங்க மின்வாரியத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், பக்தர்கள் பாதுகாப்போடு இந்த விழாவில் கலந்து கொள்ள, சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 12,000 காவலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அதுமட்டும் அல்லாது மகாமகத்தை முன்னிட்டு, செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் மூலமாக, மிகப்பெரிய கண்காட்சியும், இசை மற்றும் நாட்டிய விழாவும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ குடும்ப நலத்திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு, ஒரு பெண் குழந்தை அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால், அவர்களுக்கு ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். அவர்கள் இனிமேல், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பிறகு, உடனடியாக அவர்கள் பெண் குழந்தையின் பெயரில் ரூ.2,000 வழங்கப்பட்டு, ஒரு வைப்பு நிதி துவக்கப்படும். இதில் சேரக்கூடிய தொகையை அந்தப் பெண் குழந்தையின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்தப்படும். குறிப்பாக மேல்படிப்புக்கு உதவும் வகையில் தொகைகள் தொடர்ந்து வழங்கப்படும். அந்தப் பெண் 20 வயது அடையும் பொழுது, அதாவது பெண் குடும்ப வாழ்க்கையைத் துவங்கும்பொழுது, அல்லது பட்ட மேற்படிப்பு மேற்கொள்ளும்போது, ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படும். இதனால் ஆண்டுதோறும் இருபதாயிரம் தாய்மார்கள் பயன்பெறுவார்கள். மேலும் ஆண்டுதோறும் இருபதாயிரம் பெண் குழந்தைகள், வாழ்க்கையில் நம்பிக்கையுடன் காலெடுத்து வைக்க, இந்த அரசு உறுதியாக வாய்ப்பு அளிக்கும். இதற்காக ஆண்டுதோறும் ரூபாய் 4 கோடி செலவாகும். இந்தத் திட்டம் பெண்களின் கல்விக்கும். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் வழிவகை செய்வதில் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும்.




முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி Lyndon Johnson தெரிவித்த ஒரு கருத்துத்தான் என் நினைவிற்கு வருகிறது. 'They never see the good but only the bad. Even if I walk across the river these people would say that I don't know how to swim.' அதாவது சிலர் குற்றம் காண்பதிலேயே குறியாக இருப்பார்கள். நடக்கின்ற நல்லவற்றை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். நான் தண்ணீர் மீது நடந்து ஆற்றை கடந்து சென்றாலும், அவர்கள், இவருக்கு நீச்சலே தெரியாது என்றுதான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்காக இல்லை என்றாலும், இந்நாட்டுக்கும், இந்நாட்டின் நலன் நாடும் பல நல்லவர்களுக்காகவும், இந்த விளக்கங்களைத் தெரிவித்துள்ளேன். ●

## கும்பகோணம் மகாமகத் திருவிழா

கும்பகோணத்தில் வருகிற பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகள் குறித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.1.92 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு அமைச்சர்களுடனும், அரசு அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினார். இவ்விழாவினை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மகாமகத் திருவிழாவினையொட்டிச் சாலைப் பராமரிப்பு, மின்வசதி, சுகாதாரப் பணிகள், குடிநீர் போன்ற வசதிகளை மேற்கொள்ள ரூ. 85 இலட்சம் வழங்கவும், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள மகாமகம் விழாவிற்கு நேரிடையாகத் தொடர்புள்ள 12 சைவக் கோயில்கள் மற்றும் 7 வைணவக் கோயில்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்புக்காக ரூ. 40 இலட்சம் வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்

மேலும், மகாமகத் திருவிழாவினையொட்டி, திருவிழாவிற்கு 10 நாட்களுக்கு முன்னதாக, செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ஒரு பொருட்காட்சியும், சுற்றுலாத்துறையின் சார்பில் பிரபல நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் நாட்டிய விழாவும் தொடங்கப்பட்டு, மகாமகத் திருவிழா முடியும்வரை நடைபெறும்.



சியங்களை நிறைவேற்ற சில வழி காட்டிக் கோட்பாடுகள் உள்ளன. நாட்டின் பொருளாதார நிலைகளை உணர்ந்து அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி உள்ளனர்.

பாமர மக்களின் பொருளாதார, சமூக அந்தஸ்து உயர்ந்து சேமநல அரசாகத் திகழ அவர்கள் விரும்பினர். அனைவருக்கும் சமூக மற்றும் பொருளாதார நீதிகளை வழங்கும் வகையில் நிர்வாகமும் சட்டமன்றமும் செயல்பட வழி வகுத்தனர்.

பாமர மக்களுக்கு உணவு, உடை, இடம், வேலைவாய்ப்பு ஆகியவைகளை முறையாகத் தர வழிகாட்டும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் வழிகாட்டுகிறது. இதைத்தான் ஹெரால்டு லக்சி, 'எனது அண்டை வீட்டுக்காரர் காய்ந்த ரொட்டிக்கு அலையும்போது நான் எப்படிக் கேக் சாப்பிட முடியும்?' என்று நயமாகக் குறிப்பிட்டார்.

ஆகவே, ஏழ்மை, சுரண்டல், அறியாமை மற்றும் வன்முறை நீங்க நிர்வாகமும், சட்டமன்றமும் மட்டும் பாடுபடுவது போதாது. இந்தப் பிரச்சினைகள் தீர தனது உரிய பங்கை ஆற்ற நீதித்துறை முன்வர வேண்டும்.

தனது வாழ்வுக்கும், அதன் தேவைக்கும் ஒவ்வொரு துறையும் என்ன செய்தது என்று கேட்கும் உரிமை சமூகத்திற்கு உண்டு. இந்தக் கேள்விக்குப் பதில்கூற வேண்டிய பொறுப்பு நீதித்துறைக்கும், அதைச் சார்ந்த அமைப்புகளுக்கும் இருக்கிறது. ஆகவேதான், இந்த உரிமையை ஆராய வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். சட்டம் என்பது சட்டப் புத்தகத்தில் உள்ள விதி மட்டுமல்ல, தர்மம் அல்லது அறத்தின் அடிப்படையில் அமைந்தது சட்டமாகும்.

சமூக மற்றும் பொருளாதார நீதி ஏழைகளுக்குக் கிடைப்பதுதான் தர்மத்தின் பொருளாகும். ஆகவே, சமூக மற்றும் பொருளாதார நீதி கிடைக்கும் வகையில் அதற்கான விளக்கங்களைக் கூறும் பொறுப்பில் நீதிமன்றங்கள் உள்ளன.

சிறந்த இலட்சியங்களை உடைய நீதித்துறை காலப்போக்கில் தனது சொந்த விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளில் சிக்கிக் கொண்டது. ஆகவே, தேவைப்படும் பாமரர்களுக்குரிய நீதி தர முடியவில்லை. நீதித்துறை முறையாகச் செயல்பட முடியாத சிக்கலைச் சட்டக் கமிஷன் உட்பட பல்வேறு அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளன.

ஆகவே, இப்போது இப்பிரச்சினையைத் தீர்க்க நீதித்துறையைச் சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் ஆய்ந்து அதற்கான தீர்வு காணவேண்டும். இப்போதிருக்கும் நடைமுறையை மாற்றிவிட்டு, புதிய நடைமுறை கொண்டு வருவதில் பயன் இல்லை. ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டம் எதை எதிர்பார்க்கிறதோ அதைப் பூர்த்தி செய்யும் அமைப்பாக நீதித்துறை சீர்திருத்தப்படவேண்டும். நான் இப்படிக் கூறுவதால் ஒரு பீதியை எழுப்ப விரும்புகிறேன் என்று அர்த்தமல்ல. உடனடியாகப் பெரிய அளவில் நீதித்துறைச் சீர்திருத்தம் தேவை என்பதைச் சமூக நலனில் அக்கறை கொண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான மன உறுதியும், இலட்சியத்தை அடையும் துணிச்சலும் இருந்தால் குறைந்த காலத்தில் அதை நிறைவேற்றலாம்.'

புதிய கட்டடத்தைத் திறந்து வைத்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எம்.எச். கனியா அவர்கள் பேசியதாவது:-

'சென்னை உயர்நீதிமன்றம் மிகவும் பாரம்பரியம் கொண்டதாகும். இங்கு புகழ்பெற்ற நீதிபதிகளும், வழக்குரைஞர்களும், பணியாற்றி உள்ளனர். தற்போது குடியரசுத் தலைவராக இருக்கும் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இங்கு சிறந்த வழக்குரைஞராக இருந்தவர். இப்படிப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதில் மிகவும் பெருமை அடைகிறேன்.

'வழக்குரைஞர்களுக்கு நீதிபதிகளுக்குஇடையே எப்பொழுதும் சுமூகமான உறவு இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நீதித்துறை செம்மையாகச் செயல்படும். எனவே, வழக்குரைஞர்கள் நீதிபதிகளுடன் நல்ல உறவு வைத்துக் கொள்ள வேண்டும்.'

விழாவில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி, தமிழக அட்வகேட் ஜெனரல் திரு. கே. சுப்பிரமணியம், உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ஏ.எஸ். ஆனந்த், வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் திரு. ஆர்.காந்தி ஆகியோர் பேசினார்கள்.

தற்காலிக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எஸ். நயினார் சுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழாவின் முடிவில் நீதிபதி திரு. வி. ரத்தினம் நன்றி கூறினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: என். இளங்கோ.





# புதிய தொழில் கொள்கை-1992

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

மாறி வரும் தேசிய பொருளாதாரச் சூழ்நிலையில் தமிழக அரசு இந்தப் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. வெளிநாட்டுக் கடன்களும் மிக மோசமான தேசியப் பொருளாதாரப் பிரச்சினைகளும் சேர்ந்து வளர்ச்சி பற்றிய அணுகுமுறையில் ஒரு முழு மறுமதிப்பீடு ஏற்படுவதைக் கட்டாயமாக்கி விட்டன

ஒரு புதிய தேசியத் தொழில் கொள்கையும், புதிய வணிகக் கொள்கையும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய உத்வேகத்தை அடிப்படையாகக் கொண்டு மாநிலத்தில் விரைவான பொருளாதார முன்னேற்றத்துக்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவது அவசியமாகிறது. புதிதாக வளர்ந்து வரும் இந்த பொருளாதார அம்சங்களின் தர்க்கரீதியான வெளிப்பாடே தமிழ்நாட்டின் புதிய தொழில் கொள்கையாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவின் தொழில்கள் ஆண்டுக்குச் சராசரியாக 8.5 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளன. தமிழ்நாட்டில் இந்த வளர்ச்சி 5.7 சதவிகிதம் ஆகும். எண்பதாம் ஆண்டு தமிழ்நாட்டில் மாநில உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாம் நிலைப் பிரிவுகளில் பங்கு 33 சதவிகிதமாகவே தேங்கி நின்றது. தனி நபர் வருமானம் தேசிய சராசரி அளவிலேயே நின்றுவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வந்தது. வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட படித்த வேலை இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கை 1980-இல் 5.58 இலட்சமாக இருந்தது. 1991-இல் 18.01 இலட்சமாக வளர்ந்துவிட்டது.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு 1969-இல் 10 சதவிகிதம் இருந்தது. 1989-90-இல் 5.21 சதவிகிதம் ஆகக் குறைந்துவிட்டது. புதிய பெரிய தொழிற்சாலைகள் உருவாகாதது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும்.

நிலத்தின் மேல் பாகத்திலுள்ள, விவசாயத்திற்குப் பயன்படும் சக்திகளை முழுவதுமாகப் பயன்படுத்தியதும், நிலத்தடி நீரை வேகமாகப் பயன்படுத்தியதும், தீவிர விவசாய உற்பத்தி வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக அமைந்தன.

இந்தச் சூழ்நிலையின் பின்னணியில் விரைவானதொரு தொழில் முன்னேற்றத்திற்குத் தமிழ்நாடு திட்டமிட வேண்டி உள்ளது. இந்தியாவில் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள மாநிலங்களில் முதன்மையாகத் தமிழ்நாடு திகழத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குக் கீழ்க்கண்ட அம்சங்கள் உதவியாக இருக்கின்றன:

* தொழில் உறவுகளில் புகழும், சிறந்த தொழில்நுட்பப் பயிற்சியும் பெற்ற தொழிலாளர்கள்.
* ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ள நிர்வாகத் திறமை.
* உறுதியாக நன்கு பரந்துள்ள தயாரிப்பு அடித்தளம்.
* நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட சாலைப் போக்குவரத்து அமைப்பை உள்ளிட்ட சிறந்த அடிப்படை வசதிகள்.
* விரிந்து பரந்த இருப்புப்பாதை இணைப்பு.
* சென்னையிலும் தூத்துக்குடியிலும் உள்ள திறன்மிக்க துறைமுகங்கள்.
* வளர்ச்சி பெற்ற சமூகக் கட்டமைப்பு.
* புதிய வளர்ச்சிக்குப் பிரதான கிரியா ஊக்கியாக விளங்கக் கூடிய ஏராளமான நிலக்கரி வளங்கள்.
* போதுமான மின்சார நிலைமை. மற்றும் நம்பத் தகுந்த, தொடர்ந்து கிடைக்கக்கூடிய மின் விநியோக உறுதி.
* ஒன்றுபட்டு வாழும் சமுதாயத்தில் நிலவிவரும் அமைதியான சூழ்நிலை.
* ஓர் உறுதியான ஏற்றுமதித் தளம்.

**கீழ்க்காணும் சில குறைபாடுகளும் உள்ளன:**

1. புதிய பெரிய முக்கியத் தொழிற்சாலைகள் இல்லாமை.
2. புதிய அடிப்படை வசதிக்குப் போதிய முதலீடு இல்லாமை.
3. பெரிய தொழில் நிறுவனங்களின் தடைப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள்.





• ஆண்டவனே! எனக்கு உயிர் அளித்தது போல், நன்றி நிறைந்த இதயத்தையும் அளிப்பாயாக!

- ஷேக்ஸ்பியர்

4. போதிய புதிய மூலதனம் நமது மாநிலத்துக்கு வராமல் இருப்பது.
5. வழங்கப்பட்ட சலுகைகளையும் ஊக்குவிப்புகளையும் பயன்படுத்தாமை.
6. திட்டங்களை அனுமதிப்பதில் உள்ள மெத்தனமும் நடைமுறை இடர்ப்பாடுகளும்.
7. பணியின் தார்மீகக் கொள்கைகள் இல்லாமை.
8. நிலையான நடுத்தரமான வரிக்கொள்கை இல்லாமை.
9. இந்தப் பின்னணியில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகப் புதிய அணுகு முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

மகத்தான வளர்ச்சிக்கான பாதை சுலபமானதல்ல. சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமானால் நமது, அனைத்துக் குறைபாடுகளையும் திறமையாகச் சமாளித்து, அனைத்து வசதி வாய்ப்புகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மாநிலத்தில் தொன்றுதொட்டு வரும் தொழில்களின் பெரும் பகுதி 25 இலட்சம் நபர்களுக்கு மேலாக வேலைவாய்ப்பினை வழங்கும் சிறு தொழில்களை உள்ளடக்கி உள்ளது. இந்தத் தொழில்களில் உற்பத்தி பெருக்கத்தை புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகவே நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதே நேரத்தில் புதிய சந்தைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்தக் கிளைப் பிரிவு ஏராளமான வேலைவாய்ப்புகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்தச் சக்தியைத் தகுந்ததொரு கொள்கை மூலம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைக் குறித்துத் தொழில் அதிபர்களுடனும், தொழில் முனைவர்களுடனும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனம்விட்டு வெளிப்படையாக பேச்சு வார்த்தை நடத்தினார். தொழில் அதிபர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பல அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. தொழில் அதிபர்களிடையே ஒரு பொதுவான கருத்தை உருவாக்க அனைத்து அம்சங்களைப் பற்றிய விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட்டது. தொழிற்சாலைகளின் சங்கங்களும் தலைவர்களும் சேர்ந்து தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் வழங்கியதன் மூலம் இந்தப் புதிய தொழில் கொள்கை உருவாவதில் பெரும் பங்காற்றின. பல்வகைப்பட்ட விவாதங்களின் விளைவே இந்தத் தொழிற் கொள்கையாகும். இக் கொள்கையைத் தமிழக அரசு அப்படியே நிறைவேற்ற முயலும். இது சம்பந்தப்பட்ட அனைவரது ஒத்துழைப்பையும் தமிழக அரசு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது. இப்புதிய தொழில் கொள்கையைச் சரியான முறையில் அமல்படுத்தினால் நமது பொருளாதார முன்னேற்றத்துக்கு மிகவும் தேவையான பன்முறைப்பட்ட விளைவுகளை இது உண்டாக்கி வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

## II. அடிப்படை வசதிகள்

தமிழகத்தில் தற்போதுள்ள தொழிற்பகுதிகளிலும், புதிதாகத் தொழிற்பகுதி ஏற்படுத்த உள்ள இடங்களிலும் அடிப்படை வசதிகளை விரைவாக மேம்படுத்த அதிகபட்ச முன்னுரிமை வழங்கப்படும்.

தொழில் தொடங்குவதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக்கழகம்' (The Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development) நிறுவப்படும். தொழில் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மட்டுமே இக்கழகம் விசேஷமாகச் செயல்படும். இக்கழகம் உடனடியாக மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தும். இக்கழகம், புதிதாகத் தொழிற்பகுதி ஏற்பட உள்ள இடங்களில், இதர அடிப்படை வசதிகளான மருத்துவமனை, பள்ளிகள் போன்றவைகளையும் ஏற்படுத்தித் தரும்.

தற்பொழுது உள்ள தொழிற்பகுதிகளிலும் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள தொழிற்பகுதிகளிலும் அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டுபிடித்து, அங்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

புதிதாக வகுக்கப்பட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சாலைப் போக்குவரத்து, தண்ணீர் வசதி, தொலைபேசி வசதி போன்ற பிற அடிப்படை வசதிகளும் புதிதாக உருவாக்கப்பட்ட அடிப்படை வசதி நிறைவுத் திட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்படும். இதற்கான செலவினை, உபயோகிப்போரிடமிருந்து கட்டணம் வசூலித்தும், சாலையை உபயோகிப்போரிடமிருந்து சுங்க வரி வசூலித்தும், ஈடுசெய்யலாம். சாலைப் போக்குவரத்து மேம்பாட்டிற்காக ஒரு மாதிரித் திட்டம் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய தொழில் மையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

தொழில் பகுதி அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்கான நிதி, முனிசிபல் நகர்ப்புற மேம்பாட்டு நிதியிலிருந்தும் (Municipal Urban Development Fund - MUDF) நகர்ப்புற கிராமப்புறத் திட்ட மேம்பாடு நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

### மின்சாரம்

தமிழ்நாட்டில் தற்போது மின்வெட்டு இல்லை. தொழிற்சாலைகளுக்கான மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்கத் தமிழ்நாடு அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பெரிய மின் உற்பத்தித் திட்டங்களான தூத்துக்குடி, வட சென்னைத் திட்டங்களிலிருந்து, எட்டாவது திட்டக் காலத்தில் 1,050 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும் வகையில், பணிகள் முடுக்கிவிடப்படும்.

மின் உற்பத்தியில் அதிக அளவில் தனியார் பங்கு கொள்வதற்கு வழி வகுக்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.

தனியார் மின் உற்பத்தி, மின் விற்பனை ஆகியவை ஊக்குவிக்கப்படும். மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை மின்வாரியம் ஏற்றுக்கொள்ளும். சேவைக் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு மின்சாரத்தின் கட்டணத்தைத் தனியாரே முடிவு செய்வர்.

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் உள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான அனல் மின் நிலையம் அமைத்தல்சுரங்கம் தோண்டுதல் கூட்டுத் துறையில் துவக்கப்படும்.

நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையம் கடலூர், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் பிள்ளைப் பெருமாநல்லூரில் எரிவாயு அடிப்படையிலான மின் நிலையமும் தொடங்க தனியார் நிறுவனங்கள் வரவேற்கப்படும்.

இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தி கூட்டுத் துறையிலும் தனியார் துறையிலும் அனல் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

மைக்ரோ நீர் மின் நிலையங்கள் அமைப்பிலும் தனியார் பங்கு பெற ஊக்கமளிக்கப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம், 6 மைக்ரோ நீர் மின் நிலையங்களை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறது.

தனியார் நிறுவனங்கள் பெரிய காற்று மின் ஆலைகளை அடைக்க ஊக்குவிக்கப்படும்.

மின்சாரத்தை மாற்றித் தருதல் விநியோகித்தல் ஆகியவற்றை மேம்படுத்த (Transmission and distribution) எட்டாவது திட்ட காலத்தில் ரூ.1,200 கோடி செலவில் மாபெரும் திட்டம் துவக்கப்படும். புதிதாகத் தொழில் தொடங்கப்பட்ட பகுதிகளில் மின்சாரத்தை மேம்படுத்துவதே இந்த முழுமையான திட்டத்தின் நோக்கமாகும். கிராமப்புறங்களில் மின் இணைப்பு பெறும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சீரான மின் விநியோகத்தை உறுதிப்படுத்த பலகட்டத் திட்டம் ஒன்று அமல்படுத்தப்படும்.

தொழிற்சாலைகளின் உற்பத்தியில் நட்டம் ஏற்படாவண்ணம் தடுக்க சீரான மின் விநியோகத்தின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழில் நிறுவனங்களுக்கு, அவர்கள் மனுச் செய்த 90 நாட்களுக்குள் மின் இணைப்புக் கிடைக்க விசேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தனி மின்சாரத் தணிக்கைக்குப் புதிய திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம் தனது சிறப்பு நிதியிலிருந்து இதனை நிறுவும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் நாட்டிலுள்ள மிகத் திறமையான வாரியங்களுள் ஒன்றாகும். செலவினங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும். நியாயமான கட்டண விகிதக் கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் துவக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்குக் கீழ்க்கண்டவாறு மின் கட்டணச் சலுகை வழங்கப்படும்.



• மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது, அவனது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்

- அரிஸ்டாட்டில்

முதலாண்டு 40 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 30 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 20 சதவிகிதம் விரிவுபடுத்தப்படும். தொழிற் சாலைகளுக்கும் இப்புதிய சலுகைகள் வழங்கப்படும்.

நூறு சதவிகித ஏற்றுமதி யூனிட்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

### நீர்

நீரைப் பெருமளவில் சுத்தப்படுத்தும் திட்டம் நிறைவேற்றப் படும். பெரும் நகரங்களில் கழிவு நீரைச் சுத்தப்படுத்தித் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும்.

கடற்கரையோரங்களில் உப்பு நீரைக் குடிநீராக மாற்றும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அதை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் தொழிற்சாலைகளில் மரபு சார்ந்த மற்றும் மரபு சாராத எரிசக்தி பயன்படுத்தப்படும்.

### மத்திய முதலீடு

தமிழகத்தில் துவக்கப்படவுள்ள பல்வேறு திட்டங்களுக்கு விரைவில் மத்திய அரசின் அனுமதிபெறத் தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. அவற்றுள் சில:

1. அரோமேட்டிக் திட்டம்
2. தென்மண்டல எரிவாயு கிரிட்.
3. சென்னை சுத்திகரிப்பு ஆலையின் விரிவாக்கம்.
4. எண்ணூரில் துணைத் துறைமுகம்.
5. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டுதல்.
6. கடலோரப் பகுதிகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடித்து எடுத்தல்.

பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்புப் பணிகளில் மத்திய அரசின் புதிய திட்டத்தைத் தமிழகத்தில் தொடங்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

### மூலதன மேம்பாடு

தேசிய அளவிலும் உலக அளவிலும் வாணிபத்தில் ஏற் பட்டுள்ள போட்டிகளைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் முதலீடு அதிகமாக வந்துசேரவும், அதன் விளைவாக விரை வான தொழில் முன்னேற்றம் ஏற்படவும் முற்போக்கான மூலதன மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தொழிற்சாலைகளுக்குச் சேவை புரியத் தமிழ்நாடு 'தொழிற் சாலை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்' (Tamil Nadu Guidance and Export Promotion Bureau) அமைக்கப் படும். இந்த நிறுவனம் தொழில் முனைவோரை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தேவை யான அனைத்து உதவிகளையும் செய்யும்.

டிட்கோவில் 'மிகா' (Mega Industries Guidance Agency) என்ற புதிய அமைப்பு நிறுவப்படும். இந்த அமைப்பு பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதரும். சிப்காட் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கும், சிட்கோ சிறு தொழிற்சாலைகளுக்கும், எல்காட் மின்னணுத் தொழிற்சாலைகளுக்கும் சேவை புரியும்.

வெளிநாட்டு மூலதன மேம்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொள்ளப் புதுடெல்லியில் 'பிப்கோ' (Foreign Investment Promotion Co-ordination Cell) என்ற அமைப்பு நிறுவப்படும்.

ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு (Export Promotion Cell) நிறுவப்பட்டுள்ளது. அது பலப்படுத்தப்படும். மத்திய மாநில அரசுகள், தொழில் மற்றும் வணிக அமைப்புகள் வணிகச் சங்கங்கள், ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு ஆகியவைகளின் பிரதிநிதிகளைக் கொண்டு உயர்மட்ட ஆலோசனைக்குழு (Apex Level Advisory Board) அமைக்கப்படும்.





● உண்மைதான் வாழ்க்கை. நமது வாழ்க்கை சத்தி யத்தைச் சேர்ந்து நிற்கும்போதுதான், அத்தனைத் துயரங்களும் தொலைந்து போகின்றன. அதற்கு முன்னால் அல்ல.

- பிளாட்டோ

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அவர் களுடன் தொடர்பு கொள்ளச் சிறு சிறப்புப் பிரிவு அமைக்கப் படும்.

முதலமைச்சர் தலைமையில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு நிரந்தர ஆலோசனைக் குழு (A Standing Advisary Committee) அமைக்கப்படும். அது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும்.

தொழில் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் அடங்கிய கொள்கைத் திட்டக்குழு (Policy Planning Group) ஒன்று அமைக் கப்படும். தொழில் மயமாக்குவதற்குத் தேவையான கொள்கை களை நிர்ணயிக்க அடிக்கடி கூடும் இக்குழுவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமை தாங்குவார்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உயர்மட்ட ஆலோசனைகளைப் பெற அரசுக்கும் தொழில் நிறுவனங்களுக்கு மிடையே அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்ளப்படும்.

மாநிலத்தில் பல்வேறு தொழில்களில் ஏற்பட்டுள்ள சாதனை களைக் கௌரவிக்கும் வகையில் தொழிலதிபர்களுக்குத் தரமான உற்பத்திக்காகவும், ஏற்றுமதி வளர்ச்சிக்காகவும், இறக்குமதி மாற்று ஏற்பாட்டிற்காகவும், புதிய பொருட்களின் வடிவமைப் பிற்காகவும் விருதுகளை அரசு வழங்கும்.

கீழ்க்காணும் வகையில் தொழில்களில் அரசு பங்கு கொள்ளும்.

கூட்டுத் துறை நிறுவனங்கள்: முதல் முறையாகத் தொழில் தொடங்குவோருடன் 26 சதவிகிதம் பங்கு முதலீடு

இணை/உதவி பெறும் திட்டங்கள்: 11 சதவிகிதம் பங்கு முதலீடு

எஸ்கார்ட் பிரிவுத் திட்டங்கள்: 1 சதவிகிதம் பங்கு முதலீடு (எஸ்கார்ட் உதவி வழங்குவதற்காக)

### சலுகைகள்

31 மிகவும் பின்தங்கிய வட்டங்களில் (Taluk) தொடங்கப் படும் அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் மூலதன உதவித் தொகையாக நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் வழங்கப்படும். அதிகபட்ச உதவித்தொகை ரூ.20 இலட்சமாகும்.

பிற்பட்ட 76 வட்டங்களில் துவக்கப்படும் அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் முதலீட்டு மானியம் நிலையான சொத்து மதிப்பில் 15 சதவிகிதமும், உயர்ந்தபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் வழங்கப்படும்.

முக்கியத் தொழிற்சாலைகள் மாநிலத்தில் எங்கு துவக்கப் பட்டாலும் அதிகப்படியான முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

* மின் அணுத் தொழிற்சாலைகள் - நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் - அதிகபட்சமாக ரூ.35 இலட்சம்.

* தோல் - நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் - அதிகபட்சமாக ரூ. 20 இலட்சம்.

கீழ்க்காணும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்பு முதலீட்டு மானியமாக நிலையான சொத்துமதிப்பில் 10 சதவிகிதமும் அதிகபட்சமாக ரூ.15 இலட்சமும் வழங்கப்படும்.

* மோட்டார் வாகன உதிரி பாகங்கள்
* மருந்து, மருந்துப் பொருட்கள்
* சூரிய சக்தி மற்றும் மரபுசாரா எரிசக்திச் சாதனங்கள்.
* ஏற்றுமதி செய்யப்படும் தங்க நகைகள் மற்றும் வைரம் பட்டை தீட்டுதல்.
* மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள்.
* குறிப்பிட்ட பகுதிகளில் சணல் தொழில்கள்.
* விளையாட்டுப் பொருட்களும் சாதனங்களும்.
* உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
* விலை குறைந்த கட்டுமானப் பொருட்கள்.

30 சதவிகிதத்துக்கு மேலாகப் பெண்களை வேலைக்கு அமர்த்தும் புதிய தொழிற்சாலைகளுக்குக் கூடுதலாக 5 சதவிகிதம் மூலதன மானியமும் அதிகபட்சமாக ரூ. 5 இலட்சமும் வழங்கப்படும்.

சீரான மின் வினியோகத்துக்கெனப் புதிய ஜெனரேட்டர் களை வாங்குவோருக்கு, அதன் விலையில் 15 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

சமுதாய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, முதல் 100 தொழிற்சாலைகளில் ரூ.50 கோடி முதலீடு செய்யும் பெரும் தொழில் அதிபர்களுக்குச் சிறப்பு மானியமாக ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு ரூ.50 இலட்சமும் மானியமாக வழங்கப்படும். என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பெரிய முதலீடுகளை வரவேற்கும் முகத்தான் ரூ.200 கோடியும் அதற்கும் மேலாக முதலீடு செய்பவர்களுக்கு மானியத் தொகை யாக ரூபாய் ஒரு கோடியும் வழங்கப்படும்.

இச்சலுகைகள் வழங்கத் தேவையான வழிமுறைகளைச் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். குறைந்தபட்ச நடைமுறை சம்பிரதாயங்களில் இந்தச் சலுகைகள் உடனடியாக வழங்கப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிதி வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

### வரிச் சலுகைகள்

படிப்படியான விற்பனை வரி தள்ளிவைப்புத் திட்டம் அமல்படுத்தப்படும்.

தற்பொழுது உள்ள திட்டப்படி பின்தங்கிய வட்டங்களில் 9 ஆண்டுகளும், மிகவும் பின் தங்கிய வட்டங்களில் 5 ஆண்டு களும் தள்ளிவைக்கப்படும்.

மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகள் எங்கு தொடங்கப் பட்டாலும் அதற்கு விற்பனை வரி தள்ளி வைப்பு/விலக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

* ரூ.50 கோடிக்கும் அதற்கு மேலும் ஆனால் ரூ.100 கோடிக்கும் கீழ் முதலீடு உள்ள தொழிற்சாலைகள். - 5 ஆண்டிற்கு வரி விலக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளிவைப்பு.

* ரூ.100 கோடிக்கு மேலாக ரூ.300 கோடிக்குக் கீழாக மூலதனம் உள்ள தொழில்கள் - 6 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணை யாகத் தள்ளிவைப்பு.

* ரூ.100 கோடியும் அதற்கு மேலும் மூலதனம் உள்ள தொழில்கள் - 7 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 14 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளி வைப்பு.

அரசு நிறுவனங்களால் மேம்படுத்தப்படும் தொழில் கூடங் களை வாங்குவதில் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் 3 ஆண்டுக் காலங்களுக்கு மின் உபயோக வரியிலிருந்து முழு வரிவிலக்கு வழங்கப்படும்.

கேப்டிவ் (Captive) ஜெனரேட்டரில் யூனிட்டுகளக்கு மின் சார வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

தொலைதூர விற்பனை வரிக் கொள்கையை அமைப்பதற்கு என ஒரு விற்பனை வரி சீர்திருத்தக் குழு அமைக்கப்படும்.

ஒரு சிறந்த வரிக் கொள்கையை உருவாக்கத் தொழில் அதிபர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும். இதில் சலுகைகள் வழங்குவது குறித்து ஒரு புதிய முறை கொண்டுவரப்படும்.

### தொழில் உறவுகள்

பணி தார்மீகத்தில் மாநில அரசு நம்பிக்கைக் கொண் டுள்ளது. புதிய பழைய தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் இல்லாமல் இருக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும எடுக்கும்.

நியாயமான பேச்சுவார்த்தைகள் மூலம் காணும் தீர்வுகளைப் பலவகைப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் குழப்பாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

வன்முறை மிரட்டல்கள் தேவையற்ற தலையீடுகள் ஆகியவை ஒடுக்கப்படும். நல்ல தொழில் உறவு நிலவிட அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

மூடிய ஆலைகளைத் திறக்கவும், நலிந்த ஆலைகளுக்குப் புத்துயிர் ஊட்டவும் அரசு தீவிர முயற்சிகள் எடுக்கும்.

வளர்ந்துவரும் தேசிய உலக அளவிலான போட்டிகளைக் கருத்தில் கொண்டு ஆலைகளை மாற்றவும், நவீனமயமாக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

போட்டிகள் நிறைந்த உலக சூழ்நிலையில் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். புதிய திட்டங்களில் பணியாட்களை நிர்வாகம் மாற்றுவதில் அரசு தலையிடாது.

ஆலைகளை மாற்றி அமைப்பதிலும், நவீன மயமாக்கப் படுவதிலும் உள்ள தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழி லாளர் மறுவாழ்வு நிதி (Labour Rehablitation Fund) நிறுவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நலிந்த ஆலைகளை மாற்றி அமைக்கும்போது தொழிலாளர் நலனுக்காக இந்நிதி பயன் படுத்தப்படும்.

தொழிலாளர் நலனைப் பேணிக் காத்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். போனஸ், ஊதியம், உற்



● தனக்குத் தெரிந்ததைத்தெரியுமென்றும், தெரி யாததைத் தெரியாதென்றும் கூறுவது எதுவோ அதுதான் அறிவாகும்.

- கன்பூஷியஸ்


தமிழரசு
1-3-1992 ரூ.1



• மிகக் குறைந்த செல்வத்தைக் கொண்டு எவன் திருப்தி அடைகிறானோ, அவன் தான் முதன்மையான செல்வன். ஏனெனில், இயற்கையின் செல்வம் திருப்திதான்.

- சாக்ரடீஸ்

பத்தித் திறன் சம்பந்தப்பட்ட நீண்ட நாளைய ஒப்பந்தங்கள் வரவேற்கப்படும். இதுபோன்ற ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும்போது உற்பத்தியுடன் சம்பளத்தை இணைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

### பொதுத்துறைக் கொள்கை

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் 58 உள்ளன. 31.3.1991 அன்று இவைகளில் அரசின் முதலீடு ரூ.470.71 கோடி ஆகும். இவைகளில் மொத்த மூலதனம் ரூ.1989.50 கோடி ஆகும். இவைகளில் 1990-91-ஆம் ஆண்டில் 24 பொது நிறுவனங்கள் 77.22 கோடி நட்டத்தைக் காட்டின. இதைச் சரிப்படுத்தத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

சம்பந்தமில்லாத தொழில்களில் அரசு ஈடுபடாது. மத்திய அரசின் தொழிற் கொள்கைக்கு ஏற்ப அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளிலும் தனியார் நிறுவனங்களை அரசு வரவேற்கும்.

இப்பொழுது இருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக ஆராயப்படும். இந்த நிறுவனங்களில் நட்டம் ஏற்படாமல் மாற்றி அமைப்பது அரசின் கடமையாகும்.

வெற்றிகரமாக மாற்றியமைக்க இயலாத நிறுவனங்களை அரசு கைவிட்டுவிடும்.

பொதுத்துறை நிறுவனங்களில் நிர்வாகத் திறமையை மேம்படுத்த அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். அலுவலர்கள் கொண்ட குழு ஒன்றின் மூலம் பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காகக் குறைந்தபட்சம் 3 ஆண்டுக் காலங்களுக்கு இந்த அலுவலர்கள் பணியில் அமர்த்தப் படுவார்கள்.

### சிறு தொழில்கள்

சிறு தொழில்களை வெற்றிகரமாகக் கொண்டு செல்லக் கூடிய திட்டத்தின்மூலம் தான் விரைவாகத் தொழில்மயமாக்கலாம் என்று அரசு உறுதியாக நம்புகிறது.

புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படும் போதே அதன் முழுமைக்காகக் காத்திராமல் ஒவ்வொரு கட்டத்திலும் மாநில மூலதன உதவித்தொகை சிறு தொழில்களுக்கு வழங்கப்படும். இது தொழில் முனைவோருக்கு மூலதனச் செலவைக் குறைப்பதில் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

சிறு தொழில் நிறுவனங்கள் தயாரித்து வழங்கும் பொருட்களுக்கு மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் உடனடியாகத் தொகையைத் தரவேண்டும். பொருட்கள் வந்து சேர்ந்த 30 நாட்களுக்குள் அதற்குண்டான தொகை வழங்கப்படவேண்டும். இதை நிர்வகிக்க ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதிய தொழில் நுட்பங்களை வளர்ப்பதற்கென Venture Capital Fund' என்ற நிதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

சிறு தொழில் அதிபர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், தங்களது தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும், 'தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி' (Technology Development Fund) நிறுவப்படும்.

நலிவுற்ற சிறு தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. இவைகளைச் சீர்படுத்துவதில் விரைவான முடிவு எடுக்கப் போதிய அதிகாரத்துடன் தொழில்துறைச் செயலர் தலைமையில் ஒரு சிறப்பு அதிகாரக் குழு (Special Empowered Committee) அமைக்கப்படும்.

### அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள்

தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் பிரிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. தோல்
2. ஜவுளி மற்றும் பனியன்கள்
3. மின்னணுவியல்
4. மோட்டார் பாகங்கள்
5. மருந்து, மருந்துப் பொருட்கள்
6. மணலி மற்றும் தஞ்சாவூர் திட்டங்கள் உள்ளிட்ட பெட்ரோ கெமிக்கல் திட்டங்கள்
7. தொழில் எரிசாராய வகைகள்
8. விவசாய சார்புத் தொழில்கள் மற்றும் உணவு பதனிடும் தொழில்கள்.
9. உப்பு, கடல் சார்ந்த பொருட்கள்
10. இரத்தினம் மற்றும் நகைகள்
11. பொறியியல் பொருட்கள்
12. கடல் உணவுப் பொருட்கள்
13. ஏற்றுமதிக்கு உரிய தொழில்கள்

இந்த 13 வகைத் தொழில்களில் புதிய தொழில் நிறுவ முன்வருபவர்களுக்கு அரசு ஊக்கமளிக்கும். இந்தப் பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் உள்ள வாய்ப்புகளை நன்கு ஆராய்ந்து அதன் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இந்தப் புதிய தொழில் கொள்கையினால் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் விரைந்து பெருகுவதற்குரிய சூழ்நிலை ஏற்படும். குடிசைத் தொழில்கள், கைத்தொழில்கள் பிரிவில் இடம் பெறும் சிறிய தொழில்களின்வளர்ச்சிஊக்கம் பெறும். தொழில்நுட்பம் தெரிந்தவர்களுக்கு இதனால் பெருமளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கும். மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெரிய அளவில் தொழில் முதலீட்டுக்கு வாய்ப்புகள் வந்துசேரும். மொத்தத்தில் தேசிய அளவிலான தொழில் வளர்ச்சியை மிஞ்சக்கூடிய அளவில் இங்கே உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்திப் பெருக்கம் வேலை வசதிப் பெருக்கம் ஏற்றுமதிக்கு ஊக்கம் ஆகிய நேரடிப் பலன்களோடு இந்தக் கொள்கையினால் மாநில வருமானமும் அதிகரிக்கும். மாநிலத்தில் பொருளாதாரச் சுபிட்சம் ஏற்படுவதைத் தொடர்ந்து மாநில அரசு அந்த வசதிகளை வேறு துறையில் ஈடுபடுத்திப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

முதலீடு, தொழில் உற்பத்தி ஆகிய சக்கரங்களைச் சுழல விடுவதன் மூலம் மக்களுக்கு அதிக வருவாய் கிடைக்க இந்தப் புதிய தொழில் கொள்கை வழிவகுக்கும். நாளாவட்டத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ப ஊதிய விகிதம் உயரும் வண்ணம் இந்தக் கொள்கை உயர்தரத்தை உருவாக்கும்.

தமிழக அரசின் இந்தப் புதிய தொழிற் கொள்கை எல்லோராலும் வரவேற்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

காவிரி நீர்:

# “நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு: விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.”

## டில்லியில் மாண்புமிகு முதல்வர் உரை

நாம் இங்கு எந்தச் சூழ்நிலையில் கூடிப் பேசுகிறோம் என்பதை நன்கு அறிவோம். இந்தக் கூட்டத்தைக் கூட்டியதில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள தீவிரமும் நல்லெண்ணமும் பாராட்டுக்குரியதாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எங்கள் நிலையைத் தெளிவாகச் சொல்லி விட்டோம். காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பான நடுவர் மன்றம் ஒரு இடைக்காலத் தீர்ப்பினை அளித்துள்ளது. இதை மத்திய அரசு தனது அரசிதழில் பதிவு செய்துள்ளது. இந்த இடைக் காலத் தீர்ப்பை அமலாக்க கர்நாடக அரசும், மத்திய அரசும் நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜூன் மாத முதல் வாரத்தில் காவிரிப் பாசனப்பகுதியில் விவசாயப் பருவ காலம் துவங்கும் பொழுது இப்பிரச்சினை அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுவிடும். இடைக்கால உத்தரவினை அமல் படுத்தி, காவிரி நதி நீர்ப் பாசனப் பகுதியில் வாழும் இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு உதவும் வகையில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். கர்நாடக முதல்வர் அவர்களும் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டதைத் தொடர்ந்து கர்நாடகாவில் ஏற்பட்ட பெரும் கலவரம் காரணமாக இலட்சக் கணக்கான தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் மிகுந்த பாதிப்புக் குள்ளாயின. இரு மாநில உறவையும் இந்தச் சூழ்நிலை பெரிதும் பாதித்து விட்டது. இரு மாநிலங் களுக்கிடையே நட்புறவையும் நல்லெண்ணத்தையும்ஏற்படுத்தத்தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயமான நிவாரணம் அளிக்கக் கோரினோம். சேதத்தின் அளவை அறிந்து, பாதிக்கப்பட்ட தமிழர் களுக்கு நிவாரணத் தொகையை வழங்க உச்சநீதிமன்ற நீதிபதியை நியமித்து விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.



**காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக, கேரள, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு முதல்வர்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் 17.2.1992 அன்று நடத்திய பேச்சுவார்த்தையின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை**

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடகம், கேரள, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு முதல்வர்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் 17.2.1992 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் முடிவில் 4 முதலமைச்சர்களின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

கூட்டறிக்கையின் விவரம் வருமாறு:

- காவிரி ஆற்றுப்படுகையில் வசிக்கும் மக்கள் உயர்ந்த பட்ச அளவுக்கு நன்மை பெறும் வகையில் 'நதிநீர் நாட்டின் வளம்' என்ற அடிப்படையில் காவிரிப் பிரச்சினைக்கு யதார்த்தமான முறையில் தீர்வு காண முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டார்கள். இதற்காக அமைதியான, சுமுகமான சூழ்நிலை உருவாக ஒவ்வொருவரும் உதவவேண்டும். அப்போதுதான் தோபதாப உணர்ச்சிகள் பிரச்சினையைச் சிக்கலாக்காமல், இறுதி முடிவைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள முடியும்.
- காவிரிப் படுகையில் அண்மையில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களைத் துரிதப்படுத்தி முடிக்க முதல்வர்கள் ஒப்புக் கொண்டனர்.
- நடுவர் மன்றத்தின் முன்பாக உள்ள அனைத்து நடவடிக்கைகளும் விரைவில் முடிய உதவி செய்வதென்று சம்பந்தப்பட்ட 4 மாநிலங்களும் ஒத்துக்கொண்டன.
- காவிரிப் படுகையில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் மக்களின் நலன்கருதி, காவிரி நீரை முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும் பயன்படுத்த, சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதல்வர்கள் சம்மதித்தனர்.

இவ்வாறு கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் அவர்களும், கர்நாடக முதல்வர் அவர்களும் இந்தச் சூழ்நிலையை நன்கு உணர்ந்து, இவ் விஷயத்தில் அரசியல் சாதுர்யத்தைக் காண்பித்தால், தமிழக மக்களுக்கு நிர்வாகத் திறமை மீது மீண்டும் நம்பிக்கை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரை, கர்நாடக மாநிலத்திற்குத் தமிழர்கள் திரும்பிச் செல்லத் தேவையான சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். இந்த வகையில் கர்நாடக அதிகாரிகளுக்கு தமிழக அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளேன். சுமுக நிலை திரும்ப, முதற் கட்டமான இரு மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து மீண்டும் சமீபத்தில் துவக்கப்பட்டது.

பிரதமர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு அழைப்பு விடுத்தபோது, அவர் மீது எனக்குள்ள மதிப்பின் காரணமாகவும் பிரச்சினையைப் புரிந்துகொள்ளும் அவரது உணர்வின் காரணமாகவும் அதை நான் ஏற்றுக் கொண்டேன். இந்த வகையில் எனக்குச் சில நிர்ப்பந்தங்கள் இருப்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களைச் சந்தித்தேன். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் விஷயத்தில் விட்டுக் கொடுக்கும் போக்கு கூடாது என்று அனைவரும் ஒருமனதாக வலியுறுத்தினர்.

அவர்கள் எடுத்த நிலை சரியானது. ஏனெனில், காவிரி நதிநீர் வரலாற்றிலே முதன் முறையாக நாட்டின் உச்ச நீதிமன்றமும், இந்திய அரசும் தமிழகத்தின் நியாயமான காரணத்தை ஏற்றுக் கொண்டுள்ளன அதனால்தான், நாங்கள் நடுவர் மன்றத் தீர்ப்பினை அமலாக்க வேண்டுமென நியாயமாகக்கோருகிறோம். இதை வலியுறுத்தும் அதே சமயம் நடுவர் மன்றத்தின் விசாரணை தொடர்ந்து நடைபெற வேண்டும். இதுமுற்றுப் பெற்றபின் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஏற்கவும் நாங்கள் தயார் என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கிறோம். ஆனால், நடுவர் மன்றத் தீர்ப்பினை அமலாக்குவதில் குறைபாடு இருக்குமானால் அது தமிழக மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு ஆட்பட வேண்டியிருக்கும். மேலும், நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளின் மீதும் திறமை மீதும் அவர்களுக்குள்ள நம்பிக்கை போய்விடும்.

பல நூற்றாண்டுகளாகக் காவிரி நதிதான் தமிழக மக்களுக்கு வாழ்க்கைப் பாதையாக அமைந்துள்ளது. அவர்களது வளமான எதிர்காலமும், பொருளாதார முன்னேற்றமும் அவர்களுக்கு வாழ்வளிக்கும் காவிரியோடு பின்னிப்பிணைந்தது.

பல ஆண்டுகளுக்குப் பின் இப்படி, கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நடுவர்மன்ற உத்தரவு-அது இடைக் காலத் தீர்ப்பாக இருந்தாலும், இப்பொழுது எங்களுக்குக் கிடைத்துள்ளது. இந்த விஷயத்தில் பிரதமர் தமது நல்லெண்ண முயற்சியாகத் தலையிட்டு நடுவர்மன்றத் தீர்ப்பை அமலாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

**(மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.2.92 அன்று புது டெல்லியில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரி நதிநீர்ப் பிரச்சினைக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

● ●



# இந்த இதழில்...


நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை
அமல்படுத்துவதில், விட்டுக்
கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை!
—டில்லியில் மாண்புமிகு முதல்வர்
அவர்கள் உரை ... 2

வெற்றிச் செல்வியாம்
புரட்சித் தலைவி வாழ்க!
—மாண்புமிகு நிதியமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன் ... 4

வழிகாட்டிய தெய்வம்
—மாண்புமிகு போக்குவரத்துத்துறை
அமைச்சர்
திரு. கே.ஏ. செங்கோட்டையன் ... 6

ஒரு புதுயுகம் கண்விழித்த திருநாள்!
—மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர்
திரு. அழகு திருநாவுக்கரசு ... 8

மகாமகத் திருவிழா ... 10

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில்
பாங்காய் விளங்கும் பல்துறைப்
பணிகள் ... 17

பக்கவாதம் (மருத்துவம்) ... 19

மீன் காட்சியகம் ... 24

நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு! ... 27

நிம்மதியான நிலத்தடி நீர்ப்பாசனம் ... 29

கும்பகோணம் மகாமகத் திருவிழா
துயர நிகழ்ச்சி குறித்து
அரசின் செய்தி ... 34

தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியம் ... 39

ஒருமைப்பாட்டை உணர்த்தும்
ஒப்பற்ற பொருட்காட்சி ... 41

தமிழ்நாட்டில் பாய்மர மிதவைப்
பலகைப் போட்டி ... 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

மாசித் திங்கள் - 18

மலர்:22 இதழ்:17

1-3-1992


மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அமைச்சரவை (27.2.'92).





# வெற்றிச் செல்வியாம் புரட்சித்தலைவி வாழ்க!

மாண்புமிகு நிதியமைச்சர்

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

வெற்றிச் செல்வியாக வீறுகொண்டு விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-வது பிறந்தநாள் விழா, இவ்வாண்டு, தமிழகம் எங்கணும் மிகச் சீரோடும், சிறப்போடும், பொலிவோடும், வலிவோடும், எழுச்சியோடும் உணர்ச்சியோடும், ஏற்றத்தோடும் எழிலோடும் கொண்டாடப்பட்டிருப்பது பூரிப்பையும், பெருமிதத்தையும் அளிப்பதாகும்.

பிறந்தநாள் விழாவைப் பெருமுயற்சியோடு பொருத்தமான முறைகளில், ஆங்காங்குக் கொண்டாடிய அனைவரும் நீங்காப்பற்றோடும், தணியா ஆர்வத்தோடும், சலியா உழைப்போடும், தளரா உள்ளத்தோடும் கொண்டாடியிருக்கின்றனர்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நிலைநாட்டப்பட்ட தமிழகப் பொற்கால ஆட்சி, அவர் வீழ்ந்துவிட்ட உடனே வீழ்ந்துவிட்டது என்ற நிலையிலும், அதனை மீண்டும் தூக்கி நிலைநிறுத்தும் பெருமுயற்சிகளில் ஈடுபட்டுத் தம் அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும், பண்பாட்டுத் திறனாலும், செயலாற்றல் திறனாலும், செய்து முடிக்கும் திறனாலும், தியாகத் திறனாலும், அந்தப் பொற்கால ஆட்சியை மீண்டும் அமைத்த பெருமை அனைத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, சென்ற எட்டுத் திங்கள்களாக ஆற்றிவரும் அரும் பெருஞ் செயல்கள் அனைத்தும், அனைவராலும் வாழ்த்தி வரவேற்கப்படுவதோடு, போற்றிப் புகழப்பட்டும் வருகின்றன. விண்மினுக்கும் நட்சத்திரங்களுக்கிடையே, தன்னொளி வீசி உலாவரும் முழுமதி போல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்திய அரசியல் வானில் திகழ்ந்து வருகிறார்.

புரட்சித் தலைவியின் எதிரிகள் இழி சொற்களையும், பழிச் சொற்களையும், ஏசல்களையும், தூற்றல்களையும், வசைமாரிகளையும், வன்முறைகளையும், தாறுமாறாகவும், தரக்குறைவாகவும், அடுக்கடுக்காகவும் வீசிக்கொண்டே இருந்த போதிலும், அவற்றையெல்லாம் சிறிதளவும் பொருட்படுத்தாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போன்று, 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற உறுதி கொண்ட நெஞ்சத்தோடு 1991 ஜுன் பொதுத்தேர்தலில் பெருமளவுக்கு வெற்றியைப் பெற்றார்கள். 234 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப் பேரவையில், எதிர்க்கட்சியினராகவுள்ள எதிர்க்கட்சியினர் ஏழு பேர்களுக்கு மட்டுமே இடங்கள் கிடைக்க, 227 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணி ஆதரவோடு, ஆடாத அசையாத ஆட்சியை ஆணித்தரமான முறையில் அரசோச்சி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது தமிழகத்தில் அமைதி நிலவவில்லை. சட்டம் ஒழுங்கு நிலைகள் சீர்கெட்டுப் போய்க் கிடந்தன. விடுதலைப் புலிகளின் கொலை-கொள்ளை-ஆள் கடத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடின. திரு. இராஜீவ் காந்தி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துக்கமும், துயரமும் பலருடைய உள்ளங்களையும் வாட்டிவதைத்துக் கொண்டிருந்தன.

தமிழக அரசைப் பொறுத்து ரூ.902 கோடிக்குப் பற்றாக்குறை நிலை நிலவி வந்தது. எதிர்க்கட்சிகளின் அத்துமீறிய அரசியல் செயல்களால் மாநிலம் சீர்குலைந்து கிடந்தது.





ஏழை எளிய மக்களின் குடும்பங்களையெல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருந்த மலிவு விலை மதுவை அறவே ஒழித்துக் கட்டினார். அதன் மூலம் ரூ.320 கோடி இழப்பு அரசுக்கு ஏற்பட்டது என்ற நிலையிலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் பொறுப்புணர்ச்சியோடு, மலிவு விலை மதுக்கடைகளை அறவே அகற்றினார்.

ஆயுதங்கள் ஏந்தி, அலைந்து திரிந்து, கொடிய வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் கொட்டத்தை, ஒழித்துக் கட்டுவதில் புரட்சித் தலைவி அவர்கள் பெரும் வெற்றி பெற்றார்.

வன்முறை விடுதலைப் புலிகளுக்கு உடந்தையாக இருந்து, அவர்களுக்கு உணவு-உடை-உறையுள்-பணம்-ஆயுதம் போன்ற உதவிகளைப் புரிந்து, அடைக்கலம் தந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் 'தடா'ச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

உள்நாட்டுப் பகுதியிலும், கடற்கரையோரப் பகுதியிலும் புரட்சித் தலைவி அவர்களால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான திட்பமான - உறுதியான அணுகு முறையை மேற்கொண்டு, அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக முடிக்க அரும்பாடுபட்டு வருகிறார்.

அவர்கள் முடங்கிக் கிடந்த தெலுங்கு-கங்கைக் குடிநீர்த் திட்டத்தை 1993-க்குள் நிறைவேற்றிச் சென்னை மாநகருக்கு குடிநீர் வசதியைச் செய்து தரப்பெரும்பாடுபட்டு வருகிறார்கள்.

புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்பட, ஊக்கத் தொகை அளிப்பதுடன் வசதியை உருவாக்குவது - மின்வசதியைச் செய்வது - விற்பனை வரியில் விலக்கு அளிப்பது-விரைவில் உரிமம் வழங்குவது போன்ற புதிய தொழிற் கொள்கையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

சுற்றுலாத்துறை ஒரு தொழிற்றுறையாக வளர்ச்சியுற்று, வளம் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய புதிய கொள்கை முறைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்தார்கள்.

தமிழகத்திலுள்ள சிற்றூர்கள்-பேரூர்கள் ஆகியவற்றின் மேம்பாட்டு வளர்ச்சி கருதி, முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தை மீண்டும் புதுப்பித்தார். புதிய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தை உருவாக்கினார்.

புரட்சித் தலைவரின் கல்லறையைப் புதுப்பித்துப் பொலிவுடையதாக ஆக்க ஒரு கோடி ரூபாய் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கோயில்களின் சிற்பக்கலை, கட்டடக்கலை, செப்பு-வெள்ளி- பொன்-கற்சிலைக் கலை ஆகியவற்றைப் பேணிக்காக்க 'கோயில் பராமரிப்புப் பாதுகாப்பு நிதி' பெருமளவில் திரட்டப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவருக்குப் பெருமை சேர்க்கச் சட்டமன்ற மண்டபத்தில், அவருடைய திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

மதிய சத்துணவுக் கூடங்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் இடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 10,000 மருத்துவ நல முகாம்கள் நடத்தத்திட்டம் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு ரூ.42 கோடி செலவில் ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி-சேலைகள் இனாமாக வழங்கப்பட்டன.

இப்படியாகச் சாதனைகள் பலவற்றையும் நிறைவேற்றி, வெற்றிச் செல்வியாக விளங்கிவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் இன்புற்று இனிதே வாழ உளங்கனிந்த வாழ்த்துக்கள் பலவும் உரியவாகு!



# வெற்றிச் செல்வியாம் புரட்சித்தலைவி வாழ்க!

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

வெற்றிச் செல்வியாக வீறுகொண்டு விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-வது பிறந்தநாள் விழா, இவ்வாண்டு, தமிழகம் எங்கணும் மிகச் சீரோடும், சிறப்போடும், பொலிவோடும், வலிவோடும், எழுச்சியோடும் உணர்ச்சியோடும், ஏற்றத்தோடும் எழிலோடும் கொண்டாடப்பட்டிருப்பது பூரிப்பையும், பெருமிதத்தையும் அளிப்பதாகும்.

பிறந்தநாள் விழாவைப் பெருமுயற்சியோடு பொருத்தமான முறைகளில், ஆங்காங்குக் கொண்டாடிய அனைவரும் நீங்காப்பற்றோடும், தணியா ஆர்வத்தோடும், சலியா உழைப்போடும், தளரா உள்ளத்தோடும் கொண்டாடியிருக்கின்றனர்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நிலைநாட்டப்பட்ட தமிழகப் பொற்கால ஆட்சி, அவர் வீழ்ந்து விட்ட உடனே வீழ்ந்துவிட்டது என்ற நிலையிலும், அதனை மீண்டும் தூக்கி நிலைநிறுத்தும் பெருமுயற்சிகளில் ஈடுபட்டுத் தம் அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும், பண்பாட்டுத் திறனாலும், செயலாற்றல் திறனாலும், செய்து முடிக்கும் திறனாலும், தியாகத் திறனாலும், அந்தப் பொற்கால ஆட்சியை மீண்டும் அமைத்த பெருமை அனைத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, சென்ற எட்டுத் திங்கள்களாக ஆற்றிவரும் அரும் பெருஞ் செயல்கள் அனைத்தும், அனைவராலும் வாழ்த்தி வரவேற்கப்படுவதோடு, போற்றிப் புகழப்பட்டும் வருகின்றன. விண்மினுக்கும் நட்சத்திரங்களுக்கிடையே, தன்னொளி வீசி உலாவரும் முழுமதி போல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்திய அரசியல் வானில் திகழ்ந்து வருகிறார்.

புரட்சித் தலைவியின் எதிரிகள் இழி சொற்களையும், பழிச் சொற்களையும், ஏசல்களையும், தூற்றல்களையும், வசைமாரிகளையும், வன்முறைகளையும், தாறுமாறாகவும், தரக்குறைவாகவும், அடுக்கடுக்காகவும் வீசிக்கொண்டே இருந்த போதிலும், அவற்றையெல்லாம் சிறிதளவும் பொருட்படுத்தாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போன்று, 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற உறுதி கொண்ட நெஞ்சத்தோடு 1991 ஜூன் பொதுத்தேர்தலில் பெருமளவுக்கு வெற்றியைப் பெற்றார்கள். 234 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப் பேரவையில், எதிர்க்கட்சியினராகவுள்ள எதிர்க்கட்சியினர் ஏழு பேர்களுக்கு மட்டுமே இடங்கள் கிடைக்க, 227 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணி ஆதரவோடு, ஆடாத அசையாத ஆட்சியை ஆணித்தரமான முறையில் அரசோச்சி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, தமிழகத்தில் அமைதி நிலவவில்லை. சட்டம்-ஒழுங்கு நிலைகள் சீர்கெட்டுப் போய்க் கிடந்தன. விடுதலைப் புலிகளின் கொலை-கொள்ளை-களவு-கடத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடின. திரு. இராஜீவ் காந்தி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துக்கமும், துயரமும் பலருடைய உள்ளங்களையும் வாட்டிவதைத்துக் கொண்டிருந்தன.

தமிழக அரசைப் பொறுத்து ரூ.902கோடிக்குப் பற்றாக்குறை நிலை நிலவி வந்தது. எதிர்க்கட்சிகளின் அத்துமீறிய அரசியல் செயல்களால் மாநிலம் சீர்குலைந்து கிடந்தது.





ஏழை எளிய மக்களின் குடும்பங்களையெல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருந்த மலிவு விலை மதுவை அறவே ஒழித்துக் கட்டினார். அதன் மூலம் ரூ.320 கோடி இழப்பு அரசுக்கு ஏற்பட்டது என்ற நிலையிலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் பொறுப்புணர்ச்சியோடு, மலிவு விலை மதுக்கடைகளை அறவே அகற்றினார்.

ஆயுதங்கள் ஏந்தி, அலைந்து திரிந்து, கொடிய வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் கொட்டத்தை, ஒழித்துக் கட்டுவதில் புரட்சித் தலைவி அவர்கள் பெரும் வெற்றி பெற்றார்.

வன்முறை விடுதலைப் புலிகளுக்கு உடந்தையாக இருந்து, அவர்களுக்கு உணவு-உடை-உறையுள்-பணம்-ஆயுதம் போன்ற உதவிகளைப் புரிந்து, அடைக்கலம் தந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் 'தடா'ச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

உள்நாட்டுப் பகுதியிலும், கடற்கரையோரப் பகுதியிலும் புரட்சித் தலைவி அவர்களால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான திட்பமான - உறுதியான அணுகுமுறையை மேற்கொண்டு, அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக முடிக்க அரும்பாடுபட்டு வருகிறார்.

அவர்கள் முடங்கிக் கிடந்த தெலுங்கு-கங்கைக் குடிநீர்த் திட்டத்தை 1993-க்குள் நிறைவேற்றிச் சென்னை மாநகருக்கு குடிநீர் வசதியைச் செய்து தரப்பெரும்பாடுபட்டு வருகிறார்கள்.

புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்பட, ஊக்கத் தொகை அளிப்பதுடன் வசதியை உருவாக்குவது - மின்வசதியைச் செய்வது - விற்பனை வரியில் விலக்கு அளிப்பது-விரைவில் உரிமம் வழங்குவது போன்ற புதிய தொழிற் கொள்கையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

சுற்றுலாத்துறை ஒரு தொழிற்துறையாக வளர்ச்சியுற்று, வளம் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய புதிய கொள்கை முறைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்தார்கள்.

தமிழகத்திலுள்ள சிற்றூர்கள்-பேரூர்கள் ஆகியவற்றின் மேம்பாட்டு வளர்ச்சி கருதி, முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தை மீண்டும் புதுப்பித்தார். புதிய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தை உருவாக்கினார்.

புரட்சித் தலைவரின் கல்லறையைப் புதுப்பித்துப் பொலிவுடையதாக ஆக்க ஒரு கோடி ரூபாய் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கோயில்களின் சிற்பக்கலை, கட்டடக்கலை, செப்பு-வெள்ளி- பொன்-கற்சிலைக் கலை ஆகியவற்றைப் பேணிக்காக்க 'கோயில் பராமரிப்புப் பாதுகாப்பு நிதி' பெருமளவில் திரட்டப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவருக்குப் பெருமை சேர்க்கச் சட்டமன்ற மண்டபத்தில், அவருடைய திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

மதிய சத்துணவுக் கூடங்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் இடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 10,000 மருத்துவ நல முகாம்கள் நடத்தத் திட்டம் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு ரூ.42 கோடி செலவில் ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி-சேலைகள் இனாமாக வழங்கப்பட்டன.

இப்படியாகச் சாதனைகள் பலவற்றையும் நிறைவேற்றி, வெற்றிச் செல்வியாக விளங்கிவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் இன்புற்று இனிதே வாழ உளங்கனிந்த வாழ்த்துக்கள் பலவும் உரியவாகு!

# புதுயுகம் கண்விழித்த திருநாள்




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்

## திரு. அழகு திருநாவுக்கரசு


தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதி வருகிற புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் வாழ்பவர்கள் நாம் என்ற வரலாற்று உணர்வு நமக்குள் பெருமிதத்தை ஏற்படுத்துகிறது. 1991-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி ஐந்தரைக் கோடி தமிழ் மக்கள் எழுதிய தீர்ப்பு அகிலம் இதுவரை அறியாத அற்புதத்தைச் செய்தது. மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்பும் மணித் திருநாடுகளில், எந்த நாட்டிலும் என்றும் இல்லாத அளவுக்கு மாபெரும் வெற்றியை மக்கள் ஒரு அரசியல் கட்சிக்கு அளித்தது அன்றுதான். அளித்தவர்கள் தமிழக மக்கள்; அளிக்கப்பட்டவர் தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். அந்தச் சத்திய நிகழ்ச்சிக்குச் சாட்சியாக இருந்தவர்கள் நாம்! இருப்பவர்கள் நாம்!

தேசங்கள் அறியாத இந்தத் திருப்புகழைப் பெற்ற பெருமாட்டியின் 44-ஆம் பிறந்த நன்னாள் பிப்ரவரித் திங்கள் 24- ஆம் நாள்! இந்த நன்னாளில் தேசம் முழுவதும் வாழ்த்துகிறது! தென்னகம் வாழ்த்துகிறது! தமிழகம் வாழ்த்துகிறது! நல்லவர்கள் வாழ்த்துகிறார்கள்! நாவார நாமும் வாழ்த்துகிறோம்! புரட்சித் தலைவியின் பிறந்த நாள் ஒரு புதுயுகம் கண் விழித்த திருநாள்.

தேசிய ஒருமைப்பாட்டில் திண்ணமான நம்பிக்கை வைத்துள்ளவர் புரட்சித் தலைவி. அவரால்தான் தென்கோடி பாரதத்தில் அராஜகம் வீழ்ந்தது; அமைதி எழுந்தது; பாரதத்தாயின் பாதுகாப்புக்குப் புரட்சித் தலைவி அளித்த புதுக்கவசம்தான் இந்த நடவடிக்கை. தேசிய நெஞ்சம் கொண்டோரின் திரு உள்ளங்களில் இந்தச் சாதனைச் சரித்திரம் சத்திய வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது.

'நல்லவை எங்கே இருந்தாலும் பிரகாசிக்கும். கெட்டவை இமயமலையின் உச்சியில் வைக்கப் பட்டாலும் இருள் கவிழ்ந்து மறைக்கப்படும்' என்றார் புத்தர் பெருமான். புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று அமர்ந்த நாள் முதல், இன்று அவரின் பிறந்த நாள் வரை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஒளிவீசும் திருமணிகள்.

சாராயத்தை ஒழித்த புரட்சித் தலைவியின் தீராத தீரம் புலவர் பாடும் புகழ் மிக்கது. ஏழைத் தாய்மார்களின் இன்னலைப் போக்க, துணிச்சலோடு நடவடிக்கை எடுத்தவர் புரட்சித் தலைவி அவர்கள். மது உள்ளே சென்றதும் அறிவு வெளியே வந்து விடுகிறது. ஆகவே அறிவார்ந்த ஒரு சமுதாயத்தில் மதுவுக்கு இடமில்லை என்று அவர் பிரகடனப்படுத்தினார். அதற்காக அவர் எடுத்து வரும் முயற்சிகள் நிகழ்காலத்தின் போற்றுதலுக்கும் வருங்காலத்தின் வாழ்த்துதலுக்கும் உரியவை.

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் இம்மியளவும் உரிமையை விட்டுக் கொடுக்காது போராடிப் போராடிப் புதுப்புது வெற்றிகளைப் பெற்று வரும் புரட்சித் தலைவியின் துணிச்சலும், வீரமும் ஒரு புதிய புறநானூற்றுக்குப் பொருளாக அமையத் தக்கவை.

காவிரிப் பிரச்சினையில் கர்நாடக அரசு தவறுக்கு மேல் தவறு செய்தது, தமிழர்களை வஞ்சித்தது ஆனாலும் அன்னை மனம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்துக் கன்னடர்களைப் பாதுகாத்து உண்மையான அமைதிப் பூங்காவை இங்கே உருவாக்கிக் காட்டினார்கள்.

தேர்தல் காலத்து உறுதி மொழிகளுக்கு ஒப்பற்ற மதிப்பளித்து, மக்கள் மன்றத்தில் வைத்த திட்டங்களைச் சட்டமன்றத்தில் செயல்படுத்தும் தனிப்பெருமை புரட்சித் தலைவி அவர்களுக்கே உண்டு.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தமிழகம் இன்று ஒரு தொழிற் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. காரணம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய, எளிய தொழிற் கொள்கைகள்.

துறை தோறும், துறை தோறும் புரட்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வரும் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளாட்சித் துறையில் புரிந்து வரும் சாதனைகள் மிகப் பெரியவை.

கிராமங்களிலுள்ள மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செப்டம்பர் 91 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருகின்ற செப்டம்பர் 1992-க்குள், தமிழ்நாட்டின் அனைத்து ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.





இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளும் நிறைவேற்றப்படும்:

1. 50,000 இலவச வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு.
2. 1,400 கி.மீ. நீளம் தார்ச்சாலை.
3. 2,000 கி.மீ. நீளம் கற்சாலை.
4. 500 புதிய பள்ளிக் கட்டடங்கள்.
5. 500 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுக் கூடங்கள்.
6. ஆதிதிராவிடர்களுக்கு 2,100 இலவச பாசனக் கிணறுகள்.
7. 1,000 சிறுபாசன ஏரிகள் மேம்பாடு.
8. 500 கசிவு நீர்க் குட்டைகள்.
9. 10,000 எக்டேர் நிலத்தில் ரூ.3 கோடி கன்றுகளுடன் சமூகக் காடுகள்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், மிகவும் அத்தியாவசியமான, குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்குகள், ஆகியவற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றப்படவேண்டுமென்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் ஒரு குடிநீர் வசதியும் இல்லாத கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாகக் குடிநீர் வசதி செய்யப்பட வேண்டுமென்ற முதல்வர் அவர்களின் ஆணை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 1,48,749 குடும்பங்களுக்கு ரூ.46.50 கோடி மானியமாகக் கொடுத்து, சொத்துக்களை உருவாக்கி வங்கிக் கடனும் அளித்து அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்நிதியாண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மகளிர்க்கு 550 குழுக்கள் அமைத்து வருவாய் ஈட்டக் கூடிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எரிசக்தியைச் சேமிக்கவும், இயற்கையிலிருந்து எரிசக்தியைப் பயன்படுத்தவும் ஏதுவாக, சாண எரிவாய்வு, சூளா போன்ற திட்டங்களும் அமல் படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அவர்கள் ஒரு மகத்தான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். சாதி, மத, இன வேறுபாடற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு 'மாதிரிக் குடியிருப்புத்' திட்டத்தை தர்மபுரி மாவட்டம் பர்கூரில் தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த மாதிரிக் குடியிருப்பில் சாதி சமய வேறுபாடு இல்லாமல், அனைத்துச் சமுதாயத்தினரும் உள்ள 300 வீடுகள் அமைக்கப்படும். இதில், இந்து இஸ்லாமியர் மற்றும் கிறித்துவர்களுக்காக மூன்று ஆலயங்கள் அமைக்கப்படும். மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி, சமுதாயக் கூடம், விளையாட்டு மைதானம், தொடக்கப்பள்ளி, அங்காடிகள், பூங்கா, தாய்சேய் நிலையம் போன்ற அனைத்து வசதிகளும் அமைக்கப்படும். தர்மபுரி மாவட்டம் பர்கூரில் அமையவிருக்கும் இந்த மாதிரிக் குடியிருப்பு 'ஜெயலலிதா நகர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது போன்ற மாதிரிக் குடியிருப்பு தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட உள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, கிராம மக்களுக்கு நிறைவான - நிலையான நன்மைகளைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் வகையில், ஆய்வுக்குழு, கண்காணிப்புக்குழு போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. காவல்துறை, பொதுப்பணித் துறை போன்று ஊரக வளர்ச்சித் துறையிலேயும் சிறப்பாகச் செயல் புரியும் அலுவலர்களுக்கு, ஆண்டு தோறும் பரிசு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 3 மாநகராட்சிகள், 31 நகராட்சி நகரியங்களில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.54 கோடி செலவில் அடிப்படை வசதிகளும், 28 நகராட்சிகளில் 'ஹட்கோ' நிறுவனத்தின் கடனுதவியுடன், குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இலட்சியங்களைச் சிலைகளைப் போல் கல்லில் உருவாக்க வேண்டும் என்பார்கள். அப்படிச் சிலை செதுக்கும் சிற்பியின் சீரிய பொறுமையோடும், சிதறாத கவனத்தோடும், ஒப்பற்ற திறனோடும், உறுதி வாய்ந்த மனத்தோடும் தமிழகத்தை உருவாக்கிவரும் தன்மான முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-ஆம் பிறந்த நாளான இந்தத் திருநாளில், அவர்களின் தலைமையின் கீழ் ஒப்பற்ற பொற்காலத்தைத் தமிழகத்திற்கு உருவாக்கித் தருவோம் என்று உறுதிகொள்வோமாக!

புரட்சித் தலைவி அவர்கள் -
வாழ்க பல்லாண்டு
வளமார் தமிழ் நாடாண்டு!

# வழிகாட்டும் தெய்வம்



மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
திரு. கே.ஏ. செங்கோட்டையன்

ஆதரவற்று அனாதையாய் நின்ற திராவிடக் குழந்தைக்கு அன்னையாய் வந்துதித்த அருள் வடிவமாம் எங்கள் தங்கத் தலைவிக்குப் பிறந்த நாள் விழா.

காலப் பிரளயத்தால் அணுவளவேனும் அடி பிறழாமல் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனைகளால் இந்த நாடாள முடியும் என உலகிற்குச் சேதி சொன்ன அறிவுப் பெட்டகமாம் எங்கள் அன்னைக்குப் பிறந்த நாள் விழா.

ஜனநாயகப் பூந்தோட்டத்தை அழித்திட ஆர்ப்பரிக்கும் நச்சரவங்களை, திடமான கொள்கைகளை - வலுவான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தி, புவியெங்கும் நியாயப் பூக்களின் வசந்தங்களைப் பரவச் செய்த ஒரு யுகப் புரட்சியின் மறுபதிப்பாம் எங்களின் இதய தெய்வத்திற்குப் பிறந்த நாள் விழா.

ஆர்ப்பரிக்கும் அலைகளாய்ச் சோதனைகளும் வேதனைகளும் சூழ்ந்து நின்று அச்சுறுத்திய போதும், பொறுத்திருந்தால் நாங்கள் புல்லாங்குழல்கள் (இனிமையான நாதம்); பொங்கி எழுந்தால் எரிமலைக் கோலங்கள் எனக் காலச் சக்கரத்தின் திசை நோக்கி, தன் வெற்றிப் பயணங்களை முடித்துக் காட்டிய எங்கள் முதல்வருக்குப் பிறந்த நாள் விழா.

கம்யூனிச சித்தாந்தங்களை உலகிற்குப் பரப்பிய சோவியத் மண்ணில், ஒரு விரல் அசைப்பில் உலகமே அழியும் எனச் சூளுரையேற்று அந்த ரஷ்ய பூமியில் காய்ந்து போன ரொட்டித் துண்டுக்காகச் சுட்டுக் கொள்கின்ற சூழ்நிலை.

அது போலவே அனைத்துலகிலும் வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தின் நிலை - இந்தியப் பூமியிலும் என்றுமே இல்லாத பணவீக்கம் - பொருளாதார முடை.

காலச் சூறாவளியின் கடுந் தாக்குதலினால், கன்னித் தமிழர்தம் இல்லங்கள் சூறையாடப்பட்டு விடக் கூடாதே என்ற கவலையால், கண்ணுறங்காத கவனத்தினால், புரட்சிகரமான திட்டங்களினால் இருள் சூழ்ந்த தமிழகத்தில் ஒளியேற்றி அமைதிப் பூங்காவாக மாற்றி தமிழ் மக்களின் நலன்களையும் தமிழ் மண்ணின் பெருமைகளையும் பாதுகாக்க நாளெல்லாம் கண் துஞ்சாது உழைக்கும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசியல் பாதையில் அறிவாற்றல் மிக்க நடைமுறைகளையும், மனிதாபிமானமிக்க அணுகுமுறைகளையும் காணலாம். உதாரணத்திற்கு ஒரு சில;

எவ்வளவு பெரிய இலக்கியவாதியாக இருந்தாலும், அரசியல்வாதியாக இருந்தாலும் பல்வேறு மொழிகளை அறிந்து வைத்துக் கொள்ளலாம், தெரிந்து வைத்துக் கொள்ளலாம். ஆறுமொழிகளில் எளிதாகப் பேச, தெளிவாக எழுத, திறம்பட விவாதிக்கும் ஆற்றல் பெற்ற ஒரே ஒரு ஒப்பற்ற முதலமைச்சர் இந்தியத் திருநாட்டிலேயே நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை நாடே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

வன்முறைகளும், அராஜகங்களும் தாண்டவமாடும் இந்திய அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபடுவதில்லை. அப்படியே இருந்தாலும் பொது வாழ்வில் அவர்கள் நிலைத்து நிற்பதில்லை. உத்திரப்பிரதேச முதல்வராக இருந்த சுசேதா கிருபளானி, ஒரிசா முதல்வராக இருந்த நந்தினி சத்பதி ஆகியோர் இவ்வளவு பெரிய சோதனைகளைச் சந்தித்ததுண்டா?

ஒரு மாபெரும் இயக்கத்தின் உயிர் மூச்சாக விளங்கிய தலைவர் மறைந்தார். கழகம் உடைந்தது. ஆட்சி கவிழ்ந்தது. காலமெல்லாம் நம்மை அழிக்க வேண்டும் எனக் கருதிய அரசியல் வல்லூறுகள் நம்மைச் சுற்றி வட்டமிட்டன.

மூன்றாண்டு காலம் எத்தனைச் சோதனைகள்? எத்தனை வேதனைகள்? களத்திலே எதிரிகளின் போர் ஒருபுறம், உடன் இருந்தவர்கள் முதுகில் குத்திய சோதனை மறுபுறம். இந்தியாவில் நமக்கேன் இந்த வம்பு என்று எண்ணியிருந்தால் மனம் சோர்ந்திருந்தால், திராவிட இயக்கத்தின் வரலாறே அழிந்திருக்காதா? கண்ணீரும் செந்நீரும் சிந்தி இலட்சோப இலட்சம் தொண்டர்களால்



வலுவான கழகமெனும் மணி மண்டபம் இடிந்து தரை மட்டமாகி இருக்காதா?

கழக அரசு இருந்த அடிச்சுவடே மறைந்து போயிருக்காதா? 91-ஆம் ஆண்டு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி அமைந்த நேரம், எப்படிப்பட்ட நேரம். வேங்கடம் முதல் தென் குமரி வரை எங்கு பார்த்தாலும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம், கள்ளச் சந்தையில் போதைப் பொருட்களை விற்கும் தேச விரோதக் கும்பலின் நடமாட்டம், திருட்டுக் கொள்ளையர்களாய்க் கள்ளத் தோணியின் வழியாகப் பிழைப்பைத் தேடி வந்தவர்கள் இங்கு இருக்கும் தலைவர்களைப் பட்டியல் போட்டுக் கொலை செய்வோம் என மிரட்டிக் கொண்டிருந்த நேரம்.



தேர்தல் பிரச்சாரத்திற்கென வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையே சுட்டுக் கொன்ற வெறியர்கள் உலவிய காலம். உயிரைத் திரணமாக மதித்து கடுமையான நடவடிக்கையால் நாட்டை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை நம் முதல்வர் அவர்களையே சாரும்.

ஒரு சில தலைவர்கள் மிகப் பெரிய பொறுப்பிற்கு வரும்போது சில சட்ட விதிகளையும் மரபுகளையும் கடைப்பிடிப்பதில்லை. ஆட்சி மன்றமும், நீதி மன்றமும் ஒருங்கிணைந்த உறவுடன் இருந்தால்தான் மக்கள் மன்றம் பலன் தர முடியும்.

அந்த வகையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றபின் தலைமை நீதிபதியைச் சந்தித்தும் சட்டமன்றத்தில் முதல்வர் செய்ய வேண்டிய பணியினை முறைப்படுத்தியும் சட்டமன்றத்தில் கொண்டு வரும் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்களுக்கு முறையான பதில் அளித்தும் வரையறுக்கப்பட்ட மரபுகளை முறையாக கடைப்பிடித்தும் வருவது நம் முதல்வர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

முந்தைய ஆட்சியின்போது, நாட்டைச் சீரழித்துக் கொண்டிருந்த தாய்மார்களின் துன்பத்திற்குக் காரணமான கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்ட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியதோடு அல்லாமல், ஆண்டாண்டுக் காலமாகத் தீர்க்க முடியாமல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதி மன்றம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து தன் கட்சி ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் உடனடியாக மத்திய அரசு அரசிதழில் அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி, மத்திய அரசாக இருந்தாலும் அது செய்ய வேண்டிய கடமையிலிருந்து தப்பிச் செல்ல நினைக்குமேயானால், அதைச் சுட்டிக் காட்டுகின்ற துணிச்சலும் வீரமும் நம் முதல்வரிடம் மட்டுமே உண்டு.

திராவிட இயக்கத்தின் வரலாற்றுத் தலைவர் தந்தை பெரியாரின் நெஞ்சிலே இருந்த முள் அகன்றது என்று மாற்றுக் கட்சியினரும் வியந்து பாராட்டும் அளவிற்கு அரசுப் பணம் இல்லாமல் திருக்கோவில் நிதியிலிருந்து வேத ஆகமப் பள்ளியை அமைத்து எல்லா ஜாதியினரும் படிக்கலாம்- ஆதி திராவிடர்களும் கோவில் அர்ச்சகராக வரலாம் என்று ஜாதி பேத மற்ற சமதர்மச் சமுதாயம் காண, புதுமைப் புரட்சியை உருவாக்கியது நம் முதல்வர் அல்லவா?

அரசு ஊழியர்கள் இறந்தால் அவரது குடும்பத்திற்கு அறுபதினாயிரம் ரூபாய் தந்ததும் நமது இதய தெய்வம் அல்லவா?

எதிரிகளின் ஏசல் மொழிகளையே தன் வளர்ச்சிக்கு உரமாக்கி, மாற்றிக்கட்ட ஆடையில்லாமல் ஏங்கித் தவித்த ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழைகளுக்கு வேட்டி, சேலை வழங்கிய கொடைத் தன்மை யாருக்கு உண்டு? பல்வேறு தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி, புதிய தொழிற் கொள்கையை அறிவித்த பெருமை எவருக்கு உண்டு?

இப்படி ஆட்சி அதிகாரம் அனைத்தையும் மக்கள் நலனையே மையமாக வைத்து, எதிரிகளின் ஏசல் மொழிகளையே தன் வளர்ச்சிக்கு உரமாக்கி யார் எதைச் சொன்னாலும் அதில் நியாயங்களை மட்டுமே செய்து, உழைப்பிற்கு மட்டுமே மதிப்பு அளித்து, உண்மைக்கு மட்டுமே தலை வணங்கி இன்று 44-ஆம் ஆண்டில் தன் வெற்றிக் காலடியைப் பதிய வைக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தியாக வரலாற்றுக்குத் துணை நிற்போம்.

அவர் ஏற்றிருக்கும் சத்திய சோதனையில் வெற்றி பெற எங்களின் இன்னுயிரையும் காணிக்கையாக்குவோம்.

இருண்டு கிடந்த எங்கள் அரசியல் பாதையில் ஒளி ஏற்றி வழி காட்டிய எங்கள் வழிபாட்டிற்குரிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.'



மகாமகப் பெருவிழா - பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை, குளத்தில் மலரும் குறிஞ்சி மலர் - பக்திப் பெருவிழா - பரமனருள் திருவிழா - அந்த மகத்தான விழா 1992-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை மலர்ந்தது. எங்கே? குடந்தை எனப்படும் கும்பகோணத் திருநகரில்! விழாவின் விழுப்புகழுக்குக் காரணம் இரண்டு. தமிழக அரசே 10 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு விழா ஏற்பாடுகளைச் திறம்படச் செய்திருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நட்சத்திரம் மகாமகமாகப் பரிணமித்தது அதன் பயனாய் மக்கள் நீராடும் புனித வேளையில், மகாமகக்குளத்தில் புரட்சித் தலைவி அவர்களும் புனித நீராடியது.

## கும்பகோணம்

குடமூக்கு என்று நாயன்மார்களாலும், திருக்குடந்தை என்று ஆழ்வார்களாலும், கல்யாணபுரம், பாஸ்கரச் சேத்திரம் என்று புராணங்களாலும் புகழப்படும் புண்ணிய நகரம் கும்பகோணம். காவிரி ஒரு பக்கம், அரிசிலாறு மறுபக்கம் நீர் வளம் பெருக்க, 'சீரார் செந்நெல் கவரிவீசும் திருக்குடந்தை' என்று நம்மாழ்வார் பாடிப்பரவுவதுபோல் பல்வளமும் பாங்கோடு படைத்த பழம்பதி; இறை வழிபாட்டுச் சிறப்பாலும், ஈகை மனத்தாலும் அன்பாலும் பண்பாலும் சிறந்த ஆடவரும் பெண்டிரும் வாழ்வதனால் நலத்தால் மிக்கார் குடந்தை என்று நாவாணரால் நற்சான்றிதழ் அளிக்கப்பட்ட நன்னகரம். இது கோயில் மாநகரம். திரும்பும் திசையெல்லாம் தெய்வீக மணம் வீசும் திருக்கோயில்கள். சிவபெருமானுக்கு 12 கோயில்கள், பெருமாளுக்கு 7, பிரம்மாவுக்கும் ஒன்று என்று மூவர்க்கும் கோவில் கண்ட கொள்கைச் சிறப்புடையது குடந்தை. இங்குள்ள கும்பேஸ்வரர் கோயில் புகழ் மிக்கது. வரலாற்றுச் சிறப்புடையது. குடந்தையிலுள்ள கீழ்க்கோட்டம் அப்பரடிகளின் பாடல் பெற்றது.

## மகாமகக்குளம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூவகையிலும் சிறப்புடையது குடமூக்கு என்னும் கும்பகோணம். அதிலுள்ள மகாமகக்குளம், தொல் பழங்காலம் முதல் தீர்த்தங்கள் பல உடையதாய்த் திருப்புகழ் கொண்டது.

பாரதத்தில் நிர்மலமான நீராடல் தலங்கள் நிறையவுண்டு. அவற்றுள் கும்பமேளா நடைபெறும் பிரயாகையும், ஆந்திரத்துப் புஷ்கரணமும், கும்பகோணத்து மகாமகக்குளமும் தனிச்சிறப்புடையவை. அவற்றுளும் முதலிரண்டும் ஓடும் நீர்த் தீர்த்தங்கள். மகாமகக்குளம் மட்டுமே தேங்கிய நீர் நிலை. இறையருள் நிலையாய் நின்று அருள் தரும் குளமே மகாமகக்குளம். இதில் நீராடுவோர் பாவம் அகலும். இது பண்டைய புராணம் முதல், பைந்தமிழ்க் கவிஞன் பாரதி வரை சொல்லும் செய்தி. கங்கையினும் இது புனிதமானது என்பதைக் கங்கையினும் வீசம் அதிகம் என்னும் வாசகம் விளக்குகிறது.

'பூமருவும் கங்கை முதல்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மகாமகந்தான் ஆடுதற்கு வந்து
வழிபடுங்கோயில்'

என்று சேக்கிழார் பெருமான் மகாமகச் சிறப்பைப் பாடும் அளவுக்கு இங்குள்ள மகாமகக்குளம் மகிமை வாய்ந்தது.

## மகாமக விழா

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை வருவது மகாமகம். சூரியன் கும்பராசியிலும் (தமிழ் மாசி மாதம்) குரு சந்திரனுடன் சிம்ம ராசியிலும் இருக்கும்போது வரும் மக நட்சத்திர நாள் மகாமகம் ஆகும். அன்று பௌர்ணமி அமைவது இயல்பு. இன்னொரு வானியல் கோட்பாட்டின் வழியும் இதை விளக்கலாம். வியாழன் (குரு) கதிரவனைத் தன் பாதையில் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம் 11.8618 ஆண்டு. எனவே 12 ஆண்டுக்கு ஒரு முறை மகாமகம் மலர்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் வந்த மகாமகங்கள் எட்டு. அவை வந்த நாட்கள்.

1. 6.3.1909
2. 22.2.1921
3. 10.3.1933
4. 26.2.1945
5. 25.2.1956
6. 14.2.1968
7. 1.3.1980
8. 18.2.1992

இந்த எட்டு விழாக்களில் திக்கெட்டும் புகழ்படைத்த விழா 18.2.1992.



## விழாக்கோலம்

குடந்தைக்கு வரும் எல்லாச் சாலைகளிலும் சாரிசாரியாக மக்கள் கூட்டம். பார்ப்பவர் விழிகளில் பரவசம். வியப்பு! எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கியே செல்கின்றன (All roads lead to Rome) என்பது பழமொழி. எல்லாச் சாலைகளும் கும்பகோணம் நோக்கியே செல்கின்றன என்பது புதுமொழி.

சிறப்புப் பேருந்துகள் - சிறப்புப் பேருந்து நிலையங்கள் - சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகள் என்று எங்கும் சிறப்பு மயமாயிருந்தது. கையும் பையுமாகக் காணப்பட்ட மக்களைக் காணும் போதெல்லாம் 'நோக்கு திசையெல்லாம் நாமன்றி வேறில்லை' என்னும் பாரதியின் பாடல் வரியே அனுபவமாயிற்று.

## புனித நீராடல்

மகாமக நாளுக்கு முதல்நாளே, கும்பலில் நீராடுவதைத் தவிர்க்க விரும்பியவர்கள் நீராடத் தொடங்கினார்கள். முறைப்படியான புனித நீராடல் விழா 18-ஆம் தேதி கடவுளர் திருவீதி உலாவுடன் தொடங்கியது. மகாமகக்குளத்தில் தீர்த்தவாரிக்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருள, மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், துறவியரும் வருகைதர அன்பர்களின் வெள்ளம் அலை மோத, குறிக்கப்பட்ட புனித வேளையாகிய 11.45 முதல் 12.30 வரையுள்ள காலத்தில் புனித நீராடல் தொடங்கியது.

கும்பகோணத்துச் சிவன் கோயில்களிலிருந்து திரு

வீதியுலா வந்து குளக்கரையில் காத்திருந்த 12 உற்சவ மூர்த்திகளிடமிருந்தும் 12 அஸ்திரதேவர்களைக்கையில் ஏந்தியபடி '12' குருக்களும் 11.58 மணிக்கு நீராடினர்.

அதே நேரத்தில் குளத்தின் வடகரையில் இருந்த 16 கால் மண்டபத்தின்கீழ் மடாதிபதிகளும் துறவியரும் புனித நீராடினர்.



### மகாமகக்குளத்தில் மாண்புமிகு முதல்வர்

முற்பகல் 11.25-க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மக்கள் பெருந்திரளாய்த் திரண்டிருந்த மகாமகக் குளத்துக்கு வந்தார். அவருடன் அமைச்சர் பெருமக்களும் வந்தார்கள். முதல்வர் படித்துறையில் இறங்கியதும், காசி விசுவநாதர் கோயிலைச் சேர்ந்த இராமநாத குருக்கள் பூரண கும்ப மரியாதையுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார். 11.30 மணிக்கு முதல்வர் அவர்களும் திருமதி சசிகலா அவர்களும் வழிபாடு செய்தபின் புனித நீராடல் தொடங்கியது 21 புனித கலசங்களில் வைக்கப்பட்ட தீர்த்த நீரில் முதல்வர் நீராடினார்.

### அஞ்சல்தலை, மலர் வெளியீடு

மகாமகத்தையொட்டி மைய அரசு அஞ்சல்துறை வெளியிடும் முதல்நாள் அஞ்சல் உறையையும், மகாமகச் சிறப்பு அஞ்சல் தலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மகாமகத்தையொட்டி வெளியிட்ட 'மகாமகம் - மலர் 1992' என்னும் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக் கொண்டார். அந்தச் சிறப்பு மலர், மிகச் சிறந்த முறையில் செய்திப் பேழையாக உருவம் உள்ளடக்கம் இரண்டிலும் உயர்ந்து விளங்கியது.

### 10 இலட்சம் பேருக்கு உணவு

அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 இலட்சம் பேருக்கு உணவு வழங்குவதன் அடையாளமாக, உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

### முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு

மாண்புமிகு தமிழக முதல்வரின் 44-ஆவது பிறந்த நாளும், பிறந்த நட்சத்திர அடிப்படையில்மகாமகமும் ஒன்றாக வருவதைக் குறிக்கும் வகையில் அவருக்கு, 44 பவுன் தங்கத்தினாலான மகாமகக்குள உருவமைப்பை நினைவுப் பரிசாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் வழங்கினார்.

அடுத்து கி.பி. 2004 ஆம் ஆண்டில் 'மகாமகம்' வரும். இந்த நூற்றாண்டின் இறுதி மகாமகத் திருவிழாவாகிய இந்த விழா 18.2.1992 அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாய் நிகழ்ந்தேறியது. மனதில் நிறைந்த மாபெரும் விழாவாய் அது நினைவில் என்றும் நிற்கும்.

இளந்தேவன்.

## நேரில் சென்று ஆறுதல்:

கும்பகோணத்தில் 18.2.1992 அன்று சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்.



## படமும் செய்தியும்



மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். நாகூர் மீரான் அவர்களுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர் (15.2.'92).



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ்.ரகுபதி அவர்களுக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்ற அமைச்சர் பெருமக்களும் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர் (27.2.'92).

# மாநிலக் கணக்காயர் அலுவலகம்

**(கணக்கு மற்றும் பணிவரவு)**

## தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு

தமிழக அரசின் ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1990-91-ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1992-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கணக்கு அறிக்கைகள் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீங்கள் பணிபுரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகள் மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங்களால் குறைகள் காணப்பட்டால், சம்பளப் பட்டியல் விவரங்களுடன் கணக்கு எண்/துறை/அலுவலகம்/ மாவட்டம்/பின்கோடு ஆகிய விவரங்களுடன், தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

**திரு. என். இராமச்சந்திரன்**
**கணக்கு அலுவலர்**
**எப்.எம். பிரிவு**
**(F.M.I. Section)**
**மாநிலக் கணக்காயர் அலுவலகம்**
**261, அண்ணா சாலை**
**சென்னை-600 018**

என்றும் தங்களுக்காகப் பணிபுரியக் காத்திருக்கிறோம். தங்கள் பொது வருங்கால வைப்பு நிதியின் 'நியமனப்பத்திரம்' (நாமினேஷன்) தாக்கல் செய்தவிட்டீர்களா?

**கணக்கு அலுவலர்.**





**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்:**

## பாங்காய் வளரும் பல்துறைப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில் 9 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.2.879 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்திருந்தது. மேலும் 1991-92-ஆம் ஆண்டில் 5 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.2.141 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது. மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 14 சமுதாயக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

### தொகுப்பு வீடுகள்

1990-91-ஆம் ஆண்டில் 2,135 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ரூ.308.156 இலட்சம் ஒதுக்கீடு செய்த, அரசின் குறியீடான 2,135 தொகுப்பு வீடுகளும் கட்டி முடிக்கப் பட்டுவிட்டன. மேலும், நடப்பு ஆண்டு 1991-92-ஆம் ஆண்டிற்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ரூ.367.958 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியிலிருந்து 2,240 தொகுப்பு வீடுகள் கட்ட அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. இவற்றில் இதுவரை 625 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,615 வீடுகள் கட்டி முடிக்கப்படவுள்ளன.

### ஊராட்சிக் கட்டடம்

1990-91-ஆம் ஆண்டில் 75 ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.49.900 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. இந்நிதியிலிருந்து 75 ஊராட்சிக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### சிறு பாலங்கள்

1990-91-ஆம் ஆண்டில் 144 சிறு பாலங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.17.107 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. அரசின் குறியீடான 144 பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

### ஜீவன்தாரா கிணறுகள்

1990-91-ஆம் ஆண்டில் 72 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுவதற்காக அரசு ரூ.18.05 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. இதில் 33 கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 39 பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

### தொலைக்காட்சி அறை

கிராமப்புறங்களில் அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளுக்காக 130 அறைக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.11.484 இலட்சம் அரசு ஒதுக்கியிருந்தது. அரசின் குறியீடான 130 தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கும் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மேலும், நடப்பு ஆண்டிற்கு இப்பணிக்காக அரசு ரூ.8.587 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### சாண எரிவாயு

1990-91-ஆம் ஆண்டில் 354 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க அரசு ரூ.13.614 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இதில் அரசின் குறியீடான 354 சாண எரிவாயுக் கலன்களும் அமைக்கப்பட்டுவிட்டன.

### டிரைசம்

490 நபர்கள் சுயவேலைவாய்ப்புப் பெறும் வகையில் பயிற்சி அளிக்க அரசு ரூ.10.606 இலட்சம் நிதி ஒதுக்கியதில் குறியீட்டையும் மிஞ்சும் அளவில் 495 நபர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பெறும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### கசிவுநீர்க் குட்டை

1990-91-ஆம் ஆண்டில் 31 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு ரூ.46 இலட்சம் நிதி ஒதுக்கியது. அரசின் குறியீடான 31 கசிவுநீர்க் குட்டைகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் நடப்பு ஆண்டிற்கு 21 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

### சமூகக் காடுகள்

1990-91-ஆம் ஆண்டில் 15-10 இலட்சம் மரக்கன்றுகள் தயார் செய்து விநியோகிக்க அரசு ரூ.43.16 இலட்சம் நிதி ஒதுக்கியதில், அரசின் குறியீடான 15-10 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு விட்டன. மேலும் நடப்பு ஆண்டிற்கு 15 இலட்சம் மரக்கன்றுகள் தயார் செய்து விநியோகிக்க ரூ.18.914 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் இதுவரை 11 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சி உள்ள மரக் கன்றுகள் விநியோகம் செய்யத் தயார் நிலையில் உள்ளன.

- கே.பி. நல்லதம்பி
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்**



சென்னை சித்துவக் கல்லூரிப் பிரச்சினை தொடர்பான கூட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், தலைமைச் செயலாளரும் அதில் கலந்து கொண்டனர் (26.2.1992).

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள் தமது மனைவியுடன் சென்னை வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை இல்லத்தில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார் (24.2.'92).



கும்பகோணம் மகாமகக் குளத்தில் வைத்து பூஜை செய்யப்பட்ட 20 புனித நீர் வெள்ளிக் கலசங்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது பிறந்த நாளையொட்டி 20 திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வழங்கினார் (24.2.1992).





காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் சென்னையில்- தலைமைச் செயலகத்தில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் (15.2.'92).

மாணவர் பக்கம்:

## அறிவுச்சுடர்

### கேள்விகள்

1. இந்தியாவில் உள்ள மலையிலேயே அதிக உயரமான மலை எது?

2. தமிழ்நாட்டில் உள்ள மலையிலேயே அதிக உயரமான மலை எது?

3. லிபியாவின் தலைநகரம் எது?

4. முதலில் இந்தியா அணு வெடிச் சோதனை எங்கு எப்பொழுது நடத்தியது?

5. மலேரியா கிருமியை அழிக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

6. உலகிலேயே மிகப் பெரிய சுற்றுப் பிரகாரம் உடைய கோயில் எது?

7. தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர் யார்?

8. நீராவியின் விசையைக் கொண்டு இயந்திரங்களை (Steam Engine) இயக்கலாம் என்று யார் கண்டு பிடித்தார்?

9. அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

10. M.B.B.S. என்ற சுருக்கெழுத்தின் விரிவு என்ன?

11. துளசியின் மருத்துவக் குணம் என்ன?

12. 'கொலம்பஸ்' எந்த நாட்டைச் சேர்ந்த மாலுமி?

### பதில்கள்

1. உத்திரப்பிரதேசத்தில் உள்ள கேதார்நாத் மலை. இதன் உயரம் 11,750 அடி.

2. உதகமண்டலம். இதன் உயரம் 7,500 அடி.

3. திரிபோலி

4. ராஜஸ்தான் பாலைவனத்தில் உள்ள 'போகரான்' பாலைவனத்தில், 18.5.1974 அன்று நடத்தியது.

5. 'ரோனால்ட் ரோஸ்' (Ronald Ross).

6. இராமேசுவரம் கோவில் (தென் இந்தியா).

7. 'ஜான் பெயர்ட்' (John Baird)

8. 'ஜேம்ஸ்வாட்'

9. 'காக்ஸ்டன்'

10. Bachelor of Medicine and Bachelor of Surgery.

11. 'வைரஸ்' எதிர்ப்புத் தன்மை பெற்றது.

12. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

டி. சத்தியநாராயணன்
9-ஆம் வகுப்பு 'ஆ' பிரிவு
சிங்காரம்பிள்ளை மேல்நிலைப்பள்ளி
வில்லிவாக்கம், சென்னை-600 049

## பற்களைப் பாதுகாப்போம்!



'பல் போனால், சொல் போச்சு' என்பார்கள். பற்கள் முக அழகுக்கு மட்டுமல்ல, சொற்களை நன்றாக உச்சரிக்கவும் உதவுகிறது. அதே சமயம் உணவை மென்று சாப்பிடவும் அது இன்றியமையாததாகிறது.

சிறுவயது முதலே பற்களைப் பாதுகாத்து வந்தோமானால், பிறகு பல் வலியாலும் அதனால் உண்டாகும் உடற் கோளாறுகளாலும் தொல்லைப்பட வேண்டியதில்லை.

அண்மையில் சென்னை எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடந்த பல் மருத்துவ முகாமில், பெரும்பாலான மாணவியருக்குப் பல் சொத்தை இருந்ததைப் பார்க்க முடிந்தது.

பல் சொத்தை எப்படி ஏற்படுகிறது?

'சாக்லேட், பிஸ்கட், ஐஸ்கிரீம் போன்ற பண்டங்களைச் சாப்பிடும்போது, அவற்றின் துகள்கள் பற்களிடையே ஒட்டிக் கொள்கின்றன. அதன்மூலம் பல் சொத்தை நோய் ஏற்படுகிறது' என்கிறார் பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்கள்.

'பல் ஈறுகளில் இரத்தம் கசிதல், பற்களில் காரை படிதல், வாய்ப்புண், உதடு வெடிப்பு, நாக்கு வெளுத்தல் போன்ற நோய்கள் மாணவ மாணவிகளிடம் காணப்பட்டன' என்றும், அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் குறிப்பிட்டார்-

'வசதியான குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் பல் சொத்தை நோய் ஏற்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் ஏற்கெனவே, மருத்துவச் சோதனை செய்துள்ளனர்.

'கிராமப்புறக் குழந்தைகளிடம் பல் சொத்தை குறைவாக உள்ளது. ஊட்டச் சத்துக் குறைவு காரணமாக, வாய்ப்புண் போன்ற நோய்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களிடம் காணப்படுகின்றன.

'காலையிலும், மாலையிலும் பல் துலக்குவதன் மூலமும், கீரைகள், பழங்கள் போன்றவற்றைச் சாப்பிடுவதன் மூலமும் மேற்படி நோய்கள் வராமல் தடுக்க முடியும்.'



டாக்டர் ஞானசுந்தரம் அவர்கள் தலைமையில், 60 பல் மருத்துவர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர்.

தமிழக அரசுடன் அரிமா சங்கம், இந்தியன் வங்கி, பல் மருத்துவக் கல்லூரி ஆகியவை இணைந்து இந்த முகாமைச் சிறப்புற நடத்தின.

முத்துப் போன்ற பற்களைப் பெற வேண்டுமானால், மருத்துவர்களின் முன்யோசனைப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

இளம் வயது முதலே பற்களைப் பாதுகாத்து வந்தால், முதிய வயதில், பற்களை இழந்துவிடும் நிலையிலிருந்து நாம் விடுபடலாம் அல்லவா?



மருத்துவம்:

# பக்கவாதம்

## STROKE

ஒருவருடைய ஒரு கை அல்லது ஒரு கால், திடீரென்று பயன்படுத்த முடியாமல் உணர்ச்சியற்றுப் போய்விடும்; 'ஒரு கை விழுந்துவிட்டது; ஒரு கால் விழுந்துவிட்டது' என்றெல்லாம் இதைக் குறிப்பிடுவார்கள்.

இரண்டு கைகளும், இரண்டு கால்களுமோ- முகத்திலிருந்து கால் வரையிலான முழு உடலின் சரிபாதிப் பாகமோகூட 'அவ்வாறு இயக்க முடியாதபடி மிகக் கொடூரமாகப் பாதிக்கப்பட்டு சிலரைப் படுக்கையிலேயே கிடக்கும்படி பரிதாபகரமான நிலைக்கு ஆளாக்கிவிடுவதும் உண்டு.

இவ்வாறான நிலைமையையே ஆங்கிலத்தில் STROKE என்றும், தமிழில் பக்கவாதம் என்றோ இழுத்துக் கொண்டுவிட்டது என்றோ பொதுவாகக் குறிப்பிடுவது உண்டு. எப்போதாவது - திடீரென்று இரத்தக்குழாய் தொடர்பான பாதிப்பால் ஏற்படக்கூடிய விபத்தே இது.

இதைப்பற்றிப் பூர்வாங்கமாக அறிந்து கொள்ளுவதற்காக, டாக்டர் பி. சிற்றம்பலம், எம்.டி., அவர்களைச் சந்தித்துக் கேட்டோம்; அப்போது நாம் தொடுத்த வினாக்களும், அவர் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:

- சந்திப்பு: பி.எல்.ஆர்.

**ஸ்ட்ரோக் (Stroke) என்றால் என்ன?**

இதயத்தின் ஒழுங்கான இயக்கத்தில் ஏற்படுகின்ற பாதிப்புக்கூட Stroke என்றுதான் கூறப்படும்; ஆனால், மருத்துவத் துறையில் அந்தச் சொல்லானது, நரம்பு தொடர்பான எதிர்பாராத பாதிப்பைத்தான் குறிப்பிடும். பொதுவாக இதுவே பக்கவாதம் என்று சொல்லப்படுகிறது.

**ஒருவருக்கும் பக்கவாதம் ஏற்படுவதற்கான முக்கியக் காரணங்கள் யாவை?**

மூளையில் - ஆக்ஸிஜன், சர்க்கரை ஆகிய இரண்டும் தொடர்ச்சியாக இருந்தால்தான் அதன் இயக்கம் செம்மையாக இருக்கும். நமது உடல் உறுப்புகள் எல்லாம் சரியாகச் செயல்படச் செய்யும் முக்கியக் கேந்திரம்தான் மூளை; அங்கிருந்தே நம் எண் சாண் உடம்பிலுள்ள எல்லா நரம்புகளுக்கும் தேவையான கட்டளைகள் உடனுக்குடன் பிறப்பிக்கப்படுகின்றன.

இந்த வேலை ஒழுங்காக நடைபெற இரத்தக் குழாய்களின் மூலம் ஆக்ஸிஜன், சர்க்கரை இரண்டும் இரத்தத்தோடு இரத்தமாகத் தொடர்ச்சியாக மூளைக்குப் போய்க்கொண்டே இருக்கவேண்டும். ஆக்ஸிஜன் ஒருவர் மூளைக்குக் குறைந்தது பத்து செகண்டுக்குப் போகாவிட்டால், அவர் சுயநினைவையே இழந்துவிடுவார்; ஒருவர் மூளைக்கு அவை மூன்று நிமிடம் போகவில்லையென்றால் எவ்வாறான சிகிச்சையும் பயனின்றிக் கோமா நிலைமைக்கே அந்த நபர் போய்விடுவார்.

மூளையின் வேலைகள் சிறப்பாக அமைய ஆக்ஸிஜன் - சர்க்கரை ஆகியவற்றுடன் கூடிய இரத்த ஓட்டமே முக்கியம் என்றோமல்லவா? இது தடைப்படுகிறபோது மூளையின் இயக்கம் பாதிக்கப்படும். இதுபோன்ற பாதிப்பேStroke ஆகும்.

**பக்கவாதம் ஒருவருக்கு எப்படியெல்லாம் ஏற்படக்கூடும்?**

பாதிப்பிற்கு ஆளானோரைக் கணக்கெடுத்துக் கவனித்தோமானால் முக்கால்வாசிப் பேருக்குச் சற்றும் எதிர்பாராமல் திடீரென்று அவ்வாறு வந்திருக்கும்; சிலருக்குச் சிறிது சிறிதாக ஏற்பட்டிருக்கும்.

மூளைக்குச் செல்லுகின்ற இரத்த ஓட்டம் நூறு சதவிகிதம் நின்று போய்விட்டால், உடனே பக்கவாதம் உண்டாகும். இதை Acute Stroke என்கிறோம். சிலபேருக்குச் சிறிது சிறிதாக அவ்வாறான தடை ஏற்பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வரும்; இப்படி ஏற்படும் பக்கவாதம் Stroke in Evolution எனப்படும்.

இவ்வகை வாழ்க்கை விபத்தானது பெரும்பாலும் அறுபத்



டாக்டர் பி. சிற்றம்பலம், எம்.டி.,

தைந்து வயதைக் கடந்தவர்களுக்குத் தான் வரும்.

**இளம் வயதினருக்கு வரவே வராதா?**

அப்படிச் சொல்லமுடியாது; ஒருசில நேரங்களில் - இளைஞர்களுக்கும், கைக் குழந்தைகளுக்கும் கூட வரும்.

**பக்கவாதம் என்பது பெரும்பாலும் குறிப்பிட்ட நாடுகளில் - அல்லது குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில் உள்ளவர்களுக்குத்தான் வரும் என்று சொல்லப்படுகிறதே சரியா?**

இந்த வியாதிக்கு அப்படியெல்லாம் நாடு-சீதோஷ்ண நிலைப் பாகுபாடெல்லாம் இல்லை. உலகம் முழுவதுமே இந்தவகைப் பாதிப்பு உள்ள மக்களைப் பரவலாக நாம் பார்க்க முடியும். இன்னும் திட்டவட்டமாகச் சொல்வதென்றால் நோயுற்றுச் சாகின்ற உலக மக்கள் எண்ணிக்கையை நாம் ஒரு 'சர்வே' செய்தோமானால் - மாரடைப்பின் காரணமாக இறப்போர் தொகைக்கு அடுத்ததாகப் புற்றுநோயால் இறப்போர் எண்ணிக்கையும் - அதை அடுத்து மூன்றாவதாக இந்தப் பக்கவாதத்தால், இறப்போர் தொகையும் தான் அதிக அளவில் இருக்கிறது.

**பக்கவாதம் எல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் ஒன்று தானா?**

இல்லை; இதற்கான காரணங்கள் ஒவ்வொருவருக்கு வேறுபடும்.

மூளைக்கு இரத்தம் கொண்டு போகும் இரத்தக் குழாயில் (Intracerebral Vessel) அடைப்பு ஏற்பட்டு Stroke வருவதுதான் குறிப்பிடத்தக்க முக்கியக் காரணம்.

இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயிலோ, மகாதமனி (Aorta) போன்ற மற்ற முக்கிய இரத்தக் குழாய்களிலோ எங்காவது அடைப்பு ஏற்பட்டு இரத்தக் குழாய் சிதைந்து போவதால் ஏற்படுகிற பக்கவாதம் Embolus எனப்படும்.

இதயத்தில் இரத்த உறைவு ஏற்பட்டு, இதனால் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டாலும் பக்கவாதம் ஏற்படும்.

இதயத் துடிப்பு ஒரே மாதிரி 'டக்டக்' என்றில்லாமல், அந்த ஒலியானது நேரத்திற்கு நேரம்





★ பக்கவாதம் ஏற்பட்ட நோயாளி ஒருவருடைய மூளையின் சி.டி. ஸ்கேன் தோற்றம்; அடர்ந்த கறுப்பு நிறமாகக் காணப்படுவது இரத்தம் குறைவாக இருப்பதால் பாதிக்கப் பட்டுள்ள மூளையின் பகுதி (Cerebral Infarct)

வித்தியாசப்பட்டாலோ, இதயத்தில் இரத்தத் தேக்கம் உண்டாகி, மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டாலோ கூட பக்கவாதம் வரக்கூடும்.

மூளைக்குள் உள்ள இரத்தக் குழாய் பலவீனப்படுவதனாலோ, அல்லது இரத்த அழுத்தம் அதிகரித்தோ மூளையினுள்ளே இரத்தக் கசிவு ஏற்படுவதனாலும் பக்கவாதம் வரும்; Intracerebral Haemorage எனப்படும் இவ்வகைக் கோளாறு, பெரும்பாலும் இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிக அளவில் வரும்.

ஏதாவது விபத்தில் சிக்கி, தலையில் பலமாக அடிபடுவதால், தலைக்குள்ளேயே ஒருவருக்கு இரத்தக் கசிவு ஏற்படுமானால், அவரும் பக்கவாத நோய்க்கு ஆளாக நேரிடும். இப்படி ஏற்படுவது Sub Arachnoid Haemorage எனப்படும்.

**இன்ன வயதிற்குமேல்தான் அல்லது இந்த வயதிற்குள்தான் பக்கவாதம் வரும் என்று ஏதாவது வரம்பு இருக்கிறதா?**

அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது; எந்த வயதிலும் பக்கவாதம் வரலாம். சிறுவயதிலேயே மூளை இரத்தக் குழாய் அடைப்பு சிலருக்கு ஏற்பட்டு, நீண்டகாலம் வாழ முடியாமல் மாண்டுபோகிறவர்களும் உண்டு.

இரத்தக் குழாய், சிலருக்குச் சிலவகைக் கிருமிகளால் பாதிக்கப்படுவதானாலும் இத்துன்பத்திற்கு ஆளாக நேரிடலாம்.

**பக்கவாதம் ஏற்பட்டால் பெரும்பாலும் கை அல்லது கால்மட்டும் பாதிக்கப்படுகிறதே - அது ஏன்?**

பக்கவாதம் எனப்படுகின்ற 'ஸ்ட்ரோக்'கினால் கையும் காலும் மட்டும்தான் பாதிக்கப்படும் என்பதில்லை; நம் பேசும் சக்தி முதலாக உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்குமே பாதிப்பு வருவதுண்டு.

மூளையில், நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளின் செயலையும் கட்டுப்படுத்தும் சக்தியுள்ள நரம்புகள் பல இருக்கின்றன. அந்த நரம்புக் கூட்டத்தில் எது பாதிக்கப்படுகிறதோ அதன்படி உடலுறுப்புகளும் பாதிக்கப்படும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வலதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் இடதுபாதியிலேயே அதிகம் உள்ளன; அதேபோல இடதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் வலது பாதியிலேயே இருக்கின்றன.

பேசச் செய்யும் நரம்புகள் இடது கைப் பழக்கமுள்ளவர்களுக்கு மூளை



★ பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மற்றொரு நோயாளியின் சி.டி.ஸ் கேன் படம் இது; இதில் வெள்ளைத் திட்டாகக் காணப்படுவது, இரத்தம் கட்டியாக உறைந்துள்ள பகுதியாகும் (Cerebral Haematoma).

யின் வலது பக்கமும், இன்னும் சிலருக்கு மூளையின் இரண்டு பக்கங்களிலும்கூட பிறப்பிலேயே அமைந்துவிடுவதும் உண்டு.

இவைகளையெல்லாம் வைத்துப் பார்த்தால் உங்களுக்கே உங்கள் கேள்விக்கான விடை புரியும். மூளையின் இடதுபாக இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுமானால் வலது கை, வலது கால் ஆகியவை உணர்வை இழந்துவிடும்; முகத்தில் வலது பாகமும் இழுத்துக் கொள்ளும். பேச்சு வராது.

வலதுபுறம் உள்ள இரத்தக் குழாய்கள் சிதைந்து இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்; உடலின் இடது பக்கம் அதேபோன்ற பாதிப்புகள் இருக்கும். ஆனால், பேச்சு வரும். முழு உடலும் இந்தப் பக்கவாத நோயால் பாதிப்படைவது என்பது மிகவும் குறைவு.

**இந்த நோய் கண்டால் சாதாரணக் கோளாறே ஏற்படாதா?**

சின்னச் சின்ன இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுகிறபோது சிலபேருக்குக் கை மட்டுமே பாதிக்கப்படும்; சில பேருக்குப் பேச்சு மட்டும் பாதிப்படையும் - அதாவது குரல் ஒலி இருக்குமே தவிர, பேச்சு தெளிவாக வராது; சிலருடைய கண் பார்வை கெட்டுவிடும்; ஒரு சிலருக்கு மறதி அதிகமாகிவிடும்.

சிலபேர் மனக் குழப்பத்திற்கு ஆளாகிவிடுவார்கள்; சிலருக்கு உடலின் பாதிப்பகுதி முழுவதுமே மரத்துப்போனதுபோலிருக்கும்.

**பக்கவாத நோயைக் குணப்படுத்தவே முடியாது போலிருக்கிறதே; உயிருக்கு ஆபத்தான நோயா இது?**

இந்த நோய் காரணமாக ஏற்படும் முக்கால்வாசிப் பாதிப்பைக் குணப்படுத்திவிடும் அளவிற்கு இன்றைய அறிவியல் உலகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது; ஆனால் எந்த இடத்தில் உள்ள இரத்தக் குழாயில், எவ்வாறான அடைப்பு உண்டாகி இருக்கிறது என்பதைப் பொறுத்தது இது!

நம் உடலில் உள்ள முக்கியமான இரத்தக் குழாய்களில், குறிப்பிட்ட இடத்தில் இரத்தம் உறைந்து அல்லது தேங்கி ஒருவரை மூச்சுவிடும் சக்தியை இழக்கச் செய்தாலோ - அவ்வாறின்றி அவருடைய இதயத்தின் இயக்கத்தைப் பாதித்து விட்டாலோ தான் அவரது உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிடும்.

சிலருக்கு, இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படும் அந்தக் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி நீர்க்கோவை உண்டாகிவிடுவதுண்டு; இது Cerebral Oedema எனப்படும்; இப்படி ஆகிவிட்டாலும் ஆபத்துதான். மீதியுள்ள எல்லாவகைப் பக்கவாதங்களையும் முறைப்படி சிகிச்சையளித்தால் சரிப்படுத்திவிடலாம். குறிப்பாகச் சொல்லுவதென்றால் - 'ஸ்ட்ரோக் உண்டான அறிகுறி தோன்றியதுமே ஒருவர் உடனடியாக மருத்துவரை அணுகினால், அதனால் வரவிருக்கும் ஆபத்துகளிலிருந்து அவரைக் காப்பாற்றிவிடும் வாய்ப்புகள் மருத்துவத்துறையில் அதிகமிருக்கின்றன.

சரியான சிகிச்சை பெற்றபிறகு, உடல் உறுப்புகளின் இயக்கத்திற்காக மருத்துவர் கற்பிக்கும் சிறப்பு உடல் பயிற்சிகளைத் (Physiotherapy) தவறாமல் அந்த நோயாளி செய்து வந்தாலே போதும்; பக்கவாதத் துன்பத்திலிருந்து ஒருவர் பக்குவமாகத் தப்பிக் குணம்பெற்றுவிடலாம்.

**இந்தப் பக்கவாத நோயால் பாதிக்கப்படும் வாய்ப்பு, எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அதிகம் உண்டு?**

அ. பக்கவாதம் வருகிற வாய்ப்பானது, இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிகமிருக்கிறது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினால் ஸ்ட்ரோக் உண்டாவதை ஓரளவு தவிர்க்கலாம்.

ஆ. சர்க்கரை வியாதி எனப்படுகிற நீரிழிவு நோய் உள்ளவர்களையும் பக்கவாதம் எளிதில் பற்றும்; இவர்களும் அதைத் தவிர்த்தால் இதையும் தவிர்க்கலாம்.

இ. இதய நோயால் பீடிக்கப்பட்டவர்கள் சரியான இரத்த ஓட்டம் அமையத் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருவார்கள்; அப்படிச் சாப்பிடுவதை அவர்கள் அலட்சியப்படுத்தினால், இதயத்தினுள்ளேயே இரத்தச் சிதறல் ஏற்பட்டு, உறைந்து



20 மார் 1992

★ இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்களின் அமைப்பை விளக்கும் படம்.




கறுப்பு மாலி
டைகர் பார்ப்
ஷெர்பா டெட்ரா
கௌராமி
சிப்பிலி

இவையெல்லாம் என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

இவை மீனின் திருநாமங்கள்!

ஆம். இந்த வண்ண வண்ண மீன்களை, சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள மீன்காட்சியகத்தில் கண்டு களிக்கலாம்.

பொன் மீனைப் பார்த்திருக்கிறோம். ஆனால், சாதாவால் பொன்மீனைப் பார்த்திருக்கிறோமா? இது சைனாவில் இருந்து கொண்டுவரப்பட்டது. நீர்த் தொட்டியில் இது வளைந்து நெளிந்து செல்லும் அழகே அழகு!

இங்கே 57 மீன் தொட்டிகள் உள்ளன. மின்னொளி பாய்ச்சிய இந்த அழகிய தொட்டிக்குள்ளே அந்த மீன்கள் புரியும் ஜாலங்களை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்!

டைகர் பார்ப் என்பது ஒரு வகை மீன். சிகப்பு வால் சுரா மற்றொரு வகை. இது ஆப்பிரிக்காவிலிருந்து தருவிக்கப் பட்டது.

கண்ணாடி மீன் உண்மையில் கண்ணாடியே தான். அதன் உடலின் உள்ளே உள்ள முட்கள் அப்படியே தெரிகின்றனவே! இது பர்மாவைச் சேர்ந்தது.

தென் ஆப்பிரிக்க வகையான ஷெர்பா டெட்ரா, எகிப்தைச் சேர்ந்த 'பொன்னிற சிலாப்பியா, ஜப்பானைச் சேர்ந்த சாதா கெண்டை, தாய்லாந்தைச் சேர்ந்த கறுப்பு மாலி ஆகியவற்றைப் பார்த்து அதிசயிக்கிறோம்.

துணியில், வண்ணம் மாறும் சென்னைத் துணி என்றொரு வகை உண்டு. அதைப் போல வண்ணம் மாறும் மீன் ஒன்று உள்ளது. அதன் பெயர் கோய் கெண்டை.

கோதாவரி நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட மிர்கால் மற்றும் ரோகு வகைமீன் நம் கண்ணைக் கவர் கிறது. மிர்கால் மீன் சீக்கிரத்தில் வளர்ந்து விடுமாம்!

கறுப்பு மாலி, பிளாக்மூர், மார்பிள் மாலி, வெள்ளை அக்காரா, அல்பினோ மீன் இப்படிப் பார்த்துக் கொண்டே போகிறோம். இறைவன் படைப்பில் எத்தனை அற்புதம் என்று வியக்கிறோம்.

அதோ, அது என்ன? மீன் பெட்டிக் குள் பாம்பு புகுந்து விட்டதா?

ஆம். பாம்பு மாதிரி நீளமாகத் தோற்ற மளிப்பதுதான் விலாங்கு மீன். இது ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப் பட்டது.

அதோ! அந்த மீனின் வாலைப் பாருங்கள்! வானத்துச் சந்திரன் மாதிரி இல்லை? இதற்குக் 'கறுப்பு மூன் வால் மாலி' என்று பெயர்.

நகைகள் என்றால் யாருக்குத்தான் ஆசை வராது? அதாவது ஆபரணங்கள் அழகுக்கு அழகூட்டுபவை. அவை கண்ணைப் பறிக்கும் மின்னல் கீற்றுகள்! மீன்களிலும் ஆபரண மீன்கள் இருக் கின்றன. இவை ஆபரணம் போல் அழகாய் இருப்பதால், இதற்கு அப்பெயர் வந்ததோ?

வெள்ளை மாலி, சிகப்பு வால் கத்தி மீன், விரால் இவையும் நம்மைக் கவரும் மீன்களாகும்.

ஆஸ்கார் என்று ஒரு வகை மீன்! இது பொல்லாதது. இதற்கு ஸ்டண்ட் எல்லாம் தெரியும். அதாவது இது, சண்டை போடுவதில் வல்லதாம்! அதனால் இதை மற்ற மீன்களோடு சேர்த்து வைக்காமல் தனியாக வைத்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இது தனிக்காட்டு ராஜா மாதிரி! அவ்வளவு பெரிய நீர்த் தொட்டியில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறது. இந்த ஒரு மீனின் விலை மட்டும் 350 ரூபாயாம்.

கீச்சான் - கடல்வாழ் மீன். இதன் உடல் வரிவரியாக உள்ளது. பார்க்க அழகுதான். ஆனால், தீனி மட்டும் நிறைய சாப்பிடுமாம்! மீன்களையே பார்த்துக் கொண்டு வந்த நாம், இங்கே பார்ப்பது இந்தியாவைச் சேர்ந்த நீர் ஆமைகளை, தரையில்தான் 'ஆமை வேகம்' என்பார்கள். ஆனால், தண்ணீரிலோ அதிக வேகம்!



'டார்குயின்' என்னும் பச்சை ஆமையைக்கூட இங்கே பார்க்கலாம்.

பர்மா நாட்டுக் 'கௌராமி' மீன் நீந்துகின்ற அழகே அலாதி.

புள்ளி புள்ளியாக உள்ள சிப்பிலி மீனும், வரிவரியாக உள்ள வரி மீனும் எல்லாரையும் கவரும் வகைகளாகும்.

தேவதை தேவலோகத்தில் மட்டும் இல்லை. கீழ்லோகத்திலும் உண்டு. அதாவது கடலுக்கு அடியிலும் உண்டு. ஆம். தேவதை மீன்கள் தாம் அவை. அதிலும் பொன் தேவதை மீன் என்றால் எப்படி இருக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்களேன்! இதில் கறுப்பு தேவதை மீனும் உண்டு; மார்பிள் தேவதை மீனும் உண்டு; கடல் தேவதை மீனும் உண்டு!

மனிதரில் மட்டும் விதவையர் இல்லை. மீன்களிலும் உண்டு. கணவனை இழந்த விதவையர், எளிமையாகக் காட்சியளிப்பது போல், இந்த மீனும் சாதாரணமாகக் காட்சியளிக்கிறது. அதனால், இதற்குப் பெயர் விடோ டெட்ரா (Widow Tetra).

மலேயாவைச் சேர்ந்த நீலகுராமி, பொன் வண்ணக் குராமி, மற்றும் முத்துச் செதிள் பொன் மீன் (செதிள்கள் முத்துப்போல் இருப்பதால்), குமிழ் வடிவக்கண் மீன் (கண்கள் குமிழ் போல இருப்பதால்) ஆகியவை ஆண்டவனின் அற்புதப் படைப்புகள்!

சண்டை போடும் ஆஸ்காரைப் பார்த்தோம். இதோ இந்த மீனுக்குப் பெயர் பேபி ஆஸ்கார். இது சண்டை போடுமா என்பது தெரியாது!

சாக்லெட் மீன் என்பதால், உடனே அதைக் கையில் எடுத்துச் சாப்பிட்டுவிடப் போகிறீர்கள்! தாய்லாந்தைச் சேர்ந்த இந்த மீனுக்கு என்ன பெயர் தெரியுமா? சாக்செலட் மார்பிள் மாலி!

பொன் வண்ணத்தில் புள்ளி புள்ளியாக எழிலுடன் வலம் வருவதுதான் ரோலி பார்ப்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பேசுகிறோம்.

ஒருமைப்பாடு மலர வழிவகுத்துச் செயல்படுகிறோம்.

'எல்லாரும் ஓரினம். எல்லாரும் ஓர் மக்கள்' என்று எழுதுகிறோம். அதை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வருகிறோம்.

இந்த ஒருமைப்பாடு, நீர் வாழ் உயிரினங்களான மீன்கள் உலகத்திலும் உண்டு. இதைச் சித்திரிக்கிறது ஒருமைப் பாட்டுத் தொட்டி.

நீர் நிரம்பிய ஒரு பெரிய கண்ணாடித் தொட்டி! அந்தப் பெட்டியைப் பார்க்கிறோம். ஆங்காங்கே தனித்தனியாக நாம் பார்த்துவந்த மீன்களெல்லாம், இந்தத் தொட்டியில் ஒன்றாக இருக்கின்றன. இதில் கறுப்பும் உண்டு. வெள்ளையும் உண்டு. சிறிதும் உண்டு. பெரிதும் உண்டு. ஆனால், அவை எவ்வித வேறு பாடும் இல்லாமல் ஒன்றாக நீந்துகின்றன. இதில் ஒரு விந்தை என்னவென்றால், சண்டை போடும் அந்த ஆஸ்கார் மீனும் இதில் இருப்பதுதான்!

- பி.வி. கிரி.

## எந்த நாளிலும் பார்க்கலாம்!

மீன் துறையால் இயங்கும் அரசு மீன் காட்சியகம், 1950-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பிரிட்டிஷ் காலத்தில், இந்த இடம் இராணுவத் தளவாடங்களின் இருப்பிடமாக இருந்ததாம்.

1988-89-ஆம் ஆண்டில் இந்தக் காட்சியகத்தைப் பார்வையிட்ட பெரியவர்கள் 2,25,294 பேர். குழந்தைகள் 10,271 பேர் மொத்தம் இந்த மீன் காட்சியகத்தில் 57 நீர்த் தொட்டிகள் உள்ளன. இதில் நன்னீரில் வாழும் மீன் தொட்டிகள் 55. கடல் நீரில் வாழும் மீன் தொட்டிகள் 2.

காலை 8 மணி முதல் மாலை 8 வரை இயங்கும் இந்த மீன் காட்சியகத்திற்கு நுழைவுக் கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஒரே ஒரு ரூபாய்தான்! இதற்கு விடுமுறையே கிடையாது. எந்த நாளிலும் இங்கே வரலாம்.

நம் நாட்டு மக்கள் மட்டும் அல்ல, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் இது வெகுவாகக் கவர்கிறது. குறிப்பாக, பள்ளிக் குழந்தைகள் இதைப் பார்த்துப் பயன் பெறலாம்.

## அவர்கள் சொன்னார்கள்

• நட்பு என்பது உடன்படிக்கையன்று; கைம்மாறு வேண்டாத ஓர் உறவேயாகும்.

- அண்ணல் காந்தியடிகள்

• ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட, ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.

- மெகாலே

• வருமானம் என்பது உழைத்துப் பணம் கொண்டு வருவது மாத்திரமல்ல, சிக்கனமாய் இருந்து, கையிலுள்ளதைக் கூடுமானவரை செலவழிக்காமல் இருப்பதும் வருமானமாகும்.

- சிஸரோ.

• படிப்பதைப் போல செலவு குறைந்த பொழுது போக்கு வேறில்லை. அதைப்போல் இன்பமளிப்பது வேறில்லை.

- மான்டெய்ன்

• உழைப்பால் களைப்படைபவர்களே உண்மையான இன்பம் காண்கிறார்கள்.

- பெர்னார்ட்ஷா.

போய் அங்கிருந்து மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, அதன் காரணமாகப் பக்கவாதம் வரும் வாய்ப்பு உண்டு.

ஈ. இரத்தத்தில் அதிக அளவு கொழுப்புச் சத்து இருந்தாலும், இரத்தம் அதிகக் கடினத்தன்மை உடையதாக இருந்தாலும் ஒருவர் பக்கவாதத்திற்கு ஆளாகக்கூடும்; அவ்வாறான நிலைமையில் உள்ளோர் அதிகக் கொழுப்புச் சத்தைக் (High Cholesterol) குறைத்தாக வேண்டும்.

உ. அதிக அளவில் புகை பிடிப்போருக்கும் பக்கவாதம் வருகிற வாய்ப்புகள் அதிகம் உண்டு.

ஊ. பிரைன் டியூமர் என்கிற மூளைக்கட்டி வளர்ந்தவர்களுக்கு - அதன் காரணமாக இரத்தக் குழாய் அழுத்தப்படுவதாலும் பக்கவாதம் வரலாம்.

எ. ஒற்றைத் தலைவலி உள்ளவர்களுக்கும் இந்நோய் வரக்கூடும்.

ஏ. மூளையிலோ, கழுத்திற்கு மேலோ பெரிய அளவில் அறுவைச் சிகிச்சை செய்யப்படும் நபருக்கும் பக்கவாதம் வரலாம்; கழுத்திற்குக் கீழே செய்யப்படும் அறுவைச் சிகிச்சையால் அவ்வாறான ஆபத்து வருவது மிகமிகக் குறைவாகும்.

**ஆண்-பெண் இருபாலரில் யாருக்குப் பக்கவாதம் வரும் வாய்ப்பு அதிகமிருக்கிறது?**

இந்த நோய் சாதாரணமாக இருபாலருக்குமே வரக்கூடியதுதான்; ஆனால் பெண்களுக்கு வரும் வாய்ப்பு சற்றுக் குறைவு என்று சொல்லலாம்.

கர்ப்பிணிப் பெண்கள் சில பேருக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும் (Eclampsia). இதனால், அவர்களுக்குப் பக்கவாதம் ஏற்படலாம்; பிரசவத்திற்குப் பிறகு இரத்தச் சேதாரம் அல்லது தேக்கம் (Cortical Venous Thrombasis) அதிகமிருந்தாலும் அவ்வாறு வரக்கூடும். இப்படிப்பட்ட நிலைமையில் பக்கவாதத்திற்கு ஆளான பெண்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று ஆலோசனை பெற்று அதன்படி நடந்து கொள்ளத் தவறக்கூடாது.

இன்னொரு முக்கிய விஷயம் - வழக்கத்திற்கு மாறான, அல்லது மூர்க்கத்தனமான உடலுறவு கொள்ளும் நிலைமையில், பால்வினை நோயால் - ஆண்கள் சிலருக்கும் இவ்வாறான பக்கவாதப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**'ஸ்ட்ரோக்' எனப்படுகிற இந்த பக்கவாத நோய்க்குச் சாதாரணமாக எத்தகைய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன?**

இதற்கான, பரிசோதனைகள் - சிகிச்சை முறைகள் அதிகமிருக்கின்றன என்றாலும் - குறிப்பிடத்தக்க சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

பாதிக்கப்பட்ட நபரை சி.டி.ஸ்கேன் (C T Scan) எடுத்துப் பார்க்கலாம்; அதன் மூலம் - உடலில் இரத்தம் உறைந்திருக்கிறதா, இரத்தக் குழலில் அடைபட்டிருக்கிறதா, அப்படிப் பாதித்த இடத்தைச் சுற்றி நீர் கோத்திருக்கிறதா, குறிப்பாகப் பாதிப்பு எந்த இடத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து கொண்டுவிடலாம்.

எம்.ஆர்.ஐ. டெஸ்ட் (Magnetic Resonance Imaging of Test) என்றொரு பரிசோதனை இருக்கிறது. இரத்தக் குழாய் அடைப்பு மட்டுமன்றி - அதைவிட மிக நுண்ணிய விஷயங்களையும் இந்தப் பரிசோதனையின் மூலம் அறியலாம்.

Cerebral Angiography என்றோர் மருத்துவச் சோதனை உண்டு. இதன் மூலம் இரத்தக் குழாய் வழியாகவே மருந்தைச் செலுத்தி, அது சரியானபடி மூளைக்குப் போய்ச் சேருகிறதா என்பது வரை கண்டுபிடித்துக் குணமாக்கலாம்.

Ultrasound Doppler Imaging என்கிற பரிசோதனை மூலம் இரத்தக் குழாயில் எங்கே - எந்த அளவில் அடைப்பு என்று தெரிந்துகொள்ளலாம்.

**பக்கவாத நோயை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியுமா?**

Carotid Endartectomy என்ற வகை அறுவைச் சிகிச்சையொன்று அயல்நாடுகளில் அண்மைக் காலமாக இதற்காகச் செய்யப்படுகிறது. இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டிருக்கிற இடத்தை மட்டும் வெட்டியெடுத்துவிட்டுச் சேர்த்துச் சரிசெய்துவிடும் சிகிச்சையே இது.

எந்த அளவிற்கு இவ்வகைச் சிகிச்சை பலனளிக்கும் என்பது தெரியவில்லை; இங்கெல்லாம் அந்த முறைச் சிகிச்சை வந்த பிறகுதான் அதுபற்றிச் சரியாகச் சொல்ல முடியும்.

மேனாடுகளில், மாரடைப்பு நோயாளிக்கு 'பைபாஸ்' அறுவைச் சிகிச்சை செய்வது போலப் பக்கவாத நோயாளிக்கும் ஒரு சிகிச்சையளிக்கப்படுகிறது;

EC / IC By pass என்பதே அந்தச் சிகிச்சையாகும். மூளைக்கு வெளியே உள்ள இரத்தக் குழாயை எடுத்து, மூளைக்கு உள்ளே பாதிக்கப்பட்டிருக்கும் இரத்தக் குழாயருகே பொருத்தும் சிகிச்சைதான் இது.

இப்படிப்பட்ட சிகிச்சை முறைகளெல்லாம் நம் நாட்டிற்கு வர இன்னும் சில காலம் ஆகக்கூடும்.

**பக்கவாதம் மூலம் பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகளைச் சிகிச்சை மூலம் சரிப்படுத்தினால், அவற்றைப் பழைய தெம்புடன் முன்போலவே பயன்படுத்த முடியுமா?**

முடியும். ஆனால் சிலருக்கு அப்படி நூற்றுக்கு நூறு சதவிகிதம் பயன்படுத்த முடியாமல் போய்விடுவதும் உண்டு.

**பக்கவாதம் வரப்போவதை முன்கூட்டியே அறிய முடியாதா - அது நாளடைவில் தானாகவே குணமாகி விடாதா?**

சிலரால் மட்டும் அதை முன்கூட்டியே அறிய முடியும்.

இரத்த அடைப்பால் உண்டாகிற பக்கவாதம் நாளடைவில் அல்ல, ஒரு சிலருக்கு உடனடியாகக் கூட குணமாகிவிடுவதுண்டு; இப்படி ஆவதை Transient Ischaemic Attack என்று கூறுவார்கள். ஆனால் இதே போல அந்த வகை நோயாளிகள் அனைவருக்குமே சரியாகிவிடும் என்று சொல்ல முடியாது.

ஒரு தடவை ஒருவருக்கு அது போல் உண்டாகி, உடனடியாகக் குணமாகிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதன்பிறகு அந்த நபர் 'நலமடைந்துவிட்டோம்' என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது; அப்படி வந்தது, மிக விரைவில் மீண்டும் வரப்போவதற்கான முன் எச்சரிக்கையே என்று எண்ணி - மருத்துவரை அணுகித் தன்னைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும் அதுதான் முறை - நல்லதும் கூட.

ஒருவருக்கு மூளையில் அப்படிப் பட்ட பாதிப்பு உண்டாகி, பிறகு சரியாகிவிட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அவர் ஒரு நரம்பியல் நிபுணரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும்; அலட்சியம் செய்தால் ஆபத்துதான்.

**வலிப்பு (Fits) என்பதும் பக்கவாதம் [illegible] என்பதும் ஒன்றுதானா?**

அது வேறு இது வேறு; பக்கவாதம் வந்த ஒருவருக்கு வலிப்பு நோய் வரக்கூடும்; ஆனால் வலிப்பு நோய் கண்டவருக்குப் பக்கவாத நோய் வரும் வாய்ப்பு இல்லை.

சில நேரங்களில் சில மனிதர்களுக்கு உடலின் ஒருபுறம் மட்டும் பயங்கர வலி உண்டாகக்கூடும்; (Focal Fits)எனப்படும் இதன் மூலம் ஒருபுறம் காலிலும் கையிலும் மிகுந்த பலவீனம் ஏற்படும்; ஆனால் இரண்டொரு நாளில் குணமாகிவிடும். இதனால் அவ்வளவு ஆபத்தில்லை.

●●

## தாய்ப்பால் அறிவுக் கூர்மைக்கு உதவுகிறது!

குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே சிறந்தது என்று மருத்துவர்கள் கூறிவருகின்றனர். குழந்தையின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, கூடுதலான புத்திக் கூர்மைக்கும் அது உதவுகிறது என்று ஒரு சோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் குழந்தைகளுக்கான உணவு குறித்து டாக்டர் லூகாஸ் என்பவர் ஆய்வு ஒன்றை நடத்தினார். பத்து மாதங்களுக்கு முன்பே பிறந்த 300 குழந்தைகள் குறித்து அவர் ஆய்வுகள் நடத்தினார்.

தாய்ப்பால் மட்டும் குடித்த குழந்தைகள் சோதனைகளில் 103.7 மதிப்பெண்கள் பெற்றன. ஆனால் புட்டிப்பால் மட்டுமே குடித்த குழந்தைகள் 93.1 மதிப்பெண்கள் மட்டுமே பெற்றன. இந்தக் குழந்தைகள் எல்லாம் ஏழரை முதல் எட்டு வயதுக்கு உட்பட்டவை.

## [illegible]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் பொது மக்கள் அறிந்து பயன்பெறும் வண்ணம் கருத்து விளக்கக் கூட்டங்கள் நடந்து வருகின்றன.

இம் மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு, குடும்ப நலம், கூட்டுறவு, வேளாண்மை, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, சமூக நலம், சிறுசேமிப்பு, வயது வந்தோர் கல்வி, சமூகநலக் காடுகள், மாகக் கட்டுப்பாடு, கால்நடைப் பராமரிப்பு ஆகிய மாநில அரசுத் துறைகள் மற்றும் கள விளம்பரம், நேரு இளையோர் மையம் ஆகிய மத்திய அரசுத் துறைகளின் விளம்பர அலுவலர்களை ஒருங்கிணைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள குக்கிராமங்களில் இந்தக் கருத்து விளக்கக் கூட்டங்கள் கடந்த ஏப்ரல் முதல் இவ்வாண்டு ஜனவரி முடிய நடத்தப்பட்டன.

மாதம் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 3 நாட்கள் வீதம் [illegible] 7 [illegible] 8 [illegible]

[illegible]

சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்த செய்திகளும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, பொதுமக்களிடையே கிராமங்களில் 'விழிப்புணர்வு' உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும், அரசு ஆற்றி வரும் பணிகளை, கிராமத்திலுள்ள பொதுமக்கள் குறிப்பாக மகளிர் எளிதில் அறிந்து பயனடையும் முறையில் விளக்கிக் கூறப்பட்டு வருகின்றது.

இம்முகாம்களில், சிறுசேமிப்பு அஞ்சலகக் கணக்குகள் மிக அதிக அளவில் ஆலங்குளம் பகுதியில் சேகரிக்கப்பட்டுள்ளன. அரசின் ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளால் இதுவரை கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் அத்தொழிலை அறவே விட்டொழித்து, ஆலங்குளத்தில் நடைபெற்ற இவ்விளம்பர முகாமின் நிறைவு நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் 11 பேர்கள் அறவே இத்தொழிலை விட்டுவிட்டதாகத் தெரிவித்தார்கள். புதிய தொழில் மேற்கொள்ள இவர்களுக்கும் உடன் உதவிகள் உடனடியாக வங்கிகள் மூலம் அளித்திட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்து உள்ளார்.

[illegible]

# நூல்நயம்

### நீங்களும் பத்திரிகை நிருபராகலாம்

ஆசிரியர்: மணிமாறன்
வெளியீடு:
குமரன் பதிப்பகம்,
2, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:84 விலை:ரூ.10/-

நாட்டு நடப்புகளை நாளும் நமக்குத் தெரிவிப்பவை பத்திரிகைகளாகும். மக்கள் தொடர்புச் சாதனத்தின் மிக முக்கியமாகக் கருதப்படும் பத்திரிகையில் நிருபர் பணி என்பது மகுடமாக விளங்குவது.

நிருபர் என்பவர்க்கான தகுதிகள், திறமைகள், பணிகள், சாமார்த்தியம், சாதுர்யம் என்பன போன்ற இலக்கணங் களைக் கூறுகிறது இந்நூல். பத்திரிகைத் துறையில் குறிப்பாக நிருபராக விரும்பும் எழுத்தாளருக்கு இந்நூல் பெரிதும் பயன் படும்.

— பி.வி. கிரி.

### மழைமேகம்

ஆசிரியர்: வாழியூர் வே. இராச வேலன்
வெளியீடு:
பேரரசு பதிப்பகம்,
வாழியூர் அஞ்சல் (வழி)
ஒண்ணுபுரம்-632 315

பக்கம்:100 விலை:ரூ.14/-

இந்நூலில் எழுவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், அவர்களது கருத்துரைகளும் இடம் பெற்றுள்ளன.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பண்டிதமணி கதிரேசனார், நாமக்கல் வெ. இராமலிங்கனார், [illegible] இயற்றிய [illegible] தேவர், இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் [illegible], [illegible] அடிப்பொடி [illegible], [illegible] திரு.வி.க [illegible] பற்றிய வாழ்க்கை [illegible] போது, அவர்களது தூய தமிழ்த் தொண்டு, சமுதாயத் தொண்டு முதலான தன் மைகள் நம்மை மகிழ்விக்கின்றன.

[illegible] மட்டுமன்று, மற்றவர்க்கும் பயன்படும் [illegible].

-பொ. [illegible]

### [illegible]

ஆசிரியர்: வெ. [illegible]
வெளியீடு:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,

சென்னை-600 098.

பக்கம்:66 விலை:ரூ.7/-

நூலை இரு பகுதியாகப் பிரித்த ஆசிரியர் அணிய வேண்டிய அறவுரைகள் என்பதன் கீழ் அகிம்சை, அடக்கம், ஈகை, கருணை, நட்பு, பொறுமை, முயற்சி, வலிமை, வீரம் போன்றவை பற்றிய அறிஞர்களின் அறவுரைகளையும், அகற்ற வேண்டிய அறவுரைகள் என்ற தலைப் பின் கீழ் (அறவுரைகள் எனில், அகற்றப் படுவது எப்படிப் பொருந்தும்? அகற்ற வேண்டியவை பற்றிய அறவுரைகள் என்று தலைப்பிட்டிருந்திருக்க வேண்டும்) அச்சம், செருக்கு, பேராசை, பொறாமை போன்றவை பற்றிய பெரியவர்களின் அறிவுரைகளையும் தொகுத்து வழங்கி யுள்ளார்.

—குமாரன்

### 'சம்மதமும் சம்மதமே'

ஆசிரியர்: அழகு பழனிச்சாமி
வெளியீடு:
துரை இராமு பதிப்பகம்
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம், சென்னை-600 045.

பக்கம்:128 விலை:ரூ.15/-

[illegible] இந்நூலில் உள்ள 18 சிறுகதைகளும் சிறுவர்களுக்காக எழுதப்பட்டவையாகும். [illegible], மனப்பான்மை, ஒற்றுமையின் உயர்வு, நல்ல நட்பு போன்ற பண்புகளை [illegible] கதை அமைப்பு, விறுவிறுப்பான நடை ஆகியவை இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

ஒவ்வொரு கதையும் சிறுவர்களின் மனதில் நிறைந்து நிற்கும் என நம்பலாம்.

### [illegible]

ஆசிரியர்: [illegible]
வெளியீடு:
[illegible] பதிப்பகம்
17, [illegible] கோயில் தெரு,
[illegible], சென்னை-[illegible].

பக்கம்:[illegible] விலை:ரூ.14/-

[illegible] வீடியோ கேசட் ரிகார்டர் (வி.சி.ஆர்.) வீடியோ கேசட் பிளேயர் (வி.சி.பி.) [illegible] என்பதை யும், வி.சி.ஆரில் வீடியோ பதிவு செய் யும் முறைகள், இவற்றில் ஏற்படும் பழுதுகளைப் [illegible] சரிசெய்யும் முறைகளும் இந்நூலில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன.

தேவையான வரைபடங்களும் இந் நூலில் இருப்பதால், ஆர்வம் உள்ளவர்கள் இந்நூலின் துணையோடு வி.சி.ஆர்., வி.சி.பி. ஆகியவற்றைச் சிறந்த முறை யில், குறைந்த செலவில் பழுதுபார்த்துக் கொள்ள இயலும்.

—என்.கே.சாமி

### 'விண்ணிலிருந்து மண்ணிற்கு'

ஆசிரியர்: அறந்தை நாராயணன்
வெளியீடு:
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:104 விலை:ரூ.10/-

புகழின் உச்சியிலிருந்து சாதாரண நிலைக்கு இறக்கப்பட்ட ஒரு நடிகையின் கதை.

கதாநாயகி சினிமா வாய்ப்புகளை இழந்து, சொந்தத்தில் படம் தயாரிக்கத் தொடங்கி, இரண்டு படங்களிலும் தோல்வியைத் தழுவி, இதன் காரண மாகச் சொத்துக்களையும் நகைப்பணையும் இழந்து, துரோகிகள், நண்பர்களிடையே உலவி... இறுதியில் [illegible], [illegible] சென்று பயனுள்ள நாடகங்களை நடத்த உறுதி கொள்ளும் 'மக்கள் மேடை' என்னும் குழுவில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்கிறாள்.

'குப்புராஜ்' நல்ல பாத்திரம். வேக மான, சிக்கனமான, கூர்மையான எழுத் தாற்றல் கதையை அற்புதமாகக் கொண்டு செல்கிறது.

### [illegible]

ஆசிரியர்: [illegible]
வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:160 விலை:ரூ.20/-

[illegible] மனிதர்களின் [illegible] விவரிக்கும் சிறுகதைகளின் தொகுப்பு.

உணர்ச்சி பூர்வமான [illegible] நாகரிகத்தை [illegible] சிறுகதையும் உண்டு.

தெளிவான நடையும், [illegible] பிரயோகங்களும் ரசிக்கத் [illegible]. [illegible], அப்பா, தெருப் பாடகன் போன்ற கதாபாத்திரங்கள் நினைவில் நிற்பவை.

—[illegible]





# நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு

'வாழ்க்கை வாழ்வதற்கே!' எனும் முழக்கம் கேட்கிறது. ஆனால், 'எத்தகைய வாழ்க்கை வாழ்வதற்கு?' எனும் வினாவினை எழுப்புவோ மானால், பலர் வளமாக வாழ்வ தற்கேஎன்றுபதில் கூறுவர். ஆயினும் நலமாக வாழ்வதே சிறந்த வாழ்க்கை யாகும். எத்துணை வளம் இருந் தாலும், நலம் இல்லையென்றால் என்ன பயன்? நோயுடைய ஒருவன் எவ்வளவு செல்வத்தைப்பெற்றிருந்து தான் என்ன பயன்? எனவே, நலமான வாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்டு வளமான வாழ்வை அமைத்தால் பயன் கிட்டுமன்றோ?

மனிதன் உடல், உள்ளம், உயிர் எனும் ஆன்மா ஆகிய மூன்றினால் உருவாக்கப்பட்டுள்ளான். உடல் நலம் மனிதனுக்கு முதல் தேவை. அடுத்து மனநலம். மனநிறைவே மனநலமாகும். 'உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்னும் திருமந்திரத்தால் இந்த உண்மையை அறியலாம்.

'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பர். வறுமை என்ற சொல், பொருள் வறுமையைக் குறித்து நிற்காமல், உடல் வறுமை, உள்ள வறுமை, எண்ண வறுமை, செயல் வறுமை, நடத்தையில் வறுமை இவற்றையே குறித்து நிற்கிறது. மனிதன் புறச்சூழல்களால் தாக்கப் பட்டு, மனக் கலக்கம் அடையும் பொழுதுதான் மேற்கூறப்பட்ட வறுமைகள் வந்தடைகின்றன.

இத்தகைய கலக்கம் மனத்தைக் கலக்காமல் இருக்க சிந்தனையில், சிரத்தையுடன் செயல்பட வேண் டும். ஒருங்கிணைந்த பண்பட்ட உள்ளம், நேர்மையான ஒழுக்க நெறிகள், ஊக்க உணர்வு, ஒற்றுமை, சுறுசுறுப்பு, தெளிவான நினைவாற் றல் முதலிய பல்வகைப்பட்ட நெறி களுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகு செய லுக்கு விளையாட்டுப்பெரிதும்பயன் படுகிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளவேண்டும்.

**டாக்டர் டேவிட் ஜி. எபினேசர்**
ஒய்.எம்.சி.ஏ.
விளையாட்டு மேனிலைப்பள்ளி
தலைமை ஆசிரியர்
நந்தனம், சென்னை.

'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி கூறியதற்கு முன்பே நமது சிற்றிலக்கியங்கள் விளையாட்டிற் குப் பருவங்களைக் கண்டு மகிழ்ந் தன. சிற்றில், சிறுதேர், சிறுபறை, அம்மானை, கழங்கு, ஊசல் என்று அறிமுகப்படுத்தின. இத்தகு விளை யாட்டுகள் காலத்தின் மாற்றத் தினால் பல்வேறு வடிவில் உருக் கொண்டு வளர்ந்தன. 'ஏறு தழுவு தல்' என்ற வீர விளையாட்டு இல் லற நெறிக்குக் காதல் உணர்வுக்கு வழிகாட்டி நின்றது. ஒழுக்க நெறிக்கு உரம் இட்டது எனலாம்.

இத்தகைய விளையாட்டுகள் இளை ஞர்கள் வாழ்வில் குறிப்பாக, பள்ளி மாணாக்கர்களிடத்துப்பெரிதும் இடம் பெற்று நமது நாட்டைச் சிறப்பிக்க உயர்விக்க வேண்டும் என்ற குறிக் கோளில், தமிழக அரசு 1980-81-ஆம் ஆண்டில் இளைஞர் மற் றும் விளையாட்டுப் பயிற்சித்துறை மூலம் விளையாட்டுப் பள்ளிகளை யும், விளையாட்டு விடுதிகளையும் அமைத்தது. இதன் மூலம் மாநிலத் தின் பல்வேறு இடங்களில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வெளிக்கொணர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது.



குறிப்பாக, கிராமங்களில் பயிலும் மாணவர்கள், மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அம்மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உறையுள் மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி விளையாட்டு மேனிலைப்பள்ளியும் ஒன்றாகும். இப்பள்ளியில் பல்வேறு விளையாட்டுகள் மாணவர்களின் கல்வித்திறன் பாதிக்கா வண்ணம் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் பல்வேறு அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிகின்றனர். குறிப்பாக வங்கிகள், துறைமுகம், இரயில்வே போன்ற துறைகளில் விளையாட்டு வீரர்களாய்த் திகழ்வதோடு நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்துள்ளனர்! இம்மாணவர்களின் வாழ்க்கை வளம் பெற விளையாட்டே துணை நின்றது என்பதை அறியலாம். தன்னையும் உயர்த்திக் கொண்டு நாட்டின் பெருமையையும் உயர்த்திக் கொடுத்த இம்மாணவர்களின் செயல் போற்றத் தக்கதே.

இளைஞர்கள் மட்டுமன்றி முதியவர்களும் விளையாட்டில் கவனம் செலுத்தலாம். முதியவர்கள் தங்கள் உடல் வ்ளத்திற்கும், மன வளத்திற்கும் தேகப் பயிற்சிகள் செய்து வருங்கால இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாய்த்திகழலாம்.

'விளையாட்டு வினையாகிவிட்டது' என்ற பழமொழியை நாம் அறிவோம். சில பெற்றோர்கள் தனது பிள்ளை படிப்பில் கவனம் செலுத்தாவிட்டால் 'எப்பொழுதும் விளையாடிக் கொண்டே இருக்கிறான். இவனைச் சற்றுக் கண்டித்து திருத்துங்கள்' என்று ஆசிரியரிடத்தில் புகார் கூறுவதுண்டு. ஆசிரியர் அவனிடம் புதைந்து கிடக்கும் விளையாட்டுணர்வை வெளிக்கொணர்ந்து நல்ல விளையாட்டு வீரனாக மாற்றி விடுவதும் உண்டு. இதனையே மேலேகூறப்பட்ட பழமொழி நினைவுறுத்துகிறது.

'விளையாட்டு விளையாட்டிற்காகவே' என்ற கொள்கை மாறி, இன்று விளையாட்டு ஒரு தொழிலாக ஏற்றம் பெற்றுள்ளது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இக்காலச் சூழ்நிலையில் வெறுப்புற்ற இளைஞர்கள் தங்களுடைய உள்ளத்தைத் தீய வழிகளில் செலுத்திப் பல்வேறு தீய நடத்தைகளுக்கு உட்படுகின்றனர். இவர்களுடைய உள்ளம் பண்பட வேண்டுமானால் விளையாட்டுத் துறையிலே கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தகு செயலினால் நற்பண்புகள் வளரும்; மனம் ஒருமுகப்படும்; உடல் வலுப்பெறும்; தன்னம்பிக்கை வளரும்; ஒற்றுமை உணர்வு மேலோங்கும்; ஒழுக்கநெறி சிறக்கும். வாழ்வு வளம் பெறும். பாரதி அழைத்த ஒளிபடைத்த கண்களையுடைய இளைஞர்களும், உறுதி கொண்ட நெஞ்சினையுடைய இளைஞர்களும், உரம் கொண்ட தோள்களையுடைய இளைஞர்களும் நாட்டிலே தோன்றி வாழ்வை வளம் பெறச் செய்வர். நமது நாடு விளையாட்டில் தலைசிறந்து விளங்கும். இளைஞர் சமுதாயம் வீறு கொண்டு எழும். அப்பொழுது புதியதோர் உலகம் அமையும்.

நோயற்ற வாழ்விற்கு விளையாட்டு அடிப்படையாகின்றது. உடல் நலம் பற்றிய அறிவை ஒவ்வொரு மனிதனுக்கும் விளையாட்டு கற்பிக்கின்றது. உடல் நலம் பெற்றால், உள்ளத்தில் நம்பிக்கை எழும். வாழ்வு வளம் பெறும்!



# நிம்மதியான நிலத்தடி நீர்ப் பாசனம்

உழவுத் தொழிலுக்கு நிலம், நீர், விதை ஆகிய மூன்றும் இன்றியமையாததாகும். இவற்றுள் நீர் மிகவும் அவசியமானது. மொத்த நிலப் பரப்பில், பயிர்ச் சாகுபடி பரப்பு நீர் கிடைக்கக்கூடிய அளவைப் பொறுத்தே அமைவதாகும். வேளாண்மைக்கு நீர் கிடைக்கக்கூடிய அளவைக் கொண்டும், அதன் தன்மையைக் கொண்டும் வேளாண்மையைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

1. ஆற்றுப் பாசனம்
2. ஏரிப் பாசனம்
3. கிணற்றுப் பாசனம்

இம் மூன்றில், கிணற்றுப் பாசனம், நிலத்தடியிலுள்ள நீரை வெளிக் கொணர்ந்து விவசாயம் செய்வது. இம் மூன்று பாசனத்தில் கிணற்றுப் பாசனம் அல்லது நிலத்தடி நீர்ப்பாசனம் மிகச் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குரிய மழைப் பருவங்கள், தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவங்கள். இவற்றில் தென்மேற்குப் பருவமழை ஆண்டொன்றிற்குச் சுமார் 450 மி.மீ. மழையையும், வடகிழக்குப் பருவமழை ஆண்டொன்றுக்குச் சுமார் 750 மி.மீ. மழையையும் கொடுக்கக் கூடியது. சராசரியாக, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1,210 மி.மீ. மழையைச் செங்கற்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டம் பெறுகிறது. மிக அதிக மழை வடகிழக்குப் பருவத்தில் கிடைக்கிறது. ஆனால் பருவமழை பலமுறை பொய்த்து விடுவதால் வறட்சியும் - அதிகம் பெய்வதால் கடும் வெள்ளமும் ஏற்பட்டு வேளாண் மக்களுக்கு ஒரு பெரிய புதிராகவே அமைந்து விடுகிறது. ஆதலால் வேளாண் மக்கள் தங்களது வாழ்க்கையையும், விளைச்சலையும் முறைப்படுத்தப் போராட வேண்டியுள்ளது. ஏரியில் நீர் உள்ளபோது விவசாயமும் மற்ற காலங்களில் வேலையற்றும் இருக்க வேண்டியுள்ளது.

அதேபோல ஏரியிலுள்ள நீர் நாற்றங்கால் முதல் அறுவடை முடிய கிடைக்குமா - கிடைக்காதா? என்ற சந்தேகத்திலேயே பயிர் செய்ய வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது வருமானத்தை முறைப்படுத்த விவசாயத்தைக் கைவிட்டு நகரத்தை நாட வேண்டியுள்ளது.

இத்தகைய நிலைமையில், மற்ற பாசன வகைகளை ஆராயும்போது, நிலத்தடி நீர்ப்பாசனம் அவர்களுக்குக் கை கொடுக்கிறது. நிலத்தடி நீர்ப்பாசனம் மற்ற பாசனத்தைப் போல் அல்லாது விவசாயிகளுக்குத் தொடர்ந்து நீரைக் கொடுக்க வல்லது. ஒரு திறந்த வெளிக் கிணறோ, ஆழ்துளைக் கிணறோ, அமைத்திட்டால் அதில் கிடைக்கும் நீரை அளவிட்டு அதற்குத் தகுந்தாற்போல் முப்போகமும் பயிர் செய்ய இயலும். ஆனால் ஏரிப்பாசனத்திலும், ஆற்றுப் பாசனத்திலும் ஒரு போகம் பயிர் செய்வதே தற்போது கடினமாக உள்ளது. ஆதலால் பரம்பரை வழிமுறையாக உள்ள பாசனத்திற்கு ஒரு சிறந்த மாறுதல் நிலத்தடி நீர்ப்பாசனம் ஆகும்.

## நிலத்தடி நீர்ப்பாசனமும், ஏரிப்பாசனமும்

பருவமழை பெய்தால்தான் ஏரியில் நீர் நிரம்பும். ஏரியில் நீர் உள்ளபோதுதான் பாசனப் பகுதியில் பாசனம் செய்ய இயலும். ஏரியில் வண்டல் படிவதாலும், ஏரியின் கரைகள் சரியாகப் பராமரிக்கப் படாததாலும், அதன் கொள்ளளவு குறைகிறது. அதற்கேற்றாற்போல், பாசனப் பகுதியில் பாசனப் பரப்பும் குறைகிறது. மேலும் ஏரியிலிருந்து பாயும் நீர் மதகு மூலம் நிலத்தில் பாய்ந்து, ஒவ்வொரு மடையாகக் கடை மடைக்குச் செல்கிறது. இதனால் நீர் அதிகமாகச் செலவாகிறது. முதல், இடை கழனிகளுக்குத் தேவையான நீர் கிடைத்த பிறகே கடை மடைக்குத் திறந்து விடப்படுகிறது. அதனால், கடை மடையில் நிலமுள்ள விவசாயிகள், மேல் கழனி விவசாயிகளை அனுசரித்துச் சென்றால்தான், விவசாயம் செய்ய ஏதுவாகிறது. மேலுள்ள கழனியில் உரமிட்டால், கீழுள்ள கழனிகளுக்கு நீர் திறந்து விடுவதில்லை. அதனால் பயிர் வாடினாலும் கவலையும் ப[illegible]. அதனால் விளைச்சல் [illegible] குறைகிறது. ஆயக்கட்[illegible] வது ஒரு [illegible]லையில் [illegible]தாக்கினாலும், தொடர்ந்து [illegible] பாசனப் பரப்பிலும் [illegible]வி விளைச்சல் குறைவாகிறது.

அதேபோல், வடிகால் [illegible] ஏரிப் பாசனத்தில் [illegible], கீழுள்ள கழனிகளுக்கு [illegible] இருந்துகொண்டே [illegible], பயிர் அழுகுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால் மேற்குறிப்பிட்ட அனைத்துக் குறைகளும் நிலத்தடி நீர்ப்பாசன முறையில் இல்லை. நிலத்தடி நீர் ஒரு கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறு மூலம் கிடைக்கக்கூடிய அளவு மிகத் துல்லியமாகக் கணக்கிட முடியும். கணக்கிட்டுத் தகுந்த பயிர் சுழற்சி மூலம் முப்போகமும் விவசாயம் பார்க்க இயலும். நிலத்தடி நீரின் அளவைத் துல்லியமாகக் கணக்கிட முடிவதால், நாற்றங்கால் முதல் அறுவடை முடிய பயிருக்குத் தேவையான முறையில், தேவையான அளவில், தேவையான நேரத்தில் கிடைக்கப் பெறச் செய்யலாம். மிகச் சரியான அளவே நீர்ப்பாசனம் செய்வதால் வடிகால் வசதிகளே தேவையிராது. எல்லாக் கழனிகளுக்கும், தேவையான நேரத்திலும், பிறரின் தலையீடு இல்லா


**இரா. மு. சக்திவேலு**
**செயற்பொறியாளர்**

**பி.வி. சுப்பிரமணியம்**
**உதவிப் பொறியாளர்**
**வேளாண்மைப் பொறியியல் துறை,**
**சென்னை.**

மலும் தத்தம் வசதிக்கேற்ப பாசனம் செய்ய இயலும். வரப்புச் சண்டை சச்சரவுகளும் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் அறவே இல்லை.

ஏரிப் பாசனத்தில் முதல், இடை, கடை அனைத்துக் கழனிகளிலும் ஒரே சமயம் நாற்றங்கால் முதல் அறுவடை வரை உரமிடுதல், மருந்தடிப்பது முதல் அனைத்து வேலையும் நடப்பதால் வேலையாட்கள் தட்டுப்பாடு அதிகம். ஆதலால் கூலியும் அதிகம். வேலையாட்கள் தேவையான நேரத்தில் கிடைக்காவிடின் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தின் ஒரு விவசாயி தனக்குத் தேவையான நேரத்தில் பயிர் செய்ய முடிவதால் வேலையாட்களைக் குறைந்த கூலிக்கு எளிதாகப் பெற முடியும்.

ஏரிப் பாசனத்தில் நெல், மணிலா பயிர்களைத் தவிர வேறெந்தப் பயிர்களையும் பாசனம் செய்ய இயலாது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் நெல், மணிலா, பயிர் வகைகள், பூச்செடிகள், தோட்டப் பயிர்கள், பழவகைகள் மாட்டுத் தீவனப் பயிர்கள் அனைத்தும் பயிர் செய்ய இயலும். ஏரிப் பாசனத்தில் பயிர் சுழற்சி முறையைக் கடைப்பிடிக்க முடியாததால், நிலத்திலுள்ள சத்து ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே செல்லும். அதனால் ஆண்டுதோறும் செயற்கை உரமிடுதல் அவசியமாகிறது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் பயிர் சுழற்சி முறையைப் பின்பற்ற இயலும். மேலும், அவுரி, கொளுஞ்சி, டெயின்சா போன்ற பயிர்களையும் ஊடுபயிராகப் பாசனம் செய்ய இயலுவதால் மண்ணின் தன்மைக்கேற்ப உரமிடுதல் போதுமானது. அதனால் நிலத்தின் தரம் தாழ்ந்து விடாமல் பாதுகாக்கப்படுகிறது. பயிர்ச்சுழற்சி முறையைப் பின்பற்றுவதால் விளைச்சல் அதிகமாகிறது.

அதேபோல, கூலி ஆட்கள் குறைந்த இடத்தில் கூட தோட்டப் பயிர்கள் அமைத்து, நிலத்தடி நீர் மூலம் பாசனம் செய்வதால் அதிகக் கூலியாட்கள் தேவையில்லாமல் பாசனம் செய்ய இயலுகிறது.

## நிலத்தடி நீரின் சிறப்பு

பெரும்பாலும், முந்தைய காலத்தில் மேட்டு நிலமான புன்செய்ப் பகுதியில் மழையை எதிர் நோக்கிப் பாசனம் செய்து வந்தார்கள். ஆதலால் இப்பாசனத்தையே மழை மூலம் பாசனம் பெறும் பரப்பு என்று தனியே பிரித்து விவசாயம் செய்து வந்தனர். மழையின் அளவு, நேரம், காலம் ஆகியவற்றை மனிதனால் நிர்ணயிக்க அல்லது கணக்கிட முடியாததால் புன்செய்ப் பகுதி விவசாயிகள் குறைந்த வருமானமே பெற்று வந்தனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் மழையை நம்பியிருந்தால், மிகுந்த பிரச்சினைக்குள்ளாகியிருந்தது. அதனால் புன்செய் விவசாயிகள், விவசாயிகள் என்ற பிரிவிலும், கூலியாட்கள் என்று பிரிவிலும் சாராதிருந்தனர். மிகச் சுருக்கமாக விளக்குவோமானால், அவர்கள் பகுதிநேர விவசாயிகள் ஆவார்கள். தங்களது வாழ்க்கைத் தேவைக்கு மழை இல்லாத அல்லது தவறிய நேரத்தில் வேறு ஒரு தொழிலையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. அதேபோல நன்செய், விவசாயிகள், தங்களிடம் உள்ள புன்செய் நிலங்களில் அதிக வருவாய் இல்லாததனால், புன்செய் நிலங்களைத் தரிசாக விட்டுவிட்டு நன்செய் நிலத்தையே கவனித்து வந்தனர்.

இம்முறையை மாற்ற வேளாண் பொறியாளர்கள் முன்வந்து ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்த வெளிக் கிணறு அமைத்து விவசாயிகளின் தரத்தை நிரந்தரப்படுத்தும் பொறுப்பை மேற்கொண்டனர். அதனருமையை உணர்ந்த விவசாயிகள் தற்போது நன்செய் நிலத்திலும் கிணறு அமைத்து விவசாயத்தில் பெரும் இலாபம் ஈட்டினார்கள். அதை மற்ற தொழில் போலவே முழுநேரத் தொழிலாகச் செய்கின்றனர். ஆழ்துளைக் கிணறு அமைத்ததனால் புன்செய் நில மக்கள் நன்செய் நில விவசாயிகளைவிட அதிக விளைச்சலை ஈட்டி, அதிக இலாபம் பெற்றார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் நன்செய் நில விவசாயிகள் பொறாமை கொள்ளும் வண்ணம் முற்றிலும் மாறுதல் அடைந்தது.

ஒரு சிறந்த உதாரணமாக, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள திருத்தணி வட்டத்திலுள்ள, கொத்தூர் கிராம விவசாயிகளைப் பார்க்கலாம். திருத்தணி வட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலேயே குறைந்த அளவு மழை பல ஆண்டுகளாகப் பெற்று வருகிறது. சுமார் பத்தாண்டிற்கு முன் கொத்தூர் கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் மானாவாரி பயிர் மட்டுமே செய்துவந்தனர். அதனால், அவர்களது வாழ்க்கை மிகவும் பிரச்சினைக்குரியதாயிருந்தது. அவ்வூரிலுள்ள சில விவசாயிகள் எமது துறையினரை அணுகி திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்றை அமைத்தனர். நிலத்தடி நீர் கிடைக்கக் கூடிய அளவைப் பொறுத்து



நெல், கடலை, பூச் செடிகளைப் பயிரிட்டு இன்று ஒவ்வொரு விவசாயியும் குறைந்தது சுமார் 5 ஏக்கர் நிலம் வைத்துள்ளார்கள். அவற்றுள் 3 ஏக்கரில் நெல்லும், கடலையும் மாறிமாறிப் பயிரிடுகின்றனர். மீதியுள்ள 2 ஏக்கரில் மல்லி, முல்லை, சம்பங்கி போன்ற பூச்செடிகளைப் பயிரிட்டுள்ளார்கள். பூச்செடிகளிலிருந்து வரும் வருவாயை அன்றாடச் செலவிற்கும், நெல் கடலை போன்ற பயிரினால் வரும் வருவாயை நிலம், வீடு, தோட்டம் போன்ற முதலீட்டிலும் ஈடுபடுத்தி, சுமார் பத்தாண்டில் அவர்களது வாழ்க்கை முறையையே மாற்றிக் கொண்டுள்ளனர். அவ்விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தற்போது கொத்தூர் கிராமமே ஒரு பூஞ்சோலையாகத் திகழ்கிறது.

## சிக்கனப் பாசன முறைகள்

சிக்கப் பாசன முறை என்பது வேறு எந்தப் பாசன முறையிலும் நினைக்க முடியாதது. ஒரு கிணறு அமைத்து, பயிரின் தேவைக்கேற்ப, நீரின் அளவிற்கேற்ப, சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், இரட்டைக் குழாய்ப் பாசனம் போன்ற சிக்கனப் பாசன முறைகளைப் பயன்படுத்த முடிகிறது. அதனால் அதிக விளை நிலத்தில் பயிரிடப்பட்டு அதிக விளைச்சலையும், பெறமுடிகிறது. ஒரே வகையான பயிரிடப்படும் முறையினையும் மாற்றி, குறைந்த அளவு கூலியாட்களுடன் விவசாயம் செய்ய இயலும். வேளாண்மை ஒரு 'இலாபமில்லாத் தொழில்' என்ற பெயரையும் மாற்றி, வேளாண்மை ஒரு பெரும் இலாபம் தரும் தொழில் என்ற நம்பிக்கை வளர்ந்து வருவதற்குக் காரணம் நிலத்தடி நீரின் மூலம் செய்யப்படும், பாசனமே ஆகும். எனவேதான் இன்று பெரிய தொழிலதிபர்களும் வேளாண்மையில் பெரிய முதலீடு ஏற்படுத்தி வேளாண்மை செய்ய முன் வந்துள்ளனர்.

இதைத்தவிர விவசாயத்தை ஒட்டியுள்ள இலாபம் தரும் தொழில்களான கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை, மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்த்தல், காளான் வளர்த்தல் போன்ற தொழில்களையும் மிக நல்ல முறையில் நடத்த இயலும் என்ற நம்பிக்கையினையும் ஊட்டி வருகிறது.



★ சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழையெளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

டாக்டர் எம்.ஜி.ஆர்.

## விஞ்ஞானமும் நிலத்தடி நீரும்

இன்று தரிசு நிலம் வாங்கி, விஞ்ஞானத்தின் உதவியோடு நாளை ஆழ்துளைக் கிணறு அமைத்து, நாளை மறுநாள் நாற்றங்கால் அமைக்க இயலும் என்ற கூற்று மிகையாகாது. அந்த அளவிற்கு நிலத்தடி நீரினால் விவசாயம் விஞ்ஞானத்தோடு பின்னி பிணைந்து வளர்ந்துள்ளது. அதே போல உழுவது முதல் அறுவடை வரை பல சாதனங்கள் விவசாயத்தை இலகுவாக மாற்றும் என்பது தெரிந்த ஒன்றாகும்.

இப்போது நிலத்தடி நீரின் மூலமும், நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம், இரட்டைக் குழாய்ப் பாசனம் போன்ற சிக்கன முறைகளின் மூலம் பாசனம் செய்வதால் விவசாயம் ஒரு முழு இயந்திரமான நிலையை (Complete Automation) அடைந்துள்ளது.

அதாவது, இருந்த இடத்திலிருந்து எல்லாப் பயிருக்கும் தேவையான நீர், ஊட்டச்சத்து, மருந்து ஆகியவற்றைத் தேவையான அளவில், தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் - அதாவது வேரின் அருகில் கொடுக்க இயலும். அதனால் பயிர்ப் பாசனத்தைப் பொறுத்த வரையில் ஒரு இயந்திரம் முழுவதுமாகப் பார்த்துக் கொள்ளக் கூடும் என்ற நிலைக்கு இன்று விஞ்ஞானம், நிலத்தடி நீர் அமைத்துத் தரும் வாய்ப்புகளினால் வளர்ந்துள்ளது.

இதைத் தவிர நிலத்தடி நீரை வெளிக் கொணர மின்சக்தி, எரிசக்தி, காற்றாலை, சூரிய சக்தி, ஆகிய சக்திகள் பயன்படுத்தப்படுவதன் மூலம் விவசாயம் மிக எளிதாக்கப்படுகிறது.

மேலும் உவர், களர் நிலத்தைச் சீர்திருத்தவும், உவர், அமிலத் தன்மையுள்ள நீரின் தன்மையையும் விவசாயத்திற்கு ஏற்ற வகையில் மாற்றவும் நிலத்தடி நீர் வழி வகுக்கிறது. அதனால் கடல் நீரின் ஊடுருவல் பகுதியிலும் விவசாயம் செய்ய இயலுகிறது.

நிலத்தடி நீரின் உதவியால் விஞ்ஞானத்தோடு வளர்ந்துள்ள இன்றைய விவசாயம் இயற்கையின் சீற்றங்களைப் பொருட்படுத்துவதேயில்லை. இப்படி வளர்ந்துள்ள இன்றைய விவசாயம் இயற்கைச் சீற்றங்களுக்கே ஒரு புதிர் என்ற நிலைமைக்கு மாறியுள்ளது. இனி இந் நிலத்தடி நீரை எப்படிப் பெற முடியும் என்பதைச் சிறிது பார்க்கலாம்.

முதலில் மின்னாய்வுக் கருவி மூலம் நிலத்தடியிலுள்ள நீரோடையைத் துல்லியமாகக் குறிக்க இயலும். மேலும் முன்னோடி ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்னணுவியல் கருவியின் மூலம் நிலத்தடியிலுள்ள நீரோடை, நீர் பிடிபட்டுள்ள இடம் (Acquifer) நிலத்தின் பாங்கு ஆகியவற்றை ஆராய முடியும். ஆராய்ச்சியின் முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நீரைக் கொணர வேண்டும்.

நமது விவசாயிகளிடையே தற்போது துளிர்விட்டு வரும் சமுதாயப் போக்கினால், பல விவசாய மன்றங்களை ஏற்படுத்தி தனித்தனியாக ஒவ்வொரு விவசாய மன்றத்திற்கு ஓர் சமுதாயக் கிணறு மூலம் நிலத்தடி நீரை வெளிக் கொணரச் செய்யலாம். அதனால் பல சிறு குறு விவசாயிகளின் நீண்ட நாளைய கனவு நனவாகி முப்போகமும் பயிர் செய்ய ஏதுவாகும்.

## மலைக் குன்றில் மாபெரும் நூலகம்!

அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களான ரானல்ட் ரேகன், ஜிம்மி கார்ட்டர், ஜெரால்ட் போர்ட், ரிச்சர்ட் நிக்சன் ஆகிய நான்கு பேரும், தற்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் ஒரே மேடையில் உரையாற்றினர். கடந்த நவம்பர் 4-ந் தேதியன்று 'ரானல்ட் ரேகன் நூலகத்' திறப்பு விழாவின் போது இந்த அபூர்வச் சந்திப்பு நிகழ்ந்தது.

லாஸ் ஏஞ்ஜலெஸ் நகருக்கு வடக்கே 35 மைல் தொலைவில் உள்ள வென்டுரா கவுண்ட்டி பகுதியில் ஒரு குன்றின்மீது 30 ஏக்கர் பரப்பில் ''ரேகன் நூலக வளாகம்'' அமைக்கப்பட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டுக் கட்டடப் பாணியில் அமைந்துள்ள இந்த நூலக வளாகத்தை நிறுவுவதற்கு 6 கோடி டாலர்கள் செலவு பிடித்தது.

அமெரிக்காவில் தற்போதுள்ள பத்து 'அதிபர் நூலகங்களில்' இதுதான் மிகவும் பெரியதாகும். தனியார் அளித்த நன்கொடைகளைக் கொண்டு இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய ஆவணக் காப்பகம் இதனை நிர்வகிக்கும். இந்த நிர்வாகச் செலவுகள் மட்டும் ஆண்டுக்கு 15 இலட்சம் டாலர்கள் பிடிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நூலக வளாகத்தில் ஓர் அருங்காட்சியகமும், ஆவணக் காப்பகமும் நிறுவப்பட்டுள்ளன. ரேகனின் வாழ்க்கை பற்றியும் அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றியும் விவரிக்கும் பல முக்கிய ஆவணங்களும், காட்சிப் பொருட்களும் இங்கே வைக்கப்பட்டிருக்கும். ரேகன், அவரது மனைவி நான்சி ஆகியோரின் தனி வாழ்க்கை தொடர்பான காட்சிப் பொருட்களும் இங்கே இருக்கும். மொத்தத்தில் 5 கோடிக்கும் மேற்பட்ட ஆவணங்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்படும்.

*1940- களிலும், 1950- களிலும் ரேகன் ஒரு திரைப்பட நடிகராக இருந்ததைச் சித்திரிக்கும் பல படங்களும், காட்சிப் பொருட்களும் இங்குள்ள ரேகன் அருங்காட்சியகத்தில் வைக்கப்படும்.*

—அமெரிக்கத் தவகல் நிலையம்

இனி பல்வேறு விசைத்துளைக் கருவிகளின் சிறப்பைத் தனித்தனியாகக் காண்போம்.

**1. கைத்துளைக் கருவி**

இக்கருவியின் மூலம் இலகுவான களி, மணற்பாங்கான பூமி மற்றும் ஆற்றுப்படுகையிலும் 6'' 8'' விட்டம் 100' ஆழம் வரை குழாய்க் கிணறு அமைக்கலாம். மனித உழைப்பே பெரிதும் பயன்படுவதால் குழாய்க் கிணறு அமைக்க ஓரிரு நாட்களாகும். உறவினர்கள், நண்பர்களின் கூட்டுழைப்பினால் கிணறு அமைத்தலைத் துரிதப்படுத்தலாம். ஏழை எளிய விவசாயிகளுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடிய குறைந்த செலவில் கிணறு அமைக்கக்கூடிய கருவி ஆகும்.

**2. பர்குஷன் விசைத்துளைக் கருவி**

இக்கருவி பூமியினடியில் பாறை மிகுந்த இடத்திலும், பெரும் கூழாங்கற்களும் படிவங்களும் உள்ள இடத்திலும் 8'' முதல் 12'' விட்டமுள்ள 200' ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கவல்லது. கூழாங்கற்களையும் இதர படிவங்களையும் இடித்துச் செல்வதால் இதில் ஆழ்துளைக்கிணறு அமைக்கச் சிறிது காலம் ஆகும். இத்துறைக்கருவி மிக மிகத் தொன்மையானது. ஒரு குழாய்க் கிணறு அமைக்க சுமார் 60 நாட்களாகும். வேறு எந்தத் துளைச் கருவியும் உபயோகப்படுத்த இயலாத நிலத்தில் இதை உபயோகப்படுத்தி ஆழ்துளைக் கிணறு அமைக்க வல்லதால் கிணறு அமைப்பதில் காலதாமதமாகிறது. இதைத் தவிர 30 அடி விட்டம் வரையிலுள்ள திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தும் நிலத்தடி நீரை வெளிக்கொணரச் செய்யலாம்.

**3. சுழல் விசைத்துளைக் கருவி**

இக்கருவி ஆற்றுப்படுகைகளிலும், களிப்புகளிலும், மணற்பாங்கான பூமியிலும் 4'' முதல் 12' விட்டமுள்ள 1,500 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கலாம். ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள விளை நிலங்கள் அதிகம் இருப்பதால் இத்துளைக்கருவி, குழாய்க் கிணறு அமைப்பதில் அதிகப் பங்குபெறுகிறது.

**4. ஹாமர் விசைத்துளைக் கருவி**

இக்கருவி கடினமாகப் பாறை மிகுந்து உள்ள இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவியினால் 4.5'' மற்றும் 6'' விட்டமுள்ள 300 அடி ஆழம் வரை ஆழ்துளைக் கிணறு அமைக்கலாம். இக்கருவி ஒரு மணி நேரத்தில் 6-12' அடி வரை பூமியைத் துளைக்கவல்லதால் ஆழ்துளைக் கிணற்றை ஓரிரு நாட்களில் அமைத்துவிடலாம். மேலும் திறந்த வெளிக் கிணற்றுள்ளும் ஆழ்துளையிட்டு நிலத்தடி நீரை வெளிக்கொணரச் செய்யலாம்.

இனி இப்பாசன முறையிலுள்ள இடர்ப்பாட்டைச் சிறிது காணலாம்.

இப்பாசன முறையில், உள்ள ஒரே இடர்ப்பாடு நிலத்தடி நீரின் மட்டம் இறங்கிக் கொண்டே செல்வதாகும்.

இவ்விடர்ப்பாட்டினைத் தவிர்க்க விஞ்ஞான வசதிகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையினரால் அமைக்கப்பட்டுவரும் ஊற்றுநீர்த்தேக்கம் மூலம், மழைக் காலங்களில் வீணாகும் உபரியான நீர் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டு நில ஊடுருவலுக்கு வழிவகை செய்வதால், நிலத்தடி நீரின் மட்டத்தைப் பராமரிக்க முடியும். மேலும் Recharge wells அமைப்பதன் மூலம் பருவ மழைக் காலங்களில் கடலில் கலக்கும் நீரை நிலத்தடியில் செலுத்திச் சேமிக்க முடியும்.

அதேபோல, ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்தின் தாழ்வான பகுதியில் ஒரு பண்ணைக்குட்டை அமைக்க முன்வர வேண்டும். அப்படி குட்டை அமைத்தோமானால், பருவமழைக் காலங்களில் அவரவர் நிலத்தில் பெய்த அதிக மழை பண்ணைக் குட்டையில் தங்கி நில ஊடுருவலுக்கு வழிவகை செய்யும். அதனால் நிலத்தடி நீரின் மட்டத்தைப் பராமரிக்க முடியும்.

அதேபோல, உபயோகம் அற்றுப் போன திறந்த வெளிக் கிணற்றில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றைச் சேதப்படுத்தாமல் விட்டுவிட்டால், பருவ மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் இக்கிணறுகள் மூலம் நிலத்தடியில் ஊடுருவப்பட்டு நிலத்தடி நீரைச் சேமிக்க உதவும்.

எனவே, வேளாண்மையில் வறட்சி என்ற சொற்றொடரை நீக்கி, - இத்தகைய வழிவகைகள் மூலம், வறட்சியில் வேளாண்மை செய்து அதிக விளைச்சலுக்கு வழி வகுப்போம்!



# படர் 'சாதிப் படை' ஒழிப்போம்

## புலவர் இளஞ்செழியன்



போதையிலே பொல்லாத போதை - சாதி!
போதுமடா சாமி! இந்தப் போதைச் சாதி!
போதிமரப் புத்தர்பிரான் அன்பை யன்றோ
போதித்தார்! அவர் நெறியில் சாதி ஏது?
பேதையிலே பேதைகளாய் இருப்போ ராநாம்?
பேதமற்ற சமுதாயம் அமைப்போ ராநாம்?
பாதையிலே நடப்பவர்நாம்! பகுத்த றிந்தோர்
'படர்சாதிப் படை'யதனை ஒப்ப மாட்டார்!

என்சாதி உன்சாதி என்னும் பேச்சால்
இந்நாட்டில் சமநீதி முளைப்ப தெந்நாள்?
தன்சாதி ஆணவத்தால் விளையும் தீமை
தடுப்பதெந்நாள்? தமிழ்நீதி தழைப்ப தெந்நாள்?
முன்னாளில் இல்லாத சாதி முட்கள்
முளைத்ததிந்நாள்! பெருமரமாய் வளர்ந்த திந்நாள்!
முன்னேற்றத் திசைநோக்கி நடப்போர், இந்த
முடைநாற்றச் சாதியினை விரும்ப மாட்டார்!

பெரியாரின் 'பேருழைப்பு' என்ப தென்ன?
பேசுமிந்தச் சாதிஒழிப் பன்றோ? அண்ணா
வரிவரியாய் எழுதியிங்கே குவித்த தெல்லாம்
வரிப்புலியாம் சாதியினைக் கொல்லத் தானே!
எரியாத ஈரமட்டை யாக வன்றோ,
இருக்கிறது இன்னுமிந்தச் சாதி? மீண்டும்
மரியாதை யுடன்சாதிப் பிரிவி னைகள்
வகைவகையாய்த் திரள்கிறது தமிழ கத்தில்!

இருபத்து ஓராம்நூற் றாண்டை நோக்கி,
இவ்வையம் நடக்கிறது! நடக்கின் றோம்நாம்!
வருபத்து ஆண்டுகளி லேனும், சாதி
வழுக்கலற்ற சமுதாயம் அமைப்போம் வாரீர்!
'ஒரு சாதிக் கொருநீதி' என்ப தைநாம்
ஒழித்துவிடின், சாதியெண்ணம் செத்துப் போகும்!
திருநாட்டீர்! திருக்குறளைக் கொண்டி ருந்தும்
திருந்தாமல் நாமிருத்தல் நியாயம் தானா?

சாதிக்கோர் கொடிமரத்தை நடாதீர்! உங்கள்
சாதியினால் சாதிக்க நினைத்தி டாதீர்!
வீதிக்கோர் தேரிழுத்துக் கொண்டி ருக்கும்
விளையாட்டுச் சிறுவர்களாய் விளங்கி டாதீர்!
சோதிக்கோர் வானம்தான் உண்டு! கையின்
சுடர்களெல்லாம் நீணிலத்தில் நிலைப்ப தில்லை!
ஆதிக்கோர் அந்தமுண்டு! அதுபோல் சாதி
ஆரம்பம் அறுபடும்நாள் தொலைவில் இல்லை!



# கும்பகோணம் மகாமகம் திருவிழா:

## துயர நிகழ்ச்சி குறித்து அரசின் செய்தி

கும்பகோணத்தில் 18.2.1992 அன்று புனித மகாமகத் திருவிழா நடைபெற்றது. இம்மகாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படுகிறது. முந்தைய மகாமக விழாக்களுக்கு வந்த மக்களின் எண்ணிக்கையை விட இந்த மகாமக விழாவுக்கு அதிகமாக வருவர் என்று எதிர்பார்த்து, தமிழ்நாடு அரசு விரிவாகப் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தது- இவ்விழாவைக் காண வரும் மக்கள் எவ்வித இன்னல்களுக்கும் உள்ளாகாமல் விழாவைக் கண்டு களித்துச் செல்வதற்கு வசதியாக முன் எப்போதும் செய்திராத அளவுக்குச் சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள், உணவு வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தோடு கூட்டத்தினைக் கட்டுப்படுத்திமுறைப்படுத்துவதற்காகக் காவல்துறைப் பணியாளர்களும் ஏராளமான எண்ணிக்கையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

1968-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகம் விழாவிற்குக் காவல்துறை அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட மொத்தம் சுமார் 4,000 பேர் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

1980-ஆம் ஆண்டில் நடைபெற்ற மகாமக விழாவிற்குக் காவல் துறையைச் சேர்ந்த 6,350 அலுவலர்களும், பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால், இந்த ஆண்டு நடைபெற்ற மகாமக விழாவிற்குப் பாதுகாப்பிற்காகத் தமிழ்நாடு அரசு காவல்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட மொத்தம் 12,070 பேரைப் பணியில் ஈடுபடுத்தியது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடக்கத்திலிருந்தே இந்த விழாவிற்கான ஏற்பாடுகளில் நேரடி ஆர்வம் காட்டிவந்தார்கள். பல்வேறு விழா நடைமுறைகள் சீராகவும், செம்மையாகவும் நடைபெறுவதற்கும், இவ்விழாவைக் காண வரும் பொதுமக்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் இவ்விழாவுக்கு வருகைதரும் இலட்சோப இலட்சம் பக்தர்களின் பாதுகாப்புக்கும் அவசியமான, திட்டங்களை வகுப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினார்கள். முதல்வர் அவர்கள், மகாமக விழா தொடர்பான பல்வேறு பணிகளைக் கவனக்கின்ற மாநில அரசு அலுவலர்களின் கூட்டங்களை அடிக்கடி கூட்டி, இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்கள். மேலும், இவ்விழாத்தொடர்பான பல்வேறு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்வதற்குத் தேவையான செலவிற்காகக் கும்பகோணம் நகராட்சி, பொதுப் பணித்துறை, பொது சுகாதாரத் துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை ஆகியவற்றிற்கு அரசு தாராளமாக நிதியுதவி அளித்தது. பொதுமக்களுக்கான பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகக் கும்பகோணம் நகராட்சிக்கு ரூ. 85.50 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்த நகராட்சி ரூ. 91.81 இலட்சம் செலவு செய்து உள்ளது. 1980- இல் நடைபெற்ற மகாமகம் திருவிழாவின்போது கும்பகோணம் நகராட்சிக்கு ரூ. 8.5 இலட்சம்தான் வழங்கப்பட்டது. நெடுஞ்சாலைத் துறை கும்பகோணம் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சாலைகளின் மேம்பாட்டுக்காகவும், 51.40 கி.மீ. தொலைவிற்கு ஒரு வழிப்பாதைகளை இருவழிப்பாதைகளாக அகலப்படுத்தவும் மொத்தம் ரூ. 1.32 கோடி செலவிட்டது. திருக்கோயிலுக்குச் செல்லும் சாலைகளை அகலப்படுத்தும் பணியையும், மகாமகக் குளத்தில் தூர் வாரும் பணியையும், பொதுப்பணித்துறை மேற்கொண்டது.

மகாமகத் திருவிழா தொடர்பான சமயச் சடங்குகளைச் செய்யும் ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை மேற்கொண்டது. பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிக்காக 1991 மார்ச்சுத் திங்களில் ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டது. திருக்கோயில்களின் திருப்பணிக்கும் மேம்பாட்டுக்கும் முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி-பராமரிப்பு நிதியிலிருந்து தொகை வழங்குவது உட்பட பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் மொத்தம் ரூ. 46.28 இலட்சம் வழங்கப்பட்டது. இதுவே மகாமகத் திருவிழாவின்போது செலவிடப்பட்ட அதிகமான தொகையாகும். மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பக்தர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யப் போக்குவரத்துக் கழகங்கள் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தன. 16.2.92 முதல் 18.2.92 வரை மொத்தம் 4,605 பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்துகள் 15,000 பயணத் தடவைகளுக்குமேல் ஓடி சுமார் 13.9 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்றன. அத்துடன் 16.2.92 முதல் 18.2.92 வரை இரயில்வே நிருவாகம் 62 தனி இரயில்களை விட்டது. இதில் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணம் செய்தனர். மாண்புமிகு முதல்வர் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை மகாமகம் திருவிழாவின் போது பக்தர்களுக்கு வழங்கினார். திருவிழா தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் நேரில் பார்வையிடுவதற்காக மாநில அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்டனர்.

18.2.1992-ஆம் நாளன்று நடைபெற்ற மகாமகம் விழாவை இனிதே நடத்த மாநில அரசு விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தது என்பதை இந்த ஏற்பாடுகளிலிருந்து அறியலாம். பாதுகாப்பு, பக்தர்களை நெறிப்படுத்துதல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், குற்றங்களைத் தடுத்தல் உட்பட பல்வேறு பணிகள் குறித்துத் திட்டத்தை மகாமகம் நடைபெறும் நாளுக்குப்பல மாதங்களுக்கு முன்னரே காவல்துறையினர் நன்கு திட்டமிட்டு அந்த ஏற்பாடுகள் குறித்து காவல்துறையினரும், மாவட்ட ஆட்சியரும், பொது மக்களின் பிரதிநிதிகளுடனும் கும்பகோணத்திலும், தஞ்சாவூரிலும் விரிவாகப் பரிசீலித்தனர். பல்வேறு திசைகளிலிருந்து பக்தர்கள் ஒழுங்காக, கட்டுப்பாட்டுடன் அமைதியான முறையில் மகாமகம் குளத்திற்கு வந்து நீராடிவிட்டு அதே போன்று கட்டுப்பாடான முறையில் வெளியேறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் திட்டமிடப்பட்டிருந்தன.

காவல்துறையினர் அனைவருக்கும் அனைத்து விவரங்களும் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டன. மேற்பார்வை அதிகாரிகளும், காவலர்களும் தங்களது கடமைகளை முற்றிலும் அறிந்து செயலாற்ற இயலும். பலமுறை ஒத்திகைகள் நடத்தப்பட்டன. இதற்கு முன்னர் 1980-ஆம் ஆண்டில் மகாமகம் விழாவை நடத்தி முன் அனுபவம் பெற்றிருந்த காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம்-ஒழுங்கு) திரு. வால்டர் ஐசக் தேவாரம் அவர்களின் பொறுப்பில் அனைத்து ஏற்பாடுகளும் விடப்பட்டன. இவருக்கு உதவியாக ஒரு காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், 5 காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், 20 காவல்துறை கண்காணிப்பாளர்கள், 60 காவல்துறை துணைத் கண்காணிப்பாளர்கள், 200 காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், 500 காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருடன் காவல் துறைக் காவலர்களும் செயல்பட்டனர். செய்யப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளை மேற்பார்வையிடவும் அவை முறையாக நடக்கின்றனவா என உறுதி செய்யவும் காவல்துறை டைரக்டர் ஜெனரல், திரு. எஸ். ஸ்ரீபால் அங்கேயே தங்கியிருந்து கண்காணித்தார்.

இந்த ஆண்டு நடைபெற்ற மகாமகம் விழாவிற்கான காவல் துறை ஏற்பாடுகள் இதுவரை எப்போதுமே இல்லாத அளவிற்கு மிகப் பெரிய அளவில் செய்யப்பட்டிருந்தன. காவல்துறை, மிக விரிவான அளவில் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்ததோடு காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொரு அலுவலரும், பணியாளர்களும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகளை நன்கறிந்து செவ்விய முறையில் செயலாற்றவும், அப்பணியை ஆற்றிடும்போது குழப்பம் ஏதும் நிகழாமலும் இருக்கத் தக்க விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவர்களுக்கும் உணர்த்தப்பட்டன.

எனவே, காவல்துறை அலுவலர்கள், பணியாளர்களுக்கிடையே போதுமான ஒருங்கிணைப்பு இல்லை என்று நாளிதழ்களில் வெளிவந்துள்ள அறிக்கைகள் முற்றிலும் தவறானவையாகும் என்பதோடு விஷமத்தனமானவையும் ஆகும். தற்போது நடைபெற்ற மகாமகம் திருவிழாவிற்குக் கும்பகோணத்திற்கு சுமார் 50 இலட்சம் பக்தர்கள் வருகை தந்துள்ளனர். ஆனால் 1980- ஆம் ஆண்டில் நடைபெற்ற மகாமகம் விழாவிற்கு வந்த பக்தர்களின் எண்ணிக்கை 18 இலட்சம் மட்டுமே ஆகும். காவல் துறையினரும், மாநில அரசின் ஏனைய அலுவலர்களும் இத்தகைய



குடந்தையில் நடைபெற்ற மகாமக விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, புனித நீராடி வழிபட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் சொந்தச் செலவில் அளித்த 10 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 108 பெண்களுக்குப் புடைவைகள் மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

மகாமகத்தையொட்டி சிறப்பு அஞ்சலக உறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதல் அஞ்சலக உறையைப் பெற்றுக் கொண்டார்.

மகாமகத்தையொட்டித் தயாரிக்கப்பட்ட மகாமகச் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

கும்பகோணத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை வார்டுகள் 48 படுக்கைகள் கொண்டவைகளாக வரும் 1992-93-ஆம் ஆண்டில் விரிவுப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்திற்கு ரூபாய் 24 இலட்சம் செலவாகும். இம்மருத்துவமனைக்கான மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் தகுந்தாற்போல அதிக அளவில் நியமிக்கப்படுவார்கள்.

கும்பகோணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, சுற்றுலாத் துறையால் சுமார் ரூபாய் 30 இலட்சம் செலவில் ஓட்டல் கட்டப்படும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

பெருங்கூட்டத்தை எதிர்பார்த்தே, அதைச் சமாளிக்கத்தக்க வகையில் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். அவர்கள் கும்பகோணம் ஒரு சிறிய நகரமாக இருந்தும், மகாமகம் குளம் நெரிசல் மிக்க பகுதியில் அமைந்திருந்தும் குளத்தைச் சுற்றிலுமுள்ள சாலைகள் குறுகலாக இருந்தும் வந்திருந்த பெருங்கூட்டத்தை நல்ல முறையில் சமாளித்தனர்.

இப்பகுதி முழுவதும், வடக்குப் பக்கத்தில் காவிரி ஆற்றாலும் தெற்குப் பக்கத்தில் அரசலாற்றாலும் சூழப்பட்டுள்ளது. மகாமகம் குளத்தில் ஒரு சமயத்தில் அதிக அளவு 40 ஆயிரம் பக்தர்கள் நீராட இயலும். பக்தர்கள் தொகுதி தொகுதியாகச் சென்று குளத்தினுள் நீராடி வெளியேறத் தக்கவகையில் காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினர். இதுவே முன்பு மகாமகம் விழாக்கள் நடைபெற்ற போதும் பின்பற்றப்பட்ட முறையாகும்.

எனவே, காவல்துறையினர் போதிய அளவுக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்றும், பக்தர்களின் மாபெருங்கூட்டத்தைக் கண்டு அவர்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர் என்றும் சில செய்தித் தாள்களில் வெளியான தகவல்கள் தவறானவையும், உள் நோக்கம் கொண்டவையும் ஆகும்.

பக்தர்கள் வடக்குப் பக்கத்திலிருந்தும் தெற்குப் பக்கத்திலிருந்தும் உள்ளே நுழையவும், மேற்குப் பக்கம் வழியாகவும், கிழக்குப் பக்கம் வழியாகவும் வெளியே வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உள்ளே நுழையவும் வெளியே செல்லவும் இதுபோன்ற ஏற்பாடுகள் முன்னர் 1968, 1980-ஆம் ஆண்டுகளில் நடந்த 'மகாமகம் விழாவின்' போதும் செய்யப்பட்டிருந்தன.

மக்கள் கூட்டம் நெருங்கியடித்துக் கொண்டு மோதியதால் மகாமகக் குளத்தின் வடக்குச் சாலைகளின் 'பங்கர் தருமச் சாலையை' ஒட்டியிருந்த சுற்றுச் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும், தூண்களும் இடிந்து விழுந்து எதிர்பாராத சூழ்நிலை உருவாகும் வரையில் இந்த ஏற்பாடுகள் நன்றாகவே இருந்தன. இந்த பங்கர் தருமச் சாலையில் 'விஸ்வ இந்து பரிஷத்' அமைப்பு 'கிளினிக்' வைத்திருந்தது. மேலும், உணவுப் பொட்டலங்களை வழங்கவும், அந்த தர்மசாலையைப் பயன்படுத்தி வந்தது. இந்த உணவுப் பொட்டலங்கள், சுற்றுச் சுவருக்கு வெளியில் காத்திருந்த பக்தர்களிடம் வீசி எறியப்பட்டு வந்தன. சுற்றுச் சுவருக்கு வெளியே மக்கள் பெருமளவில் குழுமியதற்கு இதுவே முதற் காரணமாகும்.

பெருந்திரளாகக் குழுமியிருந்த மக்கள் கூட்டம் நெருங்கியடித்து முந்தியதால் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும் தூண்களும் இடிந்து விழுந்தன. இவ்வாறு இடிந்து விழுந்தது அங்கு குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏற்படுத்த, மக்கள் தாறுமாறாக ஓட நேர்ந்தது. அவ்வாறு அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளி முண்டியடித்துக் கொண்டு ஓடியதே பக்தர்கள் இறப்புக்குக் காரணமாக அமைந்தது. ஆனால், மக்கள் கூட்டம் குளத்தில் நெருங்கியடித்துக் கொண்டதாலேயே இறந்துவிட்டனர் எனக் கூறுவது சரியன்று. குளத்தில் முழ்கி ஒருவர் கூட இறக்கவில்லை. காவலர் தடியடித் தாக்குதல் நடத்தியதாலேயே மக்கள் நெருங்கியடித்து ஓட நேர்ந்தது என சிலப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியிருப்பது முற்றிலும் ஆதாரமற்றது மட்டுமல்ல; உண்மைக்கும் புறம்பானதுமாகும்.

விழா நடைமுறைகளின்போது, எந்த நேரத்திலும் (அல்லது) எந்த இடத்திலும் காவலர் தடியடித் தாக்குதல் நடத்தவில்லை, இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவரும், இடிந்துபோன சுற்றுச் சுவர் இரும்புக் கம்பியிருந்த இடத்திலிருந்து 60 அடி தொலைவுக்குள்ளேயே கிடந்தனர். விபத்து நடந்த இடத்திற்கு மிக அருகில் அவசரச் சிகிச்சை வண்டிகளைக் கொண்டுவர காவலர் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஆகவேதான் காயமுற்ற பலரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று விலை மதிக்க முடியாத உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது. அவ்வாறு செய்திருக்காவிட்டால், பலியானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாயிருக்கும்.

புனிதப் பயணம் மேற்கொண்ட பக்தர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை ஒரு முறையாவது காண



• பணம் செலவழிப்பதை எல்லாம் எழுதி வை; செலவழித்தது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார்; சிக்கனம் தானாக வந்துவிடும்.

- அண்ணல் காந்தியடிகள்

வேண்டுமென்று விரும்பியதால் இத்துயரச் சம்பவம் நடந்தது என்றும், அவர்களை விரட்டுவதற்காகக் காவலர்கள் தடியடித் தாக்குதல் நடத்தினர் என்றும், பக்தர்கள் பல திக்குகளிலும் ஓடினர் என்றும், மாண்புமிகு முதல்வரின் பாதுகாப்புக்காகச் செல்லும் பல வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால், பக்தர்கள் வெளியே செல்ல இயலாமல் தடை செய்யப்பட்டனர் என்றும் செய்தித்தாள்கள் விஷமத்தனமாகச் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

குளத்தின் மேற்குக் கரையின் தென்பகுதியில் மாண்புமிகு முதல்வர் பயன்படுத்துவதற்கென மிகச் சிறிய அளவிலான அடைப்பே அமைக்கப்பட்டிருந்தது. அந்த அடைப்பு, 20 × 12 அளவு மட்டுமே கொண்டதாகும் எனவே, குளம் அமைந்துள்ள இடத்தில் நான்கில் ஒருபகுதி மாண்புமிகு முதல்வருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்று சில செய்தித்தாள்களில் குறிப்பிடப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். மேற்குக் கரையில் எஞ்சிய பகுதி, பக்தர்கள் எளிதில் வந்து செல்வதற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த போதும்கூட, பக்தர்கள் இந்த வழியைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். குளத்தின் விளிம்பிற்கருகில் தெற்குப் பக்கமாக மேற்குக் கரைச் சாலையில் சிறிய இடத்தில் தான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதுகாப்பிற்காகச் சென்ற வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இது, பக்தர்கள் எளிதாக வந்து செல்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. மேற்குப் பக்கத்தில், உள்ள இடத்திலிருந்து ஆயிரக் கணக்கில், மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். உண்மையில், அப்பகுதியில் எவ்விதக் குழப்பமோ, நெரிசலோ இல்லை. இத்துயரச் சம்பவம் வடகிழக்குப் பக்கத்தில் நிகழ்ந்தது. இது மாண்புமிகு முதல்வர் வழிபாடு செய்து கொண்டிருந்த இடத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்குக் குறிக்கப்பட்ட நேரத்திற்கு அதாவது காலை 11.30 மணிக்கு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, நண்பகல் 12.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆனால், தருமச்சாலை சுவரின் மீதிருந்த இரும்பு கம்பியும் (Wall Grill) தூண்களும் இடிந்து விழுந்ததைத் தொடர்ந்து வடகிழக்குப் பக்கத்தில் இச்சம்பவம் மதியம் சுமார் 1.00 மணிக்கு நிகழ்ந்தது.

மாண்புமிகு முதல்வர், வழிபாடு நடத்திய இடத்திலிருந்து வெகு தொலைவில் அமைந்திருந்த கட்டடத்தில் நிகழ்ந்ததும், மாண்புமிகு முதல்வர் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் வெகு நேரம் கழித்து நடைபெற்றதுமான இத்துயரச் சம்பவத்திற்கு மாண்புமிகு முதல்வரின் வருகை அல்லது மாண்புமிகு முதல்வரின் பாதுகாப்பு வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்ததே காரணம் என்று கூறுவது நியாயமற்றதும் மிகவும் கொடுமையானதுமாகும்.

## தாய்

• தாயின் இதயம்தான் குழந்தையின் பள்ளிக்கூடம்.

- பீச்சர்.

• ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்.

- ஹெர்பர்ட்

• குழந்தையைக் கையிலேந்தி நிற்கும் தாயைவிட அதிக அழகான காட்சி கிடையாது.

- கதே

இந்நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் நன்கு அறிந்த 'விசுவ இந்து பரிஷத்' நிர்வாகத்தினர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் வருகையாலேயே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறுவது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும் அதனைப் பெரிதாக்கிக் குற்றம் சாட்டுபவர் அரசியல்வாதிகள். ஆனால், கும்பகோணத்தில் இதற்குமுன் நடைபெற்றிராத அளவுக்குச் சீரிய முறையில் இந்த ஆண்டு மகாமகத்தை நடத்துவது தொடர்பாகத் தமிழக முதல்வர் காட்டிய ஆர்வத்தையும், ஆதரவையும், தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்ததையும் நன்கு அறிந்த விசுவ இந்து பரிஷத்தினர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர். இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு விசுவ இந்து பரிஷத்தினர் குற்றம் கூறியுள்ளனர் என்பதனை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மொத்தத்தில் மகாமகம் சிறப்பாகவும், சுமுகமாகவும், உரியவாறும் நடைபெற்றதற்கான பாராட்டை முதலமைச்சரும், மாநில அரசும் பெறுவதை விரும்பவில்லை; அவர்களே அப்பாராட்டைப் பெற விரும்புகின்றனர். சமய விழாக்களைப் பொறுத்தவரையில், முதல்வரோ, மாநில அரசோ எவ்வகையிலும் தலையிடுவதில்லை என்பதைப் பல்வேறு சமய விழாக்கள் சுமுகமாக நடைபெற்றதிலிருந்து அறியலாம். ஆனால், இவ்வாறு நடைபெறுவது விசுவ இந்து பரிஷத்தினருக்குப் பிடிக்கவில்லை எனத் தோன்றுகிறது.

பெருமளவில் மக்கள் கூடுவதற்கு வசதி செய்வது கடமை என்று மட்டும் கருதாமல், இப்புனித விழாவில் பங்கு கொள்வதன் மூலம் பக்தர்களும், யாத்திரிகர்களும் தங்கள் வெளிப்படுத்துவது முழு வாய்ப்பு அளிக்க உறுதி செய்வதற்கும் அரசு பெருமளவில் ஏற்பாடு செய்தது.

விசுவ இந்து பரிஷத் மட்டும்தான் நம் நாட்டில் இந்து மதத்தின் ஒரே காப்பாளர் அல்ல. விசுவ இந்து பரிஷத், அரசு செய்த சீரிய ஏற்பாடுகளை மறைக்கும் நோக்குடன் கீழ்த்தரமான குற்றச்சாட்டுக்களைக் கூறி அரசின்மீது பழி சுமத்துகிறது. ஆனால், தமிழ்நாடு மாநிலம் தான் கோயில் நிருவாக வாரியம் அமைத்த முதல் மாநிலமாகும். தமிழ்நாடு முதல்வர்தான், கோயில் திருப்பணி பராமரிப்பு நிதியை ஏற்படுத்திய முதல் முதலமைச்சராவார். புகழ்பெற்ற தொன்மைக்கால கோயில்களைப் புதுப்பித்து, இவை, இந்து மதத்தின் தலைசிறந்த சின்னங்களாக என்றும் தழைத்து நிற்கச் செய்வதில் தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதில் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை வரும் இந்த மகாமகப் பெருவிழா உள்ளிட்ட விழாக்களில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டதில் தவறேதுமில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு வரவேற்பு குறித்து, அரசியல் உள்நோக்கம் கொண்ட சில கட்சிகள் பொறாமை கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புனித நீராட அங்கு வந்திருந்த போதும், நீராடிய பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னரும், பல இலட்சம் மக்கள் அக்குளத்தில் தொடர்ந்து புனித நீராடியது, விரிவான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இத்துயரச் சம்பவம் நடந்த இடம், குளத்தின் வட கிழக்கு மூலையிலுள்ள ஒரு சிறு பகுதியாகும். இதனையடுத்து, நள்ளிரவு வரையில், பல இலட்சம் மக்கள் அக்குளத்தில் தொடர்ந்து புனித நீராடத் தடையின்றி வந்துபோன வண்ணமாக இருந்தனர்.

எனினும், துரதிருஷ்டவசமாக இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் துயருற்ற குடும்பங்களுக்குத் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். இறந்தவர்களின் உறவினர்களுக்கு மாண்புமிகு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணத் தொகையாக ரூ.25,000 வழங்க முதலில் ஆணை

யிட்டார். இத்துயரச் சம்பவம் குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்த்து, இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களுக்கு, மாண்புமிகு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து கூடுதலாக ரூ.25,000 வழங்க அதாவது, அரசு மொத்தம் ரூ.50,000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இறந்தவரின் குடும்பம் ஒன்றிற்கு ரூ.30,000 வழங்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முன்வந்துள்ளது. இதோடு சேர்த்து, இறந்தவரின் குடும்பத்திற்கு மொத்தம் ரூ.80,000 வழங்கப்படுகிறது. பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.20,000 வழங்கப்படும். இவ்வாறு இறந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றும் மொத்தத்தில் ஒரு இலட்சம் ரூபாயைப் பெறும்.

தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 50,000, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து ரூபாய் 30,000

பிரதம மந்திரியின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 20,000 மொத்தம் ரூ.1,00,000

இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தேவைப்படக் கூடிய கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பிற நிவாரண உதவிக்கு வகை செய்யவும் தமிழக முதல்வர் நடவடிக்கைகள் மேற்கொள்வார்.

மாண்புமிகு முதல்வர் மகாமகத் திருவிழாவில் கலந்து கொண்டதை ஒரு பிரச்சினையாக்கிச் செய்தித்தாள்கள் எழுதியிருப்பது மிகவும் வேதனைப்படத்தக்கதாகும்.

இந்நாட்டின் குடிமகள் என்ற முறையில் மட்டுமல்லாது மாநிலத்தின் முதலமைச்சர் என்ற வகையிலும், இந்து சமய அறநிலையத் துறையின் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் என்ற வகையிலும், இந்த மகாமக விழாவில் கலந்து கொள்ள அனைத்து உரிமையும் உண்டு மாண்புமிகு முதலமைச்சருக்கு. கடந்த காலத்தில் எந்த ஒரு முதலமைச்சரும் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளாமல் இருந்ததைக் கொண்டு, தற்போது முதலமைச்சர் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளக் கூடாது என்று கூறுவது நியாயமில்லை. திருவிழா, சுமுகமான முறையில் நடைபெற, முதலமைச்சர் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டார். எனவே, அவர் திருவிழாவில் கலந்து கொண்டது முற்றிலும் பொருத்தமுடையதும், முறையானதும் ஆகும். முதல்வர் கும்பகோணத்திற்கு வருகை தந்த போது, பெருந்திரளாக மக்கள் ஆர்வத்துடன் கூடினர். இதுவே பெருந்திரளாக மக்கள் கூடுவதற்கான தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பதைக் காட்டுகின்றது. எனவே, அது மகாமகம் அல்ல ஜெயாமகம் என்று ஒரு செய்தித்தாள் குறிப்பிட்டிருப்பது கொடுமையானதும் தீய நோக்கம் உடையதுமாகும். பொறுப்பு வாய்ந்த ஒரு செய்தித்தாளால் எவ்வாறு இத்தகைய பொறுப்பற்ற சொற்களைப் பயன்படுத்த இயலும் என்பது புரிந்து கொள்ள இயலாததாக உள்ளது.



• மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

- தந்தை பெரியார்

ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சியோடு பிறிதொரு காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒப்பிடுவது விரும்பத்தக்கதல்ல என்றாலும், கடந்த காலத்திலும் எதிர்பாராத அளவுக்கு இத்தகைய பெருங்கூட்டம் கூடியபோது இதைப் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. பிரயாகையில் 3.2.1954 அன்று நடைபெற்ற கும்பமேளாவில் 316-க்கும் மேற்பட்ட பக்தர்கள் மாண்டனர். ஹரிதுவாரில் 4.4.1986 அன்று நடைபெற்ற கும்பமேளாவில் 50-க்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். 1954-இல் பிரயாகையில் நடைபெற்ற கும்பமேளாவில் அந்நாளைய பாரதப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர் கூறிய கருத்து வருமாறு:-

'ஒரு சரியான நோக்கில் அனைத்துச் சம்பவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது கும்பமேளா நடைபெற்ற பகுதியில் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கையையும், அங்கிருந்த இடத்தையும், செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். சிக்கல் என்னவெனில், இடப்பற்றாக்குறையாகும்.'

1954-இல் நடைபெற்ற கும்பமேளாவில் சுமார் 316 பேர் மடிந்தனர் என மதிப்பிடப்பட்டது. ஆனால், எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் அவ்விழாவில் கலந்து கொண்ட பிரதமர் ஜவகர்லால் நேரு மீது எந்தவொரு பழியையும் சுமத்தாததோடு அவர் கும்பமேளாவில் கலந்திருக்கக்கூடாது என்றும் குறை கூறவில்லை.

இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள இப்பெருந்துயர் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் தமிழ்நாடு அரசும் தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர்.

இத்துயரச் சம்பவத்திற்குக் காரணமான சூழ்நிலைகள் குறித்து விசாரணை ஒன்றினை நடத்துமாறு தஞ்சாவூர் மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் ஆணையிடப்பட்டுள்ளார். அவ்வறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கையினை எடுக்கும், இதனிடையே இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உதவியும், நிவாரணமும் அளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

• நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது; நாம் சுதந்திரத்துடன் சுகம்பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்க வேண்டும்.

- மூதறிஞர் இராஜாஜி





இவை தவிர டச்சு, டேனிஷ், பர்ஷியன், மராத்தி, மோடி போன்ற பிற மொழி ஆவணங்களும் இக்காப்பகத்தில் பேணிக் காக்கப்பட்டுவருகின்றன. பத்திரங்கள், அடமானப் பத்திரங்கள் போன்ற மதிப்புள்ள ஆவணங்கள் பாதுகாப்பான நிலைப் பேழைகளில் பாதுகாக்கப்படுகின்றன. வரலாறு, நிர்வாகத் தேவைகளுக்கு ஆவணங்களை வழங்குவதுடன் அரசிதழ்களிலிருந்து சான்றிட்ட பகுதி நகல்களும் முன்னோர்களின் பிறப்பு, இறப்புப் பணி ஆகியவை பற்றிய விவரங்களடங்கிய ஆவணங்களின் நகல்களும் பொதுமக்களுக்கு உரிய கட்டணத்திற்கு வழங்கப்படுகின்றன. இவை தவிர, 1962-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

# தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியம்

இந்தியாவில் உள்ள ஆவணக் காப்பகங்களில் ஒரு தனி இடத்தை வகிக்கும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 1909-இல் அமைக்கப்பட்டது. ஆனால், 1805-லிருந்தே அது சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அறைகலன்கள் வைக்கப்பட்ட ஓர் அறையிலேயே இயங்கி வந்தது. 1968-இல் சென்னை ஆவண அலுவலகம் என்றிருந்த இதன் பெயர் அவ்வப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு இறுதியாக 1973-இல் 'தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்காப்பகத்தின் மாவட்ட மையங்கள் மதுரை, கோவை, கடலூர், சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் இயங்கிவருகின்றன.

## பணிகளும் செயல்பாடுகளும்

ஆவணங்களைப் பலவேறு துறைகளிலிருந்து பெறுவதும் அவற்றைச் சிறந்த முறையில் பாதுகாத்து வைத்து, ஆராய்ச்சியாளருக்கும் நிர்வாகப் பணிகளுக்கும் தேவையான ஆவணங்களை வழங்குவதே இக்காப்பகத்தின் முக்கியப் பணியாகும். இக்காப்பகத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முதன்மையான ஆவணம் கி.பி. 1670-ஆம் ஆண்டைச் சார்ந்தது. நிர்வாகத் துறை நீதித்துறை உள்ளடங்கிய பலவேறு துறைகளின் ஆவணங்களும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்து ஆவணங்களும், உள்நாட்டு வெளிநாட்டுப் போர் தொடர்பான ஆவணங்களும் இங்கு சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சென்னை எழும்பூரில் தொடர்வண்டி நிலையத்திற்கு எதிரேயுள்ள பெரிய சிவப்புக் கட்டடமே தமிழ்நாடு ஆவணக் காப்பகம். ஆங்கிலேய அரசால் விட்டுச் செல்லப்பட்ட முக்கியச் சின்னங்களுள் தமிழ்நாடு ஆவணக் காப்பகமும் ஒன்றாகும். இக்காப்பகம் ஆவணச் செல்வங்களை வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்குவதிலும் தமிழக அரசின் அன்றாட நிர்வாகத் தேவைகளுக்குப் பயன்பட்டு வருவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தினைத் தமிழ்நாட்டின் 'செல்வக் களஞ்சியம்' என்று சொன்னால், அது மிகையாகாது.

ஆவணங்களின் அளவிற்கதிகமான எண்ணிக்கைக் குவிப்பும் அதன் வேகமான வளர்ச்சியும் உலகெங்கும் ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. எனவே, ஆவணங்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்கவும் ஆவணக் காப்பகங்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இத்தகைய ஆவணக் காப்பகம் இந்தியாவில் முதன் முதலில் சென்னையில்தான் தொடங்கப் பட்டது.

## ஆவணக் காப்பக நூலகம்

இக்காப்பகத்தில் நூலகம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் 2.5 இலட்சம் அரிய நூல்கள் வைக்கப் பட்டுள்ளன. 150 ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்ட நூல்களும், மகாத்மா காந்தி, பண்டிதர் நேரு, இராஜாஜி போன்ற பெரும் தலைவர்கள் எழுதிய நூல்களும் சென்னை கூரியர் (Madras Courier) என்னும் முதல் செய்தித்தாளும் (1793) ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு முதலியவையும் இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

## ஆவணப் பாதுகாப்பு முறை

இங்கு ஆவணங்கள் வரிசைக் கிரமமாக அதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட அட்டங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஆவணங்களில், படியும் தூசியும் அவ்வப்போது 'வாக்குவம் கிளீனர்' மற்றும் கைத்தூரிகைகளைக் கொண்டு அகற்றப்படுகின்றது.

கரையான், புத்தகப் புழு போன்ற பூச்சி வகைகளால் பாதிக்கப்பட்ட ஆவணங்கள், இதற்கென அமைக்கப்பட்டுள்ள 'வாக்குவம்' பொறியியல் இரசாயனப் புகையூட்டி மூலம் அழிக்கப்படுகின்றன. மிகப் பழமையான ஆவணங்கள் மற்றும் தூளாகக் கூடிய நிலையில் உள்ள ஆவணங்கள், அவற்றில் படிந்துள்ள அமிலத் தன்மை முதலில் நீக்கப்பட்டு பின்னர் 'சிப்பான்' என்னும் மெல்லிய பட்டுத் துணியை இருபுறங்களில் ஒட்டி

பழுது பார்க்கப்பட்டு புத்தகங்களாகக் கட்டப்படுகின்றன.

இதுதவிர 'அஸிடேட்பாயில்' மற்றும் 'டிஷ்யூ பேப்பர்' என்ற இருவகைத் தாட்களைப் பயன்படுத்தி, மேலொட்டல் இயந்திரத்தின் மூலமும் ஆவணங்கள் செப்பனிடப்படுகின்றன. மூல ஆவணங்கள் ஒருவேளை அழியக்கூடுமானால், இரண்டாவது மூல ஆவணங்களாகப் பயன்படுத்தவும் ஆராய்ச்சியாளர்களுக்கு மைக்ரோ பிலிம் நகல்கள் வழங்கவும் நுண் நிழற்படக் கருவி மூலம் நகல்கள் எடுக்கப்படுகின்றன.

ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களை எளிதில் தேடியெடுக்க அட்டவணைகளும் ஆவண வழிகாட்டிகளும் இக்காப்பகத்தில் உள்ளன. இக்காப்பகம் இதுநாள் வரை நிர்வாகத்தினருக்கும், வரலாற்று ஆராய்ச்சியாளருக்கும் சமுதாயத்தினருக்கும் அரிய பணிகளைப் புரிந்து வருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.



ஆவணக் காப்பக ஆய்வுக் கூடம்

## ஆவணக் காப்பகப் பொருட்காட்சி

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 14.2.1992 முதல் 20.2.1992 வரை பொருட்காட்சி ஒன்றை நடத்தியது. இப்பொருட்காட்சியை மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் 14.2.92 அன்று தொடங்கி வைத்தார்.

இதில் பல்வேறு ஆவணங்கள், படங்கள், அறிக்கைகள், முதலியவை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. 1680-ஆம் ஆண்டு சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள செயின்ட் மேரிஸ் ஆலயத் திறப்பு பற்றிய குறிப்புகள், ஆவணங்கள், 1736-45-ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் எழுதப்பட்ட ஆனந்தரங்கம் பிள்ளை நாள் குறிப்பு, 1756-ஆம் ஆண்டில் புனித ஜார்ஜ் கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றியதற்கான ஆணைகள், ஆவணங்கள், திருநெல்வேலி, ஆர்க்காடு, மைசூர் சமஸ்தானப் போர் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள் முதலியவை இடம் பெற்றிருந்தன.



ஆவணக் காப்பக நூலகம்

இவை தவிர, வெளிநாட்டுப் போர் பற்றிய ஆவணங்கள், வெளிநாட்டினர் ஆட்சி முறை பற்றிய வண்ணப் படங்கள், முதலமைச்சர்களின் கடிதங்கள், நீதிமன்ற அறிக்கைகள், சர்.சி.வி. இராமன், டாக்டர் இராமானுஜம் போன்ற விஞ்ஞானிகள், கணித மேதைகள், அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, மூதறிஞர் இராஜாஜி போன்ற தலைவர்கள் எழுதியுள்ள அரும்பெரும் நூல்கள், பிரதாப முதலியார் எழுதிய 'பத்மாவதி சரித்திரம்' என்னும் முதல் நாவல், 'சென்னை கூரியர்' என்னும் முதல் பத்திரிகை, பரதநாட்டியம், பழந்தமிழ்க் கலைகள் பற்றிய நூல்கள், மருத்துவ நூல்கள் முதலியவையும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆவணங்களைப் பாதுகாக்கும் முறைகள் பற்றிய விளக்கப் புத்தகங்கள், படங்கள், அவற்றிற்குத் தேவையான கருவிகள், இரசாயன மருந்துப் பொருட்கள் முதலியவையும் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இப்பொருட்காட்சி பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாக அமைந்திருந்தது. ●

தொகுப்பு: தே. மணி





# ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சி

அன்னை பூமியின் அணிகலன்களாக விளங்குபவை, சுற்றுலாத் தலங்கள்!

அவற்றையெல்லாம் ஒரே இடத்தில் பார்த்தால் எப்படி இருக்கும்?

இந்த அரிய வாய்ப்பினைத் தருகிறது, 18-வது அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி.



சென்னைத் தீவுதிடலில் 6.1.92 முதல் நடைபெற்று வருவதுதான், இந்தப் பொருட்காட்சி.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற இந்தப் பொருட்காட்சியில் அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் பல பங்கேற்றுள்ளன.

பொருட்காட்சியினுள் நுழைகிறோம். ஆலயம் ஒன்று அழகாய்க் காட்சி தருகிறது. ஆம். அறநிலையத்துறையின் அந்த அரங்கினுள் சென்று பார்த்தபோது, தமிழகத்துக் கோயில்களின் வண்ணப் படங்கள், கடவுளர் திருவுருவச் சிலைகள், பூசைக்குரிய வெண்கலச் சாமான்கள், மகாமகக்குள மாதிரி ஆகியவை நம்மைக் கவர்கின்றன.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை. அரங்கில், மாதிரி காற்றாலை, மனிதசக்தி, விசைப்பம்பு, சூரிய அடுப்பு ஆகியவற்றைப் பார்க்கிறோம். மேலும் இவ்வாலையின் பிற பணிகளையும் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் எத்தனைப் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன? அவை, பயணிகளுக்கு ஆற்றிவரும் பயனுள்ள பணிகள் என்னென்ன என்பது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம், இந்த அரங்கில்.




ரிப்பன் கட்டடம் இங்கே எப்படி வந்தது?

அதுதான் விந்தை! சென்னை மாநகராட்சி இயங்கும் அந்த வெள்ளை மாளிகையை அப்படியே இங்கே அமைத்திருக்கிறார்கள்! நுழையும்போதே, 'இது உங்கள் நகரம்' என்கிற வாசகம் நம்மை வரவேற்கிறது.

சாலைப் பராமரிப்பு, பாலங்கள், மழைநீர் வடிகால், பொதுச் சுகாதாரம், மக்கள் தொகைத் திட்டம், குழந்தைகள் நலம், மின்சாரம், தெரு விளக்குகள் முதலான வளர்ச்சிப் பணிகள் விளக்கப் படங்களோடு காட்டப்பட்டுள்ளன.

இரவும் பகலும் இயங்குவது காவல் துறை. சமுதாய வயலில் உள்ள களைகளைக் களைவது இத்துறையின் முக்கியப் பணிகள்.

காவல்துறை அரங்கில் நுழைந்ததுமே நம்மை வரவேற்கிறார் ஒரு காவலர், ஒளி வடிவத்தில்!

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!' என்கிற பாரதியின் திருவாசகத்துக்கு உயிரோவியமாக விளங்குகிறது இப்பகுதி. வரதட்சிணைக் கொடுமை கண்முன் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழகக் காவல் பணி அமைப்பு பற்றியும், விபச்சாரத்தால் விளையும் தீவினை குறித்தும் தெரிந்துகொள்கிறோம் இங்கே.

போதை ஏறினால் என்ன தீமைகள் விளையும் என்பதும், சாலை விதிகளைக் கடைப்பிடிக்காமல் போனால்





விபத்துக்களை விலைக்கு வாங்கும் நிலையும் தத்ரூபமாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

வேதாரண்யம், கோடியக்கரைக் கடற்கரையில் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் நவீன ஆயுதங்களை இங்கே பார்க்கலாம்.

தீயணைப்புத் துறையின் பணிகளைப் பார்க்கின்றபோது, தீயின் கொடுமைகளும், அதைத் தவிர்க்கும் வகைகளும் விளக்கப்படங்களாக அமைக்கப்பட்டுள்ளன. தீயணைப்புத்துறை மீட்புப் பணிகளின் வகைப்பாடுகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது தொழில்துறை. எல்காட், சிட்கோ, சிப்காட், டாமின், டிஐஐசி, டிட்கோ ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளை விளக்குகிறது தொழில்துறை அரங்கம்.

சென்னைத் துறைமுகத்தின் பணிகள் குறித்து, பலப்பலத் தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

எண்ணூரில் உருவாகும் துணைத் துறைமுகம்; திசைகாட்டும் கருவி, மண் வாரும்போது கண்டெடுக்கப்பட்ட புராதனச் செப்புத் தகடு ஆகியவற்றைப் பார்த்து வியக்கிறோம். அத்தோடு, 1876 முதல் 1966 வரை உள்ள துறைமுகத் தோற்றங்களையும் கண்டு மகிழ்கிறோம். விளையாட்டு வளாகத்தின் (Sports Cor.iplex) மாதிரி ஒன்றும் இங்கே காட்சியளிக்கிறது.

கண்ணாய் விளங்கும் கல்வித் துறைக்கு வருகிறோம்.

தமிழக அரசு, கல்வி வளர்ச்சிக்காக ஆற்றி வருகின்ற அரும்பணிகளை, இங்கே உள்ள பட்டியலைப் பார்த்துத்



தெரிந்து கொள்கிறோம். தொடக்கக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, பள்ளிக் கல்வி, சட்டக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி இப்படி, கல்வித்துறையின் பல்வேறு கூறுகளைத் தக்க வகையில் விளக்கியிருப்பது பாராட்டத் தக்கது.

'சேமமுற வாழ்வதற்குச் சிறுசேமிப்பு' என்பதைச் சிறுசேமிப்புத் துறையும், 'உழவே தலை' என்பதை வேளாண்மைத் துறையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

செய்தித்துறை - அரசு ஆற்றி வருகின்ற அரிய பணிகளை அறிவிப்பதுதான் இத்துறையின் முக்கிய நோக்கம்.

அரங்கினுள்ளே, மகளிர் நலத் திட்டங்கள் குறித்த தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இதேபோலவே, வளரும் தமிழகம் நம் கண்முன் காட்சியளிக்கிறது. 133 அடி உயர திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் மாதிரி வடிவமும் இங்கே உள்ளது. அரசின் தகவல் அறிவிப்புச் சாதனமாக விளங்கும் 'தமிழரசு' இதழ்களும் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. நிஜமாக நல்ல மாதிரியும் நம் மனத்தைக் கவர்கிறது.

வெள்ளைப் புரட்சிக்கு வித்திடுவது ஆவின். அதன் பணிகளின் தொகுப்பைப் பார்க்கிறோம்.

சுற்றுலாத்துறை - பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கவும், அதே சமயம் அமைதியாக ஆனந்தம் அடைவதற்கும் சுற்றுலாத் தலங்கள் விளங்குகின்றன. நம் நாட்டில் குறிப்பாக, தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களுக்குக் குறைவே இல்லை. கண்களுக்குக் குளிர்ச்சியான, மனத்துக்கு இதமான இயற்கைக் காட்சிகள் ஏராளம்.

தமிழகம் என்கிற மகுடத்தில், மாணிக்கங்களாக மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் விளங்குகின்றன. அவற்றைச் சித்திரிக்கிறது இந்த அரங்கு. தமிழக விழாக்கள், அவற்றைக் காணவரும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிகள், ஆகியவை










குறித்த தகவல்கள் திரட்டித் தரப் பட்டுள்ளன.

கொடைக்கானல், ஒகேனக்கல், குற்றாலம், ஊட்டி முதலான குளிர்ப் பிரதேசங்கள் மற்றும் மாமல்லபுரம், மதுரை நாயக்கர் மகால் கண்முன் காட்டப்படுகின்றன. கண்ணைக் கவரும் ஓவியங்கள் மூலமாக!

'ஒரு இலட்சம் மகளிர்க்கு வேலை வாய்ப்பு' என்கிற மகிழ்ச்சியான அறிவிப்புடன் காட்சி தருவதுதான், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறைக் காட்சி அரங்கம்.

இங்கே, சேவை இல்லம், ஊனமுற்றோர்க்கு வழங்கியுள்ள சலுகைகள் முதலான தகவல்களை அறிந்து கொள்கிறோம்.

இலவச வீட்டுமனை, தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம், சமூக நலக் கூடங்கள், மனைதோறும் மக்களின் மாதிரிக் கிராமம், பள்ளிக் கல்விச் சலுகைகள் முதலான சமுதாய நலப் பணிகள் குறித்த தகவல்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

பட்டுப் புடவைகளைப் பார்த்திருக்கிறோம். அவற்றுக்குக் காரணமாக இருக்கும் பட்டுப் புழுக்களைப் பார்த்திருக்கிறோமா? மல்பரிச் செடி இலைகளுக்கிடையே, அவை ஒவ்வொரு நிலையில் வளர்ந்துள்ள விதங்களை நேரில் பார்க்கிறோம். அத்துடன் மல்பரி பயிரிடுதல் குறித்தும் இங்கே விளக்கப் படங்கள் உள்ளன.

மீனவ மகளிர் விரிவாக்கப் பணி, தமிழகத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக விளங்குகிறது.

சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில்



மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

- இது போன்ற மீனவர் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்த அரசுப் பணிகளை அறிந்து கொள்வது மீன்துறை அரங்கில்!

கோட்டூர்புரம் பாலத்தைப் பார்க்க, நெடுஞ்சாலைத் துறைக்கு வரவேண்டும். ஆம். இதன் மாதிரிப் பாலத்தை இங்கே பார்க்கிறோம்.

மேலும் இங்கே நாம் பார்ப்பது-மத்திய சூடேற்றிய கலவை இயந்திரத் தொகுதி.

பரங்கிமலை இரயில் நிலையம் அருகில் அமையவிருக்கும் வாகனச் சுரங்கப்பாதை.

கோவை கிராஸ்கட் சாலை - மேம்பாலம், காட்பாடி மேம்பாலம், கொள்ளிடம் ஆற்றுப் பாலம் ஆகியவற்றின் மாதிரிகள் இங்கே காட்சி தருகின்றன.

இப்போது நாம் பொதுப்பணித்துறை அரங்கினுள் நுழைகிறோம்.

காவிரியின் வடிகால் பரப்பு விவரங்கள், காவிரி முக்கிய துணை நதிகள், தமிழ்நாட்டில் காவிரியின் பாசனப் பரப்பு, நடைமுறையில் உள்ள பாசனத் திட்டங்கள் முதலானவை அழகிய ம்றையில் உருவாக்கப்பட்டுள்ளன.

டான்சியின் திட்டப் பணிகளைப் பார்த்துவிட்டு வரும் நம்மை, சென்னைக் குடிநீர் அரங்கம் வரவேற்கிறது.

'குடிநீரைச் சேமியுங்கள் - வீணாக்காதீர்!' என்று சொல்லாமல் சொல்கிறது இந்த அரங்கம்.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களான புழலேரி, சோழவரம், பூண்டி ஆகியவற்றின் பெரிய அளவுப் படங்கள் காட்சி தருகின்றன. குடிநீர் சுத்திகரிப்பும் தரக்கட்டுப்பாடும் கண்டறியும் காட்சியும், கிருஷ்ணா நதிநீர்த்















திட்டம் - நீர் வழிப் பாதையைக் காட்டும் காட்சியும் நம்மைக் கவர்கின்றன.

இங்கே உள்ள சிறு திரையரங்கில், குடிநீர் சேமிப்பதைச் சித்திரிக்கும் படம் காட்டப்படுகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறையில் பூரியாமூலம் சத்தூட்டப்பட்ட வைக்கோல், ஆவின இனவிருத்தி, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு கால்நடைப் பண்ணைகள், பால் உற்பத்திக்குப் பராமரிப்பு முறைகள் ஆகியவை விளக்கப்படுகின்றன.

கோழி, முயல், ஆடு, வெண்பன்றி ஆகியவற்றையும் இங்கே பார்க்கலாம். குஞ்சு பொறிக்கும் கருவியொன்றும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

வனத்துறைக்கு வருவோமா?

'எங்களையும் வாழவிடுங்கள்!' என்ற வாசகம், விலங்கினங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது.



காடுபடு பொருள்களைப் பார்க்கின்ற நம் கண்களுக்கு, விலங்குகளின் வண்ணப் படங்களும் தென்படுகின்றன. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ன செய்கிறது என்பதையும் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் - குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் குறித்துத் தெரிந்துகொள்கிற நாம், 2011-இல் சென்னை எப்படி இருக்கும் என்பதையும் தெரிந்து கொள்கிறோம்.

மாநகரக் குடிநீர் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகிய மாதிரிகளைப் பார்க்கின்ற நமக்கு, சென்னை மாநகரின் துரித வளர்ச்சிப் பணிகள் துல்லியமாகத் தெரிகின்றன.

சட்ட விதிமுறை தவறினால் ஏற்படும் விளைவுகளை - நாம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அரங்கிலேயே நகர் ஊரமைப்புத் துறைப் பணிகளும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியப் பணிகளும் மக்கள் புரிந்து கொள்ளும் வகையிலே படங்களாகவும், பாடங்களாகவும் வைக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலம் மற்றும் மக்கள் நல வாழ்வுத்துறை அரங்கினுள்ளே-

அளவான குடும்பத்தின் அவசியம் உணர்த்தப்படுகிறது.

காசநோய்த் தடுப்பு, கொசு ஒழிப்பு பற்றிய தகவல்களும், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையின் பயன்களும் பணிகளும் பார்க்க வேண்டியவை.

மருத்துவக் கல்வி, கிண்டி நோய்த் தடுப்பு நிலையம் ஆகியவை மக்கள் நலப் பணிகளில் எப்படித் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றன என்பதையும் பார்க்கிறோம்.

'கூட்டுறவே நாட்டுறவு' என்பது செயல் அளவில் காட்டப்படுகிறது இங்கே!

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற பயன்கள் ஒரு புறம், சாண எரிவாயு, புகையில்லா அடுப்பு ஆகியவற்றின் உபயோகம் ஒரு புறம் நம்மைக் கவர்கின்றன. இதேபோல, டோக்ரா திட்டம் - ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தினால் விளையும் நன்மைகள் குறித்து விளக்கப்படுகிறது.

தொழிலாளர் நலன்களுக்கு உதவிக்கரமாக இருக்கும் தொழிலாளர் நலத் துறை, சித்திரக் கைத்தறித் துணிகளைத் தயாரிக்கும் கோ-ஆப்டெக்ஸ், ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டே போகிறோம்.

இடையிடையே தனியார் வைத்துள்ள பல்வகை அங்காடிகளையும் பிற மாநில காட்சி அரங்குகளையும் பார்க்கத் தவறுவதில்லை நம் கண்கள்.



கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் காட்சிகள் அமைந்த இந்தப் பொருட்காட்சியில், வயிற்றுக்கு விருந்தூட்ட இருக்கவே இருக்கிறது ஓட்டல் தமிழ்நாடு.

இந்தப் பொருட்காட்சி நடத்துவதன் மூலம் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் தற்காலிக வேலைவாய்ப்பும், சுமார் இரண்டாயிரம் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுவதற்கான வாய்ப்பும் அமைகின்றன.

பொருட்காட்சியில் மிகப்பழமையான ஊர்திகளின் கண்காட்சி, எல்லார் மனத்தையும் கவர்ந்தது. இதேபோல, ஆடை அலங்காரம், உணவு, பொம்மை, தோட்டக்கலை, புத்தகங்கள், நாய், கோலம் ஆகிய கண்காட்சிகளும் நடந்தன.

வருவாய்த் துறைக்கு வருவோமா?

சென்னை மாவட்டம் அன்றும்-இன்றும், காட்சியைக் கண்டு வியக்கிறோம். இதேபோல, பிற மாவட்டங்கள் குறித்தும், வளர்ச்சிப் பணிகள் குறித்தும் விளக்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, பெரியார் அறிவியல் தொழில்மையம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை ஆற்றி வருகின்ற பணிகள், எதிர்காலத் திட்டங்கள் முதலான பயனுள்ள தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

ஒரே இடத்தில் உள்ளூர்ச் செய்திகளை மட்டுமல்ல, உலகச் செய்திகளை மட்டுமல்ல, உபயோகமான உண்மைச் செய்திகளையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள இந்தப் பொருட்காட்சி உதவுகிறது. அதுமட்டுமல்ல அரசு ஆற்றி வருகின்ற அரும்பணிகளை அறிய முடிகிறது. அதேசமயம் பல மாநிலத்தவரும் பங்கும் கொள்ளும் ஒருமைப்பாட்டுத் தலமாகவும் இது விளங்குகிறது.

இதை, பல்வேறு மாநிலங்களில் உள்ள புகழ்வாய்ந்த கோயில் படங்களும், கலாச்சாரங்களும் விளக்கும் படங்களும் நுழைவாயில் சித்திரிக்கப்பட்டிருப்பதிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பார்த்துப் பரவசங் கொள்ளும் வகையிலே பொழுதுபோக்கு அம்சங்களும் இணைந்திருக்கின்றன. அண்ணா கலையரங்கிலே நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், மினி இரயில் வண்டி, மின் இராட்டினம், மீன்காட்சியகம், வேடிக்கை விநோதக் காட்சிகள் அப்பப்பா! எத்தனை! எத்தனை!

இந்தப் பொருட்காட்சி, வரும் ஏப்ரல் திங்கள் வரை நடைபெறுகின்றது. பார்த்து மகிழலாமே!

- பி.வி. கிரி.












# தமிழ்நாட்டில் பாய்மர மிதவைப் பலகைப் போட்டி



'விண்ட் சர்ஃபிங்' (Wind Surfing) ஒரு பிரபலமான நீர் விளையாட்டுப் போட்டியாக இந்தியாவில் வளர்ந்து வருகிறது. 1970-ஆம் ஆண்டு ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகத் தொடங்கிய இந்த விளையாட்டுப் போட்டி, போட்டியாளர்கள் ஆர்வத்தினால் வளர்ந்து 1984-இல் இருந்து ஒலிம்பிக் போட்டிகளில் இதுவும் ஒரு போட்டியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விண்ட் சர்ஃபிங் போட்டி, 1983-இல் சென்னையில், சென்னைத் துறைமுகத் துறையின் நூற்றாண்டு விழாவின்போது நடத்தப்பட்டது. அதன்பிறகு 9 ஆண்டுகள் கழித்து மீண்டும் இந்த ஆண்டு இந்தப் போட்டி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, இந்திய அரசு சுற்றுலாத்துறை, ரிக்கி டிக்கி டாவி எனும் விளையாட்டுக் கழகம், ஆகியவை இணைந்து நடத்துகின்றனஇந்தப் போட்டி சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் உதவியோடு 'சர் பேஸ் - 92' என்ற பெயரில் நடைபெற்றன.

போட்டி நடத்துவதற்கு வி.ஜி.பி. தங்கக் கடற்கரையினர், ஃபிசர்மென் கோவ், ரெசிடென்சி, அம்பாசடர் பல்லவா, கோல்டன்சன், பிரசிடண்ட் மற்றும் மாமல்ல பவன் ஆகிய ஓட்டல்களும், தம்ஸ் அப் நிறுவனமும் உதவி இருக்கின்றன.

இந்தப் போட்டிகளில் 30 புகழ் பெற்ற இந்தியா மற்றும் வெளி நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டிகள் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை நடைபெற்றன.

போட்டிகளில் கலந்து கொள்வதற்காக சுற்றுலாத்துறை, சுவீடனிலிருந்து செல்வி கிறிஸ்டினா நெல்சன் என்பவரை வரவழைத்திருந்தது. இவர் தமிழகத்தில் இந்தப் போட்டி வளர்வதற்காக உதவி செய்கிறார்.

இந்தப் போட்டி, இராயபுரம் கடற்கரை மற்றும் சென்னைத் துறைமுகம், முட்டுக்காடு படகுத்துறை ஆகிய இடங்களில் நடைபெற்றது. போட்டிகள் நடைபெறும்போது, கோர்ஸ் ரேசிங், மாரத்தான் (துறைமுகம் முதல் லைட் ஹவுஸ் வரை) ஸ்லாலாம், பாயிண்ட்-டு-பாயிண்ட், ஸ்கொர்பிங், சர்பிங், பூசி யோர்டிங் போன்ற போட்டிகள் நடைபெற்றன. போட்டியையொட்டி, கடல் உணவு விழா ஒன்றும் நடத்தப்பட்டது. ஆண்டுதோறும் இந்தப் போட்டிகளை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது,

இந்தப் போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த,செய்தி சுற்றுலாத் துறைச் செயலர், திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள், ரிக்கி டிக்கி டாவி கழகத்தினரை நான்கு நாட்கள், முட்டுக்காட்டில் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தக் கேட்டுக் கொண்டார். இந்தப் பயிற்சிகளை சுவீடனைச் சேர்ந்த் வீராங்கனையொருவர் அளித்தார்.

தமிழகச் சுற்றுலாத்துறைக் கழக நிருவாக இயக்குநர் திரு. பி. செல்வம், இ.ஆ.ப., மற்றும் தமிழகச் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., ரிக்கி டிக்கி டாவி கழகத்தின் தலைவர் திரு. திபாங்கர் கோஷ் ஆகியோரின் ஒத்துழைப்புடன், வீரம் சார்ந்த சுற்றுலா ஆர்வத்தை வளர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இந்தப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மாணவ, மாணவியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முதலாவது அகில இந்திய விண்ட் சர்ஃபிங் போட்டி (பாய்மர மிதவைப் பலகைப் போட்டி) சென்னையில் 13.2.1992 அன்று துவங்கியது.

கடல் அலைகளில் காற்றின் வேகத்திற்கு ஏற்ப சிறு படகைச் செலுத்துவதை விண்ட் சர்ஃபிங் விளையாட்டு என்பர். இது பாய்மர மிதவைப் பலகை விளையாட்டு எனவும் அழைக்கப்படுகிறது. கடந்த 1969-ஆம் ஆண்டு பொழுதுபோக்காகத் தொடங்கிய இவ்விளையாட்டு, நன்கு வளர்ச்சியடைந்து 1984-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகம் முழுவதும் 20 இலட்சம் பேர் இவ்விளையாட்டில் ஆர்வமாக ஈடுபட்டு உள்ளனர்.

இந்தியாவிலும் இவ்விளையாட்டுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. 1983-ஆம் ஆண்டு, சென்னைத் துறைமுக நூற்றாண்டு விழாவின் போது, விண்ட் சர்ஃபிங் போட்டி நடத்தப்பட்டது.

"சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்துப் போட்டியைத் துவக்கி வைத்தார். முன்னதாகத் தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார் செய்திசுற்றுலாத்துறைத் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். இறுதியில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

போட்டியில் வெளிநாட்டைச் சேர்ந்த 15 வீரர்கள், வீராங்கனைகள் உட்பட மொத்தம் 32 பேர் கலந்து கொள்கின்றனர். இவர்களில் சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டினா நெல்சன், இந்தியக் கடற்படையைச் சேர்ந்த அதுல் மாத்தூர், லெப்டினண்ட் கமாண்டர் சந்தானம், தேசியப் பெண்கள் சாம்பியன் பட்டம் பெற்ற மகாராஷ்டிராவைச் சேர்ந்த கீதா, சமிர், சுவீடனைச் சேர்ந்த யான்பா, இலட்சத்தீவுகளில் இருந்து கோழிக்கோடு வரை பாய்மர மிதவைப் பலகையில் சென்று சாதனை படைத்த ராகுல் ரஸ்தோகி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அகில இந்திய நீர்ச் சறுக்குப் படகுப் போட்டியின் நிறைவு விழா 15.2.92 அன்று கோவளத்தில் நடந்தது. விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

'சுற்றுலா வளர்ச்சித்துறை நீர்ச் சறுக்குப் படகுப் போட்டியைச் சிறப்பாக நடத்தி இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கப் பல்வேறு புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். வளைகுடா போருக்குப் பிறகு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாடு சிறந்த சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. தமிழ்நாடும், கேரளாவும், தான் சுற்றுலாத் துறையில் வளர்ந்து வருகின்றன.

முட்டுக்காடு படகுத்துறையை ஆழப்படுத்த வேண்டும் என்று இங்குள்ளவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துக் கூறி கோரிக்கையை நிறைவேற்ற நான் பாடுபடுவேன். நீர்ச்சறுக்குப் படகுப் போட்டியில் இளைஞர்கள் வருகிற ஆண்டு அதிக அளவில் பங்குபெற வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. சுற்றுலாத்துறை பல்வேறு நிலைகளில் சிறப்பைப் பெற்று வளர்ந்துள்ளது. அது மேன் மேலும் சிறந்த இடத்தைப் பெறும்.'

நீர்ச்சறுக்குப் படகுப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஐதராபாத்தைச் சேர்ந்த ராகுல் ரஸ்தோகி, சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டினா நெல்சன், பம்பாயைச் சேர்ந்த மந்தீப்தில்லான், சென்னையைச் சேர்ந்த அருண்வாசு ஆகியோருக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேடயமும், சான்றிதழும் வழங்கிப் பாராட்டினார்.

முன்னதாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். ரிக்கி டிக்கி டாவி கிளப் இயக்குநர் திபாங்கர் கோஷ் வரவேற்றுப் பேசினார்.

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

44-வது அகவையில் அடியெடுத்து வைக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் (24.2.1992).

**இரண்டாம் அட்டை:**

டெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரிப் பிரச்சினை தொடர்பான கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் (17.2.1992).

**நான்காம் அட்டை:**

கும்பகோணம் மகாமகத் திருவிழாவினையொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு அஞ்சல் தலையையும், சிறப்பு மலரையும் வெளியிட்டு, 10 இலட்சம் பேருக்கு உணவுப் பொட்டலங்களையும் வழங்கினார் (18.2.1992).

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No: TN/MS(C)/PP-23





# பொது மன்னிப்பு விடுதலை!

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டு, நல்லாட்சி நடைபெற்று வருவதை வரவேற்று, அதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் ஆயுள்தண்டனை பெற்ற சிறைவாசிகள் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்ததைக் கருத்தில்கொண்டு, தங்களுக்குக் கருணை காட்டி தண்டனைக் குறைப்பு வழங்கிப் பொதுமன்னிப்பு அடிப்படையில் தங்களை முன் விடுதலை செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சிறைவாசிகளும் திருந்தி மறுவாழ்வு பெற வேண்டும் என்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - சிறைவாசிகளுடைய அக்கோரிக்கையை மனிதாபிமானத்தோடு ஆய்வு செய்யுமாறு ஆணையிட்டார்கள். அதற்கேற்ப, 18.12.1978-க்கு முன்பு ஆயுள்தண்டனை அடைந்த சிறைவாசிகளில், கொள்ளை மற்றும் பணத்திற்காகக் கொலை, கற்பழித்தல் போன்ற கடுமையான குற்றவாளிகளைத் தவிர்த்த மற்ற அனைவரையும் விடுதலை செய்யவும் அவ்வாறே 18.12.1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள்தண்டனை பெற்ற, 12 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத்தண்டனை அனுபவித்த ஆயுள் சிறைவாசிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

18.12.1978-க்குப் பின்னர், ஆயுள்தண்டனை பெற்று பத்தாண்டுக் காலம் முழுமையாகச் சிறைத்தண்டனை அனுபவித்த பெண் கைதிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்யவும் ஆணையிடப்பட்டிருந்தது.

மேலும் கொலை, களவு, கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களைத் தவிர்த்து, ஏனைய குற்றங்களுக்காகச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பெண் கைதிகளுக்கு முழுத் தண்டனைக் குறைப்பும், ஆண் கைதிகளுக்கு 6 மாதச் சிறைத்தண்டனைக் குறைப்பும் வழங்குமாறும் ஆணையிடப்பட்டிருந்தது.

இதனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1992 அன்று 209 ஆயுள்தண்டனை பெற்ற கைதிகள் விடுதலை ஆனார்கள்.

ஆயுள்தண்டனை தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 33 பெண் கைதிகளும் அந்நாளில் விடுதலை ஆனார்கள். ஆயுள்தண்டனை தவிர்த்து, மற்ற தண்டனை பெற்றுள்ள 713 ஆண் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படும்.

# நந்தனம் - ஜோதி தோட்டம் மற்றும் சைதாப்பேட்டை வி.எஸ். முதலி குடியிருப்புகளுக்கு உடனடி குடிநீர் விநியோகம்:

ஆளுநர் மாளிகைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புதிய அமைச்சரின் பதவி பிரமாண விழாவிற்குப் புறப்பட்டுச் செல்லுகையில், போயஸ் தோட்டப் பகுதி முகப்பில் நின்று கொண்டிருந்த பெண்களிடம் உள்ள விண்ணப் பங்களைப் பெற்றுவரச் செய்து, அவர்களின் குறைகளைத் தெரிந்து அந்தப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினையை அன்றைய தினமே (15.2.1992) தீர்த்து வைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்..

நந்தனம் ஜோதி தோட்டம் மற்றும் சைதாப் பேட்டை வி.எஸ். முதலி தெருவில் வசிக்கும் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்ப தில்லை எனவும், குழாயில் விடப்படுகின்ற தண்ணீர் திருடப்பட்டு, தனியார் ஓட்டல்களுக்கு வழங்கப்படுகிறது எனவும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளின்மீது உடனடி நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அலுவலர்களுக்கு உத்தரவு இட்டவுடன், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு உடனடியாக லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப் பட்டது. மேலும் அப்பகுதியில் பதிக்கப்பட்டிருந்த பழுதடைந்த குழாய்களையும் உடன் மாற்றி அமைக்கும் பணியும் அன்றே தொடங்கப்பட்டது. கோரிக்கை மனு பெறப்பட்ட 3 மணி நேரத்திற் குள் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கண்ட பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை [illegible]





# இந்த இதழில்...


தமிழ்நாடு அரசின் 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் ... 2

தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம் ... 8

கால்நடைச் செல்வம் ... 9

உயிர்க்கொல்லி நோயை ஒழிப்போம் ... 13

தமிழகத்துக்கு வாங்க! (கவிதை) ... 16

தெலுங்கு-கங்கைத் திட்டப் பணிகள் ... 19

தொழுநோய் ஒழிப்பில் ஒரு தொண்டு நிறுவனம் ... 20

மூடநம்பிக்கை (சிறுகதை)-வ.ரா. ... 23

உதகை தாவரவியல் பூங்கா வளர்ச்சிப் பணிகள் ... 29

விவசாயிகளுக்கு விற்பனை உதவி ... 31

வால்நட்சத்திரம் ... 33

நல்ல தங்காள் கதை ... 39

காணும்பொருளெல்லாம் கலைவண்ணம் ... 42

படமும் செய்தியும் 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

பங்குனித் திங்கள் : 2

மலர்:21 இதழ்:18

16-3-1991

# தமிழ்நாடு அரசின்
## 1991-92-ஆம் ஆண்டிற்கான
# வரவு - செலவுத் திட்டம்

அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ் 30.1.1991 அன்று பிறப்பிக்கப் பட்ட உத்தரவின் காரணமாக, தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத் தால் அல்லது நாடாளுமன்றத்தின் ஆணை உரிமை யின் பேரில் செலுத்தத்தக்கவையாகும். எனவே, 1991-92-ஆம் நிதி ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத்தின் வரவினங்கள், செலவினங்கள் குறித்த விவரங்கள் அவைமுன் வைக்கப்படு கின்றன.



**1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு**

நடப்பாண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் ரூ.3,418,20 கோடி மாநில வரியும், வரியில்லாத ஏனைய வருவாயும் இடம்பெறுகிறது. இவை வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட ரூ.360.96 கோடி உயர்வைக் காட்டுகின்றன. வணிகவரிகள், மாநில ஆயத்தீர்வை வருவாய்கள் ஆகியவற்றின் கீழ் கூடுதலாகக் கணிசமான அள விற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டியதே இதற்குக் காரணங்களாகும்.

வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள ரூ.1340.22 கோடியுடன் ஒப்பிடுகையில் திருத்த மதிப்பீட்டில் மத்திய வரிகள் தீர்வைகள் ஆகிய வற்றில் மாநில அரசின் பங்கு மத்திய அரசிட மிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.1,557.46 கோடியாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டி லுள்ள ரூ.4,814.09 கோடியுடன் ஒப்பிடுகை யில், திருத்த மதிப்பீட்டில்வருவாய்க்கணக்கின் கீழ் செலவு ரூ.5,266.32 கோடியாகும்.



பிறரிடம் அன்பு செலுத்தினா லன்றி அவர்களை அறிய இயலாது என்பதையும் – உங்களிடம் நல் லெண்ணம் இல்லாவிடில் இது சிரம சாத்தியம் என்பதையும் உணருங்கள்.

—மூதறிஞர் ராஜாஜி.



அரசுப் பணியாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்கியது, மாநில அரசு எடுத்துக் கொண்ட நகராட்சிப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தது, சம்பள வீதங்களைச் செயல்படுத்தியது, ஒய்வூதியங்களைத் திருத்திய மைத்தது ஆகியவையே ரூ.452.23 கோடி உயர் விற்குக் காரணமாகும் எனினும், கூடுதல் வருவாய் திரட்டியது, வருவாய்க்கணக்கில் மதிப்பிடப்பட்ட செலவு உயர்வைவிட ரூ.125.96 கோடி அதிக மாக இருப்பதால், வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட ரூ.416.63 கோடி பற்றாக்குறை ரூ.290.67 கோடி பற்றாக்குறையாக ஆகிவிடும்.

மூலதனக் கணக்கில் வரவினங்கள், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1,773.59 கோடி யாகக் கணக்கிட்டிருப்பதை ஒப்பிடுகையில், அவை தற்பொழுது ரூ.2,119.95 கோடியாகக் கணக் கிடப்பட்டுள்ளன. பொதுக் கணக்கிலுள்ள பற்று வரவுகளையும் ஆரம்பப் பற்றாக்குறைகளையும் கணக்கில் கொண்டு பார்த்தால், வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட ரூ.510.10 கோடி பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டு ரூ.179.10 கோடி பற்றாக்குறையுடன் முடிவடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு**

வருவாய் வரவுகள் ரூ.5,585.03 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இவை ரூ.609.38 கோடி அதிக மாக உள்ளதைக் காட்டுகின்றன. மாநில வரி-வரியல்லாத ஏனைய வருவாய் ரூ.3,897.99 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் இவை ரூ.479.79 கோடி அதிகமாகும். மத்திய வரிகள்/ தீர்வைகளில் மாநில அரசின் பங்கு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மானியங்கள் ரூ.1,687.04 கோடியாகும். 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைவிட இது ரூ.129.58 கோடி அதிகமாகும். வருவாய்க்கணக்கில் செலவு ரூ.5,955.03 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூலதனக் கணக்கில் வரவினங்கள் ரூ.1,795.04 கோடியாகக் காட்டப்பட்டுள்ளன. கடன்கள் முன் பணங்கள் உள்படச் செலவு ரூ.1,632.35 கோடி யாகக் காட்டப்பட்டுள்ளது. வருவாய்/ கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுக்கணக்கு ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், பற்று வரவுகள் தொடர்பான 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.128.21 கோடி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ரூ.179.10 கோடி ஆரம்பப் பற்றாக்குறையைக் கணக்கில் கொண்டு பார்க்கையில், 1991-92-ஆம் ஆண்டு ரூ.307.31 கோடி இறுதிப் பற்றாக்குறையுடன் முடிவடைகிறது.

**உடனடி செலவிற்கான மானிய அனுமதி**

1991-92-ஆம் ஆண்டிற்கான, ஆண்டு நிதி நிலை அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ள தாலும், தொடர்புடைய மானியக் கோரிக்கைகள் ஏனைய வரவு செலவுத் திட்ட ஆவணங்களுடன் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாலும் 1991-92-ஆம் நிதியாண்டிற்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தேவைப்படும் உடனடிச் செலவிற்கான மானிய அனுமதியை வழங்குமாறு இந்நிலையில் கேட்டுக் கொள்கிறேன்.

(—நாடாளுமன்றத்தில் 1991-ஆம் ஆண்டு மார்ச்சு 5-ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை)

## வரவு-செலவுத் திட்டம் முக்கிய விவரங்கள்

**1990-91**-ஆம் ஆண்டிற்கான ஏற்பளிக் கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.1,450 கோடியாகும். மின்சக்திக்காக, மின்சக்தி நிதியுதவி நிறுவனத்திட மிருந்து பெற்ற ரூ.100 கோடி நிதியுதவியும் இதில் அடங்கும்.

1990-91-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப் பீடு, ரூ.1,488 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது. 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.1,600.42 கோடிக் கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வகை செய்கிறது.




1991-92-ஆம் ஆண்டிற்கான இந்த ரூ.1,600.42 கோடி திட்ட ஒதுக்கீட்டுடன், மின்சக்தி நிதியுதவி நிறுவனத்தின் உதவியுடன் கூடுதலாக ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடும் இருக்கும். எனவே, 1990-91-ஆம் ஆண்டு ரூ.1,350 கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு 1991-92-இல் ரூ.1,600.42 கோடியாக உயர்ந்துள்ளது அல்லது 1990-91-இல் ரூ.1,450 கோடி என்பதிலிருந்து 1991-92-இல் ரூ.1,700.42 கோடியாக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் 5.3.1991 அன்று வைக்கப்பட்ட 1991-92- ஆம் ஆண்டிற் கான தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம் குறித்த முக்கிய விவரங்கள்:

★ 1990-91-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.510.10 கோடியாக இருந்த இறுதிப் பற்றாக்குறை (-) 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.179.10 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது (-).

★ 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள இறுதிப் பற்றாக்குறை ரூ.307.31 கோடியாக (-) இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

★ 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.1,600.42 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது.

★ 1990-91-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்ட ஒதுக்கீடு ரூ.1,450 கோடியை விட அதிகரிக்கும். 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு ரூ.1,488 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது.

★ மின்சக்தி நிதியுதவி நிறுவனம் அளிக்கும் நிதியுதவியின் அடிப்படையிலான ரூ.100 கோடி ஒதுக்கீடு உட்பட 1990-91-ஆம் ஆண்டு மின் சக்தித் துறையின் மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.457 கோடியாகும். 1991-92-இல், திட்ட



ஒதுக்கீடு ரூ.525 கோடியாக அதிகரிக்கப்படும். இதில் மின்சக்தி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து பெறும் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியும், திட்ட ஒதுக்கீடு, ரூ.425 கோடியும் அடங்கும்.

★ குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.166 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.199 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

★ வேளாண்மை, அது தொடர்பான பணிகள் ஆகியவற்றுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.160 கோடியாக இருந்தது; இது 1991 - 92-இல் ரூ.184 கோடியாக உயர்ந்துள்ளது.

★ பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91- இல் ரூ.74 கோடியாக இருந்தது; இது 1991-92-ல் ரூ.94 கோடியாக உயர்ந்துள்ளது.

★ தொழில்கள், கனிமங்கள் குறித்த திட்ட ஒதுக் கீடு 1990-91-இல் ரூ.92 கோடியாக இருந்தது; இது 1991-92-இல் ரூ.114 கோடியாக உயர்ந் துள்ளது.

★ கல்வி குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.37 கோடியாக இருந்தது; இது 1991-92-இல் ரூ.76 கோடியாக உயர்ந்துள்ளது.

★ வீட்டு வசதி, நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-ஆம் ஆண்டில் ரூ.96 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.111 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஆதி திராவிடர்/பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல், ரூ.41 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.59 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ சமூக நலன், சத்துணவு, குறித்த திட்ட ஒதுக் கீடு 1990-91-இல் ரூ.79 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.91 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.



★ சாலைகள், பாலங்கள் குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.62 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.76 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

★ குடிநீர்ப்பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கி, அவற்றைப் பாதுகாக்கத் தனி முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. நகர்ப் பகுதி குடிநீர் வழங்கு திட்டங் களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.89.03 கோடியும், ஊரகக் குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கு ரூ.61.51 கோடியும் வகை செய்யப் பட்டுள்ளது.

★ தெலுங்கு கங்கைத்திட்டத்திற்கு ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆந்திரப் பிரதேசத் திற்குக் கொடுப்பதற்கான ரூ.50 கோடியும், தமிழ்நாட்டு எல்லைக்குள் நிறைவேற்றப்படும் பணிக்கான ரூ.25 கோடியும் அடங்கும். இத் திட்டப்பணி விரைவுபடுத்தப்படும். சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் பணிக்கான நிறுவன நிதி உதவியும் பெறப்படும்.

★ இம்மாநிலத்தில் ஏதாவதொரு வகையில் கூட குடிநீர் வசதி இல்லாத 5,885 குடியிருப்புப் பகுதிகளுக்கு, வரும் ஆண்டில் ரூ.12 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும்.

★ விரைவுபடுத்தப்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டத் திற்கு ரூ.33.70 கோடி ஒதுக்கப்படுகிறது.

★ தற்போதுள்ள பாசன வாயில்களைப் புதுப் பித்து, சீரமைப்பதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது, நீரைச் சிக்கனமாகக் கையாளு வதற்காக மேம்பட்ட தொழில் நுட்ப உத்திகள் கொண்ட புதிய திட்டமொன்று ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

★ சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்புப் பாசனம் ஆகிய பாசன முறைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த சிறப்பாக முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

★ ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவி பெறும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தொழில் நுட்ப உத்தியுடன் கூடிய சிறு பாசன ஆதாரங் களைப் புதுப்பிக்கும் புதிய திட்டம் ஒன்று ரூ.5 கோடி நிதி ஒதுக்கத்தில் தொடங்கப்படும்.

★ ரூ.310 கோடி செலவிலான ஏழாண்டுக்கால அளவில் நிறைவேற்றப்படக் கூடிய உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப் படும். இதற்காக 1991-92- வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மானாவாரி சாகுபடிக்கான புதிய நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் 34 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.

★ தீவிர அரிசி உற்பத்தித் திட்டம் பத்து மாவட்டங் களில் செயல்படுத்தப்படும்.

★ உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் ரூ.4.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் 32,500 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

★ சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப் பின் நிதி உதவியுடன் கூடிய சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற் காக நிதி ஒதுக்கீடு ரூ.19.55 கோடியாக இருக்கும்.

★ எஞ்சியுள்ள 1,184 கால்நடை வளர்ப்பு மையங்களில் உறை விந்து மூலம் கருத்தரிக்கச் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

★ ஐந்து மாவட்டங்களில், செம்மறியாடு வளர்ப் புத் திட்டம் 1991-92-இல் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

★ ஐந்து மாவட்டங்களில் மீனவர்களுக்குக் கட்டு மரங்கள், வல்லம் ஏனைய சாதனங்கள் ஆகிய வற்றை வழங்குவதற்கான தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த கடன் மீன் பிடித்திட்டம் தொடங் கப்படும்.

★ வரும் ஆண்டில் மீனவர்களுக்காகப் புதிதாக 3,000 வீடுகள் கட்டப்படும்.

★ கிராமப் பகுதி குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், 1000-க்குக் குறைவாக மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளில் கிராமியச் சாலைகள் அமைத்தல், பாசன ஏரிகளைப் பழுது பார்த்துப் புதுப்பித்தல், கிராமப் பகுதித் தகவல் தொடர்புத் திட்டங்கள், கிராமப் பகுதி குடிநீர் வழங்கல் பணிகள், சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்






படுத்துதல், நண்பகல் உணவு மையங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் கிராமப் பகுதி குறைந்த அளவு தேவைகள் திட்டத்திற்காகத் திட்ட ஒதுக்கீடு ரூ.30 கோடியாக இருக்கும்.

★ வரும் ஆண்டில், புதிதாக, 222 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.

★ காவிரி வடிநிலப் பகுதியிலிருந்து கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் முதற் கட்டப் பணியாக 300 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக உடனடி நட வடிக்கை மேற்கொள்ளப்படும்.

★ பெரியார், தஞ்சாவூர், திருநெல்வேலி-கட்ட பொம்மன் ஆகிய மாவட்டங்களில் மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். ஒவ்வோர் வளர்ச்சி மையமும் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் ரூ.30 கோடி செலவில் ஏற்படுத்தப் படும். இத்திட்டப் பணிக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

★ சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் மின்னணுவியல் நகரம் ஏற்படுத்தப்படும். இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ.40.6 கோடி செல வாகும்.

★ தொழில் தகவல் மையம் ஒன்றும், தொழில் முனைவோர் பயிற்சி மையம் ஒன்றும் புதிதாக ஏற்படுத்தப்படும்.

★ நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளு படித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.37 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தள்ளுபடி வழங்கப்பட்ட தொகையை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்க முடியும்.

★ புதிதாக 1500 இடைநிலை ஆசிரியர்கள் பதவி ஏற்படுத்தப்படும்.

★ உலக வங்கியின் நிதி உதவியுடன் பல்திறத் தொழில் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்து வதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

★ தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்

தின் கீழ் ரூ.32 கோடி செலவில் 15,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் வரும் ஆண்டில் ஒதுக்கப்படும்.

★ தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் ரூ.8 கோடி செலவில் 25,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்படும்.

★ சென்னை மாநகரில் நடைபாதைகளில் வசிக்கும் 4096 குடும்பங்கள் வேறு இடத்தில் குடியமர்த்தப்படும்.

★ 1,00,000 வீட்டு உரிமையாளர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் குடியிருப்புகளை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பழைய பாத்திரங்களுக்குப் 'பதிலாகப் புதிய பாத்திரங்களை வழங்குவதற்காக ரூ.1 கோடி வகை செய்யப்படும்.

★ சத்துணவுத் திட்டத்தை வலுப்படுத்த இரும்புச் சத்து நிறைந்த உப்பு வழங்குவது' அறிமுகப்படுத்தப்படும்.

★ சத்துணவுத் திட்ட மையங்களில் உள்ள சமயலறைகளைப் புதுப்பிக்கும் பணி அடுத்த கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன் முடிக்கப்படும்.

★ வரும் ஆண்டில், ஆதி திராவிடர், பழங்குடியினருக்காக 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.

★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆதி திராவிட உழவர்களுக்கு 2,000 கிணறுகள் இலவசமாகத் தோண்டப்படும்.

★ நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர்களுக்கு 75,000 இலவச வீட்டு மனைகளுக்கு வகை செய்யப்படும்.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகியோருக்கு 50 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.

★ வரும் ஆண்டில் ரூ.6.4 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்காக 63 மாணவர் இல்லங்கள்/கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்துடன் தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் வேளாண்மை மேம்பாட்டுக்கான அனைத்து நாடுகள் நிதியுதவியுடனான (மகளிர்) திட்டம் செயல் படுத்தப்படும். வரும் ஆண்டில் 7,500 மகளிர் இதன் மூலம் பயன் அடைவர்.

★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சராசரி 100 நாட்களுக்கு 7 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெறுவர். இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.172 கோடியாகும்.


**தஞ்சாவூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை லிட்.டி.878, தஞ்சாவூர்**

பதிவு செய்யப்பட்ட தேதி: 20.4.1940 வேலை துவக்கப்பட்ட தேதி: 1.5.1940

**பொன் விழா ஆண்டு**

தஞ்சாவூரைத் தலைமை இடமாகக் கொண்டு இப்பண்டகசாலை ஏழு தாலுக்காக்களைச் செயல் எல்லையாகக் கொண்டு இயங்கி வருகிறது. பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை ஒரே இடத்தில் பெற ஏதுவாக 25 பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு தஞ்சாவூரில் ''காவேரி கூட்டுறவுச் சிறப்பங்காடி'' இயங்கி வருகின்றது.

**31.10.90-இல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர் | ... | 43,887 |
| 2. | பங்கு மூலதனம் | ... | ரூ.33.56 இலட்சம் |
| 3. | விற்பனை | | |
| | 1987-88 | ... | ரூ.16.23 கோடி |
| | 1988-89 | ... | ரூ.17.04 ,, |
| | 1989-90 | ... | ரூ.17.23 ,, |
| | 1990-91 (Upto 31.12.90) | ... | ரூ.12.46 ,, |
| 4. | லாபம் | ... | ரூ.2.80 இலட்சம் |
| 5. | செயல்படும் சிறப்பு அங்காடி | ... | 3 |
| 6. | செயல்படும் சிற்றங்காடி | ... | 5 |
| 7. | செயல்படும் கிளைகளும், நியாய விலைக்கடைகளும் | ... | 60 |

நுகர்வோர்கள் வாங்க விரும்பும் பொருளைத் தாங்களே தேர்ந்தெடுக்க வசதியாக, தஞ்சாவூர் காவேரி சிறப்பங்காடியில் சுயசேவைப் பகுதி 1,200 பொருட்களைக் கொண்டு இயங்குகிறது. கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் தரத்தைப் பரிசோதனை செய்ய தரப் பரிசோதனைக் கூடமும், தரமான கடலை எண்ணெய் வழங்க எண்ணெய் பிழியும் ஆலையும் இப்பண்டக சாலையில் செயல்படுகிறது.

நுகர்வோரின் திருப்தியே எங்கள் குறிக்கோள்.

எம்.ஆனந்தராவ், பி.காம்.,
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்




# தமிழ்நாட்டில் ஜெர்மனி அதிபர்

இணைந்த ஜெர்மனி நாட்டின் மேதகு அதிபர் ரிச்சர்டு வான் வைஸாக்கர் தனது இந்தியச் சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாகத், தமிழ்நாட்டுக்கு மார்ச்-3 மற்றும் 4 தேதிகளில் வருகை தந்தார்.

மார்ச்-3 ஆம் தேதி சென்னை விமான நிலையத்தில் இந்திய விமானப்படை விமானம் மூலம் வந்தடைந்த மேதகு ஜெர்மனி அதிபரை மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாலையணிவித்து அன்புடன் வரவேற்றார். மற்றும் ஆளுநரின் ஆலோசகர்கள் திரு வி.கார்த்திகேயன், திரு வி. இராமச்சந்திரன், தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி, காவல்துறைத் தலைவர் திரு பி.பி. ரெங்கசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்களும் மேதகு ஜெர்மனி நாட்டின் அதிபரை அன்புடன் வரவேற்றார்கள்.

மேதகு அதிபர் திரு. வைஸாக்கருடன் அவரது துணைவியார் திருமதி மரியான், ஜெர்மனி நாட்டின் பொருளாதாரக் கூட்டுறவு அமைச்சர் திரு வேய்க் மற்றும் மத்திய சுற்றுச்சூழல்- வனத்துறை இணை அமைச்சர் திருமதி மேனகா காந்தி ஆகியோரும் வருகை புரிந்தனர்; மேலும் ஜெர்மனி நாட்டின் புகழ்மிக்க பத்திரிகையாளர்களும், அலுவலர்களும் வருகை தந்தனர்.

மார்ச்-3 ஆம் தேதியன்று மாலை ஜெர்மனி அதிபரும் அவரது துணைவியாரும் மாமல்லபுரம் சென்று அங்குள்ள 'அர்ச்சுனன் தவம்', ஐந்து ரதங்கள் மற்றும் கடற்கரைக் கோயில் ஆகிய பல்லவர்காலச் சிற்பங்களைக் கண்டு வியந்து மகிழ்ந்தார்கள்.

பின்னர், மேதகு ஜெர்மனி அதிபர் அவர்கள் சென்னை பாலவாக்கத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் வாழ்க்கை உதவி மையத்திற்குச் சென்று பார்வையிட்டு, அங்கு வசிக்கும் 280 உடல் ஊனமுற்றோருடனும் அளவளாவினார். இம்மையத்தில் நடைபெற்றுவரும் தூய தொண்டுப் பணிகளைக் கண்டு மகிழ்வுற்றார். மையத்திற்கு ரூ.65,000/- நன்கொடையாக வழங்கினார்.

இந்த மையத்தின் பணிகளுக்காக ஜெர்மனி அரசு இதுவரை ரூ.2.5 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

மார்ச் 4-ந்தேதி அன்று சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரி (ஐ.ஐ.டி.), மேதகு ஜெர்மனி அதிபருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. ஐ.ஐ.டி. ஆளுநர்கள் குழுத் தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் சிறப்புப் பட்டமளிப்பு விழாவைத் துவக்கி வைத்தார். ஐ.ஐ.டி. நிறுவன இயக்குநர் திரு என்.வி.சி. சுவாமி, ஜெர்மனி அதிபருக்கு டாக்டர் பட்டத்தினை வழங்கினார்.

அடுத்து, ஐ.ஐ.டி. வளாகத்திலுள்ள சீமன்ஸ் கம்ப்யூட்டர் மையத்தைப் பார்வையிட்டு, பின்னர் பெருங்கடல் பொறியியல் மையத்தையும் பார்வையிட்டு அங்கு அலைகளிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை மேதகு அதிபர் துவக்கி வைத்தார். ஐ.ஐ.டி. நிறுவனத்திற்கு ஜெர்மனி அதிபர் தனது - நல் எண்ணத்தைத் தெரிவிக்கும் வகையில் புத்தகங்கள் வாங்குவதற்கென ரூ.1.3 இலட்சம் நன்கொடையாக வழங்கினார்.

ஜெர்மானிய அதிபரின் இரண்டு நாள் சுற்றுப் பயணம் முடிந்தபின் அவரை 4.3.1991 அன்று மாலை சென்னை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், ஆளுநரின் ஆலோசகர்கள், அரசு தலைமைச் செயலர், காவல்துறைத் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள்.

- க. குமாரவேலு.


**தமிழரசு**
சந்தா விவரம்

தமிழ் ........ ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# தென்னார்க்காடு மாவட்டம் (இ) கடலூர்.

**நலிந்தோர் மேம்பாட்டிற்கு நல்லதோர் திட்டம்:**

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்வோரின் வளமான வாழ்விற்கும், கிராம முன்னேற்றத் திற்கும் அரசின் வளர்ச்சிப் பணிகளின் நலனை எய்திட, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை யினால் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டுகிறோம்.

**அ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

மானியத்துடன் கடன் வசதி அளித்து சுயவேலை செய்வதை ஊக்குவித்தல்.

| | | |
|---|---|---|
| பயன்பெறும் குடும்பங்கள் | - | 14,125 |
| ஒதுக்கீடு ரூ.லட்சத்தில் | - | 444.389 |

குறிப்பாக ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மானியத் தொகை 50 சதவிகிதம் உதவி அதிகப்பட்சமாக ரூ.5,000 வரை இவ்வாண்டில் வழங்கப்படும்.

**ஆ. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்:**

| | | |
|---|---|---|
| 1990-91-ஆம் ஆண்டிற்கு வேலைகள் | - | 10,544 |
| ஒதுக்கீடு ரூ.லட்சத்தில் | - | 1,733.23 |

ஒவ்வொரு வீட்டிற்கும் மாநில அரசு வழங்கும் ரூ.4,000-க்கான தொகையுடன் இந்த ஆண்டில் 5,100 கான்கிரீட் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

**இ. மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்:**

1987-88-ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் டோக்ரா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு முடிய 16 வட்டாரங்களில் 363 மகளிர் குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டு அங்கத்தினர்களுக்கு 50 சதவிகிதம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு மத்திய அரசினால் 100 குழுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. குழுக்கள் மூலம் பொம்மைகள் தயாரித்தல், நெசவு செய்தல், பாய் முடைதல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்காணும் திட்டங்கள்பற்றி அறிய வேண்டிய இடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்.

**இரா.தனபதி, பி.காம்.,**
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
தென்னார்க்காடு மாவட்டம்
கடலூர்

**திரு.அ.இளங்கோவன், இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
பெருந்தலைவர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
தென்னார்க்காடு மாவட்டம் (இ) கடலூர்



# கால்நடைச் செல்வம்

காலநடைப் பராமரிப்புத் துறை, தமிழ்நாட்டில் பல்லாண்டுக்காலமாகத் தமிழ்நாட்டிலுள்ள பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காகப் பல் வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந் துள்ளது.

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு, கிராமப்புற விவசாயிகளால் நீண்ட காலமாகச் செயல்படுத்தப்பட்டு வந்த போதிலும், கால்நடைகளின் பால், இறைச்சி, முட்டை உற்பத்திகுறைவாக இருந்த காரணத்தால் அவர்கள் கால்நடை வளர்ப்பில் அதிக அக்கறை காட்ட வில்லை. ஆனாலும் சமீப காலங்களில் கால்நடை வளர்ப்பு, கால்நடை இன விருத்தி, கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடைகளில் நோய்த் தடுப்பு முறை களில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன் னேற்றத்தின் காரணமாகத் தமிழ் நாட்டில் உள்ள பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகள் உற்பத்தித்திறன் வெகு வாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் ஏராளமான விவசாயக் குடும்பங்கள் கால்நடை வளர்ப்பை நல்ல வருமானம் கொடுக்கக்கூடிய முழுநேரத் தொழில் ஆகவும் உபரி வருமானம் கொடுக்கக்கூடிய பகுதி நேரத் தொழிலாக வும் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் 1982-ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கின்படி ஒரு கோடியே 4 இலட்சம் மாடுகளும் 32 இலட்சம் எருமைகளும் 55 இலட்சம் ஆடுகளும் (செம்மறி ஆடு) 52 இலட்சம் வெள்ளாடு களும் ஒரு கோடியே 83 இலட்சம் கோழிகளும் இருந்தன. தமிழ் நாட்டில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட்டதன் காரணத்தால் கிராமப்புற விவசாயிகள் நல்ல தரமான கால்நடைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் உற்பத்தியை அதிகரித்ததால், உற் பத்திக் குறைவான மாடுகளை அகற்றி விற்று விட்டனர். இதன் காரணமாக 1989-ஆம் ஆண்டு எடுத்த கால்நடைக் கணக்கின்படி, தமிழ் நாட்டில் 93 இலட்சம் மாடுகளும், 31 இலட்சம் எருமைகளும், 59 இலட்சம் செம்மறி ஆடுகளும், 59 இலட்சம் வெள்ளாடு களும், இரண்டு கோடியே 14 இலட்சம் கோழிகளும் உள்ளதாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது.

**பால் உற்பத்தி**

தமிழ்நாட்டில் தற்பொழுது 31 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதியான பசுக்களும் 16 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதியான எருமைகளும் உள்ளன. தமிழ் நாட்டில் உள்ள பசுக்கள் மற்றும் எருமை களின் பால் உற்பத்தித்திறனை அதிகப் படுத்துவதற்குத் தமிழக அரசு, அதிகம் பால் தரக்கூடிய உயர்தர, அயலின, ஜெர்ஸி, பிரிசியன் பொலி காளை களைக் கொண்டு, தமிழ் நாட்டிலுள்ள பசுக்களின் இனவிருத்திக்கு உபயோகப் படுத்தி வந்துள்ளது. இதேபோல் தமிழ் நாட்டில் உள்ள குறைந்த அளவு பால் கொடுக்கக்கூடிய நாட்டின எருமைகளின் இனப் பெருக்கத்திற்காக வட இந்தியா விலிருந்து கொண்டுவரப்பட்ட அதிக அளவு பால் கொடுக்கக்கூடிய இனத்தைச் சேர்ந்த முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் காரணமாகத் தமிழ் நாட்டில் தற்பொழுது ஒரு நாளைக்கு

**டாக்டர்.தி.க.கோவிந்தராசன்**
**இயக்குநர்**
**கால்நடைப் பராமரிப்புத் துறை**

10 லிட்டரிலிருந்து 15 லிட்டர் பால் கொடுக்கக்கூடிய கலப்பினப் பசுக்கள் ஏராளமாக உள்ளன. ஒரு நாளைக்கு 15 லிட்டரிலிருந்து 20 லிட்டர் பால் கொடுக் கக்கூடிய பசுக்களும் அதிக அளவில் உள்ளன. எருமைகளின் பால் உற்பத்தி கணிசமாக அதிகரித்து, ஒரு நாளைக்கு 7 லிட்டரிலிருந்து 8 லிட்டர் வரை பால் கொடுக்கக் கூடிய எருமைகளும் நிறைய உள்ளன.

இந்த முயற்சிகளின் காரணமாகத் தமிழ்நாட்டில் உற்பத்தியான மொத்த பாலின் அளவு 1978-79-ஆம் ஆண்டு 17 இலட்சம் டன்னாக இருந்தது, 1989-90 -ஆம் ஆண்டு 34 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதன் பயனாகத் தமிழ் நாட்டில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்குக் கிடைக்கக்கூடிய பாலின் அளவு 1978-79-இல் 99 கிராம் ஆக இருந்தது, 1989-90-இல் 169 கிராம் ஆக உயர்ந் துள்ளது.

தமிழ் நாட்டில் கிராமப்புங்களில் உள்ள பசுக்கள் மற்றும் எருமைகளின் இனவிருத்திக்காக்க் கால்நடைப் பரா மரிப்புத்துறை 2,770 நிலையங்களின் செயற்கைமுறை இனவிருத்திவருகிறது. இந்த மொத்த நிலையங்களில், 1,859 நிலையங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறையில் கருவூட்டல் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 911 நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட திரவ விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி செய்யப்பட்டு வருகிறது. இவ்விதம் உறைவிந்து மூலம் இனவிருத்தி செய்யப்படும் பசுக்கள் எருமைகளின் இனவிருத்திக்குத் தேவையான உறை விந்து தயாரிக்கக் கால்நடைப் பராமரிப்புத்

**நான்காம் அட்டை சொல்லும் செய்தி**



மேம்படுத்த மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. முக்கியமாக ஆதி திராவிடப் பெண்களுக்காக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய திட்டம் இது. இந்த ஆண்டு 6,250 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவர். இந்தத் திட்டத்திற்காக 2.7 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.



பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு, தர்மபுரி, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள 9 மலைப் பகுதிகளில் வாழும் ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி, கால்நடைப் பராமரிப்புத் துறை கால்நடை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கறவைப் பசுக்கள் பராமரிப்பு, ஆடு வளர்ப்பு, கலப்பினக் கன்றுகள் வளர்ப்பு, உழவு மாடுகள் வளர்த்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், இந்தப் பகுதிகளில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டம் செயல்படும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் பயன் பெறும் விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்தின் மூலம் 435 விவசாயக் குடும்பத்தினர் பயன்பெறுவர். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு 27.21 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

இதைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத் துறை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தில் ஊட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் உறைவிந்து நிலையம் ஏற்படுத்தி, நீலகிரி மாவட்டத்திலுள்ள பசுக்களின் இனவிருத்திக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் எல்லாக் கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கிளை நிலையங்களுக்கு உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், கால்நடைப் பராமரிப்புத் துறை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மேற்குத் தொடர்ச்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் பசுந்தீவன உற்பத்திக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இவ்விதம் தரம் உயர்த்தப்பட்ட பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளை வளர்ப்பதால் அதிக அளவில் பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றை உற்பத்தி செய்து, தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் நல்ல முறையில் பயன் பெற்று அதன் மூலம் அதிக வருமானம் பெற்று, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுவதால் கிராமப்புறப் பொருளாதாரமும் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இவ்விதம் கிராமப்புறச் சமுதாயத்தை மேலும் முன்னேற்றம் அடையச் செய்யக் கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படக் காத்திருக்கிறது.



## தமிழகத்தில் காற்றாலை மூலம் 200 மெகாவாட் மின்சாரம்

எட்டாவது திட்ட காலத்தில், தமிழகத்தில் காற்றாலை மூலம் 200 மெகாவாட் விசை உற்பத்தி செய்ய தமிழ்நாடு விசை மேம்பாட்டு நிறுவனம் திட்டங்கள் வகுத்துள்ளது. இந்த 200 மெகாவாட் திட்டத்தில், 100 மெ.வா. விசை தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படும்.

50 கிலோவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலை அமைப்புகளைத் தமிழகத்தில் நிறுவ, பல வேறு இடங்களிலிருந்து தமிழ்நாடு விசை மேம்பாட்டு நிறுவனத்துக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளன. காற்றாலை மின்சாரத்துக்கு, உற்பத்தி வரியிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கயத்தாறு பகுதியில் காற்றாலை மூலம் 500 கிலோவாட் விசை உற்பத்தி செய்யும் அமைப்புகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இந்த அமைப்புகள் நிறுவப்படும். இந்தப் பகுதியில் 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் மட்டும் 600 மெ.வாட் விசை உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

# உயிர்க்கொல்லி நோயை ஒழிப்போம்

பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி
சிறுநீரக நோயியல் துறைத் தலைவர்
சென்னை மருத்துவக் கல்லூரி

தமிழக மக்கள் ஆவலுடன் எதிர் நோக்கும் பருவமழைக்காலம் மருத்துவ உலகில் ஒரு சிறு பரபரப்பை ஏற்படுத்துவதை அனைவரும் அறிந்திருக்க நியாயமில்லை. தண்ணீர்த் தட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற இந்தப் பருவ மழையை மட்டுமே நம்பியிருக்கும்போது அதே நேரத்தில் தூய்மைக் கேட்டால் விளையக்கூடிய பேராபத்தையும் சந்திக்க வேண்டியுள்ளது!

சாதாரணமாகப் பருவநிலை மாறும் போது பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிர்களால் ஏற்படும் நோய்கள் போலன்றி, ஆண்டுதோறும் அக்டோபர் துவங்கி சனவரி முடிய தென்னகத்தில், 'லெப்டோஸ்பைரோஸிஸ்' எனும் உயிர்க்கொல்லி நோய் ஒருவிதமான நுண்கிருமிகளால், விலங்கினங்கள் மூலம் பரவுகின்றது. இந்நோய்ப் பற்றிய பல தகவல்களை, குறிப்பாக உயிரிழப்புக்குக் காரணமான சிறுநீரகச் செயலிழப்பினைப் பற்றி கடந்த ஆறு ஆண்டுகளாக, நானும், டாக்டர் சிவகுமார் போன்றோரும், மருத்துவர்களிடையே அவ்வப்போது அறிவித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம்.

இந்நோய் பற்றிய முழு விவரமும் அனைவரும் அறிய வேண்டியதும் அவசியமாகும்.

'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) எனும் இந்நோய் இதனை விளைவிக்கும் நுண்கிருமியின் பெயராலேயே அழைக்கப்படுகின்றது (Leprospira).

சிறிய நூல்போன்ற இருமுனைகளில் சிறிய கொக்கி போன்று வளைந்துள்ள இக்கிருமி 'ஸ்பைரோக்ட்' எனும் வகையைச் சார்ந்தவை சுமார் 6-20 மி.மீ நீளமும், 0.1 மி.மீ பருமனும் கொண்டவை. இவற்றில் சுமார் 19 இனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின்கீழ் கிட்டத்தட்ட 180 வகைகள் உலவுகின்றன. மானிடரைப்போல பிறப்பால் மட்டுமே ஆயிரம் சாதிகளாகப் பிரிந்திருப்பது போலன்றி, இவை அவற்றின் குண இயல்புகளில் மாறுபட்டுத் தோன்றுவதாலேயே இனம் பிரிக்கப்பட்டுள்ளன! இவற்றில் மனிதனுக்குக் கேடு விளைவிப்பவை லெப்டோஸ்பைரா இன்டராகன்ஸ்' (Leptospira Interrogans) எனும் இனமாகும். (பமோனா, கானிகோலா போன்ற மற்ற இனங்கள் விலங்கினங்களுக்குத் தீமை பயப்பவையாம்).



இக்கிருமிகள் விலங்கினங்கள் மூலமாகத்தான் மனிதரிடையே பரவக் காரணமாய் உள்ளன. வீட்டுவாழ் பிராணிகள், கால்நடை மற்றும் எலி, பெருச்சாளி அல்லது காட்டு விலங்குகள் இந்நோயால் பீடிக்கப்பட்டு அவை வெளியேற்றும் சிறுநீர் மூலமாகச் சுற்றுப்புறத்தை அடைகின்றது. அவ்வாறு வெளியேற்றப்படும் இக்கிருமிகள் நிலத்தின் தட்பவெட்பத்திற்கு ஏற்பவும் ஈரப்பதம் மற்றும் நீரோட்டத்தைப் பொறுத்தும் நீடித்து வாழும் வல்லமை பெற்றவை. ஈரமற்ற மணற்பரப்பில் சுமார் 6 மணிநேரம் வரையிலும் தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பில் 6 மாதங்கள் வரையிலுங்கூட உயிர் வாழும் தன்மையுடையவை. இம்மாதிரியான இடங்களில் மனிதன் நடந்து செல்லும் போது, கால்களிலுள்ள சிறு வெடிப்புகள் மூலமாகவோ அல்லது சிறிய காயங்கள் மூலமாகவோ இவை அவனது உடலுக்குட் புகுந்து விடுகின்றன. தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பு மற்றும் சுகாதாரக் குறைவான மழைக்காலத்தில் சுயரூபம் காட்டுவதால் வடிகால் அமைப்புகள் பருவமழையின் போதுதான் இக்கிருமிகளும் தம் பசி தீர்த்துக் கொள்கின்றன.

சாதாரணமாக நகர்ப்புறங்களில்தான் இந்நிலை அதிகமென்றாலும், கிராமப் பகுதிகளில் வயல்வெளிகள் மற்றும் புல்தரைகள் இவ்விலங்கின நடமாட்டத்தால் இக்கிருமிகள் வாழ வழி செய்கின்றன. ஆக, இந்நோய் வழிப்போக்கர் மட்டுமின்றி, விவசாயிகள், விலங்கினங்கள் காப்பிடங்களில் பணிபுரிவோர், கழிவு நீர்த் துப்புரவுப் பணியாட்கள், சுரங்க வேலை செய்வோர், ஏன் இராணுவத்தினரைக் கூட அதிக அளவில் தாக்கக் கூடிய அபாயம் படைத்தது. அமிலத் தன்மை இவற்றை அழிக்கும் சக்தி கொண்டது. இருப்பினும் சரிவர குளோரின் இடப்படாத குடிநீர்த் தேக்கங்களில் கூட இவை நீடித்து வளரும் வாய்ப்புண்டு. அப்படிப்பட்ட நீரை அருந்தும்போது இவை குடல் உறுப்புகள் மூலமாக இரத்த ஓட்டத்தில் கலந்து நோயை உண்டு பண்ணும் தன்மை பெற்றவை.

இக்கிருமிகள் இரத்த ஓட்டத்தில் கலந்து சுழலும்போது கடுமையான காய்ச்சல் மற்றும் தசைவலியை உண்டுபண்ணும். கண்களைச் சிவக்க வைத்து ஒருவித உறுத்தலையும் உண்டாக்கும். இரத்த ஓட்டத்தினால் கல்லீரலை அடைந்து அங்கு பன்மடங்காகப் பெருகி கல்லீரல் திசுக்களைச் சேதப்படுத்துகின்றன. அதனால் தான் இந்நோயின் அடுத்த கட்டமாகக் காய்ச்சலுக்குப் பின்னர் ஓரிரு தினங்களில் மஞ்சள் காமாலை (Jaundice) தென்படுகின்றது. இறுதியில் அனைத்துப் பாரத்தையும் சுமந்து வெளியேற்றும் சிறுநீரகமும் கூட இதற்கு மேல் என்னால் இயலாதெனச் செயலிழந்து விடுகின்றது.



துறை ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), ஊட்டி (நீலகிரி மாவட்டம்), ஓசூர் (தர்மபுரி மாவட்டம்) ஆகிய இந்த 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையங்களில் ஜெர்ஸி, பிரிசியன் போன்ற அயல் இனப் பொலி காளைகளும், முர்ரா பொலி காளைகளும், காங்கேயம், அலிகார் போன்ற இந்திய இனப் பொலி காளைகளும் பராமரிக்கப் பட்டு உறைவிந்து தயாரிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பசுக்களின் இனப் பெருக்கம செய்யத் தொடங்கிய காலத்தில் ஜெர்ஸி மற்றும் பிரிசியன் பொலி காளைகள் அயல்நாட்டிலிருந்து வெகு மதியாகப் பெறப்பட்டன. இந்தப் பொலி காளைகள் நாட்டினப் பசுக்களின் இன விருத்திக்கு உபயோகப்படுத்தப்பட்டாலும், இவைகளின் உற்பத்தித் திறன் வெகு அதிகமாகக் காணப்படவில்லை. இதனால், கால்நடை பராமரிப்புத் துறை நாட்டினப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிக வேகமாகச் செயல்படுத்தப்பட முடிய வில்லை. இதனைக் கருத்திற்கொண்டு. கால்நடைப் பராமரிப்புத்துறை தமிழக அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சம் பணத்தில் டென்மார்க் மற்றும் ஜெர்மனி நாடுகளிலிருந்து வெகு உன்னதமான வம்சாவழியைச் சேர்ந்த மிக அதிகமாகப் பால் கொடுத்த பசுக்களின் சந்ததியான 140 ஜெர்ஸி மற்றும் பிரிசியன் பொலி காளைகளை இறக்குமதி செய்துள்ளது.

இந்தப் பொலி காளைகள் தற்பொழுது ஈச்சங்கோட்டை, ஓசூர், ஊட்டி உறைவிந்து நிலையங்களில் வைக்கப்பட்டு உறைவிந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த உறைவிந்து தமிழ்நாட்டிலுள்ள பசுக்களின் இனப பெருக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விதம் மிக அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய வம்சாவழியைச் சேர்ந்த இந்தப் பொலிகாளைகளின் விந்தை உபயோகப் படுத்தி இனவிருத்தி செய்வதன் மூலம் பிறக்கும் கலப்பினக் கன்றுகள் மிகவும் தரமானவையாக இருக்கும். இவை மிக வேகமாக வளர்ந்து குறுகிய காலத்தில் பருவத்திற்கு வந்து வெகு அதிகமான பால் கொடுக்கக்கூடிய நல்ல பசுக்களாக இருக்கும்.

இந்த முயற்சியின் மூலம் தமிழ் நாட்டில் அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய கலப்பினக் கன்றுகள் அதிகம் பிறந்து அதன் மூலம் பால் உற்பத்தி வெகு கணிசமான அள்வில் அதிகரித்து, அதனால் கறவைப் பசுக்கள் வளர்க்கும் ஏழை விவசாயிகளுக்குப் பெரிய அளவில் பயன் கொடுக்கும் என்பது நிச்சயம். அகில இந்திய அளவில் இந்த விதமான உயரகப் பொலிகாளைகள் வேறு மாநிலத்தில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறை தீவிரமாகச் செயல்படுத்தி வரும் திட்டங்களினால் ஏற்பட்ட நன்மைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், மேலும் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் கால்நடைப் பராமரிப்புத் துறை மாநில அளவிலான கால்நடைத்| திட்டம் ஒன்றைச் செயல் படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை ஆராய்ந்த உலக வங்கி, முழுமையாக அங்கீகரித்து 1991-92-ஆம் ஆண்டிலிருந்து 7 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் கால்நடை வளர்ப்பை அபி விருத்தி செய்து, பசுக்கள் மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்த, உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க ரூ.37.22 கோடி ரூபாய் செலவில் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

**சாமானிய மக்களின் நலமே மிகவும் முக்கியமானது; ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலி கொடுக்க முடியாது.**

**—ஜவகர்லால் நேரு**

★ கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கி வரும் உறைவிந்து நிலையங்களைப் பலப்படுத்தி, அதிக அளவில் உறைவிந்து உற்பத்தி செய்வது. இதன் மூலம் தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் உறைவிந்தால் தன்னிறைவு பெறுதல்.

★ கால்நடைப் பராமரிப்புத் துறையில் உள்ள கால்நடைப் பண்ணைகளைப் பலப்படுத்தி, அதிக அளவில் தரமான பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்.

★ தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த 10 இடங்களில் உறைவிந்து மையங்களை ஏற்படுத்தி, எல்லாச் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கும் உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் வழங்க ஏற்பாடு செய்தல்.

★ தமிழ் நாட்டிலுள்ள எல்லா செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களுக்கும் உறைவிந்து முறையை விரிவாக்குதல்.

★ பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்தல்.

★ விரிவாக்கப்பணிகளைத் தீவிரப் படுத்துதல்.

- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ் நாட்டில் கறவைப் பசுக்கள் வளர்ப்பு மிக இலாபகரமாக மாறி, விவசாயிகளுக்கு அதிக அளவில் பலனைக் கொடுத்து உதவும் என்பது நிச்சயம்.

**ஆடு வளர்ப்பு**

செம்மறி ஆடு வளர்ப்பு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு தமிழ் நாட்டில்



கிராமப்புற விவசாயிகளிடம் பிரபலம் அடைந்து வருகிறது. ஆடு வளர்ப்பு ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நல்ல முறையில் வருவாய் கொடுத்து வந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள செம்மறி ஆடுகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காகக் கால்நடைப் பராமரிப்புத் துறை, சாத்தூர் (காமராஜர் மாவட்ட), சின்னசேலம் (தென்னார்க்காடு மாவட்ட), ஆகிய இரண்டு இடங்களில் செம்மறி ஆட்டுப் பண்ணைகளையும், புதுக்கோட்டை, செட்டிநாடு, ஓசூர் மற்றும் அபிசேகப்பட்டி போன்ற 4 கால்நடைப் பண்ணைகளில் செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் செயல்படுத்தி வருகிறது. இந்தப் பண்ணைகளில் இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், வேம்பூர், மாண்டியா போன்ற ஆட்டினங்கள் அறிவியல் முறையில் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல தரமான தேர்ந்தெடுத்த ஆட்டுக் கிடாய்கள், கிராமப் புறத்திலுள்ள ஆடுகளின் இனப் பெருக்கத்திற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இதே போல் சின்னசேலம் மற்றும் கொருக்கை பண்ணையில் ஜமுனாபாரி இன வெள்ளாடுகள், புதுக்கோட்டை மாவட்டப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய இந்த ஆடுகளின் குட்டிகள் கிராமப்புறத்திலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்விதப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத் துறை ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி, பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்களில் தேர்ந்தெடுக்கப் பட்ட விவசாயிகளுக்கு அரசு மானியமும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் உதவியும் கிடைக்கக் கால்நடைப் பராமரிப்புத் துறை வழி செய்கிறது. தீவிரத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள கால்நடைகளுக்குக் கால்நடைப் பராமரிப்புத் துறை, உடல் நலம் பேணும் பணிகளையும், இனப் பெருக்கப் பணிகளையும் செய்து ஏழை விவசாயிகளுக்கு உதவி வருகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வரும் முக்கியப் பணிகளாவன:

**சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்**

இந்தத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கன்று வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. ஆடு வளர்ப்புத் திட்டத்தையும், கன்று வளர்ப்புத் திட்டத்தையும் கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு 20 பெட்டை ஆடுகளும், ஒரு செம்மறி ஆட்டுக் கிடாவும் வாங்க மொத்தத் தொகையான ரூ.8,000 வழங்கவும், பயன்பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 25 சதவிகிதம் மானியம் ஆகச் சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் தற்பொழுது வடஆர்க்காடு, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1976-77 முதல் இதுவரை 23,199 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெற்றுள்ளன. இந்த

**கன்று வளர்ப்புத் திட்டம்**

கன்று வளர்ப்புத் திட்டம் தமிழ்நாடு பால்வள வளர்ச்சிக் கழகத்தால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்குக் கலப்பினக் கிடாரிக் கன்றுகள் வளர்க்க மானிய விலையில் தீவனம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை 52,527 கன்றுகள் பயன் பெற்றுள்ளன. மொத்தம் ரூ.683.665 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்ட ங்களில் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ், 2,500 கலப்பினக் கன்றுகள் பயன் பெறும். இதற்காக ரூ.67.57 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.



ஆண்டு 1,746 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவர். இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூபாய் 55.04 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

**பன்றி வளர்ப்புத் திட்டம்**

பன்றி வளர்ப்புத் திட்டம் மதுரை மாவட்டத்தில் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தில் ரூபாய் 6,000 செலவில் பன்றிப் பண்ணை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதுவரை 300 பன்றிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 25 பன்றிப் பண்ணைகள் மதுரை மாவட்டத்தில் அமைக்கப் படும்.

**கோழி வளர்ப்புத் திட்டம்**

கோழி வளர்ப்புத் திட்டம், கோழி வளர்ப்பு வளர்ச்சிக் கழகத்தால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 3,098 முட்டைக் கோழிப் பண்ணைகளும், 855 இறைச்சிக் கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 650 கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக ரூ.25.90 இலட்சம் மானியமாக வழங்கப் படும்.

**சிறப்பு மத்திய உதவித் திட்டம்**

தமிழ் நாட்டில் உள்ள இந்து ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் பொருளாதாரத்தை

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# தஞ்சாவூர்

## 1990-91-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்: | |
| | 1. பயன் பெறுபவர்கள் எண்ணிக்கை ... | 26,000 |
| | 2. அளிக்கப்படும் மானியம் ... | ரூ.444.389 இலட்சம் |
| 2. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை ... | 1,190 |
| 3. | ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்: | |
| | மொத்த நிதி ஒதுக்கீடு ... | ரூ.2,013.770 இலட்சம் |
| | அ) ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் ... | 5,900 |
| | ஆ) ஜீவன்தாரா பாசனக்கிணறுகள் ... | 100 |
| | இ) பள்ளிக் கட்டடங்கள் ... | 58 |
| | ஈ) ஊராட்சி மன்றக் கட்டடங்கள் ... | 210 |
| | உ) தார்ச் சாலைகள் போடுதல் ... | 70 -(136 கி.மீ.) |
| | ஊ) கருங்கல் ஜல்லி சாலைகள் போடுதல் ... | 159 -(212 கி.மீ.) |
| | எ) 25% ஊராட்சி பங்கு வேலைகள் ... | 2,732 |
| | ஏ) 20% மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஒதுக்கீடு வேலைகள் ... | 43 |
| | கூடுதல் ... | 9,272 (348 கி.மீ.) |
| 4. | சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் ... | 1,431 எக்டேர் |
| 5. | மீனவர்களுக்கான இலவசக் குடியிருப்பு வீடுகள் ... | 1,251 |
| 6. | கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம்: | |
| | 1) அமைக்கப்பட்ட குழுக்கள் ... | 100 |
| | 2) தெரிந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் ... | 2,000 |

ஆர்.வேலு, இ.ஆ.ப.
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
தஞ்சாவூர்.

விவேக் ஹரிநாராயண், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமை, தஞ்சாவூர்.





# தமிழகத்துக்கு வாங்க!

கவியரசர் இளந்தேவன்

தமிழகத்துக்கு வாங்க! - எங்கள்
தாயகத்துக்கு வாங்க!
அமைதிப்பூங்கா அழகு! - இதன்
அன்பில் மகிழும் உலகு!

ஆடற்கலையின் சிறப்பை - கலை
அதிசயங்களின் பிறப்பை
பாடற்கலையின் பரப்பை - இங்கு
பார்க்கலாங்க வாங்க!

தஞ்சை, வேளாங் கண்ணி, - தமிழ்
மதுரை, நாகூர், பழநி
கொஞ்சும் தெற்குக் குமரி - இங்கு
கோயில் பார்க்க வாங்க!

பிச்சாவரம் காடு - அதைப்
பிளக்கும் நீரின் ஊடு
உற்சாகமாய்ப் படகு - அதில்
ஓட்டலாங்க வாங்க!

சிதம்பரமெனும் தில்லை - கலைச்
சிறப்புடையது மல்லை!
விதவித வகைப் பறவை - வரும்
வேடந்தாங்கல் வாங்க!

நீலக்கம்பளம் போர்த்தான் - உடல்
நிறைய வாசம் சேர்த்தான்!
வாலைக்குமரி உதகை - அவள்
வனப்பைப் பார்க்க வாங்க!

வெள்ளைநிலவை உருக்கி - நீர்
வீழ்ச்சி யழகைப் பெருக்கி
கொள்ளையினமை கொழிக்கும் - திருக்
குற்றாலத்துக்கு வாங்க!

முதுமலைப்பெரு வனமே - அதில்
முழங்கும்யானை தினமே!
புதுமைக்கோடைக் கானல் - அந்தப்
பொழிலைப்பார்க்க வாங்க!

சீரகச்சம்பாச் சோறு - உடன்
சிறந்த மீனகின் சாறு
ஊருக்குஊரு 'மோட்டல்' - நல்ல
உபசரிப்புக்கு வாங்க!

முறுகமுறுகத் தோசை - அதில்
முழுஉலகுக்கும் ஆசை!
வருக வருக பயணி - உங்க
வாய்க்கு உண்டு இனநீர்!



ஆக, 6 அல்லது 7 தினங்களில் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டு தக்க தருணத்தில் சிகிச்சை பெறத் தவறும்போது, மனிதன் உயிரிழக்கக் காரணமாயுள்ளது. இதுதவிர மூளைத் திசுக்களையும் ஒருசில சமயங்களில் தாக்கிவிடக் கூடும். ஆக இந்நோய் ஆரம்ப நிலையில் சாதாரண 'ப்ளூ' காய்ச்சல் போல் தோன்றி பின்னர் கல்லீரல் பாதிப்பால் மஞ்சள் காமாலையுடன் கூடி, முற்றிய நிலையில் மூளை புறைத் திசுக்களையும் (Meninges) சிறுநீரகங்களையும் பாதித்து உயிர்குடிக்கும் தன்மையது.

இவ்வாறு பலவித உறுப்புகளைப் பாதிப்பதால் இவ்விதமான அறிகுறிகள் தென்பட்டதுமே மருத்துவர்கள் சந்தேகத்தின்பேரில் இந்நோய்க்குரிய சிகிச்சை யளித்து வருகின்றனர். எனினும் இக்கிருமிகள்தான் இந்நோயை உண்டு பண்ணியவை என்று ஆதாரப் பூர்வமாக அறிவிக்கப் பலவிதப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. நிருபணம் இல்லாத எதையும் மருத்துவ உலகு ஏற்பதற்கில்லை ஆகவே, பாதிக்கப்பட்ட நோயாளியின் இரத்தம், சிறுநீர் போன்றவை பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. நோய் தாக்கிய ஆரம்ப கட்டத்தில் இரத்தத்திலும் ஓரிரு வாரங்கள் கழிந்த பின்னர் சிறுநீரிலும் இக்கிருமிகள் வளர்ந்து வாழ்வதைப் பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம். இரத்தத் தடவல்களை நுண்நோக்கி மூலம் ஒரு இருண்ட வெளிப்பரப்பில் வைத்துக் காணும்போது இவை சிறிய நாலிழைகள் போல முனைகளில் வளைந்து சிறு புழுக்கள் போல நெளிந்து செல்லும். இச்சோதனை மட்டுமே போதுமானதல்ல. சில சமயங்களில் இதில் தவறு நேர்ந்துவிட வாய்ப்புண்டு.

ஆகவே, இவை பரிசோதனைச் சாலையில் இக்கிருமிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள கலன்களில் இடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. நோயாளியின் இரத்தம் இக்கிருமிகளைச் சுமந்திருப்பின் அவை இக்கலன்களில் நன்றாக வளர்ந்து பெருகிவிடும். பின்னர் அவற்றைக் குறிப்பிட்ட நாட்கள் கழிந்து நுண்ணோக்கி மூலம் பார்வையிட இவை உறுதிப்படுத்தப்படுகின்றன. இதுதவிர, ஒரு சில மறைமுகப் பரிசோதனைகளும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கிருமிகள் வெளியிடும் 'தொடுப்பான்'கள் (Antigens) நோயாளியின் இரத்தத்தில் ஏற்ற 'எதிர்ப்பான்'களை (Antibodies) உண்டாக்கும்.

மனித உடலின் நோய் எதிர்ப்புத் திறனே இவ்விதமான எதிர்ப்பான்களை உருவாக்குவதில்தான் அடங்கியுள்ளது. இவ்விதம் உருவாகும் எதிர்ப்பான் வகைகளை வைத்தும் அவை எவ்விதமான



கிருமிகளை எதிர்க்க வல்லவை என அறியலாம். இவ்வாறெல்லாம் பரிசோதித்து ஆதாரம் நிருபிக்கப்பட்ட பின்னர்தான் இக்கிருமிகள் இந்நோய்க்குக் காரணமென ஒத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்ததும் மருத்துவரை நாடிவிட்டால் இந்நோயை முற்றிலுமாகக் குணப்படுத்தி விடலாம். 'பெனிசிலின்' வகை மருந்துகள் இக்கிருமிகளையழிக்கும் வல்லமை பெற்றவை. இம்மருந்து 6 மணி நேரத்திற்கொருமுறை குறிப்பிட்ட அளவில் ஊசிமூலம் செலுத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்டவருக்கு வாந்தி முதலிய தொந்தரவுகள் இருந்து அதனால் உடலின் நீர்ச்சத்து குறைந்து போயிருந்தால் தேவையான உப்பு, சர்க்கரை கலந்த திரவப் பொருள் இரத்த நாளங்கள் மூலம் உட்செலுத்தப்படுகின்றன. கல்லீரல் பாதிப்பின் கடுமையினை இவ்வகையான சிகிச்சை முறையே சீர்செய்து விடுகின்றது.

நோயாளி ஒருசில சமயங்களில் சிறுநீரகச் செயலிழப்புடன் மருத்துவமனையை நாடும்போது, உயிர்காக்கும் சிகிச்சையாக 'டயாலிஸிஸ்' மேற்கொள்ளப்படுகின்றது. சரியான நேரத்தில் இந்த 'டயாலிஸிஸ்' முறை மூலம் உயிர் பிழைத்த நோயாளிகள் பலர். ஆக இவையனைத்தையும் மீறி காலம் கடந்து சிகிச்சையை நாடும் போதுதான் உயிரிழக்க வேண்டிய நிலமை ஏற்படும்.

இந்நோய் பற்றிய ஒரு தனியம்சமே - இது விலங்கினங்களைப் பொதுவாகத் தாக்கும் நோய்; அப்படிப் பாதிக்கப்பட்டவைதான், சுகாதாரக் குறை காரணமாக மனிதனைத் தாக்கக் காரணமாயுள்ளது. ஆக, இந்நோய் மிக எளிதில் தடுக்கக் கூடியது என்பதேயாகும். நல்வாழ்வை விரும்பும் எந்த ஒரு நாகரிகமடைந்த சமுதாயமும் இந்நோயை எளிதில் தடுத்துவிடலாம். இதில் பொதுமக்கள், மருத்துவர்கள், (மனித மற்றும் கால்நடை) நுண்ணுயிர்த் துறையினர், சுகாதாரத் துறை மற்றும் நகர் மன்ற அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இந்நோயால் மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படக் கூடிய பேரிழப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம். அது எவ்வாறென இனி பார்ப்போம்.

முதல் கட்டமாக, வீட்டுவாழ் பிராணிகளான, நாய், பூனை, மாடு, ஆடு போன்ற கால்நடைகள், பண்ணை வளர்ப்புப் பன்றிகள், எலி, பெருச்சாளி போன்றவையும், காட்டு விலங்குகளான ஓநாய், நரி, முள்ளம்பன்றி, கீரி போன்றவையும் இந்நோயால் பாதிக்கப்பட்டு இக்கிருமிகளைச் சுமந்து திரிகின்றன. அவற்றின் சிறுநீர் மூலம் வெளியேறும் கிருமிகள் தான் பின்னர் மனிதனைத் தொற்றிக் கொள்கின்றன. எனவே, இவற்றோடு தொடர்புடைய மருத்துவர்கள் நோய் கண்டதை அறிந்ததும் உறுதிப்படுத்தத் தேவையான இரத்தம் மற்றும் சிறுநீர் இவற்றை மையப் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பிவைத்து, ஆய்வுக்கூட முடிவுகளின்படி தக்க சிகிச்சை தரவேண்டும். அதே சமயம் இந்தத் தகவல்களை அருகிலுள்ள சுகாதாரத்துறை மையங்களுக்குச் சொல்லியனுப்புவதால் சம்பந்தப்பட்ட துறையினர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தேவையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். இவ்வாறாக அறிவிக்கப்பட்ட பகுதிகளை நகராட்சி மன்ற அதிகாரிகளின் உடனடிப் மேற்பார்வையில் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். இம்மாதிரியான கூட்டமைப்பில் சமுதாயத்தின் நல்வாழ்வு மேம்பாடு அடையும்.

**தடுப்பு முறைகள்**

1. தகுந்த காலணியின்றி, மழைக் காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரில் நடந்து செல்வதைக் கைவிட வேண்டும்.

2. தகுந்த வடிகால் வசதியின்றிக் குடியிருப்புப் பகுதிகள் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

3. மழைக்காலத்தில் நீர்த்தேக்கங்கள் மற்றும் குடிநீர்த் தொட்டிகளில் ஏற்ற முறையில் குளோரின் அமிலம் இடப்பட வேண்டும்.

4. குடிநீர்க் குழாய்கள் நல்ல முறையில பராமரிக்கப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கழிவு நீர்க் குழாய்களுடன் கசிவு மூலம் குடிநீர் கலப்பது தடுக்கப்பட வேண்டும்.

5. விலங்கினக் காப்பகங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். இறைச்சி விற்பனைக் கூடங்களின் சுகாதாரப் பின்னணிக் கண்காணிக்கப்பட வேண்டும்.

6. வீட்டின் சுற்றுப்புறம் எலிகள், பெருச்சாளி மற்றும் நோய்வாய்ப்பட்ட நாய்கள், பூனைகளால் சூழப்படுவதை ஒழிக்க வேண்டும்.

7. தாம் செய்யும் தொழிலின் தன்மையால் இந்நோய் தாக்கப்படும் அபாயத்திலிருப்பவர்களுக்குத் தகுந்த சுகாதார முறைகள் மூலம் காப்பளிக்கப்பட வேண்டும்.

8. நோய்க்கிருமிகள் வாசம் நிருபிக்கப்பட்ட பகுதிகள் பொதுமக்கள் உபயோகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.



# சென்னையில் சாலைகளைச் சீரமைக்க அரசு துரித நடவடிக்கை

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் பெய்த கடும் மழையின் காரணமாக, சென்னை மாநகரிலுள்ள பெருவாரியான சாலைகள் சேதமடைந்தன. இவற்றில் சில சீரமைக்கப்பட்டுள்ளன. செப்பனிடப்படாத சாலைகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேதகு ஆளுநர் அவர்கள், சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து, உயர் அலுவலர்களுடன் மாநகராட்சிப் பணி குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தின்போது, சென்னையில் பழுதடைந்த சாலைகள் மற்றும் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதன்படி சென்னையிலுள்ள சாலைகளைச் சீரமைக்க ரூ.13.5 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமல்படுத்தப்படவுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 240 பெரிய சாலைகளும், 1,184 குறுகலான தெருக்களும், 821 சிறிய தெருக்களும் செப்பனிடப்படும். இதுவரை சாலைகளைச் சீரமைக்க ரூ.3.5 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள 365 மாநகராட்சிப் பள்ளிகளிலுள்ள குழந்தைகள் சத்துணவுக் கூடங்கள் அனைத்தையும் புதுப்பிக்க ரூ.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சத்துணவு கூடங்கள் அனைத்தும் வரும் தமிழ்ப்புத்தாண்டு நாளுக்குள் புதுப்பிக்கப்பட்டு விடும். இந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு வெள்ளை அடிப்பது, தூய்மைப்படுத்துவது போன்ற பணிகளுக்குச் சாரண மாணவர், மாணவியர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் அவர்கள் ஆலோசனை கூறினார்.

சென்னையிலுள்ள அனைத்துச் சாலைகள், தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், பொதுக் கழிப்பிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் குறைகளை இயன்றவரை நிறைவேற்ற, சென்னை மாந்கராட்சி, தனிமுயற்சி எடுத்துள்ளது. சென்ற ஆண்டு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்தம் 1,607 மனுக்களில், 1,487 கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன.





## சிறுசேமிப்புத் துறை




எதிர்பாராத இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

### வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80 CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/169/MS/91/ARIES

### இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-

கூடுதல் சலுகைகள்:

* இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
* சொத்து வரிவிலக்கு
* உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்
இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.



# தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள்

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. நீர் கொண்டுவரும் பொருட்டு தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவ தற்காகும் தமிழ்நாட்டின் பங்கிற்கெனத் தமிழக அரசு இதுவரை 107 கோடி ரூபாய் அளித்துள்ளது.

இத்திட்டம் மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ்நாடு, ஆந்திர மாநில அலுவலர்களிடையே 2.2.1991 அன்று சென்னையில் நடைபெற்ற 26-வது தொடர்புக் குழு கூட்டத்தில் இத்திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

1993-ஆம் ஆண்டிற்குள் ஓரளவுக்குச் சென்னைக் குக் குடிநீர் வழங்கிப் பயன் அடையும் பொருட்டும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாகப் பணி களை விரைவில் செயலாக்கும் பொருட்டும் இரு மாநிலங்களும் நட்புறவு நோக்கத்தோடு ஒரு விரிவான பணித் திட்டம் தயாரிக்க வேண்டுமென அக்கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டது.

தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்காக ஆந்திர மாநிலம் மேற்கொள்ளப்படவிருக்கும் செலவினத் தில் தமிழ்நாட்டின் பங்காக ஆந்திரப்பிரதேச அரசிற்கு ரூ.30 கோடி இரு தவணைகளில் செலுத்துவதெனத் தமிழ்நாடு அரசு ஒத்துக்கொண் டுள்ளது. 28.2.91-க்கு முன்னர் ரூ.15 கோடியை முதல் தவணையாகவும், வேலைகளில் ஏற்படும் முன்னேற்றத்தின் அடிப்படையில் எஞ்சிய ரூ.15 கோடியை இரண்டாம் தவணையாக 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அளிப்பதெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி 1993-ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கு வதில் ஓரளவு பயன் அளிக்கும் வகையில் இத் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி முடிக்க ஏது வாக இருக்கும் பொருட்டு ரூபாய் 15 கோடி ஆந்திர மாநிலத்திற்குத் தமிழ்நாடு அரசு தற் பொழுது அளித்துள்ளது.

1988-89-ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் பங்காகிய ரூபாய் 252.05 கோடியில் தற்சமயம் தமிழ்நாடு அரசு அளித்துள்ள ரூபாய் 15 கோடி உள்ளிட்டு ஆந்திர மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்ட ஒட்டு மொத்தத் தொகை ரூபாய் 122 கோடியாகும்.

# தொழுநோய் ஒழிப்பில் ஒரு தொண்டு நிறுவனம்



அண்ணல் காந்தியடிகளின் ஆரம்பகாலப் பணிகளில் ஒன்று, பிச்சைக்காரர் ஒருவரைத் தனது இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றதாகும். அவர் ஒரு தொழு நோயாளி. தொழுநோய் பற்றிய காந்தியடிகளின் மனப்போக்கு அவரது வாழ்க்கையில் பல கட்டங் களிலும் பிரதிபலித்தது. அவர் சென்ற இடமெல்லாம் தொழு நோயாளிகளையும் சாதாரண மக்களைப் போலவே சேர்த்துக் கொண்டார்.

தொழுநோயால் தாக்கப்பட்ட வர்களைச் சமூகம் தீண்டாதவர் களாகக் கருதுவதை அவர் தவறு என உறுதிபட எண்ணினார். தொழுநோய்ப் பணிக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்ட தாலேயே, காந்தியடிகளின் நினைவு நாளான ஜனவரி 30-ஆம் நாளை, தொழுநோய் எதிர்ப்பு நாளாக நாடு முழுவதும் கொண்டாடுகிறோம். இந்தியத் தொழுநோய்ச்சங்கம், அண்மையில் ஒருவார காலத்திற்குத் தொழுநோய் ஒழிப்பு வாரமாக அனுசரித்தது நினைவிருக்கலாம்.



### தொழுநோயும் இந்தியாவும்

உலகிலேயே, இந்தியாவில்தான் அதிகமான எண்ணிக்கையில் தொழு நோயாளிகள் உள்ளனர். சமீபத்திய புள்ளிவிவரப்படி உலகில் 1|கோடியே இருபதுஇலட்சம்தொழுநோயாளிகள் இருப்பதாகவும், அதில் நமது இந்திய நாட்டில் மட்டும் மூன்றில் ஒரு பங்கு (சுமார் 40 இலட்சம்) தொழு நோயாளிகள் இருப்பதாகவும் கணக் கிடப்பட்டுள்ளது. இதில் தமிழ் நாட்டில் மட்டும் 7.6 இலட்சம் தொழுநோயாளிகள் உள்ளனர்.

தொழுநோய் முற்றினால் உண் டாகும் உடல் ஊனமும், சமூகத் தினரிடையே அனுதாபத்திற்குப் பதி லாக வெறுப்பையும், நிராகரிப்பை யும் தோற்றுவிப்பதால் - தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பல விதமான அவதிக்குள்ளாகிறார்கள்.

### தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

தொழுநோய் ஒழிப்பில் அரசு மருத்துவமனைகளும், சில தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. மத்திய அரசு1955-56-ஆம் ஆண்டி லிருந்தே. தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை . அமல் படுத்தி வருகிறது.



• வாழ்க்கை-அவனவன் வாழ்வ தற்கு என்று மட்டும் கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

—தந்தை பெரியார்

சென்னை செனாய் நகரில், ஒரு தொண்டு நிறுவனம் தொழுநோய் ஒழிப்பில் மிகத் தீவிரமாக ஈடுபட்டி ருக்கிறது. 'கிரிமால்ட்டஸ்' என்ற ழைக்கப்படும் இந்தத் தொழுநோய் ஆலோசனை மருத்துவமனையை நேரில் சென்று பார்வையிடுகிறோம். அதன் உதவி இயக்குநர் டாக்டர் தேவஅன்பு அவர்களைச் சந்திக் கிறோம். அவர் கூறினார்-

கிரிமால்ட்டஸ்' (GREMALTES) என்பது, "Greater Madras Leprosy Treatment and Education Scheme" என்பதன் சுருக்கம் ஆகும்.

கிரிமால்ட்டஸ் தொழுநோய் மையம் 1971-ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. இதன் முழு பரா மரிப்புச் செலவுகளுக்காக நிதி உதவி, ஜெர்மனி தொழுநோய் நிவாரணச் சங்கத்திடமிருந்து பெறப் படுகிறது. இதன் காரணமாக இந்தத் தொழுநோய் மையம் 'ஜெர்மன் மருத்துவமனை' என்று பெரும் பாலான மக்களால் அழைக்கப் படுகிறது.

இந்தத் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை சுமார் இருபதாயிரம் தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தியிருக்கிறது. ''கிரிமால்ட்டஸ் தொழுநோய் மருத் துவமனை'' இந்தியத் தொழுநோய் அறக்கட்டளையின் ஓர் அங்கமாக இருந்து செயல்படுகிறது. சென்னை, அதன் சுற்றுவட்டாரங்களில் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளித்து, மறுவாழ்வு கொடுப்பதே இந்த மையத்தின் முக்கிய நோக்க மாகும்.

75 படுக்கைகள் வசதி கொண்ட இந்தத் தொழுநோய் மருத்துவமனை யில் 8 மருத்துவர்களும், 120 இதர பணியாளர்களும் பணியாற்று கிறார்கள். மருத்துவம், சுகாதாரக் கல்வி, அறுவைச் சிகிச்சை, கண் மருத்துவம், ஆய்வுக் கூடம் போன்ற பலதரப்பட்ட துறைகள் தனித்தனி யாக இங்கு இயங்குகின்றன. இவை தவிர, காலணிகள் தயாரிக்கும் ஒரு தொழிற்கூடமும் இங்குச் செயல்படு கிறது. தொழுநோயாளி களுக்குத் தேவையான காலணிகள் இங்குத் தயாரிக்கப்பட்டு இலவசமாக வழங் கப்படுகின்றன.



இங்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளுக்கும் நல்ல சுகாதார முறையில் உணவு தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுகிறது. தொழுநோயாளி களுக்கு வழங்கப்படும் உணவு, அளிக்கப்படும் சிகிச்சை, மருந்துகள் யாவும் இலவசமாகவே கொடுக்கப் படுகின்றன. தேவைப்படும் நோயாளி களுக்கு இலவசமாக அறுவைச் சிகிச் சையும் செய்யப்படுகிறது. மேலும் செயற்கை உறுப்புகளும், மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங் கப்படுகின்றன.



### தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு

சிரிமால்ட்டஸ் மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று முழுவதுமாகக் குணமடைந்த தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்கும் இந்த மையம் ஏற்பாடு செய்கிறது. 'மறுவாழ்வு நிதி' ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் தகுதிவாய்ந்த நபர்களுக்குத் தொழில் தொடங்க ரூபாய் மூவா யிரம் வரை நிதி உதவி செய்து அவர்களின் மறுவாழ்வுக்கு உதவு கிறது. ரூ.3,000-க்கு மேல் தேவைப் படும் நபர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்க இந்த மையம் ஏற்பாடு செய்கிறது.

### சருமநோய்ப் பிரிவு

தொழுநோய் மட்டுமன்றி இதர சரும நோய்களுக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் இங்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தச் சரும நோய்ப் பிரிவு 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல், நாள்தோறும் சுமார் நூறு புற நோயாளிகள் இந்த மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வரு கிறார்கள். தொழுநோய் அல்லாத இதர நோயாளிகளும் இங்கு அனு மதிக்கப்பட்டு, சிகிச்சை பெறு கிறார்கள். தொழுநோயாளிகளை மட்டும் தனியே பிரித்து வைக்கக் கூடாது என்பதற்காக, அனைத்து விதமான நோயாளிகளும் இங்கு அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்



படுகிறது. இதுவும் இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிரிமால்ட்டஸ் மருத்துவமனை







யில், மருத்துவச் சிகிச்சை தவிர, கீழ்க்கண்ட குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

1. அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்குத் தொழுநோய்ப் பற்றி பயிற்சி அளித்தல்.

2. 4-மாத காலத் தொழுநோய் ஆய்வாளர்கள் பயிற்சி.

3. 6-மாத காலச் சுகாதாரக் கல்விப் பயிற்சி.

4. காலணி தயாரிக்கும் 6-மாத பயிற்சி.

5. முட நீக்குப் பயிற்சி (Physiotheraphy)

இவை தவிர தொழுநோய் பற்றிய ஆய்வும் (Research) இங்கு நடைபெறுகிறது.

**தொழுநோய் மாதம்**

கிரிமால்ட்டஸ் தொழுநோய் மருத்துவமனை, இவ்வாண்டு ஜனவரி 30-ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி முடிய ஒருமாத காலத்தைத் தொழுநோய் மாதமாக அனுசரித்தது.

தொழுநோய் பற்றி மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த இந்த ஒரு மாத காலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையில் உள்ள பள்ளிகளுக்கிடையே சுகாதாரம் பற்றிய வினாடி வினா போட்டி, சென்னைக் கல்லூரிகளுக்கிடையே பேச்சுப் போட்டி, சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கிடையே தொழுநோய்வினாடி வினா போட்டி, தொலைக்காட்சி, வானொலி மூலம் பிரச்சாரம் செய்தல், சென்னையிலுள்ள முக்கிய இடங்களில் தொழுநோய் பற்றிய சுவரொட்டிகள் ஒட்டி விளம்பரம் செய்தல் போன்றவை இந்த ஒருமாத காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

இவ்வாறு பல அரிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் கிரிமால்ட்டஸ் தொழுநோய் மையத்தின் பணிகள் பாராட்டத்தக்கவை.

**- ஜே. சந்திரன்.**





# மூடநம்பிக்கை

## வ.ரா



கண்ணுக்குத் தெரியாமல் நீங்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அடியேனும் அப்படி. சௌக்கியந்தானே என்று கேட்டால், பதில் சொல்லப் போகிறீர்களா? பதில் சொன்னாலும், எனக்குக் கேட்கப்போகிறதா? நான் நமஸ்காரம் என்று வணங்கினால், உங்கள் ஆசீர்வாதம் எனக்கு எப்படித் தெரியும்? பழைய காலத்து அசரீரி வாக்கு இப்படித்தான் இருந்திருக்குமோ!

ஆகாசத்திலிருந்து பேசவாவது! அது ஆயிரம் பதினாயிரம் மைலுக்கு அப்பாலே கேட்கவாவது! கலியுகமோ, திரேதாயுகமோ - அது இன்னது என்று தெரியவில்லை.

ராத்திரி எட்டேகால் மணிக்கு உங்களுக்கெல்லாம் என்னென்ன வேலை இருக்குமோ! நான் உங்கள் கதவைத் தட்டி, உங்கள் காலத்தையும் காதுகளையும் யாசகம் கேட்பது ரொம்பவும் மரியாதைக் குறைவான காரியந்தான். இந்த மரியாதைக் குறைவுக்கு நான் காரணம் இல்லை. நம்மையெல்லாம் மீறியே, சில காரியம் நடக்கிறது இயற்கைதானே?

''என்னடா! பொழுது விடிகிறது; பொழுது அஸ்தமித்து ராத்திரி வருகிறது. அதோடு தூக்கமும் கொட்டாவியும் கிறுகிறுப்பும் கலந்து வருகிறது. இந்த மாதிரியே காலம் போய்க் கொண்டிருந்தால்-''

இப்படி நினைத்துக் கொண்டு, உட்கார்ந்திருந்தேன். திடீரென்று, ''நமஸ்காரம்'' என்ற சத்தம் காதிலே பொத்தென்று குதித்தது. திரும்பிப் பார்த்தால், நண்பர்-

''வரணும்'' என்றேன். ''வந்த பிறகு, 'வரணும்' என்று சொல்லுகிறதிலே என்ன வாஞ்சை இருக்கிறது?'' என்று நண்பர் சொன்னார். ''போகணும் என்று ஒரு நாளும் சொல்ல மாட்டேன்'' என்றேன்.

''உங்கள் வீட்டுக்கு வந்தவனை, வரணும் என்று சம்பிரதாய மரியாதை நீங்கள் செய்வது உசத்தி இல்லை. உங்க வீட்டுக்கு நான் வந்து, உங்களை 'வரணும்' என்று அழைப்பது தான் உசத்தி'' என்று நண்பர் அழகாகப் பங்கடைத்துப் பேசி விட்டார்.

''எங்கே வரணும்?''

''ஆகாசத்திலிருந்து பேசறத்துக்கு வரணும்'' என்று அவர் கிண்டலாகப் பேசினார்.

''அடே அப்பா! சாதாரணமாகத் தரையிலிருந்து உரக்கப் பேசினாலே. ஆகாயத்திலே பறக்கிறான் என்று லோகத்திலே மட்டுமரியாதை இல்லாமல் பேசறா. ஆகாசத்திலிருந்தே பேசிட்டா, அப்புறம் கேட்க வேண்டியதேயில்லை! சுவாமி! நான் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை... எல்லாத்தையும் யோசிக்க வேணுமோன்னோ!'' என்று சொன்னேன்.

''நீங்கள் சொல்லுகிற மாதிரி தான், எல்லோரும் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை. இரண்டு தாய்க்கு ஒரு பிள்ளை யாருமே இல்லை!'' என்று சிரித்தார் நண்பர்.

நான் தொண்டையிலே எச்சிலை விழுங்கினேன். கனைத்துக் கொண்டேன். வேறே என்ன செய்கிறது?

''பேசறது என்கிறது ஒரு பெரிய வித்தை. அந்த வித்தை எல்லோருக்கும் லேசா வராது. மேலும் பேசறதற்கு விஷயம் இருக்க வேண்டாமா? சாமான் சட்டியிலே இருந்தால் தானே அகப்பையிலே வரும்?'' என்று சொன்னேன்.



**• சீதனம் என்பது பெண்களை விலைபேசி விற்பதைத் தவிர வேறொன்றுமில்லை. வரதட்சணை கொடுத்தால்தான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்று நிபந்தனை விதிக்கும் எந்த இளைஞனும், தான் படித்த படிப்புக்கும், தன்னுடைய தேசத்திற்கும் அவமதிப்பைத் தேடிக் கொடுத்தவனாகிறான்!**

**—காந்தியடிகள்**

"நீங்கள் சபைக் கோழைப் பேர்வழி என்று எனக்குத் தெரியாது" என்று நண்பர் சொல்கிற பொழுதே, என் சம்சாரம் படக்கென்று சிரித்துவிட்டாள். சம்சாரம் சிரித்த பிறகு, என்ன நேர்ந்தாலும், ஆகாசத்திலிருந்து பேசிவிடுகிறது என்று கண்டிப்பாகத் தீர்மானம் செய்துகொண்டு, சம்சாரம் இருக்கிற பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

"ஏன் ஸார்! நான் பேசறபோது ஒத்தரும் கலாட்டா பண்ண மாட்டார்களே?" என்றேன்.

"ரேடியோ உங்களுக்குத் தெரியாதா!" என்றார். இது என் சம்சாரத்தின் காதிலே விழுந்தால், என் கீர்த்தியிலே இடி விழுந்தது போல ஆகாதா? ஏதோ, அவள் சிரித்தது மாதிரி இருந்தது. ஆனால், திரும்பிப் பார்க்க எனக்குத் துணிச்சல் கிடையாது.

"சரி, பேசுகிறேன்" என்று நண்பரிடம் ஒப்புக் கொண்டேன். ஆனால் ஒன்று மாத்திரம் அவரைக் கேட்டுக் கொண்டேன்.

"சுவாமி! நான் கூட்டத்திலே கோழை; ஆனால் தனியாக இருந்தாலும் அதைவிடக் கோழை. பக்கத்திலே நீங்கள் இருக்கணும்; சங்கீதக் கச்சேரிகளிலே சம்பிரதாய சபாஷ் போடுவதைப் போல ரேடியோ கேட்கிறவர்களுக்குக் கேட்காமல், எனக்கு மாத்திரம் தெரியும்படியாக, நடுநடுவிலே, கொஞ்சம் சபாஷ் போட்டால் நல்லது" என்று அவரை வேண்டிக் கொண்டேன்.

"அப்படியே ஆகக்கடவதாக!" என்று வரம் கொடுக்கிற மாதிரி சொல்லிவிட்டு, அவர் போய் விட்டார்.

அன்றையிலிருந்து, எனக்குச் சங்கடந்தான். ரேடியோ என்று நான் மனசிலே நினைக்கிறபொழுது, யாராவது பக்கத்திலே தும்மிவிட்டாலோ, போதும்; எனக்குப் பயம்தான். என்ன அபசகுனம் என்று என் மார்பு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளும்.

இந்தச் சங்கடத்தையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த என் சம்சாரம், "என்னைக் கூப்பிட்டிருந்தால், ஜோராய்ப் போய்ப் பேசி'ப்பிட்டிருப்பேன்னு வெண்கலக் குரலில் கணீர் என்று கன்னத்திலே அறைஞ்ச மாதிரி சொன்னாள்.

என் சிரமம் அவளுக்கு என்னமாய்த் தெரியும்? நான் தலைப் பிரசவக்காரி நிலைமையில் இருந்தேன். ஒரு சமயம் அடங்காத உற்சாகம்; இன்னொரு சமயம் அர்த்தமில்லாத பயம். ஒரு சமயம், நாக்கு சுத்தமாய்ப் பேசமாட்டேன் என்றுவிட்டது.

பரீட்சை கொடுக்கிற இருபதாம் தேதி வந்தது. "கொஞ்சம் சீக்கிரமாகவே ரேடியோ காரியாலயத்துக்குப் போகணும்" என்று சம்சாரத்தினிடம் சொன்னேன்.

"நாட்டுப்புறத்தார்கள் 'போட் மெயில்' வண்டிக்குப் புறப்படுகிற மாதிரியா?" என்று சிரித்தாள். அவள் என்ன பண்ணுவாள்! நண்டுக்குச் சீவன் போறாது; நரிக்குக் கொண்டாட்டம்!

இருந்தாலும், சீக்கிரமாகப் புறப்பட்டேன். எல்லாம் அவசரம்தான். புறப்பட்டு, இரண்டு அடி எடுத்து வைக்கவில்லை - "இந்தாருங்கோ" என்று சம்சாரம் கூப்பிட்டாள். "புறப்பட்டுப் போறப்போ சகுனத் தடையா கூப்பிடறயே?" என்று கோபித்துக் கொண்டேன்.

"கண்ணாடியை வச்சிட்டு மறந்து போயிட்டீங்களே! அங்கே போய் எப்படிப் படிப்பீங்க?" என்று பரிதாபத்தோடு சொன்னாள்.

கண்ணாடியை வாங்கிக் கொண்டு, மாடியிலிருந்து கீழே, இறங்கி, புறப்



பட இருந்தேன். "மாமா! சினிமாவுக்குப் போறீங்களா?" என்று எதிர் வீட்டுப் பையன் கேட்டான். சகுனத் தடை ஒண்ணாச்சு, இரண்டாச்சு - என்ன ஆகப் போகிறதோ என்று எனக்குப் பயம். எப்படியோ தைரியத்தைக் கைவிடாமல், அடி எடுத்து வைத்தேன். வீதியிலே போகும் ஒருவர் பொசுக்கெனத் தும்மினார். இது என்ன விபரீதம்! இந்தத் தும்மலை அவர் கொஞ்சம் முந்தித் தும்மியிருக்கக் கூடாதா? அல்லது கொஞ்சம் பிந்தித்தான் தும்மியிருக்கக் கூடாதா?

என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. நான் வீதியிலே நின்று கொண்டிருந்தேன். 'எனக்குத் தெரிந்த பாட்டியம்மா வந்தாள்.

"அப்பா! போகிற காரியம் அட்சயப் பாத்திரம் மாதிரி வளர்ந்துண்டே இருக்கும்; வெளுத்ததெல்லாம் பாலில்லே; வெள்ளைப் புடவைக்காரிகளெல்லாம் விதவை இல்லே! என் சகுனம் நல்ல சகுனம், பயப்படாதே, போ" என்று பாட்டி தாதுபுஷ்டி லேகியம் கொடுத்தாள். தும்மலாச்சு; போகிறபோது கூப்பிடுகிறதாச்சு. போதாக்குறைக்கு, அமங்கலி அம்மா வேறே வந்து தோன்றியிருக்கிறாள்!

'ரேடியோ ஆச்சு; அதுவும் ஆச்சு! வீட்டுக்குத் திரும்பிப் போய் விடலாமா?' என்று யோசித்தேன். திரும்பி எங்கே போவது? வீட்டுக்குத் தானே போக வேண்டும்? சம்சாரம் சிரிக்கமாட்டாளா? ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் தைரியம் வருகிற கடைசி வழி சம்சாரம்தானே!

பத்தடி எடுத்து வைத்தேன். "ரொம்ப சந்தோஷம்! போய்விட்டு வாருங்கள். இன்றைய பிரசங்கம் அபூர்வமாக இருக்கணும்" என்று பக்கத்து வீட்டுச் சிநேகிதர் வாழ்த்தினார். ஆனால் அவர் வீட்டிலே வளர்ந்து வந்த பூனைக்கு இங்கிதமே தெரியவில்லை! அது ஒரே பாய்ச்சலாய்க் குறுக்கே பாய்ந்து ஓடிற்று.

பூனை குறுக்கே போகிற காரியம் ஒரு நாளும் பலிக்காது என்று எங்கள் பாட்டி சொன்னது, தகதக என்று சூரிய ஒளி போலே என் ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும், சிநேகிதர் கிண்டல் செய்வார் என்று





தூய உள்ளமே கோயில்; நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்; மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த வழிபாடு; ஏழை இதயத்தின் மகிழ்ச்சியே இறைவனுக்குத் தேர்த்திருவிழா!

—அறிஞர் அண்ணா

பயந்து, வேகமாக நடந்து, பஸ்ஸிலே ஏறினேன்.

உடம்பெல்லாம் வியர்வை. மார்பு படபட என்று அடித்துக் கொள்கிறது. பேந்தப் பேந்த விழிக்கிறேன். பக்கத்தில் இருந்தவர் பயந்து போய்விட்டார்; மெல்ல விசாரித்தார். என்னை அறியாமலே, ரேடியோ என்று உளறிவிட்டேன். சட்டென்று நினைவு வந்துவிட்டது. தொண்டையை நன்றாகக் கனைத்துக் கொண்டேன். இதற்குள்ளே, பஸ்ஸும், மவுண்ட் ரோடில் வந்து நின்றுவிட்டது.

சட்டென்று இறங்கினேன். இறங்கின அவசரத்திலே, பஸ் கதவிலே இடித்துக் கொண்டேன். இந்த அபசகுனமும் நேரவேண்டுமா என்று நினைத்துக் கொண்டேன்.

எல்லாம் சரி, ரேடியோவிலே என்ன பேசறது! கல்யாணச் சந்தடியிலே தாலிகட்ட மறந்துபோன கதை மாதிரி ஆகிவிட்டது....?

இனிமேல் என்னமா யோசிக்க முடியும்? இந்தச் சமயத்திலே சமய சஞ்சீவி மாதிரி ஒரு பையன் பேப்பர் விற்றான். "மூட நம்பிக்கைகள்' காலணா" என்று விற்றான். பழம் நழுவிப் பாலிலே விழுந்து, அதிலிருந்து நழுவி வாயிலே விழுந்த மாதிரி ஆச்சு; மூட நம்பிக்கைகள் டஜன் கணக்கிலே, காலணாவுக்கு மலிவாகக் கிடைத்ததிலே எனக்குச் சந்தோஷம்.

அதிலிருந்து, கொஞ்சம் உங்களுக்குப் படிக்கப் போகிறேன். படிக்கட்டுமா? கொஞ்சமே கொஞ்சந்தான்:

**பந்தயப்பட்டி சித்திரவதை**

"நம் நாட்டிலே இருக்கிற மூட நம்பிக்கைகளைக் கணக்கெடுக்க முடியாது. பந்தயப்பட்டி சித்திரவதையைக் கேட்டால், கேட்பார் மனம், கல்லாயிருந்தாலும் கரைந்து போகும். உண்மையாக நடந்த சம்பவம். கற்பனை கொஞ்சங்கூட கலக்கவில்லை.". இந்த மாதிரி அந்தத் தாளில் எழுதியிருந்தது. அதுதான் சுவாரஸ்யமாக இருக்கலாம் என்று நினைத்து அதை உங்களுக்குப் படிக்கப் போகிறேன். இந்தத் தாளிலே, மேலே என்ன எழுதியிருந்தது என்கிறீர்களோ?

**படிக்கிறேன் கேளுங்கள்:**

பந்தயப்பட்டி என்று ஒரு கிராமம். அந்த ஊரிலே, பரம்பரையாக ஒரு பெரிய குடும்பம். அந்த குடும்பத்திலே கிருகலட்சுமி என்று ஒரு பெண் பிறந்தாள், அவள் ரொம்ப சமர்த்து. ஆனால் நிறம் கொஞ்சம் கறுப்பு. இந்தத் தேசத்துக்குக் கறுப்பு நிறம் இயற்கைதானே?

கிருகலட்சுமிக்குப் புருஷன் பார்த்துக் கடைசியாகக் காலாடியூரில் ஒரு பையனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். பெண்ணாய்ப் பிறந்த - பாபத்துக்காகவும் சேர்த்துப் பையனுக்கு ரூபாய் 5,000 கொடுத்தார் கிருகலட்சுமியின் தகப்பனார். பையன் இங்கிலீஷ் படித்து, உத்தியோகம் பெற்றான். மாதம் ரூபாய் 50 சம்பளம். ஆனால் மேல்வரும்படி, கீழ்வரும்படி முதலிய இனங்களைச் சேர்த்து, அவனுக்குச் சுமார் 150 ரூபாய் வரும். ஆகவே, அவனுக்குக் குஷி உண்டாயிற்று.

ஒரு நாளைக்குத் திடீரென்று நினைத்துக் கொண்டான். தன் சம்சாரம் கிருகலட்சுமியை அவள் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அனுப்பின கையோடு மறு தாரம் கல்யாணம் செய்துகொண்டான். காலாடியூர்ப் பேர்வழியின் யோக்கியதையைப் பாருங்கள்! கிருகலட்சுமிக்கோ பிறந்த வீட்டுக்கு வந்து, அழுது அழுது, தொண்டை புண்ணாகிவிட்டது. உரிய வேளைக்குச் சாப்பாடு கிடையாது; அநேகமாகப் படுத்த படுக்கைதான். யாரோடேயும் அதிகமாகப் பேச்சுக் கிடையாது.

காலாடியூர்ப் பேர்வழியோ, தன் புதிய மனைவியோடு உல்லாசமாகக் காலங்கழித்து வருகிறான். எத்தனைப் பேர்களோ அவனிடம் சொல்லிப் பார்த்தார்கள். சொல்லச் சொல்ல அவனுக்குத் திமிர் அதிகமாகப் போய்விட்டது. வாய்த்துடுக்கினால், அவன் ஒரு சமயம், கறுப்பு நிறமும் கழுதையும் சமானம் என்று எடை போட்டு நிறுத்தி விட்டதைப் போல, உளறித் தீர்த்துவிட்டான். இந்தத் தேசத்திலே, அவதார புருஷர்களாக விளங்கியவர்கள் எல்லோரும் அட்டைக் கருநிறம் என்பது அவனுக்குத் தெரியுமா? அவனுக்கு நிறத் திமிர். என்ன செய்யலாம்?

கிருகலட்சுமியோ, துரும்பாக ஆகிக்கொண்டு வந்தாள். பெற்றோர் படுகிற பாட்டைச் சொல்லி முடியாது. பந்தயப்பட்டியிலே ஒரு ஜோசியர், ஒரு பூசாரி - இரண்டு பேருக்கும் போட்டி. பூசாரியாருக்குப் பனமரத்துப் பூசாரி என்று பெயர். 'வெள்ளைக் குதிரைச்' சவாரியில் அவருக்குப் பிரம்மானந்தம். அவர் இருக்கிற நூறு கஜ தூரத்துக்குக்கூட கள் நாற்றம் அடிக்கும். அவர் போதை வெறியில் பம்பையை அடிப்பார். அடித்தால் பேய்கள் எல்லாம் ஒரே ஓட்டம் எடுக்குமாம்! பேயாட்டி பனமரத்துப் பூசாரி, பந்தயப்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பெயர் போன பேர்வழி.

ஜோசியருக்குப் பாலத்து ஜோசியர் என்று பிரபல பட்டப் பெயர். ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த பாலத்தின்கீழ், அவர் சுமார் ஒரு மணிநேரம் வரையில் உட்கார்ந்து கொண்டு, தம் முதுகின் அடிப்புறத்தை மத்தளம் தட்டினாலொழிய, அவருக்கு ஜீரணம் ஆகாதாம். பந்தயப்பட்டியில் எது நடந்தாலும், இவர்கள் இரண்டு பேருக்குத்தான் அதிருஷ்டம். ஜோசியரிடம் யாராவது ஆருடம் பார்க்கப் போனால், வேடிக்கையாக இருக்கும்.

'எட்டிலே ஒன்பது போனால்?' என்று அவர் கேட்பார். போகாது என்றால் அவருக்குக் கோபம் வந்துவிடும். "உங்கள் புதுக்கணக்கு எனக்கு வேண்டாம். கர்நாடகக் கணக்கு எனக்குப் போதும். அரைப் படி பாலிலே முக்கால் படி தண்ணீர் போகாதோ?" என்று கர்ஜனை செய்வார். இப்பேர்ப்பட்ட அபூர்வமான கர்நாடகக் கணக்குப் போடுகிறவர் ஜோசியர்.

நாளுக்கு நாள் அன்ன ஆகாரம் இல்லாமல் மெலிந்து போய்க் கொண்டிருந்த கிருகலட்சுமிக்குப் பேய் பிடித்திருக்குமோ என்று அவள் தகப்பனார் சந்தேகப்பட்டார். சந்தேகப்பட்டதுதான் தாமதம்; பூசாரியார் தோளில் பம்பை, ஒரு கையில் பிரம்பு, மற்றொரு கையில் விபூதிப்பை சகிதமாகக் கிருகலட்சுமியின் பிறந்த வீட்டில் தோன்றினார்.

பூசாரியார் வக்கணையாகப் பம்பை அடித்தார். வர்ணனையாகப் பாடினார். வலுக்கொண்ட மட்டும் பிரம்பைத் தரையில் தட்டி, பேயை வெருட்டிப் பார்த்தார். எந்தப் பேயும் ஜவாப் சொல்லவில்லை; ஆஜராகவில்லை.

"இது சாதாரணக் காற்றுத் தோஷமில்லீங்க" எனப் பூசாரியார் சொல்லி வாய்மூடுமுன், கிருகலட்சுமி துக்கம் பொறுக்க முடியாமல், "பூசாரியாரே! வெறும் காற்றுத் தோஷமில்லை, எனக்குள்ளே அடித்துக்கொண்டிருக்கும் புயல் காற்றுத் தோஷம். நீர் போய்விட்டு வாரும்" என்று படபடவென்று சொல்லிவிட்டாள். கலிகாலம் என்று முணுமுணுத்துக் கொண்டே பூசாரியார் வெளியேறிவிட்டார்.

பூசாரிக்குப் பின் ஜோசியர் வந்தார். தரையிலே கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்குமாகக் கோடுகளைக் கிழித்துக் கட்டம் கட்டினார். வாய்க்குள்ளே எதையோ முணுமுணுத்தார். கை விரல்களை ஒன்று ஒன்றாகவும் இரண்டாகவும் விட்டு எண்ணினார்.

"ஆமாம் கிருக தோஷம்தான்" என்றார். கடைசியில், பக்கத்தில் கிருகலட்சுமியின் தம்பி இருந்தான். அவனுக்கு இந்த மூடு மந்திரங்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. "எந்தக் கிருகதோஷம்! பிறந்த கிரகமா? புகுந்த கிரகமா? அல்லது ஜோசியம் பார்க்கிற கிரகசார தோஷமா? என்று அடுக்கினான். "துள்ளுகிற மாடுதான் பொதி சுமக்கும்; ஒண்ணிலே ஒண்ணு போனால்?" என்று ஜோசியர் கேட்டார்.

படீர் என்று 'மண்' என்றான் தம்பி. "ஆமாம்! மண் என்றால் செவ்வாய். செவ்வாய் நீசமாகி விட்டான். பிறந்த வீடு பெருமை அழிந்து போனால், புகுந்த வீட்டில் ஒருவரும் லட்சியம் செய்யமாட்டார்கள்" என்று ஜோசியர் அளப்பு அளந்தார்.

"இந்தக் கதையெல்லாம் எதற்கு? கிருகலட்சுமிக்கு விமோசனம் ஏதாவது உண்டா?" என்று கிருகலட்சுமியின் தகப்பனார் கேட்டார்.

தம்பிக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன கேள்வி அப்பா - கேட்கிறீர்கள்? கிருகலட்சுமியைத் தள்ளி வைத்தவன் திமிர் பிடித்தவன். லோகத்திலே திமிருக்கு மருந்து கிடையாது. பூசாரியும் மாந்திரிகனும் ஜோசியனும் என்ன செய்ய முடியும்? காலாடியூர்ப் பேர்வழியைப் போல் இந்தத் தேசத்திலே லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் - கிருகலட்சுமியைப் போன்ற உத்தமிகளைச் சித்திரவதை செய்து வருகிறார்கள். மூடநம்பிக்கைகளும் திமிரும் ஒழிந்தாலொழிய, நம்மவர்களுக்கு விமோசனம் கிடையாது" என்று தம்பி சரமாரியாகப் பொழிந்து விட்டான். தம்பியின் கட்சியை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

படித்து முடிந்துவிட்டது. என் ரேடியோப் பேச்சுப் பேசித் தீர்த்து விட்டேன். உத்தரவு கொடுங்கள். இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளுவோம்!



சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே எனது இலட்சியம். அத்தகையதொரு சமூக அமைப்பு ஏன் ஏற்படாது? சகோதர பாவனை ஏன் ஏற்படாது? அதற்கு எத்தகைய முட்டுக்கட்டையும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை.

—டாக்டர் அம்பேத்கர்





# உதகை



## தாவரவியல் பூங்கா வளர்ச்சிப் பணிகள்

உதகை அரசினர் தாவரவியல் பூங்கா 1948-இல் தொடங்கியதிலிருந்து பலவேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பூங்கா எழிலுடன் விளங்கி வருகிறது.

இப்பூந்தோட்டம் 22 எக்டேர் பரப்பில் கடல் மட்டத்திலிருந்து 2,400 முதல் 2,500 மீட்டர் வரை உயரத்தில் பொலிவுடன் விளங்குகிறது. ஆனாலும், அண்மைக் காலமாகப் பெருகி வரும் பார்வையாளர்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, வளர்ச்சிப் பணிகள் தேவையான அளவு மேற்கொள்ளப்படவில்லை.

1986-ஆம் ஆண்டு 9.049 இலட்சம் மக்கள் இப்பூங்காவிற்கு வருகை தந்துள்ளனர். ஆனால், 1990-ஆம் ஆண்டு 11.711 இலட்சமாக மக்கள் வருகை உயர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, கடந்த ஆண்டு பலவேறு வளர்ச்சிப் பணிகள் திட்டமிடப்பட்டு இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**வளர்ச்சிப் பணிகள்**

இப்பூங்காவை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் ரூ.75.25 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பூங்காவினைச் சுற்றி வேலி அமைக்க ரூ.8 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பூஞ்செடிகளின் நாற்றுக்கள் வளர்க்க, கண்ணாடி மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்ணாடி மாளிகைகளைப் பழுது பார்க்கும் பணிகள் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.15 இலட்சம் செலவில் புதிய கண்ணாடி மாளிகைகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

5 கி.மீ. தூரத்திற்குச் சாலை பழுதுப் பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காக ரூ.0.50 இலட்சம ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுப் பாதைகள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக ரூ.3.50 இலட்சம் செலவிடப்பட உள்ளது. மக்கள் பூங்காவை முழுமையாகச் சுற்றிப்பார்க்க வசதியாக உயரமான இடத்திற்குச் செல்லப் படிக்கட்டுகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு, இதற்காக ரூ.0.50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மழைக் காலத்தில் தண்ணீர் செல்ல வசதியாக வடிகால்வாய் சாலையின் இருபுறங்களிலும் ரூ.1.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

பூங்காவில் தண்ணீர்க்கிணறு வெட்டப்பட உள்ளது. தற்போது சின்கோனாவிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு பூமிக்கடியில் குழாய்கள் பதித்துத்தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் மேம்பாடு செய்ய ரூ.1.5 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

# நூல் நயம்

## விற்பன்னர் வேதநாயகர் ஓர் ஆய்வு

**ஆசிரியர்: கவிஞர் மதுரம் நம்பி**

**வெளியீடு:**

கீதாஞ்சலி நிலைய வெளியீடு
விருகாவூர்-606 203
(தெ.ஆ.மாவட்டம்)

விலை:ரூ.25 பக்கம்:268

தமிழில் முதல் நாவல் எழுதிய பெருமை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களையே சாரும்.

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி முதலான அவரது நூல்கள், அக்காலக் கட்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர்தம் நூல்கள் வாயிலாகக் கூறும் அறிவுரையும், அறவுரையும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாகும்.

வேதநாயகரின் வாழ்க்கைச் சுருக்கத்தோடு, அவரது நூல்களைப் பற்றியும் அலசி ஆராய்கிறார் நூலாசிரியர். வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமய நிலை தெளிவாக்கப்பட்டுள்ளது. அவரது சமரச நோக்கும் அவரது மொழி நடை, புலமை எல்லாம் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் கூறும் ஆசிரியரின் புலமை தெற்றென விளங்குகிறது.

ஆராய்ச்சி மாணவர் மட்டுமல்ல, அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

## தமிழின் மறுமலர்ச்சி

**ஆசிரியர்:**
**பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை**

**வெளியீடு:**

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை
நினைவு மன்றம்,
'வையகம்' 2, 4-வது குறுக்குச் சாலை,
இராஜா அண்ணாமலை புரம்,
சென்னை-600 028.

விலை:ரூ.42 பக்கம்:443

"தமிழாய்வுலகில் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தவர் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. அறிவியல் வழி ஆய்வு முறையில் இவர் முன்னோடியாக விளங்கியவர். விஞ்ஞான அடிப்படையிலான அணுகுமுறையை மேற்கொண்டு பரந்து கிடக்கும் நம் தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்து வந்தவர்" என்று இந்நூலின் முன்னுரையில் கூறியதற்கிணங்க, இந்நூலில் இடம் பெற்றுள்ள அத்தனைக் கட்டுரைகளுமே ஆய்வு நோக்கில் எழுதப்பட்டுள்ளன.

வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியத்தின் இரண்டாம் தொகுதியாக வெளிவரும் இந்நூலில், மொழி வரலாறு தொடர்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழின் மறுமலர்ச்சி, சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம், நிகண்டுகள், அகராதி என ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையும், ஆசிரியர்தம் ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகின்றது. தமிழின் சிறப்பும், அதன் அதியற்புத இயல்பும் வரிக்கு வரி வழங்கியிருக்கும் பாங்கு மகிழ்தற்குரியது. ஆராய்ச்சி ஆர்வலர் மட்டுமல்ல, தமிழ் அன்பர் யாவரும் படித்துப் பயன் பெற வேண்டிய சொற்களஞ்சியம் இது.

—பி.வி.கிரி.

## காந்திய பொருளாதாரம்

**ஆசிரியர்: டாக்டர் திரு.ஜே.ஸி.குமரப்பா**
**மொழி பெயர்ப்பாளர்: திரு.மீ/விநாயகம்**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020.

விலை:ரூ.10 பக்கம்:123

காந்தியச் சிந்தனையைக் கற்றுத் தெளிய, உறுதுணையாக விளங்கும் ஒரு அரிய மொழிபெயர்ப்பு நூலாகும்.

## சர்வோதய சமுதாயம்

**ஆசிரியர்: திரு.வீ.செல்வராஜ்**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை:ரூ.2 பக்கம்:24

அண்ணல் காந்தியடிகள் தந்த சர்வோதயம் என்ற சொல்லை அனைவரும் நிறைந்து போற்றி, சமுதாயம் மேன்மையுற வழிவகை காண உதவிடும் இனிய கையேடு இது.

## இந்து மதம்

**ஆசிரியர்: ஸ்ரீகிருஷ்ணதத்த பட்**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை:ரூ.20 பக்கம்:228

இந்நூல் இந்தியின் தமிழாக்கம். இந்து மதம் பற்றி வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்ற மூன்று பகுதிகளிலிருந்தும் மிக அற்புதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## அகில உலக அமைதித் தமிழ் அன்னையின் புன்னகை

**ஆசிரியர்:**
**கவிஞர் பாட்டாளி ஆ. பழனியப்பன்**

**வெளியீடு:**

கவிஞர் பாட்டாளி ஆ. பழனியப்பன்,
1162, 75-வது தெரு, 12-வது பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

விலை: ரூ.20 பக்கம்: 144

பல்வேறு தலைப்புக்களில் பைந்தமிழ்க் காவியமாக, கவிதை மணம் குன்றா செந்தமிழ் விளக்கமாக, கவிதை மனம் கொண்டோர் பார்த்து மகிழ, சிந்திக்க, எழில்மாடமாகத் திகழும் அரிய படைப்பாகும்.

—பொன். சுப்பையா

## பாரதிதாசனின் பொங்கற் பாட்டுக்கள்

**ஆசிரியர்: டாக்டர் எஸ்.குலசேகரன்**

**வெளியீடு:**

அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-632 001.

விலை:ரூ.7 பக்கம்:68

இந்நூலில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றி, இளைஞர்கள் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளது.

பொங்கல் திருநாளில் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார் என்பதையும், கவிஞரின் உள்ளக் கருத்துக்களையும் தெளிவுபட விளக்குகின்றார் ஆசிரியர். குழந்தைகள், எளிதாகப் படித்தறிந்து கொள்ளக்கூடிய வகையில் நூல் எழுதப்பட்டுள்ளது.

—தே.மணி



# வால்நட்சத்திரங்கள்

இரவு நேரம்.

வானத்தைப் பார்க்கிறோம்.

அங்கே உள்ள நட்சத்திர மண்டலங்களை அடையாளமாகக் கொண்டு, தாரகைகளைத் தனித்தனியாக அறிந்து கொள்ளலாம்.

முதன் முதலில் இடைக்காலத்தில்தான் மக்கள் வானத்தை உற்று நோக்கி நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பினை அடையாளம் கண்டு அவற்றினைப் பிரித்துள்ளார்கள். நட்சத்திரங்கள் மிகத் தொலைவில் உள்ளதால் நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பில் ஏற்படும் மாறுதல்கள் வெகுகாலத்திற்குப் பிறகுதான் தென்படும். எனவே, பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரும், நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்புக்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன.

இந்த நட்சத்திரக் கூட்டத்தின் உண்மைக் கதை என்ன?

இந்த ஏழு நட்சத்திரங்கள் நமக்கு அறிமுகமானவையே! இந்த நட்சத்திரக் கூட்டம் "சப்தரிஷி மண்டலம்" எனப்படும். இவற்றுடன் சில நட்சத்திரங்கள் சேர்ந்த கூட்டமைப்பினைப் 'பெருங்கரடி மண்டலம்' என்று அழைக்கிறோம். நட்சத்திர மண்டலத்தில் 'த்ருது' அதாவது Merek, புல்லகர் அதாவது Dhube ஆகிய முதல் இரண்டு நட்சத்திரங்கள் எப்போதும் துருவ நட்சத்திரத்தை நோக்கியே இருக்கும். பெருங்கரடி மண்டலத்தின் வால் பகுதியில் உள்ள கடைசி நட்சத்திரத்திற்கு முன்னுள்ள நட்சத்திரம் 'வசிட்டர்' அதாவது Mizar. 'அருந்ததி' அதாவது Alcor என்பது ஓர் நட்சத்திரம். ஒருவரின் கண்பார்வையைச் சோதிப்பதற்கு இது ஒரு சிறந்த முறை.



கிட்டத்தட்ட 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தூசு மற்றும் வாயு அடங்கிய மேகக் கூட்டத்திலிருந்து சூரியக் குடும்பம் தோன்றியது. சூரியக் குடும்பத்தின் 99 சதவீதத்திற்கும் மேலான பொருட்கள் நம் சூரியனில் அடங்கியுள்ளன. ஒன்பது கோள்களும் அவற்றின் துணைக்கோள்களுடன் சூரியனைச் சுற்றி வருகின்றன. மேலும், கோள்திரள்களும் அதாவது Asteroids மற்றும் வால்நட்சத்திரங்களும் அதாவது Comets சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை மட்டுமன்றி எரிகற்களும், எரிநட்சத்திரங்களும் அதாவது Meteoroids சூரியக் குடும்பத்தைச் சாரும்.

இரவு வானத்தில், நட்சத்திரங்கள், கோள்கள், சந்திரன் ஆகியவை காணப்படும். சில சமயங்களில் மற்றைய வான் பொருள்களும் இப்பகுதிகளில் காணப்படும். இவ்வான் பொருட்கள் நீண்ட வாலுடனும், அழகிய தோற்றத்துடனும் நட்சத்திரங்களுக்கு இடையே தோன்றிச் சூரியனைச் சுற்றி வரும். இவற்றினைத்தான் நாம் வால் நட்சத்திரங்கள் என்கிறோம். வால் நட்சத்திரத்தை ஆங்கிலத்தில் Comet என்று அழைக்கிறோம். அவ்வப்போது தோன்றி இரவு வானத்தில் அணிகலன்களாக விளங்குவது இவ்வான் பொருட்களாகும்.

வால்நட்சத்திரங்கள் பார்ப்பதற்கு அழகாகத் தோன்றினாலும், முற்காலத்தில் மக்கள் அவற்றினை அச்சத்தோடுதான் பார்த்தனர். அக்கால வால்நட்சத்திரங்கள் தோன்றிய போதெல்லாம் அவற்றினைப் போர், வறுமை, நோய், துன்பம் முதலியன வரும் என்பதற்கான முன் அறிகுறியாக மக்கள் கருதினர். குறிப்பாக, முற்காலத்திய ஆப்பிரிக்க மக்கள் வால் நட்சத்திரம் தோன்றுவது அழிவுகள் ஏற்படுவதற்கான அறிகுறியாகும் என்று நம்பினர். எனவே, இந்நட்சத்திரம் தோன்றும் போதெல்லாம் மக்களிடையே அச்சமும் கவலையும் உண்டாயின. இந்த தீய விளைவுகளிலிருந்து மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வழிபாடுகளும், வழிபாட்டுச் சடங்குகளும் நடத்தினர்.

ரோமன் சக்கரவர்த்தி, 'நீரோ' என்பவர் வால்நட்சத்திரம் தோன்றும் போதெல்லாம், அவற்றின் தோற்றம் தன் பகைவர்களின் அழிவிற்கு முன் அறிவிப்பு என நினைத்து, அவர்களை வெட்டும்படி ஆணையிடுவார். இடைக்கால முனிவர்கள் வால்நட்சத்திரங்கள் பேயின் கந்தக வாசனையை வெளி ஏற்றுவதாகக் கருதினர். வால்நட்சத்திரங்களின் தோற்றம் வரக்கூடிய இயற்கைச் சீற்றத்தின் முன்னறிவிப்பே என்று வில்லியம் ஷேக்ஸ்பியரும் அவருடைய நாடகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஜூலியஸ் சீசரில் (களம்II-இல்) கல்பூர்ணியா கூறுவதாவது:

"பிச்சை எடுப்பவர் இறக்கும்போது வால் நட்சத்திரங்கள் தோன்றுவதில்லை; ஆனால், இளவரசர்கள் மரணத்தின் போது விண்ணுலகமே கிளர் ஒளி வீசுகின்றது".

பண்டையகாலம் முடிந்து, புதிய யுகம் தொடர்ந்தபோது மக்களிடையே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. நவீன காலத்திய மக்கள் வால் நட்சத்திரங்களைப் பற்றிய விவரங்களை ஆழ்ந்து ஆராயத் தொடங்கினர். டைகோ பிராஹே (Tycho Brahe) என்பவர் பலவகையான வெவ்வேறு வால் நட்சத்திரங்களை ஆராய்ந்தார். அவற்றில் ஒளி மிகுந்த ஒன்றான 1577-ஆம் ஆண்டில் தோன்றிய வால் நட்சத்திரத்தினை ஆராய்ந்த பின்னர், வால் நட்சத்திரங்கள் பூமியின் வாயு மண்டலத்தில் உருவானவையல்ல என்றும், அவை வெகு தொலைவிலிருந்து வந்த வான் பொருட்கள் என்றும் உறுதியாகக் கூறியுள்ளார். எல்லாக் காலத்திலும் பல்வேறு தீ நிகழ்வுகள் ஏற்படுவது இயல்பே எனப் பொதுவாக மக்கள் அறிவர். எனினும் மூட நம்பிக்கையுள்ள மக்கள் வால் நட்சத்திரங்கள் தோன்றினால், இவற்றின் தோற்றத்திற்கும் அச்சமயத்தில் ஏற்பட்ட அல்லது அதற்குப் பிறகு உடனே ஏற்பட்ட தீ நிகழ்வுகளுடன் அவற்றைத் தொடர்புப் படுத்தி, வால் நட்சத்திரங்களின் தோற்றங்கள்தான் மக்களிடையே தீ நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றன என்று கூறினார்.

**நுழைவு வாயில் - அலங்கார வளைவு:**

தற்போது நுழைவு வாயிலில் அலங்கார வளைவு, மதில் சுவர் கட்டிட ரூ.15 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நுழைவு வாயில் 20 அடி உயரத்திற்கும், 20 அடி அகலத்திற்கும் கட்டப்படும். நுழைவு வாயிலில் 6 அடி உயரத்திற்கு மதிற்சுவரும், இரண்டு அடி உயரத்திற்கு இரும்புக் கம்பியும் போடப்படும். அலங்கார வளைவு மிகவும் வனப்புடையதாகவும், கலை அம்சம் பொருந்தியதாகவும் அமைக்கப்படும்.

**தோட்டக்கலை தாவரவியல் படிவம் சேமிப்பு நிலையம்:**

நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தாவரத்தின் செடிகளைச் சேகரித்து மக்களின் பார்வைக்கு வைக்க தாவரவியல் படிவம் சேகரிப்பு நிலையம் நிறுவப்பட உள்ளது. இதன் மதிப்பீடு ரூ.15 இலட்சம் ஆகும். ஆராய்ச்சி மாணவர்களுக்கும், தாவரவியல் பயிலும் மாணவர்களுக்கும் இது பயன்படத்தக்க வகையில் அமைக்கப்படும். தகவல் மற்றும் விற்பனை நிலையம் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்படும்.

பூங்காவைக் காண வரும் மக்களுக்கு வசதியாக 6 அறைகள் கொண்ட 2 இணை நவீன கழிப்பிடங்கள் ரூ.2 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**ரோஜா மலர்த் தோட்டம்:**

இப்பூங்காவில் பல்வேறு வகையான மலர்கள் காணப்படினும், ரோஜா மலர்களுக்குத் தனித்தோட்டம் அமைக்கப்படும். 1,500 வகையான ரோஜாச் செடிகள் இத்தோட்டத்தில் பயிர் செய்யப்படும். 10,000 ரோஜாச் செடிகள் வைக்கப்படும். ரோஜா மலர்களுக்கெனத் தனித்தோட்டம் அமைப்பது இப்பூங்காவிற்குத் தனிச்சிறப்பு ஏற்படுத்துவதாகும்.

மேலும், இப்பூங்காவைக் காண வரும் பார்வையாளர்களுக்கு இப்பூங்காவைப் பற்றி எடுத்துக்கூற ஆறு தாவரவியல் பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

மே மாதத்தில் நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு இப்பொழுதே பூங்காவை அழகுப்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு நடைபெறும் மலர்க் கண்காட்சியில் பல்வேறு வகையான மலர்கள் இடம் பெறுகின்றன. இவ்வாண்டு நடைபெறும் மலர்க்காட்சியின்போது பூங்காவின் வளர்ச்சிப் பணிகள் நிறைவேறி கண்போர் உள்ளங்களைக் கவரும் என்பது திண்ணம்.

மு.நா.கிருஷ்ணசாமி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

## மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
### செங்கை-அண்ணா மாவட்டம்

**1.4.90 முதல் 30.11.90 வரையிலான சாதனை**

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

| | | |
|---|---|---|
| 1. | 1990-91-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | 352.90 |
| 2. | 30.11.90 வரை மொத்த செலவினம் | 247.18 |
| 3. | 1990-91-ஆம் ஆண்டில் பயனடைய வேண்டிய நபர்களின் எண்ணிக்கை (புதியவை) | 11,217 |
| 4. | 30.11.90 வரை பயனடைந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை (புதியவை) | 8,489 |
| 5. | பயனடைந்த தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை (புதியவை) | 4,154 |
| 6. | பயனடைந்த மகளிர் எண்ணிக்கை | 2,141 |

**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்**

| | | |
|---|---|---|
| 1. | 1990-91-ஆம் ஆண்டின் நிதி இலக்கு (ரூ.இலட்சத்தில்) | 1553.990 |
| 2. | 30.11.90 வரை பெறப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) | 1179.769 |
| 3. | பயன்படுத்தப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) | 915.996 |
| 4. | 1990-91-ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் இலக்கு (இலட்சத்தில்) | 48.497 |
| 5. | மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டது (இலட்சத்தில்) | 39.328 |
| 6. | எடுக்கப்பட்ட மொத்த வேலைகள் (எண்ணிக்கை) | 7,496 |
| 7. | ஆதிதிராவிடர்களுக்குக் கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை | 403 |
| 8. | முடிக்கப்பட்ட பிற வேலைகள் | 1,732 |

கிருஷ்ணசுவாமி ராஜீவன், இ.ஆ.ப.
திட்ட அலுவலர்

சமீர் வியாஸ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர்



# விவசாயிகளுக்கு விற்பனை உதவி



விவசாயிகள் தங்களது விளை பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பதைத் தவிர்க்கவும், அவைகளுக்கு நல்ல விலையினைப் பெற்றுத் தரவும் வன்முறைபடுத்தப் பட்ட சந்தை, நெல், நிலக்கடலை, சூரியகாந்திப் பூ போன்ற விளை பொருட்களின் பேரில் குறைந்த காலக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் சந்தைக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள சரக்குகளின் மதிப்பில் 50 சதவிகிதத் தொகை (ரூ.10,000-க்கு மேற்படாமல்) கடனாக வழங்கப்படும். இந்த விளை பொருட்கள் அதிகபட்சம் ஆறுமாதம் வரை கிடங்கில் வைக்கப் படும். இவைகளைப் பாதுகாக்கத் தனியாக எந்தக் கட்டணமும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட வில்லை.

கடன் வழங்கப்பட்ட முதல் மாதத்திற்கு, வட்டி வசூலிக்கப் படுவதில்லை. எனினும், இரண்டாவது மாதத்திலிருந்து ஆறாவது மாதம் வரை 10 சதவிகித வட்டி வசூலிக்கப்படும்.

1990-91ஆம் ஆண்டில் சுமார் 1,500 விவசாயிகள் இக்கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 1991 ஜனவரித் திங்கள் வரை, சுமார் 820 விவசாயிகள் இத் திட்டத்தின் மூலம் பயனடைந்தார்கள்.

**ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மைத் திட்டம்**

நன்செய் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கவும், நன்செய் நில விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் மாநில அரசின் நிதியில் ரூ.1.5 கோடியில் 1990-91-இல் அமல்படுத்தப்படுகிறது. கோடை உழுதல், சத்துள்ள உரங்களைப் பயன்படுத்துதல், இரட்டை விளைச்சல், எரு உற்பத்தி, ஒருங்கிணைந்த பூச்சிக்கொல்லி முறைகள் ஆகியவற்றைச் செயல் படுத்திக் காண்பிக்க ஒரு பகுதியில் 100 ஏக்கர் வீதம் 300 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த 100 ஏக்கர் நிலம் இதன் பக்கத்திலுள்ள பகுதிகளுக்குச் செயல் முறை விளக்கக் கூடமாக விளங்கி புதிய தொழில் நுணுக்கங்களைப் பரப்புகிறது. இத்திட்டம் அனைத்து மாவட்ட விவசாயிகளும் விரும்பும் வகையில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. கோடை உழவு, மற்றும் சத்தான உரம் போன்ற வற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 30,000 ஏக்கர் 31.12.90 அன்று எட்டப்பட்டு விட்டது. மற்ற வகையிலும் நல்ல முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 34,653 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ.1.5 கோடியில் ஜனவரி 1991 முடிய ரூ.1.24 கோடி செலவிடப்பட்டுள்ளது.

'சாதி இரண்டொழிய
வேறில்லை என்றே
தமிழ்மகள் சொல்லியசொல்
அமிழ்தமென்போம்!
நீதிநெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்
கீழவர் மற்றோர்!'

—பாரதியார்

பொதுவான வான் பொருட்களாகிய நட்சத்திரங்கள், கோள்கள், சந்திரன் முதலியவற்றின் ஆராய்ச்சியினை அடுத்து இக்காலத்தில் வந்த வான்பொருளை வல்லுநர்களும், பொழுதுபோக்காக வானியல் தேர்வோரும், மிக ஆர்வத்தோடு ஆராய்ந்து வருகிறார்கள். அது வால் நட்சத்திர ங்கள் பற்றித்தான். அலங்காரத் தோற்றத்துடன், வால் நட்சத்திரம் நகருவதன் காட்சியினைக் காணும்போது, நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

வால்நட்சத்திரங்களின் எண்ணிக்கை, கடலில் உள்ள மீன்களின் எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளது என்று விஞ்ஞான நிபுணர் கெப்ளர் கூறியுள்ளார். அது உண்மையாக இருக்கலாம். எனினும் எங்கிருந்து இவ்வால்நட்சத்திரங்கள் வருகின்றன? வால்நட்சத்திரக் குடும்பத்திற்கும் அப்பாற்பட்ட மற்றைய நட்சத்திரக் கூட்டங்களிடையிலிருந்து வருவதாக முற்காலத்தில் நம்பப்பட்டது. தம் பாதையை விட்டுத் தவறிய வால்நட்சத்திரங்களில் சில சூரியனை நோக்கி வரும்போது, வியாழன், சனி போன்ற பெரிய கிரகங்களின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்பட்டு சூரிய குடும்பத்தின் வான் பொருளாக அடங்கிச் சூரியனைப் பொதுவாக நீள்வட்டப் பாதையில் சுற்றிவரத் தொடங்குகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு வானஇயல் அறிஞரான லாக்ரெஞ்ச் (Lagrange) மற்றொரு கோட்பாட்டினை வெளியிட்டார்.

இக்கோட்பாட்டின்படி, வால்நட்சத்திரங்கள் பெரிய கோள்களிலிருந்து வெளியே தள்ளப்படுகின்றன. வியாழன் கோளில் பெரிய எரிமலையாகக் கருதப்பட்ட இடத்திலிருந்துதான் வால்நட்சத்திரங்கள் வெளியேற்றப் படுகின்றன என்று சில வல்லுநர்கள் நம்பினர். பின்னர்தான் இவ்விடம் ஜூபிடர் அதாவது வியாழன் கோளின் சிவப்புக் கறை அதாவது Red Spot என்னும் பெரும்புயலின் பகுதி எனத் தெரிய வந்தது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு கோட்பாடுகளுக்கும் வானவியல் வல்லுநர்கள் ஆதரவு தருவதில்லை.

இப்போதுள்ள கோட்பாடு டச்சு (Dutch) வானியல் அறிஞரான ஜான் எச்.ஓர்ட் (Jan.H.Oort) என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் இருபதுக்கும் மேற்பட்ட நீண்டகாலச் சுற்றுப்பாதை அளவுகொண்ட வால்நட்சத்திரங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் சுற்றுப்பாதைகளை நிர்ணயித்துள்ளார். பெரும்பான்மையான வால்நட்சத்திரங்கள் வான் வெளிப்பகுதியில் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தொலைவில் இருப்பதாகவும் உறுதியாக முடிவு செய்துள்ளனர்.

ஒரு வான இயல் அலகு என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள சராசரி தூரமாகும், இது ஏறக்குறைய 15 கோடி கிலோமீட்டர், ஓர்ட் எனப்படும் பெருமேகம் கோடிக்கணக்கான வால் நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வால்நட்சத்திரங்கள் அவற்றின் கலப்படமில்லாக் கலவையாக அப்பகுதியில் உள்ளன. எனவே, வால்நட்சத்திரங்களின் ஆராய்ச்சி வான இயலில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. நமது சூரிய குடும்பத்தின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ள வால் நட்சத்திரங்களின் ஆராய்ச்சி மிகவும் முக்கியம் என்று கூறலாம்.

சூரியன், கோள்கள் மற்றும் அதன் துணைக்கோள்கள் உருவானபோது



விஞ்ஞானம் நம் நாட்டில் - பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போலவும், குருடனிடம் காட்டிய முத்துமாலை போலவும், செவிடனிடம் இசைக்கப்பட்ட சங்கீதம் போலவும் மதிப்பற்றிருக்கிறது; இந்நிலை மாற வேண்டும்.

— அறிஞர் அண்ணா

எஞ்சிய பொருள்கள் சேர்ந்து ஓர்ட் மேகம் உருவாயிற்று. இம்மேகமானது வால்நட்சத்திரத்தின் களஞ்சியமாக உள்ளது. ஆனால், சூரியனின் ஈர்ப்புச் சக்தியை மீறி எந்தக் காரணத்தினால் வால்நட்சத்திரங்கள் ஓர்ட் மேகத்திலிருந்து வெளியேறுகின்றன? ஆகாய கங்கையின் மையத்தினை சூரியன் சுற்றிவரும்போது சில சமயங்களில் மற்ற நட்சத்திரங்களுக்கு அருகே வர நேரிடுகிறது. ஆனால் ஈர்ப்புச் சக்தியின் விளைவு வேறுபட்டு ஓர்ட் மேகத்திலிருந்து வால் நட்சத்திரங்கள் பல்வேறு திசைகளில் சிதறுகின்றன. இச் சிதறுகள் அவற்றின் பாதைகளை மாற்றி அமைக்கின்றன. சூரியனுக்கு அருகில் உள்ள மூலக்கூறுகளின் ஈர்ப்பு விசையினால் வால்நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தின் உட்பகுதிக்கு நுழைகின்றன. நட்சத்திரங்கள் இடைவெளியில் உள்ள மூலக்கூறுகளின் கூட்டங்களுக்கிடையே சூரியன் செல்லும்போதெல்லாம் இத்தகைய நிகழ்ச்சி நடக்கிறது. ஓர்ட் மேகம் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தூரத்திலிருந்து தொடர்ந்து ஏறக்குறைய குபேரன்போல் சுற்றுப் பாதை வரை பரவியுள்ளதாகக் கருதப் படுகிறது. இது உண்மையெனில் ஓர்ட் மேகமானது அளவில்லா வால்நட்சத்திரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

வால் நட்சத்திரத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது?

தலைப்பகுதி, மையக்கரு, இரண்டு வால்கள் என மூன்று முக்கிய பாகங்களை நட்சத்திரம் கொண்டுள்ளது. அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து வால் நட்சத்திரங்கள் நீர்வாயு மேகங்களைக் கொண்டுள்ளது என அறியப்படுகிறது.

நட்சத்திரங்களின் மையக்கரு பொதுவாக சில கிலோமீட்டர் குறுக்களவு உடையது. நீண்ட தூரத்தில் சூரியக் குடும்பத்தைத் தொடர்ந்து இருக்கும் மிகக் குளிர்ச்சியான நட்சத்திரத்தின் கருவைச் சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் பார்த்தாலும் காண முடியாத மறைபொருளாக உள்ளது. எனினும் நட்சத்திரத்தின் மையக்கரு சூரியனை நெருங்கும் சமயம் சூரிய கதிர்களால் அவை வெப்பத்தைப் பெறுகின்றன. அதன் விளைவாக நட்சத்திரத்தின் தலைப்பகுதி மற்றும் வால்கள் உருவாகின்றன. தலைப்பகுதி 10 இலட்சம் கிலோமீட்டர் குறுக்களவு உடையது. மேலும் மைய உட்கருவும் வெளிக்கருவும் இணைந்து நட்சத்திரத்தின் தலைப்பகுதி உருவாகிறது. சூரியனுக்கு மிக அருகில் நட்சத்திரம் வரும்போது அதன் வால் பகுதியின் நீளம் அதிகரிக்கும்.

வால்நட்சத்திரம் சூரியனை நெருங்கும் போதும் அதனை விட்டு விலகிச் செல்லும் போதும் அதன் வால் பகுதியானது சூரியனுக்கு நேர் எதிராகக் காணப்படுகிறது. 837-ஆம் ஆண்டு தோன்றிய ஹாலி நட்சத்திரத்தினை ஆராய்ந்த சீன வானியல் நிபுணர்கள் இப்பண்பினை முதன்முறையாகக் கண்டறிந்தனர். ஒரு நட்சத்திரம் மிக அருகில் வருவதைப் பொறுத்து அது ஒன்று, இரண்டு வால்களுடனோ அல்லது வால்கள் இல்லாமலோ இருக்கலாம். இந்நட்சத்திரங்களின் வால்கள் தூசு மற்றும் அயனிகள் என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வால்கள் விண்வெளியில் வியக்கத்தக்க வகையில் துடைப்பான்களைப்போல் தோன்றுகின்றன.

1843-ஆம் ஆண்டு தோன்றிய பெரிய நட்சத்திரத்தின் வால் பகுதியின் நீம் 33 கோடி கிலோ மீட்டர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வால் நட்சத்திரத்தின் தலைப்பகுதியைச் சுற்றி ஹைட்ரஜன் மேகம் அல்லது ஹாலோ சுமார் 10 இலட்சம் கிலோ மீட்டர் வரை சூழ்ந்து காணப்படுகிறது. பூமியைப் போன்று 100 மடங்கிற்கும் அதிக



அளவில் இப்பரப்பு தென்படுகிறது. சூரிய ஒளி இந்த மேகத்தை ஒளிரச் செய்கிறது. இத்தன்மையானது விண்வெளிக் கப்பல்கள் உதவியால் நிறமாலையில் உள்ள புற- ஊதாக் கதிர்களை ஆராய்வதன் மூலம் கண்டு பிடிக்கப் படுகிறது. பென்னட் மற்றும் வெண்ட் வால்நட்சத்திரங்களைப் பெருமளவில் ஹைட்ரஜன் மேகங்கள் சூழ்ந்துள்ளன. பென்னட் வால்நட்சத்திரத்தைச் சுற்றிலும் சுமார் 100 இலட்சம் கிலோமீட்டர் வரை ஹைட்ரஜன் மேகம் சூழ்ந்து காணப் படுகிறது.

வால்நட்சத்திரம் எக் கலவைகளால் ஆனது?

பூமியிலிருந்து மேற்கொண்ட நிறமாலை ஆராய்ச்சி மூலம் இக்கலவைகளைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெளிவாக உள்ளன. 1985/86-ஆம் ஆண்டுகளில் ஹாலி வால்நட்சத்திரம் தோன்றியபோது சில விண்வெளிக் கப்பல்கள் அனுப்பப்பட்டு வால்நட்சத்திரத்தின் பகுதிகள் மிக அருகிலிருந்து ஆராயப்பட்டன. இவற்றுள் ஜப்பானியரின் சூசேய் சாகிகாகேயும், ருஷ்யாவின் வேகா-1 இ வேகா-2 மற்றும் ஐரோப்பிய விண்வெளிக் கூட்டமைப்பின் கியேட்டோவும் அடங்கும். அமெரிக்க விண்வெளிக் கப்பல் எக்ஸ்புலோரர் ஹாலி வால் நட்சத்திரத்தைத் தொலைவிலிருந்து ஆராய்ந்தது. விப்பல் என்ற அமெரிக்க வானியல் நிபுணர் 'Dirty Ice Balls' என வால்நட்சத்திரங்களை வர்ணித்துள்ளார். வால்நட்சத்திரங்கள் சிறிய கற்கள், உறைநிலை மீதேன், அம்மோனியா, கரியமில வாயு, நீர் முதலியவற்றை உள்ளடக்கி உள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

ஹாலி வால்நட்சத்திரத்தின் உட்கருவின் நெருங்கிய தோற்றத்தை சுமார் 1,703 கிலோமீட்டர் தொலைவில் இருந்து பல நிறப் புகைப்படக் கருவி படம் பிடித்துள்ளது. இதன் உட்கருவின் குறுக்களவு சுமார் 10 கிலோமீட்டர். மற்றும் அதன் நிறை சுமார் 8,000 கோடி டன் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உட்கருவானது மிகவும் இருண்டு காணப் படுகிறது. இதன் ஒளி பிரதிபலிப்புத் திறன் 2 முதல் 4 சதவீதம். 84 சதவீதம் உறைந்த நிலையில் உள்ள நீர், பால் மல்டிஹைட் கரியமில வாயு, சிறிதளவு ஹைட்ரஜன் மற்றும் கார்பன் மோனாக்சைடால் இது ஆக்கப்பட்டுள்ளது.

மிக ஒளி பொருந்திய நன்கு அறிமுகமான வான்பொருட்களுள் ஹாலி வால்நட்சத்திரமும் ஒன்று. கி.மு.240-ஆம் ஆண்டிலிருந்தே இதன் இயக்கங்கள் கவனிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. எட்மண்ட ஹாலி என்ற ஆங்கில வானியல் அறிஞர் வால்நட்சத்திரப் பாதைகளைப் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். 1531, 1607



• கல்வி வேறு, படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்புப் பெறச் சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டுமே அதைத் தந்துவிடாது; தண்ணீர் மட்டும் ஆகாரமாகிவிடாது! ஆனாலும் அவசியமானதுதான். ஆயினும் அதைவிடவும் உணவு முக்கியமானது. அதைப்போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது.

—மூதறிஞர் ராஜாஜி

மற்றும் அவர் கவனித்த 1682-ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட வால் நட்சத்திரங்கள் அனைத்தும் ஒன்றே எனக் கண்டுபிடித்தார். 1705-ஆம் ஆண்டு இக்கருத்தினை அவர் வெளியிட்டார். மீண்டும் 1758-ஆம் ஆண்டு இந்த வால்நட்சத்திரம் தோன்றும் என்றும் அது மீண்டும் வருவதற்கு முன்னரே குறிப்பிட்டிருந்தார். அவர் மறைந்து 16 ஆண்டுகள் சென்ற பின்பு அவர் குறிப்பிட்டபடியே 1758-ஆம் ஆண்டு அந்த வால்நட்சத்திரம் மறுபடியும் தோன்றியது. எனவே, அவரது நினைவாக அந்த வால்நட்சத்திரத்திற்கு ஹாலி எனப் பெயர் சூட்டப்பட்டது. சூரியனைச் சுற்றி வர இது எடுத்துக் கொள்ளும் சராசரி கால அளவு 76 ஆண்டுகள், குறுகிய கால அளவு 74.4 ஆண்டுகள், நீண்ட கால அளவு 79.2 ஆண்டுகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1910-ஆம் ஆண்டு தோன்றிய ஹாலி வால்நட்சத்திரம் மிகுந்த ஒளியுடனும் நீண்ட வாலுடனும் காணப்பட்டது. அப்போது பூமியானது இந்த வால் நட்சத்திரத்தின் வால் பகுதியைக் கடந்து சென்றது. மீண்டும் 1986-ஆம் ஆண்டு இவ் வால்நட்சத்திரம் தோன்றியது. ஆனால் இம்முறை 1910-ஆம் ஆண்டைப் போன்று ஒளியுடன் காட்சியளிக்கவில்லை. ஏனெனில், சூரியனுக்கு வெகு அண்மையில் செல்லும்போது ஹாலி, வால்நட்சத்திரமும், பூமியும் சூரியனுக்கு இருபுறங்களில் இருந்தன. 2061-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரம் தோன்றும், அப்போது அது மிக ஒளியுடன் காணப் படும்.

ஹாலி வால்நட்சத்திரத்தைப் போன்று சில நூறு ஆண்டு சுற்றுப்பாதைக்காலங்கள் உள்ளவைகள் குறுகியகால வரையுடைய வால்நட்சத்திரங்கள் எனப்படும். நமக்கு அறிமுகமான என்கே என்ற வால் நட்சத்திரம் குறைந்த கால வரையுடையது. இதுவரை அது 50 முறைக்கும் அதிகமாக சூரியனைச் சுற்றி வந்துள்ளதை நிபுணர்கள் கவனித்துக் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு முறையும் சூரியனைச் சுற்றிவரும் போது வால்நட்சத்திரம் அதன் பொருட்களில் பெரும் பகுதியை இழந்துவிடுகிறது. வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு மிக அருகில் வரும் நேரத்தில் அதன் உட்கரு தொடர்ந்து அரிக்கப்பட்டுக் கொண்டு வரும்.

200 ஆண்டுக்கும் மேற்பட்ட சுற்றுப் பாதைக் காலங்கள் கொண்டவை நீண்ட கால வால்நட்சத்திரங்கள் எனப்படும். குறித்த காலத்தில் தோன்றும் வால் நட்சத்திரங்களின் சுற்றுப்பாதை பொதுவாக நீள்வட்டமாக அதாவது Ellipse வடிவமாக இருக்கும். சூரியனுக்கு அருகில் வானத்தில் அழகாக ஒரே ஒரு முறை மட்டும் தோன்றி மறையும் வால்நட்சத்திரங்களின் பாதையானது திறந்த பரவளையமாகவோ, அதிபரவளையமாகவோ இருக்கும். அவை மீண்டும் சூரியன் அருகில் வருவதே இல்லை.

பல்வேறு வகை வால்நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தினுள் நுழைகின்றன. ஹோவார்ட்-கூமன்-மிஷால் என்னும் வால்நட்சத்திரம் 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சூரியன் 0 மீது மோதியது. 1770-இல் லெக்ஸெல் என்ற வால்நட்சத்திரம் பூமிக்கு 12 இலட்சம் கிலோமீட்டர் அருகில் நெருங்கி வந்தது. 1846-இல் பைலா என்ற வால் நட்சத்திரம் மீண்டும் தோன்றிச் சூரியனை நெருங்கும்போது இரண்டாகப் பிளவு பட்டது.

வால்நட்சத்திரங்களைப் பற்றிய பல உண்மைகள் தற்போது நமக்குத் தெரிய வந்துள்ளன. புதிய வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடிப்பவர்கள் உலக அரங்கில் புகழ்பெறுகின்றனர். எனவே, வானியலில் ஆர்வமுடையவர்கள் புதியனவற்றைக் காண வானத்தை ஊடுருவி ஆராய்ந்து வருகின்றனர். புதிய வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடிக்கத் தொலை நோக்கிகள் மூலம் சில நூறு அல்லது ஆயிரம் மணி நேரங்கள் வானத்தை அதிக கவனத்துடன் ஆராய வேண்டியதாக இருக்கும். சில வேளைகளில் புதிய வால்நட்சத்திரத்தைக் காணாமலும் போக நேரிடலாம். வானத்தை ஆய்ந்து அறியும் இப்பயிற்சியானது இரவு வானத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவை நமக்கு அளித்து நுட்பமான கவனிப்பாளராக நம்மை மாற்றுகிறது.

இந்த ஆய்வின் நோக்கம் நட்சத்திரப் பட்டியலில் இல்லாத ஒரு புதிய வால்

பொருளைக் கண்டறிவதே. இத்தகைய ஆய்வின்போது குறித்த காலத்தில் தோன்றும் வால்நட்சத்திரங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றை நீக்கிவிட வேண்டும். வழக்கமாக வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு வெகு தொலைவில் தோன்றும்போதுதான் கண்டுபிடிக்கப்படுகின்றன. புதிய வால்நட்சத்திரத்தின் தோற்றத்தை இரவு வானத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில் கால வரையுடன் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.

புதிய ஒரு வால்நட்சத்திரம் தோன்றும் போது, அதைப் பலரும் கண்டு அறிவித்திருக்கலாம். ஆனால், அப்படி அறிவிப்பவர்களில் முதல் மூவரின் பெயரர்லேயே மட்டும் அது அழைக்கப்படும். உதாரணமாக, பாப்பு-பாக்-நியூகிர்க் (Bappu-Bok-Newkirke) என்ற வால்நட்சத்திரம் அதனைக் கண்டுபிடித்தவர்களின் பெயராலேயே அழைக்கப்படுகிறது. இம் மூவரில் பாப்பு என்று குறிப்பிடப்பட்டவர் நம் நாட்டைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் எம்.கே. வைனுபாப்பு (Dr. M.K. Vainu Bappu) ஆவார். மேலும் விண்வெளிக்கலம் சம்பந்தப்பட்ட பெயராலும் வால்நட்சத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. இதற்கு ஓர் உதாரணம் ஈராஸ்-அராக்கி-அல்காக் (IRAS-Araki-Alcock) என்ற வால் நட்சத்திரமாகும். இதில் IRAS என்றால் INFRARED ASTRONOMICAL SATELLITE என்பதாகும்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கண்டு பிடிக்கப்படும் வால்நட்சத்திரம் உதாரணமாக 1990-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட வால்நட்சத்திரம் 1990 என்று குறிப்பிடப்படும், அடையாள எழுத்து, அவ்வால்நட்சத்திரத்திரம் குறிப்பிட்ட காலங்களில் தோன்றும் என்பதை உணர்த்தும். உதாரணமாக, பி. ஹாலி மற்றும் பி.என்கே (P/HALLEY'S and P/ENKE) என்பவை குறித்த காலங்களில் தோன்றும் வால்நட்சத்திரங்கள். வால் நட்சத்திரங்கள் பூமியில் உயிரினங்கள் தோன்றுவதற்கு எந்த வகையிலாவது தொடர்புடையனவா? என்ற வினாவிற்கு பூமி வளர்ச்சியின் தொடக்க நிலைகளில் கோடிக்கணக்கான வால்நட்சத்திரங்கள் பூமியுடன் மோதி, கடல்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்தன என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இப்போதும்கூட, பூமியில் நீர் இருப்பு உயருவதற்கு வால்நட்சத்திரங்கள் தான் காரணம் என்று ஐயோவா (IOWA) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் லூயிஸ் ஃபிராங்க் (Dr. Louis Frank) ஆராய்ந்து கூறியுள்ளார். பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நீர்கொண்ட வால்நட்சத்திரங்கள் பூமியின் வளிமண்டலத்தை ஒவ்வோர் ஆண்டும் மோதுவதால் நம் வளிமண்டலத்தில் நீர்க்கலவை முதலில் ஏற்பட்டு பிறகு தட்பவெப்ப நிலைக்குத் தக்கவாறு கடல் நீருடன் சேருகின்றது.

ஒவ்வோர் ஆண்டும் 10.14 அதாவது கோடி கோடி கிராம் நீர் வால்நட்சத்திரங்களினால் பூமிக்குக் கிடைக்கிறது. இதனால் ஓர் ஆண்டுக் காலத்தில், பூமியின் மேற்பரப்பில் சராசரியாக 2.5 செ.மீ. அளவு நீர் மட்டம் உயரக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார். இவ்வாறு 400 கோடி ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து வால்நட்சத்திரங்களில்தான் பூமிக்குக் கிடைத்த நீரைக் கணக்கிடுகையில் வால் நட்சத்திரங்கள்தான் பெரும்பாலும் பூமியில் கடல் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும் என நம்பப் படுகிறது. இந்தக் கோட்பாடு வானியல் நிபுணர்களின் இப்போதைய கண்டு பிடிப்புகளுக்கு ஆதரவாக உள்ளது. பூமியில் உயிரினம் வளர்ச்சியடைய உதவியாக உள்ள மூலக்கூறுகளை வால் நட்சத்திரங்கள் விதைத்திருக்கலாம்.

வால்நட்சத்திரங்களும் பிற கோள்களைப் போலவே சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் தன்மை உடையது. எனவே, சூரியனுக்கு எவ்வளவு அருகில் வால்நட்சத்திரம் உள்ளதோ அதற்கு ஏற்றவாறு அதிகமாக ஒளியைப் பிரதிபலிக்கும். மேலும் வால்நட்சத்திரங்களில் உள்ள மூலக்கூறுகள் ஒளியை உமிழும் தன்மையுடையவை. அதாவது வால் நட்சத்திரத்தில் உள்ள வாயு மூலக்கூறுகள் ஒரு குறிப்பிட்ட அலை நீளத்தில் சூரிய ஒளியைக் கிரகித்துக் கொண்டு வேறு அலை நீளத்தில் வெளிப்படுத்துகின்றன.

வால்நட்சத்திரம் உமிழ்ந்த ஒளிநிற மாலையை ஆராய்ந்தபோது, குறிப்பிட்ட வாயுக்களான மீதேன், கார்பன் மோனாக்ஸைடு, சயனோஜின் மூலக்கூறுகளினால் ஒளி வெளியேற்றப்படுகின்றது எனத் தெரிய வருகிறது. 1910-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரம் தோன்றிய காலத்தில் பூமியானது அதன் வால் பகுதியைக் கடந்து சென்றது. இவ்வால் பகுதியில் உள்ள விஷத்தால் கேடு நேரிடுமோ என்ற திகில் மக்களுக்கு ஏற்பட்டது. இருப்பினும் வால் பகுதியில் உள்ள விஷ வாயுவின் பருமளவு மிகவும் குறைவாக இருந்ததால் தீங்கு ஏதும் நிகழவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ஆறு புதிய வால்நட்சத்திரங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. ஒகாசகி-லெவி-ருடன்கோ, ஆஸ்டின் மற்றும் லெவி என அழைக்கப்படும் வால்நட்சத்திரங்கள் சமீப காலத்தில் தொடர்ச்சியாகத் தோன்றின. நடுத்தர அளவு தொலைநோக்கிகள் உதவியால் முன்னர் குறிப்பிட்ட மூன்று வால்நட்சத்திரங்களைக் காண முடிந்ததால், பொதுவாக வால்நட்சத்திரங்களைப் பற்றி ஆராய்வதில் புதியதோர் ஆர்வம் அதிக அளவில் தற்போது ஏற்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில், பின்னால் நேரிடப் போகின்ற தீய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் முன்னெச்சரிக்கையாக வால்நட்சத்திரங்கள் கருதப்பட்டு வந்தன. ஆனால், இந்நாட்களிலோ வான் பொருட்களான வால்நட்சத்திரங்கள் தேடி ஆராயப்படுகின்றன. 1618-ஆம் ஆண்டு தான் முதன் முதலாக வால்நட்சத்திரம் தொலைநோக்கியின் உதவியால் கவனிக்கப் பட்டது. 1910-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரத்தின் புகைப்படங்கள் பலமுறை எடுக்கப்பட்டன.

1986-ஆம் ஆண்டு இவ்வால் நட்சத்திரம் தோன்றியபோது இதனைப் பற்றி விண்வெளி ஆய்வுகள் மிகப் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.

வால்நட்சத்திரங்களின் முக்கியத் தன்மைகளைப் பற்றி அறிந்து கொண்ட நாம், சூரியக் குடும்பத்தைச் சார்ந்த மற்ற சில உறுப்புகளான, கோள்திரள்கள், விண்கற்கள், எரி நட்சத்திரங்கள் முதலியவற்றின் சிறப்பு நிலைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?

செவ்வாய், வியாழன் கோள்களின் சுற்றுப்பாதைகளுக்கு இடையே கோள்திரள்கள் காணப்படுகின்றன. இவை சூரியனைச் சுற்றி வருகின்றன. இக்கோள் திரள்கள் சில சென்டிமீட்டரிலிருந்து சில நூறு கிலோமீட்டர்கள் அளவுடையவை. 50,000-க்கும் அதிகமாக எண்ணிக்கையுடைய கோள் திரள்களில் சுமார் 3,000 கோள்திரள்களின் சுற்றுப்பாதை இயக்கங்கள் கணக்கிடப் பட்டுள்ளன. கோள்திரள்களில் மிகவும் பெரியது சிரஸ். இதன் விட்டம் சுமார் 1,000 கிலோமீட்டர்.

இக்கோள்திரள் 1801-ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. சிரஸ் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில ஆண்டுகளுக்குள்

## குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம்

குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் 10 அரை வட்டக் கதவுகள் மற்றும் அக்கதவுகளை இயக்குவதற்கான இயந்திரங்கள் தயாரித்துப் பொருத்தும் பணியைத் துங்கபத்ரா ஸ்டீல் தயாரிப்பு நிறுவனத்திடம் ரூபாய் 2,39,87,000 மொத்த மதிப்பீட்டிற்கு (இதர வரிகள் நீங்கலாக) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மைய அரசு மற்றும் ஆந்திர-கர்னாடக அரசுகளின் கூட்டு நிறுவனமாகும். இப்பணியை 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட வேண்டுமென இந்நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.



# எரிநட்சத்திரங்கள் எப்படிப்பட்டவை?



பல்லாஸ் (Pallas) ஜூனோ (Juno) மற்றும் வெஸ்டா எனும் கோள்திரள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கோள்திரள்கள் சிறு கோள்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடைப்பட்ட சுற்றுப் பாதையில் இதைப்போன்று ஆயிரக்கணக்கான சிறு பொருட்கள் சிதறிக் கிடப்பதற்கான சான்றுகள் காலம் செல்லச் செல்லக் கிடைத்தன.

விண்வெளியிலிருந்து வரும் கற்களுள் பூமியின் வளிமண்டலத்தை அடைந்தவுடன் எரிந்து விழுகின்ற பொருட்களையே நாம் எரி நட்சத்திரங்கள் என்கிறோம். விண்ணிலிருந்து வரும் பொருட்களுள் அவற்றின் மேற்பரப்பு மட்டும் எரிந்து, எஞ்சிய பகுதி எரியாமல், பூமியில் வந்து விழுபவற்றை விண்கற்கள் என்கிறோம்.

எரிநட்சத்திரங்கள் பூமியின் மேற்பரப்பினை வந்து அடைவதில்லை. இவை வளி மண்டலத்தினுள் நுழையும்போது மட்டுமே பார்வையில் தென்படும். இவை அதிகபட்சமாக மணிக்கு 72 கிலோ மீட்டர் வேகத்தில் வளிமண்டலத்தின் மீது மோதுவதால் ஏற்படும் உராய்வின் காரணமாகப் பூமியை அடைவதற்கு முன்பாகவே, முழுமையாக எரிந்து விடுகின்றன. இவ்வாறு எரிவதால், இரவு வானத்தில் திடீரென ஒளிக்கற்றையை நாம் காண்கிறோம்.

எரிநட்சத்திரங்கள் குறிப்பிட்ட காலத்திலோ அல்லது எப்பொழுது வேண்டுமானாலுமோ தோன்றலாம். எந்தத் திசையிலிருந்தும் எந்நேரத்திலும் தோன்றுவது ஸ்போராடிக் (Sporadic) எரிநட்சத்திரங்கள் எனப்படும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வளி மண்டலத்தினுள் நுழையும் எரி நட்சத்திரத் தொகுப்புகள் நட்சத்திரங்கள். விட்டுச் சென்ற எஞ்சிய பகுதிகளாகும்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் வீழ்கின்ற ஓரியானிட்ஸ் எரி நட்சத்திரக் கூட்டம், ஹாலி நட்சத்திரத்தின் எஞ்சிய பகுதியுடன் தொடர்புடையது. டெம்பிள்டட்டில் என்ற நட்சத்திரத்தின் எஞ்சிய பகுதியே, நவம்பரில் தோன்றும் புகழ்பெற்ற லியோனிட்



நல்லதங்காள் கதை கூறும் கல்வெட்டு.

'அப்போது நல்லதங்காள்
எரிவைமினம் கொடியும்
மாளுகிறேனென்று சொல்லி
மலையேறித் தெண்டனிட்டாள்
சத்திவலம் வந்து
சூரியனைத் தெண்டனிட்டாள்
தெண்டனிட்ட பிற்பாடு
தெரிவைமினம் கொடியும்
ஒவ்வொரு மக்களையும்
கங்கையிலே தள்ளிவிட்டாள்
பார்ப்பா ருடையுடுத்தி
பத்தினியாள் நல்லதங்காள்
தானுஞ் சலியாமல் தண்ணீரில்
போய் விழுந்தாள்!'

—இவ்வாறு செல்லுகிறது அந்தப் பாடல்.

நல்லதங்காளும் அவள் குழந்தைகளும் இறந்த கிணறு காமராசர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள அர்ச்சனாபுரத்தில்தான் உள்ளது என்று கூறப்படுகிறது. இப்பொழுது பாழடைந்து தூர்ந்து போய்க் காணப்படுகிறது. இந்தக் கிணற்றைப்பற்றி மேலப்பாளையம் திரு. கந்தன் அவர்களைக் கேட்ட போது "வேப்பிலை அய்யருக்குச் சொந்தமான நிலம் 1.5 ஏக்கர் கொண்டது; இவருடைய நிலத்தில் தான் இந்த கிணறு உள்ளது. இது ஒரு வித்தியாசமான கிணறு. இதில் கட்டப்பட்டுள்ள செங்கல், அளவில் பெரியது. இது போல வேறு எங்கும் கிடையாது" என்று கூறினார்.

அர்ச்சனாபுரத்தின் கோயிலை நிர்வகிக்கும் திரு.சுந்தரம் என்பவரை அதுபற்றிக் கேட்டபோது, "நல்லதங்காளுக்கு ஒரு கோயிலும், குழந்தைகளுக்கு என்று ஒரு கோயிலும் அப்பகுதியில் கட்டப்பட்டுள்ளன. இது பழமையான கோயில். வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களுக்கு அக்கோயிலில் பூஜை நடைபெறுகிறது. ஆடி மாதம் இவ்வூரில் உள்ளவர்கள் திருவிழா நடத்துகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை சவுராஷ்டிரத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் பந்தலிட்டுப் பொங்கல் வைத்து இங்குவந்து வணங்கி செல்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள கீழ் அர்ச்சனாபுரத்தில், நல்லதம்பி கோயில் ஒன்று உள்ளது. இங்கு விசேஷ நாட்களில் பூஜை நடைபெறுகிறது. மூலி அலங்காரியின் சிலை காஞ்சாபுரத்தில் வயல் வெளியில் இருக்கிறது. அவ்வூர் மக்கள் இந்தச் சிலையை ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம்!

எஸ்.கே.மூர்த்தி
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர்(செய்தி)
காமராசர் மாவட்டம்

## பருவமழை தவறிய பகுதிகளில் குடிநீர் பணிகள்

பருவமழை தவறிய பகுதிகளில் குடிநீர்ப் பணிகளை நிறைவேற்ற ஏற்கெனவே அறிவித்ததற்கிணங்க, அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தருமபுரி, சேலம், திண்டுக்கல்-காயிதேமில்லத், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை-சம்புவராயர், வடார்க்காடு அம்பேத்கர், இராமநாதபுரம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்தொகையில், 1,500 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.1 கோடி செலவிடப்படும். மீதமுள்ள ரூ.4 கோடி, புதிய திறந்த வெளிக் கிணறுகள் வெட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்துதல், தனி மின்வழித் தடம் அமைத்தல், பழுதான பம்புசெட்டுகளை மாற்றுதல் ஆகிய பணிகளுக்குச் செலவிடப்படும்.





## தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், அவர்களுடைய பணியிடங்களுக்கருகில் பாங்கான இடங்களில் குறைந்த வாடகையில் வசிக்க இயலும் வகையில், தொழிலாளர்கள், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோருக்கான தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சிறுதொழில் வளர்ச்சிக்கழகம் ஆகியவற்றின் மூலம், அரசு இந்த வீடுகளைக் கட்டியிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் வீடுகளைப் பெறுவதற்குத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வருகிற தொழிற்சாலைகள், தொழிலாளர் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்கள் ஆகியோர் தகுதி உடையவர் ஆகிறார்கள் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்-மேலாண்மை இயக்குநர், இவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு உரிமை மாற்றம் செய்வது குறித்து எழுப்பிய சில ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்தி, அண்மையில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதன்படி, விற்பனை மூலம் வீடுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய, சட்டப்படியான வாரிசுதாரர்கள், சட்டத்தின்கீழ் வருகிற மற்றும் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலையில் பணிபுரிவோர், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுக்கும் பணியை மேற்கொள்வதற்குத் தொழிலாளர் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகளின் அடிமனை மற்றும் கட்டடத்தின் விலை ஆகியவற்றை நிர்ணயம் செய்வது குறித்து அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. தொழிலாளர் துறை ஆணையாளர், தகுதிபெறும் தொழிலாளர்களைக் கண்டறிந்து அவர்களைத் தெரிந்தெடுத்தபின்னர், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் பராமரிக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பராமரிக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் வீட்டுவசதி வாரியமும் பயனடைவோருக்கு அந்த மனையையும், குடியிருப்புகளையும் ஒதுக்கீடு செய்யலாம்.

தொழிலாளர் நலத்துறை ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் பெற்ற தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அலுவலர் இவ்வீடுகளுக்கான விற்பனைப் பத்திரங்களை வழங்குவார்.

**பேரறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., என்.டி.ஆர்.(எச்)27,**
**நீ.5-ஏ, நடனகோபாலர் தெரு, கும்பகோணம்-612 001.**

எங்களிடம் உயர்ரக சப்புரிப் பட்டு, அசல் வெள்ளி சரிகையிலான நவீன ரகப் பட்டாடைகள் கிடைக்கும்.

விற்பனை நிலையங்கள்

1. சன்னதித் தெரு-திருபுவனம்
2. 2வது அக்ரஹாரம்-சேலம்
3. 'சுமங்கலி' சில்க்காம்ப்ளக்ஸ்-திருச்சி
4. கீழவெளி வீதி-மதுரை
5. எஸ்.கே.சீஸ்.பீல்டிங்-திண்டுக்கல்
6. பூம்புகார் சில்க் ஹவுஸ்-பட்டுக்கோட்டை
7. கீழராஜ வீதி-புதுக்கோட்டை
8. 14, பெரியகடைத் தெரு, அறந்தாங்கி
9. லாரன்ஸ் ரோடு-கடலூர்
10. 240, எம்.ஜி.ரோடு-விழுப்புரம்
11. காந்தியடிகள் சாலை-கும்பகோணம்
12. சங்கம் சில்க் ஹவுஸ்-மயிலாடுதுறை

இரா.வேம்பு,
உதவி இயக்குநர் - செயலாளர்

திரு. ஏ.ராசாராமன்
தலைவர்

சொ.கு.கிருஷ்ணமூர்த்தி
துணைத்தலைவர்

இயக்குநர்கள்

எஸ்.மகாலிங்கம்
எம்.ஆர்.ஸ்ரீதர்
என்.பி.ராமகிருஷ்ணன்
கே.என்.இராஜாஜி
திருமதி.ஏ.கமலா
ஜீ.வி.ஜெகந்நாதன்
திருமதி.எல்.ஜெயம்

சிறப்புக் கட்டுரை

# காணும் பொருளெல்லாம் கலைவண்ணம்



சென்னை அண்ணாசாலையில் உள்ள 'பூம்புகார்' விற்பனைக் கூடத்திற்குச் செல்கிறோம்.

கலை உலகமே அங்குக் காட்சியளிக்கின்றது.

காணக் கண் கோடி வேண்டும் என்பதுபோல, எதை விடுப்பது? எதை எடுப்பது?

காணும் பொருளெல்லாம் கலை வண்ணம்!

திரும்பும் திசையெல்லாம், திறமையின் பிரதிபலிப்புகள்!

பூம்புகார் - தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் கைவினைப் பொருட்களின் சங்கமம்.

ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

கல், மரம், மண், காகிதம், உலோகம், பஞ்சலோகம் ஆகியவற்றாலான சிற்பங்கள் - சிலைகள் - கலைப் பொருட்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

கலைக்கூடங்கள் - விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 1973-இல் தொடங்கப்பட்டது.

★ கைவினைத் தொழில்களை எல்லா வகையிலும் வளர்த்தல், ஊக்குவித்தல்.

★ கைவினைஞர்களுக்கு எல்லா வகையான உதவிகள் அளித்தல்.

★ கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்தல்.

- இவை இக்கழகத்தின் குறிக்கோள்கள்.

பூம்புகாரின் கிளைக் கலைக்கூடங்கள் - விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ளன. பிற மாநிலங்களான புதுடெல்லி, கல்கத்தா, பெங்களூர், திருப்பதி ஆகிய இடங்களில் உள்ளன.

உலோகம், சந்தன மரம், காகிதக் கூழ், பிரம்பு ஆகிய பொருட்களின் மூலம் தயாரிக்கும் 10 உற்பத்தி நிலையங்கள் தமிழகம் முழுவதும் உள்ளன.

## சாதனைக்குச் சான்று!

பூம்புகாரின் சாதனைக்கு ஒரு சான்று - 1989-90-இல், இந்நிறுவனம் நான்கு கோடியே 66 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கான கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இந்தவிற்பனையில்,15 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய்க்கான பொருட்களை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்று, கடந்த ஆண்டு ஒரு கோடியே 12 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் அளவிற்குக் கைவினைப் பொருட்களை உற்பத்தி நிலையங்கள் மூலம் இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது.

பொதுமக்களைக் கவர்த்தக்க வகையில், அவ்வப்போது கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகளில் பிற மாநிலத்தவரும் பங்கு கொள்கின்றனர். ஒரே இடத்தில், பல்வேறு மாநிலங்களின் கலைப்பொருள்களைக் கண்டு களிக்கவும், விரும்பி வாங்கிச் செல்லவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. இதுவரை 75 கண்காட்சிகளை பூம்புகார் நடத்தியிருக்கின்றது. இதன்மூலம், ஒரு கோடியே 24 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்குக் கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி, கடந்த நிதி ஆண்டில், இக்கழகம், ரூ.13.50 இலட்சத்திற்கு நிகர இலாபம் ஈட்டிச் சாதனை புரிந்துள்ளது.

இந்த நிதியாண்டில் ஜனவரி மாதம் முடிய ரூ.28.48 இலட்சம் இலாபம் எட்டியுள்ளது. இந்த ஆண்டு முடிவில் இந்நிறுவனம் ரூ.525 இலட்சங்களுக்கு விற்பனையையும், ஒன்றேகால் கோடி ரூபாய்க்குக் கைவினைப் பொருட்கள் உற்பத்தியையும் எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம், கூடுமானவரையில் கொள்முதல் குழுக்களின் மூலம் கைவினைஞர்களிடமிருந்து கைவினைப் பொருட்களை நேரடியாகச் சரியான விலைக்கு வாங்குவதால், இடைத் தரகர்களின் ஈடுபாடும், கைவினைஞர்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி அதிக இலாபம் அடையும் நோக்குடன் அதிகமான

**கலை நுணுக்கம் மிகுந்த கைவினைப் பொருட்களின் சங்கமமாகத் திகழ்வது பூம்புகார்! கைத்திறத்தைக் கடை பரப்பும் அந்தக் கவின்மிகு அமைப்பின் தோற்றம்-வளர்ச்சி-நோக்கம் ஆகியவை இந்தப் பக்கத்தில் தொடங்குகின்றன...**



பாரெங்கும் புகழப்படும் பெருமையும் கலைநுணுக்கமும் மிகுந்தவை பைந்தமிழ் நாட்டுக் கலைப்படைப்புகள். அவை பாரம்பரியமிக்க பண்பாட்டுப் பெருமைகளோடு செய் நேர்த்தியிலும் சிறந்து விளங்குபவை அந்தக் கலைச் செல்வங்கள் குத்து விளக்கானாலும், தஞ்சாவூர்த் தட்டானாலும் சிலையோ, சிற்பமோ எதுவானாலும் எல்லாராலும் கொண்டாடப்படுகின்றன.



# கோளரங்கத்தில் புதிய நிகழ்ச்சி

சென்னை மாநகரில், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள பி.எம். பிர்லா கோளரங்கத்தில் 28.2.1991 அன்று ஆறாவது(வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தின் மற்ற சிறு பொருட்களான கோள்திரள்கள், எரி நட்சத்திரங்கள், விண்கற்கள் பற்றிய) நிகழ்ச்சியின் தொடக்க விழா நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு பி. பெரியசாமி வரவேற்றார். அறிவியல் தொழில் நுட்பத் துறையின் சிறப்புப் பணி அலுவலர் திரு ஆர்.சங்கர நாராயணன் பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சிகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் நாற்பது நிமிட நேரம் காண்பிக்கப்பட்டன. இப்பொழுது வால் நட்சத்திரங்கள் எனும் நிகழ்ச்சி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த பிர்லா கோளரங்கத்தில், வார நாட்களில் 4 நிகழ்ச்சிகளும் (தமிழில் இரண்டு ; ஆங்கிலத்தில் இரண்டு) விடுமுறை நாட்களில் ஆறு நிகழ்ச்சிகளும் (தமிழில் மூன்று; ஆங்கிலத்தில் மூன்று) நடைபெறுகின்றன. இங்கு வருகை தருபவர்களில் 60 சதவீதத்தினர் மாணவர்கள் ஆவார்கள். வானியல் பற்றிய நற்சான்றிதழ் வழங்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன. இவ்வகுப்பில் சுமார் 25 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். மூன்று மாதப் பயிற்சி ஆறு மாதப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. இதுதவிர புகைப்படக் கண்காட்சிகளும், புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் வானவியல் சங்கத்தின் சார்பில் இரவு வான் கவனிப்பு முகாம் 7 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது. இந்தப் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் தொலைக்காட்சியில் இதுவரை எட்டு நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது.

இது தவிர, நான்கு அறிவியல் அரங்குகள் குழந்தைகள்- பெரியவர்களின் அறிவியல் அறிவைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் அங்குள்ள பொருள்களைத் தொட்டு இயக்கித் தங்கள் அறிவியல் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். ரஷியப் பெண் வானவெளி வீரர் வேலன்டினா இந்தக் கோளரங்கில் ஒருநாள் தங்கி அனைவரது கேள்விகளுக்கும் பதிலளித்தது இந்தக் கோளரங்கின் பொன்னாளாகக் கருதப்படுகிறது.

இவை தவிர சிறிய கோளரங்கம் தற்பொழுது சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டு மிகப் பெரிய அளவில் மக்களைக் கவர்ந்து வருகிறது. இதுபோன்ற ஐந்து சிறிய கோளரங்குகளைத் திரு பி.எம். பிர்லா, இந்தக் கோளரங்கிற்கு நன்கொடையாக வழங்குகிறார். விரைவில், திருச்சிராப்பள்ளியில் இதுபோன்ற சிறிய கோளரங்கத்தை நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் அரங்கு நிறைந்த காட்சிகளாகவே நடந்து வருகின்றன. அறிவியல் அறிவை- குறிப்பாக வானவியல் அறிவை வளர்க்க மூன்றாவது தலைமுறை கம்ப்யூட்டர் முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கோளரங்கம், அனைத்து மக்களையும் ஈர்த்து இன்றைய தினம் தமிழகத் தலைநகரின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. குழந்தைகளுக்கும் பிளஸ்-2 வரை படிக்கும் மாணவர்களுக்கும் ரூ.2-ம், பெரியவர்களுக்கு ரூ.5-ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

வாரத்தில் திங்களன்று மட்டும், சென்னை- கோட்டூர்புரத்திலுள்ள இக்கோளரங்கத்திற்கு விடுமுறை நாளாகும்.

—என்.இளங்கோ

எரிநட்சத்திரக் கூட்டம் என்று நம்பப்படுகிறது. ஒவ்வொரு எரிநட்சத்திரக் கூட்டமும் வான வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தொடங்கி, பூமியில் வந்து சேர்வது போலத் தோன்றுகிறது. ஓரியானிட், மற்றும் லியோனிட் எரி நட்சத்திரக் கூட்டங்கள் ஓரையான் மற்றும் லியோ நட்சத்திர மண்டலங்களில் இருந்து வருவது போலத் தோன்றுகின்றன. ஒவ்வொரு நாளும் பூமியின் வளிமண்டலத்தை வந்தடையும் எரிநட்சத்திரங்களின் எண்ணிக்கை சுமார் 7.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூமியின் தரைமட்டத்தை வந்தடையும் விண்கற்கள் எரிநட்சத்திரங்களைப் போலச் சிறியதாக இல்லாமல், அளவில் பெரியனவாக இருக்கும். இவற்றின் மேற்பகுதி மட்டுமே எரிந்து, எஞ்சிய பகுதி முழுமையாக எரியாமல் பூமியை வந்து சேர்கின்றன. விண்கற்கள் கிட்டத்தட்ட, கோள்திரள்களை ஒத்துக் காணப்படுகின்றன. அரிசோனா என்ற இடத்தில் விண்கல்லின் மோதலால் உருவான புகழ்பெற்ற பள்ளத்தாக்கின் விட்டம் 1265 மீட்டர் மற்றும் அதன் ஆழம் 175 மீட்டர் ஆகும். கற்கள், இரும்பு மற்றும் கல்-இரும்பு என்று மூன்றாக விண்கற்களை வகைப்படுத்தலாம். 10 டன் எடைக்கும், அதிகமாக உள்ள பெரும்பாலான விண்கற்கள் இரும்பு வகையைச் சார்ந்தவை. தென்மேற்கு ஆப்பிரிக்காவில் ஹோபா வெஸ்ட் என்ற இடத்தில் விழுந்த, விண்கல்லின் எடை 60 டன். இதுவே நமக்குத் தெரிந்தவரை அதிக எடை உடைய விண்கல்லாகும்.

அதிகாலை வானத்தில் சிரியஸ், பிராசியான், பெட்டல்ஜுஸ் ஆகிய மூன்று நட்சத்திரங்களால் ஆன குளிர் கால முக்கோணம் கீழ்த்திரையிலிருந்து மேலெழும்பி வந்துள்ளது. இம்மூன்று விண்மீன்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதால், இத்தகைய குளிர்கால முக்கோணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சிரியஸ் வெண்மை நிறத்தோடு ஒளிர்கிறது. பிராசியான் மஞ்சள் நிறத்தோடு காணப்படுகிறது. மற்றும் பெட்டல்ஜுஸ் சிவப்பு நிறத்தைப் பெற்று விளங்குகிறது. குளிர்கால ஒரையன் நட்சத்திர மண்டலம் எம்-42 என்ற நெபுலாவை உள்ளடக்கியுள்ளது. இந்த நெபுலாவிற்குள் புது நட்சத்திரங்கள் பிறக்கின்றன.

இந்த அதிகாலை நேரத்தில் சூரிய உதயத்திற்கு முன்னதாக, செவ்வானம் கீழ்த்திசையில் தோன்றுகிறது. சூரியன் அடிவானத்திற்கு 18 டிகிரிக்கு உள்ளாக இருக்கிறது. இந்தச் சமயத்தில் வான் பொருட்கள் அனைத்தும் மறையத் தொடங்குகின்றன. முதலில் மறைவது நட்சத்திரங்கள். அவற்றை அடுத்து கோள்களே.



# நல்லதங்காள் கதை

காமராசர் மாவட்டத் தலை நகரிலிருந்து 42 கி.மீ. தூரத்தில் உள்ளது, வத்திராயிருப்பு என்ற கிராமம். மேற்குத்தொடர்ச்சிமலையின் எழிலும், சுற்றிலும் தென்னை மரத்தோப்புகளும் நிறைந்த எழில் மிகு கிராமமாகக் காண்போரைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது இது. அர்ச்சனாபுரத்திற்கு வடக்கேயும், கான்சாபுரத்திற்குக் கிழக்கேயும், வத்திராயிருப்புக்கு மேற்கிலும் அமைந்துள்ளதுதான் நாம் இங்கே குறிப்பிடும் நல்லதங்காள்கோயில்.

இதுபற்றிக் கர்ணபரம்பரைக் கதை ஒன்று உண்டு.

முன்னொரு காலத்தில், சந்திர குலத்தில் பிறந்த இராமலிங்க மகாராஜா என்பவர் மதுரையை ஆண்டு வந்தார். இவரது மனைவி பெயர் இந்திராணி, இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. மூத்தமகன் நல்லதம்பி, இளைய மகள் நல்லதங்காள். உரிய காலத்தில் காசிராஜனுக்கும் நல்லதங்காளுக்கும் திருமணம் நடைபெற்றது. இனிதே இல்லறம் துவங்கி, சிலகாலம் மகிழ்ச்சியுடன் இருந்த இவர்களுக்கு 7 குழந்தைகள் பிறக்கின்றன. செல்வச் செழிப்புடன், இருந்த இவர்கள் மழை பெய்யாத காரணத்தால்,



நல்லதங்காள் கிணறு

கடும் பஞ்சத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, தங்களிடம் இருந்த பொருட்கள் யாவற்றையும் விற்றுச் சாப்பிட்டு, வேறு வழியில்லாமல் உடன் பிறந்த அண்ணன் வீட்டிற்குத் தன் 7 குழந்தைகளுடன் தன்னந் தனியே செல்கிறாள் நல்லதங்காள். இவளுடைய அண்ணி மூலி அலங்காரி ஒரு கொடுமைக்காரி. சரிவர கவனிக்காததால் மனமொடிந்து சாவதற்குத் துணிந்து தன் குழந்தைகளை அழைத்துச் சென்று பாழும் கிணற்றில் வீசி, தானும் உயிர் விட்டாள் என்பது தான் நல்ல தங்காளின் கதை.



நல்ல தங்காள் கோயில்

இந்தக் கதையையொட்டிய பாடல் ஒன்று இந்த வட்டாரத்தில் வழங்கப் படுகிறது.

நல்லதங்காள் மனம் நொந்து காடு மலைகளைக் கடந்து மாடு மேய்க்கும் சிறுவர்களிடம் பாழுங் கிணறு எங்குள்ளது என்று கேட்கிறாள் என்று தொடங்குகிறது அந்தப் பாடல். இதோ, அது:

'மாடு மேய்க்கும் பிள்ளைகளா
மாட்டாஞ்சிறு தம்பியரே
ஆடுமேய்க்கும் பிள்ளைகளா
அறியாத பாலகரே
பாழுங் கிணறொன்று
காண்கிலையே யெந்நுக்கு?'

—அதற்குச் சிறுவர்கள், கீழ்க் கண்டவாறு பதில் கூறுகிறார்கள்:

'அருகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ள
பாழ்கிணறு
கோவை படர்ந்திருக்கும்
கொடிதான பாழ்கிணறு
எதிரேயிருக்கு தம்மா ஏற்றமுள்ள
பாழ்கிணறு

நல்லதங்காளும் அவளுடைய ஏழு குழந்தைகளும் அக்கிணற்றில் விழுகிறார்களாம். அது குறித்து பாடல் வருமாறு:

விலைக்கு விற்பதும் தடுக்கப்பட்டு வருகிறது.

**பூம்புகாரின் புகழ்**

பூம்புகாரின் கைத்திறம், பல இடங்களில் விளங்கி வருவதைப் பார்க்கிறோம்.

திருப்பதி கோயிலுள்ள கருட மண்டபத்திற்குத் தங்கத் தகடு வேயும் வேலை.

பாண்டிச்சேரியில் உள்ள மணக்குல விநாயகர் கோவிலுக்கு வெள்ளி ரதம்.

கர்நாடக மாநில, பெல்லாரி பொதுப்பணித் துறைக்கு வெண்கலத்தினாலான அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலை.

திருச்சி திருவெள்ளாறையிலுள்ள புண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயிலுக்கான மரத் தேர்.

பல்வேறு இடங்களில் உள்ள ஆலயங்களுக்கான கொடி மரங்கள், பித்தளை உண்டியல்கள், மரக் கதவுகள்.

இராமேஸ்வரம் கோவிலுக்கு, இரண்டாம் பிரகாரக் கட்டுமானப் பணி, அம்பாள் மண்டபக் கட்டுமானப் பணி.

ஆந்திராவிலுள்ள அன்னாவரக் கோவிலுக்குப் பித்தளையாலான வளைவுக் கம்பி வேலை.

ஸ்ரீகாளாஸ்திரி கோவிலுக்குப் பித்தளையாலான கம்பி வேலைகள்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள ஒரு கோவிலுக்கு கல் சம்பந்தப்பட்ட வேலைகள்.

- ஆகியவை நடைபெற்று வருகின்றன.

தங்கத் தேர் மூன்று, வெள்ளித் தேர் இரண்டு பூம்புகார் உருவாக்கி வருகிறது. இவையன்றி, தங்க, வெள்ளி வேலைப்பாடுகளும் நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கைத்திறமைகள் கடல் கடந்தும் பரவி வருகின்றன.

மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, ஜெர்மனி,





சுவிட்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பூம்புகார்க் கலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கெல்லாம் தமிழகத்தின் பெருமை பட்டொளி வீசிப் பறக்கின்றது.

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு இருக்கும் கைவினைப் பொருட்களின் குறைந்த விலை ஐந்து ரூபாய்; அதிகவிலை ஒரு இலட்சம் ரூபாய்!

**புதிய புதிய திட்டங்கள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், அவர்கள், இக்கழகத்தின் புதிய திட்டங்கள் குறித்து விளக்கினார் -

"கைத்திறன் வேலைப்பாடுகள் மிகுந்த பித்தளைக் கலைப் பொருள், மரத்தினாலான கலைப் பொருள், வளக்குகள் முதலிய கைவினைப் பொருட்களை, வெளிநாட்டுச் சந்தையில் விற்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இதனை நன்கு பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சியினைத் தோற்றுவிக்க இக்கழகம் முயற்சி செய்து வருகிறது.

"பழனி, கொடைக்கானல், இராமேஸ்வரம், தூத்துக்குடி போன்ற இடங்களில் 1990-91-ஆம் ஆண்டிற்குள் விற்பனை நிலையங்களை ஏற்படுத்துவதோடு அல்லாமல், அண்டை மாநிலத்தில் உள்ள செகந்தராபாத் நகரத்தில் ரூ.12 இலட்சம் செலவில் இந்திய அரசு கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையரின் உதவியுடன் ஒரு நவீன விற்பனை நிலையம் ஏற்படுத்தவும் இக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

"ஐந்தாண்டுக்குச் சேர்ந்தாற்போல பலவாறான கைவினைத் தொழில்கட்குரிய பயிற்சியினை அளிக்கும்பொருட்டு,

தமிழ்நாடு அரசிற்கு ரூ.75 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இதன்மூலம் குறைந்தது 1,100 கைவினைஞர்கட்குப் பயிற்சி அளித்து ஊக்குவிக்க முடியும்."

**இந்தியாவின் கைவினை - 1991**

1991 ஜனவரித் திங்களில் இக்கழகம், 'இந்தியாவின் கைவினை - 1991' என்னும் பெயரில் ஒரு பெரிய சிறப்புக் கண்காட்சியினை நடத்தியது. கைவினைப் பொருட்கள் தேவையுள்ள மக்களுக்கு நடுத்தரகர்களின் ஈடுபாடு இல்லாமல் நேரடியாக, சரியான விலையில் சென்றடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

**அட்டையில்...**

**சிற்பக் கலைஞரும், கவிஞரும் ஒருவகையில் ஒன்றுதான். கவிஞன் தன் சிந்தனையைப் பிழிந்து கவிதையை உருவாக்குகிறான். சிற்பக் கலைஞன் தன் சிந்தனையைச் சிலையாக வடிக்கிறான். அவ்வாறு உருவானதுதான் முகப்பை அலங்கரிக்கும் யாழ் நங்கை, உலோகத்தால் ஆனது. ஈரோடு சிற்பக் கலைஞர் திரு.எல்.இராதாகிருஷ்ணன் அவர்கள் உருவாக்கியது. பூம்புகார் கலைக்கூடங்களில் பல்வேறு சிற்பக் கலைஞர்களின் கைவண்ணங்களோடு, இவரது கைவண்ணத்தையும் கண்டு மகிழலாம்.**

இந்தியாவில் உள்ள பத்து மாநிலங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் இதில் பங்கேற்று தங்களது கைவினைப் பொருட்களை விற்று அதற்கான தொகையினை உடனடியாகப் பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதன்மூலம், இந்திய அரசு கைவினைப் பொருள்களின் வளர்ச்சி ஆணையர் அவர்களின் பொருளாதார உதவி இல்லாமல், ஒரு சிறிய இலாபத்துடன் இக்கழகம் ரூ.7.17 இலட்சத்திற்கான கைவினைப் பொருட்களை விற்று கைவினைஞர்கட்கு உதவி செய்துள்ளது.

மேலும், இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில், விற்பனைச் சந்தைக்கூடம் கட்டுவதற்கும் இக்கழகம் ஏற்பாடு செய்து வருகிறது. இதற்கு இந்திய அரசின் கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையரிடமிருந்து நிதி



உதவி கிடைக்க உள்ளது. இதனால் இந்தியாவில் உள்ள அனைத்துக் கைவினைஞர்களும் தங்களது பொருட்களை நல்ல விலையில் விற்க வாய்ப்பு ஏற்படும்.

**விளக்குகள் - ஒரு விளக்கம்**

விளக்குகளில்தான் எத்தனை வகை! குத்துவிளக்கு, காமாட்சியம்மன் விளக்கு, மகர விளக்கு, தோரண விளக்கு, தூண்டாமணி விளக்கு, இப்படி எத்தனையோ உள்ளன. அவற்றையெல்லாம் ஒருசேரக் காணலாம் பூம்புகார் விற்பனைக் கூடத்திலே!

விளக்குகள் நாச்சியார்கோவில், வாகைக்குளம், மதுரை ஆகிய இடங்களில் உருவாக்கப்படுகின்றன. சுமார் 8 அடி வரை விளக்குகள் தயாரிக்கலாம். விசித்திரமான சித்திர வேலைப்பாடுகளுள்ள விளக்குகளும் உண்டு.

**அதே வேலை நுணுக்கத்துடன் - அற்புதக் கலைஞர்கள்**

சோழர் காலத்தில் புகழ்பெற்ற உலோக விக்கிரகங்கள் போன்று இன்றும் தஞ்சாவூர் சுற்றியுள்ள சில சிற்பக் கலைஞர்கள், அதே வேலை நுணுக்கத்துடனும் ஆர்வத்துடனும் சிற்பங்களை உருவாக்கி வருகிறார்கள். உலோகத்தாலான தஞ்சாவூர் விளக்குகள் நல்ல அழகிய வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டு - ரூ.35-லிருந்து விற்பனை செய்யப்படுகிறது.

மதுரை, சேலம், கன்னியாகுமரி, திருச்சி மாவட்டங்களில் இம்மாநிலத்தின் பாரம்பரியத் தொழிலான மரக் கைவினைப் பொருட்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன.

கைவினைப் பொருட்களில் புகழ்பெற்ற தஞ்சாவூர்த் தட்டு, மூங்கில் நாற்காலிகள், அலங்கார உடைகள், கோயில் அணிகலன்கள் ஆகியவை பூம்புகாரில் விற்பனை செய்யப்படும் பொருள்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழ்நாட்டில் பாரம்பரியமான கைவினைப் பொருட்கள் அழியா வண்ணம் அவற்றைக் காப்பாற்றுவதுடன், சிற்பக்கலை, உலோகம், மர கைவினைப் பொருட்கள் தயாரிப்பதிலும் பூம்புகார் நிறுவனம் முதலிடம் வகிப்பது - பாராட்டுதற்குரியதாகும்.

**தமிழகத்தின் பெருமை தரணியெங்கும் பரவிட**

திறமை வாய்ந்த கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கி, அதேசமயத்தில் அவர்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பூம்புகார் செவ்வனே செயலாற்றி வருகின்றது.

தமிழகத்தின் பெருமையை, கலைச் சிறப்பைத்தரணியெங்கும் பறை சாற்றுவதுடன், கைவினைஞர்களுக்கு ஒரு கணிசமான தொகை ஊதியமாகக் கிடைக்கவும், அவர்களின் பொருட்களுக்கு ஓர் உறுதியான நிரந்தர விற்பனைக்கு வழிகோலவும் பூம்புகார் பெரும் பணியாற்றி, பேரும் புகழும் பெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

பி.வி. கிரி

அரசுத் துறைகளுக்கான பொருள் வழங்கல்

# தமிழகத்தின் பங்கு அதிகரிக்கும்

அரசுத் துறைகளுக்குக் கொள் முதல் செய்வதற்கு இந்திய அரசின் அமைப்பான பொருள் வழங்கல் - விற்பனைத் தலைமை இயக்குநரகம் பொறுப்புடையது. அவ்வமைப்பு ஓராண்டில் ரூ.3,200 கோடிக்குக் கொள்முதல் செய்து வருகிறது.

தென் மாநிலங்களில், குறிப்பாக தமிழ்நாட்டில் செய்யப்படும் கொள் முதலின் அளவு தொடர்ந்து மிகவும் குறைவாக இருந்து வருகிறது. இக் குறைவான பங்கு குறித்து தொடர்ந்து கவலை கொண்ட மாநில அரசு, இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றது. மாநில அரசின் முறையீடுகளின் விளைவாகப் பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் மண்டல அலுவலகம் சென்னையில் தற்போது திறக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகம் பதிவு செய்தல், ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடுதல் ஆகிய அதிகாரங்கள் கொண்டதாகச் செயல்பட்டுவருகிறது.

இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேலும் விரைவுப்படுத்த 26.2.1991-ஆம் ஆண்டு தொழில் துறைச் செயலாளர் அவர்களால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் இயக்குநர், பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககம், தலைவர்-நிர்வாக இயக்குநர், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், ஆணையர்- இயக்குநர், தொழில்-வணிகத்துறை-சிறு தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலே குறிப்பிட்ட கொள்முதலில் தமிழ்நாட்டில் குறைவான பங்கிற்கான காரணங்கள் நுணுக்கமாக விவாதிக்கப்பட்டன. விவாதத்திற்குப் பின் பின்வரும் முக்கியமான முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன:

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்ககத்தின் அமைப்பு மற்றும் வழிமுறைகளைச் சரிவர தொழில் முனைவோர்கள் அறியாமலிருப்பது ஒரு முக்கியக் காரணமாகக் கருதப்பட்டது. எனவே, தொழில் அதிபர்களிடையே இது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களில் கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது. இக் கருத்தரங்குகளை நடத்துவதில் தமிழ் நாடு சிறு தொழில் சங்கங்களின் இணையம் முக்கிய இடம் வகிக்க இசைவு தெரிவித்துள்ளது. இதற்குத் தேவையான பாடத் திட்டங்களும், கருத்தரங்கு நடத்த வழி முறைகளும் வகுக்கப்படும். சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இக்கருத்தரங்குகளை நடத்த இணைந்து செயல்படும். இனிவரும் மூன்று மாதங்களில் எல்லா மாவட்டங்களும் இக்கருத்தரங்குகளில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படும்.

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளிகளில் சிறு தொழில் பிரிவுகளுக்காகச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் பங்கு பெற்றால் கொள்முதல் செய்யப்படும் தொழிற் பிரிவுகளை ஆய்வு நடத்துவது தவிர்க்கப்படுகின்றது.

> கல்வியும் சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
>
> — தந்தை பெரியார்

★ வெளியிடப்படும் பல்வேறு ஒப்பந்தப் புள்ளிகளில் குறிப்பிடப்படும் வரைவு படங்களும் அளவுக் குறிப்புகளும் கிடைக்கப் பெறாமை தொழிலதிபர்களுக்குள்ள மற்றொரு பிரச்னையாகும். பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் மண்டல அலுவலர் மேலே குறிப்பிட்ட வரைபடங்கள் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இத்தகைய வரைபடங்களையும், அளவுக் குறிப்புகளையும் பெற்று தேவைப்படுவோருக்குக் கிடைக்க வழிவகை செய்ய இசைவு தந்துள்ளது.

★ பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககம்- பாதுகாப்புத் துறை ஆகியவை வெளியிடும் ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களைப் பெற்று தெரிவிப்பதில் டெல்லியில் உள்ள தனது அலுவலகத்தை முடுக்கிவிட்டு செயல்படுத்துவதற்குச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது.

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்ககம் தற்போது கொள்முதல் செய்யும் பொருள்கள் குறித்து விரிவாக ஆய்வு நடத்துவது. பொருள்களை விற்பனை செய்யும் திறனுள்ள தொழில் அலகுகளையும் கண்டறிவது என்று முடிவு செய்யப்பட்டது. அத்தகைய தொழில் அலகுகளை, பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககத்தில் பதிவு செய்து கொள்ள ஊக்குவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

★ ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழைப் பெறுவதற்குத் தொழில் அதிபர்களை ஊக்குவிப்பதற்கும், அச் சான்றிதழ் பெறுவதற்கான செலவில் ஒரு பகுதியை வழங்கவும் தொழில் ஆணையர்- தொழில் வணிக இயக்குநர் ஒப்புக் கொண்டுள்ளார்.

★ பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநரின் மண்டல அலுவலகம் ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களைச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு சிறு தொழில் சங்கங்கள், பதிவு செய்துள்ள தொழிலதிபர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வரும்.

★ தொழில் பிரிவுகளுக்கும், பொருள் வழங்கல் விற்பனைத் தலைமை இயக்ககத்திற்கும் இடையே அனைத்து நிலைகளிலும் ஏற்படும் பிரச்னைகளை விரைவில் தீர்த்து வைக்கும் முகவராகச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் செயல்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகளால் பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககத்தின் கொள் முதலில் தமிழ்நாட்டின் பங்கு நாளடைவில் மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண் : M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

